
சாண்டில்யன்
நீலரதி

# முன்னுரை

தமிழ்நாடு முழுவதையும் களப்பிரர் அடிமைகொண்டு மூவேந்தரையும் சிறையில் அடைத்த காலம், அதைப் பின்னணியாகக் கொண்டு இந்த வரலாற்று நாவல் புனையப்பட்டிருக்கிறது. புகாரில் முதலில் அரசாண்ட களப்பிரர் பிறகு உறையூரைத் தலைநகராகக் கொண்டு அரசு செலுத்தினார்களென்பதும் அவர்களில் ஒருவனான அச்சுதவிக்கண்டன் எனும் அச்சுதவிக்ராந்தன் கடுமையாக அரசாண்டானென்பதும் நீலகண்ட சாஸ்திரி அவர்களின் ''Colas'' (சோழர் வரலாறு) என்ற நூலில் காணப்படுகிறது. புகாரில் இருந்த கண்ணதாசன் மடத்தில் புத்ததத்தர் என்ற பௌத்த துறவி இருந்ததற்கும் அவர் இயற்றிய நூலைப் பற்றியும் சாஸ்திரிகளின் சோழர் வரலாற்றில் குறிப்புகள் தெளிவாகக் காணப்படுகின்றன. தமிழர் எகிப்து முதலிய நாடுகளுடன் வணிகத் தொடர்பு வைத்துக் கொண்டிருந்ததும் சரித்திரத்தில் திட்டமாயிருக்கிறது. எகிப்து நாட்டு கலாசாரத்தில் இஸிஸ் என்ற தேவதையைப் பற்றிய விவரங்கள் அவர்கள் நாட்டுப் புராணங்களில் காணப்படுகின்றன

அந்த நாட்டு தேவதையையும் தமிழ்நாட்டு களப்பிரர் காலத்து வரலாற்று சம்பவங்களுடன் இணைத்து இந்தக் கதையை எழுதியிருக்கிறேன். இந்தக் கதை 'குங்குமம்' பத்திரிகையில் வந்த காலத்தில் தமிழர்கள் இதை பெரிதும் வரவேற்றார்கள். கதையின் ஆரம்பத்தில் தோன்றும் நாத்திகனைப் பற்றியும், இஸிஸ் தேவதையின், பாதுகாப்பைப் பெற்ற நீலரதியைப் பற்றியும், கொடுங்கோலனான அச்சுதவிக்கண்டனைப் பற்றியும் இது தொடர்கதையாக வந்த காலத்தில் மக்கள் ரசித்துப் படித்தார்கள். இப்பொழுது அது புத்தக வடிவில் வருவதால் மற்ற நூல்களைப் போலவே இதற்கும் பூர்ண ஆதரவை அளிப்பீர்கள் என்பதில் சந்தேகமில்லை.

இந்த பெரிய நாவலை முதலில் கதையாகப் பிரசுரித்த குங்குமம் ஆசிரியருக்கும், புத்தகவடிவில் இதைக்கொண்டு வரும் பாரதி பதிப்பக நிர்வாகி பழ. சிதம்பரம் அவர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை-17 சாண்டில்யன்

18—10—85

## சாண்டில்யனின்
## எமது பிற நூல்கள்

மாதவியின் மனம்

பல்லவ பீடம்

அலையரசி

மண்மலர்

கடல் வேந்தன்

விஜயமகாதேவி (மூன்று பாகங்கள்)

**பாரதி பதிப்பகம்**
**108, உஸ்மான் சாலை,**
**தியாகராய நகர்,**
**சென்னை-600 017.**

30517

# நீலரதி

## 1 நாத்திகன்

'அலை நீர் ஆடை, மலை முலை அகத்து, அரப்பேர் யாற்று, மாரிக்கூந்தல், கண்ணகன் பரப்பின் மண்ணக மடந்தை' என்று இளங்கோ அடிகள் வர்ணித்தபடி அலை யெறிகின்ற கடல் நீரையே தனது ஆடையாகவும், மலைகளையே தனது மார்பக எழுச்சிகளாகவும், பெரிய ஆறுகளையே அந்த மார்பின் எழுச்சிகளுக்கிடையே புரளும் முத்து மாலைகளாகவும், விண்ணிலே கவிழ்ந்தகார்வண்ண மேகத்தையே தலைக்கூந்தலாகவும் கொண்டு பெரிய நிலப்பரப்பை உடைய மாசற்ற மடந்தையான புகார் எனும் அழகி, கதிரவனாகிய கணவன் வரவை முன்னிட்டு தான் அதுகாறும் போர்த்திக்கொண்டிருந்த இருளாகிய போர்வையை அகற்றி தனது உடலின் வண்ணங்களை யெல்லாம் காட்டினாள். வெளியூர் சென்று திரும்பும் கணவனைப்போல் புகார் எனும் மனையாளின் உடலெல்லாம் பாய்ந்து தனது ஆத்திரத்தை தீர்த்துக் கொள்ள முற்பட்ட கதிரவன் எழுச்சியைக் கண்டு கடற் பறவைகள் பெரிதாகச் சத்தமிட்டுக் கேளி செய்தன. அந்த ஒலிகளைக் கேட்டு தூரத்திலிருந்த வாணகிரியின் வீடுகள் சிலவற்றிலிருந்து மக்கள் விழித்தாலும் இளமாறன்மட்டும் விழிக்காமல், சாளரத்தின் மூலம் உள்ளே புகுந்த குண திசைக் கதிரவன் கதிர்களையும் அசட்டை செய்து உறங்கிக் கிடந்தான். அப்படி உறங்கிய நிலையிலும் ஏதோ இரண்டொரு சொற்களை வெறுப்புடன் உதிர்க்கவும் செய்தான். "இளங்கோ அடிகள் ஒரு பைத்தியம்"

என்று சொற்களை உதிர்த்து உற்சாகத்தில் இடியிடியென நகைக்கவும் செய்தான். அதே அறையில் இன்னொரு மூலையில் உட்கார்ந்து ஏதோ ஏட்டுச் சுவடிகளைப் புரட்டிக்கொண்டிருந்த பால்வடியும் முகத்து வாலிபன் ஒருவன் "அபசாரம்! அபசாரம்" என்று இருமுறை கூறி காதைப் பொத்திக்கொண்டான்.

பெரிய கனமான கம்பளியைப் போர்த்திக்கொண்டு படுத்திருந்த இளமாரன் தனது திடகாத்திர சரீரத்தை நன்றாக மல்லாத்திப் படுத்துக் கொண்டு கால்களையும் அறை மூலையிலிருந்த வாலிபனை நோக்கி நீட்டி, இரவில் மதுவை நன்றாக அருந்தி இருந்ததால் சிவந்திருந்த தனது கண்களை லேசாகத் திறந்து "அபசாரமா விபசாரமா?" என்று வினவி ஏளனமாக நகைத்தான்.

அந்த நகைப்பில் இன்பம் மருந்துக்குக்கூட இல்லாமல் கடுமை நிரம்பிக் கிடந்ததைக் கண்ட வாலிபன் "நல்ல வார்த்தை உங்கள் வாயில் வராது போலிருக்கிறது?" என்று சற்று வெறுப்புடன் வினவினான்.

மீண்டும் அதே விரசமான நகைப்பை உதிரவிட்ட இளமாரன் "நல்ல வார்த்தை எது? அபசாரமா? விபசாரமா?" என்று வினவி மேற்கொண்டு உரையாடலை வளர்த்த இஷ்டப்படாமல் மறுபடியும் கம்பளியை தலைக்கு மேலும் போர்த்திக்கொண்டு திரும்பிப் படுத்தான்.

மறுபடியும் வாலிபன் உபதேசத்தைத் தொடங்கி "வைகறைத் துயிலெழு என்பது தமிழனின் 'முதுரை'" என்று பகலவன் உதித்து விட்டதையும் இளமாரன் எழுந்திருக்க வேண்டிய அவசியத்தையும் சுட்டிக் காட்டினான்.

இளமாரன் போர்வைக்குள் நன்றாக சுருண்டுபடுத்துக் கொண்டு அதற்குள்ளிருந்தே பேசினான் "வைகறையா! அது எந்த ஊர்?" என்று.



"அட கிருஷ்ணா..." என்று எதையோ தொடங்கிய வாலிபனை "என் பெயர் கிருஷ்ணனல்ல, இளமாரன்" என்று திருத்தினான்.

வாலிபன் முகத்தில் வெறுப்பை அதிகமாகக் காட்டி தனது கையிலிருந்த சுவடியின் ஏடுகளில் இரண்டைப் புரட்டி அவற்றில் கண்களை நாட்டிக்கொண்டே "உங்கள் பெயரைச் சொல்ல வேண்டிய அந்த அவல நிலையில் நான் இல்லை. நான் சொன்னது கடவுளின் பெயர்" என்று பதிலுரைத்தான் வாலிபன்.

"கடவுளா?"

"ஆம்"

"அவரை அழைத்து என்ன பயன்?"

"ஏன் பயனில்லை?"

"அவர் கட...வுள், உள்ளே இடப்பவர். நாம் செத்தாலும் வெளியே வரமாட்டார்."—இதைச் சொல்லி நகைத்த இளமாரன் மெல்ல போர்வையை நீக்கி எழுந்து உட்கார்ந்தான்.

போர்வையை அகற்றி எழுந்து உட்கார்ந்த நிலையிலும் இளமாரன் அதிக உயரமாயிருந்தான். உறுதியுடனும் நீண்டும் திரணை திரணையாக இருந்த கைகளிலிருந்த வடுக்களும் மார்பில் குறுக்கே தெரிந்த நீண்ட வாள் வடுவும், முகத்திலிருந்த இரண்டொரு தழும்புகளும் அவன் பல போர்களைக் கண்டவன் என்பதை வலியுறுத்தின. அவன் பரந்த முகத்தில் வளைந்த புருவங்கள் கருத்திருந்தாலும் தலைக்குழலில் ஏதோ ஓரிரண்டு நரை மயிர்கள் தென்படத் தொடங்கியதால் இளமாரன் அத்தனை இளைய வயதினன் இல்லை என்பதை விளக்கிக் காட்டின. அவன் பரந்த முகத்தில் மதுவினால் மந்தப்பட்ட கண்களிலும் ஒரு தனிஒளி காணப்பட்டதால் அவனிடம் எந்த வம்பும் வைத்துக்கொள்வது உசிதமல்ல

வென்பது வெட்ட வெளிச்சமாயிருந்தது. முகத்தில் உறுதியும், கன்னங்கள் புஷ்டியில்லாமல் சற்றே குறைந்ததால் தூக்கித் தெரிந்த உள்ளெலும்புகளின் கெட்டியும், முகவாய்க் கட்டையின் வலுவும் அவன் பலத்துக்கு சாட்சிகளாக விளங்கின. கழுத்து நீண்டும் இருந்ததால் அதிலிருந்து கீழே இறங்கிய அகன்ற மார்பும் அதில் அடைவாயிருந்த ரோமமும் அவனுக்கு ஒரு முரட்டுத்தனத்தைக் கற்பித்திருந்தன.

உட்கார்ந்த நிலையில் இளமாறன் தனது இரு கைகளையும் தூக்கி உடலை முறுக்கி ஒருமுறை சோம்பல் முறித்தபோது, விலா அசைந்த விதமும், நன்றாகப் பிடிக்காவிட்டாலும் அளவோடு விலா எலும்புகளை அணைத்திருந்த முரட்டுச் சதை திரும்பிய முறையும் இளமாறன் உடம்பு இரும்பு உடம்பு என்பதை சந்தேகமற நிரூபித்தன. அப்படி சோம்பல் முறித்துவிட்டு எழுந்த இளமாறன் கூரையைத் தொட்டுவிடுவது போல நெடுமாரனாக நின்றான். நின்ற முறையும் அவன் இரண்டடி எடுத்து வைத்து அறைச் சாளரத்தை நோக்கி நடந்த நிளுகம் ஏதோ அணிவகுப்பில் நடைபோடுவதை நினைவுறுத்தியதே தவிர ஏதோ வீட்டிலிருக்கும்சாதாரண மனிதனாக அவனைச் சித்தரிக்கவில்லை. அப்படி இரண்டடி எடுத்து வைத்து சாளரத்தண்டை சென்று வெளியே நோக்கிய இளமாறன் ஒருமுறை பெரிதாக நகைத்தான். சற்றே திரும்பி மூலையில் ஓலை படித்துக் கொண்டிருந்த வாலிபனை நோக்கி ''மகனே!'' என்று அழைத்தான்.

''நான உங்கள் மகனல்ல.' அப்படியொன்றும் உங்களுக்கு வயதாகி விடவில்லை'' என்று சிடுசிடுவென்று பேசினான் வாலிபன்.

அந்த வாலிபனை சில விநாடிகள் உற்று நோக்கிக் கொண்டிருந்த இளமாறன் ''சரி தம்பி!'' என்று அழைத்தான்.



''நான் உங்கள் தம்பியும் அல்ல'' என்று சீறினான் வாலிபன் ஏடுகளில் மீண்டும் கண்களை ஓட்டி.

''வேறு எப்படி இருக்க விரும்புகிறாய்?'' என்று இளமாறன் வினவினான்.

''எந்த உறவையும் கொண்டாட இஷ்டமில்லை'' என்றான் வாலிபன்.

''ஏன்?''

''நீங்கள் குடிகாரர்.''

''ஆம்.''

''நிதானம் தெரியாமல் குடிக்கிறீர்கள்.''

''உண்மை.''

''இலக்கியரசனை இல்லாதவர்''

''ஆம்.''

''இவற்றையெல்லாம் மன்னித்துவிடலாம் ஆனால்...'' என்று இழுத்த வாலிபன் வாயை மூடிக்கொண்டான்.

''சொல், வேறென்ன?'' என்று கேட்டான் இளமாறன்.

''நாத்திகர்'' இதை அழுத்திச் சொன்னான் வாலிபன்.

''இதைக்கேட்ட இளமாறன் புன்முறுவல் கொண்டான். ''குரு!'' என்று வாலிபனை அழைத்தான்.

''நான் குருவல்ல'' என்ற வாலிபன் மூலையில் நன்றாக நகர்ந்து கொண்டான்.

''அடிக்கடி உபதேசம் செய்கிறாய். நீ வேறு யாராக இருக்க முடியும்?'' என்று கேட்ட இளமாறன் ''நீ கடவுளை நம்புகிறாய்?'' என்றும் வினவினான்.

''ஆம்.''

''எதிலிருந்தும் உன்னைக் காப்பாற்றுவார்?''

''காப்பாற்றுவார்.''

இதைக் கேட்ட இளமாறன் இடிஇடியென நகைத்து ''பிரகலாதனைக் கடலில் எறிந்தார்கள். அவரைக்கடவுள் காப்பாற்றியதாக புராணம் இருக்கிறது. வா உன்னைக் கடலில் எறிகிறேன். காப்பாற்றுவாரா பார்ப்போம்'' என்று கூறிக்கொண்டு இரண்டு எட்டில் வாலிபன் இருந்த இடத்தை அணுகி அவனைக் குழந்தைபோல் தனது இரு கைகளிலும் தூக்கிக்கொண்டு அறைக்கதவைக் காலால் முரட்டுத்தனமாக உதைத்துத் திறந்து கொண்டு வெளியே சென்றவன் சிறிது நிதானித்தான். பிறகு அந்த வாலிபனைக் கீழே இறக்கி எதிரே தெரிந்த மலைச்சரிவை கவனித்தான் சில விநாடிகள். பிறகு வாலிபனை நோக்கி ''உதயகுமாரா! நான் முற்றும் எதிர்பாராத ஆபத்து வருகிறது. உள்ளே சென்று கதவைத் தாளிட்டுக்கொள். நான் சொன்னாலொழிய கதவைத் திறக்காதே என்று கடுமையாக உத்தரவிட்டு, அந்த வீடு இருந்த மலைச் சரிவில் இரு கால்களையும் அகற்றி ஊன்றிக்கொண்டு அணுகி வந்த ஆபத்தைச் சமாளிக்கச் சித்தமானான்.

□

# 2. கொலைகாரி

வாணகிரியின் சரிவின் பாதியில் இரு கால்களையும் சற்றே விரித்த திடமுடன் நின்றுகொண்ட இளமாறன், மனிதர்களை விழுங்க சித்தமாக நிற்கும் ராட்சஸனைப் போல் திடகாத்திரமான உயர்ந்த சரீரத்துடனும், கொடுமை தட்டிய கழுகுக் கண்களுடனும் காட்சியளித்தாலும், அத்தனை கடுமைக்கும் பின்னால் ஏதோ ஒரு நகைச்சுவையும் அவன் மனத்தில் ஊசலாடுவதை அவன் இதழ்களில் மிக லேசாக அரும்பிய இளநகை நிரூபிக்கவே செய்தது. அன்று அவன் அவசரமாக பல் துலக்காமலும் காலைக்கடன்களை முடிக்காமலும் எழுந்து வந்துவிட்டிருந்தாலும் முகத்தில் எந்தவித விகாரமோ உறக்க உணர்ச்சியோ இல்லை; மேலே அங்கி ஏதும் அணியாமல் கீழே சல்லடத்தை மட்டும் அணிந்து இடுப்பிலிருந்து முழங்கால் வரை மறைத்த அந்த ஓர் உடையைத் தவிர வேறு ஆடையேதும் அவன் சரீரத்தை மறைக்காததால் காலைக் கதிரவன் ஒளிவீச்சில் மிகவும் சிவந்து அக்னி தேவதையே உருவெடுத்து வந்துவிட்டது போல் காட்சியளித்தான் இளமாறன். வீட்டைவிட்டு அவசரமாக உதயகுமாரனைத் தூக்கிக் கொண்டு வெளியே வந்ததால் ஆயுதமேதும் அவன் எடுத்து வரவில்லையென்றாலும் கைகள் எஃகு போல் காட்சியளித்த காரணத்தால் அவனுக்குத் தனியாக ஆயுதமேதும் தேவையில்லை என்பது பார்ப்பவர்களுக்கு நன்றாகப் புலனாகும். இந்தத் தோரணையில் வாணகிரிக் குன்றின் நடுமத்தியிலிருந்த சிறு வீட்டின் முன்பாக நின்றிருந்த இளமாறன் கீழே தரைமட்டத்திலிருந்து மலை ஏறி தன்னை நோக்கி வந்து கொண்டிருந்த ஆபத்தை சில விநாடிகளே நோக்கினான்.

சுமார் இருபது தமிழக வீரர்கள் வாட்களையும் வேல்களையும் ஏந்தி ஓடிவர அவர்களுக்கு முன்னால் மங்கையொருத்தி மான்போல் மலைப்பாறைகளின் தாவியும், சில சமயங்களில் ஒற்றையடி சமப்பாதையில் இறங்கியும் பல விதமாகத் துள்ளி வந்து கொண்டிருந்தாள். அவள் ஓடிவந்த வேகம் அபரிமிதமாயிருந்ததால் "இப்படி களப்பிரர் முன்பு தமிழர்கள் கூட ஓடியதில்லையே? இவள் யாராயிருக்கக்கூடும்?" என்று சிந்தனை வசப்பட்ட இளமாறன், அவள் யாராயிருந்தாலும் தமிழகத்தைச் சேர்ந்தவளல்ல என்பதைத் திட்டமாக உணர்ந்து கொண்டான். "புகாரைப் பாதிக்குமேல் விழுங்கிவிட்ட வங்கக்கடல் இவளை எங்கிருந்தாவது உருட்டிக் கொண்டு வந்துவிட்டதா என்ன?" என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான்.

அவனை நோக்கி ஓடிவந்து கொண்டிருந்தவள் தனது வாளிப்பான மெல்லிய சரீரத்தின் காரணமாகவும், ஓடுவதற்கு நல்ல திறன் இருந்ததன் காரணமாகவும், பின்னால் வந்த வீரருக்கு பாய்ச்சு காட்டியும் பக்கங்களில் குதித்தும் ஓடி வந்ததால் அவளுக்கும் துரத்திவந்த வீரர்களுக்கும் இருந்த இடைவெளி சிறிது நீண்டுகொண்டே வந்தாலும், துரத்திய வீரர்கள் அவளை எப்படியாவது பிடித்துவிட வேண்டும் என்ற உறுதியில், திக்குமுக்காடி மூச்சுத்திணற மலைச்சரிவில் ஏறி வந்தார்கள்.

முன்னால் ஓடிவந்த பெண் வானகிரியில் கடலலை மோதிய சூழ்நிலையில் மிக அழகாகக் காட்சியளித்தாள். அவள் ஓடிவந்த வேகத்தில் முடிந்த குழல்கள் விரிந்து கடற்காற்றில் பறந்து கொண்டிருந்ததே அவளின் அழகைப் பன்மடங்கு உயர்த்தியது. அவள் முகம் சந்திரனைப்போல ஒரே உருண்டையாயில்லாமல் சற்று நீண்டே இருந்தாலும் கன்னங்களின் அளவான புஷ்டி அந்த நீளத்தை அழகுறவே செய்தது. அவள் முகவாய்க்கட்டையை அடுத்து எலும்புகள் சற்று பிரதானமாகத்



தெரிந்ததிலிருந்தும், கண்களின் ஒளிவீச்சிலிருந்தும் அவள் அறவே அறியாதவள் என்பது சந்தேகமற விளங்கியது. அவள் கழுத்து சற்று அதிகமாகவே நீண்டிருந்ததால் தோள்கள் மீது அதை அசைத்தபோதும் திரும்பிய போதும் நல்லசாதி மானைப்போலவே அந்தப்பெண் காட்சியளித்தாள். மேலே மூச்சுத் திணற ஓடிவந்தபோது சற்றே வாங்கிய பெருமூச்சுக்கூட அவள் மார்பின் திண்மையை அசைக்க முடியாததாலும், ஓடிவந்த கால்களின் சதைகள் கூட கெட்டிப்பட்டிருந்ததாலும், வந்தவள் நல்ல பலசாலியான கட்டிளங்குமரி என்பதை இளமாறன் புரிந்து கொண்டான். அவள் சமீபத்திலேயே புகார் நகருக்கு வந்து சேர்ந்தவளென்பதை அறிந்திருந்தாலும், துஷ்டத்தனத்துக்கு அவள் பெயர் போனவளாயிருந்தபடியாலும், புகாரில் அவளைப் பற்றிய புகார்களும் வதந்திகளும் அதிகமாயிருந்ததாலும் இளமாறன் அவள் யாரென்பதைப் பற்றி சிந்திக்கவில்லை. இம்முறை என்ன செய்திருப்பாள் என்பதை மட்டும் சிந்தித்துக்கொண்டு நின்றான்.

ஓடிவந்த அந்தப் பெண்ணும் அவனை வெகுசீக்கிரம் அணுகி பெருமூச்சுவிட்டு அவன் மார்பு மீது விழுந்தாள். அப்படி விழுந்தவளை அணைக்கவோ ஆதரிக்கவோ இல்லை இளமாறன். அவள் கையொன்றைப் பிடித்து அவளைத் தன் பக்கவாட்டில் இழுத்து நிறுத்தி "உதயகுமாரா! உதயகுமாரா!" என்று குரல் கொடுக்க உதயகுமாரன் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்து "ஏன்" என்று வெறுப்பு மண்டிய குரலில் கேட்டான்.

"இவளை அழைத்துக்கொண்டு போய் அறையில் உன்னுடன் தங்கவை" என்று உத்தரவிட்ட இளமாறன் அந்தப் பெண்ணை முரட்டுத்தனமாக இழுத்து திருப்பி உதயகுமாரன் மேல் தள்ளினான். அதனால் தடுமாறிப் போன உதயகுமாரன் "இவள் பெண்..." என்று ஏதோ கூற முற்பட்டவனைப் பேச விடவில்லை இளமாறன்.

"இந்த அதிசயத்தைக் கண்டுபிடித்தது பற்றி உன்னைப் பாராட்டுகிறேன். நிலைமை மீறுமுன் இவளை உள்ளே அழைத்துப்போ" என்று கடிந்து கொண்ட பிறகுதான் கீழேயிருந்து ஓடிவந்து கொண்டிருந்த வீரர் கூட்டத்தைக் கவனித்தான். ஆகவே வெலவெலத்துப்போய் "தலைவரே நீர் செய்வது என்னவென்பதைப் புரிந்துகொண்டீரா?" என்று வினவினான் உதயகுமாரன்.

"புரிந்து கொண்டேன்" -இளமாரன் பதிலில் வெறுப்பு இருந்தது.

"வருகிறவர்கள்..."

"சோழ வீரர்கள்."

"அல்ல"

"வேறு யார்?"

"புத்தமடத்து வீரர்கள்."

"புத்தமடத்துக்கு வீரர்கள் எதற்கு? புத்தர் சொல்லியது அஹிம்சைதானே?"

"ஆம். இருந்தாலும் அஹிம்சையைப் பாதுகாக்க வீரர் வேண்டியிருக்கிறது."

இதைக் கேட்டதும் பெரிதாக நகைத்த இளமாரன் "நன்று நன்று" எனக் கூறி "சரி உள்ளே போ! பிறகு தர்க்கத்தில் இறங்குவோம். முதலில் வருபவர்களைக் கவனித்து விட்டு வருகிறேன்" என்று கூறினான்.

அப்பொழுதும் அசையவில்லை உதயகுமாரன். "புத்தமடத்துக்கு எதிராக நாம் எது செய்தாலும் ராஜத்துரோகமாகும்" என்றான்.

அதுவரை அவன் மீது விழுந்து கிடந்த அந்தப் பெண் அவன் கழுத்தைச் சுற்றியிருந்த கைகளை எடுத்து "நீ ஆண் பிள்ளைதானே?" என்று சீறினாள்.

அவர்கள் இருந்த பக்கம் திரும்பாத இளமாரன் "வேஷம் அப்படித்தானிருக்கிறது" என்றான்.



"நான் வீரன்" என்று எரிச்சலுடன் சுட்டிக்காட்டினான் உதயகுமாரன்.

"அதை செயலால் நிரூபிப்பது நல்லது" என்ற இளமாரன் கீழேயிருந்து வந்த வீரர்கள் தானிருக்குமிடத்தைத் துரிதமாக நெருங்குவதை எண்ணி சட்டென்று திரும்பி உதயகுமாரனையும் அந்தப் பெண்ணையும் தனது இருகைகளாலும் பிடித்து இழுத்துக்கொண்டு போய், தனது விடுதிக்குள் தள்ளி மீண்டும் கதவைப் படாலென ஓசையுடன் சாத்திவிட்டு திரும்பி முன்பு நின்ற இடத்தில் நிற்பதற்கும் அவனை நோக்கி ஒரு வேல் சீறி வருவதற்கும் நேரம் சரியாயிருந்தது.

இளமாரன் சற்று அஜாக்கிரதையாயிருந்திருந்தால் அந்த வேல் அவன் இதயத்தை ருசி பார்த்திருக்கும். ஆனால் சட்டென்று தள்ளி நின்ற இளமாரன் அந்த வேல் விட்டுக் கதவில் தாக்கி, தைத்து நின்றுவிட்டதைப்பார்த்து அதைப் பிடுங்கி, கையில் வைத்துக்கொண்டு திரும்பவும் பழையபடி நின்றான்.

வாணகிரி அத்தனை பெரிய மலை இல்லையென்றாலும், சிறுகுன்றே என்றாலும் பழங்காலத்தில்—அதாவது புகார் உன்னத நிலையில் இருந்த காலத்தில் அமைக்கப்பட்ட சில பாதைகள் கால வெள்ளத்தில் உருமாறாதிருந்ததன் விளைவாக ஏறுவது சிறிது கஷ்டமாகவே இருந்தாலும் பெண்ணைத் துரத்திவந்த வீரர்கள் மெதுவாகவே அவனிருந்த இடத்தை அடையவே செய்தார்கள். அந்த வீரர் கூட்டத்தில் இரு புத்தத்துறவிகளும் இருந்ததைக் கண்ட இளமாரன் இளநகை கொண்டு "சுவாமிகளுக்கு வணக்கம்" என்று கைகளிரண்டையும் கூப்பினான்.

ஆனால் சுவாமிகளோ கூட்டத்தினரோ அவன் வணக்கத்தை ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. வீரர் கூட்டத்திலிருந்த ஒருவன் மட்டும் உருவிய வாளுடன் முன்னே வந்து "எங்களையோ சுவாமிகளையோ

வணங்கிப் பயனில்லை'' என்று சற்று உஷ்ணமாகச் சொன்னான்.

இளமாறன் மெல்ல நகைத்தான். ''உங்கள் பார்வையிலிருந்து அது புரிகிறது'' என்றான்.

''ஒரு பெண்ணைத் துரத்தி வந்தோம்'' என்றான் முன்னே வந்த வீரன்.

''வேறு யாரையும் துரத்தி வரமாட்டீர்களென்பதும் புரிகிறது'' என்றான் இளமாறன்.

''அவளை உன் வீட்டுக்குள் கொண்டுவிட்டு கதவைச் சாத்தினதை நாங்களே பார்த்தோம்'' என்றார் துறவிகளில் ஒருவர்.

''துறவிகளுக்கு அகப்பார்வை உண்டு. உங்கள் புறப்பார்வையிலும் பழுதில்லை'' என்றான் இளமாறன்.

துறவி இடையிட்டால் சற்று நிதானப்பட்ட வீரன் மறுபடியும் சொன்னான். ''அந்தப் பெண்ணை சுவாமிகளிடம் ஒப்படைத்து விடு'' என்றான்.

''சுவாமிகளுக்கு பெண் எதற்கு?'' என்று வினவினான் இளமாறன்.

சுவாமி அதைப் புரிந்து கொண்டதால் கடிந்து பேசலானார். ''எங்களுக்கு எந்தப் பெண்ணும் வேண்டியதில்லை. ஆனால் இவள் வேண்டும்'' என்றார்.

''இவள் என்ன அப்படி விசேஷம்?'' என்று கேட்டான் இளமாறன்.

சுவாமிகள் பெரிய திடுக்கிடும்படியான செய்தியைச் சொன்னார் ''வீரனே! இவளை நீ பாதுகாப்பது அதர்மத்தைப் பாதுகாப்பதாகும். இவள் குற்றம் புரிந்தவள்—'' என்று மெதுவாக சொற்கள் மனதில் உறையும்படி பேசினார்.

''என்ன குற்றம் சுவாமி?'' என்று கேட்டான். இளமாறன்.



''கொலைக்குற்றம்'' என்று இன்னொரு வெடியை எடுத்து வீசினார் சுவாமிகள்.

ஒருகணம் திகைத்தான் இளமாறன். ''கொலைக் குற்றமா? கொலையா செய்தாள் இவள்?'' என்று வினவினான் நம்பிக்கை இல்லாத குரலில்.

''ஆம்.''

''யாரை? எப்போது?''

''மடத்துக் காவலர் தலைவனை, நேற்றிரவு'' என்ற சுவாமிகள் ''வீரனே! அவளை ஒப்படைத்து விடு'' என்று கூறினார்.

இளமாறன் ஒரு விநாடி சிந்தித்தான். ''சுவாமி! கொலைகாரியானால் இவள் தண்டிக்கத்தகுந்தவள். விசாரணை உண்டல்லவா?''

''உண்டு...

''எப்பொழுது?''

''இன்று அந்தி புகுந்ததும்.''

''போய் வாருங்கள் சுவாமி. அந்த சமயத்துக்கு நானே இவளை அழைத்து வருகிறேன்'' என்று இளமாறன் சொன்னான்.

''முடியாது. இப்பொழுதே எங்களுடன் அனுப்பி விடு. இல்லையேல்'' என்று மிரட்டினான் மடத்து வீரன்.

''இல்லையேல்?''

''உன்னையும் கட்டிக்கொண்டு போவோம்''

இதை வீரன் சொன்னதும் சுமார் பத்து வாட்களும் பத்து வேல்களும் எழுந்தன இளமாறனை நோக்கி. அடுத்து அவன் தலை மீது முன்னிருந்த வீரனின் பலமான வாள் இறங்கவும் செய்தது.

□

# 3. யார் அவள்?

புத்தமடத்து வீரர்களும் சுவாமிகளும் துரத்தி வந்த பெண்ணை மடத்து விசாரணைக்கு தானே அழைத்து வருவதாக உறுதிகூறியும் வீரர்கள் அவன் மீது வாட்களை உருவிக் கொண்டு பாய முற்படவே அதுவரை காட்டிய பொறுமையை அறவே இழந்த இளமாறன் தனது தலை மீது வாளை இறக்க முற்பட்டவனை சரேலென்று பிடித்துத் தலைக்கு மேல் தூக்கி ஒரு சுழற்று சுழற்றி இடப்புறத்து மணல்சரிவில் உருட்டிவிட்டதன்றி முன்னணியில் நின்றிருந்த துறவிகள் இருவரில் ஒருவரையும் கையைப் பிடித்துத் தன்னருகில் இழுத்துக்கொண்டு "அட மடையர்களே!" என்று பெரிதாக வெறி பிடித்தவன்போல் கூவினான். அதே சமயத்தில் மற்ற வீரர்கள் வாட்களை உருவி பக்கவாட்டிலும் முன்பும் சூழ முற்பட்டதைக் கண்டு இடிபோல நகைத்து இன்னொரு சாமியாரைத் தூக்கித் தோளில் போட்டுக்கொண்டான். கையால் இழுத்த சாமியாரை பலவந்தமாகத் திருப்பித் தனக்கு முன்னால் நிறுத்தி "மடத்து முட்டாள்களே! உங்கள் சாமியார்களின் உடல்கள் என்னைப் பாதுகாக்கின்றன. முன்னால் வாள் புகுந்தால், என் முன்னிருக்கும் சாமியாரை ருசி பார்க்கும். பின்னால் வந்தால் தோளிலிருக்கும் துறவியாரை இன்னும் அதிகமாகத் தொங்க விடுவேன். அவர் உயிரை வாட்கள் உறிஞ்சிவிடும்" என்று இரைந்து கூவினான்.

இரு துறவிகளும் இருந்த நிலைகளைக் கவனித்த மடத்துக் காவலர்கள் அவனைச் சூழும் பணியை நிறுத்தி துறவிகளை நோக்கினார்கள், அடுத்த கட்டளைக்கு.

அவர்கள் பார்வையைக் கவனிக்கவே செய்த இளமாறன், தனக்கு எதிரில் தனது உடலுக்கு முதுகைக்



காட்டி எதிரே நீண்ட வாள்களுக்கு அவரது மார்பைக் காட்டிக் கொண்டிருந்த துறவியை நோக்கி 'சுவாமி! உங்கள் வீரர்களுக்கு உத்தரவிடுங்கள், வாட்களை உறையில் போடும்படி. என் சொல்லை நீங்கள் நம்பாவிட்டால் நான் வீட்டுக்குள்ளே வைத்திருக்கும் வாளின் ஆணையாகச் சொல்கிறேன். அந்தப் பெண்ணை இன்று மாலை விசாரணைக்கு நானே அழைத்து வருகிறேன். அவள் குற்றம் செய்தவள் என்று நிரூபிக்கப்பட்டால் அவளை உங்களிடமே விட்டுத் திரும்புகிறேன். நான் புத்தமதத்தை மதிப்பவன்; நீங்கள் எப்படி கடவுளை நம்பவில்லையோ அப்படியே நானும் நம்பவில்லை. கொள்கையளவில் நமக்குள் ஒற்றுமையிருக்கிறது" என்று கூறினான்.

துறவி சிறிது நேரம்கூட சிந்திக்கவில்லை. இளமாறன் என்ற அரக்கன் பின்னாலிருப்பதால் எந்த வினாடியிலும் தன்னைப் பிண்டமாகப் பிடித்துப் போட்டுவிட முடியும் என்று நம்பியதால் "வாட்களை உறையில் போடுங்கள். இவர் சொல்வது கேட்கவில்லை உங்களுக்கு" என்று மடத்துக் காவலர்கள் மீது எரிந்து விழுந்தார்.

இளமாறன் தோளின்மீது பின்புறமாகத் தலை தொங்கிக் கிடந்த துறவியாரும் தமது சக துறவிக்கு உதவியாக "வாளை உறையில் போடுங்கள். கேட்கவில்லை சொல்வது?" என்று உக்கிரத்தைக் காட்டினார்.

அடுத்த நிமிஷம் காவலர் வாட்கள் உறைகளுக்குள் பதுங்கவே தோளிலிருந்த துறவியைக் கீழே இறக்கிய இளமாறன் "சுவாமிகளே! அபசாரத்துக்கு மன்னிக்க வேண்டும். எந்த மனிதனும் உயிரிழக்க இஷ்டப்படுவதில்லை" என்று மன்னிப்புக் கேட்டுக்கொண்டு எதிரே அக்கம் பக்கமாக இரட்டையர்போல நின்ற சுவாமிகளுக்குத் தலைவணங்கவும் செய்தான்.

அவன் பேச்சு, தலைவணங்கிய முறை, சகலத்திலும் வணக்கத்தைவிட இகழ்ச்சி அதிகமாகக் கலந்திருந்ததை

அந்த இரட்டைத் துறவியர் கவனித்தாலும் கவனிக்காதது போலவே நடந்து கொண்டனர். "வீரனே! உன் செய்கையில் ஒரே தவறு. அந்தக் கொடியவனைக் காப்பாற்ற முயன்றதுதான். அதற்கு உனக்குத் தண்டனை உண்டு. என்ன தண்டனையென்பதை புத்தத்தரே உனக்குத் தெரிவிப்பார். இருப்பினும் நீ பெண்ணை அழைத்து வருவதாக உறுதி கூறிவிட்டதால் நாங்கள் போகிறோம். உறுதியை நிலைநாட்டும் பட்சத்தில் உன்னை எங்கள் தலைவர் மன்னித்தாலும் மன்னிக்கலாம். அதற்கு நாங்களும் சிபாரிசு செய்வோம்" என்று துறவிகளில் ஒருவர் வாக்குக் கொடுத்தார்.

இளமாரன் இதழ்கள் இகழ்ச்சியுடன் மடிந்தன. "துறவியாரே! உங்கள் அன்புக்கும் ஆதரவுக்கும் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்" என்று கூறி மீண்டும் தலை வணங்கினான். பிறகு தலை நிமிர்ந்து சொன்னான். "துறவிகளே! கண்டிப்பாய் இன்று பகலவன் மலைவாயில் விழும் தறுவாயில் அந்தப் பெண்ணை அழைத்து வருகிறேன்" என்று. அவர்கள் போகலாம் என்பதற்கு அறிகுறியாகத் தனது கைகளைக் கூப்பிவிட்டு சட்டென்று திரும்பி இல்லத்தை நோக்கி நடந்தான். சுவாமிகள் வந்த வேகத்தைவிட அதிக வேகத்தைத் திருப்பிச் செல்வதில் காட்டி ஏதோ தங்களை யாரோ மலையிலிருந்து உருட்டிவிட்டதைப் போல் விரைந்து சென்றனர். மடத்துக் காவல் வீரர்கள் அவ்விருவரையும் தொடர்ந்து சென்றாலும் சுவாமிகளின் வேகத்துக்கு அவர்களால் ஈடு கொடுக்க முடியாததால் சில இடங்களில் பாறாங்கற்களைத் தாண்டியும் பாய்ந்தும் சென்றனர்.

அவர்கள் சென்றதும் அடியோடு அவர்களைத் திரும்பிப் பாராமல் வீட்டுக் கதவண்டை வந்து அதை இருமுறை தட்டிய இளமாரன் கதவு திறக்கப்பட்டதும் உள்ளே வேகமாக நுழைந்ததால் கதவைத் திறந்த பெண் மீது மோதிக் கொண்டான். அதனால் விழ இருந்த அந்தப்



பெண்ணைத் தனது கையால் இறுகப் பிடித்து நிறுத்தி அவனை உற்று நோக்கினான். பிறகு அவளை உதய குமாரனை நோக்கித் தள்ளிவிட்டு இரண்டாவது அடுக்குக்குச் செல்ல முயன்றவனை உதயகுமாரன் சொற்கள் தடுத்தன. "சற்று நில்லுங்கள்" என்றான் உதய குமாரன். இளமாரனால் தள்ளப்பட்டு தன்மீது விழுந்த அந்தப் பெண்ணைத் தன்னிடமிருந்து விலக்கி ஓரத்தில் நிற்க வைத்துவிட்டுத் திரும்பினான்.

உதயகுமாரன் நிற்கச் சொன்னதால் நின்றுவிட்ட இளமாரன் சட்டென்று அவனை நோக்கித் திரும்பி "எதற்காக நிற்க வேண்டும்?" என்று வினவினான்.

உதயகுமாரன், வியப்பு நிரம்பிய விழிகளை இளமாறன் மீது திருப்பி "இவளை என்ன செய்வது என்று சொல்லவில்லையே?" என்று வினவினான்.

"என்ன வேண்டுமோ செய்துகொள்" என்று கூறி பயங்கரமாக நகைத்தான் இளமாரன்.

"உங்கள் பேச்சில் பண்பாடு இல்லை. நகைப்பு கேவலமாயிருக்கிறது" என்று உதயகுமாரன் சினத்துடன் சொற்களை உதிர்த்தான்.

இளமாரன் சிந்திப்பதுபோல் பாசாங்கு செய்து "நீ இவளிடம் பண்பாட்டுடன் நடந்து கொள்வதை நான் தடுக்கவில்லையே" என்றான்.

உதயகுமாரன் முகத்தில் மீண்டும் சீற்றம் தெரிந்தது. "இவளை என்ன செய்வது என்று கேட்டேன்" என்றான் உதயகுமாரன் மீண்டும், கோபம் தணியாத குரலில்.

ஏதோ சிந்திப்பதுபோல் பாசாங்கு செய்த இளமாரன் உதயகுமாரனை விஷமமாகப் பார்த்தான். "ஒரு பெண் கிடைத்தால் என்ன செய்வார்களோ, அதைச் செய்" என்று கூறினான்.

"பெண் கிடைத்தால் என்ன செய்வார்கள்?" என்று வினவினான் உதயகுமாரன்.

இளமாறன் மீண்டும் நகைத்தான். "உதயகுமாரா! உன் தலையில் இருப்பது மூளையா களிமண்ணா? எல்லாவற்றையும் சொல்லிக் கொடுக்க உனக்கு ஓர் உபாத்தியாயர் தேவையா?" என்று கேட்டான் நகைப்பின் ஊடே.

"இந்தப் பெண்ணை இங்கு தள்ளியது நீங்கள் தான்..."—உதயகுமாரன் சொற்களில் குற்றச்சாட்டு இருந்தது.

"ஆமாம்"—சகஜமாக பதில் சொன்னான் இளமாறன்.

"நீங்களாயிருந்தால் இவளை என்ன செய்வீர்கள்?"

"செய்ய வேண்டியதை முடிவு செய்துவிட்டேன்."

"என்ன முடிவு?"

"மாலையில் இவளை புத்தமடத்துக்கு விசாரணைக்கு அழைத்துப்போவதாக உறுதி கூறியிருக்கிறேன்."

"அதுதான் முடிவா?"

"ஆம். சொன்ன சொல்லை இளமாறன் மாற்றியதாக என் விரோதிகள் கூட சொல்லமாட்டார்கள்."

"புத்த மடத்தில் இவள் தண்டிக்கப்பட்டால்?"

"தண்டனை விசாரணையைப் பொறுத்தது."

இதைக் கேட்ட உதயகுமாரன் மெல்ல நகைத்தான். "விசாரணை பேருக்குத்தான். புத்தமடத்து விசாரணை உங்களுக்குத் தெரியாது போலிருக்கிறது" என்றான் நகைப்பின் ஊடே.

அதை இளமாறன் அறிந்துதானிருந்தான். எப்பொழுது மடத்துக் காவலர் தலைவனை அந்தப் பெண் கொன்று விட்டாளோ அப்பொழுது விசாரணை மேலுக்குத்தானிருக்கும் என்பதை அவன் உணர்ந்திருந்ததால்தான் அவளைத் தானே அழைத்துச் செல்ல முடிவு செய்திருந்தான். இருப்பினும் உதயகுமாரன் பேசியதும் தனது திட்டத்தை மாற்றிக்கொண்டான். "எப்படி இருந்தாலும் நான் சொன்ன உறுதியை மீற முடியாது.



மாலையில் இவளை நீயே அழைத்துப்போ" என்று உதயகுமாரனிடம் கூறினான்.

உதயகுமாரன் முகத்தில் கிலி பெரிதாகத் தெரிந்தது. "ஐயோ! நான் மாட்டேன்" என்று சொன்னான் கிலி குரலிலும் துலங்க.

"ஏன்?"—இளமாறன் கேள்வி சர்வசாதாரணமாயிருந்தது.

"இவளைக் காப்பாற்றியது நானல்ல" என்றான் உதயகுமாரன்.

"அதனால் என்ன?"

"நான் போனால் என்னையும் சிறை செய்வார்கள்."

"எதற்கு?"

"கொலைகாரியைக் காக்க முயன்ற குற்றத்திற்காக."

"காப்பாற்றியது நீயல்லவே? நான்தானே?"

"அது அவர்களுக்குத் தெரியாது."

"ஏன் தெரியாது? இரண்டு துறவிகள் நேராகவே பார்த்திருக்கிறார்களே."

"அங்கு துறவிகள் மௌனம் சாதிப்பார்கள். உண்மையைச் சொல்லமாட்டார்கள்."

"துறவிகள் பொய் சொல்வார்களா?"

"மாட்டார்கள். எதையும் சொல்ல மாட்டார்கள் அவர்கள் மௌனமே நம்மைத் தண்டித்துவிடும்."

இதைக் கேட்ட இளமாறன் உடனடியாக பதில் சொல்லவில்லை. உதயகுமாரனையும் நோக்கி அந்தப் பெண்ணையும் நோக்கினான். பிறகு கேட்டான். "பெண்ணே! காவலர் தலைவனை ஏன் கொலை செய்தாய்?" என்று.

அந்தப் பெண் அவனை நன்றாக நிமிர்ந்து நோக்கினாள். சீற்றம் மிகுந்த கூரிய விழிகள் இளமாறன் வீர

விழிகளை அலட்சியமாகச் சந்தித்தன. ''காவலர் தலைவன் என்னைத் தீண்ட வந்தான். கொன்றேன். அவனைக் கொன்றதற்கு என்னைத் துரத்திவந்த இரு சாமியார்களும் என்னைப் பிடிக்க வந்தார்கள். அவர்களையும் கொன்றிருப்பேன். ஆனால் அதிகக் கொலைகள் செய்ய மனமில்லாததால் இருவரையும் கீழே தள்ளிவிட்டு ஓடி வந்தேன்'' என்று அவள் கூறினாள்.

அப்பொழுதுதான் இளமாறன் திடுக்கிடும்படியான அந்தக் கேள்வியை வீசினான். ''நீல நதிப் பகுதியிலிருந்து இங்கு எப்பொழுது வந்தாய்?'' என்று வினவினான்.

அந்தப் பெண்ணின் கண்களில் அதுவரை காணாத அச்சம் உதயமாயிற்று. ''நீ...'' என்று ஏதோ சொல்ல முயன்றாள்.

''என்னைப் பற்றித் தெரிந்துகொள்ள அவசியமல்ல. நீ யாரென்பது எனக்குத் தெரியும். இங்கு வந்த காரணமும் எனக்குத் தெரியும். அதைப் பற்றிப் பிறகு பேசுவோம்'' என்ற இளமாறன், ''உதயகுமாரா! இவள் நீராட்டத்துக்கு ஏற்பாடு செய். நான் கடலுக்குச் சென்று நீராடிவிட்டு வருகிறேன்'' என்று கூறிவிட்டு வீட்டுக் கதவைத் திறந்து கொண்டு மலைச்சரிவில் இறங்கி வேகமாக நடந்தான். ''யாரிவள்??'' என்று உதயகுமாரன் சிந்தனையில் இறங்கினான்.

□ □ □

# 4. நீதிமண்டபம்

**பு**காரைப் பற்றி பட்டினப்பாலை இயற்றிய கடியலூர் உருத்திரங்கண்ணனார் அந்தப்பட்டினம் 'விளங்கு பகையல்லாது கலங்கு பகையறியாது'' என்று எழுதினார். எதிரிகள் யாரும் புகமுடியாது என்ற காரணத்தால் அதைப் புகார் என்றழைத்ததையொட்டி இந்நகரத்திலிருந்து பகைவர்கள் விலகித்தான் செல்வார்களேயொழிய உட்புகுந்து கலக்கத் துணியமாட்டார்கள் என்று உருத்திரங்கண்ணனார் இந்நகரச் சிறப்பைப் பாடினார். அப்படி யாரும் புகமுடியாத நகரத்தில் கடலரசன் நுழைவானென்றோ அதன் இருபாக்கங்களையும் விழுங்கி விடுவானென்றோ கவிஞன் எதிர்பார்க்கவில்லை. ஆகவே அன்று கடலில் இறங்கி நீந்த முற்பட்ட இளமாறனும் அந்நகரின் பழைய பெருமையையே நினைத்து நீராடினான்: ''இதன் அடியில் மருவூர்ப்பாக்கமும், பட்டினப்பாக்கத்தின் மூக்காலவாசியும் இருக்கின்றனவே. மீண்டும் அவை மேலுக்கு வருமா? இந்தப் புகாரின் பழஞ்சிறப்பும் வாணிபமும் திரும்புமா?'' என்றெல்லாம் எண்ணி ''எங்கே அவை மீண்டும் தலைகாட்டும்?'' என்று சோகமும் கொண்டான். புகாரின் நிலையும் தனது வாழ்க்கை நிலையும் கிட்டத்தட்ட ஒன்றுதான் என்றும் நினைத்தான்.

அவன் வாழ்க்கையிலும் அத்தகைய கொடுமைகள் நடக்கத்தான் செய்தன. அதனால்தான் அவன் விரக்தி கொண்டு தனது வயதில் பாதியை படைகளை நடத்தியும், அந்தப் பணி இல்லாத காலத்தில் மது அருந்தியும் கழித்தான். எந்த நல்ல நகரையும் கடல் விழுங்குவதுபோல எந்த மனிதன் வாழ்க்கையையும் சமுதாயக் கடல் விழுங்கி விடுகிறது என்று தத்துவ சிந்தனையிலும் இறங்கினான். இப்படி எண்ணமிட்டு, கடல் நீரில் மல்லாந்து நீந்திய அவன் வீர உடல் மீது வெயிலும் காய்ந்ததென்றாலும்

அதன் சூட்டைக் கடல் நீர் குளிரவே செய்ததால் அவன் நீண்ட நேரம் நீராடினான். இப்படி அவன் நேரம் போவது தெரியாமல் நீந்திக் கொண்டே இருக்கையில் அவன் விடுதியில் விட்டுவந்த அந்தப் பெண்ணும் கடலலைகள் மீது தான் நீந்தி வந்தாள்.

ஏதோ வாளை மீன்மாதிரி அனாயாசமாக கடலுக்குள் மூழ்கியே நீந்தியும் சில சமயங்களில் எழுந்து அலைகளைத் தாவியும் அந்தப் பெண் இளமாறன் இருந்த இடத்தை வெகு துரிதத்தில் அடைந்து, அவனருகே அவளும் மல்லாந்து நீந்தினாள். அப்படி நீந்திய வண்ணம் கேட்டாள். ''என்னைத் துறவியாரிடம் ஒப்படைத்துத்தான் ஆக வேண்டுமா?'' என்று.

இளமாறனும் நீந்தியபடியே ''துறவிகளிடம் ஒப்படைக்க வேண்டியதில்லை. ஆனால் விசாரணைக்கு அனுப்புவேன்'' என்று சொன்னான்.

அவள் உடனடியாக பதில் சொல்லாமல் சிறிது சமுத்திர உப்பு நீரை உறிஞ்சி வாயின்மூலம் வாணம் போல் விட்டாள். அந்த நீர்வாணம் சூரியரச்மிகளில் பல வர்ணங்களுடன் மின்னியதைப் பார்த்து கலகலவென நகைத்தாள். ''என்ன? விசாரணைக்கு அனுப்பப் போகிறீர்களா?'' என்று வினவினாள்.

''ஆம்''

''நீங்கள் அழைத்துப் போகவில்லையா?''

''இல்லை''

''ஏன்''

''காரணமிருக்கிறது'' என்று சொன்ன இளமாறன் சட்டென்று குப்புறத் திரும்பி, தரையை நோக்கி நீந்திச் சென்று கரையில் நின்று கடலை நோக்கினான். அந்தக் காலை நேர மஞ்சளில் கடலில் நீந்திய அவள் ஜலமோகினி போல் விளங்கினாள். அவள் உடல் வளைந்து வளைந்து அனாயாசமாக அலைகளில் திரும்பியது பார்ப்பதற்கு மிக



மனோகரமாயிருந்தது. அவளைப் பார்த்துக்கொண்டே நீண்ட நேரம் நின்ற இளமாறன் நின்றபடியே, தனது ஆடையின் நீரைப் பிழிந்து ஆடையை மூலைக்கச்சமாகக் கட்டினான்.

நீந்திய இடத்திலிருந்து கண்களைத் தரை நோக்கி ஓட்டிய அந்தப் பெண், கதிரவன் கதிர்களில் குளித்துக் கொண்டிருந்த அவன் எஃகு உடம்பைப் பார்த்தாள். சூர்யரச்மியில் பளபளவென்று மின்னி, தாமிரம்போல் காட்சியளித்த அத்திண்ணிய உடலைப்பார்த்து, ''அப்பா! எத்தனை உரம்?'' என்று வியந்து மகிழ்ந்தாள். ''இவர் எதற்குக் கரையிலிருந்தே என்னை கண்கொத்தி பாம்பு போல் பார்க்கிறார்?'' என்று தன்னைக் கேட்டுக்கொண்டாலும் அவன் பார்ப்பதைப்பற்றி திருப்தியே அடைந்தாள். அந்த திருப்தியுடன் கரையை நோக்கி நீந்தவும் முற்பட்டாள். வெகு துரிதமாக நீந்தி கரைக்கு வந்து, அலைகளால் புரட்டப்பட்டு மணல் ஒட்டிய சரீரத்துடன் தன் முன்பு நின்ற அந்த அழகியை ஏறெடுத்து நோக்கினான் இளமாறன். அப்பொழுதும் அவள் அந்தப் பழைய தோலாடையையே அணிந்திருந்தாள். அது அரையும் குறையுமாக மறைத்த தொடைகளும் மார்பகமும் ஆங்காங்கு ஒட்டியிருந்த மணலால் மணிகள் இழைத்த தங்க நகைகளைப்போல் பிரகாசித்தன.

இளமாறன் ஒரு நிமிடம் அவளை உற்றுநோக்கினான். ''இங்கு யார் நீராட வரச்சொன்னது உன்னை?'' என்று முரட்டுத்தனமாக வினவினான்.

அவள் அதிகாரம் சொட்டிய கண்களை அவன்மீது திருப்பினாள். ''யாரும் சொல்ல அவசியம் இல்லை. எனக்கு இஷ்டமான இடத்தில் நீராடுவேன்'' என்று அதிகாரத்துடன் பேசினாள் அவள்.

''உன் நீராட்டத்துக்கு ஏற்பாடு செய்ய உதயகுமாரனிடம் சொல்லிவிட்டு வந்தேன்'' என்று உஷ்ணமான குரலில் சொன்னான் இளமாறன்.

''பாவம்! அந்தக் குழந்தையிடம் சொன்னதை நானே கேட்டேன்'' என்று அவள் அனுதாபத்துடன் பேசினாள்.

இளமாரன் கண்களில் திடீரென ஓர் ஒளி தோன்றி மறைந்தது. ''அவன் குழந்தையல்ல. இருபத்தெட்டு வயதுக்குமேல் ஆகிறது'' என்று கண்டிப்பு ஒலித்த குரலில் சொன்னான்.

அந்தப் பெண் நகைத்தாள். ''என்ன வயதானாலும் அவன் குழந்தைதான். அவன் முகத்தில் பால் சொட்டுகிறது'' என்று சொன்னாள் நகைப்பின் ஊடே.

திடீரென இளமாரன் இதயத்தில் ஏதோ சந்தேகம் ஏற்படவே ''அவன் குழந்தையா என்ன என்பதை விரைவில் நீ புரிந்து கொள்வாய், ஏன் தெரியுமா?'' என்று கேட்டான் இளமாரன்.

''ஏன்?''

''அவன்தான் இன்று உன்னை புத்தர்மட விசாரணைக்கு அழைத்துப் போவான்.''

''அவனுடன் நான் ஏன் போகவேண்டும்?''

''நீ நிரபராதி என்று தெரிந்தால் உன்னை அவனுக்கு மணமுடிக்கப் போகிறேன்.''

இதைக்கேட்ட அவள் புன்முறுவலொன்றைப் படர விட்டாள். ''நான் அவனை மணக்க விரும்பவில்லையானால்?'' என்று வினவினாள் புன்முறுவலின் ஊடே.

''உன் விருப்பம் இதில் எதுவும் கிடையாது!''

''ஏன்?''

''நீ உதயகுமாரன் அடிமை.''

''யார் சொன்னது அப்படி?''

''நான் சொல்கிறேன்'' என்று சொன்ன இளமாரன் அவளை நெருங்கி கையைப் பிடித்துத் தரதரவென்று இழுத்துக்கொண்டு வாணகிரி மீது ஏறத் தொடங்கினான்



வாணகிரியின் அடிவாரத்திலேயே அலை அடித்துக் கொண்டிருந்ததால், மணல் அடித்துவிட்டதன் காரணமாக அங்கு ஆழம் இல்லையாதலாலும் சர்வ சாதாரணமாக நீர் நிலையைக் கடந்து மலைமீது ஏறினான்.

அவளும் சளைக்காது அவன் இழுப்புக்கு ஈடுகொடுத்து அவனுடன் நடந்தாள். இருவரும் மலைச்சரிவிலிருந்த விடுதியை அடைந்ததும் கதவைத் தட்டினான் இளமாரன்.

''தட்டிப் பயனில்லை. அவரால் கதவைத் திறக்க முடியாது'' என்ற அநதப் பெண் ''கதவை உடைப்பதைத் தவிர வேறு வழியில்லை'' என்றாள்.

இளமாரன் அவளை அப்படியே தூக்கி அந்த விடுதியின் கூரை மீது ஏற்றிவிட்டு ''நீ கூரைமீது நடந்தால் முற்றத்தின் பகுதி வரும். அங்கு உள்ளே குதித்துத் திரும்பி வந்து வாயிற் கதவைத்திற'' என்று உத்தரவிட்டான்.

அந்தப்பெண் அந்த ஓட்டுக் கூரைமீது தாவித்தாவி அனாயாசமாக ஓடினாள். சற்று நேரத்திற்கெல்லாம் அவள் தட் என்று குதிக்கும் ஒலி கேட்டது. அடுத்த சில விநாடிகளில் வாயிற்கதவை அவள் திறந்துவிடவே உள்ளே சென்ற இளமாரன் சுற்றும் முற்றும் பார்த்து ''உதயகுமாரன் எங்கே'' என்று வினவினான்.

''அதோ அந்த அறையிலிருக்கின்றார்'' என்று கூறிய அவள் அந்த எதிர்அறையின் தாழையும் திறந்ததும் உதயகுமாரன் பெரும் சீற்றத்துடன் வெளியே வந்தான். ஒருமுறை அந்தப் பெண்ணையும் நோக்கி இளமாரனையும் நோக்கினான். ''இருவரும் ஜலக்கிரீடை செய்துவிட்டு வருகிறீர்களா?'' என்று சினத்துடன் வினவினான்.

இளமாரன் அந்த வாலிபனைப் பரிதாபக் கண்களால் நோக்கினான். ''இல்லை உதயகுமாரா! எனக்குப் பிறகு தான் இவள் வந்தாள் கடலுக்கு. ஆமாம் நீ எதற்காக அந்த அறையில் ஒளிந்து கொண்டாய்?'' என்று வினவினான்.

"நான் ஒளிந்து கொள்ளவில்லை. அந்தப்பெண் பிசாசுதான் என்னை அறையில் தள்ளித் தாழிட்டு ஓடிவிட்டது" என்று எரிந்து விழுந்தான் உதயகுமாரன்.

இளமாறனின் இகழ்ச்சி நிரம்பிய விழிகள் உதயகுமாரனை நோக்கின. "இதைச் சொல்ல உனக்கு வெட்கமாயில்லை?" என்று உதடுகள் வினா தொடுத்தன.

"பிசாசிடம் மனிதர்கள் தோற்பதில் வெட்கம் என்ன இருக்கிறது?" என்று கேட்டான் உதயகுமாரன்.

அதுவரை சும்மா இருந்த பிசாசு பெரிதாக நகைத்தது. "உதயகுமாரா! நீ இத்தனை கோழை என்பது எனக்குத் தெரியாது" என்று நகைப்பின் ஊடே பேசவும் செய்தது.

"பேசியது போதும். உணவு தயாராகட்டும்" என்றான் இளமாறன்.

"உன்னைத்தான். நீலநதிக்கரை உணவை சித்தம் செய். அதைச் சாப்பிட்டு எத்தனையோ ஆண்டுகள் ஆகின்றன!" என்று அவளைப் பார்த்துக்கூறிய இளமாறன் உதயகுமாரனை நோக்கி "அவளுக்கு நீயும் உதவு" என்று சொன்னான்.

அந்தப் பெண் உள்ளே சென்றாள். இடையிலிருந்த கதவை சாத்திக்கொண்டு அவள் தோலாடையைப் பிழிந்து ஒரு பக்கத்தில் போட்டுவிட்டு அங்கிருந்த ஒரு துணியை எடுத்து சீலையாகக் கட்டிக்கொண்டு வெளியே வந்தாள். அந்த வெள்ளை உடையில் அவள் அழகைக் கண்டு உதயகுமாரன் பிரமித்துப் போனான். அவன் பிரமிப்பைக் கண்ட இளமாறன் "பெண்ணே! இவனை அழைத்துப்போ உள்ளே. உதயகுமாரா! அவளுக்கு உதவு" என்று சொன்னதும் அவள் உள்ளே சென்றாள். சில விநாடிகள் தயங்கிவிட்டு உதயகுமாரன் அவளைப் பின் தொடர்ந்தான்.

சமையலறையில் அவள் உணவு தயாரித்த முறையே விநோதமாயிருந்தது, உதயகுமாரனுக்கு. காய்கறிகளை நீரில் போடாமல் ஊசியில் குத்திக் குத்தி வாட்டினாள்.



பிறகு மிளகையும் சீரகத்தையும் இடித்து அவற்றில் பூசினாள். சோற்றையும் அதிகமாக வேகவிடாமல் வடித்தாள்.

அந்த சோற்றையும் காய்கறியையும் மிகவும் சுவைத்து இளமாறன் சாப்பிட்டாலும் அதை சாப்பிட முடியவில்லை உதயகுமாரனால். வேண்டா வெறுப்பாக சோற்றை காய் கறிகளில் கலந்து சுருட்டி வாயில் அடைத்துக் கடித்து சாப்பிட்டான். உணவு முடிந்ததும் இளமாறன் கூடத்தில் சென்று படுத்துக்கொண்டான். சிறிது நேரத்திற்கெல்லாம் உதயகுமாரன் பின் தொடர கூடத்துக்கு வந்த அந்தப் பெண்ணும் இளமாறன் அருகே உட்கார்ந்தாள்.

இளமாறன் பெரும் சிந்தனையிலிருந்தான். அந்தப் பெண் அவனை நெருங்கி உட்கார்ந்து "என்ன யோசிக்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"உன் பிற்காலத்தைப் பற்றி யோசிக்கிறேன். எதற்கும் விசாரணை முடியட்டும் இன்று மாலை" என்று கூறிவிட்டு நித்திரை செய்ய கண்களை மூடிக்கொண்டான். மாலை வந்ததும் உதயகுமாரனுடன் அப்பெண்ணை புத்ததத்தர் மடத்துக்கு அனுப்பி வைத்தான்.

அவர்கள் போய் சிறிது நேரத்திற்கெல்லாம் அவனும் மடத்தை நோக்கிப் புறப்பட்டான். அவன் மடத்தை அடைந்தபோது மாலை முற்றி இருள் சூழ்ந்திருந்தது. மடமெங்கும் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. சச்சதுரமாகக் கட்டப்பட்டிருந்த அந்த மடத்தின் சதுக்கத்தில் விசாரணைக்கு ஆசிரமவாசிகள் அனைவரும் திரட்டப்பட்டிருந்ததையும், மடத்துக் காவலருக்கு இடையே அப்பெண்ணும் உதயகுமாரனும் நின்றிருந்ததையும் பார்த்த இளமாறன் சற்றுத் தள்ளியிருந்த தூணுக்குப் பின்னால் நின்று கொண்டு விசாரணையைக் கவனிக்கலானான்.

சற்று நேரத்திற்கெல்லாம் புத்ததத்தர் வந்து பெரிய ஆசனம் ஒன்றில் அமர்ந்ததும் விசாரணை தொடங்கியது.

''இவன் என்ன செய்தான்?'' என்று புத்ததத்தர் விசாரணையைத் தொடங்கினார்.

காலையில் வாணகிரி வந்த துறவிகளில் ஒருவர் முன்னே வந்து ''நமது காவலர் தலைவனைக் கொன்று விட்டாள்'' என்றார்.

புத்ததத்தர் முகத்தில் சலனம் எதுமில்லை; மிகவும் சாந்தமாக அடுத்த கேள்வியை எழுப்பி ''கொலை செய்தாள் என்பதற்குஅத்தாட்சி உண்டா?'' என்று கேட்டார்.

''உண்டு. எனது சகோதரரே அதைப் பார்த்தார்'' என்றதும் காலையில் வாணகிரி வந்த மற்றொரு துறவி கூட்டத்திலிருந்து எழுந்து ''ஆம். நான் பார்த்தேன்'' என்றார்.

புத்ததத்தர் மிகுந்த வருத்தத்துடன் நோக்கினார் அந்தப் பெண்ணை. ''பெண்ணே! உண்மையில் நீ கொலை செய்தாயா?'' என்று வினவினார்.

''ஆம்'' என்ற அந்தப் பெண் ''அதன் காரணத்தைக் கேளுங்கள்...'' என்று பேசத் தொடங்கினாள்.

''காரணம் வேண்டாம். கொலை கொலைதான். அதை எக்காரணமும் சரிக்கட்ட முடியாது'' என்றார் புத்ததத்தர்.

அதுவரை வாளாவிருந்த உதயகுமாரன் ''ஏன் சரிக்கட்ட முடியாது?'' என்று கேட்டான். ''புத்தமடத்தில் காவலர் தலைவன் முறைகெட்டு நடந்து கொண்டால் அவனைக் கொன்றால் என்ன தவறு?'' என்று சீற்றத்துடன் வினவினான்.

புத்ததத்தர் கண்கள் அந்த வாலிபன் மீது நிலைத்தன. ''உதயகுமாரா! நீ எப்படி இவளுடன் சேர்ந்தாய்?'' என்று சாந்தமுடன் வினவினார்.

உதயகுமாரன் அலட்சியமாக அந்தக் கூட்டத்தைப் பார்த்தான். ''எங்கள் விடுதிக்கு ஓடி வந்தாள்'' என்று சொன்னான்.

''நீ அவளுக்கு அடைக்கலம் கொடுத்தாய்?''



''ஆம்''

''அப்படியானால் நீயும் குற்றவாளி... உன்னையும் சேர்த்து விசாரிக்கிறேன்'' என்ற புத்ததத்தர் ''அவளைப் பிடித்துக் கட்டுங்கள்'' என்று சுற்றிலுமிருந்த வீரர்களுக்குக் கட்டளையிட வீரர்கள் உதயகுமாரனை நெருங்க முற்பட்டனர். அந்தச் சமயத்தில் ஒலித்தது இளமாரன் குரல். ''அவளைத் தொடாதே. அவள்மீது யார் கைவைத்தாலும் உடனே பிணமாகி விடுவீர்கள்'' என்று கூறிக் கொண்டும் கையில் ஒரு குறுவாளை ஏந்திக் கொண்டும் அந்த விசாரணைக் கூட்டத்தில் நுழைந்தான் இளமாரன்.

எல்லோர் கண்களும் அவன்மீது திரும்பின. பலருக்கு அவன் வருகையே கிலியைத் தந்தது. புத்ததத்தர் மட்டும் சிறிதும் நிதானத்தை இழக்காமல் ''இளமாரா! நீ அனாவசியமாகத் தலையிடாதே இந்த விசாரணையில்'' என்று கண்டிப்புடன் பேசினார்.

இளமாறன் அவர் சொல்லை லட்சியம் செய்யாமல் கூட்டத்தின் இடையே நடந்து அந்தப் பெண்ணின் தலைக் குழலைப் பிடித்து சிறிது தலையை உயர்த்தி, ''சுவாமி! இவளை நன்றாகப் பாரும்'' என்றான். பக்கத்திலிருந்த வீரர் கையிலிருந்த பந்தமொன்றையும் ஏந்தி அவள் முகம் நன்றாகத் தெரியும்படி பிடித்தான்.

புத்ததத்தரின் கண்கள் அந்தப் பெண்ணின் முகத்தை உற்று நோக்கின. அவர் முகத்தில் பெரு வியப்பும் அதிர்ச்சியும் ஏற்பட்டது. ''இருக்க முடியாது. அவளல்ல இவள். அவள் இறந்துவிட்டாள்'' என்று கூவினார்.

''சுவாமி! அவளேதான். இவள் கழுத்தின் பின்புறத்தைப் பாரும்'' என்று கூறி அவளை அழைத்துக்கொண்டு சென்று புத்ததத்தரிடம் அவள் கழுத்தைக் காட்டினான்.

புத்ததத்தர் முகம் பெரும் குழப்பத்தாலும் கிலியாலும் பெரிதும் சிவந்தது. சற்று நேரத்திற்கெல்லாம் யாரும் எதிர்பாராத நிகழ்ச்சி நடந்தது.

□ □ □

# 5. விசாரணையும் விபரீதமும்

புகாரினை பாதிக்குமேல் கடலரசன் விழுங்கிவிட்டாலும் அழியாமலிருந்த மீதிப்பாதியின் ஆரம்பத்தில் புத்ததத்தர் தமதுமடத்தை நிறுவியிருந்ததாலும், அதற்குக் களப்பிரர் மன்னன் [1]அச்சுத விக்ராந்தன் அளித்திருந்த காவலரைத் தவிர சுவாமிகளும் தனியாக ஒரு துறவிப் படையை நிறுவியிருந்ததாலும், மடம் மிக பலமாகவே காக்கப்பட்டு வந்ததைத்தவிர அதன் மூலமே புகாரில் வாணிபம் பூராவும் நடந்து வந்தது. புகார் பட்டணப் ஓரளவு அழிந்த பின்பும் அதன் வாணிபம் மட்டும் குறையாதிருந்ததால் அங்குவந்த அராபிய, சீன, யவன வணிகரிடம் சுவாமிகளே சுங்கம் வசூலித்து அரசனுக்கு அனுப்பி வந்தார். சுங்கத்தில் சுவாமிகளின் 'அற்ப' மடச் செலவு தவிர மீதி மன்னனுக்குப் போய்க் கொண்டிருந்ததாலும், அந்தத் தொகையும் ஓரளவு கணிசமாயிருந்ததாலும் மன்னன் அதைப் பற்றிக் கவனிக்காமலும் விசாரணை செய்யாமலும் நடந்து கொண்டதால் சுவாமிகளின் அரசாங்க செல்வாக்கு பலமாகவே இருந்தது.

இத்தகைய பெரிய அந்தஸ்தின் காரணமாக [2]புத்ததத்தர் புகாரில் கிட்டத்தட்ட ஒரு சிற்றரசன் போலவே

---

1. புத்ததத்தர் களப்பிர மன்னனான அச்சுதவிக்கண்டன் என்ற அச்சுத விக்ராந்தன் காலத்தில் வாழ்ந்தவர். அந்த மன்னன் காலத்தில்தான் தமது அபித்தாமவதரா என்ற நூலை எழுதி முடித்ததாக புத்ததத்தர் கூறுகிறார் Colas-By Sastry-Page 101
2. Buddadatta himself states that he lived in the great Monastery built by Kanhadhasa at Kavaripattanam Colas by Sastry-page 101



வாழ்ந்து வந்தார். பட்டினப்பாக்கத்தில் பாதி விழுங்காத பகுதியிலிருந்த பெரிய நந்தவனங்களும், சில மாளிகைகளும்கூட அவர் வசத்திலிருந்ததால், அங்கு வந்த வெளியூர் வணிகர்களும் அவரது அதிகாரத்துக்குட்பட்டே நடந்து வந்ததால் புத்ததத்தரை யாரும் எதிர்க்கத் துணிந்ததில்லை.

புத்ததத்தர் உறையூரைச் சேர்ந்தவர் என்று பொதுவாக மக்களுக்குத் தெரியுமே தவிர அவர் புகாருக்கு எப்பொழுது வந்தார் என்பது யாருக்கும் திட்டமாகத் தெரியாது. அவர் பல ஆண்டுகளுக்கு முன்பு திடீரென புகாரில் தோன்றி மிகவும் சிறியதாயிருந்த கண்ணதாசன் மடத்தில் தங்கியது பலர் நினைப்பில் இல்லையென்றாலும் கண்ணதாசன் மடத்தை விரிவுபடுத்தி கோட்டைக்கு சமானமாக அவர் அடித்தது மக்களுக்குப் புரிந்திருந்ததால் மக்கள் அவரை தெய்வம் போலவே பாவித்து வந்தார்கள். அப்பேர்ப்பட்ட புத்ததத்தரை யாரும் அசட்டை செய்ய முடியாதென்றாலும் அதற்கு விலக்காக எங்கிருந்தோ இளமாறன் வந்து முளைத்ததைப்பற்றி எல்லோரும் வியந்தார்கள். எங்கும் போகாத இளமாறன் புத்ததத்தர் மடத்துக்கு மட்டும் எப்பொழுதாவது வந்து போவதையும் புத்ததத்தரும் இராக்காலங்களில் தனியாக வாணகிரிக்குச் சென்று அவனைப் பார்ப்பதையும் புகார் மக்கள் அறிந்திருந்தாலும் இளமாறனைப் போன்ற ஒரு படை வீரனுக்கும், துறவியான புத்ததத்தருக்கும் என்ன தொடர்பு இருக்க முடியுமென்பதை அறிய முடியாததால் ரகசியமாக ஏதாவது பேசிக்கொண்டிருந்தார்களே தவிர பகிரங்கமாக எதுவும் பேச அஞ்சினார்கள்.

இத்தகைய உறவு புத்ததத்தருக்கும் இளமாறனுக்கும் இருந்ததை புகார் வாசிகள் அறிந்திருந்ததால் இளமாறன் விசாரணையில் தலையிட்டது அவர்களுக்கு வியப்பாயில்லையென்றாலும் புத்ததத்தரின் திடீர் மாற்றம் அவர்களுக்கு அதிர்ச்சியையே தந்தது.

அன்று காலையில் இளமாரன் அந்த வெளியூர்ப் பெண்ணுக்குத் தஞ்சமளித்ததும், மடத்துத் துறவிகளைத் திருப்பியனுப்பியதும் காலையிலேயே மக்களுக்குத் தெரிந்திருந்தால் உடனடியாக இளமாரனைச் சிறைசெய்து விசாரணைக்குக் ஏன் புத்ததத்தர் கொண்டு வரவில்லை என்று பேசிக்கொண்டார்கள். அவன் எப்படியும் விசாரணைக்குக் கொண்டு வரப்படுவான் என்பதைத் திட்டமாக நம்பிய மக்களுக்கு இளமாரனுக்குப் பதில் உதயகுமாரன் அந்தப் பெண்ணை அழைத்து வந்தது விசித்திரமாயிருந்தது. அதைவிட இளமாரன் ஏற்க வேண்டிய பொறுப்பை உதயகுமாரனே ஏற்று தானே அந்த அழகியைக் காத்ததாக ஒப்புக்கொண்டது விசித்திரத்திலும் விசித்திரமாயிருந்தது. எல்லாவற்றையும்விட விசித்திரம் உதயகுமாரனையும் புத்ததத்தர் தண்டித்தது.

பெண்ணைக் காப்பாற்றியதற்கு இளமாரனே பொறுப்பாளியென்பதையும், அப்பாவியான உதயகுமாரன் அல்லவென்பதையும் மக்கள் உணர்ந்திருந்ததால் இளமாரனுக்கு பதில் உதயகுமாரனைத் தீர்த்துக்கட்ட புத்ததத்தர் இசைந்தது பெரும் அதிர்ச்சியாயிருந்தது. புத்தமடத்தில் விசாரணையைப் பார்க்க வந்த அனைவருக்கும் அன்றே உதயகுமாரன் உறையூர் சிறைச்சாலைக்கு அனுப்பப்படுவான் என்பதையும், பிறகு அவன் மறைந்து போவது திட்டமென்பதையும் உணர்ந்திருந்த மக்களுக்கு இளமாரன் தலையிட்டே அதிசயமாயிருந்ததென்றால், முடிவு பரம விசித்திரமாயிருந்தது.

உதயகுமாரன்மீது கை வைக்காமல் காவலரை எச்சரித்து, இளமாரன் விசாரணை மண்டபத்தில் தூண்மறைவிலிருந்து வெளிவந்ததும், பிறகு புத்ததத்தரின் காதில் ஏதோ சொல்லியதும் விசாரணை மண்டபத்திலிருந்த அனைவருக்கும் பிரமிப்பாயிருந்ததென்றால், அந்தக் கொலைகாரியை இளமாரன் இழுத்துச் சென்று புத்ததத்தரிடம் காட்டிய நிகழ்ச்சியும் அடியோடு நம்பத்



தகாததாயிருந்தது. பெண்ணின் கூந்தல் முன்புறமாகத் தள்ளப்பட்டு கழுத்தின் பின்புறத்தைக் கவனித்த புத்ததத்தர் அந்தப் பெண்ணை அனைவர் முன்னிலையிலும் அணைத்துக்கொண்டார். அணைத்தவண்ணம் எழுந்திருக்கவே செய்தார். அப்படி பெண்ணை மார்பில் அணைத்த வண்ணம் விசாரணைக்குக் கூடியிருந்த மடத்துத் துறவிகளையும், சீடர்களையும், புகாரின் பொதுமக்களையும் ஒரு முறை சுற்றி, கண்களால் அளவெடுத்த புத்ததத்தர் மெதுவாகப் பேச முற்பட்டு "என்னுடைய இந்த நடவடிக்கை உங்கள் அனைவருக்கும் பிரமிப்பாயிருக்கும்" என்று தொடங்கியபோது என்றைக்கும் அசங்காத அவர் திடமான குரல் அன்று திடத்தை இழந்து லேசாக ஆடியது. அந்த ஆடிய குரலில் புத்ததத்தர் மேலும் பேசினார். "நீங்கள் யாரும் அறியாத பெரிய ரகசியம் ஒன்று இந்தப் பெண்ணோடு இணைந்திருக்கிறது. அதை முழுவதையும் சொல்ல இது சமயம் அல்ல. ஆனால் இவளுக்கு எந்தத் தீங்கு நேர்ந்தாலும் இந்தப் புகாருக்கு நேரக்கூடிய ஆபத்து அதிகம். இருந்தாலும் இவள் கொலை செய்திருக்கிறாள்..." இங்கு சிறிது பேச்சை நிறுத்தினார் புத்ததத்தர்.

"ஆம் ஆம்" என்று ஏதோ இரண்டு குரல்கள் விசாரணை மண்டபத்தின் கோடியிலிருந்து கேட்டன.

"அப்படியானால் இவளை ஏன் தண்டிக்கவில்லை?" மற்றொரு குரல் இன்னொரு கோடியிலிருந்து வந்தது.

புத்ததத்தர் மெல்ல மக்கள் தமக்கு எதிராகத் திரும்புவதை உணர்ந்தார். இருப்பினும் அதைப்பற்றி லட்சியம் செய்யாமல் "நான் துறவி, எனக்கு வயதும் எழுபதாகிறது" என்று குறிப்பிட்டார்.

"இருந்தாலும் ஆசை விடவில்லை" என்று ஒரு குரல் எங்கிருந்தோ கிளம்பியது. அந்தக் குரலைத் தொடர்ந்து கொல்லென்று சிரிப்பு, கூட்டத்தில் எழுந்தது.

புத்ததத்தர் அப்பொழுதும் அவளை விடாமல் அணைத்தபடி நின்றார். உற்று விசாரணை மண்டபக்

கூட்டத்தை நோக்கினார். "எழுபது வயதானவன், உணர்ச்சிகளை உதறியவன் ஒரு பெண்ணுக்கு அபயம் அளித்தான் என்பது விசித்திரமல்ல..." என்றும் உணர்ச்சி ததும்பிய குரலில் சொன்னார்.

"ஹும்..." என்ற கேலி ஒலி எங்கும் கிளம்பியது.

புத்ததத்தரின் சாந்தமான — உறுதியான கண்கள் கூட்டத்தை அளவெடுத்தன ஒரு முறை. "இது புத்த பகவானின் விசாரணை மண்டபம்; இங்கு கேலிக்கு இடமில்லை" என்று கூறிவிட்டு, "அழிந்த இந்தப் புகாரை மீண்டும் இன்றைய உயர்நிலைக்குக் கொணர்ந்தது எப்படி? யாரால்?" என்று வினா கணைகளைத் தொடுத்தார். இத்தனை சிறப்புக்கும் புத்ததத்தர்தான் காரணமென்பதை மக்கள் உணர்ந்திருந்ததால் சற்று அமைதி அடைந்தனர். புத்ததத்தரின் சீடர்களில் ஒருவரும் அன்று காலை அந்தப் பெண்ணைத் துரத்திச்சென்ற இரண்டு சாமியார்களில் ஒருவருமான துறவி எழுந்து "சுவாமி! இந்தப் புகாரின் மறுமலர்ச்சிக்குத் தாங்கள்தான் காரணம். ஆனால் ஒரு கொலைகாரிக்கு அபயமளிப்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. வேலியே பயிரை மேய்ந்தால் அதற்குப் பரிகாரமில்லாதது போல, நீதியை நிர்வகிக்க வேண்டிய தாங்களே அதை மீறினால் வழிதான் என்ன?" என்று வினவினார்.

புத்ததத்தர் அந்தத் துறவியை நிதானமான கண்களால் நோக்கினார். "சாந்தானந்தரே! இதுவரை நான் நீதிக்குப் புறம்பாக எதையாவது செய்திருக்கிறேனா?" என்று கேட்டார்.

"செய்திருந்தால் இப்பொழுது தங்களை இன்று யாரும் எதிர்க்கமாட்டார்கள். புத்தபிரான் அவதாரமென நாங்கள் வணங்கும் ஒருவர் இம்மாதிரி முறை தவறியதால்தான் இந்தக் குழப்பமும் எதிர்ப்பும். சுவாமி! இந்த மடத்தின் நலத்தையும், மதத்தின் நலத்தையும் முன்னிட்டு அந்தக் கொலைகாரியை வெட்டுப்பாறைக்கு அனுப்புங்கள்" என்றார்.



"ஆம் ஆம் அனுப்புங்கள்" என்று கூட்டத்தில் கூச்சல் எழுந்தது. துறவிகள் பலரும் எழுந்து நின்றார்கள்.

"துறவிகளே! பொதுமக்களே! அவசரப்படாதீர்கள். இன்று விசாரணையை நடத்தினால் குற்றம் மடத்தின் மீது விழும்; நாளை நடத்துவோம் விசாரணையை; என்னிடம் சந்தேகமிருந்தால் என் தியான அறைக்கு நான்கு பேர் மட்டும் வாருங்கள், ரகசியத்தைச் சொல்லுகிறேன்" என்றார்.

"அதுவரை?" என்று ஒரு துறவி கேட்டார்.

"சிறையிலிருப்பாள்" என்றார் புத்ததத்தர்.

இதைக் கேட்டதும் சற்று அடங்கியது கூட்டத்தின் கொந்தளிப்பு. அடுத்து அவர் சொன்னது மீண்டும் சீற்றத்தைக் கிளறியது. "இவள் இளமாறனிடம் சிறையிருப்பாள்" என்று புத்ததத்தர் சொன்னதும் பெரும் குழப்பம் கூட்டத்தில் ஏற்பட்டது. "நீதி குலைந்துவிட்டது. கொண்டு வாருங்கள் அவளை, வெட்டுப்பாறைக்கு நாமே கொண்டு செல்வோம்" என்று ஒரு துறவி கூச்சலிட, கூட்டம் புத்ததத்தரை நோக்கி நகர்ந்தது.

நிமிட நேரத்தில் விசாரணை மண்டபம் முழுவதும் குழப்பம் பலமாயிருந்தது. "காவலர்களே! இந்தக் குழப்பத்தை அடக்குங்கள். யார் நானிருக்கும் மேடையை நோக்கி வந்தாலும் தாட்சண்யம் பார்க்காமல் வெட்டிவிடுங்கள்" என்று கூவினார் புத்ததத்தர். ஆனால் காவலர்கள் முயற்சி பலிக்கவில்லை; காவலர் சிலர் கூட்டத்தால் நெருக்கப்பட்டார்கள். சிலர் வாட்கள் ஆகாயத்தில் பறந்தன. பிரளயம்போல் கூட்டம் நீதிமண்டப உயர் மேடையை நோக்கி நகர்ந்தது. அத்துடன் தமது முடிவு காலம் நெருங்கிவிட்டதை புத்ததத்தர் உணர்ந்தாலும் இருந்த இடத்தில் ஆடாமல் அசையாமல் நின்றார். கூட்டம் மேடைமீதும் ஏறிவிட்டது. எங்கும் கலவரம். எந்த நிமிடத்தில் என்ன விபரீதம் ஏற்படுமோ என்று புத்ததத்தருக்கு விளங்கவில்லை. அந்தப் பெண்ணை அணைத்தபடி நின்றார். இரண்டு கைகள் அந்தப் பெண்ணை அவர் கையிலிருந்து, பலவந்தமாகப் பிடுங்கின. "நீலரதி! நீலரதி!" என்று உணர்ச்சி மிகுதியுடன் கூச்சலிட்டார் புத்ததத்தர்.

□ □ □

# 6. நீலரதியின் பூர்வ கதை

விசாரணை மண்டபத்தில் கூடியிருந்தவர்கள் சோழ நாட்டுக் குடிமக்களாக மட்டும் இருந்திருந்தால் அந்த மண்டபத்தில் அத்தனை குழப்பமும் சீர்கேடும் நேர்ந்திருக்காது. சேர, சோழ, பாண்டிய, பல்லவ நாடுகளை அடிமைகொண்டு தமிழகத்திற்கு ஓர் இருண்ட காலத்தையும் சிருஷ்டித்துவிட்ட களப்பிரர் சந்ததியும் அந்தக் கூட்டத்தில் கலந்திருந்ததால், புத்ததத்தரைப் போன்ற ஒரு துறவியைக்கூட அலட்சியம் செய்து புரண்டு எழும் நிலை ஏற்பட்டதாலும், அதை புத்ததத்தரும் பிற துறவிகளுங்கூட உணர்ந்திருந்தாலும், அவர்கள் யாராலும் ஏதும் செய்ய இயலாமற் போய்விட்டதன் காரணமாக மண்டபத்திலிருந்த கூட்டம் விசாரணை மேடையில் ஏறிவிட்டது. ஏறியதும் புத்ததத்தரைச் சூழ்ந்துகொண்டு நீலரதியை அவர் கைகளிலிருந்து பிடுங்க யத்தனித்தும் அவர் அவளை இறுக அணைத்திருந்ததால் அத்தனை எளிதில் அவளை நீக்க முடியாததால் அவரைத் தனியாக இழுக்க முயன்றனர். இப்படி அந்தப் புரட்சிக் கூட்டம் அவரைச் சுற்றிக்கொண்டதால் திக்கு எது என்று தெரியாமல் திண்டாடிய புத்ததத்தர் தமது கையிலிருந்து பலமாக நீலரதி அகற்றப்பட்டதால் அவர் 'நீலரதி! நீலரதி!' என்று அவள் பெயரைச் சொல்லி அழைத்து அலறினார்.

அந்தப் பெயரைக்கேட்டதும் சட்டென்று கூட்டத்தின் குழப்பம் அடங்கியதன்றி ஓரளவு பீதியும் அதை ஆட்கொள்ளவே மேடையிலிருந்தவர்கள் சிறிது இடைவெளி கொடுத்ததும் புத்ததத்தர் நடந்தது என்னவென்பதை ஆராயத் தமது தலையைச் சிறிது தூக்கினார். அப்படித் தூக்கிப் பார்த்தபோது நீலரதி இளமாறன் தோள்மீது



குறுக்கே படுத்திருந்ததையும் அவன் கையிலிருந்த குறுவாள் எதிரேயிருந்த கூட்டத்தின் மீது திருப்பப்பட்டிருந்ததையும் கண்டார். அவர் பக்கத்தில், நீலரதியைத் தோள் மீது குறுக்கே போட்டுக் கொண்டிருந்த இளமாறன் கூட்டத்தை நோக்கி பயங்கரமாக விழித்து "புகார் மடத்தின் ஊழியர்களே! புகாரின் பெருமக்களே! அனாவசியமான உணர்ச்சிக்கு இடங்கொடுக்காதீர்கள். இன்று நீங்கள் புத்ததத்தருக்கு எதிராகப் புரட்சி செய்ததும், அவர் விசாரணையின் முடிவை அலட்சியம் செய்ததும் பெருங் குற்றமாகும். அச்சுத விக்ராந்தன் ஆட்சியில் புத்ததத்தருக்கும் புத்த மதத்துக்கும் அளிக்கப்பட்டிருக்கும் கௌரவத்தை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். கேவலம் ஒரு பெண்ணை வெட்டுப்பாறைக்கு அனுப்ப நீங்கள் செய்த இன்றைய புரட்சி இப்புகாரின் பெயரைக் கெடுத்துவிடும். அதுமட்டுமல்ல, புத்ததத்தருக்கு இழைக்கப்படும் எந்த அவமானத்தையும் அகௌரவத்தையும் மன்னன் தனக்கு இழைக்கப்பட்டதாக நினைக்கிறான். அவருக்கு இன்று ஏது நேர்ந்தாலும் நாளைக்கு இந்த மடத்தைச் சேர்ந்த அனைவரும் அழிக்கப்படுவார்கள். ஆகவே மன்னன் சினத்துக்கு ஆளாகாதீர்கள்" என்று இரைந்த குரலில் பேசினான். "முதலில் இந்த மேடையிலிருந்து இறங்குங்கள். இன்னும் பத்து விநாடிகளில் புனிதமான இந்த மேடையில் யார் நின்றாலும் அவர்களை நானே வெட்டிப்போடுவேன்" என்றும் இளமாறன் கூறியது மட்டுமின்றி தனது குறுவாளை உற்றும் பார்த்ததால் கூட்டத்தில் சிறிது சலசலப்பு ஏற்பட்டது. பிறகு மேடை மீதிருந்தவர்கள் மெல்லக் கீழே இறங்கலானார்கள். எல்லோரும் இறங்கி முடிந்ததும் தனது தோளிலிருந்த நீலரதியைக் கீழே இறக்கி எல்லோரும் பார்க்கும் படியாக நிற்கவைத்த இளமாறன் "இதோ இந்தப் பெண்ணைப் பாருங்கள். இவள் கொலை செய்யக் கூடியவளாகவா தென்படுகிறாள்? அப்படியே கொலை செய்திருந்தாலும் அதன் காரணத்தை ஆராய வேண்டாமா? அதற்குத்தான்

புத்தத்தர் விசாரணையை ஒத்திப்போட்டிருக்கிறார். இது ஒரு தவறா? அதுவும் காரணமின்றி, சரியான விசாரணையின்றி, கேவலம் உணர்ச்சிப் பெருக்கால் தவறான தண்டனை கொடுக்கப்பட்டால் மன்னர் தான் ஒப்புக்கொள்வாரா?'' என்றும் நிதானமாகப் பேசினான்.

இளமாறன் சொன்னதில் நீதியிருந்தாலும், அதைப் பெரும்பான்மையோர் ஒப்புக் கொண்டாலும் மடத்தைச் சேர்ந்த துறவிகள் ஒப்புக்கொள்ளவில்லை. ''இவள் நிரபராதியானால் இன்று காலை எங்களிடமிருந்து தப்பி ஏன் ஓடினாள்?'' என்று ஒரு துறவி கேட்டார்.

இளமாறன் கண்கள் அந்தத் துறவியை உற்று நோக்கின. ''இப்பொழுதே ஒழுங்கான விசாரணையை அனுமதிக்காத நீங்கள், விசாரணை முடியாமலே இந்தப் பெண்ணை வெட்டுப்பாறைக்கு இழுத்துச் செல்ல முயன்ற நீங்கள், காலையில் இவள் உங்கள் கையில் சிக்கியிருந்தால் என்ன நேர்ந்திருக்கும்?'' என்று கேட்டு விடையும் அவனே சொன்னான். ''நீதி அழிந்திருக்கும். ஓர் அபலை உயிர் நீத்திருப்பாள்'' என்று சொன்னான்.

அவன் சொன்னதும் அனைத்தும் உண்மையென்பதை அந்தக் கூட்டம் அறிந்திருந்தாலும் துறவிகள் மட்டும் உக்கிரமாக நீலரதியைப் பார்த்தார்கள். ''இவள் அபலை என்று யார் சொன்னது?'' என்று ஒரு துறவி கேட்டார்.

''புகாரின் கடைத் தெருவில் வந்த நாளாக இவள் விளைவித்த சண்டைகள் எத்தனை?'' என்றார் இன்னொரு துறவி.

''இவள் ஒரு ராட்சஸி. அடங்காப்பிடாரி'' என்றார் மற்றொரு துறவி.

''இவளை ஏன் இந்த மடத்தில் சேர்த்துக்கொண்டார் குருநாதர்?'' என்று இன்னொரு துறவி கேட்டார்.

அதுவரை ஏதும் பேசாமல் ஆஜானுபாகுவாய், சாந்தமே உருவாய் நின்றிருந்த புத்ததத்தர் மெதுவாகப் பேசத் தொடங்கி ''சாந்தானந்தரே! இவள் மடத்துக்கு வந்து எத்தனை நாளிருக்கும்?'' என்று வினவினார்.



''மூன்று மாத காலமிருக்கும்'' என்று சொன்னார் சாந்தானந்தர்.

''இந்த மூன்று மாத காலமாக இவளைப்பற்றி நீர் ஏன் ஆட்சேபணை கிளப்பவில்லை?'' என்று புத்ததத்தர் மீண்டும் கேட்டார்.

இதற்கு சாந்தானந்தர் பதில் சொல்லவில்லை. திரு திருவென்று விழித்தார். புத்ததத்தர் மேலும் கேட்டார்: ''சரி, நீர்தான் ஆட்சேபிக்கவில்லை. மற்ற துறவிகள் ஏன் எதிர்க்கவில்லை?'' என்று.

துறவிகளிடையே கசமுசவென்று பேச்சு கிளம்பியது. ஆனால் பதில் ஏதுமில்லை. புத்ததத்தரே அதற்கு பதில் சொன்னார்: ''உங்கள் அனைவருக்கும் இவள் பணிவிடை தேவையாயிருந்தது. இந்த மடத்தைப் பெருக்கி, நீங்கள் நீராட, காவிரியிலிருந்து நீர்மொண்டு வந்து சகல வேலைகளையும் இவளே செய்தாள். பல பணியாட்கள் செய்ய வேண்டிய பணிவிடைகளை இவளே செய்தாள். அனைத்தும் தேவையாயிருந்தது உங்களுக்கு. அனைத்தையும் ஏற்றுக்கொண்டீர்கள். இவள் ஒரு கொலை செய்ததும் விசாரணையின்றி இவளைத்தீர்த்துக்கட்ட முன்வந்தீர்கள். இதுதானே உண்மை?'' என்று குற்றம் சாட்டும் தரனில் பேசினார் புத்ததத்தர்.

சாந்தானந்தர் மிகவும் சங்கடத்தில் ஆழ்ந்தார். அந்த சங்கடத்துடன் கேட்கவும் செய்தார். ''அப்படியானால் இவளை சிறை செய்யும்படி ஏன் ஆணையிட்டீர்கள்?'' என்று.

புத்ததத்தர் சாவதானமாகப் பதில் சொன்னார்: ''இது புத்தர்மடம். எந்தக் குற்றத்தையும் இது மன்னிக்காது. அப்படியிருக்க ஒருவன் கொலை செய்யப்பட்டிருக்கிறான். அதை எப்படி விசாரிக்காமலிருக்க முடியும்? ஆகவே சிறை செய்ய உத்தரவிட்டேன். சிறை செய்யாதது யார் குற்றம்?'' என்று கேட்டார்.

''சிறை செய்யத்தான் முயன்றோம். ஆனால் இவன் இரு துறவிகளையும் காவலாளிகளையும் உதறி ஓடி விட்டான்'' என்றார் சாந்தானந்தருக்குப் பக்கத்திலிருந்த துறவி.

''இவளைப் பிடிக்கப் போனபோது அதோ அந்த இளமாறன் தடுத்தான்'' என்றார் துறவி.

''இவனா?'' என்று வினவினார் புத்ததத்தர் இளமாறனைச் சுட்டிக்காட்டி.

''ஆம்''—சாந்தானந்தர் திட்டமாகச் சொன்னார்.

''அப்படியானால் இவனையும் சிறை செய்துகொண்டு வந்திருக்கலாமே'' என்றார் புத்ததத்தர்.

''முடியவில்லை'' என்றார் இன்னொரு துறவி.

''எங்களைக் கொன்று விடுவதாக பயமுறுத்தினான்'' என்றார் சாந்தானந்தருடன் காலையில் சென்ற துறவி.

''இருந்தாலும் குற்றவாளியை நீங்கள் விட்டு வரலாமா?'' என்று கேட்டார் புத்ததத்தர்.

''மாலையில் விசாரணைக்கு இவனை அழைத்து வருவதாக இவன் உறுதி கூறினான்'' என்றார் சாந்தானந்தர்.

''அதை நம்பினீர்?''—புத்ததத்தர் கேள்வியில் அதிகாரம் இருந்தது.

''ஆம்''

''சொன்னபடி விசாரணைக்கு அழைத்து வந்தான்?''

''ஆம்''

''அந்த நம்பிக்கை இப்பொழுது எங்கே போயிற்று?'' இந்தக் கேள்வியை வேகமாக வீசினார் புத்ததத்தர்.

இதற்கு கூட்டத்தில் பதில் ஏதுமில்லை. சில விநாடி மௌனம் நிலவியது. அந்த மௌனத்தின் இடையே தூரத்திலிருந்து ஒரு குரல் கணீரென்று ஒலித்தது.



''இருக்கட்டும், துறவி ஒரு பெண்ணை அணைக்கலாமா?'' என்று கேட்டது அந்தக் குரல்.

இதைக் கேட்டதும் கூட்டத்தில் 'கொல்' என்ற நகைப்பொலி கேட்டது. அதே குரல் மீண்டும் கேட்டது. ''அவள் கழுத்தைப் பார்த்தீரே எதற்கு?'' என்று.

''கழுத்து அழகாய் இருக்கும்'' என்று நகைத்தது ஒரு குரல். மறுபடியும் கூட்டத்தில் சிரிப்பொலி பலமாகக் கேட்டது.

அந்த நகைப்பைக் கேட்டதும் அதுவரை நிதானத்தைக் காட்டிய இளமாறன் அசுரனாக மாறினான். ''யார் பேசியது இப்பொழுது?'' என்று உக்கிரமான குரலில் வினவினான். அந்தக் குரலைக் கேட்டதும் கூட்டத்தில் நிசப்தம் நிலவியது. ''அடுத்து புத்ததத்தர் மீதோ, இந்தப் பெண்ணின் மீதோ தவறு சொல்பவர்கள் என்னைச் சந்திக்கும்படியாய் இருக்கும்'' என்று சொற்களை உதிர்த்தான்; கூட்டத்தில் நிசப்தம் நிலவியது.

அந்த நிசப்தத்தை ஊடுருவியது புத்ததத்தரின் குரல். ''இளமாறா! இவள் கழுத்தை ஏன் பார்த்தேனென்பதை இந்தக் கூட்டத்தாருக்கு தெரிவித்துவிடு'' என்று சொன்னார் உறுதியான குரலில். மேலும் சொன்னார். ''புத்ததத்தன் வெறும் காமுகனல்லன் என்பதை இவர்களுக்குப் புரிய வைப்பதும் நல்லது'' என்று.

இளமாறன் அவரைத் திரும்பிப் பார்த்தான்: ''புத்ததத்தரே! இது அவசியமா?'' என்று வினவினான்.

புத்ததத்தர் சிறிதும் சிந்திக்காமலே பதில் சொன்னார்; ''சில சந்தர்ப்பங்களில் மறைக்க வேண்டிய விஷயங்களையும் மறைக்காதிருப்பது நல்லது. ஆகையால் சொல்லிவிடு'' என்றார்.

இளமாறன் கூட்டத்திலிருந்த துறவிகளை நோக்கினான். பிறகு சந்தானந்தரை நோக்கி ''சாந்தானந்தரே! நீர் மட்டும் மேடைமீது வாரும்.'' என்று அழைத்தான்.

சாந்தானந்தர் வந்ததும் மீண்டும் நீலரதியின் கழுத்து மயிர்களை நீக்கி "இதைப் பாரும்" என்றான்.

அந்தக் கழுத்தைப் பார்த்ததும் பெரும் பிரமைக்குள்ளான சாந்தானந்தர் "அப்படியா! அப்படியா!" என்றார்.

"ஆம் சாந்தானந்தரே! இவள் எகிப்து நாட்டவள். அங்கிருந்தபோதே புத்ததத்தரும் நானும் இவளை அறிவோம். அப்பொழுது இவள் சிறுமி. இவளை யாரென்று அறிந்தபின் புத்ததத்தர் ஏதும் செய்ய முடியாமல் தத்தளித்திருப்பதற்குக் காரணம் இருக்கிறது" என்றான் இளமாரன்.

"அவள் பிற நாட்டவளாயிருக்கலாம். ஆனால் இத்தனை பெரிய பெண்ணை புத்ததத்தர் அணைத்தது எப்படி சரியாகும்?" என்று ஒரு துறவி வினவினார்.

"இந்தப் பெண்ணைக் குழந்தையில் தூக்கி வளர்த்தது புத்ததத்தர்தான்" என்றான் இளமாரன்.

"இப்பொழுது அவள் வயது வந்த பெண்" என்றார் சாந்தானந்தர்.

இளமாரன் சிறிது சிந்தித்தான். முடிவில் நிதானமாகச் சொன்னான். "ஆனால் இந்த நீலரதி புத்ததத்தரின் சகோதரி மகள்" என்று சொன்னதும் கூட்டத்தினர் பிரமித்தார்கள். நீலரதியும் பிரமை வாய்ந்த விழிகளை புத்ததத்தர்மீது திருப்பினாள். அடுத்து அவரை நாடி இரண்டடி எடுத்து வைத்து அவர் காலடியில் விழுந்தாள். அவளைத் தூக்கி எடுத்த புத்ததத்தர் இரண்டாம் முறையாக அவளைத் தழுவி உச்சி முகர்ந்தார். அவர் கண்களில் நீர் பெருக்கெடுத்து கன்னங்களில் வழிந்தது.

□ □ □

# 7. வந்த விசித்திரம்

**கா**லடியில் விழுந்த கட்டழகி நீலரதியை கை கொடுத்துத் தூக்கி இரண்டாம் முறையாக புத்ததத்தர் அணைத்து உச்சி முகர்ந்தது நீதி மண்டபத்திலிருந்தோருக்குப் பிடிக்கவில்லையாயினும் அதற்கு யாரும் எதிர்ப்புத் தெரிவிக்காமல் அடுத்து என்ன நடக்கும் என்பதை எதிர்பார்த்து மௌனமாகவே நின்றார்கள். இளமாரனால் அழைக்கப்பட்டு நீதிமேடைமீது ஏறி நீலரதியின் கழுத்தைப் பார்த்த சாந்தானந்தரும் மிதமிஞ்சிய வியப்பு எய்தி "அப்படியா! அப்படியா!" என்று ஆச்சரியக் குரல் கொடுத்ததும் அந்தப் பெண்ணின் வாழ்க்கையுடன் ஏதோ ஒரு மர்மம் இணைந்திருக்கிறதென்பதைப் புரிந்து கொண்டதால், கூட்டத்திலிருந்தவர்கள் அடுத்து ஏதும் குரல் எழுப்பினார்கள் இல்லை. நீலரதியை புத்ததத்தர் சகோதரி மகள் என்று அறிவித்ததும் அதுவரை ஆட்சேபணை கிளப்பி வந்த சாந்தானந்தர் கூட மேற்கொண்டு ஏதும் பேசாமல் சிலையென நின்றார்.

தனது அறிவிப்பினால் ஏற்பட்ட அமைதியைப் பயன்படுத்திக் கொண்ட இளமாரன் கூட்டத்தாரை நோக்கி "சாந்தானந்தருக்குக்கூடத் தெரியாத ஒரு ரகசியக்கதையை விபரீத நிகழ்ச்சிகளை, உங்களுடன் இன்று பகிர்ந்து கொள்கிறேன்" என்ற முகவுரையுடன் நீலரதியின் பூர்வ கதையை விவரிக்கலானான். "புகார் மக்களே! கேளுங்கள், அபாக்கியவதியான இந்த அபலையின் கதையை. சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்பு, எங்கோ ஏதோ ஒரு நாட்டில் நடந்த நிகழ்ச்சிகள், இந்தப் புகாரை இன்று தொடும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. இன்று காலை வரை இந்த விசாரணையில் குறுக்கிடும் நோக்கமும் எனக்கில்லை. இந்தப் பெண் நீலரதியென்பதும் எனக்குக்

தெரியாது. அவன் யாரென்பதை உணரச் செய்தவர்கள் சாந்தானந்தரும் மடத்துக் காவல் வீரர்களுந்தான்...'' என்று சொன்னதும் சாந்தானந்தர் அவசர அவசரமாக இடைமறித்து ''சுத்தப் பொய். நான் ஏதும் சொல்லவில்லை'' என்று கூவினார்.

இளமாறன் அவரை இகழ்ச்சி ததும்பிய விழிகளால் நோக்கினான். ''நீர் என்னிடம் இவனைப் பற்றிக் கூறியதாக யார் சொன்னது?'' என்று இகழ்ச்சிக் குரலில் வினவவும் செய்தான். அத்துடன் ''சாந்தானந்தரே! என்னை இடைமறித்து உளறாதீர். நீங்களும் காவலரும் இவனைப் பற்றி என்னை உணரச் செய்தீர்கள் என்று சொன்னேனே தவிர நீங்கள் யாரும் எனக்கு எதுவும் சொன்னதாக நான் கூறவில்லை. அப்படி ஊகித்தறிந்து சொல்லும் சக்தி உமக்கிருந்தால் இந்த மடத்தில் பணிவிடை செய்யும் இந்தப் பெண்ணின் வரலாற்றை முன்னமே உணர்ந்திருப்பீர். நல்ல பலசாலியான ஒரு பெண் மடத்தை சுத்தம் செய்யவும் நீர் கொண்டு வந்து நிரப்பவும் கிடைத்ததோடு உமது சிரத்தை நின்றுவிட்டது. அவன் யாரென்பதை இத்தனை நாட்களாக அவன் அருகிலிருந்த நீங்கள் உணரவில்லை. இன்று நீங்கள் அவனைத் தூக்கி வந்த போது நான் உணர்ந்தேன். உங்களிடமிருந்து அவனைக் காப்பாற்ற அவனைப்பிடித்து இழுத்து சுழற்றி உதயகுமாரனிடம் ஒப்படைத்தபோது அவன் பின்குழல்கள் அவிழ்ந்து விலகிய ஒரு விநாடி. அந்த விநாடியில் அவன் பின் கழுத்தில் நீங்கள் பார்த்த நீலநதி அடையாளம் பளிச்சிட்டது. அந்தக் கணத்தில் புரிந்துகொண்டேன், அவன் யாரென்பதை. அந்த அடையாளத்தைச் செய்தவரே புத்ததத்தர்தான். அப்பொழுது நானும் அவருடனிருந்தேன். இருபது ஆண்டுகளுக்கு முன் நடந்த சில சம்பவங்களால் இதை புத்ததத்தர் செய்ய வேண்டியதாயிற்று...'' என்று இளமாறன் சிறிது நிதானித்து சிந்தனையில் ஆழ்ந்தான்.

இந்தப் புதுக்கதையைக் கேட்டதால் விசாரணை மண்டபக் கூட்டம் அவன் அடுத்து என்ன சொல்லப்



போகிறான் என்பதைக் கேட்க ஆவலுடன் நிசப்தமாக நின்றது. சிந்தனைக்குப் பிறகு தொடர்ந்தான் இளமாறன்.

''அந்த நாட்களில் புத்ததத்தர் துறவியல்ல. இந்த தமிழகத்தின் பெரிய வணிகர்களில் ஒருவராயிருந்தார். அடிக்கடி கப்பலில் வணிகப் பொருள்களை ஏற்றிச்சென்று எகிப்தில் வியாபாரம் செய்து நிதி திரட்டி வருவார். திரை கடலோடியும் திரவியம் தேடு என்ற ஆன்றோர் கட்டளையை முழுதும் கடைப்பிடித்தவர் அவர். அப்பொழுது அவர் புகாரில் வசிக்கவில்லை. நாகப்பட்டினத்தில் இருந்தார். சொந்தமான ஒரு கப்பலும் வைத்திருந்தார். அந்தக் கப்பலை சில காலம் நானும் ஓட்டியிருக்கிறேன். எனக்கு அப்பொழுது இருபது வயது இருந்தாலும் கடல் போரிலும் நிலப்போரிலும் பயிற்சி இருந்ததால் புத்ததத்தர் என்னை தமது மரக்கலத்தை செலுத்தவும் அமர்த்தினார். ஒருமுறை நாங்கள் வாணிபம் செய்ய மேல் திசைக்குச் சென்றபோது புத்ததத்தரின் சகோதரியும் எங்களுடன் வந்தாள். புத்ததத்தர் எவ்வளவோ தடுத்தும் கேளாமல் ஒரே ஒரு தோழியை உடனழைத்துக்கொண்டு வந்தாள். அவளுக்கு யாரோ நீலநதியின் மகத்துவத்தைப் பற்றி சொல்லியிருந்தார்கள். அந்தப் பயணத்தின்போது அடிக்கடி அவள் நீலநதியைப் பற்றி என்னிடம் சொன்னாள். உண்மையில் நீலநதி ஆரம்பத்தில் வெள்ளை நதியாகவும் நீலநதியாகவும் இரட்டையாகக் கிளம்பி பிறகு ஒன்று சேர்ந்து ஒரே நீலநதியாகிறது என்று சொன்னாள். இத்தனை சிறு பெண்ணுக்கு எங்கோ இருக்கும் நீலநதியைப் பற்றி இத்தனை விவகாரம் எப்படித் தெரிந்தது என்று நான் வியந்தேன். ஆனால் நாங்கள் எகிப்தை அடைந்ததும் உண்மையைத் தெரிந்து கொண்டோம். குவாலிர் துறைமுகத்தில் நாங்கள் இறங்கியதும் எங்களை வரவேற்க ஒரு வாலிபன் நின்றிருந்தான். நல்ல செவந்த நிறம். ஆறடிக்கு மேல் உயரம். அவன் தோரணை ராஜ தோரணையாயிருந்தாலும் அவனும் ஒரு வணிகன்

என்பதைப் புரிந்து கொண்டேன். அவன் புத்ததத்தரை ஆவலுடன் எதிர்கொண்டு அணைத்துக் கொண்டான். புத்ததத்தரும் அவனை அணைத்து எனக்கு அறிமுகப் படுத்தினார்: "இவன் அடிக்கடி தமிழகம் வந்து வாணிபம் செய்பவன். நமது இல்லத்திற்கே பலமுறை வந்திருக்கிறான். எகிப்தில் பெரிய வணிகன்" என்று. அவன் எங்களை அழைத்துக் கொண்டு உள்நாட்டு வணிகஸ்தலங்களுக்குப் போனான். சுமார் இரண்டு ஆண்டுகள் அவனுடன் காலம் கழித்தோம். நீலநதிக் கரையிலிருந்த அவன் பெருமாளிகையில் தங்கினோம். அவன் புத்ததத்தரின் சகோதரியை நேசித்தான். விவகாரம் முற்றிவிட்டதால் வேறு வழியின்றி புத்ததத்தர் தமது சகோதரியை மணமுடித்துக் கொடுத்தார். அவர்களுக்குப் பிறந்தாள் இந்த நீலரதி. இவள் அழகைக் கண்டு இவள் தாயாரே இவளுக்கு அந்தப் பெயரை சூட்டினாள். ஆனால் அந்தத் திருமணத்தை அந்த வாலிபன் உறவினர் ஒப்புக் கொள்ளவில்லை. இருவரையும் தங்கள் கூட்டத்திலிருந்து விலக்கினார்கள். அத்துடன் நிற்கவில்லை அவர்கள் எதிர்ப்பு. ஒருநாள் நானும் புத்ததத்தரும் அவன் மாளிகைக்குத் திரும்பியபோது அவனும் இவர் சகோதரியும் வெட்டப்பட்டு ரத்தவெள்ளத்தில் கிடந்தார்கள். குழந்தை மட்டும் ஓர் ஓரத்தில் அழுது கொண்டு கிடந்தது. அந்தக் காட்சியைப் பார்த்து திகைத்து நின்றார் புத்ததத்தர்.

மாளிகை நிசப்தமாயிருந்தது. அந்த நிசப்தத்தில் ஒரு காலடி ஓசை கேட்டது. அந்த வாலிபனின் பெரிய சகோதரன் பக்கத்தறையிலிருந்து வந்தான். "இதை நான் தடுக்க முடியவில்லை. குழந்தையைக் காப்பாற்றி விடுகிறேன். நீங்கள் தப்பிச் செல்லுங்கள். நீலநதியில் என் சிறு கப்பல் தயாராயிருக்கிறது" என்றான். வேறு வழியின்றி நாங்கள் கிளம்பினோம். கிளம்பு முன்பு புத்ததத்தர் ஒரு விளக்கைக் கொளுத்தி தமது பெட்டியிலிருந்த பச்சிலைத் தூளைக்கொண்டு குழந்தையின் கழுத்தில் பச்சை குத்தி



30579
56350

னார். பிறகு தன் நங்கை [illegible] பார்த்து "இந்த அடையாளம் [illegible] நான் இவளைப் பார்த்தால் அடையாளம் கண்டு கொள்வேன்" என்று கூறினார்.

அவன் சொன்னான்: "கவலைப்படாதீர்கள். இவள் உற்ற வயதில் உங்களிடம் வந்து சேருவாள். உங்கள் தங்கை திருமணத்தை எங்கள் சமூகம் ஒப்புக்கொள்ளவில்லை. அதனால் வந்த விளைவு இது. இவளை நான் வளர்த்து உங்களிடம் ஒப்படைக்கிறேன்" என்று அவனே எங்களை நீலநதிக் கப்பலில் ஏற்றி அனுப்பினான். ஆனால் துறைமுகத்தில் எங்களை நோக்கி "இந்தப்பெண் என்ன இருந்தாலும் எனது சகோதரன் மகள். உங்கள் நாட்டுக்கு இவள் வரும்போது யாராவது தீங்கிழைத்தால் அவர்கள் அழிக்கப்படுவார்கள்" என்று எச்சரித்தான். நாங்கள் திரும்பவும் குவானிர் வந்து எங்கள் கப்பலில் இந்த நாட்டுக்குத் திரும்பினோம். வணிகத்தில் கிடைத்த நிதியைக் கொண்டு வந்தோமே தவிர மனநிம்மதியைக் கொண்டு வரவில்லை. இந்த நாடு வந்ததும் புத்ததத்தர் துறவறம் ஏற்றார். நான் போர்களுக்குச் சென்றேன். இரண்டு ஆண்டுகளுக்கு முன்புதான் புகாருக்கு வந்தேன். இவளை நான் முன்பு பார்க்கவில்லை. யாரோ முரட்டுப் பெண் ஒருத்தி மடத்தில் வேலை செய்கிறாளென்றும் கடைத்தெருவில் எல்லோரையும் சண்டைக்கு இழுக்கிறாளென்பதையும் கேள்விப்பட்டேன். ஆனால் அதைப்பற்றி நான் அக்கறை கொள்ளவில்லை. ஆனால் இருபது ஆண்டுகளுக்கு முன்பு ரத்தவெள்ளத்தில் கிடந்த அந்தக் குழந்தை அழகிய மடந்தையாக என் முன்பு இன்று காலை ஓடி வந்தபோதுகூட எனக்கு ஏதும் புரியவில்லை. அவளை நான் காப்பாற்ற இழுத்து அவள் குழல் ஒதுங்கியபோது அதிர்ச்சியடைந்தேன். இன்று உங்கள் விசாரணைக்கு உதயகுமாரனுடன் அனுப்பியும், இங்கு நீதி தவறினால் அவளைக் காக்கவும் நான் தொடர்ந்து வந்தேன். பிறகு நடந்தது உங்களுக்குத் தெரியும்."

இந்த கதையைச் சொல்லி நிறுத்திய இளமாரன் "மடத்துத் தம்பிரான்களே! உங்கள் அனுமதியுடன் இவளை நான் அழைத்துச் செல்கிறேன். நாளை விசாரணைக்கு உதயகுமாரனையும் இவளையும் நானே அழைத்து வருகிறேன்" என்று கூறிவிட்டு நீலரதியின் கையைப்பற்றி "வா நீலரதி!" என்று அழைத்துக் கொண்டு கிளம்பினான். "உதயகுமாரா! நீ பின்னால்வா. என் முதுகுப்புறத்தைப் பாதுகாத்து வா. இந்தத் துறவிகள் யாரும் என்னை முதுகில் குத்தாதிருக்க" என்று கூறி மேடையிலிருந்து இறங்கினான்.

கூட்டம் அவனுக்கு வழி விட்டது. அதற்கிடையே நீலரதி உடன்வர, உதயகுமாரன் பின்தொடர மெதுவாக நடந்து சென்றான் இளமாரன். வசுதேவருக்கு வழிவிட்ட யமுனைபோல் கூட்டம் அவர்களுக்கு வழிவிட்டது. அங்கு கிளம்பியவன் வாணகிரி விடுதியை அடைந்த பின்புங்கூட பேசவில்லை. அந்த விடுதியின் கூடத்தில் நீலரதியை நோக்கி "உணவு சித்தம் செய். உண்ட பிறகு உன் மீதிக் கதையைக் கேட்கிறேன்" என்றான். உணவு அருந்தி முடிந்ததும் விடுதியின் வாயிற்படியில் உட்கார்ந்த இளமாரன் "நீலரதி! நீ எப்போது வந்தாய் இந்த நாட்டிற்கு? யார் அழைத்து வந்தது உன்னை?" என்று வினவினான்.

அவனுக்குப் பின்னால் உட்கார்ந்திருந்த நீலரதி "யாரும் அழைத்து வரவில்லை" என்றாள். பிறகு வந்த கதையைச் சொன்னாள். அவள் வந்த கதை பிறந்த கதையைவிட விசித்திரமாயிருந்தது.

□ □ □

# 8. ராணி கொடுத்த கத்தி

இரவு தொடங்குமுன்பே தோன்றிவிட்ட முழுமதி, ஏறுவீற தனது பூர்ண கலைகளுடன் பிரகாசிக்கத் தொடங்கிவிட்டதால் வாணகிரி மலைப்பிரதேசமும் அதையடுத்த கடற்பகுதியும் வெள்ளி மெருகைப் பெற்று மனதை மயக்கிக்கொண்டிருந்தன. மலைச்சரிவில் சற்று எட்டத் தெரிந்த சின்னஞ்சிறு தென்னை மரங்களும், அவற்றில் காய்த்துத் தொங்கிய செவ்விளநீர்க்குலைகளும் வெண்மதியின் கிரணங்களால் மயக்கமுற்றவை போல் அசையாது நின்றுகொண்டிருந்தன. பெரிய மனிதர்கள் வருகை கண்டு மறைந்துவிடும் சிற்றாட்களைப்போல் சந்திரன் வருகையாலும் வெளிச்சத்தாலும் அதிகமாகத் தலைகாட்ட முடியாமல் நக்ஷத்திரங்கள் ஒதுங்கிவிட்டதால் ஏதோ ஓரிரு நக்ஷத்திரங்கள் மட்டும் வானின் பரந்த வெளியில் ஏதோ ஓரிரண்டு இடங்களில் கண்களைச் சிமிட்டிக் கொண்டிருந்தன. இத்தகைய இன்பமான சூழ்நிலையைக் கண்ட பொறாமையாலோ என்னவோ கடலரசன் மட்டும் பெரிதாக இரைந்து தானிருப்பதை உலகுக்குக் அறிவித்துக் கொண்டிருந்தான். மலைக் காட்டின் ஓர் மூலையிலிருந்த சில புஷ்பச்செடிகள் தங்கள் நறுமணத்தை இளமாரன் விடுதியை நோக்கி அனுப்பிக் கொண்டிருந்தன.

சுகமான அந்த சூழ்நிலையில், சுகந்தத்தில், இளமாரன் முதுகுப் பக்கத்தில் அவனுக்குப் பின்னால் உட்கார்ந்திருந்த நீலரதி தனது தலையை அவன் தோள்புறமாக நீட்டியிருந்ததால், வாயிலை அடைத்து படியில் கால்களை ஊன்றி உட்கார்ந்திருந்த இளமாரனை முழுதும் குளிப்பாட்டிய வெண்ணிலவு அவள் முகத்தின்மீதுமட்டும் விழுந்து அதன் அழகைப் பன்மடங்காகச் செய்திருந்தது. இப்படி அவனுக்குப் பின்னால் மிக நெருங்கி உட்கார்ந்

திருந்த நீலரதி தான் வந்த கதையைச் சொல்லுமுன்பு அவன் திடமான வைரம் பாய்ந்த தேகத்தின் வலுவைக் கண்டு வியந்தாள். இத்தனைக்கும் அவள் அவன்மீது படவில்லைதான். ஆனால் செங்குத்தாக அவன் உட்கார்ந்திருந்த நிலையில் விறைத்துத் தெரிந்த அவன் தேகம், ஊன்றியிருந்த கால்களின் உரம், சிறிது நேரத்திற்கு ஒருமுறை கைவிரல்களை அவன் பின்னிக்கொண்டபோது நீளமாகவும் இரும்புபோலும் தெரிந்த கைகள், இவையனைத்தையும் அவள் கவனிக்கவே செய்ததால் ''அப்பா! இப்படியும் ஓர் இரும்பு மனிதனா?'' என்று அவன் ஆண்மையை நினைத்து சங்கடப்பட்டாள் ஒரு விநாடி. பிறகு தன்னைச் சமாளித்துக்கொண்டு, ''வந்த கதையைப்பிறகு சொல்கிறேன். அத்துடன் வளர்ந்த கதையையும் சிறிது கேட்கிறீர்களா?'' என்று அவன் காதுக்கருகில் லேசாக தனது இதழ்களைக் கொண்டுபோய் மெதுவாகக் கேட்டாள்.

அவனுடைய மனநெகிழ்ச்சி அதிகமாயிருந்தபோதும் இளமாரன் உணர்ச்சி ஏதுமற்ற கட்டைபோல் உட்கார்ந்திருந்தான். அவள் கேள்வி கேட்டதும், ''சொல். எதை வேண்டுமானாலும் சொல், கேட்கிறேன். ஆனால் பொய்யை மாத்திரம் கலந்து விடாதே. ஏனென்றால் நாளை விசாரணைக்கு, நீ சொல்லும் கதையிலிருந்துதான் நான் எதிர்வாதத்துக்கு விஷயம் திரட்ட வேண்டும்'' என்று சொன்னான் இளமாரன்.

நீலரதி பெருமூச்சுவிட்டாள். அந்தப் பெருமூச்சு அவன் தோளில் பாய்ந்து உஷ்ணக்காற்றாக வீசியது. அந்தப் பெருமூச்சைத் தொடர்ந்து நீலரதி சொன்னாள்: ''வீரரே! நேற்று நான் கொலை செய்ததைப்பற்றிப் பெரிதாகச் சொல்கிறீர்கள். கொலை செய்வது எனக்குப் புதிதல்ல. நான் ஏற்கனவே ஒருமுறை கொலை செய்திருக்கிறேன். கொலை செய்திருக்காவிட்டால் இந்த நாட்டுக்கு நான் வந்திருக்க முடியாது'' என்ற முன்னுரையுடன் தனது



முன் கதையைத் தொடங்கினாள் நீலரதி. தொடங்கியவள் பேசிக்கொண்டே போனாள்:

''வீரரே! நீங்களும் என் மாமனும் எனது பெரிய தந்தையிடம் என்னை ஒப்படைத்து வந்ததாகச் சொன்னீர்களே, அந்தப் பெரிய தந்தை என்னைத் தனது கண்ணின் மணிபோல் பாதுகாத்து வளர்த்தார். அரசபோகத்தில் நான் வளர்ந்தேன். எனக்கு எட்டு வயதானதும் படிப்புச் சொல்லிக்கொடுக்க ஒரு மூதாட்டியை நியமித்தார். அவள் எனக்கு எகிப்து மொழியையும் அந்த நாட்டுப் புராணங்களையும் சொல்லிக்கொடுத்தாள். எகிப்தின் பெரிய பாலைவன மணலின் அடியில் மறைந்துவிட்ட மாநகரங்களான தீபிஸ், மெம்பனிஸ் இவற்றின் சிறப்புகளையெல்லாம் என் புத்தியில் புகுத்தினாள். எகிப்து அரசர்களான பாரோக்களின் பெருமைகளையெல்லாம் விளக்கமாகச் சொன்னாள். இறந்த அந்தமாமன்னர்கள் இன்னும் பாதுகாக்கப்படுவதாகவும், அவர்கள் சடலங்களைத் தரிசிக்க முடியுமென்றும் சொன்னாள். அவள் உபதேசம் செய்யச் செய்ய அந்த மன்னர் பெருமக்களைப் பார்க்க வேண்டுமென்ற அவா எனக்கு ஏற்பட்டது. அதைப்பற்றி பெரிய தந்தையைக் கேட்டேன். 'சரியான வயது வரும்போது பார்க்கலாம்' என்றார். நான் கேட்டேன் 'எத்தனை வயதில் பார்க்கலாம்?'' என்று.

''பன்னிரண்டு வயது ஆகட்டும்' என்று பெரிய தந்தை சொன்னார். அந்த வயதுக்குள் எனது ஆசிரியை கீஸாவின் பெரிய பிரமிட்டைப் பற்றியும் நூபியா பகுதியிலிருந்த அபூசிம்பர் கோயில்களைப் பற்றியும், கார்னாக் என்ற இடத்திலிருந்த ஸ்பிங்க்ஸ் அன்ஞ்யூ சிலைகளைப் பற்றியும் சொன்னாள். தீபிஸிலுள்ள எகிப்தின் மாமன்னன் இரண்டாவது ரமேஸஸின் தலையைப் பார்க்க வேண்டிய அவசியத்தை வற்புறுத்தினாள். இதையெல்லாம் கேட்ட எனக்கு அந்த விசித்திரங்களை, எகிப்தின் புராதன வரலாற்றுச் சின்னங்களைப் பார்க்க வேண்டுமென்ற அவா அதிகரித்தது. ஆகையால் நான் பெரிய தந்தையை நச்ச

ரித்தேன். ஆனால் அவர் அசையவில்லை. பன்னிரண்டு வயது முடிந்து பதின்மூன்றாவது வயது தொடங்கிய நாளன்று பெரிய தந்தை நான் படிக்கும் அறையில் புகுந்து எனது ஆசிரியையை வெளியே போகச் சொன்னார். அவள் சென்றதும் என்னை நோக்கி "நீலரதி! உனக்கு இன்று பிறந்தநாள். பதின்மூன்றாவது வயது தொடங்குகிறது இன்று" என்று அறிவித்தார். மேற்கொண்டு ஏதும் பேசாமல் எனது ஆசனத்துக்குப் பக்கத்திலிருந்த இன்னோர் ஆசனத்தில் உட்கார்ந்து பெருத்த சிந்தனையில் இறங்கினார். 'நீ இனி எகிப்தின் ரகசியங்களைப் பார்க்கலாம். பார்க்க உனக்கு உரிமை உண்டு' என்று மெதுவாகச் சொன்னார் சிந்தனைக்குப் பிறகு.

நான் ஏதும் பேசவில்லை. அவரே பேசினார்: "மகளே! முதலில் நீ உன்னை யாரென்று புரிந்துகொள்ள வேண்டும்" என்றார்.

நான் தலையை அசைத்தேன். புரிந்து கொள்வதற்கு என்ன இருக்கிறதென்று எனக்குப் புரியவில்லை. ஆனால் பெரிய தந்தை சொன்னார்: 'நீ சாதாரண வணிகன் பெண்ணல்ல' என்று.

வியப்புடன் நான் அவரைப் பார்த்தேன். 'என் தந்தை வணிகரல்லவா' என்று வினவினேன், வியப்பு சொற்களில் ஒலிக்க.

'உன் தந்தை வாணிபம் செய்தான். ஆனால் அவன் வணிகனல்ல. சதா அவனுக்குக் கடலாடும் ஆசையிருந்ததால் வாணிபமும் செய்தான். ஆனால் நாங்கள் வணிகர் இனமல்ல...' இங்கு பெரிய தந்தை மௌனம் சாதித்தார்.

'வேறு எந்த இனம்?' என்று நான் கேட்டேன்.

'அரசகுலம்' என்று ஒரு பெரிய வெடியை தூக்கிப் போட்டார் பெரிய தந்தை. அந்த அதிர்ச்சியிலிருந்து நான் மீளுமுன்பு 'பெண்ணே! நாங்கள் முற்காலத்து பாரோ மன்னர்களின் நேர்குலம். இதற்கு அத்தாட்சி காட்ட முடியும்' என்றார்.



'மிகவும் புராதனமான, சரித்திரத்தில் நிலைத்து நின்றுவிட்ட, சீரும் சிறப்பும் செழிக்க வாழ்ந்த பாரோ மன்னர்களின் குலத்தில் நான் பிறந்தவள் என்று என்னால் நம்ப முடியவில்லை. அதுவும் பெரும் உள்நாட்டு வணிகரான என் பெரிய தந்தையை அரசகுலத்தவராக நம்பவும் என்னால் முடியவில்லை. என் முகத்தில் தோன்றிய சந்தேகக் குறியை எனது பெரிய தந்தை கவனித்திருக்க வேண்டும். மெல்ல புன்முறுவல் கொண்டு, 'மகளே! நீ நம்புவது கடினம். ஆனால் உன் தந்தையும் தாயும் கொல்லப்படக் காரணம் அவர்கள் திருமணந்தான், பாரோ மன்னர் குலத்தார் சாதாரண மக்களை மணக்க முடியாது. அப்படி மணந்ததால் மன்னர் குலத்தாரால் கொல்லப்பட்டார்கள்" என்று விளக்கம் தந்தார்.

"நான்??' என்று வினவினேன்.

"நீ என் தம்பிக்குப் பிறந்தவள். ஆகவே மன்னர் குலத்தைச் சேர்ந்தவள்" என்றார். அத்துடன் சொன்னார் "நாளைக்கே நாம் புறப்படுவோம்" என்று.

"எங்கு?" என்று நான் கேட்டேன்.

"நமது மூதாதைகளைப் பார்க்க" என்றார்.

"செத்துப் போனவர்களை எப்படிப் பார்க்க முடியும்?" என்று கேட்டேன்.

"எகிப்தில் மட்டும் பார்க்க முடியும்" என்று சொன்ன பெரிய தந்தை எழுந்து போய்விட்டார்.

"மறுநாள் பொழுது விடியுமுன்பு நாங்கள் புறப்பட்டோம். நானும் பெரிய தந்தையும் இரண்டு பெரிய ஒட்டகங்கள் மீது பயணம் செய்தோம். மற்றும் பல ஒட்டகங்கள் எங்களைத் தொடர்ந்து வந்தன. சுமார் இருபது ஊழியர்களும் காவலரும் கொண்ட பரிவாரத்துடன் நாங்கள் கிளம்பினோம். நெடுந்தூரம் நீலநதியின் பக்கத்திலேயே சென்று பிறகு பாலைவனத்தில் நுழைந்தோம். அவ்வளவு ரம்மியமான பிரதேசத்தை நான் பார்த்ததில்லை. இரவில் பால் நிலவு பாலைவன மணலை

வெள்ளி மயமாக அடிக்கும். காற்றில் எழுந்து நிற்கும் மணல் தூண்கள் பிரமிப்பாயிருக்கும். சில வேளைகளில் அந்த தூண்கள் சுழன்று நம்மை நோக்கி வரும்போது பயமாகவும் இருக்கும். இப்படி அழகும், அற்புதமும், பயங்கரமும் இணைந்து இயற்கை விசித்திரத்தில் என்னை அழைத்துச் சென்ற பெரிய தந்தை ஒரு பெரிய மலை போன்ற பிரமிட் எதிரே தங்கினார். எங்களுக்குப் பெரிய கூடாரம் அளிக்கப்பட்டது. மற்றவர்கள் மணலிலேயே படுத்தார்கள். அன்று இரண்டு ஜாமம் முடிந்ததும் பெரிய தந்தை என்னை எழுப்பி தம்முடன் வரும்படி சைகை செய்தார். நான் பேசாமல் அவரைப் பின்தொடர்ந்தேன்.

அவர் பிரமிடை அடைந்து, அதன்மீது மெல்ல ஏறினார். நானும் தொடர்ந்தேன். ஓரிடத்தில் நின்று பாறையைத் தட்ட அது திறந்தது. கீழே படிகள் ஓடின. அவர் முதல் படியில் இறங்கி எனக்குக் கைகொடுத்து உள்ளே இறங்கிக் கொண்டார். பிறகு என் கையைப் பிடித்த வண்ணம் படிகளில் இறங்கிச் சென்றார். இப்படி எத்தனை படிகள் இறங்கியிருப்போமோ எனக்குத் தெரியாது. பாதாளத்துக்கு வந்து விட்டது போன்ற பிரமையை அடைந்தேன். சட்டென்று எங்கள் முன்பு தங்கமும் வெள்ளியும் இழைத்த ஒரு கதவு தெரிந்தது. அதை அழுத்தித் திறந்தார் பெரிய தந்தை. என் கண்ணெதிரே விரிந்தது இன்றுகூட எண்ணினால் அச்சம் தரும் விந்தைக் காட்சி.

உட்புறத்தில் பொன்னும் வெள்ளியும் இழைத்த பெரிய தூண்கள், பொன் பாத்திரங்கள், விலை உயர்ந்த மணிகள் இழைத்த புரவிகள், இரண்டு. இவற்றுக்கு நடுவே பெரிதாக ஒருவர் கிரீடம் தரித்துப் படுத்திருந்தார். அவர் உயிரோடு என்னைப் பார்ப்பது போலவே தெரிந்தது எனக்கு. பெரிய தந்தை அந்தச் சடலத்தைக் காட்டி 'இவர் நமது மூதாதைகளில் ஒருவர்' என்று கூறினார். 'இந்த இடத்தில் மன்னர்களே இருப்பதால் இந்தப் பிராந்தியம் மன்னர்களின் பள்ளத்தாக்கு என்று



அழைக்கப்படுகிறது. இதேபோல் ராணிகளின் பள்ளத்தாக்கும் உண்டு' என்று கூறினார் 'உன் மூதாதைக்கு வணங்கு'' என்று கூறி தாமும் மண்டியிட்டு என்னையும் மண்டியிடச் செய்தார்.

வணங்கினேன், வணங்கிக் கொண்டே இருந்தேன். எப்பொழுது எழுந்தேனென்று எனக்குத் தெரியாது. விழித்தபோது எனது கூடாரத்தில் இருந்தேன். பெரிய தந்தை புன்முறுவலுடன் என் பக்கத்தில் உட்கார்ந்திருந்தார். அந்தப் பகுதியில் நாங்கள் பத்து நாட்களிருந்தோம். மன்னர்கள் பள்ளத்தாக்கு அருகேயிருந்த ராணிகள் பள்ளத்தாக்குகளையும் பார்த்தோம். மண்ணுக்குள் அரசு செலுத்திய ராணிகளின் அழகும் ராஜரீகமும், ஆட்சி பீடங்களும் என் மனதைக் கொள்ளை கொண்டன. அத்தகைய ஒரு ராணி முன்பு மண்டியிட்டு எழுந்தபோது ஓர் அற்புதம் நிகழ்ந்தது. அப்பொழுது என் பெரிய தந்தை வெளியே செல்லத் திரும்பினார். அந்தச் சமயத்தில் ராணிக்குப் பக்கத்திலிருந்த ஒரு பெண்ணின் கை உயர்ந்தது. அதன் கையிலிருந்த மெல்லிய கத்தி என் கையில் திணிக்கப்பட்டது. அதைச் சட்டென்று என் மடியில் மறைத்துக்கொண்டேன். அது பிற்காலத்தில் பலமுறை என்னைக் காப்பாற்றியது. நேற்று என்னைக் காத்ததும் அதுதான்'' இந்தக் கதையைச் சொல்லி முடித்த நீலரதி தனது மடியிலிருந்த அந்தக் கத்தியை எடுத்து இளமாறனிடம் நீட்டினாள்.

நிலவொளியில் பளபளத்த அந்த மெல்லிய கத்தியைக் கையில் வாங்கிப் பார்த்த இளமாறன் முகத்தில் வியப்பின் சாயை பெரிதும் விரிந்தது. 'இதை வைத்திருப்பது அபாயம்' என்று இளமாறன் உதடுகள் முணுமுணுத்தன. ''இதை யாரும் உனக்குக் கொடுத்திருக்க முடியாது. நீ திருடிக்கொண்டு வந்திருக்கவேண்டும்'' என்று கூறினான். அவன் தோளைப் பற்றி நின்ற அவள் கை துடிதுடித்தது. ''இளமாறா! இதற்கே நான் உன்னைக் கொல்லலாம்'' என்றான். அவள் குரலில் உணர்ச்சி உந்திய நடுக்கம் இருந்தது. □

# 9. புகாரின் அலைகள்

இளமாறன் கத்தியைக் கண்டதும் தலைக்குத் திருட்டுப் பட்டம் கட்டியதைக் காதில் வாங்கிய நீலரதி உணர்ச்சிப் பெருக்கால் அவனைக் கொன்றுவிடவும் தயாராயிருப்பதாகக் கூறியதை இளமாறன் சிறிதளவும் லட்சியம் செய்யவில்லை. கத்தியை மட்டும் திருப்பித் திருப்பி சந்திர வெளிச்சத்தில் பல முறை பார்த்தான். மெல்லிய ஒன்றரை சாண் நீளமுள்ள கத்திதான். ஆனால் அதன் வார்ப்படம் சாதாரண கத்திகளைப் போலில்லாமல் மகா உறுதியாயிருந்தது. அந்த மெல்லிய கத்தியின் நுனியைத் தொட்டு இருமுறை வளைத்துப் பார்த்த இளமாறன், அது சாதாரண சர்க்கு போல் வளைவதையும் கையை நுனியிலிருந்து விட்டதும் நாண் கழன்ற வில்லைப்போல் விர்ரென்று பழைய நிலைக்கு வந்ததையும் கண்டான். ''இத்தனை நுட்பமான கத்தியைச் செய்பவன் யாரும் இந்தக் காலத்தில் எந்த நாட்டிலுமில்லை. இந்த மாதிரி எஃகும் உலகத்தில் எங்கும் கிடைக்காது'' என்று அவள் காது படும்படியாகவே சொன்னான். அந்த மெல்லிய கத்தியின் பிடியில் தங்கத்தால் செய்யப்பட்டிருந்த வேலைப்பாட்டையும் அதிலிருந்த பெண்ணின் உருவத்தையும் நீண்ட நேரம் ஆராய்ந்த இளமாறன் ''இது யார் உருவம்? கிட்டத்தட்ட உன்னைப் போலிருக்கிறதே?'' என்று வினவினான்.

இதைக் கேட்ட நீலரதி பின்னாலிருந்த வண்ணம் தனது முகவாய்க் கட்டையை அவன் தோளின்மீது ஊன்றிக் கொண்டு கலகலவென நகைத்தாள். ''என்னைப் போலிருக்கிறதா?'' என்று வியப்புடன் வினவவும் செய்தாள் நகைப்பின் ஊடே.



''வேண்டுமானால் பார். உன்னை அப்படியே உரித்து வைத்திருக்கிறது'' என்று கத்தியின் பிடியைத் திருப்பி நீட்டினான் இளமாறன்.

நீலரதி அதை உற்று நோக்கினாள். அந்தப் பெண்ணின் உருவும் தன்னை அதன் கண்களால் ஊடுருவிப் பார்ப்பது போலிருந்தது. அந்தப் பார்வை அவள் ரத்தத்தில் அர்த்தமில்லாத உணர்ச்சிகளைப் பரவவிடவே அவள் நகைப்பை நிறுத்தி சோகப் பெருமூச்சு விட்டாள். அத்துடன் சொன்னாள் ''இது நானாக இருக்க முடியாது. ஏனென்றால் இவள் இறந்து பல நூற்றாண்டுகள் ஆகின்றன'' என்று.

இளமாறன் சிறிது சிந்தனைக்குப் பிறகு ''நீலரதி! முன்னோர்களின் சாயல் உடனே குடும்பத்தில் வரவேண்டுமென்பதில்லை. பல தலைமுறைகளுக்குப் பிறகும் வரலாம்'' என்று கூறினான்.

''இவள் மூதாதையல்ல, தெய்வம்'' என்றாள் நீலரதி.

''இறந்தவர்களைத் தெய்வமாகக் கருதும் வழக்கம் இந்த நாட்டிலும் உண்டு'' என்று ஏளனம் ததும்பிய குரலில் சொன்னான் இளமாறன்.

நீலரதி ஏதோ பதில் சொல்ல வாயைத் திறந்தாள். அந்த சமயத்தில் அவர்கள் இருவருக்கும் பின்னால் உள்ளே ஒரு மூலையிலிருந்து ஒலித்தது உதயகுமாரன் குரல். ''நாத்திகரிடம் தெய்வங்களைப் பற்றிப் பேசிப் பயனில்லை'' என்றான் உதயகுமாரன்.

நீலரதி இளமாறன் தோளிலிருந்த தனது முகவாய்க் கட்டையை எடுத்துத் திரும்பி உட்புறம் நோக்கினாள். அந்த முன் கூடத்தின் ஒரு மூலையில் ஏதோ பறிகொடுத்தவன் போல் முகத்தை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்த உதயகுமாரனைப் பார்த்த நீலரதி ''யார் இங்கு நாத்திகர்? யாரைச் சொல்கிறீர்கள்?'' என்று கேட்டாள்.

"உங்கள் முன்பு உட்கார்ந்திருப்பவர் தான்" என்றான் உதயகுமாரன்.

"என்னை 'உங்கள்' என்று மரியாதையாக அழைக்க வேண்டாம். 'உன்' என்று அழைத்தால் போதும். என்ன இருந்தாலும் நான் உங்கள் பணிப்பெண்" என்று சொன்னாள் நீலரதி.

"நாங்கள் இருக்கும் லட்சணத்திற்கு எங்களுக்குப் பணிப்பெண் வேறா?" என்றான் உதயகுமாரன்.

"ஏன் உங்கள் லட்சணத்திற்கு என்ன?"—நீலரதியின் கேள்வி திட்டமாக ஒலித்தது.

"இங்கிருப்பது பிரம்மசாரிக் கட்டைகள் நாங்கள் இருவர். எங்களுடன் ஒரு பெண்ணும் சேர்ந்து கொண்டால் வேறு வினை வேண்டாம்"-இதை இளமாறன் வெறுப்புடன் சொன்னான்.

"உங்களுடன் ஒரு பெண் இருந்தால் என்ன? நீங்கள் என்னை என்னதான் செய்துவிடுவீர்கள்?"—நீலரதி சிறிது கடுமையாகவே கேட்டாள்.

உதயகுமாரன் பதில் சொல்ல முடியாமல் திணறினான். இளமாறன் பெரிதாக நகைத்தான். அவன் சிரிப்பைக் கேட்ட உதயகுமாரன் "இதென்ன சிரிப்பு?" என்று வினவினான் ஆத்திரத்துடன்.

"நாத்திகன் சிரிப்பு. ஆத்திகனான நீ பதில் சொல். நீ அவளை என்ன செய்து விடுவாய் என்று கேட்கிறாள்" என்றும் கூறி மீண்டும் நகைத்தான் இளமாறன்.

அந்த சங்கடத்திலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள முயன்ற உதயகுமாரன் "அவள் ஏதோ தெய்வத்தைப் பற்றிச் சொன்னாள். அவளுக்கு நாத்திகரிடத்தில் என்ன வேலை என்று கேட்டேன்" என்று சமாதானம் சொன்னான் உதயகுமாரன்.



ஆனால் உதயகுமாரனின் திண்டாட்டத்தை அதிகப்படுத்த "நான்தான் நாத்திகன். நீ ஆத்திகன். அவளும் ஆத்திக நம்பிக்கை உள்ளவள். உங்களிருவருக்கும் பொருத்தம் இருக்குமே" என்று கூறினான். அதைச் சொல்லி மீண்டும் நகைத்தான்.

அந்த இருவர் சம்பாஷணையையும் சிறிதும் அசையாமலும் உணர்ச்சிவசப்படாமலும் கேட்டாள் நீலரதி. "வீரர்! நான் என் கதையைச் சொல்லட்டுமா? அல்லது உங்களிருவர் சண்டையைக் கேட்கட்டுமா?" என்று வினவினாள்

இதைக் கேட்டதும் இளமாறன் தன் நகைப்பை அடக்கிக் கொண்டு "உன் கதையை சொல் நீலரதி" என்று ஊக்கினான் அவளை. அதற்குப் பிறகு உதயகுமாரன் ஒரு மூலையில் சென்று படுத்துக் கொண்டான். நீலரதி மறுபடியும் இளமாறன் தோள்மீது முகவாய்க் கட்டையை வைத்துக் கொண்டு வெளியே ஆகாயத்தில் தவழ்ந்த வெண்மதியை நோக்கினான். "இம்மாதிரி ஒரு நாளில் தான் நான் ராணிகள் பள்ளத்தாக்குக்குப் போனேன் பெரிய தந்தையுடன் அங்குதான் ராணியின் பக்கத்திலிருந்தவள் இந்தக் கத்தியைக் கொடுத்தான் என்னிடம். அது பொய்யல்ல. ஆனால் சவம் எப்படி கை நீட்டும் என்று கேட்காதீர்கள். எப்படியோ நீட்டி என் கையில் கத்தியையும் கொடுத்தது. இப்பொழுது நீங்கள் காட்டிய பிறகுதான் கைப்பிடியை கவனித்தேன். அது மானிட உருவமல்ல. எகிப்தின் தெய்வமகள் ஐஸிஸ் என்பவளுடையது. அவள் கதை மிக விசித்திரம். அதைக் கேளுங்கள்..." என்று மேலும் சொன்னாள்: "ஐஸிஸ் என்ற தெய்வமகள் ஆஸிரிஸ் என்ற தெய்வமகனைக் காதலித்து மணந்தாள். ஆஸிரிஸ் எகிப்தை தர்மமாக அரசாண்டான். அவனை ஸெட் என்ற விரோதி கொலை செய்து பதினான்கு துண்டங்களாக வெட்டி எகிப்து முழுவதும் பல இடங்களில் வீசி விட்டான். இதனால் மனம் உடைய

வில்லை ஐஸிஸ். தனது கணவன் உடற்பகுதிகளைத் தேடி எகிப்து முழுதும் அலைந்தாள். எகிப்தின் பல பாகங்களிலுமிருந்த அந்தப் பகுதிகளைத் திரட்டி வந்து ஒன்றாக்கி அதற்குத் தனது மந்திர பலத்தால் உயிரும் கொடுத்தாள். அப்படிப் பிழைத்தெழுந்த ஆஸிரிஸ் மூலம் ஹோரஸ் என்ற மகனைப் பெற்றாள். அந்த ஹோரஸ், ஸெட் என்ற தீய அரக்கனைக் கொன்று தர்மத்தை நிலை நாட்டினான். இதனால் ஐஸிஸை தெய்வமாதா என்று எகிப்தியர் இன்றும் அழைக்கிறார்கள். இன்றும் அவள் ஹோரஸுக்கு முலைப் பால் கொடுப்பது போன்ற பல சிலைகள் எகிப்தில் உள்ளன. அவள் மகா அழகி, மகா சக்தி வாய்ந்தவள். அவளைப்போல் நான் எப்படி இருக்க முடியும்?'' என்ற நீலரதி பெருமூச்செறிந்தாள்.

இளமாரன் தனது இடக்கையைத் தூக்கி அவள் கன்னத்தைத் தட்டி ''நீலரதி! நீ சொன்னவர்கள் வாழ்ந்திருக்கலாம். ஆனால் தெய்வங்கள் என்பது கற்பனை. எதற்கும் ஒரு தெய்வத்தன்மையைப் புகட்டி அதற்கு சிலை வடிப்பது உலக இயல்பாகி விட்டது. என்ன இருந்தாலும் உன் முகம் இந்த ஐஸிஸின் முகம் போலத்தான் இருக்கிறது. உன் அழகும் தெய்வீக அழகுதான். ஆனால் நீ தெய்வமாக எப்படி ஆக முடியும்?'' என்று கேட்டான்.

நீலரதி அந்த சமயத்தில் தான் முழுக்க முழுக்க பெண் என்பதைக் காட்டிக் கொண்டாள். ''நான் என்ன அத்தனை அழகாகவா இருக்கிறேன்'' என்று மென்மையான குரலில் கேட்டாள்,

''சந்தேகமென்ன?'' என்றான் இளமாரன்.

''அப்படியானால்...''-இழுத்தாள் நீலரதி.

''என்ன அப்படியானால்...'' என்று கேட்டான் இளமாரன்.

அவன் பதிலேதும் சொல்லவில்லை. தனது முகவாய்க் கட்டையை சிறிது உள்ளுக்கு இழுத்து தன் இதழ்களை



அவன் தோளில் மெதுவாகப் பதித்தாள். ஆனால் இளமாரன் உணர்ச்சியற்ற கல்லாக உட்கார்ந்திருந்தான். அவன் கட்டைபோல் உட்கார்ந்திருப்பதைக்கண்ட நீலரதி தனது இதழ்களை நீக்காமலே ''எங்கள் நாட்டில் நன்றி தெரிவிக்கும் முறை இது'' என்று சொன்னாள்.

இளமாரன் அசையவுமில்லை பேசவுமில்லை ''இன்று என்னை மரண தண்டனையிலிருந்து காப்பாற்றினீர்கள். அதற்கு நன்றி சொல்ல வேண்டாமா?'' என்று கொஞ்சிய நீலரதி ''வீரரே! ஏன் இப்படி இடித்தபுளிபோல் உட்கார்ந்திருக்கிறீர்? என்னைப் பிடிக்கவில்லையா உங்களுக்கு?'' என்று கேட்டாள்.

''எனக்குப் பிடிக்கிறதோ இல்லையோ...இன்று காலையிலிருந்து நீ என்னைப் பிசாசுபோல் பிடித்துக் கொண்டு விட்டாய்'' என்றான் இளமாரன் சற்று கடுமையைக் குரலில் காட்டி.

''நான் பெண்...''

''பெண்களைவிட பெரிய பிசாசுகள் உலகத்தில் கிடையாது.''

''அப்படியா?''

''ஆம்''

''உங்களைப் பெற்றவளும் ஒரு பெண்தானே?''

இதைக் கேட்டதும் ஆத்திரமடைந்த இளமாரன் ''அவளைப் பற்றி என்ன இப்பொழுது? இந்தா உன் கத்தியை வைத்துக்கொள். மேலே கதையைச் சொல்'' என்று கடுமையான குரலில் உத்தரவிட்டான்

''சரி கேளுங்கள்!'' என்று நீலரதி தொடர்ந்தாள் கதையை: ''நான் ராணிகள் பள்ளத்தாக்கிலிருந்து எனது பெரிய தந்தையுடன் மாளிகைக்கு வந்ததும் சில நாட்கள் நிகழ்ச்சி எதுமில்லாமல் ஓடின. பதினைந்து நாட்கள்

கழித்து இதே மாதிரி பூர்ணமதி ஆகாயத்தில் வலம் வந்து கொண்டிருந்தான். நான் என் மாளிகை அறையின் சாளரத்தில் உட்கார்ந்திருந்தேன். நீலநதியின் காற்று சுகமாக வந்து கொண்டிருந்ததால் அப்படியே சாளரக் கட்டையில் சாய்ந்து உறங்கி விட்டேன். அப்பொழுது விசித்திரக் கனவு ஒன்று கண்டேன். என்னை ஐஸிஸ் அந்த வெண்மதியிலிருந்து இறங்கி வந்து அணைத்துக் கொண்டாள். 'மகளே! உன் கையில் நான் கொடுத்திருக்கும் கத்தி தெய்வீகமானது; அதை யாரிடமும் கொடுத்துவிடாதே. அது உன்னைக் காப்பாற்றும்' என்று சொன்னாள்.

நான் சொன்னேன் 'தாயே! இதை ராணியின் தோழியல்லவா கொடுத்தாள்? அதுவும் உயிரற்ற சடலந்தானே' என்று.

ஐஸிஸ் முகத்தில் வருத்தம் படர்ந்தது. 'அந்தத் தோழி நான்தான். ராணி தோழியானேன், உனக்கு அந்தக் கத்தியைக் கொடுக்க. இப்பொழுது போய்ப்பார், அந்த உருவம் அங்கிருக்காது' என்றாள்.

'என்னால் நம்ப முடியவில்லை' என்றேன்.

'தங்களுக்குத் தெரியாததை நம்பாமலிருப்பது மனித இயல்பு. நம்பிக்கைதான் மனிதனை வளர்க்கும். இதை நினைவில் வைத்துக்கொள். இந்தக் கத்தியை உன் உடையில் செருகிக்கொள். உனக்கு தீங்கிழைப்பவர்கள் மீது மட்டும் இதைச் செலுத்து. உனக்கு மணமானதும் திரும்பி அந்தச் சவ அறைக்கு வா. நான் அங்கிருப்பேன். உன் கணவனுடன் என்னைத் தரிசித்துவிட்டு என் கையில் திரும்பவும் இந்தக் கத்தியைக் கொடுத்துவிடு' என்றாள் தெய்வமாதா ஐஸிஸ். கடைசியாக 'நான் வருகிறேன் மகளே! இந்த முழுமதி நாளில் நான் உன்னிடம் வந்திருப்பதால் உன் வாழ்க்கையில் ஏற்படும் நன்மை தீமைகளெல்லாம் இந்த முழுமதி தினத்தில்தான் ஏற்படும்' என்றாள்.



பிறகு சொப்பனம் கலைந்து எழுந்து உட்கார்ந்தேன். ஐஸிஸின் கட்டளையை நினைத்து வியந்தேன். பிறகு உள்ளே சென்று படுத்துக் கொண்டேன். அடுத்த முழுமதி நாளன்றுதான் அவன் வந்தான்...'' என்றாள்.

''யாரது?'' என்று இளமாறன் கேட்டான்.

''ஒரு மூதாட்டியை எனக்கு பாடம் சொல்லிக் கொடுக்க எனது பெரிய தந்தை அமர்த்தினார். அவள் பாடம் சொல்லிக் கொடுத்தாள். பாடம் என்பதைவிட காமத்தைக் கற்பித்தாள் என்றுசொல்லுவது பொருத்தம். ஒருநாள் அவள் அந்த ஊர் வாலிப வணிகன் ஒருவனை அழைத்து வந்தாள். பெரிய தந்தை அவனுடன் வாணிபம் பேசினார். ஆனால் அவன் என்னையே பார்த்துக் கொண்டிருந்தான். என் பெரிய தந்தை வெளியூருக்குப் போயிருந்த இரவு ஒன்றில் அவன் பத்துப் பதினைந்து பேருடன் எங்கள் மாளிகைக்குள் வந்து என்னை அபகரித்துச் சென்றான். அவன் கொடுத்த மயக்க மருந்திலிருந்து நான் விழித்துக்கொண்டபோது ஒரு கப்பலில் இருந்தேன். அங்கு அவன் என்னைக் கற்பழிக்க முன்றான். அன்றும் ஒரு முழுமதி நாள். நாங்கள் இரவு வெகு நேரத்திற்குப் பிறகு தளத்தில் நின்று கொண்டிருந்தோம். தளத்தின் இருண்ட மூலைக்கு என்னை அழைத்துச் சென்று என்னைக் கற்பழிக்க முயன்றான். இந்தக் கத்தியால் அவனைக் கொன்று காலைப் பிடித்து வாரி கடலில் தள்ளிவிட்டேன். மறுநாள் அவனைத் தேடினார்கள். மறைந்த விதம் தெரியாததால் என்னை விசாரித்தார்கள். எனக்கு எதுவும் தெரியாதென்று சொல்லி விட்டேன். எனக்கும் அவனுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லையென்று சொன்னதைக் கேட்டு எல்லோரும் நகைத்தார்கள். கப்பல் தலைவன் உனக்கு அவன் நாகை வரையில் பணம் கொடுத்திருக்கிறான் என்று சொல்லி என்னை நாகையில் இறக்கிவிட்டார். நான் அங்கிருந்த சமண மடத்தில் வேலைக்குச் சேர்ந்தேன். அங்கிருந்து இந்த மடத்திற்கு அனுப்பி வைத்தார்கள். இங்கும் என்கற்பைச் சூறையாட

முயன்றான் காவலர் தலைவன். அவனையும் கொலை செய்தேன். இதுதான் நான் வந்த கதை'' என்று முடித்தாள் நீலரதி.

இதற்குப் பிறகு இளமாறனோ நீலரதியோ பேசவில்லை. நீண்ட மௌனத்திற்குப் பிறகு இளமாறன் ''இந்தக் கத்தியை நாளைவரை நான் வைத்துக்கொள்ளட்டுமா?'' என்று கேட்டான்.

அவள் சிறிதும் சிந்திக்கவில்லை. ''வைத்துக் கொள்ளுங்கள்'' என்றாள்.

கத்தியை இடையில் பத்திரப்படுத்திக் கொண்ட இளமாறன் ''உதயகுமாரா! இவளுக்குப் படுக்கை போடு'' என்று கூறிவிட்டு, ''போய்ப் படுத்துக்கொள், நாளை காலை மீதியைப் பேசுவோம்'' என்றான்.

''நீங்கள் படுக்கவில்லையா?'' என்று நீலரதி கேட்டாள்.

''இல்லை.''

''என்ன செய்யப் போகிறீர்கள்''

''கடலோரம் போகப் போகிறேன்.''

''எதற்கு?''

''சிந்திப்பதற்கு''

''இங்கு சிந்தனை ஓடாதோ?''

''அங்கு நன்றாக ஓடும். அங்கு சிந்தித்துத்தான் வழக்கம். புகாரின் அலைகள் எனக்கு போதிக்கும். அவற்றின் திறம் உனக்குத் தெரியாது'' என்று கூறிவிட்டு சட்டென்று வாயிற்படியில் இருந்து வெளியே காலை வைத்து மலைச்சரிவில் வேகமாக இறங்கிச் சென்றான்.

□□□

# 10. அலை மீது வந்த அழகி

உதயகுமாரனை தனக்குப் படுக்கை போடச்சொல்லி விட்டு, தன்னையும் படுக்கும்படி உத்தரவிட்டு, மடமடவென மலைச்சரிவில் இறங்கிச் சென்ற இளமாறனை உற்றுப் பார்த்த வண்ணம் உட்கார்ந்த இடத்தை விட்டு அகலாமலிருந்தாள் நீலரதி. மலைச்சரிவில் அவன் இறங்கிச் சென்றபோது அவன் உடலின் முதுகுப்பகுதி இருந்த வாளிப்பையும், அதிகமாக சதை பிடிக்காவிட்டாலும் இரும்புபோல் சற்றும் வளையாமல் அனாயாசமாக இறங்கிய கால்களையும், நீண்ட திடமான கழுத்தையும், அலைந்த தலைக்குழல் அவன் தோள்களை முத்தமிட்டபோதிருந்த அழகையும் கவனித்த நீலரதி அவன் கண்ணுக்கு மறையும் மட்டும் அவனையே பார்த்துக்கொண்டிருந்தாள். முழு நிலவில் அவன் சென்றது ஏதோ ஒரு தேவ புருஷன் செல்வது போல் கண்ணுக்குத் தோன்றவே ''ஒரு வேளை இவர் எகிப்தின் தெய்வமகன் ஆஸிரிஸின் அவதாரமோ?'' என்றும் தன்னைத்தானே கேட்டுக்கொண்டாள். ''நான் தெய்வமகள் ஐஸிஸ் மாதிரி இருப்பதாக அவர்தான் சொன்னாரே; அப்படியானால் எனக்கும் அவருக்கும் என்ன உறவு? ஐஸிஸுக்கும் ஆஸிரிஸுக்கும் உள்ள உறவா? அதாவது கணவன் மனைவி உறவா?'' என்ற வினாக்களைக் கிளப்பிக்கொண்டு அதனாலேயே இன்பத்தையும் அடைந்தாள். ''இருப்பினும் அவர் தன்னை வயதானவராக நினைக்கிறார். அப்படி என்ன வயதாகி விட்டது? வீண் பிரமை'' என்று இளமாறன் எண்ணத்தை தவிடுபொடியாக்கவும் முயன்றாள். ''ஆமாம்; சிந்திக்கக் கடலோரம் போவானேன்? சிந்திக்க அலைகள் உதவும் என்றாரே! என்னிடமிருந்து தப்ப அது ஒரு சூழ்ச்சியா?'' என்றும் கேள்வியை எழுப்பிக் கொண்டு அதன் விளைவாக புன்முறுவலும் கொண்டாள்.

நீலரதி இவ்வாறு எண்ணமிட்டுக் கொண்டிருக்கையில் உள்ளே அவளுக்கு உதயகுமாரன் படுக்கையைத் தட்டிப் போட்டான். படுக்கையென்பது வெறும் பாய்தான். அதுவும் புகாரின் மடத்தில் பணிமக்கள் காவிரிக்கரை கோரைகளைக்கொண்டு முடைந்த முரட்டுப் பாய்தான். அப்படிப்பட்ட பாயிலும் இரண்டு தானிருந்தன, அந்த பிரும்மச்சாரிகளின் விடுதியில். அத்தகைய பாயொன்றை எடுத்து படக்படக்கென்று சத்தம்படும்படி உதறித் தரையில் தட் என்ற ஒலியுடன் போட்ட உதயகுமாரன் "நீங்கள் படுத்துக் கொள்ளலாம்" என்று உள்ளிருந்தே குரல் கொடுத்தான். நீலரதி இளமாரனைப் பற்றிய சிந்தனையிலிருந்ததால் உடனடியாக அந்த வாலிபனுக்கு பதில் சொல்லவில்லை. இதனால் எரிச்சலடைந்த உதயகுமாரன் "உங்களைத்தான், படுக்கை சித்தமாகிவிட்டது" என்று அழுத்திச் சொன்னான், இன்னொரு முறை.

நீலரதி தனது தலையை லேசாகத் திருப்பி உட்புறம் பார்த்ததும் அவள் இதழ்கள் நன்றாக விரிந்து புன்முறுவலை அதிகப்படுத்திக் கொண்டன. அந்த வாலிபன் தனக்கு ஒரு பாயை விரித்துவிட்டு இன்னொரு பாயை விரிக்க சித்தமாக அந்தப் பாயுடன் நின்றிருப்பதைக் கண்ட நீலரதி உவகையுடன் பரிதாபமும் கொண்டு "பாவம்! நீங்கள் எதற்காகப் பாய் போடவேண்டும்? நான் அதைச் செய்ய மாட்டேனா?" என்று வினவினாள்.

உதயகுமாரன் அவளை உற்றுப்பார்த்து "என்னைப் போடும்படிதான் தலைவர் உத்தரவு. நீங்களிருக்கும் போதுதானே உத்தரவிட்டார். காதில் விழவில்லையா உங்களுக்கு?" என்று வினவினான்.

"விழுந்தது. இருந்தாலும் அவர் சொல்வதையெல்லாம் நாம் அப்படியே எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற அவசியமுமில்லை" என்றாள் நீலரதி.



அதைக்கேட்ட உதயகுமாரன் வாய்விட்டே நகைத்தான். "நீங்கள் தலைவரைப்பற்றிக் கேள்விப்பட்டதில்லை போலிருக்கிறது?" என்று கேட்டான் நகைப்பினூடே. "அவர் சொன்னதை நிறைவேற்றவில்லையென்றால் மலையில் உருட்டி விடுவார், அல்லது தூணில் கட்டி தோலை உரித்து விடுவார். அவர் இம்சை தாங்க முடியாததால் ஏற்கனவே இருந்த இரு வேலைக்காரர்கள் ஓடிவிட்டார்கள். நான் ஏன் ஓடவில்லையென்று எனக்கே புரியவில்லை" என்று சொன்ன உதயகுமாரன் "நீலரதி!" என்று மெதுவாக அழைத்தான்.

நீலரதி எழுந்து உள்ளே வந்து அவனை நெருங்கினாள் மெதுவாக. அவள் நெருங்க முற்பட்டதும் அவன் பின்னடைய ஆரம்பித்தான். "வாலிபரே! பயப்படவேண்டாம், நான் உங்களைக் கடித்துத் தின்றுவிடமாட்டேன்" என்று தைரியம் சொன்னாள் நீலரதி.

ஆனால் அவன் பின்னால் நகருவதை நிறுத்தாமல் நடந்து சாளரத்தருகில் போய் கையிலிருந்த பாயுடன் நின்றுகொண்டான். "இப்படிக் கொடுங்கள், அந்தப் பாயை நான் போடுகிறேன்" என்று கையை நீட்டிக் கொண்டு நெருங்கினாள் நீலரதி. மேற்கொண்டு நகர இடமில்லாததால் மிரள மிரள விழித்தான் உதயகுமாரன். அவன் கையிலிருந்த பாயை பலவந்தமாகப் பிடுங்கிக் கொண்ட நீலரதி அதை உதறி அவன் ஏற்கனவே போட்டிருந்த பாயின் பக்கத்தில் விரித்தாள். அந்தப் பணி முடிந்த பிறகு "உதயகுமாரா! இன்னொரு பாய் கொண்டு வா" என்றாள்.

அவள் தன்னைப் பெயர் சொல்லி அழைத்தது திருப்தியாயிருந்தது உதயகுமாரனுக்கு. இனிமேல் அவளுக்கும் தனக்கும் இளமாரன் முடிச்சுப் போடமுடியாது என்ற நினைப்பால், அந்த விடுதலை உவகையால் நீலரதியை தைரியமாக ஏறெடுத்துப் பார்த்து "வேறு பாயில்லை" என்றான்.

நீலரதி அவனைத் தனது அழகிய விழிகளால் நோக்கினாள். "அப்படியானால் அவர் எங்கு படுப்பார்?" என்று வினவினாள் அன்பு சொட்டிய குரலில்.

"அவரா!"—வாயைப் பிளந்தான் உதயகுமாரன்.

"ஆம்!"

"ஏன்? உங்களிருவருக்குந்தான் இரண்டு பாய்கள் இருக்கின்றனவே?"

"நம் இருவருக்கும் என்று சொல் உதயகுமாரா!" என்று நீலரதி மெல்ல புன்முறுவல் செய்தாள்.

உதயகுமாரனுக்கு பிராணனே போய்விடும் போலிருந்தது. "பெண்ணே! உனக்குப் பைத்தியமில்லையே?" என்று வினவினான் உதயகுமாரன்.

"இல்லை. ஏன் கேட்கிறீர்கள்?" என்று கேட்டாள் நீலரதி.

"நாமிருவரும் ஒரு படுக்கையில் படுக்கலாம் என்று யாராவது சொல்வார்களா?" என்று உதயகுமாரன் வினவினான்.

"சொன்னாலென்ன? இருப்பது இரண்டு பாய்கள் தானே?"—நீலரதி முகத்தில் வியப்பைக் காட்டினாள்.

"நீ பருவப்பெண்..."—உதயகுமாரன் சங்கடத்துடன் இழுத்தான் சொற்களை

"ஆமாம்"

"நான்..."

"பருவ வாலிபர்"

"இருவரும்..."

"என்ன இருவரும்?"

"உனக்குப் புரியவில்லையா?"

"இல்லை. நீங்கள்தான் விளக்கமாகச் சொல்லுங்களேன்."

உதயகுமாரன் திணறிப் போனான். நீயும் நானும் ஒன்றாகப் படுப்பது தவறு என்று கடினமாகச் சொன்னான்.

நீலரதி அவனை மேலும் குத்த எண்ணி "நாமிருவரும் திருமணம் செய்து கொண்டால்?" என்று வினவினாள்.



உதயகுமாரன் கோபம் எல்லை கடந்தது. "நம்மிருவருக்குந் திருமணமா!" என்று சீறினான்.

"ஏன் கூடாது? நான் என்ன அழகில்லையா?" என்று அவள் கேட்டாள்.

"அழகுதான், உன்னைப்பற்றிய எல்லாமே அழகுதான்" என்று இகழ்ச்சியுடன் சொன்னான் உதயகுமாரன்.

நீலரதி தனது இதழ்களில் புன்முறுவலைப் படரவிட்டுக் கொண்டாள். "உதயகுமாரா! இப்போது எனக்கு ஒரு யோசனை தோன்றிவிட்டது" என்றாள்.

"சொல், நல்ல யோசனையாக இருக்கட்டும்" என்றான் உதயகுமாரன்.

"இந்தப் பாயில் மூவரும் படுத்துக் கொள்வோம், எனக்குத் திருமணமாகும் வரை. பிறகு நீயும் நானும் மட்டும்..." என்ற நீலரதியை சுட்டு விடுவதுபோல் பார்த்த உதயகுமாரன் "குறுக்கே நிற்காதே. வழிவிடு நான் வெளியே போய்விடுகிறேன்" என்று கூறினான். அப்பொழுதும் அவள் நகராதிருக்கவே அவள்மீது இடித்துக் கொண்டு வெளியே ஓடினான்.

நீலரதி அவனைத் தொடர்ந்து வெளியே வந்து மீண்டும் வாயிற்படியில் உட்கார்ந்து கொண்டாள். திண்ணையை விட்டு எட்ட இருந்த ஒரு பாறாங்கல் மீது உதயகுமாரன் உட்கார்ந்திருந்தான். இருவரும் ஒருவரையொருவர் உற்றுப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தனர், நீண்ட நேரம்.

அதே சமயத்தில் கடற்கரை சென்ற இளமாறனும் நீர்க்கரையில் அமர்ந்து கால்களை அலையில் நீட்டிக் கொண்டு எதிரே பரந்துகிடந்த புகாரின் கடலைப் பார்த்துக் கொண்டிருந்தான். அன்று பௌர்ணமியாதலால் அலைகள் பெரிதாக எழுந்து தரையை நோக்கி வந்து மடிந்து அவன் காலில் நுரையைப் பாய்ச்சி மீண்டன. அப்படி உட்கார்ந்து சிந்தனையில் ஆழ்ந்திருந்தவன் மேலே தவழ்ந்துகொண்டிருந்த வெண்மதியையும் நோக்கி

அலைகளையும் நோக்கினான். பிறகு இடையில் செருகியிருந்த கத்தியை எடுத்து அதன் பிடியிலிருந்த ஐஸிஸின் உருவத்தைக் கூர்ந்து கவனித்தான். "சந்தேகமில்லை இந்தப் பெண் நீலரதியைப் போலவே இருக்கிறாள். ஐஸிஸ் உண்மையில் தேவதையா? தேவதையாயிருந்தால் நீலரதியிடம் மட்டும் அவளுக்கென்ன தனிப்பட்ட அன்பு?" என்று எண்ணமிட்டான். "ஆனால் ஒரு உண்மை இருக்கிறது. நீலரதி சொன்னதுபோல் அவள் வாழ்க்கையில் மதி நிறைந்த நாளன்றுதான் புதுப்புது நிகழ்ச்சிகள் ஏற்படுகின்றன. அதையும் ஐஸிஸ்தான் சொன்னாளாமே?" என்று உள்ளூர விவாதித்தான். "எது உண்மையாயிருந்தாலும் இல்லாவிட்டாலும் நீலரதி ஓர் அற்புதப் பெண். அவள் வாழ்க்கையில் இன்னும் சிக்கல்கள் கண்டிப்பாய் வரும். நாளை விசாரணையில் அவளுக்கு விடுதலையா? தண்டனையா? எது கிடைக்கும்?" என்று சிந்தனை வசப்பட்டான்.

இவற்றைத் தவிர வேறொரு விஷயமும் அவன் சித்தத்தில் கவலையை உலாவவிட்டது. "எப்பொழுது ஓர் எகிப்து நாட்டவன் இவளைத் தூக்கி வந்து அவன் கப்பலில் கொல்லப்பட்டானோ அவனது உறவினர் இவளைத் தொடர்ந்து வருவார்கள். பழிக்குப்பழி வாங்கும் வரையில் இவளை விடமாட்டார்கள். அவர்களிடமிருந்து இவளை எப்படிக் காப்பாற்றுவது?" என்றும் வினா எழுப்பிக் கொண்டான்.

"அலையே! நீ சொல். இவற்றுக்கெல்லாம் பரிகாரம் எப்படி?" என்று எட்ட எழுந்து வந்த ஒரு பேரலையை நோக்கிக் கேட்டான். அந்த அலை பெரிதாக எழுந்தது. அதன் விளிம்பு சந்திர வெளிச்சத்தில் இமயத்தின் சிகரம் போல் பளபளத்தது. அதன் மீது ஒரு பெண் திடீரென்று தோன்றினாள். அவள் அலை எழுச்சியில் நின்றதால் அந்தப் பேரலை மடியவில்லை. அவள் அதில் நின்றபடியே வந்து அவனெதிரே இறங்கினாள். தன் கையால் அவன்



இரு கைகளையும் பிடித்துக் கொண்டாள். "நீலரதியைக் கைவிட்டுவிடாதே" என்றும் சொன்னாள்.

பெரும் பிரமையிலிருந்தான் இளமாறன். எதிரே நின்றவள் நீலரதிதான். அவள் தனக்குத் தெரியாமல் கடலாட வந்திருக்கிறாள் என்று நினைத்து "யார் உன்னை வரச் சொன்னது?" என்று சீறினான்.

"யாரும் சொல்லத் தேவையில்லை" என்ற அந்தப் பெண் "நான் சொன்னது நினைவிருக்கட்டும்" என்று கூறி விட்டு மீண்டும் திரும்பி கடலலைகளை அணுகி நீர்ப் பரப்பில் உருண்டு வந்த அலைகள் மீது நடந்து சென்றாள்.

இளமாறன் திகப்பிரமை பிடித்து உட்கார்ந்து அலைகளையே கவனித்துக் கொண்டிருந்தான். கடலலைகளை விட உணர்ச்சி அலைகளால் பீடிக்கப்பட்ட இதயத்துடன் வந்ததைவிட அதிக சிந்தனை வசப்பட்டு திரும்பிச் சென்றான், வாணகிரிச்சரிவை நோக்கி. மலையில் ஏறி விடுதிக்கு வந்ததும் வாசற்படியிலும் பாறாங்கல் மீதும் அமர்ந்திருந்த நீலரதியையும் உதயகுமாரனையும் உற்று நோக்கினான். ஏற்கனவே இருந்த பிரமை கோபமாக மாறியதால் "உள்ளே போய் படுத்துக் கொள்கிறீர்களா! அல்லது உங்களிருவரையும் தூக்கிப் படுக்கையில்கொண்டு போடட்டுமா?" என்று பேரிடிபோல் சொற்களை வீசினான். சொன்னதைச் செயல்படுத்த உதயகுமாரனை பலவந்தமாகத் தூக்கிக் கொண்டு வாயிற்படியிலிருந்த நீலரதியைக் காலால் ஒதுக்கித் தள்ளி உதயகுமாரனை படுக்கையில் போட்டான். பிறகு திரும்பி வந்து நீலரதியைத் தூக்கினான். தூக்கியவன் உள்ளே செல்லவில்லை. சிலையென வாயிற்படியிலேயே நின்றான். தூரத்தில் கடற்பகுதியிலிருந்து ஒரு சிரிப்பு காற்றில் மிதந்து வந்தது. அந்த சமயத்தில் நீலரதியும் நகைத்தாள். இரண்டு சிரிப்புக்கும் ஒற்றுமை பலமாயிருந்தது.

□ □ □

# 11. தீண்டி மீண்ட இதழ்கள்

கடற்பகுதியிலிருந்து காற்றில் மிதந்து வந்த சிரிப்பொலிக்கும், தனது கையில் கொடிபோல் குறுக்கே கிடந்த நீலரதியின் சிரிப்பொலிக்கும் இருந்த ஒற்றுமையைக்கண்டு திகைப்படைந்த இளமாறன், அவளைத் தூக்கியவண்ணம் படிகளிலிருந்து இறங்கி நிலவொளியில் அவள் முகத்தைப் பார்த்தான். அலை மீது வந்த அழகியின் அதே முகம் தனது கண்ணெதிரே விகசித்துக் கிடப்பதைக் கண்டு ''ஒரு வேளை இவளும் அந்த தெய்வமகளும் ஒன்றாயிருக்குமோ?'' என்று ஒரு விநாடி நினைத்தாலும் அடுத்த விநாடி அந்த எண்ணத்தை உதறி ''தெய்வமாவது மண்ணாங்கட்டியாவது? வீண் பிரமை. மனிதன் கனவுக்கெல்லாம் ஓர் அர்த்தம் கொடுப்பதற்கு தெய்வத்தை சிருஷ்டித்திருக்கிறான்'' என்று மனதில் சொல்லிக் கொண்டான்.

அவன் தன்னைப் படியிலிருந்து தூக்கிக்கொண்டு மலைச்சரிவின் முழுநிலவொளிக்கு வந்ததையும், தனது முகத்தை ஊன்றிக் கவனித்ததையும், பிறகு சிந்தனையில் இறங்கி விட்டதையும் நீலரதி கவனிக்கவே செய்தாள். ஆதலால் ''நீங்கள் ஏதோ சிந்திப்பதாகத் தெரிகிறது'' என்று வினவினாள் மெதுவாக. வினவியது மட்டுமல்லாமல் மெல்லத்தனது உடலை நெகிழ்த்தி முகத்தை அவன் மார்பிலும் இழைத்து அவன் கண்களோடு தனது கண்களைக் கலந்தாள்.

அந்த அழகிய கண்கள் தனது கண்களை ஊடுருவி இதயத்தையே கலனிப்பது போன்ற பிரமை இளமாறனுக்கு ஏற்படவே அவன் தனதுகண்களை அவள் பார்வையிலிருந்து அகற்ற முயன்றான். ஆனாலும் முடியாததால் பெருமூச்சு விட்டான். அவன் இதய சங்கடத்தின்



அறிகுறியாக எழுந்த பெருமூச்சைக் கவனித்த நீலரதி மீண்டும் ஒருமுறை லேசாக நகைத்தாள். அந்த நகைப்பு அவன் உணர்ச்சிகளை மீண்டும் தொடவே ''எதற்கு நகைக்கிறாய்?'' என்று சீறினான் இளமாறன், அர்த்தமில்லாமல்.

நீலரதி தனது செவ்விய இதழ்களைக்குவித்தாள் ஒருமுறை. பிறகு லேசாக நீக்கி ''வீரரே! ஏதோ கோட்டையைப் பிடிக்க சிந்தித்துக் கொண்டிருந்தீர்கள். அதைப் பற்றிக் கேட்டேன். பதில் சொல்லவில்லை நீங்கள். அதனால் நகைத்தேன்'' என்றாள் இளமாறனை நோக்கி.

குவிந்த அவள் இதழ்கள் செம்பருத்தி மொட்டைப் போலிருந்ததையும், அதுவே மலராக விகசித்தபோது செம்பருத்தியின் உள்ளழகும் அதில் சிறிதும் குறையாமலிருந்ததையும் கண்ட இளமாறன் அவள் இதழ்களின் அழகை எண்ணி வியந்தான். இருந்தாலும் உள் உணர்ச்சிகளைக் காட்டாமல் ''பதில் சொல்லாவிட்டால் நீ சிரிக்க வேண்டுமா?'' என்று கேட்டான்.

''உங்கள் முகத்தைப் பார்த்தேன்...'' என்ற அவள் சொற்களை முடிக்கவில்லை.

''முகம் சிரிக்கும்படியாயிருக்கிறதா?'' என்று கேட்டான் இளமாறன்.

''சே சே! அப்படியொன்றுமில்லை. முகத்திலிருந்த பலத்த யோசனையைப் பார்த்தேன், இங்கு அப்படி யோசிப்பதற்கு ஒன்றுமில்லையே என்று நினைத்தேன், சிரித்தேன், வேறொன்றுமில்லை'' என்றாள் நீலரதி.

''யோசிப்பதற்கு ஏன் இல்லை?'' என்று கேட்டான் இளமாறன்.

''என்ன இருக்கிறது?''

''நாளைக்கு உன் விசாரணை இருக்கிறது.''

''இருந்தாலென்ன?''

''தண்டனை என்னவென்பது தெரியாது?''

"என்ன தண்டனையா யிருந்தால்தானென்ன?"

"கவலை இல்லையா உனக்கு?"

"என்னைக் காக்க நீங்களிருக்கும்போது நான் கலைப் படுவானேன்?"—இதை அவள் சர்வ நிச்சயத்துடன் சொன்னாள்.

அவள் குரலில் ஒலித்த நம்பிக்கையைக் கவனிக்கவே செய்த இளமாரன் அவள் உடலை இறுக்கிக் கட்டிக் கொண்டான், தனது ஆதரவு அவளுக்கு உண்டு என்பதை வலியுறுத்த. இருப்பினும் சொன்னான்: "நீலரதி! நீ போடும் கணக்கு சரியல்ல. இந்த புத்த சந்நியாசிகளை உனக்குத் தெரியாது. உனக்கு பாதகமான தண்டனை கிடைக்க முழுவதும் பிரயத்தனம் செய்வார்கள். அவர்களில் இருவரை நாம் அவமானப்படுத்தியிருக்கிறோம். காவலரை விரட்டியிருக்கிறேன். இத்தனையையும் அவர்கள் மன்னிக்க மாட்டார்கள். உன் அழகிய கழுத்துக்குத் தூக்கைக்கொண்டு வரும் வரையில் தூங்க மாட்டார்கள்" என்று இதைச் சொல்லி பெருமூச்சும் விட்டான்.

அதைக்கேட்டு அஞ்சவில்லை நீலநதிக்கரை அழகி. அவள் இரு கைகள் எழுந்து இளமாரன் கழுத்தை வளைத்தன. "வீரரே! நான் மரணத்துக்கு அஞ்சுபவளல்ல. ஆனால் உங்கள் கை என்னைக் காத்து நிற்கும் வரை என்னை யாரும் அணுக முடியாது. இது சத்தியம்" என்று சொன்னாள்.

தன் கழுத்தை அவள் கைகள் வளைத்ததை விரும்பவில்லை இளமாரன். ஆனால் அவற்றைப் பிரித்துத் தள்ளி அவளிடமிருந்து விடுதலை பெறவும் விரும்பவில்லை அவன். ஏதோ அவனையும் மீறிய சக்தி அவன் இயற்கைப் படி அவனை நடக்கவிடவில்லை. ஆகவே அந்த நிலையிலேயே பதிலேதும் சொல்லாமல் அவளைத் தூக்கிக் கொண்டு மீண்டும் தனது விடுதி வாயிற்படியில் உட்கார்ந்து அவளைப் பக்கத்தில் உட்கார வைத்துக்



கொண்டான். அவள் தலையை தனது காலின்மீது சார்த்திக் கொண்டு முதுகை லேசாக வருடிய வண்ணம் பேசினான். "நீலரதி! நீ நினைப்பதுபோல் நாளைய விசாரணை அத்தனை சுலபமாக முடியாது. இந்த புத்தமடத்து நிலையை யாரும் மீறமுடியாது. மடத்திலேயே சுமார் நூறு வீரர்கள் இருக்கிறார்கள். தவிர சில துறவிகளும் நன்றாகப் போரிடுவார்கள். இத்தனை பேரையும் நான் தன்னந்தனியாக மீறி உன்னைக் காப்பது நடவாத காரியம். அப்படியே காத்து அழைத்துச் சென்றாலும் நம் இருவர் உயிரும் அரைக்காசு பெறாது. நாம் இந்தப் புகாரை விட்டு வெளியேறுவதே கஷ்டம். அப்படி வெளியேறினாலும் இந்த நாட்டு எல்லையிலிருக்கும் வரை எந்த நிமிஷத்திலும் அழிக்கப்படுவோம்" என்று சொன்னான் கவலை தெரிந்த குரலில்.

அவள் அவன் முழந்தாளில் தலையை அழுத்திய வண்ணமே சொன்னாள் "எதற்கும் ஆண்டவன் இருக்கிறான்" என்று.

"ஆண்டவன் மனிதனின் கற்பனை. அப்படியே இருந்தாலும் அவன் அயோக்கியர்களுக்குத்தான் உதவுகிறான். ஆகையால் நமக்குப் பயனில்லை" என்று சுட்டிக் காட்டினான் இளமாரன்.

அவன் வாழ்க்கையில் ஏதோ பெரும் துன்பத்தை அடைந்திருக்கிறான் என்பதை புரிந்து கொண்டாள் நீலரதி. அதனால் உள்ளத்தில் எழுந்த அனுதாபத்தால் தலையை அவன் முழந்தாளிலிருந்து எடுத்தாள், நிமிர்ந்தாள், தனது இருகைகளால் அவன் முகத்தைப்பிடித்துக் கொண்டு அவனை உற்று நோக்கினாள். "வீரரே! உமது நாத்திக எண்ணங்களுக்குக் காரணம் புரிகிறது எனக்கு. ஏதோ பெரும் அல்லலில் சிக்கியிருக்கிறீர். உங்கள் ஆண்டவனிடம் உங்களுக்கு நம்பிக்கையில்லாதிருக்கலாம். எனது தாயிடம் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அவள் என்னைக் கைவிடமாட்டாள்" என்றாள், உணர்ச்சி ததும்பிய குரலில்.

அவள் பேசியபோது அவள் இதழ்கள் அசைந்த அழகை அவன் பருகினான். உணர்ச்சியால் அந்த உதடுகள் துடித்தபோது அதன் அழகின் எல்லையை அனுபவித்தான். அத்துடன் அவள் ஐஸிஸைப் பற்றி சொல்லியதும் சற்று நிமிர்ந்து உட்கார்ந்தான். தனது கன்னங்களைப் பற்றி நின்ற அவள் கைகளை தனது கைகளால் அகற்றி ''உனது ஐஸிஸ் மீது அத்தனை நம்பிக்கையா உனக்கு?'' என்று கேட்டான்.

''ஆமாம்''

''நீ அழைத்தால் வருவாளா?''

''அழைக்க அவசியமில்லை. தேவையானபோது அவளே வருவாள்.''

''இன்று வருவாளா?''

இக்கேள்விக்கு அவள் உடனடியாக பதில் சொல்லவில்லை. வானில்தவழ்ந்து கொண்டிருந்த வெண்மதியைக் கவனித்தாள். ''இன்று முழுமதி நாள். ஆகவே வரலாம்'' என்று கூறினாள்.

இளமாறனும் வான்மதியை நோக்கினான். ''வந்துவிட்டாள் நீலரதி!'' என்று சொன்னான் கடுமையான குரலில்.

நீலரதி வியப்பு ததும்பிய அழகிய விழிகளை அவன் மீது திருப்பினாள். ''வந்துவிட்டாளா! எங்கே?'' என்று வினவினாள் ஆவலுடன்.

இளமாறன் கண்களெதிரே புகாரின் அலைகடல் தெரிந்தது. ''வந்தாள் போய்விட்டாள்'' என்று சொன்னான் கனவில் பேசுபவன் போல.

''என்ன! வந்து போய்விட்டாளா? எப்பொழுது?'' என்று கேட்டாள் நீலரதி.

''நான் கடற்கரையில் உட்கார்ந்திருந்தபோது ஒரு பெரிய அலைமீது வந்தாள். உன்னைக் கைவிட்டு விடக் கூடாது என்று சொன்னாள். திரும்பி அலைமீதே போனாள்'' என்று சொன்னான் இளமாறன்.



நீலரதி நிம்மதிப் பெருமூச்சு விட்டாள். ''இப்பொழுது நம்புகிறீர்களா?'' என்றும் கேட்டாள்.

''எதை!''

''தெய்வம் உண்டு என்பதை.''

''ஏன் நம்பவேண்டும்?''

''கண்ணாலேயே தெய்வமகளைப் பார்த்தும் நம்பிக்கையில்லையா?''

''கண்ணால் பார்ப்பதையெல்லாம் நம்ப முடியாது நீலரதி! பாலைவனத்தில் கானல் நீராகத் தெரிகிறது. அது உண்மையா? கடற்கரையில் உன்னையே நினைத்து உட்கார்ந்தேன். உன்னைப்போலவே ஒருத்தி அலைமேல் தெரிந்தாள். வந்தாள், போனாள். அது என் பிரமையாயிருக்கக் கூடாது?'' என்று கேட்டான் இளமாறன்.

அவள் சொன்னாள், ''நீங்கள் நம்பினாலும் சரி, நம்பாவிட்டாலும் சரி. என்னைக் காக்க என் தாய் உங்களை நியமித்து விட்டாள். இனி எனக்குக் கவலையில்லை'' என்று. ''நேரமாகிறது'' என்றும் சுட்டிக் காட்டினாள்.

அப்பொழுதும் இளமாறன் ஏதோ யோசனையிலிருந்தான். ''ஆமாம். நேரமாகிறது. போய்ப்படுத்துக்கொள்'' என்றான்.

''நீங்கள்...?'' என்று தயங்கினாள் நீலரதி.

''எனக்கு உறக்கம் வரவில்லை'' என்று இளமாறன் சொன்னான்.

''என்னைப்பற்றி இன்னும் கவலையா?'' என்று நீலரதி கேட்டாள்.

''ஆம். வேறு யாரைப்பற்றி கவலைப்படவேண்டும்?'' என்று இளமாறன் கேட்டான்.

''என்ன பாசம்?'' என்று சொல்லி மீண்டும் பழையபடி நகைத்தாள் நீலரதி.

அந்த நகைப்பைக் கேட்ட இளமாறன் துள்ளி எழுந்து "சிரிப்பு என்ன சிரிப்பு!" என்று கடிந்து அவளை அப்படியே அள்ளித் தூக்கிக் கொண்டு உள்ளே சென்று அங்கிருந்த பாயில் உதயகுமாரனுக்குப் பக்கத்தில் தொப்பென்று போட்டான். பிறகு வேகமாக நடந்து வெளியே சென்று விட்டான். வெளிக்கதவு படாரென்று சாத்தப்படுவதை உணர்ந்தாள் நீலரதி. மெல்லப் புன்முறுவல் கொண்டாள். பக்கத்தில் இருக்க வேண்டிய உதயகுமாரனைத் திரும்பி நோக்கினாள். அங்கு அவன் இல்லை. நன்றாகப் புரண்டு அறைக் கோடிக்குப் போய் சுருண்டு படுத்திருந்தான். நீண்ட நேரச் சிந்தனை வயப்பட்டிருந்த நீலரதி மெல்ல எழுந்து வாயிலை நோக்கி நடந்து கதவைத் திறந்தாள். கதவுக்கு வெளியே வாயிற்படிக்குக் குறுக்கே இளமாறன் படுத்திருந்தான். அவன் முகத்தில் மந்தகாசம் விரவி இருந்தது. நிலவொளியில் வீரமுகமும் அழகாகத் தெரிந்தது, நீலரதியின் கண்களுக்கு. சற்று நேரம் அவன் பக்கத்திலேயே நீலரதி உட்கார்ந்திருந்தாள். இத்தனை கிளர்ச்சிக்கும் நடுவில் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தான் இளமாறன். அவன் சீரான மூச்சு அவன் ஆழ்ந்த நித்திரைக்கு அத்தாட்சியாக இருந்தது. மூச்சு விட்டதால் எழுந்து தாழ்ந்த ரோமம் மண்டிய அவன் மார்பு அவன் தேகத்தின் உரத்துக்கு சான்றாக விளங்கியது. விசாலமும் உரமும் ததும்பிய உதடும் அதற்கு மேலே இருந்த லேசான மீசையும் வீரத்தை அள்ளித் தெளித்தன. ஒருமுறை அவன் உதடுகள் அசைந்தன. நீலரதி சட்டென்று குனிந்து தனது இதழ்களால் அவன் இதழ்களை மெதுவாகத் தீண்டி மீண்டாள். பிறகு எழுந்து மெதுவாகத் திரும்பி உட்புறம் நடந்தாள். அங்கு உதயகுமாரன் ஒரு மூலையில் உட்கார்ந்து அவளைக் கண்கொத்தி பாம்புபோல் பார்த்தான். அவள் இதழ்களில் இகழ்ச்சி நகை அரும்பி நின்றது.

□ □ □

# 12. புதிய நீதிபதி

இளமாறனின் வலிய இதழ்களைத் தனது மலரிதழ்களால் மெதுவாகத் தீண்டிவிட்டு வாயிற்கதவையும் சாத்தி விட்டு உள்ளே வந்த நீலரதி, உதயகுமாரன் அறையின் கோடிமூலையொன்றில் முடங்கி உட்கார்ந்திருந்ததையும், தன்னை உற்று நோக்கிக் கொண்டிருந்ததையும், அவன் இதழ்களில் இகழ்ச்சி நகை அரும்பிக் கிடந்ததையும் காணவே செய்தாள். ஆனாலும், அவனைப்பற்றி லட்சியம் செய்யாமல் தனக்காக விரிக்கப்பட்டிருந்த பாயில் உட்கார்ந்து முழந்தாள்களைக் கட்டிக் கொண்டாள். உதயகுமாரனை ஒரு குழந்தையை நோக்குவது போல் நோக்கி "ஏன் உட்கார்ந்திருக்கிறாய்? வந்து படுத்துக்கொள்" என்று அழைத்தாள்.

அவள் படுக்க அழைத்ததும் அதுவரை அவன் இதழ்களிலிருந்த இகழ்ச்சி நகை அகன்று அந்த இடத்தை வெறுப்பின் சாயை பிடித்துக் கொண்டதால் வெறுப்பு மண்டிய குரலிலேயே பேசினான் உதயகுமாரன். "நான் படுத்துக்கொள்வதைப்பற்றி நீ கவலைப்பட வேண்டாம்" என்று.

நீலரதி அவனை நோக்கி மெல்ல நகைத்தாள். "ஏன்? இரவு முழுவதும் விழித்துக் கொண்டிருப்பதாக உத்தேசமா?" என்று வினவவும் செய்தாள் நகைப்பின் ஊடே.

"ஆம்" —இதை முரட்டுத்தனமாகச் சொன்னான் உதயகுமாரன்.

"கண் விழித்தால் உடம்பு கெட்டுவிடும்" என்றாள் நீலரதி.

"என் உடம்பைப்பற்றி நீ கவலைப்பட வேண்டாம்"—உதயகுமாரன் இதை உறுதியுடனேயே சொன்னான்.

"வேறு யார் கவலைப்படுவார்கள்?" என்று நீலரதி கேட்டாள்.

அவள் கேட்ட கேள்விக்கு உடனடியாக பதில்சொல்ல முடியாததால் ஒரு விநாடி விழித்தான் உதயகுமாரன்; பிறகு அசட்டுத்தனமாக கேள்விகளை உக்கிரமான குரலில் கேட்டான். "என்னைப்பற்றி நீயோ உன்னைப்பற்றி நானோ கவலைப்பட அவசியமில்லை. நீ யார், நான் யார்?" என்று வினவினான்.

"இரண்டும் முடியாத காரியம்!" என்றாள் நீலரதி.

"எந்த இரண்டும்?"

"உங்களைப்பற்றி நானோ, என்னைப்பற்றி நீங்களோ கவலைப்படாமலிருக்க முடியாது."

"ஏன்?"

"என்னை உங்களுக்கு மணமுடிக்கத் தீர்மானித்திருக்கிறார் அவர்...." என்று விஷமக்குரலில் சொற்களை இழுத்து வாயிற்படியையும் கண்ணால் காட்டினாள் நீலரதி.

"என் திருமணம் அவர் இஷ்டமில்லை" என்றான் உதயகுமாரன் கோபம் குரலில் ஒலிக்க.

"இங்கு எல்லாம் அவர் இஷ்டந்தான்"—இதைத் திட்டமாகச் சொன்னாள் நீலரதி.

"திருமணம் எனது சொந்த விவகாரம்."

"அதுதான் இல்லை,"

"பொறுத்துப்பார் தெரியும்."

அந்த சமயத்தில் வெளியிலிருந்து ஒலித்தது இளமாறன் குரல் "என்ன அங்கே பேச்சு? படுத்துக் கொள்ளுங்கள்" என்று.



"இவர் படுக்கப் போகிறார்" என்று பதில் குரல் கொடுத்தாள் நீலரதி.

"அவனைத் தூக்கிப் படுக்கையில் போட்டு நீயும் படுத்துக்கொள்" என்ற கட்டளை பிறந்தது வெளியிலிருந்து.

அதைக் கேட்டதும் நீலரதி உட்கார்ந்த நிலையிலிருந்து எழுந்திருக்க முயன்றதுமே உதயகுமாரன் தானே மெல்லாய்க் காற்றில் பறந்து விட்டதே அவன் சரேலென்று இரண்டாவது பாயில் ஓர் ஓரமாகப்படுத்து, போர்வையை எடுத்து தலை முதல் கால் வரையில் போர்த்தியும் கொண்டான். அதற்குமேல் அவனைத் தொந்தரவு செய்ய இஷ்டப்படாத நீலரதியும் நன்றாக தன்னுடைய பாயில் படுத்து "நிம்மதியாக உறங்குங்கள். நான் உங்களை எதுவும் செய்துவிடமாட்டேன்" என்று உறுதி கூறி கண்களையும் மூடினாள்.

கண்களை மூடியதும் உறக்கம் வராததால் அன்றைய இரவு நிகழ்ச்சிகளை எண்ணிப் பார்த்தாள். இளமாறனுக்கு தரிசனம் கொடுத்தவள் ஐலின்தேவியே என்பதில் அவளுக்கு எள்ளளவும் சந்தேகமில்லை. ஆனால் அந்தத் தோற்றத்தை வீண் பிரமை என்று இளமாறன் தீர்மானித்தாலும் ஐலினின் விஜயம் உண்மைதானென்று திட்டமாக முடிவு செய்து கொண்ட நீலரதி நாத்திகனான இளமாறனுக்கு சத்தியமும் அசத்தியமாகத் தெரிவதை நினைத்து புன்முறுவல் கொண்டாள். அந்தப் புன்முறுவல் இதழ்களில் தேங்கி நிற்க அப்படியே உறங்கியும் விட்டாள். அப்படி உறங்கியும் கூட விடியற்காலையிலேயே விழித்து கதவைத் திறந்து வெளியே நோக்கினாள். வெளியே இளமாறனைக் காணவில்லை. ஒருவேளை நீராடக் கடற்கரைக்குப் போயிருப்பாரோ என்று அங்கும் சென்று பார்த்தாள். அங்கும் அவனைக் காணவில்லை! பிறகு அவள் மட்டும் நீராடி விடுதிக்கு வந்ததும் இளமாறன் வா

வில்லை. அன்று பகல் முழுவதும் அவன் விடுதிக்குத் திரும்பவே இல்லை. அதைப்பற்றி உதயகுமாரனைக் கேட்டபோது சரியான பதிலும் கிடைக்கவில்லை. 'அவரைக் காணவில்லை' என்று உதயகுமாரனிடம் தெரிவித்தாள் நீலரதி.

''ஆம்'' -அலட்சியமாக வந்தது பதில்.

''எங்கு போயிருப்பார்?'' -கவலையுடன் கேட்டாள் நீலரதி.

''யாருக்குத் தெரியும்?'' -அலட்சியமாக வந்தது உதயகுமாரன் பதில்.

''அவரைத் தேட வேண்டாமா?''

''எதற்குத் தேடவேண்டும்? அவரென்ன குழந்தையா காணாமற் போய்விட...''

''வாளும் அதோ இருக்கிறது. நிராயுதபாணியாய்ப் போயிருக்கிறார்.''

''அதனால் என்ன?''

''யாராவது போரிட வந்தால்?''

''இந்தப் புகாரைச்சேர்ந்தவன் யாரும் வரமாட்டான். வெளிநாட்டவர், விஷயம் புரியாதவர், யாராவது வலுச் சண்டைக்கு வந்தால் அவரை வம்புக்கு இழுப்பவன் உயிருடன் திரும்புவது கஷ்டம்'' என்று விளக்கிய உதயகுமாரன் ''சரி சரி. நான் உணவு சித்தம் செய்கிறேன். நீங்கள் சாப்பிடுங்கள்''என்று கூறி அடுப்பை மூட்டினான்.

''நீங்கள் சும்மா இருங்கள்'' என்று கூறிய நீலரதி அடுப்பைத் தானே கவனிக்கலானாள். இளமாறனுக்கு திருப்தியாயிருக்கும்படியாக உணவு சித்தம் செய்தாள்.

ஆனால் உணவு வேளைக்கும் இளமாறன் வரவில்லை. நீலரதிக்குக் கவலை அதிகமாயிற்று. மாலை விசாரணைக்குத் தன்னை யார் அழைத்துப் போவார்கள் என்று



சிந்திக்கத் தொடங்கினாள். உதயகுமாரனிடமும் அதைப் பற்றி வினவினாள். தனக்கு ஏதும் தெரியாதென்று கூறி விட்டான் உதயகுமாரன். சரியாக மாலை வேளையில் சந்திரவன் மலைவாயிலில் விழுவதற்கு முன் வாணகிரி மலைச்சரிவில் ஏறிவந்தான் இளமாறன். ''சென்ற இடத்தில் சிறிது நேரமாகி விட்டது'' என்று நீலரதிக்கு சமாதானம் சொன்னானே தவிர சென்ற இடத்தைப்பற்றியோ அலுவலைப் பற்றியோ ஏதும் சொல்லவில்லை. ''விசாரணைக்கு நேரமாகிறது நீலரதி! புறப்பட சித்தம் செய்து கொள். உதயகுமாரா! நீயும் வாளை எடுத்து கச்சையில் கட்டிக்கொள்'' என்று உத்தரவிட்டான். தானும் தனது நீண்ட வாளை கச்சையில் கட்டிக்கொண்டு குறுவாள் ஒன்றையும் கச்சையில் செருகிக் கொண்டான். ''நீலரதி! இந்தா உனது கவசம்'' என்று கூறி தனது கச்சையின் உட்புறத்தில் செருகிக் கொண்டிருந்த மெல்லிய கத்தியை எடுத்து அவளிடம் கொடுக்க அவள் அதை, தனது இடைப் பகுதியில் ஆடையில் மறைத்துக் கொண்டாள்.

சரியாக சூரியன் அஸ்தமித்ததும் நீலரதியும் உதயகுமாரனும் பின்தொடர புத்ததத்தரின் மடத்தை நோக்கிக் கிளம்பிய இளமாறன் வழிநெடுக எதுவுமே பேசவில்லை. தீவிர சிந்தனை வசப்பட்டே முன்னால் நடந்து சென்றான். இளமாறன் முன்னும், நீலரதி அடுத்தும், உதயகுமாரன் கோடியிலும் வர நடந்து புத்ததத்தரின் மடத்துக்கு மூவரும் வந்தபோது விசாரணை மண்டபத்தில் கூட்டம் நின்றது. மடத்துத் துறவிகள், காவலர் இவர்களைத் தவிர ஊர் ஜனங்களும் வந்திருந்தார்கள், விசாரணையை வேடிக்கை பார்க்க. அன்று பகல் புகார் நகரின் சில பகுதிகளுக்குச் சென்றிருந்த இளமாறன் எங்கும் நீலரதியின் விசாரணையைப் பற்றிய பேச்சு அதிகமாயிருந்தபடியால் மக்கள் கூட்டமும் அங்கு வந்திருப்பதை ஒரு புதுமையாகக் கருதவில்லை.

அந்த மூவரையும் விசாரணை மண்டபத்தின் பெரு வாயிலிலேயே எதிர்கொண்ட இரு துறவிகள் அவர்களை

உள்ளே அழைத்துச் சென்று நீதிபதிக்கு முன்பு இருந்த ஆசனங்களில் உட்கார வைத்தார்கள். அதுவரை அரவம் ஏதுமில்லாதிருந்த அந்த மண்டபத்தில் அவர்கள் நுழைந்ததுமே சலசலவென்ற பேச்சு ஏற்பட்டது. நீதிபதியின் வருகை அறிவிக்கப்பட்டதும் சட்டென்று கூட்டத்தில் மௌனம் நிலவியது.

அந்த மௌனத்தை நம்பவில்லை இளமாறன். அந்தக் கூட்டத்திலிருந்த அனைவர் மனமும் நீலரதியின் தண்டனையை எதிர்பார்க்கிறதென்பதை அவர்கள் பார்வையிலிருந்தே புரிந்து கொண்ட இளமாறன் நீலரதியைத் திரும்பி நோக்கி அவள் கையை லேசாக அழுத்தினான் அவளுக்குத் துணிவை அளிக்க. ஆனால் நீலரதி அச்சம் சிறிதுமின்றி தலை நிமிர்ந்தே உட்கார்ந்திருந்தாள்.

அப்பொழுது கட்டியக்காரன் எழுந்து கையிலிருந்த தண்டத்தை மும்முறை நிலத்தில் தட்டி ''நீதிபதி வருகிறார்! நீதிபதி வருகிறார்!'' என்று குரல் எழுப்பியதும் நிசப்தம் குடி கொண்டது விசாரணை மண்டபத்தில். ஆனால் நீதிபதியைக் கண்டதும் இளமாறன் புருவங்கள் லேசாகக் குறுகின. கண்களிலும் இரும்பைப் போன்ற கடினமான பார்வை ஒளிவிட்டது. நீதிபதியின் இடத்தில் அந்த புத்ததத்தர் வந்து அமரவில்லை. அவருக்கு பதில் சாந்தானந்தரே அமர்ந்ததும் மண்டபத்தில் பெரும் சலசலப்பு ஏற்பட்டது.

சாந்தானந்தர் நீதி பீடத்தில் அமர்ந்து தமது இரு கைகளையும் உயரத் தூக்கி ''புகார் மக்களே! அமைதியாயிருங்கள். விசாரணை தொடங்கப் போகிறது'' என்று அறிவித்தார்.

''புத்ததத்தர் எங்கே? புத்ததத்தர் எங்கே?'' என்ற குரல்கள் நாலா பக்கத்திலிருந்தும் எழுந்தன.

''வேறு அலுவலைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். சீக்கிரம் வருவார்'' என்று மீண்டும் அறிவித்த சாந்தா



னந்தர் ''அவர் உத்தரவுப்படிதான் விசாரணையை நான் நடத்தப் போகிறேன்'' என்றார். ''விசாரணை முடிவதற்குள் புத்ததத்தர் வந்துவிடுவார்'' என்று உறுதியும் கூறினார்.

அதனால் சபையில் சிறிது அமைதி நிலவியதும் சாந்தானந்தர் விசாரணையை நடத்தத் தொடங்கி புத்த பிரான் அருளை முதலில் வேண்ட, கண்களை மூடி தியானத்தில் இறங்கினார். பிறகு பக்கத்திலிருந்த கட்டியக்காரனைக் குனியச் சொல்லி குசு குசுவென்று ஏதோ சொன்னார்.

கட்டியக்காரன் மீண்டும் தடியைத்தட்டி ''குற்றவாளி நீலரதி மேடைக்கு இந்தப்புறம் வரட்டும்'' என்று இரைந்து கூறி நீலரதியை நோக்கி கையிலிருந்த தடியையும் நீட்டினான்.

நீலரதி எழுந்திருக்க முயன்றபோது இளமாறன் கை அவள் கையைப் பிடித்து அழுத்தி உட்கார வைத்தது. எழுந்தவன் மீண்டும் உட்கார்ந்ததும் சாந்தானந்தரே நீலரதியை நோக்கி ''இந்த விசாரணை மண்டபம் புத்த பிரான் எண்ணப்படி நடக்கிறது. இங்கு யாரும் எந்த அநீதியையும் விளைவிக்க முடியாது. ஆகையால் பெண்ணே வா. வந்து இப்படி நில்'' என்று குற்றவாளிகள் நிற்க வேண்டிய இடத்தைக் காட்டினார்.

அப்பொழுது அவளை எழுந்திருக்கவிடாத இளமாறன் அவளுக்குப் பதில் தானே எழுந்தான். சில நிமிடங்கள் கம்பீரமாக நின்று கூட்டத்தை ஒருமுறை தனது கண்களால் சுற்றி நோக்கி அளவெடுத்தான். பிறகு சாந்தானந்தர் மீது தனது கண்களை நாட்டி ''சாந்தானந்தரே! இந்த வழக்கை நீர் விசாரிக்க முடியாது'' என்று கூறினான் நிதானமான குரலில். ஆனால் சபை முழுவதும் கேட்கக் கூடிய குரலில்.

சாந்தானந்தர் அவன் எதிர்ப்பைக் கண்டு அஞ்சவில்லை. "விசாரணையை நான் நடத்த புத்ததத்தர் உத்தரவிருக்கிறது" என்றார் அலட்சியமாக.

இளமாறன் கண்கள் அவரை விட்டு அகலவில்லை. "உங்களை இந்த வழக்குக்கு நீதிபதியாக நியமிக்க புத்ததத்தருக்குக்கூட அதிகாரமில்லை" என்றான் திட்டமாக. பிறகு கூட்டத்தை நோக்கித் திரும்பி "இந்தப் பெண்ணின் மீது குற்றம் சாட்டியிருப்பவரே சாந்தானந்தர்தான். நேற்று அவளைத் துரத்தி வந்ததும் இவர்தான். புத்ததத்தர் நேற்று இந்தப் பெண்ணை என் வசத்தில் ஒப்படைத்தபோது அதை எதிர்த்தவரும் இவர்தான். குற்றம் சாட்டப்பட்டிருப்பவரை வெட்டுப் பாறைக்கு உடனடியாக அனுப்பும்படி நேற்று இதே மண்டபத்தில் கேட்டவரும் இந்த சாந்தானந்தர்தான். இவரிடம் இந்தப் பெண்ணுக்கு நீதி கிடைக்குமா? நீதிக்குப் பெயர் போன புகாரில் அநீதி நடந்தால் புகாரின் நற்பெயருக்கு எத்தனை பாதகம்?" என்று மிக நிதானமாகப் பேசினான் இளமாறன். பேசியதும் மக்களைச் சுற்றியும் பார்த்தான்.

மக்கள் புரிந்துகொண்டார்கள். "சாந்தானந்தர் வேண்டாம்; புத்ததத்தரை அழையுங்கள்" என்று மக்கள் கூவினார்கள்.

"புத்ததத்தரை நாமே அழைத்து வருவோம். என்னுடன் பத்துபேர் வாருங்கள்" என்று கூறிய இளமாறன் மக்களில் சிலர் தொடர்ந்து வர மடத்தின் உட்பகுதிக்குச் சென்றான். அங்கிருந்த மடத்துத் தலைவரின் அறை பூட்டப்பட்டிருந்தது. அதன் பூட்டைக் குறுவாளால் தெம்பி எடுத்த இளமாறன் உள்ளிருந்த நிலை கண்டு அதிர்ச்சியடைந்தான். உள்ளே புத்ததத்தர் மூர்ச்சையாகி சுரணையற்றுக் கிடந்தார்.

□ □ □

# 13. நீதியின் மாற்றம்! வந்தவன் ஏற்றம்!!

அறைக்குள் தரையில் புத்ததத்தர் சுரணையற்றுக் கிடந்ததைக் கண்டதும் இளமாறனுக்குப் பின்னால் வந்த புகார்வாசிகள் பதின்மரும் அதிர்ச்சியடைந்தாலும் இளமாறன் மட்டும் அத்தகைய ஒரு நிலையை முன்பே எதிர்பார்த்தவன் போல் உள்ளே நுழைந்து புத்ததத்தர் பக்கத்தில் மண்டியிட்டு உட்கார்ந்து குப்புறக்கிடந்த அவர் உடலை லேசாகப் புரட்டி அவர் முகத்தை நோக்கினான். அவர் கண்கள் நன்றாக மூடிக்கிடந்தாலும் சுவாசம்கூட மிக மெதுவாகவே வந்து கொண்டிருந்தாலும், அவர் தலையிலோ பொட்டிலோ காயம் எதுவும் இல்லாததாலும், அவருக்கு ஏதோ மயக்க மருந்து புகட்டப்பட்டிருப்பதைப் புரிந்துகொண்ட இளமாறன், அவர் கண் இரப்பைகளை சிறிது விரித்து கண்களை நோக்கினான். பிறகு பின்னால் நின்றவர்களை நோக்கி "புத்ததத்தருக்கு யாரோ மயக்க மருந்தைக் கொடுத்திருக்கிறார்கள். மடத்து மருத்துவரை அழைத்து வாருங்கள்" என்று கூற அந்தப் பணியை நிறைவேற்ற இருவர் பறந்தனர். அதே சமயத்தில் அந்த அறையின் சாளரத்துக் கட்டையில் புத்ததத்தரின் முகத்தையும் கண்களையும் துடைத்துவிட்ட இளமாறன், பிறகு அங்கிருந்த பனை ஓலை விசிறி ஒன்றையும் எடுத்து விசிறினான். ஆனால் இத்தனை பணிவிடைக்கும் புத்ததத்தர் அசைந்து கொடுக்காமல் கிடக்கவே மடத்து மருத்துவர் வரவை எதிர்பார்த்திருந்தான்.

மருத்துவர் வந்து புத்ததத்தர் அருகில் உட்கார்ந்து அவர் நாடியை நீண்ட நேரம் பரிசோதித்தார். பிறகு

இளமாறன் செய்ததுபோல் கண்களையும் விரித்துப் பரீட்சை செய்தார். கடைசியாக இளமாறனைத் திரும்பி நோக்கி "இவரது உயிருக்கொன்றும் பயமில்லை. மயக்க மருந்து சற்று அதிகமாகப் புகட்டப்பட்டிருக்கிறது. இன்னும் இரண்டு நாழிகைகளில் இவர் சுயஉணர்வு பெறலாம். அதுவரை இவரை மிகுந்த ஜாக்கிரதையாக யாராவது பார்க்க வேண்டும்" என்று கூறினார்.

இளமாறன் மருத்துவர் மீது தனது கண்களை நாட்டினான். "மருத்துவரே! இவரைப் பாதுகாப்பது கஷ்டமல்ல. ஆனால் ஒன்று சொல்லுங்கள். இந்த மயக்க மருந்தை இவராகவே அருந்தியிருப்பாரா அல்லது வேறு யாராவது புகட்டியிருப்பார்களா?" என்று வினவவும் செய்தான்.

தன் இதயத்தையே ஊடுருவி விடுவது போலிருந்த இளமாறனின் கூரிய பார்வையைக் கண்டும் அச்சப்படாத மருத்துவர் "விஷம் சாப்பிட்டு இறப்பவர்கள் உண்டு. மயக்க மருந்தை யாரும் தாமாக சாப்பிடமாட்டார்கள். இதை யாரோ தந்திரமாக இவருக்குக் கொடுத்திருக்கிறார்கள்" என்று திட்டமாகச் சொன்னார். "நான் சொன்னதற்கு இவர் நாடியே சாட்சி. நாடியில் அதிர்ச்சித் துடிப்பு பலமாக இருக்கிறது. மயக்க மருந்தென்று தெரியாமல் அருந்திய பின்புதான் இவருக்கு தான் அருந்தியது மருந்தென்று தெரிந்திருக்க வேண்டும்" என்றும் விளக்கினார்.

"சரி மருத்துவரே! புத்ததத்தருக்குத் தீங்கிழைக்க முயன்றவர் யாராயிருந்தாலும் அவர் தப்ப முடியாது. தாங்கள் சிறிது நேரம் புத்ததத்தருடன் இருங்கள். நான் இவரைப் பார்த்துக்கொள்ள துணை அழைத்து வருகிறேன்" என்று கூறிவிட்டு அந்த அறையை விட்டு வெளியே வந்தான். வெளியே நின்றிருந்தவர்களில் நாலு பேரை மட்டும் உடனழைத்துக்கொண்டு நீதிமண்டபத்தை வேகமாக அடைந்தான்.



அவன் மண்டபத்தில் நுழைந்ததும் மக்கள் கூச்சல் அதிகமாயிற்று. "எங்கே புத்ததத்தர்?" என்று குரல்கள் எழுந்தன.

இளமாறன் தனது கண்களை மண்டபத்தைச் சுற்றிச் சுழலவிட்டான். "புத்ததத்தர் மண்டபத்துக்கு வரும் நிலையில் இல்லை" என்று நிதானமான குரலில் அறிவித்தான்.

இதைக் கேட்டதும் சட்டென்று பயங்கர அமைதி நிலவியது மண்டபத்தில். "ஏன்? என்ன நிலையில் இருக்கிறார்?" என்று அந்த அமைதியை கூட்டத்தின் கோடியிலிருந்து கிளம்பிய ஒரு தனிக்குரல் ஊடுருவியது.

"மயக்கத்திலிருக்கிறார்; அவருடன் மருத்துவர் இருக்கிறார்" என்று இரும்புச் சலாகை இன்னோர் இரும்பின் மீது தட்டப்படும்போது ஏற்படும் ஒலியில் பேசினான் இளமாறன். தொடர்ந்து சொன்னான்: "இங்கிருந்து நான் சென்றபோது அவர் அறை வெளியில் பூட்டப்பட்டிருந்தது. அதை உடைத்தேன். உள்ளே தரையில் மயக்கமாக குப்புற விழுந்துகிடந்தார் புத்ததத்தர். மருத்துவரை வரவழைத்துப் பார்க்கச் சொல்லியிருக்கிறேன்..." என்று அவன் சொல்லிக் கொண்டிருக்கையிலேயே சாந்தானந்தர் நீதிபதி ஸ்தானத்திலிருந்து எழுந்திருக்கத் தொடங்கினார். அதை தனது கண்ணின் கோடியாலேயே கவனித்துவிட்ட இளமாறன் "சாந்தானந்தரே! அந்த இடத்தைவிட்டு எழுந்திருக்க வேண்டாம். நீதி ஸ்தானத்தைவிட்டு, அந்த மேடையைவிட்டு நீர் இறங்கினாலும் சிறைசெய்யப்படுவீர்" என்றான் நிதானமான குரலில். அந்த நிதானக் குரலிலும் ஒரு பயங்கர எச்சரிக்கை ஊடுருவி நின்றது.

"இளமாறா! என்னை யாரும் தடைசெய்ய முடியாது. அரசர் உத்தரவின்றி என்னை சிறை செய்யவும் முடியாது. புத்ததத்தரை நான் உடனடியாகப் பார்க்க வேண்டும்"

என்ற சாந்தானந்தர் இளமாறன் உத்தரவையும் மீறி எழுந்தார்.

இரண்டு எட்டில் நீதிபதி மேடையை அடைந்த இளமாறன் அவரை, தனது இருகைகளாலும் உயரத் தூக்கி மக்களை நோக்கி "புகார் மக்களே! இந்த சாந்தானந்தர் சற்று முன்புதான் புத்ததத்தர் இந்த விசாரணையை நடத்த, தம்மை நியமித்ததாக அறிவித்தார். அது பச்சைப் பொய் என்பதை நான் சொல்லத் தேவையில்லை. புத்ததத்தரை இவர் கொல்ல முயன்றிருக்கிறார். இவர் நினைத்தபடி மயக்க மருந்து வேலை செய்யவில்லை..." என்று சொல்லிக்கொண்டே போகையில் "சுத்தப் புரட்டு, இவனை நம்பாதீர்கள். என் குருநாதரை நானே கொல்ல முயலுவேனா? மக்களே! இவன் சொல்வதை நம்பாதீர்கள். காவலாளிகளே! இவனைச் சிறை செய்யுங்கள். அந்தக் கொலைகாரியையும் பிடித்துக் கட்டுங்கள்" என்று இளமாறன் தலைக்கு மேலிருந்தே கூவினார்.

அவர் உதவிக்கு யாரும் வரவில்லை. மடத்துக் காவலர்கூட இருந்த இடத்தைவிட்டு அகலவில்லை. அதைக்கண்ட இளமாறன் பெரிதாக நகைத்தான். "தலைமைப் பதவியை அடையப் பல மடங்களில் கொலைகள் நடந்திருக்கின்றன. அந்தப் பதவி ஆசை இவரை ஏன் தூண்டியிருக்கக் கூடாது? எதற்கும் புத்ததத்தர் மயக்கம் தெளிந்த பின்புதான் விசாரணை நடக்க முடியும். அதாவது இரண்டு விசாரணைகள். முதல் விசாரணை சாந்தானந்தர் கொலை முயற்சியைப்பற்றி. இரண்டாவது நீலரதி கொலை செய்ததாக கொண்டுவரப் பட்டிருக்கும் வழக்கு. இரண்டும் சேர்ந்தே நடக்கும். யாரும் நீதிமண்டபத்தை விட்டுப் போக வேண்டாம். இங்கேயே இருங்கள்" என்று கூறிவிட்டு சாந்தானந்தரைக் கீழே இறக்கி இரண்டு காவலரிடை ஒப்படைத்தான். பிறகு உதயகுமாரனையும், நீலரதியையும் அழைத்துக் கொண்டு புத்ததத்தர் அறைக்குச் சென்றான்.



அங்கு புத்ததத்தர் அறைக் கட்டிலின்மீது கண்களை மூடிப் படுத்திருந்தார். மருத்துவர் அவர் பக்கத்திலேயே நாடியைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார். வெளியே நின்ற புகார் மக்கள் கவலையுடன் உள்ளே மடத்துத் தலைவர் நிலையைக் கவனித்துக் கொண்டிருந்தனர். உதயகுமாரனுடனும் நீலரதியுடனும் உள்ளே நுழைந்த இளமாறன் "மருத்துவரே! இந்தப் பெண் குருநாதரைக் கவனித்துக் கொள்வாள். நீங்கள் சொல்லும் மருத்துவம் எதையும் அப்படியே நிறைவேற்றுவாள். இவள் புத்ததத்தரின் சகோதரியின் மகள். ஆகையால் அவர் பிழைப்பதில் இவளுக்கு அக்கறையும் உண்டு" என்றான்.

மருத்துவர் கட்டிலின் முகப்பிலிருந்து தாம் எழுந்திருந்து அங்கு நீலரதியை உட்காரப் பணித்தார். பிறகு கையிலிருந்த சிறு கல்குப்பியை அவளிடம் கொடுத்து "அவர் சிறிது கண்ணைத் திறந்ததும் இதிலிருந்து இரண்டு சொட்டு மருந்தை அவர் வாயில் புகட்டு. அடுத்த சில விநாடிகளில் இவர் முழு சுரணையையும் அடைவார். ஆனால் நாளைக் காலை வரை இவர் நடக்கவேண்டாம்" என்று கூறினார்.

"இவரைத் தூக்கிக்கொண்டு போகலாமா?" என்று கேட்டான் இளமாறன்.

"எதற்குத் தூக்கிக்கொண்டு போக வேண்டும்?" என்று வியப்புடன் வினவினார் மருத்துவர்.

"இன்று இரண்டு வழக்குகளை இவர் விசாரிக்க வேண்டும்" என்றான் இளமாறன்.

"அதற்குத் தடையில்லை. தூக்கிச் செல்லலாம். உட்கார்ந்த நிலையில் வழக்கையும் விசாரிக்கலாம். ஆனால் நாளைக் காலை வரையில் நடக்க மட்டும் கூடாது. நாளைக் காலையில் வருகிறேன்" என்று கூறி இளமாறனிடம் விடை பெற்றுச் சென்றார் மருத்துவர்.

புத்தகத்தரை கவனித்துக்கொள்ள நீலரதியையும் உதயகுமாரனையும் உள்ளே இருக்கச் சொல்லி "உதயகுமாரா! குருநாதர் விழித்துக் கொண்டதும் எனக்குக் குரல் கொடு, வெளியில் இருக்கிறேன்" என்று கூறிவிட்டு கதவைச் சாத்திக் கொண்டு வெளியே சென்றான்.

அங்கே வெளியே காத்திருந்த மக்களுக்கு "பயமொன்றுமில்லை. நீங்கள் விசாரணை மண்டபத்திலிருங்கள். இன்னும் இரண்டு நாழிகையில் குருநாதரை மண்டபத்துக்கு கொண்டு வருகிறேன். இன்று விசாரணை எப்படியும் நடக்கும்" என்று உறுதி கூறி அவர்களை அனுப்பினான்.

ஆபத்து காலங்களில் நிதானமாக ஓடுவது நேரத்தின் இயல்பு. அது எப்படி ஓடினாலும் நிதானமாக நேரம் நகருவதாக நினைக்கும் பிரமை மனிதனுக்கு உண்டு. ஆகவே இரண்டு நாழிகை ஓட்டமும் இரண்டு யுகமாகத் தெரிந்தபடியால் அறைக்கு வெளியே காவல் செய்பவனைப்போல் அங்குமிங்குமாக நடமாடிக் கொண்டிருந்தான் இளமாரன். மருத்துவர் சொன்னபடி சரியாக இரண்டு நாழிகை கழித்ததும் கண் விழித்தார் புத்தகத்தர். உடனே கையிலிருந்த குப்பியிலிருந்து இரண்டு துளி மருந்துகளை அவர் வாயில் புகட்டிய நீலரதிமீது கண்களை நாட்டிய புத்தகத்தர் "யார்? நீலரதியா? இங்கென்ன செய்கிறாய் நீ?" என்று வினவினார்.

உதயகுமாரன் அவர் அருகில் வந்து "நீங்கள் மயக்கமாகக் கிடந்தீர்கள். உங்களுக்கு மருந்து புகட்டவும் பணிவிடை செய்யவும் நீலரதியை மருத்துவர் நியமித்தார்" என்று கூறியதன்றி கதவையும் திறந்து குருநாதர் விழித்துக் கொண்ட செய்தியை இளமாரனுக்கும் அறிவிக்கவே இளமாரனும் உள்ளே வந்தான்.

அப்பொழுது புத்தகத்தர் எழுந்து உட்கார்ந்து கொண்டிருந்தார் கட்டிலில். மருத்துவரின் மருத்துவத்



துளிகள் மிகத் துரிதமாக வேலை செய்திருக்க வேண்டும்.. ஆகவே சிறிது தெம்புடனேயே பேசியதன்றி இளமாரனையும் நோக்கி கண்களினாலேயே வினா எழுப்பினார், புத்தகத்தர். இளமாரன் அந்த மாலை நிகழ்ச்சிகளை அப்படியே எடுத்துரைக்க, புத்தகத்தர் முகத்தில் எந்தவித உணர்ச்சியையும் காட்டவில்லை. "அப்படியானால் விசாரணை மண்டபம் போவோம். மக்களைக் காக்க வைக்கக் கூடாது" என்று கூற, அவரைத் தனது இரு கைகளிலும் தூக்கிக் கொண்டான் இளமாரன்.

"இது அவசியமா?" என்று ஆட்சேபித்தார் குருநாதர்.

"மருத்துவர் உத்தரவு" என்ற இளமாரன், அவரைக் கைகளில் ஏந்திய வண்ணம் நீதி மண்டபத்துக்குச் சென்றான். உதயகுமாரனும் நீலரதியும் அவனைத் தொடர்ந்தனர். மண்டபத்துக்குள் புத்தகத்தர் வந்ததும் மக்கள் மகிழ்ச்சிக்குரல் நாலாபக்கத்திலும் கிளம்பியது. "புத்தகத்தர் வாழ்க!" என்ற வாழ்த்தொலிகள் மண்டபக் கூரையைப் பிளந்தன.

இளமாரனால் மிக மெதுவாக நீதிபதி ஆசனத்தில் அமர்த்தப்பட்ட புத்தகத்தர், பின்னாலிருந்த மான்தோல் ஆசனத்தில் மெதுவாகச் சாய்ந்து கொண்டு இரு கைகளையும் மக்களை நோக்கிக் கூப்பினார். அதையொட்டி பலமான கரகோஷம் ஏற்பட்டது. அதை அடக்க புத்தகத்தர் தமது வலக் கையைத் தூக்கியதும் நிசப்தம் குடிகொண்டது மண்டபத்தில்.

மண்டபம் முழுவதையும் ஒரு முறை தமது கண்ணால் நோட்டம் விட்ட புத்தகத்தர் குற்றவாளிகள் இருக்க வேண்டிய இடத்தில் சாந்தானத்தரும் நின்று கொண்டிருப்பதைப் பார்த்து "அங்கு ஏன் நிற்கிறீர்?" என்று வினவினார்.

அந்த வினாவிலிருந்து புத்ததத்தர் போக்கு அடியோடு மாறிவிட்டது. "சாந்தானந்தரே! இன்றைய விசாரணையை உம்மை நடத்தச் சொன்னேனே, ஏன் நடத்தவில்லை?" என்று வினவினார் புத்ததத்தர். இதைக் கேட்டதும் நீதிமண்டபமே அதிர்ச்சியடைந்தது.

சாந்தானந்தர் முகம் பேயறைந்தது போலிருந்தது. அவர் திருடன் போல் விழித்தார். "உம் உம்" என்று ஏதோ பேசமுயன்றார். பேச்சு வரவில்லை.

புத்ததத்தர் மீண்டும் கேட்டார் "சாந்தானந்தரே! எனக்கு சிறிது மயக்கமாயிருந்ததால் தானே உம்மை விசாரணையை நடத்தச் சொன்னேன். ஏன் உத்தரவுப்படி நடக்கவில்லை?" என்று.

இந்தக் கேள்வி கூட்டத்தில் பேரதிர்ச்சியை விளைவித்து விடவே, புத்ததத்தரை இதே நிலையில் நீடிக்க விட்டால் விசாரணை அடியோடு திசை திரும்பும் என்று தீர்மானித்த இளமாரன் "புத்ததத்தரே! உமக்கு மயக்கமாயிருந்ததென்று அறிவித்தீரே. அந்த மயக்கத்துக்கு யார் காரணம்?" என்று கேள்வி எழுப்பினான்.

"நானேதான்" -புத்தத்தர் குரல் திடமாக இருந்தது.

"ஏன் மயக்கம் வந்தது?" -இளமாரன் கேள்வி மீண்டும் நிதானத்துடனேயே ஒலித்தது.

"தூக்கத்துக்காக பாலில் சிறிது மருந்து கலந்து அருந்தினேன். சற்று அதிகமான மருந்தைப் பாலில் கலந்திருக்க வேண்டும்" என்று சமாதானம் சொன்ன புத்ததத்தர் "சாந்தானந்தரே! இப்படி வாரும். விசாரணையை நீரே நடத்தும். நான் பக்கத்திலிருக்கிறேன்" என்று கடைசியாக ஓர் அதிர்வெடியை எடுத்து வீசினார்.

மண்டபத்திலிருந்த கூட்டம் அதிர்ச்சியடைந்தது. ஆனால் இளமாரன் கண்களில் மட்டும் விஷமம் கலந்த



சிரிப்பின் சாயை படர்ந்து கிடந்தது. அந்தச்சாயை சொற்களிலும் படிய "புத்ததத்தரே! மற்றதெல்லாம் சரி. உமது அறை வெளியே பூட்டப்பட்டிருந்ததே. அதையும் உள்ளிருந்த நீரே பூட்டினீரா?" என்று வினவினான்.

தான் இக்கட்டில் மாட்டிக் கொண்டதை உணர்ந்த புத்ததத்தர் "நீதிபதியை விசாரிக்க யாருக்கும் அதிகாரமில்லை" என்று உஷ்ணத்துடன் பேசினார்.

"நீதி அநீதியாக மாறும்போது விசாரிக்க மக்களுக்கு அதிகாரம் உண்டு" என்ற இளமாரன் "இந்த வழக்கை ஒன்றுகூடி புகார் மக்களில் பத்துப்பேர் விசாரிப்பார்கள். அல்லது அரசரே விசாரிப்பார்" என்று மண்டபமே அதிரும் படியாகக் கூவினான்.

"அது நியாயம்" என்று மண்டபத்தின் கோடியிலிருந்து முன்பு ஒலித்த அதே குரல் ஒலித்தது. அந்தக் குரலுக்கு உடையவன் கூட்டத்தை விலக்கிக்கொண்டு நீதிபீடத்தை நோக்கி நடந்தான். அவனை அங்கு முற்றும் எதிர்பாராத மக்கள் மட்டுமின்றி மண்டபத் துறவிகள் அனைவருமே பிரமிப்படைந்து நின்றார்கள். ஊசி விழுந்தாலும் ஒலி எழுப்பக்கூடிய அந்த அமைதியின் ஊடே அந்த மனிதன் கம்பீரமாக நடந்தான். வந்தவன் ஏற்றத்தை முன்னிட்டு கூட்டம் விலகி அவனுக்கு வழி விட்டு நின்றது. அவனைக் கண்ட புத்ததத்தரும் சாந்தானந்தருங்கூட விவரிக்க இயலாத அதிர்ச்சிக்கு இலக்கானார்கள்.

□ □ □

# 14. அச்சுதவிக்கண்டன்

நீதி விசாரணை விஷயத்தில் புத்ததத்தர் கதையை அடியோடு மாற்றிவிட்டதையும், அத்தனை பழியையும் தன்மீதே போட்டுக் கொண்டு சாந்தானந்தரை உத்தம துறவிபோல் வர்ணித்து இக்கட்டான நிலையிலிருந்து அவரைக் காப்பாற்றி விட்டதையும் கவனித்த இளமாறன், ஒன்று இந்த வழக்கைப் புகார் மக்கள் விசாரிப்பார்கள், அல்லது அரசரே விசாரிப்பாரென்று கூவியதும் அந்தக் கூவலை அடுத்து "அது நியாயம்" என்று சொல்லிக் கொண்டு மண்டபத்தின் கோடியிலிருந்து ஒரு மனிதன் கிளம்பியதும், மண்டபத்தில் பயங்கர அமைதியே நிலவலாயிற்று. வந்த மனிதன் களப்பிர மன்னனான அச்சுதவிக்கண்டன் என்றழைக்கப்பட்ட அச்சுத விக்கிராந்தனே என்பதை உணர்ந்ததால் மக்கள் மட்டுமின்றி மண்டபத்திலிருந்த துறவிகளும் காவலருங்கூட பிரமை பிடித்து நின்றார்கள். அவனை அடியோடு அந்த இடத்தில், அந்த சமயத்தில் எதிர்பாராத புத்ததத்தரும் அதிர்ச்சியினால் ஏற்பட்ட இளைப்பால் தமது ஆசனத்தில் லேசாகச் சாய்ந்து கொண்டார்.

சேர, சோழ, பாண்டியர் மூவரையும் சிறையிலடைத்தவனும், தமிழகத்தையே நடுங்க வைத்தவனுமான அச்சுத விக்கிராந்தன் மண்டபத்தின் கோடியிலிருந்து இரண்டடி எடுத்து வைத்ததுமே அவனை யாரென்று புரிந்து கொண்டதால் வீரர்கள் தங்கள் வாட்களை உறைகளில் போட்டு தலை வணங்கி நின்றார்கள். மண்டபத்தில் நிரம்பி நின்ற மக்கள் அனைவருமே தலை வணங்கியதன்றி துறவிகளில் சிலருங்கூட சிரந்தாழ்த்தி மன்னனை வரவேற்றார்கள்.

மிகவும் கொடியவனென்றும், பயங்கரமான தண்டனைகளை விதிப்பதில் இணையற்றவனென்றும் பெயர்



3051
450552

பெற்றிருந்த அச்சுதவிக்கண்டன், பெயர்ப் பிரசித்திக்கு முற்றும் மாறான தோற்றமுடையவனாயிருந்தான். சுமார் ஆறடிக்கும் மேல் உயர்ந்து மெல்லிய சரீரத்துடனும் நீண்ட கைகளுடனும், கறுத்து நன்றாக வளர்ந்தாலும் திட்டமாகக் கத்தரிக்கப்பட்டிருந்த மீசையுடனும் அழகாகவே காட்சியளித்தான். அவன் நெற்றி விசாலமாயிருந்தாலும் குட்டையாகத் தோற்றமளித்த தலைக் குழல்கள் அதன் பாதியை மறைத்து விட்டதாலும், கண்களிலும் ஒருவித சிரிப்பு விளையாடியதாலும், நீண்ட கூர்மையான நாசி முகத்தின் அழகுக்கு ஒரு கம்பீரத்தை இணைத்ததாலும் பிறவி மன்னனாகவே காணப்பட்டான், களப்பிர அரசன். அவன் உடை சிறிதும் படாடோபமின்றி காணப்பட்டாலும் அவன் கழுத்தில் ஒற்றை மாணிக்கக் கல்லுடன் ஆடிய தங்க ஆரம் அது விலைமிக்கதென்பதை வலியுறுத்தியது. அவன் எந்தவிதமான ஆயுதத்தையும் அணியவில்லையாயினும் அவனை நெருங்குவதோ அவனிடம் வம்பு வைத்துக் கொள்வதோ அத்தனை சரியல்லவென்பதை அவன் தோரணையே நிரூபித்தது.

அச்சுதவிக்கண்டன் மண்டபக் கூட்டத்தைத் தனது கண்களால் ஒருமுறை அளவெடுத்துவிட்டு புத்ததத்தர் அமர்ந்திருந்த நீதி மேடையை நோக்கி மெதுவாக நடந்தான். அந்த மெதுவிலும் ஒருவித சீர் இருந்தது. ராஜ நடை என்பதற்கு பொருள் ஏதாவது இருக்குமானால் அந்தப்பொருள் அன்று அச்சுதவிக்கண்டன் நடையில் காணப்பட்டது.

அவன் களப்பிர இனத்தைச் சேர்ந்தவனென்பதற்கு ஒரே அத்தாட்சியாக விளங்கிய அவன் தடித்த உதடுகளில் ஒரு குரூரப் புன்முறுவல் மட்டும் தவழ்ந்து கொண்டிருந்தது. அந்தப் புன்முறுவலுடன் நீதி மேடையை எட்டிய களப்பிர மன்னன் "களப்பிரர் கொடியவர்களாக இருக்கலாம். போர்களில் பெருநாசத்தை விளைவித்திருக்கலாம், ஆனால் அவர்கள் ஆட்சியில் நீதி குலைந்தது கிடையாது.

ஆகையால்தான் இந்த வழக்கை அதோ அந்த மனிதன் கோரிக்கைப்படி நாமே விசாரிக்க நிர்மானித்தோம்" என்று கூறி, தனது கையால் இளமாறனை சுட்டிக் காட்டினான்.

"இன்று நம்முடன் இருப்பது ஒரு வழக்கல்ல, மூன்று வழக்குகள். நான் இங்கு வந்ததுமே கண்ணதாசன் மடத்தில் கொலையொன்று நடந்ததாகவும், அதைச் செய்தவள் ஒரு பெண் என்றும் கேள்விப்பட்டேன். அந்தப் பெண்ணைப் பார்க்க விரும்பி விசாரணை மண்டபத்தில் மறைவாக நின்றேன். முதலில் சாந்தானந்தர் நீதிபதியாயிருந்தார். அவர் விசாரிக்கக் கூடாதென்று ஆட்சேபணை கிளப்பப்பட்டது. பிறகு புத்ததத்தர் நீதிமேடைக்கு வந்தார். இருப்பினும் விசாரிக்கவில்லை, சாந்தானந்தரே விசாரிக்க வேண்டும் என்றார். அதற்கு மக்கள் ஒப்புக் கொள்ளவில்லை. ஆகவே விசாரணை செய்ய நானே முன்வந்தேன்" என்று கூறிவிட்டு "புத்ததத்தரே! நீர் ஆசனத்திலிருந்து இறங்கவேண்டாம். நான் உமது பக்கத்திலிருந்தே விசாரிக்கிறேன்" என்று சொல்லி தனக்கு ஓர் ஆசனத்தை மேடைமீது போடச் சொன்னான். சிம்மாசனம் போன்ற பெரிய ஆசனமொன்றைக் காவலர் தூக்கி வந்து போட்டதும் அதில் அமர்ந்த களப்பிர மன்னன் "சாந்தானந்தரே! இப்படி என் முன் வாரும். உமது கட்சியைச் சொல்லும்" என்று உத்தரவிட்டான்.

சாந்தானந்தருக்கு உயிரே போனது போலிருந்தது.

"மன்னவா! மன்னிக்க வேண்டும்" என்று ஏதோ சொல்லத் தொடங்கினார் நடுக்கம் கண்ட குரலில்.

அச்சுதவிக்கண்டன் கண்கள் அவர் மீது பதிந்தன.

"அப்படியானால் குற்றத்தை ஒப்புக்கொள்கிறீரா?" என்று அவன் மெதுவாக வினவினான்.

சாந்தானந்தர் முகத்தில் பெரும் கிலி படர்ந்தது. "குற்றமா மன்னவா? என்ன குற்றம்?" என்று வினவினார் கிலி ஒலித்த குரலில்.



அச்சுதவிக்கண்டன் முகத்தில் விஷமச் சாயை படர்ந்தது. "என்ன குற்றம் என்பது எனக்கு எப்படித் தெரியும்? எந்தக் குற்றம் புரிந்ததற்காக மன்னிப்புக் கேட்டீர்?" என்று வினவிய அவன் குரலிலும் விஷமம் ஒலித்தது.

"நான் ஒரு குற்றமும் செய்யவில்லையே மன்னவா!" இம்முறை கெஞ்சினார் சாந்தானந்தர்.

"ஒரு குற்றமும் செய்யாவிட்டால் மன்னிப்பு ஏன் கேட்டீர்?" என்று மீண்டும் வினவினான் களப்பிர மன்னன்.

"ஐயோ! நான் கேட்டது மன்னிப்பல்ல."

"வேறு என்ன?"

"அது சம்பிரதாயப் பேச்சு."

"மன்னிப்பு கேட்பது ஒரு சம்பிரதாயம்?" என்று கேள்வி எழுப்பி முறுவல் செய்தான் மன்னன்.

மண்டபத்திலிருந்த மக்கள் மன்னனைப் புரிந்து கொண்டார்கள். பூனை புலியுடன் விளையாடுவதைப் போல மன்னன் சாந்தானந்தரிடம் விளையாடுகிறான் என்பதைப் புரிந்து கொண்டதால் அடுத்து சாந்தானந்தருக்கு ஏற்படவிருக்கும் தண்டனையைப் பற்றி நினைத்தார்கள்.

ஆனால் மன்னன் தண்டனையைப் பற்றி எதுமே பேசாமல் "சாந்தானந்தரே!" என்று அழைத்தான்.

"மன்னவா! வீர பராக்கிரம களப்பிரர்கோனே..." என்று தொடங்கினார்.

"சாந்தானந்தரே! இங்கென்ன கட்டியங்கூறவா வந்திருக்கிறீர்? எனது விருதுகளை அப்புறம் சொல்லலாம். இப்பொழுது உம்மீது சாட்டப்பட்டிருக்கும் குற்றத்துக்குப் பதில் சொல்லும். நீர் ஏன் புத்ததத்தரை விஷம் வைத்துக் கொல்லப் பார்த்தீர்? முதலில் அதற்குக் காரணம் சொல்லும்" என்று வினவினான் அச்சுதவிக்கண்டன்.

"சுத்த அபாண்டம்..." என்று கூவினார் சாந்தானந்தர்.

"நான் சொல்வது அபாண்டமா?" என்று கேட்டு லேசாக நகைத்தான் மன்னன்.

"இல்லை இல்லை" என்றார் சாந்தானந்தர், ஏதோ சொல்ல வேண்டுமென்பதற்காக.

"அப்படியானால் நான் சொன்னது அபாண்டமில்லை?"

"இல்லை"

"உண்மை?"

"ஆம்"

"விஷம் வைத்து புத்ததத்தரைக் கொல்ல முயன்றதை நீர் ஒப்புக் கொள்கிறீர்?"

"நான் எதையும் ஒப்புக்கொள்ளவில்லை. தூக்கு மருந்தை தாமே அருந்தியதாக புத்ததத்தரே சொன்னார் சற்று முன்பு."

"ஆம் சொன்னார்" என்று சொன்ன மன்னவன் புத்ததத்தரை நோக்கி "இன்று விசாரணை இருக்கும்போது ஏன் மயக்க மருந்தை அருந்தினீர்?" என்று கேட்டான்,

"தவறுதான்" என்றார் புத்ததத்தர், எதையும் மறுத்துப் பயனில்லை என்ற உணர்வால்.

அச்சுதவிக்கண்டன் புத்ததத்தரைக் கனிவுடன் நோக்கி "அவர் கொடுத்தது தவறா? நீர் அருந்தியது தவறா?" என்று விசாரித்தான்.

புத்ததத்தர் தலையைக் குனிந்து கொண்டார். மெதுவாகப் பேசவும் தொடங்கினார், "மன்னவா! தங்களிடம் எதையும் மறைத்துப் பயனில்லை. எனக்குப் பாலில் மயக்க மருந்தைக் கலந்து சாந்தானந்தர்தான் கொடுத்திருக்க வேண்டும். வழக்கத்துக்கு மாறாக அவரே எனக்கு இன்று பால் கொண்டு வந்தார். ஆனால் அவரை நான் காட்டிக் கொடுக்க விரும்பவில்லை. கண்ணதாசன் மடத்துத் தலைவரை இன்னொரு துறவி தீர்த்துக்கட்ட விரும்பினார் என்றால் அது மடத்தின் நற்பெயரைப் பாதிக்கும். அதனால் அந்த அபவாதத்தை என் மீது போட்டுக்



கொண்டேன். ஆனால் தங்கள் வரவு உண்மையை வெளிக்கொணர்ந்து விட்டது." என்று விளக்கினார்.

அதைக் கேட்டதும் மண்டபத்தில் பெரும் குழப்பம் ஏற்பட்டது. சாந்தானந்தரைப் பிடிக்க மக்கள் அவரைச் சூழ்ந்து கொண்டார்கள். அவர் அவர்களிடமிருந்து மெதுவாகத் தப்பி நீதி மேடைக்கு வந்து புத்ததத்தர் கால்களைப் பிடித்துக்கொண்டார்.

"புத்தம் சரணம் கச்சாமி என்பதற்கு இதுதான் விளக்கம்" என்ற மன்னன் "சாந்தானந்தர் தண்டனையைப்பற்றி பிறகு கவனிப்போம். அடுத்த வழக்கு, நீரதி என்ற பெண் இந்த மடத்துக் காவலர் தலைவனைக் கொன்ற வழக்கு" என்று சொல்லிவிட்டு "சாந்தானந்தரே! உமது குற்றச்சாட்டை எடுத்துச் சொல்லும்" என்று கூறினார்.

சாந்தானந்தர் எழுந்து "இவள் பெண்ணல்ல..." என்று தொடங்கினார்.

"உமக்கு எப்படித் தெரியும்?" என்று இடை புகுந்தான் மன்னவன்.

இதைக்கேட்ட மக்கள் பெரிதாகவே நகைத்தனர். அதனால் சிறிது ஆத்திரமடைந்த சாந்தானந்தர் "இவள் பெண்ணல்ல, பேய் என்று சொல்ல வந்தேன்" என்றார்.

"மேலே சொல்லும்" என்றான் அச்சுதவிக்கண்டன்,

"முந்தா நாள் இரவு இதே மண்டபத்தின் ஒரு மூலையில் யாரோ முனகும் சத்தம் கேட்டது. நான் அதைப் பார்க்கப் போனேன். அங்கு காவலர் தலைவன் ஏதோ ஒரு நீண்ட கத்தியால் குத்தப்பட்டு மரணத் தறுவாயில் இருந்தான். இறக்கும் தறுவாயில் இவள் பெயரைச் சொன்னான். இதற்கு இன்னொரு துறவியும் சாட்சி" என்று சொன்ன சாந்தானந்தர் "மறுநாள் இவளை விசாரித்ததில் இவளும் குற்றத்தை மறுக்கவில்லை" என்றும் கூறினார்.

"நீலரதி இப்படி வரட்டும்" என்று மன்னன் உத்தரவிட, முன்னால் வந்துநின்று அரசனுக்குத் தலைவணங்கினாள் நீலரதி.

அச்சுதவிக்கண்டன் நீலரதியை ஏற இறங்கப் பார்த்தான். "காவலர் தலைவனை நீ கொலை செய்தது உண்மையா?" என்று வினவினான்.

"உண்மை"—தங்கு தடையின்றி வந்தது நீலரதியின் பதில்.

"ஏன் கொன்றாய்?" என்று மன்னன் கேட்டான்.

"என்னைக் கெடுக்க முயன்றான்" என்றாள் நீலரதி.

"அதற்கு யாராவது சாட்சி உண்டா?" என்று மன்னன் வினவினான்.

"உண்டு" என்றாள் நீலரதி.

"யார் சாட்சி?"-மன்னன் உறுதியான குரலில் கேட்டான்.

பதில் சொல்லத் தயங்கினாள் நீலரதி.

"தயக்கம் வேண்டாம். யாராயிருந்தாலும் சொல்" என்றான் களப்பிர அரசன்.

சற்று சிந்தித்தாள் நீலரதி. பிறகு இளமாறனை நோக்கினாள். இளமாறன் முகத்தில் உணர்ச்சி எதையும் காணோம். வெறும் கல்லாயிருந்தது.

"சொல்"என்று உத்தரவிட்டான் அச்சுதவிக்கண்டன்.

நீலரதி சொன்னாள். நீதி மண்டபம் அதிர்ந்தது. "சாந்தானந்தர்" என்றாள் உறுதியான குரலில்.

"சாந்தானந்தரா!" என்று கேட்டான் மன்னன் சர்வ சாதாரணமான குரலில்.

"ஆம் மன்னவா. நான் காவலர் தலைவனிடமிருந்து தப்பியோட முயன்றபோது, என்னைப் பிடித்து மீண்டும் அந்தக் காமுகனிடம் தள்ளியவர் சாந்தானந்தர்தான்" என்று திட்டமாக அறிவித்தாள் நீலரதி. □

# 15. களப்பிரன் நீதி

நீலரதி உதிர்த்த சொற்களின் விளைவாக நீதி மண்டபத்தில் பயங்கர நிசப்தம் சில விநாடிகள் நிலவினாலும் அதை, களப்பிர மன்னனின் இனிமையான குரல் பிளக்கவே செய்தது. "பெண்ணே! இது உண்மையாக இருக்க முடியாது. என்ன இருந்தாலும் சாந்தானந்தர் புத்தத் துறவி. துறவறத்தின் நியமங்களை மேற்கொண்டவர். அப்பேர்ப்பட்டவர் உன்னைப் பிடித்து காவலர் தலைவன் வேட்கையைத் தீர்க்கத் தள்ளிவிடுவாரா?" என்று தேனினும் இனிய குரலில் வினவினான்.

நீலரதியின் கண்கள் மன்னனை நிர்ப்பயமாக ஏறிட்டுப் பார்த்தன. "மன்னவா! நான் சொன்னது முற்றிலும் உண்மை. அவர் பிடித்துத் தள்ளாவிட்டால் அந்தக் காமுகனிடம் நான் சிக்கியிருக்க மாட்டேன். நேற்று காலையில் ஓடியதைப்போல் அன்றும் ஓடியிருப்பேன். தப்பியும் இருப்பேன்" என்று மிகத் தெளிவாகப் பேசினாள் நீலரதி.

அச்சுதவிக்கண்டன் அழகிய கண்களில் லேசாக சிரிப்பின் சாயை பரவியது. ஏதுமறியாதவன்போல் கேட்டான் மன்னவன் "நேற்று ஓடினாயா? எங்கே? எதற்கு?" என்று.

நீலரதி சற்றே தலையைக் குனிந்து கொண்டாள். எண்ணங்கள் எழுப்பிய உணர்ச்சிகளின் காரணமாக. பிறகு மெதுவாகப் பேசத் தொடங்கி "மன்னவா! முற்றும் என் கதையைச் சொல்லிவிடுகிறேன். அன்றிரவு அந்தக் காமுகனிடம் தள்ளிவிட்ட பிறகு அவன் என்னை இதே மண்டபத்தின் மூலையில் தள்ளி அருகே வந்தான், கற்பைச் சூறையாட. வந்ததும் எனது இடையிலிருந்த பூங்கத்தியை அவன் மார்பில் செருகினேன். அது பாய்ந்ததும் அவன் அலறி என்னை விட்டுப் புரண்டு விழுந்தான். முனகி

ளான். எனது கதியைப் பார்க்க சற்று மறைவில் நின்றிருந்த சாந்தானந்தர் ஓடிவந்து ''கொலை கொலை'' என்று கூவினார். அதைக்கேட்டு ஓடிவந்த காவலரிடம் என்னை ஒப்படைத்துக் காவலில் வைத்தார். ஆனால் அந்தக் காவலை நான் உடைத்துவிட்டு காலையில் ஓட முயன்றேன் வாணகிரியைநோக்கி. அங்கு சாந்தானந்தரும் இன்னொரு துறவியும் சில காவலர்களுடன் துரத்தி வந்தார்கள். ஆனால் அதோ அந்த மாவீரன் அவர்களைத் தடுத்தார். விசாரணைக்கு என்னை மாலையில் அழைத்து வருவதாக உறுதி கொடுத்தார். விசாரணை மண்டபத்தில் என்னைக் காப்பாற்றினார். நான் புத்ததத்தர் சகோதரி மகளென்பதையும் வெளிப்படுத்தினார். அதனால் விசாரணை இன்று மாலைக்கு மாற்றப்பட்டது. இங்கு நடந்ததைத தாங்களே பார்த்தீர்கள்'' என்று நிதானமும் உறுதியும் கலந்த சொற்களில் தனது முழுக் கதையைச் சொன்னாள்.

அந்தக் கதை முழுவதையும் இமையைக்கூட அசைக்காமல் எந்த உணர்ச்சியையும் காட்டாமல் கேட்ட கனப்பிரமன்னன் ''இந்த வழக்கு வரவர சுவாரஸ்யமாகிறது'' என்று சொல்லி, புன்முறுவல் செய்தான். பிறகு சாந்தானந்தரை நோக்கி ''சாந்தானந்தரே! இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு பதில் சொல்லும்'' என்று ஆணையிட்டான்.

சாந்தானந்தருக்கு உள்ளூர நடுக்கம் கண்டாலும் வெளிக்கு தைரியத்தையே காட்டி ''மன்னவா! என்னைப் போன்ற ஒரு துறவியை கேவலம் மடத்துப் பணிப்பெண்ணின் குற்றச்சாட்டைக்கொண்டு தீர்மானிக்க முடியாது. இவள் சொல்லும் பொய்கள் உண்மையாகிவிடா. நான் இவளைப் பிடித்துத் தள்ளியதற்கு சாட்சி எது?'' என்று வினவினார்.

அச்சுதவிக்கண்டன் மெதுவாகப்பேசினான். ''சாந்தானந்தரே! நீதிமன்றத்தில் பதவி ஒரு மனிதனைத் தப்ப வைக்காது. எவ்வளவு கீழ்ப்பட்ட பணிப் பெண்ணாய்



இருந்தாலும், நீர் இந்த மடத்துத் தலைவராகவே இருந்தாலும், நீதியின் கண்முன் எல்லோரும் சமம். ஆனால் நீர், உம்மீது சாட்டப்பட்டுள்ள குற்றங்களுக்கு சாட்சியம் கேட்கிறீர். அது நியாயம்'' என்று சொன்னான். அத்துடன் நீலரதியை நோக்கி, ''நீ சாட்சியம் ஏதாவது காட்ட முடியுமா?'' என்று வினவினான்.

''முடியும் மன்னவா! இவருடன் இருந்த சத்தியானந்தரை அழையுங்கள்'' என்றாள் நீலரதி.

மன்னன் இதழ்களில் இள நகை அரும்பியது. ''சத்தியானந்தரா, அது யார்?'' என்று வினவினான்.

''என்னைத் துரத்திய இன்னொரு துறவி; இவர் நண்பர்'' என்றாள் நீலரதி.

அடுத்து சத்தியானந்தரை அழைத்தான் மன்னன். சத்தியானந்தர் எதிரே வந்து நின்றதும் ''நீர்தான் சத்தியானந்தரா?'' என்று மன்னன் வினவினான்.

''அடியவன் பெயர் அதுதான்'' என்றார் சத்தியானந்தர்.

''உமது பெயருக்குத் தகுந்தபடி சாட்சியம் சொல்வீரா?'' என்று மன்னன் மீண்டும் கேட்டான்.

''யாம் சத்தியத்தைத் தவிர வேறொன்றும் அறியோம்'' என்றார் சத்தியானந்தர்.

''இந்த வழக்கைப்பற்றி உமக்கென்ன தெரியும்?''—மன்னன் கேள்வி இன்பமான குரலில் பிறந்தது.

''எல்லாமே தெரியும். ஆனால் ஒரு துறவி இன்னொரு துறவியைக் காட்டிக் கொடுப்பது அழகல்ல. இந்த மடத்தின் பெயரைக் கெடுக்கக்கூடிய எதையும் நான் சொல்வது முறையாகாது'' என்றார் சத்தியானந்தர்.

''ஒரு நிரபராதியை வெட்டுப் பாறைக்கு அனுப்புவது முறையா?''—மன்னன் கேள்வி திட்டமாக வந்தது.

''இல்லை, முறையில்லை.''

"அப்படியானால் உண்மையைச் சொல்லும்."

"கண்ணால் காண்பதெல்லாம் நிஜமாகிவிடாது. கண்ணால் கண்டதும் பொய், காதால் கேட்பதும் பொய் என்பது ஆன்றோர் வாக்கு."

"நீர் கண்ணால் கண்டதென்ன?" என்று மன்னன் நகைத்துக்கொண்டே கேட்டான்.

அவன் நகைப்பு பலரைத் தூக்குமேடைக்கு அனுப்பியிருப்பதைப் பற்றிக் கேட்டிருந்த சத்தியானந்தர் குலை நடுக்கம் கொண்டார். ஆகவே அரைகுறையாக உண்மையைக் கக்கலானார். "சாந்தானந்தர் இந்தப் பெண்ணைக் காவலர் தலைவனிடம் தள்ளியதைப் பார்த்தேன். ஆனால் எதற்காகத் தள்ளினார் என்பது தெரியாது. காவலர் தலைவன் இறந்தது தெரியும். இவளை சாந்தானந்தர் காவலில் வைத்ததும் தெரியும். மறுநாள் இவளைத் தூக்கி சாந்தானந்தருடன் நானும் ஓடினேன். அப்பொழுதுதான் இளமாறன் எங்களைத் தடுத்தான்..." என்று மேலே ஏதோ சொல்லப் போனவரை மன்னன் கைதூக்கித் தடுத்தான். பிறகு புத்ததத்தரைத் திரும்பி நோக்கி "புத்ததத்தரே! மேற்கொண்டு விசாரணை தேவையா?" என்று வினவினான்.

"தேவையில்லை" என்று பலவீனமான குரலில் கூறினார் புத்ததத்தர்.

"அப்படியானால் நீங்களே தீர்ப்பு சொல்லிவிடுங்கள்" என்றான் அச்சுதவிக்கண்டன்.

"மன்னவா! தாங்களிருக்கும்போது நான் தீர்ப்புக் கூறுவது சட்டப்படி செல்லுபடியாகாது. தாங்களே தீர்ப்புக் கூறிவிடுங்கள்" என்றார் புத்ததத்தர்.

அச்சுதவிக்கண்டன் கண்களில் ஒரு விபரீத ஒளி படிந்தது. "சாந்தானந்தரே! ஒரு துறவி செய்யத்தகாத காரியத்தை நீர் செய்திருக்கிறீர். நியாயமாக உமக்கு மரண தண்டனை விதிக்கவேண்டும். ஆனால் இந்த மடத்தின் கௌரவத்தை முன்னிட்டு அப்படித் தீர்ப்பளிக்க



நான் விரும்பவில்லை. எந்தத் துறவறத்துக்கு நீர் தகுதியில்லையோ அந்தத் துறவறத்திலிருந்து நீர் அகற்றப்படுகிறீர். ஆனால் நீர் ஏற்கனவே நமது படையில் இருந்தபடியால் காலமான காவலர் தலைவன் பதவியை உமக்கு அளிக்கிறேன். நாளைமுதல் நீர் காவியுடையைக் களைந்து போருடை அணிந்து மடத்தைக் காத்து நிற்கும் பணியை மேற்கொள்கிறீர். அடுத்து சத்தியானந்தர் அரைகுறையாக உண்மையைச் சொன்னாலும் ஓரளவு உண்மை ஒலிக்கும் வழியில் பேசியதால் சாந்தானந்தர் ஸ்தானத்துக்கு அவர் உயர்த்தப்படுவார். நாளைமுதல் புத்ததத்தருக்கு அடுத்தபடி சத்தியானந்தர் மடத்தின் உபதலைவராகப் பணியாற்றுவார்" என்று தீர்ப்புச் சொன்ன களப்பிர மன்னன் நீலரதியை நோக்கி "இப்படி எதிரில் வா" என்று அழைத்தான். அவள் வந்துநின்றதும் அவளை ஏற இறங்க நோக்கினான் சில விநாடிகள். பிறகு பேசினான்: "நீலரதி! நீ குற்றமற்றவள். தற்காப்புக்காகக் கொலை செய்திருக்கிறாய். அதனால் ஒரு குற்றத்தையும் புரிந்தவளாகிறாய். இப்படி முன்னுக்குப்பின் முரணாகப் பேசுகிறேனே என்று நினைக்காதே. அந்தக் காமுகனை நீ கொன்றுவிட்டதால் அவனைத் தூக்குமேடையிலிருந்து காப்பாற்றிவிட்டாய். இது பெரும் குற்றம்" என்று, மேலும் சொன்னான்: "நீலரதி! உன் அழகு இணையற்றது. யாரையும் ஏறெடுத்துப் பார்க்காத என்னையே இசைக்க வைக்கிறது. இந்த அழகு சாமியார்களுக்குப் பணிவிடை செய்ய ஏற்பட்ட அழகல்ல. அரண்மனையில் பணிபுரிய வேண்டிய அழகு. ஆகவே நீ இன்னும் பத்து நாட்களுக்குள் உறையூர் அரண்மனைக்கு வந்து சேர வேண்டியது. உன்னைத் துறவிகளிடமிருந்து காப்பாற்றிய இளமாறனே உன்னை அரண்மனைக்கு அழைத்து வருவான்" என்றவன் பிறகு, எட்ட நின்ற இளமாறனை நோக்கி "வீரனே! களப்பிரர் அரசில் உனக்கு நல்ல பதவி கிடைக்கும். இந்த அழகியை அழைத்துக்கொண்டு உறையூர் அரண்மனைக்கு வா"

என்றும் கூறி விசாரணை முடிந்துவிட்டதற்கு அறிகுறியாக தனது ஆசனத்தைவிட்டு எழுந்தான்.

நீதி மண்டபத்திலிருந்த மக்கள் எல்லோருமே எழுந்து நின்றார்கள். மன்னன் தீர்ப்பைப்பற்றி மக்களிடம் நிரம்ப கருத்து வேற்றுமை இருந்தாலும் அதை வெளிப்படையாகச் சொல்ல அச்சமுற்று மௌனமாகவே நின்றனர். லேசான சலசலப்பு சத்தம்கூட அந்த மண்டபத்தில் கேட்கவில்லை. அங்கிருந்து வெளியேறிய அச்சுதவிக்கண்டன் கால் ஒலி மட்டும் அந்த மண்டபத்தில் மெதுவாகக் கேட்டது! யாருக்கும் நன்மை பயக்காத தீர்ப்பைக் கூறிவிட்டு அலட்சியமாக வெளியேறிய மன்னன் யாரையும் திரும்பிப் பார்க்கக்கூட இல்லை. அவன் வெளியே சென்று அவன் செல்லும் ரதத்தின் சக்கர உருளைகள் கிளப்பிய ஒலிகள ரதம் தூரத்துக்குச் சென்று விட்டதை உணர்த்திய பின்பே மக்கள் சளசளவெனப் பேச ஆரம்பித்தார்கள். புத்ததத்தர் தமது ஆசனத்திலிருந்து சிரமப்பட்டு எழுந்து கையால் மக்களை நிதானத்துக்கு வரும்படியும், இல்லங்களுக்கு செல்லுமாறும் பணித்த பின்புதான் அமளி சிறிது அடங்கியது.

அதற்குப்பின் அந்த நீதிமண்டபத்தைவிட்டு இளமாரன் ஒருபுறமும், நீலரதி ஒருபுறமும் தாங்கிவர நடந்த புத்ததத்தர் தமது அறைக்குச் சென்றதும் தமது படுக்கையில் தொப்பென விழுந்தார். ''இளமாரா! குடிகெட்டுவிட்டது'' என்றும் உணர்ச்சியுடன் கூறி கண்களிலும் நீர் விட்டார். ''நீலரதியை நீதான் காப்பாற்றவேண்டும்'' என்று கூறி இளமாரன் கையில் நீலரதியின் கையைப் பிடித்தும் கொடுத்தார். ''இளமாரா! நீதான் அவளுக்கு இனி தகப்பன்'' என்று தழுதழுத்த குரலில் சொல்லி ''இன்றைய தீர்ப்பின் சாரம் என்ன என்பது புரிகிறதா உனக்கு?'' என்றும் கேட்டார்.

''புரிகிறது சுவாமி!'' என்ற இளமாரன் குரலில் உணர்ச்சியே இல்லை.



''என்ன புரிந்து கொண்டாய்?''- புத்ததத்தர் நெகிழ்ந்த குரலில் கேட்டார்.

''நீலரதி, மன்னன் அரண்மனையில் பணிபுரிவாள்...'' இளமாரன் சொற்களை முடிக்கவில்லை.

''என்ன பணி?''

''அரசனைத் திருப்தி செய்விக்கும் பணி.''

''ஆம், ஆம். நீலரதியை தனது அந்தப்புரத்தில் சேர்த்துக்கொள்ள விரும்புகிறான் மன்னன். அதைவிடக் கேவலம் எதுவும் சகோதரி மகளுக்குக் கிடைக்க முடியாது. அவளை எப்படியாவது காப்பாற்றிவிடு.''

இளமாரன் பதில் சொல்லவில்லை. ''நீலரதியின் கதியைக் காலம் நிர்ணயிக்கும்'' என்றான்.

''அவளை...?'' —வினா தொடுத்தார் மடத்துத் தலைவர்.

''நாளைக்கு அழைத்துக் கொண்டு கிளம்புகிறேன்'' என்றான் இளமாரன்.

''எங்கு?'' என்று மீண்டும் கேட்டார் புத்ததத்தர்.

''உறையூருக்கு'' என்று சொன்ன இளமாரன் ''அரசர் கட்டளையை யார் மீறமுடியும்?'' என்றும் வினவினான்.

''அப்பா இளமாரா! இந்தக் கிளியை அவனிடம் ஒப்படைத்து விடாதே'' என்று கெஞ்சினார் புத்ததத்தர்.

''காவலர் தலைவன் இவளைக் கற்பழிக்க முயன்றபோது அதற்கு உடந்தையாயிருந்த சாந்தானந்தரை நீர் ஏன் தண்டிக்கவில்லை? காவலர் தலைவனைவிட அரசன் என்ன மட்டமா?'' என்ற இளமாரன் ''நீலரதி! வா'' என்று அவளைக் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு வெளியே சென்றான்.

அவளை வாணகிரியில் உள்ள தனது இல்லத்துக்கு அழைத்துச் சென்ற இளமாறன் ''நீலரதி! இன்றிரவு நன்றாக உறங்கு. நாளை நாம் உறையூருக்குப் பயணமாகிறோம்'' என்றான்.

கண்ணதாசன் மடத்திலிருந்து இளமாறனுடன் வந்த உதயகுமாரன் தனது ஆத்திரத்தை முதன் முதலாகக் காட்டி ''நீங்கள் ஒரு வீரரா?'' என்று சீறினான்.

''என் வீரத்தில் என்ன குறைச்சல் கண்டாய்?'' என்று வினவினான் இளமாறன்.

''அபலையை ஓர் அரசனது அந்தப்புரத்தில் தள்ளுவது வீரமா? அபலையைக் காப்பாற்ற வழி இல்லையா?''

''இருக்கிறது''

''அதைச் செய்வதுதானே?''

''செய்யலாம். உனது ஒத்துழைப்பு இருந்தால்.''

''கண்டிப்பாய் இருக்கிறது. நான் என்ன செய்ய வேண்டும்?''

இளமாறன் சிறிது சிந்தித்தான், ''ஒரேவழி இருக்கிறது. இவளை நீ திருமணம் செய்து கொண்டால் இவளை மன்னனும் தொட அஞ்சுவான், சொல், இவளை மணந்து கொள்கிறாயா?'' என்று கேட்டான் இளமாறன்.

உதயகுமாரன் சிலையென நின்றான்.

□ □ □

# 16. மன்னன் அளித்த உதவி

நீலரதியைக் களப்பிர மன்னனிடமிருந்து காப்பாற்ற அத்தகைய ஒரு நிபந்தனையை இளமாறன் கூறுவானென்று கனவிலும் கருதாத உதயகுமாரன் உணர்ச்சியற்ற சிலையென நின்றபின் பல விநாடிகள். பிறகு மெதுவாகக் கேட்டான். ''இவளைக் காப்பாற்ற வேறு வழியே இல்லையா?'' என்று.

இளமாறன் இதழ்களில் இளநகை அரும்பியது. ''வேறு வழி இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. உனக்குத் தெரிந்தால் சொல்'' என்ற சொன்ன இளமாறன் ''உதயகுமாரா! களப்பிரர் தமிழரசர்களை வெற்றி கொண்ட பிறகு இந்தத் தமிழகத்தை ஆண்ட களப்பிர மன்னர்களில் சிறந்தவன், பண்புடையவன் என்ற பெயர் வாங்கியவன் இந்த அச்சுதவிக்கண்டன் ஒருவன்தான். இவனுக்கு முன்னிருந்த மன்னர்கள் காட்டுமிராண்டிகளாய், கொலை, கொள்ளை, கற்பழித்தல் இத்தகைய குற்றங்களைப் புரிந்து வந்ததால் தமிழ்மக்கள் அவர்களை வெறுத்தார்கள். இரண்டொரு சமயங்களில் புரட்சியும் செய்தார்கள். அந்தப் புரட்சிகள் மிகக் குரூரமான முறைகளில் அடக்கப்பட்டன. ஆனால் அச்சுதவிக்கண்டன் ஆட்சிக்கு வந்தபின் அத்தகைய கொடுமைகளை நீக்கினான். ஆட்சியிலிருந்து, மடங்களை ஆதரித்தான். பௌத்த, சமண மடங்களுக்கு அரசாங்க மான்யமும் அளிக்கப்பட்டது. மணமான பெண்களை கற்பழிப்பது அரசாங்க ரீதியாக பெரும் குற்றமாக்கப்பட்டது. அப்படி திருமணமான பெண்களைக் கற்பழித்தவர்கள் சிறைகளில் தள்ளி சித்திரவதை செய்யப்பட்டார்கள். எதுவும் நீதிமண்டப விசாரணையின்றி முடிவு செய்யப்படவில்லை. இத்தகைய நிர்வாக சீர்திருத்தங்களால் அச்சுவிக்கண்டனை மக்கள் பெரிதும் பாராட்டத் தொடங்கினார்கள். இதனால் சேர, சோழ, பாண்டிய, பல்லவ மன்னர்கள் இவன்மீது அரசியல்

புரட்சிகளைத் தூண்டிவிடவும் முடியாத காரியமாயிற்று. காட்டு மிராண்டிகளாகிய தனது படைக்கு சாஸ்திர பூர்வமான போர் முறைகளையும் அச்சுதவிக்கண்டன் பழக்கி வைத்தாலும், ஏற்கனவே தமிழரசர்கள் படையிலிருந்த சிறந்த படைத்தலைவர்களுக்குத் தனது படையில் முக்கிய பதவிகளை அளித்தாலும், எந்த விதத்திலும் பலக்குறைவில்லாத இரும்பு போன்ற படையை அமைத்துக் கொண்டான் களப்பிர மன்னன். ஆனால் இத்தனைக்கும் பின்னால் பட்டுக்குள் மறைந்த கூர்வாளைப்போல அக்கிரமங்கள் நடந்துதான் வருகின்றன. அச்சுதவிக்கண்டன் பவனியில் போகும்போதும் வரும்போதும் கண்ணில் கண்ட பல கன்னிப் பெண்களை தனது அந்தப்புரத்துக்கு அழைத்துச் சென்று திருமணமும் புரிந்துகொண்டான். ஒருமுறை அவன் அந்தப்புரத்துக்குச் சென்ற பெண்கள் வெளியே வந்தது கிடையாது. அங்கு என்ன நடக்கிறதென்று யாருக்கும் தெரியாது. தான் பொறுக்கிய மலர்களை அனுபவித்தபின்பு வெளியே எறிவதில்லை மன்னன். அங்கு ஒருமுறை புகுந்தவர்கள் என்ன ஆனார்களென்பது யாருக்கும் தெரியாது. மன்னனைத் தவிர, அவன் அனுப்பும் இரண்டொரு துறவிகளைத் தவிர, வேறு யாரும் அங்கு நுழைந்ததில்லை. நுழைந்து வந்த துறவிகளும் பேசுவதில்லை, பேசிய துறவிகள் அடுத்த சில நாட்களில் கிணற்றில் விழுந்தோ, யானைகளால் தற்செயலாக இடறப்பட்டோ இறந்து விட்டார்கள். இதுதான் நிலை'' என்றும் விளக்கினான்.

இளமாறன் இந்த விளக்கத்திற்குப் பிறகு ''அந்தப்புரத்துக்குள் சென்றால் நீலரதியை வெளியில் யாரும் பார்க்க முடியாது. அரசன் ஆசை தீர்ந்த பின்பு இவளை என்ன செய்வான் என்பதை யாரும் சொல்ல முடியாது. ஆகவே உன் முடிவை யோசித்துச் சொல்'' என்றான் உதயகுமாரனை நோக்கி.

உதயகுமாரன் பதில் பேச நா எழாமல் நின்றான். நீலரதியையும்நோக்கி அச்சுதவிக்கண்டன் அந்தப்புரத்தையும்



அகக்கண்ணால் நோக்கி ''இவள் அங்கு சென்றால் அழிந்து விடுவாள்'' என்று உள்ளூரச் சொல்லிக்கொண்டு பெருமூச்சு விட்டான்.

அவன் கலக்கத்தையும் பெருமூச்சையும் கவனித்த நீலரதி இளமாறனை நோக்கி ''இவரை மணம் புரிய நான் விரும்பவில்லை'' என்றாள் உறுதி மிகுந்த குரலில்.

இளமாறன் வியப்பு நிரம்பிய விழிகளை நீலரதி மீது செலுத்தி ''ஏன் விரும்பவில்லை? இவனுக்கென்ன அழகில்லையா, அந்தஸ்தில்லையா, வீரமில்லையா? இல்லை இழி குலத்தவன் என்று நினைக்கிறாயா?'' என்று வினவினான்.

நீலரதி இளமாறன் கண்களைத் துணிவுடன் சந்தித்தாள்: ''இவரைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது.'' என்று தொடங்கியவளை ''எனக்குத் தெரியும். இவன் எதிலும் உனக்குத் தாழ்ந்தவனில்லை'' என்று இளமாறன் இடைமறித்துப் பேசினான்.

''எனக்குக் குறைந்தவர் என்று நான் சொல்லவில்லையே''—தைரியத்துடனேயே பதில் சொன்னாள் நீலரதி.

''வேறு என்ன காரணம்?''—இளமாறன் கேள்வி திட்டமாக எழுந்தது.

''இவர் என்னைத் திருமணம் புரிவதானால் காதல் காரணமாயிருக்காது. என் அழகு காரணமாயிருக்காது. பரிதாபம் காரணமாயிருக்கும். அத்தகைய திருமணத்தை நான் விரும்பவில்லை. எனக்கு நேரிடவிருக்கும் கதியை நினைத்து இவர் என்னை மணந்தால் பிற்காலம் முழுவதும் வருந்துவார். அத்தகைய வாழ்க்கையை, மனக் கசப்பைத் தரும் திருமணத்தை ஏற்பது இவருக்கு நான் இழைக்கும் கொடுமையாகும்'' என்று நீலரதியும் திட்டமாகக்கூறி ''என் கதியைப்பற்றி பிறகு நிர்ணயிக்கலாம்.

முதலில் சாப்பிடுவோம். பசி பிரச்னைகளைத் தீர்க்காது'' என்று அலட்சியமாகக் கூறிவிட்டு உணவு சமைக்கும் அறைக்குள் சென்றாள்.

உதயகுமாரன் தலையைப் பிடித்துக்கொண்டு கவலையின் பிம்பமாக கூடத்தில் உட்கார்ந்துவிட்டான். இளமாறன் வழக்கம்போல் வாயிற்படியில் உட்கார்ந்து வானத்தை நோக்கினான். புகாரின் வானம் அன்று மிக அழகாக இருப்பதாகப்புலப்பட்டது இளமாறனுக்கு. முழு மதிக்கு அடுத்த தேய்மதி கிளம்பி புகாரின் கடற்பகுதிக்குத் தனி மெருகைக் கொடுத்ததால் நுரைத்தே துள்ளியெழுந்து மடிந்த திரைகள் சாட்சாத் வெள்ளிப் பள்ளங்களைப் போல் காட்சியளித்தன. அவற்றில் புரண்டு வந்த அலைகளுக்கு மேல் விர்ரென்று கிளம்பி மீண்டும் அலைகளில் மறைந்த ஓரிரண்டு சுறாக்களின் விளையாட்டு, கண்ணையன்றி மதியையும் பறித்தது. அத்துடன் வாணகிரியின் இடிந்த பழைய வீடுகளில் கட்டிய கூண்டுகளிலிருந்து வெளியே பறந்த இரண்டொரு புறாக்களின் இயற்கை வெண்மை விண்மதியின் வெண்மையில் ஆயிரம் மடங்கு அதிகமாகப் பிரகாசித்தது. மலைச்சரிவில் இளமாறன் விடுதியிலிருந்து சற்று எட்ட இருந்த தோப்பில் இருந்த குயில்கள் ஓரிரண்டு இன்பமாகக் கூவியதன்றி ஓர் ஆந்தையும் கோரமாக அலறியதால் இன்பத்துடன் கோரமும் இணைவதை உணர்ந்த இளமாறன் கஷ்டமில்லாத சுகம் உலகத்தில் கிடையாதென்பதைப் புரிந்து கொண்டான். சாதாரண சமயத்தில் இந்த இயற்கைக் காட்சியில் மூழ்கி விடும் மனப்பாங்குள்ள இளமாறன் அன்று எதையும் நுகரும் மனப்பக்குவத்தில் இல்லாததால் எதையும் ரசித்தானில்லை. அலைகளைப் பார்த்தான், ஒருமுறை முதல் நாள் வந்த அழகி அன்றும் வருவாளோ என்று. எந்த உருவமும் அலைமீது காணோம். சற்று எட்ட பூமியில் நிற்கிறாளோ என்றும் வாணகிரிச்சரிவை நோக்கினான். அங்கும் எந்த உருவமோ அருவமோ காணோம். ''ஜனிஸ்



என்று ஒரு தேவதை இருந்தால் அவள் பெண் பேராபத்திலிருக்கும்போது ஏன் வரவில்லை?'' என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டான்.

அவன் கேள்விக்கு பதில் சொல்வதுபோல், மைனா ஒன்று தோப்பிலிருந்து பறந்துவந்து அவன் முன்பு அப்படியும் இப்படியும் அழகு நடை நடந்தது. ''பறவைகள் கூட்டிலடைய வேண்டிய சமயத்தில் இது மட்டும் ஏன் இங்கு பறந்து வந்திருக்கிறது?'' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டு அதை உற்று கவனிக்கலானான் இளமாறன். மைனாவின் நடை அழகு அவனைப் பெரிதும் கவர்ந்தது. அது மட்டுமல்ல, அது நடக்கமுடியாமல் நொண்டியதையும் அவன் கண்கள் கண்டதால் எழுந்து சென்று அதைக் கையில் எடுத்துக்கொண்டு திரும்பி வந்து படியில் மீண்டும் உட்கார்ந்து மடியில் வைத்துக்கொண்டு அதன் காலைப் பரிசோதித்தான். ஒரு காலின் சிறு எலும்பு நட்ட நடுவில் முறிந்திருப்பதைக் கண்டதும் ''நீலரதி!'' என்று குரல் கொடுத்தான்.

வெளியே வந்த நீலரதி அவன் மடியிலிருந்த மைனாவைப் பார்த்து ''இது என்ன?'' என்று வினவினாள். அதைத் தன் கையில் எடுத்துக் கொள்ளவும் குனிந்தாள். ''அதைத் தொடாதே. அதன் கால் முறிந்திருக்கிறது'' என்றான். மெல்ல அதன் காலை எடுத்துக் காட்டவும் செய்தான்.

''இது எப்படி இங்கே வந்தது?'' என்று கேட்டாள் நீலரதி.

தூரத்தில் தோப்பு முகப்பிலிருந்த பாதையைக் காட்டினான் இளமாறன். நீலரதி பாதையையும் நோக்கி பறவையையும் நோக்கினாள். அவள் கண்களில் அனுதாபம் பொங்கி வழிந்தது. ''அந்த வழியில்தான் நானும் ஓடி வந்தேன். நானும் ஒரு நொண்டிப்பறவைதான்'' என்றாள் நீலரதி.

இளமாரன் கையிலிருந்த பறவையின் முதுகைத் தடவிக்கொடுத்தாள். ''இறந்தையின் நிகழ்ச்சிகளில் ஏதோ ஒரு தொகுப்பு இருக்கத்தான் செய்கிறது'' என்று சொல்லிவிட்டு, ''சிறிது தேங்காய் எண்ணெயும் கிழிந்த துணியும் கொண்டு வா'' என்று இளமாரன் உத்தரவிட, உள்ளே சென்ற நீலரதி ஒரு நொடியில் எண்ணெய்க் கிண்ணத்துடனும் கிழிசல் துணியுடனும் திரும்பினாள்.

அவளைத் தனது அருகில் உட்காரச் சொன்ன இளமாரன் பறவையின் காலுக்கு மெதுவாக தேங்காய் எண்ணெயைத் தடவினான். மைனா லேசாக முனகினாலும் தொடர்ந்து இளமாரன் செய்த உபசாரத்தால் முனகலை அடக்கிக்கொண்டது. பிறகு கிழிசல் துணியை மிக மெல்லியதாகக் கிழித்து உடைந்த எலும்பைப் பொருத்தி மெதுவாகக் கட்டவும் செய்த இளமாரன் சட்டென்று நிமிரவே, அவன் தலை பக்கத்தில் குனிந்து சிகிச்சையைப் பார்த்துக்கொண்டிருந்த நீலரதியின் உதட்டில் இடித்து விடவே உதட்டில் அவன் பல்பட்டு சிறிது குருதியும் துளிர்த்தது. ''அடடா! உன் உதட்டில் பட்டுவிட்டதா?'' என்று கேட்ட இளமாரன் பட்சிக்கு சிகிச்சையை முடித்து அதை நீலரதியின் கையில் கொடுத்தான். பிறகு அவளைத் தனது பக்கத்திற்கு இழுத்து உட்கார வைத்து அவள் உதட்டைக்கூர்ந்து நோக்கினான். கீழ் உதட்டில் மட்டும் அவன் பல் சிறிதளவே பட்டு குருதி ஒரு துளியே வந்து பரவியிருந்தது. அதைத் தனது விரலால் துடைத்த இளமாரன் ''நீலரதி! மேலுதட்டைக் கீழ் உதட்டுடன் இணைத்து சப்பி விடு. குருதி நின்று விடும்'' என்று கூறினான்.

அவள் மேலுதடு கீழுதட்டுடன் இணைந்து மடிந்த அழகைப் பார்த்த இளமாரன் தனது கையால் அந்த இரண்டு உதடுகளையும் பிரித்தும், காயம்பட்ட இடத்தை அழுத்தியும் குருதியை நிறுத்திய பிறகு ''உள்ளே வெண்ணெய் இருந்தால் எடுத்துவா'' என்றான். அவள் வெண்ணெயைக் கொண்டு வந்ததும், அவளை உட்கார வைத்து அவள் இதழ்களில் வெண்ணெயைத் தடவினான். ''தேனிருந்தால் அதைத் தடவலாம்'' என்று சொன்ன இளமாரன் ''தனியாக தேன் எதற்கு? இவள் அதரங்களில் இருக்கும் தேனைவிட காட்டுத்தேன் எப்படி உயர்ந்தது?'' என உள்ளூர எண்ணமிட்டாலும் அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளவில்லை அவன்.



சிகிச்சைக்குப் பிறகு நீலரதி மற்ற இருவருக்கும் உணவு பரிமாறி தானும் உணவை முடித்துக் கொண்டதும் மைனாவுக்கும் சிறிது சாதத்தைக் குழைத்து வைத்தாள். பிறகு அதைத் தனது ஆடையொன்றை மடித்துப் போட்டு படுக்க வைத்துவிட்டுத் திரும்பி வந்தாள். அப்பொழுதும் இளமாரன் வாயிற்படியில் உட்கார்ந்திருந்தான். அவள் வந்ததைப் பார்த்ததும் ''வேலை முடிந்து விட்டதா?'' என்று விசாரித்தான்.

''முடிந்து விட்டது'' என்றாள் நீலரதி.

''சரி கிளம்பு, உதயகுமாரனையும் கிளம்பச் சொல்'' என்றான் இளமாரன்.

''எங்கே?'' என்று சற்று அச்சத்துடன் கேட்டாள் நீலரதி.

''எனக்கே தெரியாது'' என்றான் இளமாரன்.

நீலரதி சிறிது சிந்தித்துவிட்டு, ''நாளை, நாளை காலையில் தானே கிளம்புவதாகச் சொன்னீர்கள்?'' என்று கேட்டாள்.

''சொன்னேன். ஆனால் தாமதிப்பது உசிதமில்லை.''

''ஏன்''

''அச்சுதவிக்கன்டன் மிகவும் கூர்மையான புத்தியுடையவன், தாமதம் நம்மை ஆபத்தில் சிக்க வைக்கும்'' என்று கூறினான். ''இன்னும் இரண்டே நாழிகைக்குள் நாம் புறப்படவேண்டும்'' என்றும் திட்டமாகச் சொன்னான்.

அவன் சொல்லிக் கொண்டே இருக்கையில் ஆயுதம் தாங்கிய பத்து வீரர்கள் மலைச்சரிவில் ஏறி வரும் ஒலி கேட்டது. அடுத்த சில நிமிடங்களில் ஏறி வந்த அந்த பத்து வீரர்களில் தலைவனாகக் காணப்பட்டவன் வாயிற்படியில் நின்றிருந்த இளமாறனுக்குத் தலைவணங்கி 'தாங்கள்தான் இளமாறனென்று நினைக்கிறேன்'' என்றான்.

''நீங்கள் நினைத்ததில் தவறில்லை'' என்றான் இளமாறன்.

''உங்களுக்குத் துணை வரவும், உங்களுக்குப் பணி புரியவும் மன்னர் எங்களை அனுப்பியிருக்கிறார்'' என்றான் தலைவன்.

''காலையில் புறப்படுகிறோம். நீங்கள் இளைப்பாறுங்கள்'' என்று கூறிய இளமாறன் கதவைத் தாளிட்டு உள்ளே சென்றான். உள்ளே சென்றதும் ''நீலரதி! நிலைமை மீறிவிட்டது'' என்று சொன்னான். பிறகு இரைந்து ''சரி, படுத்துக் கொள்ளுங்கள். காலையில் உறையூருக்குப் புறப்பட வேண்டும்'' என்று கூறினான். அதற்குப் பூர்வாங்கமாக தானும் பாயை உதறிப் போட்டுப் படுத்து—''அப்பாடா!'' என்று ஆயாசம் தீர்த்துக் கொள்ளக் கால்களை நன்றாகவே நீட்டினான்.

□ □ □

# 17. கொள்ளிடக் கரை சத்திரம்

மன்னன் வீரர்கள் தங்களுக்குத் துணை வந்திருப்பதாகச் சொன்னாலும், தங்களை தப்பவிடாமல் பாதுகாத்து உறையூருக்குக் கொண்டு செல்லவே அவர்கள் அனுப்பப்பட்டிருப்பதைப் புரிந்துகொண்ட இளமாறன், நீலரதியையும், உதயகுமாரனையும் படுத்துக்கொள்ளச் சொல்லி விட்டு தானும் உடல் ஆயாசத்தைத் தீர்த்துக் கொள்வது போல் காலை நீட்டி ''அப்பாடா'' என்று கூச்சலிட்டாலும் அவன் உள்ளத்தில் அமைதி அணுவளவும் இல்லை. சிறிது நேரத்திற்கொருமுறை நீண்ட நித்திரையிலிருப்பவன்போல் புரண்டும் முனகியும் பாசாங்கு செய்ததன்றி ஒருமுறை கதவைத் திறந்து வெளியிலும் சென்றான். மன்னன் அனுப்பிய வீரர்கள் வாயிற்படிக்கு அக்கம் பக்கத்தில் சத்தியாக்கிரகம் செய்பவர்களைப்போல் படுத்துக் கிடந்ததையும், தலைவன் மட்டும் வாயிற்படிக்குக் குறுக்கே சண்டிபோல் படுத்திருந்ததையும் கண்டு வீரர்கள் எச்சரிக்கையுடனேயே இருப்பதைப் புரிந்து கொண்டான். ஆகவே வாயிற்படியில் உட்கார்ந்து குறுக்கே படுத்திருந்த தலைவனை 'ஐயா! வீரரே!'' என்று குரல் கொடுத்து எழுப்பினான்.

அந்தக் குரலைக் கேட்டு அலறிப் புடைத்துக்கொண்டு எழுந்திருந்த தலைவன் ''யார்? ஓகோ! நீங்களா?'' என்று கேட்டு நிம்மதிப் பெருமூச்சு விட்டான்.

இளமாறன் அவனை சமாதானப்படுத்தும் வகையில் ''வேறு யார் இங்கு வருவார்கள்?'' என்று வினவினான்.

''யார் வருவார்களோ தெரியாது. ஆனால் இந்தப் பெண்ணைக் கொண்டு வரும் விஷயத்தில் மிகுந்த எச்சரிக்கையுடனிருக்க வேண்டுமென்று மன்னர் கட்டளையிட்டிருக்கிறார்'' என்றான் தலைவன்.

"மன்னரின் இஷ்டத்துக்குக் குறுக்கே நிற்பவன் கூட புகாரில் இருக்கிறானா? என்று உக்கிரத்துடன் கேட்ட இளமாரன் "இந்தப் பெண்ணை அழைத்துவர எனக்கு மன்னரே நேரில் உத்திரவிட்டிருக்கிறார். அவர் எண்ணத்துக்கு இடைஞ்சல் செய்யும் எவனும் என் வாளுக்குப் பதில் சொல்லியாக வேண்டும்" என்றும் சொன்னான். அத்துடன் நிறுத்தாமல் "என் வாளும் அப்படி அற்ப சொற்பமானதல்ல" என்று சுய ஸ்தோத்திரமும் செய்து கொண்டான்.

இளமாரன் எதற்காக இதைக் கேட்கிறானென்பதைப் புரிந்து கொள்ளாத வீரர் தலைவன் "மன்னரே இதைப் பற்றிச் சொன்னார்" என்று கூறினான்.

"என்னைப் பற்றியா?"—எதும் புரியாதது போல் கேட்டான் இளமாரன்.

"ஆம். உங்களைப் போன்ற வீரர்கள் தமிழகத்தில் அதிகம் கிடையாதென்றும், உங்களிடம் எச்சரிக்கையாக நடந்துகொள்ள வேண்டுமென்றும் சொன்னார்" என்றான் தலைவன்.

"மன்னர் என்மீது வைத்திருக்கும் நம்பிக்கைக்கும் மதிப்புக்கும் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்" என்ற இளமாரன் "தலைவரே! படுத்து உறங்கும். காலை சூரியோதயத்திற்குச் சிறிது முன்னரே கிளம்பினால் சூரியன் உச்சிக்கு வரும் சமயம் குடமூக்குக்குப் போய்விடலாம்" என்று கூறிவிட்டு உள்ளே சென்று கதவை சாத்திக் கொண்டான்.

*

நேரம் ஓடியது. ஒரு ஜாமம் கழித்து மெல்ல எழுந்து பூனைபோல் அரவம் செய்யாமல் நடந்து கூடத்து சாளரத்தின் மூலம் வெளியே எட்டி ஆகாயத்தைப் பார்த்தான். பிறகு மீண்டும் மெதுவாக நடந்து வந்து நீலரதியை லேசாகத் தொட்டான். அவன் கையின் ஸ்பரிசம் பட்டதுமே விழித்துக் கொண்ட நீலரதி தனது



அழகிய நெடு விழிகளை இளமாரன் மீது நாட்டினாள். அவளை மெதுவாக எழுந்து வரும்படி சைகை செய்து விட்டு உள்கட்டை நோக்கிச் சென்றான். அங்கு வந்த நீலரதியை நோக்கி "நீலரதி! அச்சுதவிக்கண்டன் நம்மைக் காத்துக்கொண்டு வரவே இவர்களை அனுப்பியிருக்கிறான். ஆகையால் நாம் இன்னும் அரை ஜாமத்தில் கிளம்பவேண்டும் சித்தமாயிரு" என்று கூறிவிட்டு உதயகுமாரனை அடுத்து எழுப்பினான். ஏதோ கேட்க முற்பட்ட உதயகுமாரன் வாயைச் சட்டென்று பொத்திய இளமாரன் "சீக்கிரம் கிளம்ப வேண்டும். எதும் பேசாதே" என்று எச்சரித்துவிட்டு மீண்டும் இரண்டாம் கட்டுக்குச் சென்று விட்டான். அங்கிருந்த பக்கத்துக் கதவை மெதுவாகத் திறந்து வெளியே எட்டிப் பார்த்து திருப்திக்கு அறிகுறியாகத் தலையை அசைத்துக் கொண்டான். பிறகு நீலரதியையும் உதயகுமாரனையும் பின் கட்டுக்கு அழைத்து வந்து-மந்திரம் ஓதுவதுபோல் பேசினான். "இந்தக் கதவு வழியாக நான் முதலில் செல்கிறேன். நீலரதி என்னை அடுத்து வரட்டும். கடைசியாக உதயகுமாரன் வரட்டும். மிக மெதுவாக நாம் மனையின் மேற்குக் குறுக்குப் பாதையில் சென்றால் சிறிது தூரத்துக்குப் பிறகு ஒரு வழி கிழக்கு நோக்கித் திரும்பும். அதன் வழியே சென்றால் கடற்பகுதிக்கு வருகிறோம். அங்குள்ள பரதவரிடம் ஒரு படகை வாங்கிக் கொண்டு வடக்கே சென்று அரை காதத்துக்கு அப்புறம் இறங்கினால் கடலோரப்பாதை வருகிறது. அதன் வழியே செல்வோம்" என்று கூறினான்.

"வடக்குப் பாதையா?" என்று வியப்புடன் வினவினான் உதயகுமாரன்.

"விவாதத்தைப் பிறகு வைத்துக் கொள்வோம். இங்கு பேச்சைத் தொடங்கினால் அச்சுதவிக்கண்டன் அரண்மனைக்குத்தான் போய்ச் சேர முடியும்" என்று மேற்கொண்டு பேச வழியில்லாமல் செய்துவிட்டு உள்ளே

சென்று மறுபடியும் படுத்துக் கொண்டான். மற்றவர்களையும் படுத்துக்கொள்ளும்படி ஜாடை காட்டினான்.

மூவரில் யாரும் தூங்காவிட்டாலும் தூங்குவதுபோல பிரமையை ஏற்படுத்தினார்கள். இத்தகைய போலி உறக்கத்தில் அரைஜாமம் நீடிக்கவிட்ட இளமாறன் மெதுவாக எழுந்து நடக்க, மற்ற இருவரும் எழுந்து அவனைப் பின் தொடர்ந்தனர். கதவை மிக மெதுவாகத் திறந்த இளமாறன் வெளியே சுற்றுமுற்றும் நோக்கிவிட்டு மற்ற இருவரையும் வெளியே வரப் பணித்தான். அவர்கள் வந்ததும் நிதானமாகவும் எந்தவித பரபரப்பைக் காட்டாமலும் வாணகிரி மேற்குப் பாதையில் நுழைந்தான். பாதை ஒற்றையடியாயிருந்ததைத் தவிர சற்று கடுமையாக இருந்ததால் உதயகுமாரன் சிறிது சிரமப்பட்டு நடந்தாலும் இளமாறனும் நீலரதியும் அனாயாசமாக நடந்தனர். இப்படி நடந்து கடற்கரைக்கு வந்ததும் அங்கிருந்த பரதவர் குடிசையொன்றில் நுழைந்த இளமாறன் சற்று நேரத்திற்கெல்லாம் ஒரு பரதவனுடன் வெளியே வந்தான். பரதவனும் கடற்கரையோரத்திலிருந்த தனது படகை நீரில் இழுத்துவிட்டு பயணிகளை ஏறவிட்டு, தானும் ஏறி படகைச் செலுத்தலானான். படகை வடதிசையில் திருப்பிச் செலுத்திய பரதவன் கூடியவரை அதைக் கரையோரமே செலுத்தினான். பொழுது விடிவதற்குச் சற்று முன்பே கரையில் படகைச் செலுத்தச் சொல்லி இறங்கிவிட்ட இளமாறன் பரதவனுக்கு சிறிது வெள்ளி நாணயங்களைக் கொடுத்துவிட்டு ''மூப்பா! இது ரகசியமா இருக்கட்டும். நீ போகும்போது சில வாளைமீன்களைப் பிடித்துக்கொண்டு போ. உன் மீது சந்தேகம் ஏற்படாது'' என்று யோசனையும் சொன்ன இளமாறன், கடற்கரையை அடுத்த சிறு கிராமத்திற்குள் நுழைந்தான். அந்த ஊரின் நாட்டாண்மைக்காரனை அணுகி ''ஐயா! நாங்கள் உறையூர் செல்ல வேண்டும். வண்டியோ புரவிகளோ வாடகைக்குக் கிடைக்குமா?'' என்று விசாரித்தான்.



இந்த ஊரில் நான்கே புரவிகள் தானிருக்கின்றன. அவை வாடகைக்குக் கிடைக்கா. விற்பனைக்குத்தான் வைத்திருக்கிறார்கள்'' என்றான் நாட்டாண்மைக்காரன்.

''சரி, புரவிகளைப் பார்க்கலாமா?'' என்று இளமாறன் வினவ, நாட்டாண்மைக்காரன் அவர்களை அழைத்துக் கொண்டு அந்த ஊரின் தெற்கு வீதியிலிருந்த புரவி வணிகரிடம் சென்றான்.

வணிகன் காட்டிய புரவிகளைப் பார்த்த இளமாறன் அவை நல்ல ஜாதிப் புரவிகளென்பதைப் புரிந்து கொண்டான். அவற்றில் மூன்றைப் பொறுக்கி அவற்றின் விலையைக் கேட்டான். விலை மிக அதிகமாக இருந்ததால் ''புரவிகள் சிறந்தவைதான். ஆனால் விலை அதிகமாயிருக்கிறது'' என்று தனது கருத்தையும் சொன்னான்.

''வீரரே! இந்தப் புரவிகளை நான் மன்னருக்காக வரவழைக்கின்றேன். சிறந்த ஜாதிப் புரவிகளைத் தவிர தரக்குறைவான சரக்கு ஏதும் என்னிடம் கிடையாது. விலை விவரம் நீங்கள் அரண்மனையிலேயே விசாரித்துக் கொள்ளலாம்'' என்று கண்டிப்பாகப் பேசினான் புரவி வணிகன்.

அதற்குமேல் பேச்சை வளர்த்தாத இளமாறன், தான் பொறுக்கிய மூன்று புரவிகளுக்கு விலையைக் கொடுத்துவிட்டு அவற்றின் லக்ஷணங்களைப் பார்த்து ஒரு குறிப்பிட்ட புரவியை நீலரதிக்குக் கொடுத்தான். மீதி இரண்டு புரவிகளில் உதயகுமாரனை இஷ்டப்படி எடுத்துக் கொள்ளச் சொன்னான். சற்று முரடாகத் தெரிந்த மூன்றாவது புரவியைத் தான் எடுத்துக்கொண்டு சேணத்தை இறுக்கி ஏறிக்கொண்டான். போகும்போது வணிகனை நோக்கி ''வணிகரே! அரண்மனையைச் சேர்ந்த எனது காவலர் வந்தால் நான் அவசரமாக உறையூருக்குச்சென்றுவிட்டதாகச் சொல்லும். எங்கள் மூவரையும் உறையூர் அரண்மனையில் சந்திக்கச் சொல்லும்'' என்று கூறி புரவியை உறையூர் வழியில் செலுத்தினான். சிறிது

தூரம் சென்றதும் மறுபடியும் வடக்கே திரும்பிப் புரவியை நிதானமாகவே செலுத்தலானான். அவனுக்கு இணையாக நீலரதி புரவியைச் செலுத்தினாலும் உதயகுமாரன் சிறிது பின்தங்கியே வந்ததால் மந்தகதியிலேயே பயணம் நடந்தது. இருப்பினும் எப்படியோ பொழுது போவதற்குள் கொள்ளிடக் கரையை அடைந்துவிட்ட இளமாரன் அங்கிருந்த சத்திரமொன்றில் தங்க முடிவு செய்து சத்திரத்தை நோக்கிப் புரவியைச் செலுத்தினான். அந்த பழைய சோழர்காலச் சத்திரம் கொள்ளிடக் கரையை அணைத்ததுபோல் கட்டப்பட்டிருந்ததாலும், சுற்றிலும் அடர்ந்த தோப்பிருந்ததாலும், அதுதான் தங்க சிறந்த இடம் என்று தீர்மானித்த இளமாரன் அந்த சத்திரக்காரனிடம் தங்க இரண்டு அறைகள் கேட்டான். சத்திரக்காரன் அவர்களைப்பற்றிய விவரங்களை விசாரித்தான் இளமாரன் மூவர் பெயரையும் மாற்றிச் சொல்லி இரண்டு அறைகளுக்கு வாடகை கொடுத்து அந்த இரண்டிலும் உதயகுமாரனையும் நீலரதியையும் தங்கச் செய்தான்.

"நீங்கள்?" என்று நீலரதி கேட்டாள்.

"நான் தோப்பில் தங்குகிறேன்" என்றான் இளமாரன்.

"என்" —நீலரதி கவலையுடன் வினவினாள்.

"காரணமிருக்கிறது, உணவருந்திப் படுத்துக்கொள். மீண்டும் மூன்றாவது ஜாமத்தில் பயணம் செய்ய வேண்டும்" என்று கூறிவிட்டு வெளியே சென்றான் இளமாரன்.

வாயிலிலிருந்த புரவியை அழைத்துக் கொண்டு போய் அதை நன்றாகக் கொள்ளிடத்தில் நீராட்டி உடலைத் துடைத்துவிட்டான். பிறகு அதை பசும்புல்லில் மேய விட்டு சத்திரக் கட்டடத்தை நோக்கியவண்ணம் எட்ட உட்கார்ந்து கொண்டான்.

முதல் ஜாமம் நகர்ந்து "இனி பயமில்லை" என்று தனக்குள் சொல்லிக் கொண்டு படுத்தான் இளமாரன்.



அவன் படுப்பதற்கும் சத்திரத்து அறையொன்றில் விளக்கு ஒன்று நடமாடுவதற்கும் நேரம் சரியாயிருந்தது. விளக்கு நடமாடிய அறை நீலரதியின் அறையாகையால் அதை நோக்கி விரைந்த இளமாரன், அந்த அறை சாளரத்திலிருந்து சத்திரக்காரன் இறங்குவதைக் கண்டு சற்று மறைவிலேயே நின்றான். சாளரத்திலிருந்து இறங்கிய சத்திரக்காரனும் கையிலிருந்த விளக்கை அணைத்துவிட்டு சாளரத்துக்குக் கீழே இருந்த யாரிடமோ ஏதோ பேசிக் கொண்டிருந்தான். "வந்திருப்பவன் இளமாரன்தான். அந்தப் பெண்ணும் நீலரதிதான். சந்தேகமில்லை" என்று சத்திரக்காரன் சொன்னான்.

வந்தவன் கேட்டான், "இளமாரனிடமிருந்து இந்தப் பெண்ணைப் பிரித்து எடுத்துச்செல்ல முடியுமா?" என்று.

"கண்டிப்பாக முடியும். நான் கொடுத்திருக்கிற மருந்து காலை வரையில் அவள் கண்ணைத் திறக்க விடாது. எதற்கும் ஒரு ஜாமம் கழித்து எடுத்துப்போவது நல்லது. எல்லோரும் உறங்குவார்கள்" என்றான் சத்திரக்காரன். அடுத்து சத்திரக்காரனும் அந்தப் புதுமனிதனும் சத்திரத்துக்குள் சென்றார்கள். ஜாமம் ஒன்று கடந்ததும் நீண்ட ஓர் உருவம் சேலையால் உடல் முழுவதும் சுத்தப்பட்டு இரு பணியாட்களால் எடுத்து வரப்பட்டது. தூக்கி வந்தவர்கள் அந்த உருவத்தை ஒரு பெரிய புரவி வண்டியில் கிடத்தினார்கள். வண்டிக்காரன் புரவியை முடுக்க வண்டி உறையூர் மார்க்கத்தில் பறக்கலாயிற்று.

□ □ □

# 10. இளமாறனின் ராஜபக்தி

நீலரதியைத் தாங்கிய பெரிய புரவி வண்டி கொள்ளிடக் கரை சத்திரத்துத் தோப்பிலிருந்து கிளம்பிய வரையில் அதைப் பார்த்துக்கொண்டு ஒரு மரத்தின் மறைவில் நின்ற இளமாறன், அந்த வண்டி தென்சாலைப் பாதையை அடைந்ததும் துரிதமாகச் செயல்படலானான். சத்திரத்துக்குள் சென்று, நன்றாக உறங்கிக் கொண்டிருந்த உதயகுமாரனை எழுப்பி "எழுந்திரு சீக்கிரம். உன் புரவியை அவிழ்த்துக்கொள். இதோ வருகிறேன்" என்று கூறிவிட்டு நேராக சத்திரக்காரன் அறைக்குள் சென்று கட்டிலில் படுத்திருந்த அவனைத் தன் வாளால் தட்டி எழுப்பினான். அலறிப் புடைத்துக்கொண்டு எழுந்திருந்த சத்திரக்காரன் தனது கண்ணெதிரே தெரிந்த நீண்ட வாளின் நுனியைக் கண்டதும் திகிலடைந்து "மன்னிக்க வேண்டும். நானாக எதுவும் செய்யவில்லை. மன்னர் உத்தரவு" என்று உளறினான்.

"தெரியும் எனக்கு. பேச்சை வளர்த்தாதே. பயண ஆடைகளை அணிந்துகொள்" என்ற இளமாறன் கண்களை நோக்கிய சத்திரக்காரன் மறுவார்த்தை பேசாமல் உடைகளை அணிந்து கொண்டான்.

"உன் வாளையும் எடுத்துக்கொள். குறுவாளிருந்தால் அதையும் கச்சையில் செருகிக்கொள்" என்று இளமாறன் கடுமையாக சொற்களை உதிர்க்க அந்த ஆயுதங்களையும் எடுத்துக்கொண்டான் சத்திரக்காரன். அடுத்து இளமாறன் காட்டிய சைகையைத் தொடர்ந்து அவனைப் பின்பற்றிச் சென்றான்.

"அரவம் ஏதும் செய்யாதே. நீ மூச்சுவிட்டாலும் அதுதான் உன் கடைசி மூச்சாயிருக்கும்" என்று



எச்சரித்து அவனை அழைத்துக் கொண்டு தோட்டத்துக்குச் சென்றதும் "உன் புரவிக் கொட்டடியை நோக்கி நட. அங்கிருந்து உன் புரவியை அவிழ்த்துக் கொள்" என்று மேலும் உத்தரவிட்டான்.

இளமாறன் சொன்ன எதையும் மறுக்காமல் நடந்துகொண்ட சத்திரக்காரன் புரவியில் ஏறியதும், இளமாறனும், உதயகுமாரனும் அவனது இரு பக்கத்திலும் வர சத்திரக்காரன் பயணத்தைத் தொடங்கினான். தெற்கு சாலை வந்ததும் அதில் தனது புரவியைத் திருப்பிய இளமாறன் சத்திரக்காரனுடன் பேச்சுக் கொடுக்கத் தொடங்கி "சத்திரக்காரரே! எங்கள் வருகை உனக்கு எப்பொழுது அறிவிக்கப்பட்டது?" என்று வினவினான்.

"நீங்கள் வருவதற்கு சற்று முன்பு" என்றான் சத்திரக்காரன்.

"செய்தி கொண்டு வந்தது யார்?" என்று மேலும் வினவினான் இளமாறன்.

"கண்ணைநாசன் மடத்துத் துறவி ஒருவர்" என்றான் சத்திரக்காரன்.

"பெயர்?"

"இப்பொழுது என்ன பெயரோ தெரியாது. துறவியாயிருந்தபோது சாந்தானந்தர் என்றழைக்கப்பட்டார். இப்பொழுது துறவறத்தைத் துறந்துவிட்டாராம். வீரர்கள் உடையில் ஆயுதந்தரித்து வந்தார்."

"வியப்பாயிருக்கிறதே."

"வியப்பு ஏதுமில்லை இதில். மன்னரே அவரை மடத்துக் காவலர் பதவிக்கு உயர்த்திவிட்டதாக அவரே சொன்னார்."

"துறவறத்தைவிட லௌகீகப் பதவி உயர்ந்ததென்று நினைக்கிறாரா?"

"அப்படித்தான் நினைப்பதாகத் தெரிகிறது."

''இது விசித்திரமாயில்லை?''

''விசித்திரந்தான். ஆனால் அவர் மாற்றத்துக்குக் காரணம் தெரியவில்லை.''

இதைக் கேட்ட இளமாரன். ''நான் சொல்லட்டுமா காரணத்தை?'' என்று கேட்டான்.

அவன் குரலிலிருந்த ஒலியைக் கேட்ட சத்திரக்காரன் முகத்தில் சந்தேகக்குறி தோன்றலாயிற்று. ''சொல் லுங்கள்'' என்று கேட்டான்.

இளமாரன் தனது புரவியின் வேகத்தைக் குறைக் காமல் பயணம் செய்து கொண்டே சொன்னான். ''இதே நீலரதியைக் கற்பழிக்க முயன்ற மடத்துக் காவலர் தலைவனை ஆதரித்ததற்காக சாந்தானந்தரை மன்னரே காவலர் தலைவராக மாற்றினார். அதை ஒரு தண்டனை யாகக் கொடுத்தார். துறவியை லௌகிகத்தில் தள்ளு வதைவிட வேறு என்ன அவமானம் இருக்க முடியும்?'' என்று. மேலும் சொன்னான்: ''சத்திரத்துத் தலைவரே! நீலரதியை மீண்டும் அவரிடம் ஒப்படைக்கு முன்பு என்னை ஒரு வார்த்தை கேட்டிருக்கலாம். நீலரதியைக் காத்து தன்னிடம் கொண்டு வரும்படி என்னைத்தான் மன்னர் நியமித்தார். புகாரிலிருந்து நேராக உறையூர் செல்வதில் சில சங்கடங்கள் இருந்ததால் நான் வடக்கே செல்வதாகப் பாய்ச்சல் காட்டி இங்கு வந்து தெற்கே திரும்ப நினைத்தேன். ஆனால் மன்னரால் தண்டிக்கப் பட்ட சாந்தானந்தர் என்னை ஏமாற்றிவிட்டார். ஆனால் இக்கதை இத்துடன் முடியாது. எப்படியும் நீலரதியை சாமியாரிடமிருந்து மீட்டு சக்கரவர்த்தியிடம் ஒப்படைப்பேன். அச்சுதவிக்கண்டன் இட்ட கட்டளையில் யாரும் குறுக்கிட நான் சம்மதிக்க மாட்டேன்.'' இதை மிகுந்த உக்கிரத்துடன் சொன்னதைக் கேட்ட சத்திரக் காரன் மனத்தில் மெல்ல மெல்ல சந்தேகம் உதயமாயிற்று. ''மன்னர் உத்தரவு என்று கூறினாரே சாந்தானந்தர்?'' என்று வினவினான் சத்திரக்காரன்.



''அத்தாட்சி ஏதாவது காட்டினாரா?'' என்று கேட் டான் இளமாரன்.

''இல்லை. அவருடன் அரசன் படை வீரர் இருவரை அழைத்து வந்தார்.''—இதை சிறிது சந்தேகத்துடன் சொன்னான் சத்திரக்காரன்.

''எந்தக் குற்றத்துக்கும் உடந்தையாக ஆட்களை இழுக்க முடியும். உதாரணமாக நீர் விஷயம் தெரியாமல் இதில் சிக்கிக் கொள்ளவில்லையா?'' என்று இளமாரன் கேட்டான்.

சத்திரக்காரனுக்கு சந்தேகம் அதிகமாகி இன்னும் அதிகமாயிற்று. அதனால் மனம் குழம்பிய சத்திரக்கா ரனை நோக்கிய இளமாரன், ''சத்திரக்காரரே! இந்த மாதிரி ராஜத்துரோகக் குற்றங்களை மன்னர் சகிப்ப தில்லை'' என்றும் சொல்லி அவன் கிலியை அதிகப் படுத்தினான்.

இந்த உரையாடலை ஏதும் பேசாமல் மௌனமாகக் கேட்டுக் கொண்டு வந்த உதயகுமாரன், ''அப்பா! என்ன பொய்'' என்று உள்ளூர எண்ணினாலும் ஏதும் சொல்ல வில்லை. நீலரதியின் கதியை எண்ணி ''நீலரதியை ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும்'' என்று சற்றே இரைந்தே சொல்லிப் பெருமூச்செறிந்தான்.

இளமாரன் இகழ்ச்சி நிறைந்த பார்வையை உதய குமாரன் மீது வீசி ''உன் ஆண்டவன் நீலரதியை ஏன் சத்திரத்திலேயே காப்பாற்றி இருக்கக் கூடாது?'' என்று வினவினான்.

''எப்பொழுது காப்பாற்றுவது, எப்படிக் காப்பாற்று வது என்று அவருக்குத் தெரியும்'' என்றான் உதய குமாரன்.

''அதைப்பற்றி உன்னிடம் ஏதாவது சொல்லியிருக் கிறாரா?'' என்று இளமாரன் மீண்டும் கேட்டான்.

அவன் குரலிலிருந்த இகழ்ச்சி ஒலியைக் கவனிக்கவே செய்த உதயகுமாரன் ''யாரிடமும் அவர் சொல்வதேயை

யில்லை. அவரே செய்வார்'' என்று தனது உறுதியைக் காட்டினான்.

இந்த சம்பாஷணை சத்திரக்காரனுக்கு இளமாரனிடமிருந்த நம்பிக்கையை அதிகப்படுத்தியது. பௌத்தனுமான சத்திரக்காரன், வேதத்தில் சொல்லப்பட்ட கடவுள்களை நம்பாத இளமாரன் பௌத்தனான அச்சுதவிக்கந்தனைச் சேர்ந்தவன்தான் என்பதை உறுதி செய்து கொண்டதும் அவன் போக்கு அடியோடு மாறலாயிற்று. ''இளமாரரே! நீலரதியை மீட்டு மன்னரிடம் சேர்க்க வேண்டுமானால் நாம் துரிதமாகப் பயணம் செய்ய வேண்டும்'' என்று கூறினான்.

அதற்கு இளமாரன் சொன்ன பதில் அவனுக்கு இளமாரனிடம் இருந்த நம்பிக்கையை மேலும் உறுதிப்படுத்தியது. இளமாரன் சொன்னான் சத்திரக்காரனை நோக்கி. ''சத்திரக்காரரே! நமது எதிரிகள் நாளைப் பொழுது குடமூக்கிலுள்ள மன்னர் உல்லாச விடுதியில்தான் தங்குவர். அங்கு அதிகக் காவலும் கிடையாது. காவிரிக் கரையில் விடுதி இருப்பதால் உமது சத்திரத்தைச் சுற்றியது போன்ற தோப்பு அங்கிருக்கிறது. உல்லாச விடுதியென்று அதற்குப் பெயரே தவிர, அது உண்மையில் ஒரு படைவீடு. அதைச் சுற்றியுள்ள தோட்டத்து முகப்பில் சிறிது காவலும் உண்டு'' என்று கூறினான்.

சத்திரக்காரன் முகத்தில் பிரமிப்பு பெரிதும் விரிந்தது. ''இளமாரனே! மன்னரின் அத்தியந்த நண்பர்களுக்குத்தான் குடமூக்கு உல்லாச விடுதி விவரங்கள் தெரியும். விஷயம் தெரியாமல நீலரதியை எதிரிகளிடம் ஒப்படைத்து விட்டேன்'' என்று வருத்தம் தோய்ந்த குரலில் கூறவும் செய்தான் சத்திரக்காரன்.

இளமாரன் சத்திரக்காரனை நோக்கிப் புன்முறுவல் செய்து, ''சத்திரக்காரரே! அஞ்ச வேண்டாம். நீலரதியை மன்னரின் எதிரிகளிடமிருந்து கண்டிப்பாய் மீட்போம்.



அதற்கு நீர் செய்யும் உதவியைப் பற்றி மன்னரிடம் நான் நேரில் சொல்கிறேன். மன்னர் உமது பதவியை கண்டிப்பாய் உயர்த்துவார்'' என்று அபயம் கொடுக்க சத்திரக்காரன் நிம்மதிப் பெருமூச்சு விட்டான்.

இப்படி உரையாடலை முடித்து சத்திரக்காரன் மனத்தையும் குளைத்த இளமாரன் கதிரவன் நடு உச்சிக்கு வந்து விட்டதைக் கண்டு, ''குடமூக்கு இன்னும் அதிக தூரத்தில் இல்லை. நாம் இரவு மூண்டதும் ஊருக்குள் செல்வோம். அதுவரை வெளித்தோப்பு எதிலாவது மறைந்திருப்போம்'' என்று கூற சத்திரக்காரனும் அதற்கு சம்மதித்தான்.

மன்னன் உல்லாச விடுதியிலிருந்து சற்று தூரத்திலிருந்த தோப்பில் அன்று பொழுதைக் கழித்த இளமாரன் இருள் மூண்ட சில நாழிகைகளுக்கெல்லாம் சத்திரக்காரனை நோக்கி ''நீங்கள் உல்லாச விடுதிக்குச் சென்று அங்கு நீலரதியின் நிலை எப்படியிருக்கிறது என்று பார்த்து வாருங்கள். அங்கு சாந்தானந்தர் ஏதாவது விசாரித்தால், மன்னரிடமிருந்து வீரர்கள் நீலரதியைத் தேடிக்கொண்டு வந்ததாகச் சொல்லி அவர்களை நடுநிசியில் உறையூருக்குக் கிளம்ப ஏற்பாடு செய்யுங்கள்'' என்றான்.

இளமாரன் சொன்னபடி சுத்தமாக நடித்த சத்திரக்காரனை சாந்தானந்தருங்கூட நம்பினார். ஆகவே அன்றிரவு உறையூருக்குக் கிளம்ப உத்தரவும் இட்டார். நடுநிசி வந்ததும் நீலரதி இரண்டு வீரர்களின் காவலுடன் வெளி வந்தாள். ஆனால் எந்தவித எதிர்ப்பையும் காட்டவில்லை. சாந்தானந்தரை நோக்கி ''அடே! அயோக்கியத் துறவி! உன்னை இளமாரர் விடமாட்டார். உன் ஆயுட்காலம் அதிக நாள் இல்லை'' என்று மிரட்டி விட்டு வண்டியில் ஏறினாள்.

வண்டிக்கு முன்பு வண்டிக்காரனும் இன்னொரு வீரனொருவனும் உட்கார்ந்துகொள்ள சாந்தானந்தர்

பின்னால் அமர்ந்தார். வண்டியை சாரதி முடுக்கினான்.
வண்டி நகரவில்லை. என்ன காரணம் என்பதைப் பார்க்க
கீழே இறங்கி சக்கரத்தைக் கவனித்தான். சக்கரத்தின்
கடையாணி கழன்றிருந்தது. குறுக்கே ஒரு மரத்தினால்
செய்த ஆப்பு செருகப்பட்டிருந்தது. அதைப் பிடுங்கி
யதும் சக்கரம் சரிந்து வண்டியும் குடை சாய்ந்தது; குடை
சாய முற்பட்டதுமே சாந்தானந்தர் கீழே குதித்தார்.
அதே சமயத்தில் நீலரதி வண்டிக்குள்ளிருந்து இரு வலிய
கரங்களால் தூக்கப்பட்டாள். துறவி வாளை உருவினார்.
ஏதோ தவறு நடந்திருக்கிறது என்பதை உணர்ந்து,
''வாளைக் கீழே போடு'' என்ற உத்தரவு அவரைத்
திகைக்க வைத்தது. அவர் கழுத்தை நோக்கி வாளை
நீட்டிக்கொண்டிருந்தான் சத்திரக்காரன்.

''உனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா?'' என்று
சீறினார் காவலர் தலைவன் உடையிலிருந்த துறவி.

''இல்லை. பைத்தியம் தெளிந்து விட்டது'' என்றான்
சத்திரக்காரன்.

அதே சமயத்தில் தோப்பில் இரு வீரர்கள் அலறும்
ஒலி கேட்டது. அதைக் கவனிக்க திரும்பிய சாந்தானந்தர்
தலையில் சத்திரக்காரன் வாள் இறங்கவே அவர் நினை
விழந்தார்.

அவருக்கு நினைவு மீண்டபோது அவர் அந்த
விடுதிக்குள் இருந்தார். காயமடைந்த இரு வீரர்கள்
விடுதிக்கூடாரத்தில் முனகிக்கொண்டிருந்தனர். அவர்
கண்ணுக்கு எதிரில் இளமாறன் நின்றிருந்தான். பக்கத்
தில் நீலரதியும் நின்றிருந்தாள். அவள் கையிலும் நீண்ட
வாளிருந்தது. ''நீலரதி! இந்த போலித்துறவி மன்னரின்
பகைவன். இவனைத் தீர்த்து விடு'' என்று கூறினான்
இளமாறன்.

துறவி தமது ஆயுட்காலம் முடிந்துவிட்டதைப்
புரிந்து கொண்டார்.

# 19. உல்லாச விடுதி

குடமூக்கு என்று பழைய தமிழ் நூல்களில் குறிப்
பிடப்பட்ட கும்பகோணத்தின் உல்லாச விடுதியின்
அமைப்பே சிறப்பாயிருந்தது. தவிர வசதிகளும் மன்னர்
கள் தங்குவதற்குத் தக்கபடி இருந்ததால், அந்த விடுதியின்
கூடத்தில் கிடந்த சாந்தானந்தர் சாட்சாத் மன்னனைப்
போலவே காட்சியளித்தார். துறவறத்துக்குப் பிறகு
ராணுவப் பணியை ஏற்றதால் அவர் மார்பில் தங்கிய
பாதுகாப்புக் கவசமும், மடியிலிருந்த ரத்தினப்பிடி
குறுவாளும், மார்புக் கவசத்தின்மீது புரண்டு கிடந்த வீர
சங்கிலியும், அவரை ஒரு மன்னராகவே மாற்றியிருந்த
தால் அவர் அத்தனை இக்கட்டிலும் அங்கிருந்தவர் மீது
அதிகாரப் பார்வையையே வீசினார். ''நீலரதி! இந்த
ராஜ துரோகியின் பேச்சை நம்பி என்னைக் கொன்று
விட்டால் மன்னன் உன்னை மானபங்கப்படுத்தி
சித்திரவதை செய்வான்'' என்று உறுமினார்.

நீலரதியின் கண்கள் சாந்தானந்தரை மிகுந்த வெறுப்
புடன் நோக்கின. ''பச்சை ஓணான்போல் அவ்வப்
பொழுது மாறும் அயோக்கியனே! மன்னர் மானபங்கப்
படுத்துவார் என்று நீ அவரை இகழ்ந்து பேசுவது பெரும்
ராஜ துரோகக் குற்றம். என் கறையைக் குலைக்க கன்ன
தாசன் மடத்தின் காவலர் தலைவனிடம் என்னைத்
தள்ளியதைவிட வேறு மானபங்கச் செயல் என்ன இருக்க
முடியும்? என்னை அழைத்துவர மன்னர் உன்னை நியமிக்க
வில்லை. நியமித்தது இவரை'' என்று கூறி இளமாறனை
நோக்கி கையையும் காட்டினாள்.

அப்பொழுது மீண்டும் கடுமையாக எழுந்தது
இளமாறன் குரல். ''நீலரதி! இவனிடம் பரிதாபம் காட்

நீலரதி

டாதே. இவன் உன்னிடம் என்ன பரிதாபம் காட்டினான்? உன்னை அரசரிடம் கொண்டு செல்ல முயன்ற என்னை ஏமாற்றி, இந்தநல்லவர் சத்திரக்காரரை ஏமாற்றி, இங்கு தூக்கி வந்த போலித் துறவியை இன்னும் உயிருடன் உலகத்தில் இருக்கவிடுவது தவறு'' என்றான் இளமாறன்.

இளமாறன் பேச்சைக்கேட்ட சாந்தானந்தர் ''நலரதி இவனை நம்பி செயல்படாதே. அதனால் விபரீத விளைவுகள் ஏற்படும்'' என்று கூவினார்.

ஆனால் அவர் கூக்குரல் யார் காதிலும் விழுந்ததாகத் தெரியவில்லை. ஒவ்வொருவர் முகத்தையும் திரும்பித் திரும்பிப் பார்த்தார். எல்லோர் முகத்திலும் வெறுப்பின் சாயை உலாவுவதை கவனித்த சாந்தானந்தர், ''ஆண்டவன் விட்ட வழி'' என்று இரைந்தே கூறினார். அடுத்த விநாடி அவர் தூக்கி நிறுத்தப்பட்டு அவர் கை கால்கள் பிணைக்கப்பட்டன. ''இவரை ஏதாவது ஓர் அறையில் தள்ளி வையுங்கள்'' என்று இளமாறன் கூறிவிட்டு அந்த விடுதியில் அரசர் தங்கும் அறையிலேயே தானும் நீலரதியும், உதயகுமாரனும் இருக்க ஏற்பாடு செய்து கொண்டான்.

இளமாறன் உத்தரவுப்படி சாந்தானந்தர் உல்லாச விடுதியின் கடைசி கட்டு அறை ஒன்றில் சிறை வைக்கப்பட்டார். இளமாறனால் தோப்பில் காயப்படுத்தப்பட்ட இரண்டு வீரர்களுக்கும் சிகிச்சை செய்து அவர்களும் சிறையில் அடைக்கப்பட்டனர். பிறகு சத்திரக்காரனை அழைத்துக்கொண்டு தானும் நீலரதியும் இருந்த இடத்திலேயே அவனையும் இருக்க நியமித்தான். முதல் ஜாமம் கடந்ததும் சத்திரக்காரனை அழைத்து, ''சத்திரக்காரரே! இந்த உல்லாச விடுதியை சூழ்ந்திருக்கும் தோப்புமுகப்பில் காவிரிக்கரையை அடுத்திருக்கும் பெரிய மேட்டில் அரசாங்க காவலர் குடிசைகள் இருக்கின்றன. அவற்றில் சமீபத்தில், வந்தவர் யாராவது இருக்கிறார்களா என்று



விசாரித்து வாரும். இந்த இரண்டாவது ஜாமத்திலேயே நாம் புறப்படுகிறோம்'' என்று கூற சத்திரக்காரன் விரைந்தான் தோப்பின் முகப்பை நோக்கி. அங்கு பல குடிசைகளிருந்தாலும் நட்ட நடுவில் ஒரு சிறு கல் கட்டிடமும் இருந்ததைப் பார்த்தான். அதன் கதவு திறந்திருந்ததையும், உள்ளே விளக்கு வெளிச்சம் இருந்து கொண்டிருந்ததையும் நோக்கிய சத்திரக்காரன் அக்கட்டிடத்தை நோக்கி நடந்தான். அதன் வாயிற் கதவுகள் இரண்டும் நன்றாகத் திறந்திருந்தன. அதற்கு நேர் எதிர்கூடத்தில் பெரிய கூண்டு விளக்கின் வெளிச்சத்தில் ராணுவ உடை தரித்த ஒரு வாலிபன் மஞ்சமொன்றில சாய்ந்து முன் மஞ்சமொன்றில் கால்களைப் போட்டு நீட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தான். அவன் மஞ்சத்துக்குப் பின்னால் ராட்சஸன் போன்ற இன்னொருவரும் நின்றிருந்தார். அவர் முகத்திலிருந்த வடுக்களும் அவரது நீண்ட நாள் போர்ப் பயிற்சியை வலியுறுத்தியதன்றி, இடைக் கச்சையிலிருந்த அசுர வாளும் அவர் யாரோ பெரும் பதவிக்காரர் எனப் புரியவைத்தது. அந்தக் காட்சியைக் கண்டதும் கட்டிடத்தை முழுதும் அணுகாமல் சற்று மறைந்தே நின்ற சத்திரக்காரன் நடக்கவேண்டிய விஷயங்களையும் அலசிப் பார்த்து கடைசியில் துணிந்து அந்த விடுதிக்குள் நுழைந்தான். அவன் படியில் ஏறும்போதே மஞ்சத்தில் அரைவாசி மல்லாந்திருந்த வாலிபன் அவனைக் கவனித்துவிட்டதால் ''வருக! படைத்தலைவரே!'' என்று அன்புடன் அழைத்தான்.

அதைக் கேட்டதால் பிரமிப்படைந்த சத்திரக்காரன் அந்த வாலிபனை நோக்கி ''வீரரே! நான் படைத்தலைவனல்ல'' என்று தாழ்மையுடன் விண்ணப்பித்துக் கொண்டான்.

அந்த வாலிபன் நகைத்தான். ''அப்படியானால் சத்திரக்காரரே என்று அழைக்கட்டுமா?'' என்று வினவினான் நகைப்பின் ஊடே.

சத்திரக்காரன் பிரமை அதிகமாயிற்று. ''என்னை உங்களுக்கு முன்னமே தெரியுமா?'' என்று வினவினான்.

அந்த வாலிபன் முகம் குழந்தை முகமாக இருந்ததை யும், மீசைகூட சரியாக முளைக்காத வாலிபத்தின் ஆரம்ப தசையில் அவன் இருந்ததையும் கவனித்த சத்திரக்காரன் ''என்னை உங்களுக்குத் தெரிந்திருந்தாலும் தெரியா விட்டாலும் பாதகமில்லை. தாங்கள் யார்? எங்கு வந்தீர் கள்? தங்கள் பின்னால் நிற்கும் அந்த வீரர் யார் என்பதை நான் அறிந்து கொள்ளலாமா?'' என்று கேட்டான்.

அந்த வாலிபன் சற்று தன்து தலையைத் தூக்கி தனக்குப் பின்புறத்தில் நின்றவனைப் பார்த்து ''நாம் யாரென்பதையும், வந்த காரியம் என்ன என்பதையும் சொல்லும்'' என்று உத்தரவிட்டான்.

''இவர்தான் மார்த்தாண்ட மகாப்பிரபு. மன்னாதி மன்னர் அச்சுதவிக்கண்டரின் வடபுலப் படைத்தலைவர். இவர் மன்னரின் அந்தரங்க அமைச்சர் பூபதியின் ஒரே புதல்வர்'' என்று அந்த ராட்சஸ மனிதர் கூறினார். ''நான் தென்புலப் படைகளின் தலைவன். என் பெயரைச சொல்ல வேண்டுமா?'' என்றும் விசாரித்தார்.

மெல்ல மெல்ல உண்மை உதயமாயிற்று, சத்திரக் காரன் புத்தியில், தென்புலப் படைத்தலைவனான மாவலி மகாவீரரென்பதும், கொடுமையில் அவருக்கு யாரும் நிகரில்லை என்பதும் களப்பிர நாட்டில் மட்டுமன்றி மற்ற நாடுகளிலும் பிரசித்தமாயிருந்ததால் அவரைப்பற்றி ஏதும் விசாரிக்க அவசியமில்லாது போயிற்று சத்திரக் காரனுக்கு. ஆனால் இருவர் வருகையும் நல்லதற்கல்ல என்பதை மட்டும் அவர் உணர்ந்து கொண்டதால் அவர் களிடம் விடைபெற முயன்று ''யாரோ இங்கு புதிதாக வந்திருப்பதாகக் குடிசைக் காவலர்கள் சொன்னார்கள். பார்க்கலாமென்று வந்தேன். காலையில் சந்திக்கிறேன்.



ஏதாவது இப்பொழுது தேவையிருந்தால் உத்தர விடுங் கள்'' என்று கூறினான்.

இருவருடமிருந்தும் எந்தக் கோரிக்கையும் வராது போகவே ''அப்படியானால் விடை பெறுகிறேன்'' என்று கூறி திரும்ப முயன்ற சத்திரக்காரனை ''சற்று நில்லும்'' என்ற வாலிபன் சொற்கள் அங்கேயே நிலைத்து நிற்க வைத்தன. நின்றவன் பிறகு லேசாகத் திரும்பி ''பிரபு! உத்தரவிடுங்கள்'' என்றான்.

மார்த்தாண்டன் அவனைக் கூர்ந்து நோக்கினான். ''இந்தத் தோப்புக்கு உள்ளே மன்னரின் உல்லாச விடுதி இருக்கிறதல்லவா?'' என்று மெதுவாகக் கேட்டான்.

''இருக்கிறது'' — சத்திரக்காரன் சர்வசாதாரண மாக பதில் சொன்னான்.

''இப்பொழுது அங்கு யாராவது இருக்கிறார்களா?'' மீண்டும் வினவினான் மார்த்தாண்டன்.

''நான்தான் தங்கி இருக்கிறேன்'' என்றான் சத்திரக் காரன்.

''உம்மைத் தவிர?''

''வேறு யாருமில்லை, என் மைத்துனர் இருவர் வந் திருக்கிறார்கள்.''

மார்த்தாண்டன் இதழ்களில் இளநகை விரிந்தது- ''பெண் யாருமில்லையா?'' என்று வினவினான்.

''பெண் எதற்கு?'' என்று சத்திரக்காரன் கேட்டான்.

''பெண் எதற்கா? பூஜை செய்யவா கேட்கிறேன்? அனுபவிக்கத்தான்'' என்று கேட்ட மார்த்தாண்டன் நகைத்தான்.

சத்திரக்காரன் மனதில் அச்சம் மெல்ல மெல்ல உதய மாகத் தொடங்கியது. மார்த்தாண்டன் மகா காமுகனென

றும் பல பெண்களைக் கற்பழித்ததாகவும் வதந்தி இருந்த
தால் இவனிடம் நீலரதியைக்காட்டினால் என்ன ஆகுமோ
என்ற அச்சத்தால் ''யாருமில்லை தளபதியாரே!'' என்று
மென்று விழுங்கினான்.

சத்திரக்காரன் பேச்சிலிருந்த தடுமாற்றத்தையும்
குழப்பத்தையும் கவனிக்கவே செய்த மார்த்தாண்டன்
தனது பின்னால் நின்ற வடபுலத் தளபதியை நோக்கி
''மாவலி! எதற்கும் நாம் உல்லாச விடுதியைப் பார்வை
யிட்டாலென்ன?'' என்று வினவினான்.

''காலையில் பார்வையிடலாமே! ஒன்றரை ஜாமம்
ஆகிவிட்டதே'' என்றான் மாவலி.

''சரி! அப்படியே ஆகட்டும்'' என்று ஒப்புக்கொண்ட
மார்த்தாண்டன் சத்திரக்காரனை நோக்கி ''காலையில்
வருகிறோம். எதற்கும் விடுதியை சுத்தம் செய்து வையுங்
கள்'' என்று கூறிவிட்டு தனது மஞ்சத்தில் மீண்டும்
சாய்ந்து கொண்டான். ''விளக்கை அணைத்துவிடு
மாவலி! கண் கூசுகிறது'' என்று கூறி கண்களையும்
மூடினான்.

அத்துடன் அவனை வணங்கி விடைபெற்றுக்கிளம்பிய
சத்திரக்காரன் முதலில் மெதுவாக நடந்தபிறகு நடையில்
துரிதத்தைக் காட்டினான். அவன் தலை மறைந்ததும்
விளக்கு வைதப்பட்டதால் இருள் மண்டிய சூழ்நிலையில்
மெல்ல நகைத்த மார்த்தாண்டன் ''மாவலி! உல்லாச
விடுதியை நாம் நேரிடையாகப் பார்வையிட்டாலென்ன?''
என்று வினவினான்.

''அதுதான் சரி'' என்று மாவலியும் நகைத்தான்.

மார்த்தாண்டனும் மாவலியும் சத்திரக்காரனை
ஏமாற்றி விட்டதாக நினைத்த அதே சமயத்தில் வெகு
துரிதமாக உல்லாச விடுதியை அடைந்துவிட்ட சத்திரக்
காரன் இளமாறனை சற்று தனியாக வரும்படி அழைத்



தான். சத்திரக்காரன் முகத்தில் துலங்கிய கவலையையும்
அவன் அவசர அழைப்பையும் கவனித்த இளமாறன்
அவனிஷ்டப்படியே உல்லாச விடுதியை விட்டு வெளியே
வந்து பக்கத்திலிருந்த மரங்களின் மறைவுக்குச் சென்
றான். இளமாறன் கேள்வி கேட்குமுன்பாகவே பேசத்
தொடங்கிவிட்ட சத்திரக்காரன் ''வீரரே ஆபத்துவந்திருக்
கிறது. தாங்கள் சொன்ன விடுதியில் மன்னரின் வடபுலப்
படைத்தலைவரும் தென்புலப் படைத்தலைவரும் வந்திருக்
கிறார்கள்'' என்று சொன்னான்.

அவர்களிருவரைப்பற்றியும் முன்னமே கேள்விப்பட்டி
ருந்த இளமாறன் ''அப்படியானால் நாம் உடனடியாகக்
கிளம்ப வேண்டும்'' என்று கூறிவிட்டு சத்திரக்காரனுடன்
உல்லாச விடுதிக்கு வந்து மற்றவர்களைத் துரிதமாகப்
பயணப்பட உத்தரவிட்டான். புரவிகளை சேணமிட்டு
வாயிலுக்குக்கொண்டு வரவும் ஏற்பாடு செய்துவிட்டு
உதயகுமாரனை நோக்கி ''உதயகுமாரா! நீ முதலில்
நீலரதியுடன் நாம் வந்த வடக்குப்பாதையில் சென்றுவிடு.
நானும் சத்திரக்காரரும் பின்னால் தொடர்ந்து வரு
கிறோம்'' என்று கூறி அவர்களிருவரையும் புரவிகள் மீது
ஏற்றி ''நேராக கொள்ளிடக்கரை சத்திரத்துக்குச் செல்
லுங்கள்'' என்று கூறி புரவிகளை தானே தட்டி விட்டான்.
மெதுவாக தோப்பு அளித்த இருளில் மறைந்ததும் சத்திரக்
காரனுடன் உல்லாச விடுதிக்கு வந்த இளமாறன் அந்த
விடுதியின் முகப்பு அறை மஞ்சத்தில் காலை நீட்டிப்
படுத்துக்கொண்டான். தனது வாளையும் குறுவாளையும்
கச்சையிலிருந்து நீக்காமலே சத்திரக்காரன் கூடத்தில்
படுத்தான்.

அவர்கள் படுத்த சில நிமிடங்களுக்கெல்லாம் விடுதி
யின் வாயிற்கதவு பலமாகத் தட்டப்பட்டது. வந்திருப்பது
எத்தனை பேர் என்பதை சாளரத்தின் மூலம் பார்த்த
இளமாறன் தான் எதிர்பார்த்த இருவரைத் தவிர மற்றும்

நீலரத்

பத்து வீரர்கள் அவர்களுக்குப் பின்னால் நிற்பதைக் கவனித்து மீண்டும் படுத்துவிட்டான்.

மறுபடியும் கதவு பலமாகத் தட்டப்பட்டதைத் தொடர்ந்து ''கதவைத் திறக்கிறீர்களா அல்லது கதவை உடைக்கட்டுமா?'' என்று வினவினான் மாவலி.

அறையில் படுத்தபடியே இரைந்து பதில் சொன்னான் இளமாறன் : ''மன்னரின் உல்லாச விடுதியின் கதவை உடைப்பது ராஜத் துரோகமாகும்'' என்று.

''யார் நீ?''-மார்த்தாண்டன் கேள்வி உஷ்ணத்துடன் வந்தது.

''விடுதியின் காவலன்'' என்று பதில் சொன்னான் இளமாறன்.

''சரி கதவைத் திற''—அதிகாரத்துடன் மறுபடியும் ஒலித்தது மார்த்தாண்டன் குரல்.

''மன்னரைத் தவிர யாரும் இங்கு தங்க முடியாது''—திட்டமாக அறிவித்தான் இளமாறன்.

இப்படி அவனிடம் மார்த்தாண்டன் பேச்சுக் கொடுத்துக் கொண்டிருக்கையிலேயே பின்புறக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்த மாவலி ''இளமாறா! கையைக் கத்தியிடம் கொண்டு போகாதே. நிதானமாக எழுந்திரு'' என்று கூறினான்.

அவன் வாளை உருவிப் பிடித்திருந்தான். அவன் பின்னால் நான்கு வீரர்கள் உருவிய வாட்களுடன் நின்றிருந்தார்கள்.

□ □ □

# 20. மாவலியின் குறுவாள்

மகாவீரனும் ராட்சஸனைப் போன்ற பெரிய உருவத்தைப் படைத்தவனுமான மாவலி, தான் விடுதியின் பின்புற வாசலில் நுழைந்து விட்டதை இளமாறன் எதிர்பார்த்திருக்க முடியாது என்ற தீர்மானத்தில் இளமாறனை கத்தியைத் தொட வேண்டாமென்றும் நிதானமாக எழுந்திருக்குமாறும் உத்தரவிட்டதைக் கேட்டும் இளமாறன் படுத்த நிலையிலிருந்து எழுந்திருந்தானில்லை. பின்புறக் கதவு திறக்கப்பட்டதால் ஏற்பட்ட சத்தம் அவன் காதில் விழுந்திருந்தாலும், தான் படுத்திருந்த அறைக்கு வெளியே கூடத்தில் படுத்திருந்த சத்திரக்காரனை மாவலியின் வீரர்கள் பிடித்ததற்கான அறிகுறி ஏதும் தெரியாததாலும், அவர்கள் வருவதை உணர்ந்த சத்திரக்காரன் முன்னதாகவே மறைந்து விட்டானென்பதை ஊகித்துக் கொண்டதாலும், இளமாறன் சவம் போல படுத்திருந்ததன்றி மாவலியை மிரட்டவும் செய்தான். ''மாவலி! நான் மன்னர் அலுவலாகப் பயணம் செய்கிறேன். எனக்கு எந்த ஆபத்து நேரிட்டாலும் மன்னருக்கு நீ பதில் சொல்ல வேண்டியிருக்கும். தவிர என் உத்திரவின்றி இந்த விடுதிக்குள் யாரும் நுழையவும் கூடாதென்று மன்னர் கட்டளை இருக்கிறது. ஆகவே வந்தவழியே சென்றுவிடு. மன்னரிடம் இந்த உன் தலையீட்டைப் பற்றி நான் சொல்லவில்லை'' என்று அதிகாரக் குரலில் பேசவும் செய்தான்.

மகாவீரனான மாவலிகூட இளமாறனின் சொற்களால் சிறிது குழப்பத்துக்கு உள்ளானான். மேற்கொண்டு என்ன செய்வதென்று அவன் மலைத்துக்கொண்டிருந்த சமயத்தில் வாயிற்கதவு திறக்கப்பட்டு வாலிபனான மார்த்தாண்டனும் மற்றும் சில வீரருடன் கூடத்துக்கு வந்து அங்கிருந்த நிலவரத்தைக் கவனித்தான். படுத்திருப்பது இளமாறனென்று அறிந்தும் மாவலி என்

அவனைக் கொல்லாதிருக்கிறானென்று புரியாததால் "மாலவி! இவனை இன்னும் ஏன் கொல்லவில்லை?" என்று துடுக்குத்தனமாக விசாரித்தான்.

"இவன் மன்னர் அலுவலாக வந்திருப்பதாகச் சொல்கிறான்" என்றான் மாலவி, சிறிது தயக்கத்துடன்.

"என்ன அலுவலாம்?" என்று மார்த்தாண்டன் கேட்டான்.

"அதை இன்னும் விசாரிக்கவில்லை" என்றான் மாலவி.

ஆகவே மார்த்தாண்டனே விசாரித்தான் இளமாறனை நோக்கி "என்ன அலுவல்?" என்று.

இளமாறன் மெதுவாக எழுந்து படுக்கையில் உட்கார்ந்து "நீலரதி என்ற பெண்ணைப் பற்றி அறிந்தது உண்டா?" என்று விசாரித்தான்.

"கேள்விப்பட்டிருக்கிறேன். மகா அழகியாம், அவள் புத்தகத்தர் மடத்தில் பணிபுரிந்திருந்தவளாம்" என்ற மார்த்தாண்டன், "இப்பொழுது அவள் எங்கே?" என்று வினவினான். அவன் கேள்வியில் அவசரம், ஆவல் இரண்டும் கலந்தொலித்தன.

இளமாறன் அவனை நோக்கி புன்முறுவல் கொண்டு "சற்று முன்புவரை இங்குதானிருந்தாள். இப்பொழுது உறையூரை நோக்கி விரைந்து கொண்டிருக்கிறாள்" என்ற இளமாறன் "அவளை ஒரு நாழிகைக்கு முன்புதான் அனுப்பி வைத்தேன்" என்றும் கூறினான்.

"இந்த இரவில் அத்தனை அவசரமாக அவளை அனுப்பக் காரணம் என்ன?" என்று மார்த்தாண்டன் கேட்டான். அவன் கேள்வியில் சினம், ஏமாற்றம் இரண்டுமே ஒலித்தன.

"காரணம் நீதான் மார்த்தாண்டா" என்று சொன்ன இளமாறன், படுக்கையிலிருந்து எழுந்து கம்பீரமாக நிமிர்ந்து நின்றான்.



"நானா?" வியப்புடன் வினவினான் மார்த்தாண்டன்.

"நீயேதான். நீ காவிரிக்கரை வீட்டில் தங்கியிருப்பதாக சத்திரக்காரர் வந்து சொன்னார். காமுகனான நீ ஓர் அழகியைக் கண்டுவிட்டால் என்ன செய்வாய் என்பது நாடறிந்த கதை. ஆகவே உன்னிடமிருந்து அவளைக் காப்பாற்றவும், மன்னரிடம் அவளைத் தூய்மையுடன் ஒப்படைக்கவும் அனுப்பி விட்டேன்" என்று விளக்கிய இளமாறன் "மார்த்தாண்டா! மாலவி! உங்களுக்கு இப்பொழுதும் சொல்கிறேன். இந்த விடுதியை விட்டுச் சென்றுவிடுங்கள். மன்னர் பெயரால் ஆணையிடுகிறேன்" உரக்கக் கூவினான்.

அந்தக் கூச்சலைத் தொடர்ந்து வெளியே யாரோ சிலர் நடமாடும் அரவம் கேட்கவே மாலவி சொன்னான். "இளமாறா! நீ சொல்வது உண்மையாயிருந்தால் புறப்படு. நாங்களும் உன்னுடன் வருகிறோம்" என்று.

அந்தச் சமயத்தில் பின்புறக் கட்டிலிருந்து கிறீச்சென்ற குரலொன்று கேட்கவே மாலவி தனது வீரர்கள் இருவரை அந்தக் கட்டை பார்க்கும்படி அனுப்பினான். சற்று நேரத்திற்கெல்லாம் சாந்தானந்தருடன் திரும்பி வந்த காவலன் "இவர்தான் கத்தினார். இவர் கைகால்களைப் பிணைத்துக் கட்டியிருந்தார்கள். கட்டியது இளமாறனென்று இவர் சொல்கிறார்" என்று கூறினான்.

"ஆம். இவன்தான். ராஜத் துரோகி அரசருக்கு நீலரதியைக் கொண்டு சென்ற என்னை இவன் சிறை செய்தான். இவனுக்கு உடந்தையாக கொள்ளிடக்கரை சத்திரக்காரனும் இருக்கிறான். இவர்களைத் தப்பவிடாதீர்கள்" என்று சாந்தானந்தர் கூறினார்.

"இல்லை. இவர்தான் ராஜத்துரோகி. மன்னரால் தண்டிக்கப்பட்டவர். மன்னர் அடைய விரும்பிய நீலரதியை கண்ணதாசன் மடக்காவலர் தலைவனிடம் தள்ள முயன்ற குற்றத்திற்காக இவர் துறவிப் பதவியிலிருந்து மன்னரால் நீக்கப்பட்டவர். மீண்டும் மன்னருக்காக

நாங்கள் அழைத்துச் சென்ற நீலரதியைக் கடத்திச் செல்ல முயன்றார்'' என்ற இளமாறன் ''இவரை சிறை செய்து அழைத்துச் செல்லுங்கள். விடிந்ததும் நானும் உங்களுடன் வருகிறேன்'' என்றான்.

ஆனால் அதற்கு உடன்படாத மார்த்தாண்டன் ''இளமாறனை நான் அழைத்துச் செல்கிறேன். மாவலி நீங்கள் விரைந்து சென்று நீலரதியை வளைத்துக் கொள்ளுங்கள்'' என்று கூறி ''இளமாறா! உன் வாளைக் கொடு'' என்றான்.

இளமாறன் லேசாக நகைத்தான். ''என் வாளை இதுவரை நான் யாரிடமும் கொடுத்தது கிடையாது. முடிந்தால் என்னிடமிருந்து பிடுங்கிக்கொள்'' என்று கூறிவிட்டு இடையே நடந்த உரையாடலால் எல்லோரும் சற்று அயர்ந்திருந்த நிலையை உபயோகப்படுத்திக்கொண்டு கட்டிலிலிருந்த தனது வாளை எடுத்துக்கொண்டான். வெகு வேகமாக உறையிலிருந்து அதை உருவவும் செய்தான்.

அதுவரை மௌனமாக உரையாடலைக் கேட்டுக்கொண்டிருந்த மாவலி தன் வாளை மின்னல் வேகத்தில் சுழற்றி அதை இளமாறன் மார்பை நோக்கிச் செலுத்த இருந்த சமயத்தில் மார்த்தாண்டன் அதை தனது வாளால் தடுத்து ''இவன் என்னைச் சேர்ந்தவன். எனது சிறைப் பறவை'' என்று கூறி வாளுடன் உள்ளே நுழையமுற்பட்டவனை இளமாறன் சொற்கள் தடுத்தன. ''மாவலி! இந்தச் சிறுவனைப் பின்னடையச் செய்யுங்கள். இல்லையேல் இவன் உயிர் அரைக்காசு பெறாது'' என்று கூறிக்கொண்டே தனது நீண்ட வாளை வாயிற்படிக்கு வெளியே நீட்டினான். அதைத் தட்டிவிட முயன்ற மார்த்தாண்டன் வாள் இளமாறன் வாள் சுழன்றதால் அவன் கையிலிருந்து பறந்துவிடவே இன்னொரு வாளுக்குக் கையேந்தினான் மார்த்தாண்டன். அவன் கையில் இன்னொரு வாளை சாந்தானந்தரே திணித்ததன்றி நிலைமையை சமாதானத்தில் விடக்கூடாதென்று தனதுவாளையும் சுழற்றிக்



கொண்டு இளமாறன் நின்றிருந்த அறைக்குள் நுழைய முயன்றார்.

அவருடைய வாளையும் மார்த்தாண்டனின் இரண்டாவது வாளையும் ஏக காலத்தில் தடுத்துவிட்ட இளமாறன் சட்டென்று பின்னடைந்து கட்டிலை இழுத்து வாயிற்படியருகில் போட்டு தனக்கு ஓர் அரணை ஏற்படுத்திக்கொண்டான். அதுவரை வாளாவிருந்த மாவலியும் சண்டையில் கலந்துகொண்டு தானும் முன்னேறி தனது வீரர்களையும் முன்னேற ஏவினான்.

ஆனால் அவர்கள் யாரும் அதிகமாக முன்னேற முடியவில்லை. வாயிற்படி ஓரளவு அகலமாயிருந்தாலும் ஒரு சமயத்தில் மூன்று பேருக்கு மேல் அதன் மூலம் போராட முடியாததாலும், கட்டிலைத் தாண்டி உள்ளே நீண்டு போரிடுவது முடியாததாலும் இளமாறன் இஷ்டப்படிதான் போர் நடந்தது. இதற்கிடையில் சத்திரக்காரனும் குடிசைவாசிகள் சிலருடன் வாயிற்புறத்தில் நுழைந்துவிட்டபடியால் போர் மும்முரமாகி விட்டது. மார்த்தாண்டனுடன் வந்திருந்த வீரர்களில் இருவரை சத்திரக்காரன் தீர்த்து விடவே அவர்கள் அலறிவிழுந்த ஒலி பயங்கரமாயிருந்தது, அந்த இரவு நேரத்தில்.

அந்த ஒலியைக் கேட்டதும் கட்டிலைப் பின்னுக்கு இழுத்து அறை வாயிற்படிக்கு வந்துவிட்ட இளமாறன் முன்னேறிய எதிரி வீரர்கள் இருவர் மார்பு மீது வாட்களைப் பாய்ச்சி அவர்கள் மரணக் கூச்சலிட்டு கீழே சாய்ந்து விடவே, அறைவாயிலும் அவர்கள் சடலங்களால் அடைக்கப்படவே, மாவலி சினம் மிகுந்து தனது பெரிய வாளை வீசிக்கொண்டு இளமாறனை அணுகினான். இளமாறனும் தனது வாளால் அவன் வாளைத் தடுக்க சண்டை உக்கிரமாகியது. பலபோர்களையும் பல வீரர்களையும் கண்ட மாவலி முதலில் அனாயாசமாகப் போரிட்டாலும் இளமாறனை சுலபமாக வெற்றிகொள்ள முடியாதென்று உணர்ந்ததால் மிக எச்சரிக்கையுடன் சண்டை

யிட்டான், ஒவ்வோர் இடத்திலும் இளமாறன் வாள் தனது வாளை சந்திப்பதைக் கண்ட மாவலி ''இளமாறா! மெச்சுகிறேன் உன் வாள் திறனை'' என்று கூறிக்கொண்டு மும்முரமாகத் தாக்கலானான். மாவலியின் தாக்குதலைச் சமாளித்துக் கொண்டிருந்த இளமாறன் திடீரெனப் பெரிதாகக் கூச்சலிட்டான்.

அதற்குக் காரணத்தை அறிய மாவலி தனது கடைக் கண்ணைத் திருப்பியபோது இளமாறன் கூச்சலின் காரணத்தைப் புரிந்து கொண்டான். அவர் இருவருக்குமிடையே வாலிபனான மார்த்தாண்டன் நுழைந்து கொண்டிருந்தான், ''மாவலி! இந்தச் சிறுவனை அப்புறம் போகச் சொல். இல்லையேல் என் வாளுக்கோ உன் வாளுக்கோ பலியாவான்'' என்று எச்சரித்துக் கொண்டிருந்த சமயத்தில், மாவலியும் ''விலகு மார்த்தாண்டா'' என்று கூவிய தருணத்தில் இருவர் எச்சரிக்கையையும் கேட்காமல் தன் வாளை உருவிக்கொண்டு அறைக்குள்ளே பாய்ந்துவிட்ட மார்த்தாண்டன் அடுத்த கணம் அலறினான். மாவலியைத் தீண்டப்போன இளமாறன் வாள் மார்த்தாண்டன் மார்பில் புகுந்து விட்டதால் பெரிதாக அலறித் தரையில் சாய்ந்தான் மார்த்தாண்டன்

அந்த விபரீத விளைவால் அடுத்த கணம் சண்டை நின்றது. அங்கிருப்பது பேராபத்து என்பதை உணர்ந்த இளமாறன் மெல்ல பின்னடைந்து சாளரத்தின் வழியாக வெளியே குதித்தான். அதே சமயத்தில் குடிசைவாழ் மக்கள் கூட்டமாக பந்தங்களுடன் தூரத்தில் வருவது தெரிந்தது இளமாறனுக்கு. அவன் எட்ட இருந்த தனது புரவி மீது தாவப் போனான். அவன் தாவி ஏறி சேணத்தைப்பிடிக்கப்போன சமயத்தில் சாளரத்திலிருந்து மாவலி எறிந்த குறுவாள் அவன் இடது கையில் பாய்ந்ததால், பிடித்த புரவி சேணம் கையிலிருந்து நழுவி விட்டது. மாவலி இன்னொரு குறுவாளை எடுத்து இளமாறன் முதுகை நோக்கிக் குறி பார்த்து வேகமாக எறிந்தான். சற்று தூரத்திலிருந்து இளமாறனைப் பார்த்த சந்திரக்காரன் இளமாறனின் கதை முடிந்துவிட்டதென்றே தீர்மானித்தான்.

□

30579
4507550

# 21. பெண்ணையாற்றுப் பாதை

எத்தனையோ போர்களைக் கண்டவனும், எத்தனையோ இக்கட்டான சூழ்நிலைகளிலிருந்து மீண்டவனும், பின் வருவதை முன்னால் ஊகித்து செயல்படக் கூடியவனுமான இளமாறனைத் தவிர வேறொருவனாயிருந்தால், சந்திரக்காரன் எதிர்பார்த்தபடி அவன் கதை அன்றுடன் முடிந்திருக்கும். ஆனால் மாவலியின் குறுவாளொன்று தனது கையில தைத்தவுடனேயே இன்னொரு குறுவாள் அதைத் தொடருமென்பதை ஊகித்த இளமாறன், புரவிச் சேணத்தை நெகிழவிட்டு கையில் தைத்த குறுவாளுடன் புரவியிலிருந்து நிலத்தில் சரிந்து விட்டதால், மாவலி அவன் முதுகுக்குக் குறிவைத்த குறுவாள் தனது குறியை மீறி புரவிக்கு அப்பால் சென்று விழுந்தது. அது நிலத்தில் விழுந்து அங்கிருந்த கல்லொன்றில் தாக்கி 'கிளிங்' என்ற உலோக ஓசையைக் கிளப்புவதற்கும், இளமாறன் துரிதமாகச் செயல்படுவதற்கும் நேரம் பட்டுக் கத்தரித்தது போல் கனகச்சிதமாயிருந்தது. புரவியிலிருந்து நிலத்தில் சரிந்து கொண்டிருக்கையிலேயே இடக்கையில் தைத்த மாவலியின் குறுவாளை வலக்கையால் பிடுங்கி அதையே அறைச் சாளரத்தை குறுக்கே அடைத்துக் கொண்டு ராட்சஸன் போல் நின்றிருந்த மாவலிமீது வேகமாக வீசினான் இளமாறன். அந்த வாளும் சற்றும் குறிதவறாது மாவலியின் வாள் பிடித்த கையின்மீது சாய்ந்துவிடவே மாவலி அடுத்து செயல்படும் திறனை இழந்ததன்றி சொல்லொணா பிரமிப்பையும் அடைந்தார். தம்முடைய இரண்டாவது குறுவாள் வீச்சிலிருந்து தப்பியதன்றி தனது முதல் குறுவாளையே தன்மீது திருப்பி வீசிவிட்ட இளமாறன் போர்த்திறனைப் பார்த்து வியப்பின் எல்லையை அடைந்து ''இளமாறா! நீ மகாவீரன்! உன்னைப் போன்ற

வீரனை நான் கண்டதில்லை'' என்று இரைந்து கூவிய வண்ணம் சாளரத்தின் மூலம் கீழே குதிக்கவும் செய்தான். ஆனால் அந்த இடைக் காலத்திற்குள் இளமாறன் கை காயத்திலிருந்து பீரிட்டு வந்துகொண்டிருந்த குருதியை லட்சியம் செய்யாமல் மீண்டும் புரவி மீது ஏறி சேணத்தை வலக் கையால் ஏந்தி புரவியைத் தட்டிவிட்டு காலால் விலாவையும் உதைக்கவே புரவி பறந்தது. எதிரே இருந்த தோப்பின் ஊடே புரவியை உதைத்த அதே சமயத்தில் சத்திரக்காரனையும் திரும்பிப் பார்த்து தன்னைத் தொடரும்படி தலையை அசைத்து சைகையும் செய்துவிட்டு புரவி மீது பறந்து விட்டான் இளமாறன்.

புரவியிலேறி இளமாறன் பறந்து விட்டதையும், சத்திரக்காரனுக்கு சைகை செய்ததையும் மாவலி கவனிக்கத் தவறவில்லையென்றாலும் அங்கு பந்தங்களுடன் வந்து கொண்டிருந்த குடிசை மக்கள் கூட்டத்தில் சத்திரக்காரன் மறைந்துவிடவே அவனைத் தேடிப் பயனில்லை என்று தீர்மானித்தான். ஆகவே அடுத்து நடப்பதைக் கவனிக்கலானான். உல்லாச விடுதிக்கு வெளியே தனது வீரர்கள் குடிசை வாழ் மக்களுடன் கைகலந்து விட்டதால் ஏற்பட்ட நாசமும், உள்ளே வீரர்கள் சிலரும் மார்த்தண்டனும் காயம்பட்டுக் கிடந்ததால் உட்புறத்தில் ஏற்பட்டுவிட்ட விபரீதமும் உல்லாச விடுதியை உல்லாசம் சிறிதுமில்லாத நாச விடுதியாக்கி விட்டதையும் புரிந்து கொண்டு விட்டதால் ''சண்டையை உடனே நிறுத்துங்கள்'' என்று இரைந்து மாவலி கூறவே உடனடியாக சண்டை நின்றது. பந்தங்களை ஏந்தி வந்த காவிரிக்கரை குடிசை வாழ் மக்கள் மாவலியை யாரென்று அறிந்திருந்ததால் சட்டென்று அடங்கியது மட்டுமன்றி சிலர் தலை வணங்கவும் செய்தார்கள். அவர்களில் தலைவனாகக் காணப்பட்டவன் முன்னால் வந்து ''பிரபு! இங்கிருப்பது தாங்களென்பது எங்களுக்குத் தெரியாது.



மன்னருக்குச் சொந்தமான ஒரு பெண்ணுக்கு ஆபத்து என்று கொள்ளிடக்கரை சத்திரக்காரர் அழைத்தார். அதனால் வந்தோம்'' என்று கூறினான்.

மாவலி அவனையும் அவனுக்குப் பின்னால் நின்ற மற்றவர்களையும் கொசுக்களைப் பார்ப்பதுபோல பார்த்தான். ''சரி சரி! உங்கள் குடிசைகளுக்குச் செல்லுங்கள். ஊருக்குள் யாராவது மருத்துவர் இருந்தால் அழைத்து வாருங்கள்'' என்று கூறிவிட்டு சத்திரத்துக்குள் சென்று விட்டான். அங்கிருந்த நிலைமையைப் பார்க்க, உள்ளே சென்றதும் தமது வீரர்களில் இருவர் மாண்டு கிடப்பதையும், மார்த்தாண்டன் மார்பிலிருந்து குருதியோட, குற்றுயிரும் குலை உயிருமாகக் கிடப்பதையும் கண்டு சற்று எட்ட நடுங்கிக்கொண்டு நின்றிருந்த சாத்தானந்தரை அழைத்து ''இப்படி வாரும். இடித்த புளிபோல் நிற்கவேண்டாம்'' என்று உத்தரவிட்டு மார்த்தாண்டன் அருகில் உட்கார்ந்து இளமாறன் வாள் பாய்ந்து திருப்பி இழுக்கப்பட்ட இடத்தை ஆராய்ந்தார். இளமாறன் வாள் நேராக மார்த்தாண்டன் மார்பில் பாய்ந்துவிட்டதைக் கவனித்து இனி இவன் பிழைப்பது குதிரைக் கொம்புதான் என்பதைத் தீர்மானித்துக் கொண்டாலும் குருதியை நிறுத்த சாத்தானந்தர் கொடுத்த துணியை எடுத்து மார்பில் வைத்துக் கட்டிவிட்டு பிறகு சாத்தானந்தரை நோக்கி ''இவருக்கு இன்னும் எத்தனை நேரம் உயிர் இருக்கும்?'' என்று வினவினான்.

சாத்தானந்தர் விழித்தார். ''எனக்கு மருத்துவம் தெரியாது'' என்றார் நடுங்கும் குரலில்.

''வேறென்ன தெரியும் உமக்கு?'' என்று எரிந்து விழுந்த மாவலி ''இங்கு யாராவது வீரர்கள் இறந்திருந்தால் அவர்களை அப்புறப்படுத்தவும் புதைக்கவும் ஏற்பாடு செய்யுங்கள்'' என்று உத்தரவிட்டான்.

"பிணங்களைப்புதைப்பது எனது அலுவலல்ல" என்று ஆரம்பித்த சாந்தானந்தரை எரித்துவிடுவதுபோல் பார்த்த மாவலி "சொன்னதைச் செய்யும். இல்லாவிட்டால் உம்மை நான் புதைக்கநேரிடும்" என்று சீறவே மாவலியை வணங்கி வெளியே சென்று மற்ற வீரர்களை அழைத்து வந்த உல்லாச விடுதியைச் சுத்தப்படுத்த முயன்றார்.

அதற்குள் சிறுவனான மார்த்தாண்டனை தமது இரு கைகளாலும் குழந்தையைத் தூக்குவதுபோல் தூக்கி கட்டிலில் மெதுவாகப் படுக்கவைத்த மாவலி சற்றுதிரும்பி "யாரங்கே?" என்று குரல் கொடுத்தான்.

"இதோ வந்துவிட்டோம்" என்று பதில் சொல்லிக் கொண்டே உள்ளே நுழைந்தவரைக் கண்ட மாவலி "மருத்துவரா! வாருங்கள், இந்த சிறுவனைக் கவனியுங்கள்" என்றான்.

மருத்துவர் கட்டிலில் மார்த்தாண்டன் பக்கத்தில் உட்கார்ந்து அவன் நாடியைப் பரிசோதித்தார். பிறகு கண்களில் இரப்பைகளைப் பிரித்துப் பார்த்தார். கடைசியாக தமது உதட்டைப் பிதுக்கி "படைத் தலைவரே! வருந்துகிறேன்" என்று கூறினார்.

மாவலியின் கொடிய கண்கள் மருத்துவரைச் சுட்டுவிடுவனபோல் பார்த்தன. "மருத்துவரே! இந்தச் சிறுவன் அமைச்சர் பூபதியின் மகன்" என்றும் கூறினான்.

மருத்துவர் மாவலியை துணிவுடன் நோக்கிவிட்டுச் சொன்னார். "படைத்தலைவரே! சாவுக்கு சகலரும் சமம். அது மனிதர்கள் தராதரத்தைப் பார்ப்பதில்லை. இந்தச் சிறுவன் மார்பில் கத்தி நேராக நுழைந்து மீண்டிருக்கிறது. இங்கு கட்டுப்போட்டவர்கள் யாராயிருந்தாலும் நன்றாகவே அந்தப் பணியைச் செய்திருக்கிறார்கள். கத்தி இதயத்தின் அடிப்பகுதியில் பாயாதிருந்தால் இந்தச் சிறுவனைப் பிழைக்க வைக்கலாம், சாஸ்திர சிகிச்சையின் மூலம். ஆனால் இப்பொழுது அதுவும் சாத்தியமில்லை"



என்று மிகுந்த வருத்தத்துடன் கூறிவிட்டு தமது மருத்துவப் பையிலிருந்து ஒரு திராவகத்தை எடுத்து மார்த்தாண்டன் வாயில் சிறிது தடவினார். அந்த திராவகக் குப்பியை மாவலியிடம் நீட்டி "இன்னும் ஒரு நாழிகை கழித்து மீண்டும் ஒருமுறை இதில் இரண்டு சொட்டுகளை உள்ளே செலுத்திப் பாருங்கள், அந்த சொட்டுகள் உள்ளே சென்றால் இவரது தந்தை வரும்வரை இவர் உயிர் உடலில் தங்கலாம். ஆனால் அத்தகைய நிகழ்ச்சி மிகவும் துர்லபம்" என்று கூறிவிட்டு எழுந்தார்.

அவர் சென்ற பிறகு மாவலி அந்த அறையில் தீவிர யோசனையுடன் உலாவினான். பிறகு ஒரு வீரனை அழைத்து எழுது கருவிகளைக் கொண்டுவரச் சொல்லி மன்னருக்கு ஒன்றும், அமைச்சர் பூபதிக்கு ஒன்றுமாக இரு ஓலைகளை எழுதி இரண்டையும் மீண்டுமொருமுறை படித்துப் பார்த்துவிட்டு சாந்தானந்தரை வரவழைத்தான்.

இறந்தவர்களைப் புதைக்க வழி செய்துவிட்டு, காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை செய்ய மருத்துவரிடம் உத்தரவிட்டுத் திரும்பி வந்த சாந்தானந்தர் "என்ன உத்தரவோ?" என்று பணிவுடன் வினவினார்.

"மடத்துக் காவலர் தலைவரே! நீர் உடனடியாக உறையூர் செல்லவேண்டும்" என்றான் மாவலி.

அவன் கையிலிருந்த ஓலைகளைக் கவனித்து அவனது முகத்திலிருந்த கடுமையையும் கவனித்த சாந்தானந்தர், ஓலையிலடங்கிய விஷயத்தை நொடியில் ஊகித்துக் கொண்டார். ஆகவே பணிவுடன் கூறினார்: "வேறு யாராவது தகுந்தவரை அனுப்பினால்...?" என்று.

வாசகத்தை முடிக்கவில்லை அவர். அதற்குள் வெடித்தான் மாவலி.

"ஒன்று நீர் போகவேண்டும் அல்லது நான் போகவேண்டும்" என்று கூறினான். "நான்போகிறேன். ஆனால் அடுத்த பணியை நீர்தான் செய்யவேண்டும். வேறு

யாரிடமும் அதை ஒப்படைப்பதற்கில்லையே'' என்றும் சொன்னான்.

அந்த அடுத்த பணி சுலபமானால் அதை ஏற்றுக் கொள்ளலாமென்று கணக்கும் போட்ட சாந்தானந்தர் ''அடுத்த பணி என்னவோ?'' என்று கேட்டார்.

''மார்த்தாண்டன் உயிர் போனதும் அவன் சடலத்தை எடுத்துக் கொண்டு உறையூருக்கு வரவேண்டும்'' என்று சர்வ சாதாரணமாகச் சொன்னான் மாவலி.

இதைக் கேட்டதும் பேயறைந்ததுபோல் மாறியது சாந்தானந்தர் முகம். ''பூபதிக்கு அவர் மகன் நிலைபற்றி ஓலைகொண்டு சென்றால் என்ன, அவர் மகன் சடலத்தைக் கொண்டு சென்றால் என்ன? இரண்டில் எதாவதொன்றைச் செய்தாலும் தன்னை அங்கேயே வெட்டிப் போட்டுவிடுவார்கள். இந்தக் களப்பிரருக்கு நாகரிகமும் கிடையாது, விசாரணை செய்யும் சுபாவமும் கிடையாது'' என்று உள்ளூர சொல்லிக் கொண்டார்.

மாவலி அவர் தயக்சத்தைக் கண்டான். ''என்ன தயக்கம்? பதில் சொல்லும், ஓலையா, சடலமா'' என்று சீறினான்.

வேறு வழியில்லாமல் ஓலை கொண்டுபோக ஒப்புக் கொண்ட சாந்தானந்தர் ஓலையுடன் உடனடியாக கிளம்பினார், தமது வீரர்களுடன். அன்று பொழுது புலர்ந்த சமயத்தில் மார்த்தாண்டன் ஆவியும் பிரிந்தது. மாவலி அந்த மரணத்தைக் கண்டும் சிறிதும் சலனமற்று நின்று கொண்டிருந்தான். அவன் முகம் கல்லாயிருந்தது அவனது இதயத்தைப் போலவே.

சடலத்தின் முன்பு நீண்ட நேரம் நின்ற மாவலி ''மார்த்தாண்டா! காமம் உன்னை அழித்துவிட்டது. இதே மரணத்தை நீ பெரும் போர்க்களத்தில் அடைந்திருந்தால் நான் எத்தனை மகிழ்ச்சி அடைந்திருப்பேன்'' என்று முணுமுணுத்தான். அதுவரை சிறிது மனிதத் தன்மையைக்



காட்டிய மாவலி சட்டென்று தளபதியாகி ''யாரங்கே? மார்த்தாண்ட மகாப்பிரபுவின் சடலத்தை நன்றாகக் கட்டுங்கள். இந்த வீரமகனுடன் நான் உறையூர் செல்கிறேன்'' என்று உத்தரவிட்டான் வறண்ட குரலில்.

குடமூக்கு மருத்துவர் ஓர் அரசன் சடலத்தைக் கட்டுவதுபோல் மிக மரியாதையுடன் கட்டி மார்த்தாண்டன் இடையில் அவனது வாளையும் கட்டினார். அந்த சடலம் பயணம் செய்யக் கொண்டுவரப்பட்ட வண்டியில் மார்த்தாண்டனைக் கிடத்திய மாவலி அந்த வண்டிக்கு முன்பு தமது புரவியில் சென்றான். பின்னால் வண்டியைத் தொடர்ந்து வர இரு புரவி வீரர்களையும் நியமித்தான்.

இந்தப் பயணம் இங்கு தொடங்கிய சமயத்தில் கொள்ளிடக்கரை சத்திரத்திலிருந்து இன்னொரு பயணமும் தொடங்கிக்கொண்டிருந்தது. அங்கும் ஒரு வண்டியில் சத்திரக்காரன் படுத்திருந்தான். அவன் பக்கத்தில் நீலரதி உட்கார்ந்திருந்தாள் முக்காடிட்ட வண்ணம். அந்த வண்டிக்கு முன்னால் இளமாறன் தனது புரவியில் கம்பீரமாகச் செல்ல, பின்னால் உதயகுமாரன் தனது புரவியில் தொடர்ந்தான். அந்த வண்டியும் மெல்ல வடபுறச்சாலையில் மிக நிதானமாகச் சென்றது. காலைப்பொழுது பயணம் எந்தவிதத் தடங்கலுமின்றி நடந்தது. ஆனால் உச்சிக்காலம் வந்ததும் ஏற்பட்ட தடங்கல் இளமாறனும் ஊகிக்க முடியாத அத்தனை பயங்கரமாயிருந்தது. உச்சிக் காலத்தில் அவர்கள் பெண்ணை ஆற்றை அடைந்தபோது அதன் இறக்கத்தில் ஆயுதந்தாங்கிய பன்னிரண்டு வீரர்கள் வண்டியை மறித்து நின்றனர்.

□ □ □

# 22. சிறைப்பறவைகள்

கடந்த இரண்டு நாட்களில் புகாரிலும், கொள்ளிடக் கரை சத்திரத்திலும் நடந்த நிகழ்ச்சிகள் அத்தனை சீக்கிரம் பெண்ணையாறு வரையில் பரவும் என்பதை அறவே எதிர்பாராத இளமாறன் பெண்ணையாற்று இறக்கத்திலும் தன்னைத் தடை செய்ய வீரர்கள் சித்தமாக நின்றதும் அச்சுதவிக்கண்டன் ஆட்சிச் சிறப்பைப் பற்றி வியப்படையவே செய்தான். நீலரதியை அழைத்துவரும் பொறுப்பை களப்பிர மன்னன் தனக்கு மேலுக்கு அளித்தானேயொழிய அவன் தன்னை லவலேசமும் நம்பவில்லையென்பதையும், தான் ஒருவேளை தப்பிச்செல்ல முயன்றால் தன்னைத் தடை செய்ய ஆங்காங்கு உத்தரவுகளை முன்கூட்டியே அனுப்பிவிட்டானென்பதையும் உணர்ந்தாலும், அந்த உத்தரவு அத்தனை சீக்கிரம் அத்தனை தூரம் பரவுமென்பதை எதிர்பார்க்காததால் அச்சுத மன்னனைப்பற்றிப் பெருமையே கொண்டான். மன்னன் முன்னெச்சரிக்கையால் தான் எந்தப் பக்கம் திரும்பினாலும், என்ன தந்திரத்தைக் கையாண்டாலும் தனக்குத் தடை ஏற்படுவதை உணர்ந்த இளமாறன், தானும் சற்று முன்னெச்சரிக்கையாக நடந்து கொண்டதைப்பற்றி உள்ளூர திருப்தியே அடைந்தான்.

எத்தனையோ சிக்கல்களுக்கிடையில் ஒரு நல்லதும் ஏற்படும்போல் சத்திரக்காரன் தன்னுடன் ஒத்துழைக்க ஒப்புக்கொண்டது அத்தகைய நல்ல திருப்பங்களில் ஒன்றென நினைத்தான். தன்னை மன்னன் படைத் தலைவன் என்று எண்ணி சாந்தானந்தரை மறிக்க குடமூக்கு வரை வந்த சத்திரக்காரன், மார்த்தாண்டனை இளமாறன் குடமூக்கு உல்லாச விடுதியில் கொன்ற பிறகு,



மாவலியிடமிருந்தும் தப்பி ஓட முறபட்ட பிறகு, தான் குடமூக்குப் பகுதியிலிருப்பது பேராபத்து என்பதை உணர்ந்து கொண்டது மட்டுமின்றி மாவலியின் கையில் அகப்பட்டுக்கொண்டால் தன்னைக் கண்ட துண்டமாக வெட்டிப் போடுவானென்றும் புரிந்து கொண்டதால், இளமாறன் காட்டிய சைகையைத் தொடர்ந்து புரவியொன்றில் அவனைப்பின்பற்றவே செய்தான். ஆனால் இருவரும் கொள்ளிடக்கரை சத்திரத்துக்கு வந்த பிறகு தனது எதிர்ப்பைக் காட்டவே முயன்றான்.

சத்திரத்துக்குள் நுழைந்ததும் இளமாறனை நோக்கித் திரும்பிய சத்திரக்காரன் "நீங்கள் என் கண்ணில் மண்ணைப் போட்டுவிட்டீர்கள்" என்று குற்றம் சாட்டினான்.

"எப்படி?" என்று சர்வசாதாரணமாகக் கேட்டான் இளமாறன்.

"மன்னர் அந்தப் பெண்ணை உங்களை அழைத்து வரும்படி சொன்னதாகக் கூறினீர்கள்" என்றான் சத்திரக்காரன்.

"ஆம், அதில் பொய்யில்லை" என்று இளமாறன் திட்டமாகக் கூறினான்.

"அப்படியானால் அந்தப் பெண்ணையும் உங்கள் தம்பியையும், இங்கு எதற்காக அனுப்பினீர்கள்? மாவலியிடமிருந்து ஏன் தப்பினீர்கள்?" என்று சத்திரக்காரன் விசாரித்தான்.

இளமாறன் சிறிதும் சிந்திக்காமல் பதில் சொன்னான்: "மார்த்தாண்டன் பெண்பித்துப் பிடித்தவன். மன்னர் விரும்பிய பெண்ணாயிருந்தாலும் கெடுக்காமல் விடமாட்டான். மாவலி அவனைத் தடுக்க விரும்பியிருந்தால் அவனை உல்லாச விடுதிக்கு அழைத்து வந்திருக்கமாட்டான். அந்த நிலையில் நீலரதியைத் தப்புவிப்பது எனது கடமையாயிற்று. அந்தப் பணியில் மார்த்தாண்டனைக் கொன்றுவிட்டேன், பூபதியின் மகனைக் கொன்ற

பிறகு மாவலி நம்மை என்ன செய்வானென்று உமக்குத் தெரியுமல்லவா?'' என்று.

''தெரியும்'' என்று சொன்ன சத்திரக்காரன் ''ஆனால் உமது செயல்களால் எனது நிலை என்ன தெரியுமா? எந்த இடத்தில் என்னைக் கண்டாலும் அரச வீரர்கள் என்னைப் பிடித்து உறையூர் கொண்டு செல்வார்கள். எனக்கு விசாரணை இருக்காது. சித்திரவதை செய்யப்படுவேன்'' என்று தனது நிலையை விளக்கினான்.

''உண்மைதான். ஆனால் இத்தனையும் மன்னர் சேவையில் நடந்திருக்கிறது. நீர் ஒத்துழைத்தால் இப்பொழுதும் இந்தப் பெண்ணை நான் மன்னரிடம் சேர்க்கலாம். நான் சொல்கிறபடி கேட்டால்'' என்று இளமாரன் சொன்னான்.

இளமாரன் பேச்சில் சாமர்த்தியமிருந்ததே தவிர உண்மையில்லை என்பதை சத்திரக்காரன் புரிந்துகொண்டதாலும், இளமாரனுடன் ஒத்துழைப்பதைத் தவிர வேறு வழியில்லையென்பதை உணர்ந்து கொண்டதாலும், ஏதாவது சந்தர்ப்பமேற்படும்போது நீலரதியை மன்னன் வீரர்களிடம் சேர்ப்பித்துவிட்டால் தனது உயிர் உடலில் தங்குவதோடு அல்லாமல் மன்னர் தமது பதவியையும் உயர்த்துவார் என்ற எண்ணத்தால் இளமாரன் சொற்படி நடக்கத் தீர்மானித்தான்.

சத்திரக்காரனை சரிக்கட்டிய பிறகு உதயகுமாரனையும் நீலரதியையும் கலந்துகொண்டு ஒரு திட்டத்துக்கு வந்தான் இளமாரன். ''நீலரதி! நாம் சீக்கிரம் புறப்படுகிறோம். இந்தப் பயணத்தில் உனக்குப் புரவி வேண்டாம். நீயும் சத்திரக்காரரும் வண்டியில் பயணம் செய்கிறீர்கள். நானும் உதயகுமாரனும் முன்னும் பின்னும் புரவிகளில் வருகிறோம். சத்திரக்காரருக்கு உடல்நிலை சரியில்லை.'' என்றான்.

சத்திரக்காரன் இளமாரனை மறித்து ''எனக்கு உடம்புக்கு ஒன்றுமில்லை'' என்று கூறினான்.



''இருக்கவேண்டும். வண்டியில் நீர் மூச்சுப் பேச்சின்றி படுத்துக் கிடக்கிறீர். உமது மனைவியான நீலரதி...'' வாசகத்தை முடிக்கவில்லை இளமாரன்.

உதயகுமாரன் சீறினான் ''அபாண்டம். நீலரதி இன்னும் யாருடைய மனைவியுமல்ல'' என்று.

''மனைவியாக நடிப்பாள். அவ்வளவுதான்'' என்றான் இளமாரன்.

''நடிப்புக்குக்கூட அந்த நிலை உதவாது. நினைத்தாலே பாதிக்கப்படும் பெண்கள் கற்பு. நடித்தால் நிலைக்குமா?'' என்று மிகுந்த உஷ்ணத்துடன் உதயகுமாரன் கேட்டான்.

''அப்படியானால் நீ வண்டியில் படுத்துக்கொள். நீலரதி உன் மனைவியாக நடிக்கட்டும்'' என்று யோசனை சொன்னான் இளமாரன்.

உதயகுமாரன் எரித்துவிடுவது போல் இளமாரனை நோக்கினான். ''வாழ்க்கை விளையாட்டல்ல'' என்று சீறினான்.

இளமாரன் நகைத்தான். ''அது எனக்கு முன்பே தெரியும். இந்த இரண்டு நாள் நிகழ்ச்சிகளில் உனக்கும் புரிந்திருக்க வேண்டும்'' என்று கூறினான் நகைப்பின் ஊடே. அடுத்து அந்த நகைப்பு உறைந்து அவனது உதடுகளில் ஒரு கடுமை உலாவலாயிற்று. ''வெட்டிப் பேச்சுகளாலும் பழமொழிகளாலும் தத்துவ விசாரத்தாலும் நாம் நீலரதியைக் காப்பாற்ற முடியாது. காப்பாற்றுவது எனது கடமை. நெருப்பென்றால் வாய் வெந்துவிடாது. உதயகுமாரா! நீ சிறுவன். உலக அனுபவம் போதாது. உலகத்தால், உலகத்தின் பெருமக்களால் வாழ்க்கையை இழந்தவன் நான். ஆகவே நான் சொல்வதைக் கேள்'' என்று கடுமையாகச் சொல்லிய இளமாரன் ''சத்திரக்காரரே! துரிதமாகப் பயணம் செய்யக்கூடிய புரவி பூட்டிய வண்டியொன்றை சித்தம் செய்யும்'' என்று கூற சத்திரக்காரன் வெளியே சென்றான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் வண்டி சித்தமாகி விட்டதென்பதை சத்திரக்காரன் வந்து சொல்லவே இளமாரன் பயணத்துக்கு சித்தமானான். அதற்குப் பிறகு யாரையும் கலந்து யோசிக்காமல் சத்திரக்காரனை வண்டியில் படுக்கும்படி யோசனை சொன்னான். அவன் பக்கத்தில் நீலரதியை முக்காடிட்டு உட்காரும்படி யோசனை கூறி விட்டு "நீலரதி! இடையில் ஏதாவது தடையேற்பட்டால் நீ ஏதும் பேச வேண்டாம். உனது மெல்லிய பூங்கத்தி உன்னிடமிருக்கிறதல்லவா? அது பேசட்டும், அதுவும் தான் ஜாடை காட்டிய பிறகு" என்றான். சத்திரக் காரனை எச்சரித்தான். "நீர் மூர்ச்சையாகிவிடும் இப் பொழுது. உம்மை யாராவது அணுகினால் என்ன செய்வதென்பது உம திஷ்டம்" என்று கூறி, வண்டி ஓட்ட உட்கார்ந்தவனை "என் உத்தரவின்றி வண்டியை எங்கும் நிறுத்த வேண்டாம்" என்றான்.

இத்தனை முன்னேற்பாட்டுடன் புறப்பட்ட இளமாரன் முதலில் நிதானமாகப் பயணம் செய்து பிறகு பயணத்தைத் துரிதப்படுத்தினான். வண்டிக்குப் பின்னால் வந்த உதயகுமாரன் ஏதோ பயமறந்ததுபோல் வந்து கொண்டிருந்தான். இத்தனை நிகழ்ச்சிகளிலும் நீலரதி வாயைத் திறவாமல் வந்ததும், இளமாரன் ஏற்பாட்டுக் கெல்லாம் அவள் இணங்கியதும் வியப்பாயிருந்தது அவனுக்கு. யாரையும் பணிய வைக்க இளமாரனிடம் அப்பேர்ப்பட்ட வசீகரம் என்ன இருக்கிறது என்றுஎண்ணி பதில் கிடைக்காமல் திணறினான். 'வசீகரம் ஏதுமில்லை. அவரது முரட்டுத்தனமும் நாத்திக எண்ணங்களுந்தான் காரியத்தை சாதிக்கின்றன' என்று உள்ளூர சொல்லிக் கொண்டு 'இந்தக் கலியுகத்தில் கெடுதல்களுக்குத்தான் சக்தி' என்று யுகத்தின் மீதும் குற்றம் சாட்டினான்.

இத்தகைய ஏற்பாடுகளுடன் பயணப்பட்டு முதலில் நிதானமாகவும் பிறகு துரிதமாகவும் புரவியைச் செலுத்த வண்டியோட்டிக்கு உத்தரவிட்ட இளமாரன் பெண்ணை



யாற்று இறக்கத்தில் மறிக்கப்பட்டதும் அச்சுத மன்னனின் நிர்வாகச் சிறப்பை மெச்சியதன்றி தங்கள் அபாயம் அப்பொழுதும் தீரவில்லை என்பதைப் புரிந்துகொண்டதால், வண்டியை மறிக்க எண்ணி தனக்கு முன்பு நின்ற தலைவனை நோக்கி "ஏன் இந்தத் தடை?" என்று வினவினான்.

"புகாரிலிருந்து இரண்டு நாட்களுக்கு முன்பே உத்தரவு வந்தது, நீலரதி என்ற பெண்ணும் உங்களைப் போன்ற ஒரு வீரரும் வந்தால் தடை செய்யும்படி" என்றான் எதிரே நின்ற வீரர்களின் தலைவன்.

"என்னைப் போலவா?"—வியப்புடன் கேட்டான் இளமாரன்.

"ஆம்."

"என்னுடன் பெண் யாருமில்லையே."

"வண்டியில் இருக்கிறாள் ஒருத்தி."

"அவள் திருமணமானவள். அவள் கணவர் நோய் வாய்ப்பட்டுப் படுத்திருக்கிறார். வேண்டுமானால் நீங்கள் பாருங்கள்" என்றான் இளமாரன்.

காவலர் தலைவன் சந்தேகத்துடன் இளமாரனை நோக்கிவிட்டு வண்டியை சுற்றி வந்து மூடியில் உட்புறம் நோக்கினான். அவன் உட்புறம் தலையை நீட்டியதும் சத்திரக்காரன் பெரிதாக "அப்பா அம்மாடி!" என்று முனகி தான் பெரிய நடிகன் என்பதை நிரூபித்தான்.

நீலரதி ஏதும் பேசவுமில்லை, நடிக்கவுமில்லை. முக்காடிட்ட வண்ணம் சிலைபோல் உட்கார்ந்திருந்தாள். முக்காடிட்டு முகத்தை மறைத்துவிட்டதால் அவள் வனப்போ உணர்ச்சிகளோ காவலர் தலைவனுக்குத் தெரியவில்லை. என்றாலும் புரவியில் வீற்றிருந்த இளமாரனைக் கேட்டான். "இந்தம்மாள் ஏன் முக்காடிட் டிருக்கிறார்கள்?" என்று.

"வெளி நாட்டவள். முக்காடிடும் இனத்தைச் சேர்ந் தவள்" என்று இளமாரன் சமாதானம் சொன்னான்.

சிறிது நேரம் ஏதோ சிந்தித்த காவலர் தலைவன் "உங்களை சோதனை செய்யாமல் நான் அனுப்ப முடியாது. இன்று மாலைவரை இந்த ஊரில் என் காவலில் இருக்க வேண்டும். மாலையில் எங்கள் தலைவர் வந்ததும் அவர் அனுமதி கிடைத்தால் நீங்கள் செல்லலாம்" என்றான்.

அவனுடன் வாதாடுவதில் பயனில்லை என்று உணர்ந்து கொண்ட இளமாறன் அவன் சொன்னபடி அவனைத் தொடர்ந்தான். இளமாறனையும் வண்டியிலுள்ளவர்களையும் பெண்ணையாற்றின் குறுக்கே அழைத்துச் சென்றான் காவலன். ஆற்றில் அடியோடு நீரில்லாததால் வண்டி எவ்வித சிரமமுமின்றிச் சென்றது. ஆற்றைத்தாண்டியிருந்த சிற்றூரையும் தாண்டி கடலோரமாக இருந்த ஒரு பெரிய விடுதியில் அவர்களைத் தங்க வைத்தான் காவலன். அன்று அவர்களுக்கு சகல வசதிகளும் அளிக்கப்பட்டன.

மாலை நெருங்கும் வரையில் பொறுமையாயிருந்த இளமாறன் வெளியே சென்று காவலனை விளித்து "உங்கள் தலைவர் எப்பொழுது வருவார்?" என்று விசாரித்தான்.

"இத்தனை நேரம் வந்திருக்க வேண்டும்" என்றான் காவலன்.

"இன்று வருவாரோ இல்லையோ?" என்று மீண்டும் கேட்டான்.

"அநேகமாக வந்து விடுவார். இல்லாவிட்டால் நாளை வருவது நிச்சயம்!" என்று அலட்சியமாக பதில் சொன்ன காவலன் "அதற்காகக் கவலைப்பட வேண்டாம். இங்கு உங்களுக்கு எந்த வசதிக் குறைவும் இருக்காது" என்றும் சொன்னான்.

காவலன் பேச்சும், பேசிய முறையும், காட்டிய அலட்சியமும் இளமாறனுக்கு சந்தேகத்தை விளைவித்தாலும் அதை அவன் வெளிக்குக் காட்டிக் கொள்ளவில்லை. இரவு வந்ததும் மற்றவர்களை எச்சரித்துவிட்டு அந்த விடுதியின் வாயிற்படியில் உட்கார்ந்து கொண்டான். இருள் எங்கும் சூழ்ந்து கிடந்தது. அந்த இருளில்



அவன் பின்புறத்தில் யாரோ வந்து உட்கார்ந்து தோளில் கை வைத்தார்கள். அது யாரென்பது இளமாறனுக்குப் புரிந்தாலும் அவன் ஏதும் கேட்கவுமில்லை. உட்கார்ந்த நிலையிலிருந்து அசையவுமில்லை. "நீலரதி! காவலர் தலைவன் பார்த்தால் சந்தேகம் வரும். உள்ளே போய் விடு" என்றான்.

அவள் உள்ளே போகவில்லை. அவனை நெருங்கியே உட்கார்ந்திருந்தாள். "உள்ளே வேலையில்லை. என் கணவர் எழுந்து உட்கார்ந்திருக்கிறார்" என்று கூறி அவள் புன்முறுவல் செய்தாள்.

அதே சமயத்தில் சற்று எட்ட இருந்த மாமரத்தடியில் காவலர் தலைவன் இன்னொருவனுடன் பேசிக்கொண்டிருந்தான். "வந்திருப்பது நாம் எதிர்பார்த்தவர்கள் தான்" என்றான் இன்னொரு வீரனிடம்.

"அப்படியானால் அந்த நோய்வாய்ப்பட்ட கணவன்?" என்று கேட்டான் அந்த வீரன்.

"அவனுக்கு நோயுமில்லை. அவன் அந்தப் பெண்ணின் கணவனுமல்ல. என்னைப் பார்த்ததும் வேண்டுமென்றே முனகினான். நாளைக்கு முனகமாட்டான். நாளைக்கு அவன் மூச்சை நமது படைத்தலைவர் நிறுத்தி விடுவார்" என்றான் காவலர் தலைவன்.

"எப்படி?"

"தூக்கில் போட்டு விடுவார்."

"வண்டியின் முன்பு புரவிமீது வந்தானே?"

"அவன்தான் அந்த பயங்கர இளமாறனாயிருக்க வேண்டும். அவன் கழுகுக் கண்ணைப் பார்த்ததுமே புரிந்துகொண்டேன்" என்று சொன்ன காவலர் தலைவன் "அவர் படுத்திருக்கும் விடுதியை முன்னும் பின்னும் பூட்டி விடு" என்று உத்தரவிட்டான்.

"அப்படியானால் அவர்கள்..." வீரன் கேட்டான்.

"நமது சிறைப் பறவைகள்" என்று கூறிய காவலர் தலைவன் மரத்தடியிலிருந்து எழுந்து "நள்ளிரவானதும் பூட்டி விடு. அதுவரை அவர்களுக்கு எந்த சந்தேகமும் வேண்டாம்" என்று உத்தரவிட்டுச் சென்றான். □

# 23. அன்றொரு நாள்

கடல் அருகே இருந்ததால் கடலூர் என்ற காரணப் பெயரை சங்க கால முதல் பெற்றிருந்த அந்தச்சிற்றூரின் சுத்தமான தமிழ்ப் பெயர் காலகட்டத்தில் வேறு சிறப்புப் பெயர்களைப் பெற்றாலும், அசல் பெயர் மட்டும் அழியாமலே இருந்து வந்ததாலும், கடலும் அதைவிட்டு அதிக தூரம் ஓடிவிடாததாலும், மிக ரம்மியான சூழ்நிலையே அந்த ஊரில் இருந்து வந்தது. அந்த ஊரின் கடலோர விடுதியில் உட்கார்ந்திருந்த இளமாறன் அத்தனை ஆபத்திலும் அதன் அழகை ரசிக்கவே செய்தான். சந்திரனே இல்லாமல் வானம் விண்மீன்களை மட்டும் காட்டிய அந்த இரவின் சொற்ப வெளிச்சத்திலும் தூரத்தே தென்பட்ட அலைகளின் எழுச்சியையும், புரண்டு மடிந்த வீழ்ச்சியையும் கண்ட இளமாறன் "என்ன அழகான ஊர்?" என்று உள்ளூர சிலாகித்துக் கொண்டான். "உலகை அழகுபடுத்த சந்திரனிருந்தாலும், அவன் இல்லாத காலத்திலும் உலகின் அழகு அப்படியொன்றும் குறைந்து விடவில்லை" என்றும் எண்ணமிட்டான். "இருளிலும் இயற்கை எத்தனையோ இந்திர ஜாலங்களை விளைவிக்க முடியுமென்பதற்கு அதோ அந்தக் கடலே சாட்சி" என்றும் அவன் சாட்சி காட்டினான். இன்பத்துக்கு விசையூட்ட இவள் ஒரு பலம் தான் என்ற அவன் எண்ணத்திற்கு ஆதரவளிப்பதுபோல் நீலரதி அவன் முதுகுப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டதும் எதற்கும் அசையாத அவன் உணர்ச்சிகளும் ஓரளவு அசையவே, அவற்றைக் கட்டுப்படுத்த தனது உடலை சிறிது விரைத்துக் கடுமையாக்கிக் கொண்டதோடு நீலரதியை உள்ளே போகும்படியும் உத்தரவிட்டான்.

அவன் உத்தரவை அவள் காதில் வாங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை. வாணகரை விடுதி வாயிற்படியில்



அவள் பின்னால் உட்கார்ந்தது போலவே நன்றாக நெருங்கி உட்கார்ந்து அவன் முதுகை தனது உடலாலும் நெருக்கினாள். அதன் விளைவாக முதுகில் அழுத்திய இன்மையான எழுச்சிகளிரண்டாலும் மீண்டும் உதுக்கப்பட்ட உணர்ச்சிகளால் பாதிக்கப்பட்ட இளமாறன் "நீலரதி!" என்று கண்டிப்பு ஒலித்த குரலில் அழைத்தான்.

அவள் உடனடியாக பதில் சொல்லவில்லை. அவன் அணிந்திருந்த எகிப்து நாட்டு அங்கியைத் தோளிலிருந்து சற்றே அகற்றி அந்தத் தோளின்மீது தனது முகவாய்க் கட்டையை வைத்துக்கொண்டாள். தனது இடக்கையையும் அவன் தோளின் பக்கமாக மார்பில் இறக்கி, அவன் மார்புக்குக் குறுக்கே விழுந்திருந்த பெரிய வெட்டுக் காயத் தழும்பைத் தடவினாள். "அப்பா! எத்தனை பெரிய தழும்பு! வெட்டு பலமாக விழுந்திருக்க வேண்டும்" என்று சொல்லவும் செய்தாள் குரலில் அனுதாபம் துலங்க.

"நீலரதி!" — மீண்டும் கடுமையாக ஒலித்தது இளமாறன் குரல்.

"என்ன?" என்று கேட்டாள் அவள்.

"நான் சொன்னது காதில் விழவில்லை உனக்கு?" என்று சீற்றத்துடன் கேட்டான் இளமாறன்.

"என்ன சொன்னீர்கள்?"—எதுவும் புரியாததுபோல் கேட்டாள் அவள்.

"உள்ளே போகச் சொன்னேன்..."

"ஆம் சொன்னீர்கள்..."

"காரணம் சொன்னேன்."

"ஆம் சொன்னீர்கள். இந்த நிலையில் நம்மைக் கண்டால் காவலர் தலைவன் சந்தேகப்படுவானென்று." என்ற நீலரதி "அவன் சந்தேகத்தைப் பற்றி நமக்கென்ன கவலை?" என்றும் கேட்டாள்.

அந்த சமயத்தில்தான் எட்ட இருந்த மரத்தடியில் காவலர் தலைவன் இன்னொரு காவலனுடன் பேசி

கொண்டிருந்தான். கடற்காற்று விடுதியை நோக்கி வந்து கொண்டிருந்ததால் காவலர் தலைவனும் காவலனும் பேசிக்கொண்டது தெளிவாகக் கேட்டது, விடுதி வாசற்படியில் உட்கார்ந்திருந்த இருவருக்கும்.

அவர்கள் உரையாடலின் முடிவில் இளமாரன் தோளின் மீது முகவாய்க் கட்டையை வைத்திருந்த நீலரதி மெதுவாக நகைத்தாள். தனது கன்னமொன்றையும் அவன் கன்னத்துடன் இணைத்து ''பார்த்தீர்களா, காவலர் உரையாடலை? காவலர் தலைவனுக்கு சந்தேகம் ஏதும் கிடையாது. நீங்கள் சொன்ன கதையை அவன் நம்ப வில்லை. அந்த சத்திரக்காரன் முனகலையோ என்னுடைய முக்காட்டையோ அவன் சிறிதும் ஒப்புக்கொள்ள வில்லை. ஆகவே —'' என்றாள்.

அவள் வாசகத்தை முடிக்காததைக் கண்ட இளமாரன் ''சொல் முழுவதையும்'' என்றான்.

அவள் சொன்னாள்: ''நாமிருக்கும் நிலையைப் பார்த்தால் ஏதோ சந்தேகம் ஏற்படுமென்று சொன்னீர்களே, அது ஏற்படாது'' என்றாள்.

இளமாரன் மேற்கொண்டு எதுவும் பேசவில்லை. தீவிர சிந்தனையில் ஆழ்ந்தான் பல விநாடிகள். அவன் சிந்தனை வசப்பட்டு விட்டதை உணர்ந்த நீலரதி அவன் முதுகில் மேலும் நெருங்கிச் சாய்ந்தாள். அவன் மார்பில் முதலில் தவழவிட்ட கையில் அவன் மார்புக்குக் குறுக்கே இருந்த நீண்ட தழும்பை மீண்டும் தடவினாள். ''வீரரே!'' என்று மெதுவாக அவன் காதுக்கருகே அழைத்தாள்.

இளமாரன் உணர்ச்சிகள் அவள் சமீபத்தாலும், முதுகில் இழைத்த அவள் உடலின் அசைவாலும் லேசாகப் புரளவே செய்தன. மேற்கொண்டு அந்த ஜன்மத்தில் எந்தப் பெண்ணையும் பார்ப்பதில்லை, நினைப்பதும் இல்லை என்று தான் செய்துகொண்ட பிரமாணம் லேசாக உடைபடுவதை எண்ணிப் பெருமூச்செறிந்தான். அவள் கன்னத்தைத் தனது கன்னத்துடன் அவள் இழைத்து காதில்



மெதுவாக தனது பெயரைச்சொல்லி அழைத்ததும் அவன் நினைப்பெல்லாம் எத்தனையோ வருடங்களுக்குப் பின்னால் ஓடின. ''அன்றும் இப்போதையைப் போன்ற ஒரு நிலை. ஆனால் எத்தனை பயங்கர நிலை!'' என்று உள்ளூரச் சொல்லிக் கொண்டான்.

அந்தச் சமயத்தில் நீலரதி மீண்டும் அவன் காதுக் கருகில் தனது அழகிய இதழ்களைக் கூட்டி அழைத்தாள் ''வீரரே!'' என்று.

கடந்த கால நினைப்பாலும், அதன் பயங்கரத்தாலும் இளமாரன் உணர்ச்சிகள் பழையபடி கட்டுப்பாட்டுக்குள் வந்து விட்டதால் ''என்ன நீலரதி?'' என்று சர்வசாதாரணமாகக் கேட்டான்.

அவன் குரல் தெளிவுபட்டு விட்டதையும், உணர்ச்சிகளை அவன் கட்டுப்படுத்தி விட்டபடியால் குரலும் பழைய நிதானத்தையும், திடத்தையும் அடைந்து விட்டதையும் கவனித்த நீலரதி அவன் திறமையைக் கண்டு வியந்தாள். துறவிகள் கூட இப்படி உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாதென்று நினைத்தாள். இந்த உறுதிக்குப் பின்னால் ஏதோ ரகசியம் இருக்கிறதென்பதையும் அறிவாளியான அவள் உணர்ந்து கொண்டாள். ஆகவே மறுபடியும் உரையாடலைத் தொடர்ந்து ''உங்கள் மார்புக்குக் குறுக்கே நீண்ட தழும்பு இருக்கிறது—'' என்றாள்.

''ஆம். வாள் விளைவித்த காயம்'' என்றான் இளமாரன்.

''எந்தப் போரில் விளைந்தது வீரரே?'' என்று வினவினாள்.

இளமாரன் சிறிது சிந்தித்தான். ''ஆம், அதுவும் ஒரு விதப் போர்தான்'' என்றான் சிந்தனைக்குப் பிறகு.

''நீலரதிக்குப் புரியாததால் கேட்டாள் ''ஒருவிதப் போர் என்றால்?'' என்று.

''படைகளுடன் மோதும்போது ஏற்பட்டதல்ல'' என்ற இளமாரன், அந்தக்காயம் ஏற்பட்ட காரணத்தை நினைத்துப் பெருமூச்செறிந்தான்.

ஏதோ ஒரு பெரிய சோகக்கதை அந்தக் காயத்துக்குப் பின்னால் இருப்பதை நீலரதி உணர்ந்து கொண்டாள். ''வேறு எப்பொழுது ஏற்பட்டது?'' என்று வினவினாள்.

இளமாரன் மீண்டும் பெருமூச்செறிந்தான். ''உன் கதையைப் போலதான் அதுவும். இருபது ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்டது'' என்று சொன்னான் பெருமூச்சைத் தொடர்ந்து.

நீலரதி சிறிது நேரம் மௌனம் சாதித்தாள்: ''அந்தக் கதையை நான் கேட்கலாமா?'' என்றாள் மெதுவாக.

இளமாரன் கையொன்று எழுந்து தனது மார்புக்குக் குறுக்கே விழுந்திருந்த அவள் கையை மெதுவாகத் தடவியது. ''வேண்டாம் நீலரதி! அந்தக் கதையை நீ கேட்க வேண்டாம். அதுவும் ஒரு பெண்ணைப் பற்றியது தான். அவள் கையும் உன் கையைப்போல் மிருதுவாகத் தான் இருக்கும். அவளும் உன்னைப் போல் மிக அழகாக இருப்பாள். அவள் அடைந்த துன்பம் எல்லையற்றது...'' என்று உணர்ச்சியுடன் கூறிய இளமாரன் பேச்சை நிறுத்தினான்.

நீலரதியின் உணர்ச்சிகள் அவன் சோகக் குரலைக் கேட்டு, பெரிதும் நெகிழ்ந்தது. அவனுக்கு ஆதரவளிக்கும் வகையில் தனது வலக் கையையும் எடுத்து அவன் இன்னொரு தோளில் வைத்தாள். ''வீரரே! உங்கள் மனமே நெகிழ வேண்டுமானால் அந்தக் கதை மிக சோகமாகத் தானிருக்க வேண்டும். அந்தத் துன்பத்தை நானுந்தான் பங்கிட்டுக் கொள்கிறேனே, சொல்லுங்கள்'' என்று துன்பத்தில் தோய்ந்த குரலில் கேட்டாள்.

இக்கோரிக்கைக்கு இளமாரன் நீண்ட நேரம் பதில் சொல்லவில்லை. கதையைத் தொடங்கவுமில்லை. மௌனமே சாதித்த அவனை நீலரதியே ஊக்கினாள். ''வீரரே! துன்பத்தை உள்ளடக்கினால் உங்கள் உடல் நிலைதான் கெடும். துன்பத்தை நமக்கு வேண்டியவர்களுடன் பகிர்ந்துகொள்வதில் துன்பத்தின் சுமை குறையும். என் முழுக் கதையையும் நான் உங்களுக்குச் சொல்லவில்



லையா, வாணகரையில்?'' என்றாள் கருணை சொட்டிய குரலில்.

இளமாரன் அவள் குரலில் இருந்த கனிவையும் கருணையையும் கவனிக்கவே செய்தான். அதன் காரணமாகவோ என்னவோ நீண்ட பெருமூச்சுவிட்டான் ஒரு முறை. பிறகு மெதுவான குரலில் கதையைச் சொல்ல தனது தலையை நிமிர்த்தி எட்ட இருந்த கடலை நோக்கிக் கொண்டே பேசலானான்:

''நீலரதி! இதே கடலின் இன்னொரு பகுதி! இந்த மாதிரி அலைகள் அந்த ஊரின் மண்ணையும் முத்தமிட்டுக் கொண்டிருந்தன. ஆனால் அந்தக் கடலுக்கு முன்னிருந்தது இம்மாதிரி சிறு விடுதியல்ல, அரண்மனை போன்ற பெரிய மாளிகை. அதோ மரத்தடியில் நிற்கிறார்களே அதே மாதிரி பல காவலர்கள் அந்த மாளிகையில் பணி செய்து வந்தார்கள். பெரும் தென்னந்தோப்புகளும், மாமரச் சோலைகளும் அந்த மாளிகையைச் சூழ்ந்திருந்தன. அந்தச் சோலைகளின் சிறப்பைக் கவிஞர்கள் தான் வர்ணிக்க வேண்டும். அந்தச் சோலை மரங்களில் தான் எத்தனைவித பட்சி ஜாலங்கள். அவற்றின் இனிய குலாவல் ஒலிகள் இன்றும் என் காதில் ஒலிக்கின்றன. அந்த ஒலிகளைக் கடலின் இன்பக்காற்று தாங்கி வந்து என் காதுகளில் செலுத்தி என் உள்ளத்துக்கு அளித்த உணர்ச்சிகளின் சுழற்சிதான் என்ன! அந்த மாளிகை ஒரு சொர்க்கம். அதன் சூழ்நிலை ஒரு சொர்க்கம். அந்த மாளிகை என்னுடையதாக இருந்தது. அதன் ஏராளமான நிலபுலன்கள் என்னைச் சேர்ந்திருந்தன. அந்த மாளிகைக்கு என்னுடன் போர் பயிலப் பல வாலிபர்கள் வருவார்கள். நாங்கள் இரவில் மணலில் வாட்பயிற்சி செய்வோம், நீண்ட நேரம் வரை. அதுபோன்ற ஒருநாள் இரவில்தான்...'' இளமாரன் வார்த்தைகள் அத்துடன் நின்றுவிட்டன. நீண்ட நேரம் அவன் குரல் எழும்பவே இல்லை. □

# 24. குல வைரி

உணர்ச்சிப் பெருக்கால் பல விநாடிகள் மௌனம் சாதித்த இளமாறன் மெதுவாகத் தன்னைச் சமாளித்துக் கொண்டு தனது கடந்த கால வாழ்க்கைக் கதையை மேலும் தொடர்ந்தான். "அதுபோன்ற ஓர் இரவில்தான் மருதியை நான் சந்தித்தேன். நானும் இன்னும் சில வாலிபர்களும் அலைகளையடுத்த சோலையில் வாட் பயிற்சி செய்துகொண்டிருந்தபோதுதான் அவள் இரண்டு முந்திரி மரங்களுக்கிடையிலிருந்து வெளியே வந்தாள். மேகத்தை விலக்கிக் கொண்டு வரும் முழுமதியைப்போல அன்று மதியின் ஆட்சி வானத்திலிருந்ததால் அவன் தனது கிரணங்களை மருதியின் முகத்தில் வீசியதால் மதி தனது மகிமையை இழந்து, தரையிலும் ஒரு மதி உலாவ முடியுமென்பதை நிருபித்தான். அவளை நான் ஏற்கனவே இரண்டொருமுறை அந்த சோலையில் பார்த்திருந்தாலும் அவள் யாரென்பதை உணரவில்லை. அந்தக் காலத்தில் நானும் பண்புடனும் தெய்வபக்தியுடனுமிருந்ததால் அவளை நெருங்கி யாரென்று விசாரிக்கவுமில்லை. ஆனால் அன்று விசாரிக்கும் அவசியத்துக்குக் கொண்டு வந்து விட்டாள் அந்த அழகி.

முந்திரி மரங்களின் கிளைகளை விலக்கிக்கொண்டு அவள் வந்ததுமே வாட்பயிற்சியை நானும் எனது நண்பர்களும் நிறுத்திவிட்டோம். பெண்ணொருத்தி தோன்றியதால் அவர்களும் அங்கு நிற்காமல் என்னிடம் விடை பெற்றுச் சென்றுவிட்டார்கள், தனிமையில் விடப்பட்ட நானும் அந்தப் பெண்ணும் நீண்ட நேரம் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டே நின்றோம். குவளை மலர்கள் போன்ற அவளது கண்கள் என் கண்களைக் கவர்ந்து, என்னை அசையவொட்டாமல்



செய்தன. என் புலன்கள் என்னை மீறி நடித்தன. மெதுவாக சமாளித்துக்கொண்டு நான் வினவினேன் அவளை "பெண்ணே! நீ யார்?" என்று.

அவள் பதில் சொன்னபோது அவள் பேசினாளா அல்லது உதடுகளில் குழல் கொண்டு இசைத்தாளா என்று என்னால் நிர்ணயிக்க முடியவில்லை. "நான் அடுத்த தோப்பின் மாளிகையிலிருக்கிறேன்" என்றாள் அவள் மதுரகீதம் பாடுவதுபோல். நான் வியப்பின் எல்லையை அடைந்தேன். அங்கெல்லாம் தோப்பு என்பது நீண்ட தூரம்-ஒவ்வொரு தோப்பும் தனி ராஜ்யம் என்று கூடச் சொல்லலாம். ஒவ்வொரு தோப்பின் மத்தியிலும் ஒவ்வொரு மாளிகை உண்டு என்றாலும் சுற்று வட்டாரத்தில் எங்கள் மாளிகையைப் போல் அத்தனை பெரிய மாளிகை எதுவும் கிடையாது. ஆனால் மற்ற சிறு மாளிகைகளில் இருந்த பலரும் எங்கள் செல்வத்தையும் பதவியையும் கண்டு பொறாமை கொண்டவர்கள், பகையும் கொண்டார்கள். ஆகவே அந்தப்பெண் தனிமையில் அந்த இரவில் என்னுடன் பேசுவதைப் பார்த்தால் வீண் சச்சரவு ஏற்படுமென்று அவளை அனுப்பி விட முயன்று "பெண்ணே! இரவு வேளை" என்றேன்.

"இந்த சமயத்தில் இங்கு நான் வருவது இதல்ல முதல் தடவை" என்று கூறி புன்முறுவல் செய்தான் அவள்.

அந்த முறுவலைக் கண்டு முத்து கடலுக்குள்தான் இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. தரையிலும் இருக்கலாம் என்ற முடிவுக்கு வந்தேன். அவள் முறுவல் என்னை ஆட்கொண்டிருக்க வேண்டும்.

"அப்படியா?" என்று கேட்டேன்.

"ஆம். வாட்பயிற்சி என்றால் எனக்கு மிகவும் பிடிக்கும். வாட்பயிற்சியைக் காண அடிக்கடி இங்கு வருவேன். எனக்கும் சிறிது வாள் சுழற்றத் தெரியும். ஆனால் உங்களளவு தெரியாது. உங்கள் வாள் சுழலு

வதில் ஓர் அற்புதமிருக்கிறது. ஒரு தனிப்பட்ட அழகிருக்கிறது. ஒரு தனிப்பட்ட கலை இருக்கிறது. அந்தக் கலையை எனக்கு சொல்லித் தருகிறீர்களா?'' என்று வினவினாள். அவள் கண்கள் கெஞ்சின.

நான் மறுக்கமுடியாவிட்டாலும் சமாதானம் சொல்ல முனைந்து 'நீங்கள் இங்கு இரவில் வருவது உங்கள் பெற்றோருக்குத் தெரியுமா?' என்று கேட்டேன்.

அவள் அதிர்ச்சியுறும் செய்தியைச் சொன்னாள்: 'எனக்குப் பெற்றோர் கிடையாது' என்று.

'வேறு யார் இருக்கிறார்கள்?' என்று விசாரித்தேன்.

'தூரத்து உறவினர் இருக்கிறார்கள். அடுத்த தோப்பு மாளிகையில்' என்றாள் அவள்.

'அவர்களுக்காவது தெரியுமா இங்கு வருவது?' என்று கேட்டேன்.

''தெரியாது. தெரிய அவசியமுமில்லை. தெரிந்து கொள்ள அவர்களும் முயலமாட்டார்கள்' என்று அவள் பதில் சொன்னாள்.

நான் சிறிது நிதானித்தேன். 'உன் பெயரென்ன' என்று சகஜமாகக் கேட்டேன்.

'மருதி' என்று அவள் பதில் சொன்னாள்.

''என்ன அழகான தமிழ்ப்பெயர். அவள் அழகுக்கு அது எப்படி ஒட்டுகிறது!' என்று சிந்தித்தேன். அடுத்து ஏதோ கேட்க வேண்டுமென்பதற்காகக் கேட்டேன். 'உனக்கு வாட்பயிற்சி எதற்காக?' என்று.

'தற்காப்புக்காக' என்றாள் அவள்.

'உன் மாளிகையிலிருப்பவர்கள் உன்னைக்காப்பாற்ற மாட்டார்களா?'.

'மாட்டார்கள்'

'ஏன்?'



பதில் சொல்ல ஒரு விநாடி தயங்கினாள் அவள். சொன்னபோது துயரமிருந்தது அவள் குரலில். ''அவர்களிடமிருந்து என்னைக் காத்துக் கொள்ளத்தான் நான் வாட்பயிற்சியை விரும்புகிறேன்'' என்றாள்.

அதற்குமேல் அவள் எதுவும் பேச மறுத்தாள். அவள் கோரிக்கையை நான் மறுக்கமுடியாமல் ஒப்புக் கொண்டேன். 'ஒன்றுவிட்டு ஒரு நாள் வா. எனது நண்பர்கள் பயிற்சிக்கு வருமுன்பு நீ வந்து போய்விடு' என்றேன்.

அவள் அழகிய முகத்தில் சிந்தனைச் சாயையொன்று படர்ந்தது. 'முடியாது. அவர்கள் சென்ற பின்பு வருகிறேன்' என்றாள்.

'ஏன் முன்னால் வந்தாலென்ன?' என்று வினவினேன்.

''என் மாளிகையிலிருப்பவர்கள் பார்த்து விடுவார்கள். அவர்கள் உறங்கிய பின்பு வருகிறேன்'' என்றாள்.

வேறு வழியின்றி நான் ஒப்புக் கொண்டேன். அன்று மறுநாள் பயிற்சியைத் தொடங்கினேன். வாள் வித்தைக்கு அவள் புதியவளல்லவென்பதை முதல் நாளே புரிந்து கொண்டேன். முதலில் ஒன்றுவிட்டு ஒருநாள் வந்தாள். பிறகு நித்தநித்தம் வரத் தொடங்கினாள். வாட்பயிற்சியிலிருந்து காதல் பயிற்சி தொடங்கியது. ஒருநாள் அவள் கையில் வாட்காயத்தை துணிகொண்டு கட்டமுயன்றேன். அப்பொழுது நாங்களிருவரும் ஒரு முந்திரி மரத்தடியில் உட்கார்ந்திருந்தோம். கையை சரியாகக் கட்ட அவள் இடையைப் பிடித்து சிறிது அவளைத் திருப்பினேன். அடுத்த விநாடி அவள் பூவுடல் என் உடலின் மீது சாய்ந்தது. உணர்ச்சிகள் மீறியதால் நான் துணிந்து அவள் கன்னத்தில் இதழ்களைப் புதைத்தேன். அவள் என்னை விலக்கவில்லை. என் துணிவுக்கு இதழ்களைப் பரிசாகத் தந்தாள்.

பிறகு அவளை நான் என் மாளிகைக்கு அழைத்துச் சென்றேன். என் பெற்றோர் காலமாகி விட்டதால்

என்னை வளர்த்த செவிலித்தாய்கூட்டுமே மாளிகையிலிருந்தாள். அவள் என்னைத் தடுத்து எதுவுமே சொல்லவில்லை. இதனால் மருதி அடிக்கடி என் மாளிகைக்கு வரத் தொடங்கினாள். நாங்களிருவரும் எங்கள் மாளிகை வாசலில் அக்கம் பக்கத்தில் நின்று வண்ணக் கடலின் அலைகளைப் பார்ப்போம். என் கை அவள் இடையில் தவழ்ந்திருக்கும். அவள் தலை என் தோளின்மீது இணைந்திருக்கும். இப்படி சில நாட்கள் சென்றதும் நாங்களிருவரும் ரகசியமாகத் திருமணம் செய்து கொண்டோம். அடுத்த தோப்பிலிருந்த அவர்கள் உறவினர் எங்கள் திருமணத்திற்கு சம்மதிக்கவில்லை. முதலில் காரணம் எனக்குத் தெரியவில்லை. அவளை அந்த சிறு மாளிகையிலிருந்த அவள் உறவினன் ஒருவனும் காதலித்தான் என்பது எனக்குப் பின்னால்தான் தெரியவந்தது. அதுவும் ஓராண்டு கழிந்து, எங்களுக்கு ஓர் ஆண் மகவும் பிறந்த பிறகு.

அவளைக் காதலித்தவன் ஒரு மூர்க்கன். பண்பு என்பதைக் கனவிலும் கருதாதவன். எங்கள் திருமணத்துக்குப் பிறகு பல நாட்கள் அவன் எங்கள் மாளிகைக்கு வந்திருக்கிறான். மருதியிடம் பலமுறை பேச முயன்றான். மருதி அவனைத் திரும்பிப் பார்க்கவும் மறுத்தாள். ஒரு நாள் என்னைக் கேட்டாள்: ''உங்கள் கையால் எனக்கு ஒரு குறுவாள் கொடுங்கள்'' என்று. காரணம் கேட்காமல் நானும் எனது ஆயுத சாலையிலிருந்து நல்ல குறுவாளாக எடுத்துக் கொடுத்தேன். 'உங்கள் கையினாலேயே இதை என் சேலையின் இடைப்பகுதியில் செருகி விடுங்கள்' என்றாள்.

நான் அவளிஷ்டப்படியே செய்தேன். அவளிஷ்டத்தை நான் என்றுதான் மறுத்தேன்? ஆனால் அவள் ஏதோ அபாயத்தை எதிர்பார்க்கிறாள் என்பது மட்டும் எனக்குத் தெரிந்தது. என் மகன் பிறக்கும் முன்பும் சரி, பின்பும் சரி அவள் நிலாக் காலங்களில் சோலைப் பக்கம்



போவதை நிறுத்தவில்லை, சில சமயங்களில் திரும்பும் போது துன்பத்துடன் வருவாள். ஒரு நாள் காரணம் கேட்டேன். ''காரணம் கேட்காதீர்கள்'' என்றாள். இன்னொருமுறை அவள் திரும்பியபோது அவள் ஆடையின் பல இடங்களில் கிழிந்திருந்தது. 'இதெப்படி மருதி கிழிந்தது?' என்று வினவினேன்.

'முந்திரி மரக்கிளைகளில் மாட்டிக் கிழிந்துவிட்டது' என்றாள்.

அது கற்பனைப் பொய் என்பது எனக்குத் தெரிந்ததால் காரணத்தை நானே அறிய முற்பட்டேன். ஒரு நாள் அவளைப் பின்பற்றிச் சென்றேன் ரகசியமாக. அன்றும் நிலவு காய்ந்து கொண்டிருந்தது. அவள் தோப்புக்குள் நுழைந்து வேகமாகச் சென்றாள். அவளை எதிர்பார்த்து நின்றிருந்தான் அந்த அயோக்கியன். பலமுறை என் மாளிகைக்கு வந்தவன்தான். அவன் முகத்தில் கடுமை நிரம்பிக்கிடந்தது. கண்களில் கொடுமை துளிர்த்திருந்தது.

அவள் அவனிருந்த இடத்தை அடைந்ததும் 'எங்கே மாளிகைச் சாவி?' என்று கேட்டான்.

'என் கணவரிடம் இருக்கிறது' என்றாள் மருதி...

'ஏன் கொண்டு வரவில்லை?'—அவன் குரலில் சீற்றமிருந்தது.

'என் கணவருக்குத் துரோகம் செய்ய இஷ்டமில்லை' அவள் பதில் திடமாயிருந்தது.

அவன் துணிவுடன் அவள் கையைப் பிடிக்க முயன்றான். மருதி தன் இடையிலிருந்த குறுவாளை எடுத்துக் கொண்டாள். 'கையைத் தொட்டால் அதைத் துண்டித்து விடுவேன்' என்று மிரட்டினாள் மருதி.

அவன் நீட்டிய கையைக் கீழே போட்டான். 'இன்னும் பதினைந்து நாள் அவகாசம் தருகிறேன். அடுத்த

பௌர்ணமியன்று சாளிகளுடன் வந்து சேர். இல்லையேல்...' என்றான்.

மருதி பதில் சொல்லவில்லை. ஏதும் பேசாமல் எங்கள் மாளிகையை நோக்கி நடந்தாள்.

நான் அவனைத் தீர்த்துவிடத் தீர்மானித்து மறைவிடத்திலிருந்து வெளியே வந்தேன். என்னைக் கண்டதும் பக்கத்து மரங்களில் மறைந்து அவன் ஓடிவிட்டான். அவன் யாரென்பதைப் புரிந்துகொண்டேன். அவனிடமிருந்து எப்படியும் என் மனைவியைக் காப்பாற்ற முடிவு செய்தேன். அவன் எங்கள் குல வைரி. அவனிடம் மருதியின் ரகசியம் ஏதோ சிக்கியிருப்பதை உணர்ந்தேன். எப்படியும் மருதியை அவனது பிடியிலிருந்து விடுவிக்கத் தீர்மானித்தேன். எனது வீரர்களைக் கூட்டிக்கொண்டு குல வைரிகளின் மாளிகையை நான் சூறையாடியிருக்க முடியும். அப்படிச் செய்தால் மருதியின் ரகசியம் அம்பலமாகிவிட்டால் என்ன செய்வது என்று பயந்தேன். அவனை வேறு வழியில் மடக்க உறுதி செய்துகொண்டேன். அதனால் சில நாட்கள் தாமதமாயின. அந்தத் தாமதம் என் வாழ்க்கையை நாசமாக்கிவிட்டது...''

□ □ □

# 25. கஷ்டத்தில் ஒற்றுமை

இளமாறன் வாலிப வாழ்க்கைக் கதையைக் கேட்டுக்கொண்டு அவன் முதுகுக்கருகே உட்கார்ந்திருந்த நீலரதி அடுத்து வருவது அவன் வாழ்க்கையின் சோகப்பகுதி என்பதை உணர்ந்து கொண்டாலும் அதையும் கேட்க விரும்பி ''மேலே சொல்லுங்கள்'' என்றாள்.

''அந்த பயங்கரக் கதையை ஏன் கேட்கிறாய் நீலரதி? இத்துடன் கதையை நிறுத்திக் கொள்வோமே'' என்று இளமாறன் சொன்னாலும் அவள் கேட்கவில்லை. ''சொல்லுங்கள்'' என்றாள்.

ஒருமுறை பெருமூச்சு விட்டு இளமாறன் கதையைத் தொடர்ந்தான்.

''அன்றிரவில் மௌனமாக மாளிகைக்குச் சென்ற மருதியை நான் உடனடியாகப் பின் தொடரவில்லை. என்னைப் பார்த்ததும் ஓடிவிட்ட குல வைரியையும் நான் பின்பற்றிச் செல்லவில்லை. கடற்கரை சென்று நீண்ட நேரம் சிந்தனையில் ஆழ்ந்து உட்கார்ந்திருந்தேன். எப்பொழுதும் எனக்கு ஆனந்தத்தை அளிக்கும் கடலலைகள் கூட அன்று என் உள்ளத்திலிருந்த குழப்பத்தை அழிக்க முடியவில்லை. மருதியின் வாழ்க்கையில் அவிழ்க்க முடியாத ஏதோ பெரியசிக்கல் இருப்பதை நான் உணர்ந்தேன். ஆனால் அது என்னவாயிருக்கும் என்பதை என்னால் உணர முடியவில்லை. அதை எப்படியும் அவிழ்க்கத் தீர்மானித்து அந்த உறுதியுடன் மாளிகைக்குச் சென்றேன். எங்கள் படுக்கை அறையில் மருதி என்னை எதிர்பார்த்து உட்கார்ந்து கொண்டிருந்தாள். நான் வந்ததும் அவள் எழுந்து என்னை நோக்கி வந்து 'ஏன் இத்தனை நேரம்? எங்கே சென்றிருந்தீர்கள்?' என்று வினவினாள்.

'கடற்கரைக்கு' என்று சொன்னேன்.

'எதற்கு?' என்று அவள் கேட்டாள்.

'சாதாரணமாக அலைகளைப் பார்த்து மகிழ்வது வழக்கம்.'

'இன்றும் அப்படித்தானா!'

'ஆம்.'

'அலைகளிடம் பெற்ற மகிழ்ச்சி என்ன ஆயிற்று? வரும் வழியில் விட்டு விட்டு வந்தீர்களா?'

'இல்லை மருதி.'

'உங்கள் முகத்தில் மகிழ்ச்சியைக் காணோமே' என்று சந்தேகத்துடன் அவள் கேட்டாள்.

அதற்கு மேல் அவளும் ஏதும் கேட்கவில்லை. நானும் ஏதும் கேட்கவில்லை. 'குழந்தை எங்கே?' என்று மட்டும் விசாரித்தேன். அடுத்த அறையில் செவிலியிடமிருப்பதாக அவள் சொன்னாள். பிறகு நாங்கள் துயிலச் சென்றோம். நாட்கள் ஓடின. அடுத்த பௌர்ணமியும் மெல்ல வந்தது. அன்று மருதி எப்படியும் அவனைச் சந்திக்கச் செல்வாளென்று எதிர்பார்த்தேன். அதற்காக சீக்கிரமாக உறக்கம் வருவதுபோல் பாசாங்கு செய்து படுத்துவிட்டேன். ஒரு ஜாமம் ஓடியதும் என்னை அசைத்துப் பார்த்த மருதி மெல்ல எழுந்து வாயிற்புறம் சென்றாள். அவள் செல்ல சிறிது நேரம் கொடுத்துவிட்டு நான் அவளைத் தொடர்ந்தேன். மாளிகைக்கு எதிரே இருந்த தோப்பில் அவள் நுழைந்து கொண்டிருந்ததைப் பார்த்தேன். நான் உள்ளே சென்று எனது வாளை எடுத்துக் கொண்டு புறப்பட்டேன். அன்றும் அவள் பழைய இடத்தில் நின்றிருந்தாள். ஆனால் என் குலவைரி வரவில்லை. நீண்ட நேரம். பிறகு வந்தபோது அவன் முகத்தில் பழைய கடுமை இல்லை. சிரித்துக்கொண்டே வந்



தான். மருதியைப் பார்த்ததும் சற்று எட்டவே நின்று கை நீட்டினான்.

'சாவியைக் கொண்டு வரவில்லை' என்று பதில் சொன்னாள்.

'ஏன்?' என்று அவன் கேட்டான், சிரித்துக் கொண்டே.

'என் கணவருக்குத் துரோகம் செய்ய நான் விரும்பவில்லை' என்று அவள் சொன்னாள்.

அடுத்து அவன் என்ன செய்யப் போகிறான் என்பதை அவள் உணருமுன்பே ஒரே எட்டில் அவளை அடைந்து அவள் கையை இறுகப் பிடித்தான். அந்த சமயத்தில் நான் என் மறைவிடத்திலிருந்து வாளை உருவிக்கொண்டு வெளியே செல்ல முயன்றேன். வாள் உறையில் இல்லை. பின்னாலிருந்த மரத்தின் மறைவிலிருந்து வெளியே வந்த நாலைந்து பேரில் ஒருவன் என் கழுத்தைச் சுற்றி இரு கைகளால் இறுக்கினான். அவர்களை உதறி ஓட முயன்றேன். என் மார்பில் ஒருவன் பெரிய வாளொன்றால் வெட்டினான். மற்றவர் என்னைப் பிடித்துக்கொண்டு நிற்க வெட்டு மிகப் பெரியதாயிருந்தாலும் நான் அவன் மீது பாய்ந்து அவனைத் தள்ளிவிட்டு ஓட முயன்றேன். இரண்டடி எடுத்து வைத்ததும் என் கண்முன் எழுந்த விபரீதக் காட்சியைக் கண்டு அதிர்ச்சியுற்றேன். என் குலவைரி மருதியின் சேலையைக் கிழித்து விட்டிருந்தான். ஓடிய அவளை இழுத்து கீழே மணலில் தள்ளி அவளை நெருங்க முற்பட்டான். நான் ஓடினேன் அவர்களை நோக்கி. அதற்குள் மருதி நான் கொடுத்த குறுவாளைத் தனது மார்பில் புதைத்துக் கொண்டாள்.

அதைக் கண்ட அந்தக் கயவன் எழுந்து நாலாபுறமும் நோக்கினான். என்னைக் கண்டதும் ஓடிவிட்டான். நான் அவனைத் துரத்தவில்லை. மருதியிடம் சென்று மணலில் மண்டியிட்டேன். அவள் உதடுகளில் வருத்தம்

கலந்த புன்முறுவல் இருந்தது. 'என்னை மன்னித்து விடுங்கள்' என்றாள்.

நான் அவள் தலையை எடுத்து மடியில் வைத்துக் கொண்டேன். 'வருந்தாதீர்கள். நான் இனிப் பிழைக்க மாட்டேன்' என்று அவள் மெதுவாகச் சொன்னாள். வார்த்தைகள் வருவது கஷ்டமாயிருந்தது அவளுக்கு. 'பிழைத்து விடுவாய் மருதி. நீ பிழைக்கத்தான் வேண்டும்' என்றேன்.

அவள் புன்முறுவல் செய்தாள். என்னை உற்று நோக்கினாள். என் கண்களுடன் கண்களைக் கலந்தாள். அதுதான் அவள் பார்த்த கடைசிப் பார்வை.

நான் அவள்மீது முகத்தைப் புதைத்து அழுதேன். பிறகு அவள் உடலின்மீது சபதம் செய்தேன்: 'மருதி! உன் வாழ்க்கையைக் குலைத்தவனைப் பழி வாங்கியே தீருவேன். நாளைக் காலையில் என் ஆட்களுடன் அவன் மாளிகையைச் சூறையாடுகிறேன். அனைவரையும் வெட்டிப் போடுகிறேன்' என்று கூறிக்கொண்டு எழுந்தேன். அப்பொழுது என் தலையில் பெரிய இரும்பு ஏதோ இறங்கியது. நான் சுரணையற்று மருதி மீதே விழுந்து விட்டேன். எத்தனை நேரம் சுரணையற்று இருந்தேனென்று எனக்குத் தெரியாது. கண் விழித்த போது ஒரு கப்பலில் இருப்பது மட்டும் தெரிந்தது. என்னைப் பார்த்துக்கொண்டு நின்ற ஒருவன் 'கண் விழித்துவிட்டான்' என்றான்.

'இவன் வேலையை மேற்கொள்ள எத்தனை நாளாகும்?' என்று இன்னொருவன் கேட்டான்.

'இவன் நல்ல பலசாலி. இதோ இந்த மார்பு வெட்டுக் காயத்திற்கே பிழைத்திருக்கிறான். ஆகையால் இன்னும் நான்கு நாளைக்குள் வேலை தொடங்கலாம்' என்றான் முதலில் பேசியவன்.



என் பழைய சக்தி மெல்ல மெல்ல மீண்டது. நான் ஏதோ ஒரு வணிகக் கப்பலில் இருப்பதையும், அந்தக் கப்பலுக்கு உரியவர்கள் என்னை விலை கொடுத்து வாங்கியிருக்கிறார்களென்பதையும் மெல்லமெல்ல உணர்ந்தேன். துடுப்புத் தள்ள என்னை வேலைக்கு அமர்த்தினார்கள். வேலை கடினமானதுதான். ஆனால் அதனால் ஒரு நன்மையும் உண்டாயிற்று. என் உடல் கடினப்பட்டது. எதையும் தாங்கும் அபாரமான சக்தியும் ஏற்பட்டது. நாள் ஆக ஆக எனது நிலையும் அந்தக் கப்பலில் உயர்ந்தது. நான் அயர்வு இன்றி உழைப்பதைப் பார்த்த கப்பல் தலைவன் அதுவரை என் கைகளைப் பிணைத்திருந்த சங்கிலியை உடைக்க உத்தரவிட்டான். துடுப்புத் தள்ளும் அடிமை மாலுமிகளுக்கு நான் தலைவனாகவும் நியமிக்கப் பட்டேன். பிறகு கப்பலில் பல பகுதிகளிலும் வேலை செய்ய வாய்ப்பளிக்கப்பட்டதால்கப்பலோட்டும் கலையை முழுவதும் அறிந்தேன். தவிர அந்தக் கப்பல் எகிப்து நாட்டுக் கப்பலாதலால் எகிப்து மொழியையும் அறிந்தேன். இப்படி ஓராண்டு காலம் கழிந்தது. அந்த ஓராண்டில் என் எதிரிகளைப் பழிவாங்கும் உணர்ச்சி வலுத்துக் கொண்டே இருந்தது. அதற்கான வாய்ப்பு ஒன்றும் கிட்டியது. கப்பல் தலைவன் ஒரு நாள் எனது அறைக்கு வந்து 'இன்னொரு கப்பல் உன் தாய் நாட்டுக்குத் திரும்புகிறது அதில் உனக்குப் போக இஷ்டமா?' என்று கேட்டான்.

'என்னை விடுதலை செய்கிறீர்களா?' என்று கேட்டேன்.

'ஆம். அந்த இன்னொரு கப்பலுக்குத் தலைவன் ஒருவன் வேண்டியிருக்கிறது. நான் உன்னை வாங்கக் கொடுத்த பணத்தைப்போல் இரண்டு மடங்கு அவர் கொடுக்க சித்தமாயிருக்கிறார். ஆனால் நீ அங்கு அடிமை இல்லை' என்று விளக்கினான்.

'அது என்ன கப்பல்?' என்று கேட்டேன்.

'அதுவும் வணிகக் கப்பல். அடிக்கடி உங்கள் நாட்டிலிருந்து வாணிபம் செய்ய எகிப்துக்கு வரும்' என்றான் அதன் தலைவன்.

நான் அந்தக் கப்பலுக்கு மாறினேன். அந்த மாற்றம் என் வாழ்க்கையில் இன்னொரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்று நான் அப்பொழுது நினைக்கவில்லை. அந்தக் கப்பலின் சொந்தக்காரர் என்னை அன்புடன் ஏற்றார். நான் தமிழ்நாட்டவன் என்பதை அறிந்ததும் மிகுந்த அன்புடன் ஏற்றுக்கொண்டார். என்னை அவரது சகோதரன்போல் நடத்தினார். அவர்...'' சிறிது பேச்சை நிறுத்தினான் இளமாறன்.

''அவர்?'' என்று முதுகுப்புறமிருந்து கேட்டாள் நீலரதி.

''பிற்காலத்தில் புத்ததத்தரானார்...'' என்று இளமாறன் நகைத்தான். பிறகு மேலும் கதையைத் தொடர்ந்தான். ''நீலரதி! அந்த வணிகர் தமிழகம் வந்ததும் எனக்கு விடுதலையளித்தார். அப்பொழுது தமிழகம் களப்பிரர்களிடத்தில் சிக்கியிருந்ததால் போர்கள் பல இடங்களில் நடந்துகொண்டிருந்தன. தமிழ்மன்னர்களெல்லாம் சிறப்பிழந்து சிறையில் கிடந்த காலம். அதில் அப்பொழுதுதான் பல்லவர் புரட்சி செய்ய ஆரம்பித்தார்கள். அவர்கள் படைகளில் சேர்ந்தேன். பல போர்களைக் கண்டேன். நான் பெரிய போர் வீரனென்று பெயரெடுத்தேன். அப்படியொரு போரில் சிறைப்பட்ட என்னை அச்சுதவிக் கண்டன் கண்டான். நான் சிறைப்பட்ட விதம் அவனுக்குப் பெரும் விசித்திரமாயிருந்தது. பத்துப்பேரைத் தன்னந்தனியாக வெட்டிய பிறகே நான் சிறைப்பட்டதைக்கேட்டு சிறையிலேயே என்னைப் பார்க்க வந்தான். 'உன் பெயரென்ன?' என்று கேட்டான்.

'இளமாறன்' என்று சொன்னேன்.



'உயிர் உனக்கு வெறுத்து விட்டதா?' என்று வினவினான்.

'அதில் பற்று போய் இரண்டு ஆண்டுகள் ஓடி விட்டன' என்றேன்.

'என் படையில் சேருகிறாயா?' என்று வினவினான்.

'நான் ஒருவனைப் பழிவாங்க வேண்டும். அதற்காக ஜீவிக்கிறேன்' என்றேன்.

'எவ்வளவு பேரை வேண்டுமானாலும் பழிவாங்கு' என்றான் களப்பிர மன்னன்.

நான் அவன் படையில் சில நாட்கள்தான் இருந்தேன். பூர்ணமாக சகலத்திலும் நம்பிக்கை இழந்த நிலையில் எந்தப் படையிலும் சேரச் சித்தமாயிருந்தேன். அந்தப் படையிலிருந்த நாட்களில்தான் நான் என் குலவைரியைப் பற்றி விசாரித்தேன். அவர்கள் திட்டமிட்டு வேலை செய்திருந்தார்கள். என் குழந்தையைக் காட்டி அதற்குத்தான் எனது சொத்துக்களுக்கு உரிமை என்றும், அதன் தாய்வழி பந்துக்கள் தாங்கள் என்றும் சொல்லி என் சொத்தையெல்லாம் பறித்துக்கொண்டதாகக் கேள்விப்பட்டேன். என் குழந்தையையும் அவர்கள் பின்னால் கொன்றுவிட்டதாகவும் செய்தி கிடைத்தது. நல்லவரை அழிப்பதும் அயோக்கியர்களை வாழ்விப்பதும்தான் தெய்வத்தின் வேலையென்றால் அந்த தெய்வம் எனக்கு வேண்டாமென்று தீர்மானித்தேன். நாத்திகம் என் மனத்தை ஆக்கிரமித்துக் கொண்டது. பிறகு இந்த நாட்டை விட்டே போய்விட முடிவு செய்து அச்சுதவிக்கண்டன் படையிலிருந்து விலகி மீண்டும் நாகை வணிகராயிருந்த புத்ததத்தரிடம் வேலைக்கமர்ந்தேன். அப்பொழுது பலமுறை எகிப்து நாடு சென்றோம். அங்குதான் உன் தாயை மணமுடித்து உன்னை ஈன்றாள்.

மற்ற கதை உனக்குத் தெரியும். நீ பட்ட கஷ்டங்களை நானும் அனுபவித்திருக்கிறேன். உன் தாய் வைரிகளால் அழிக்கப்பட்டாள். என் மனைவியும் அதே மாதிரி உயிரிழந்தாள். என் மனத்தில் வஞ்சம் இருக்கிறது. என்று பழிவாங்கும் படலம் முடிந்தாலொழிய மனத்தில் நிம்மதி இருக்காது. பழிவாங்கவே நான் உயிர் வாழ்கிறேன்.'' —இந்த கதையை நிறுத்தினான் இளமாறன்.

நீலரதி மெதுவாகச் சொன்னாள். ''நமது இருவர் வாழ்க்கையிலும் ஓர் ஒற்றுமை இருக்கிறது'' என்று.

''என்ன நீலரதி?'' என்றான் இளமாறன்.

''பௌர்ணமி. அது நம் இருவர் வாழ்க்கையிலும் சோகக் கட்டங்களை விளைவித்திருக்கிறது. கஷ்டத்தில் ஒற்றுமை'' என்றாள் நீலரதி.

''ஆம் நீலரதி. ஆம்'' என்றான் இளமாறன்.

அந்த சமயத்தில் புரவிகள் வரும் சத்தம் கேட்டது. சற்று நிமிர்ந்து உட்கார்ந்தான் இளமாறன். தூர இருந்த தோப்புக்கருகில் சில புரவி வீரர்கள் தோன்றினார்கள். அவர்களின் தலைவனைக் காவலர் சந்தித்து புரவியின் கடிவாளத்தைப் பிடித்துக்கொண்டு ஏதோ பேசினார்கள். அந்தத் தலைவன் புரவியில் உட்கார்ந்த வண்ணம் திரும்பி விடுதியை நோக்கினான். திரும்பியபோது அவன் முகத்தின்மீது காவலன் ஏந்தியிருந்த விளக்கு வெளிச்சம் நன்றாக விழுந்தது. இளமாறன் கை, இடையிலிருந்த குறுவாளை இறுக்கிப் பிடித்தது. ''நீலரதி! நீ சற்றுப் பின்னால் நகர்ந்து உட்கார்'' என்று அவன் குரலில் கடுமை மிதமிஞ்சி ஒலித்தது.

□ □ □

# 26. அழைப்பு

உணர்ச்சிகளின் எழுச்சியால் மனம் நெகிழ, மூச்சும் வேகமாக தழுதழுக்க தனது கடந்தகாலக் கதையைக் கூறி வந்த இளமாறன் உடலில் திடீரென ஒரு விறைப்பு ஏற்பட்டதையும், தன்னை நகர்ந்து உட்காரச் சொன்ன அவன் சொற்களிலும் கடுமை தெரித்ததையும் கவனிக்கத் தவறாத நீலரதி மீண்டும் ஏதோ ஓர் ஆபத்து ஏற்பட்டிருப்பதை உணர்ந்ததால் ''ஏன் என்ன?'' என்று மெதுவாக வினவவும் செய்தாள், அவன் தோள்மீது பதித்திருந்த தனது முகத்தை அகற்றாமலே.

''ஒன்றுமில்லை. என் வாளைக் கொடு'' என்று சற்று எரிச்சலுடன் கூறிய இளமாறன் அவளுக்கும் தனக்கும் இடையிலிருந்த நீண்ட வாளை அவள் இடக் கையால் நகர்த்த அதை கெட்டியாகப் பிடித்துக்கொண்டான். பிறகு தனது தோளிலிருந்து அவளது முகத்தை இடக் கையால் நகர்த்தி ''நீலரதி! சற்றுப் பின்னால் நகர்ந்து உட்கார். உன் கணவனை மீண்டும் படுக்கச் சொல்'' என்று உத்தரவும் இட்டான்.

அவன் உத்தரவில் கண்ட கடுமையாலும் தோரணையாலும் ஏதோ அவனையும் மீறக்கூடிய அபாயம் நிகழவிருப்பதைப் புரிந்துகொண்ட நீலரதி சற்று பின்னடைந்து ''கணவரே! ஏன் நெட்டுக்குத்தாக எழுந்து உட்கார்ந்திருக்கிறீர்? படுத்துக்கொள்ளும். தலைவர் சொல்வது காதில் விழவில்லை?'' என்று அதட்டினாள்.

சத்திரக்காரன் சட்டென்று வெட்டிச் சாய்க்கப்பட்ட மரம்போல் தரையில் சாய்ந்து கால்களை நீட்டிக் கொண்டான். நீலரதியும் தலையில் முக்காட்டை நன்றாக இழுத்துவிட்டு முகத்தை முக்கால்வாசி மூடிக்கொண்டாள்.

அவன் உட்கார்ந்திருந்த இடத்தையும் நகர்ந்து ஆக்கிரமித்து வாசற்படிக்குக் குறுக்காக உட்கார்ந்து கொண்ட இளமாறன் ''உதயகுமாரா!'' என்று குரல் கொடுத்தான்.

''உம்'' என்று உறுமினான் உதயகுமாரன்.

''உன் வாள் தயாராக இருக்கட்டும். ஆனால் நான் சொன்னாலொழிய சண்டை தொடங்க வேண்டாம்'' என்று இளமாறன் கூறினான்.

''சண்டை போடாததற்கு வாள் எதற்கு?'' என்று உதயகுமாரன் கேட்டான் சிடுமூஞ்சித் தனமாக.

''சிலருக்கு வாள் அலங்காரம், சிலருக்குத் தற்காப்பு, சிலருக்கு முன்னேறிப் போரிடும் ஆயுதம்'' என்று கூறி லேசாக கோப நகைகொண்ட இளமாறன் எட்ட மரங்களிடையிருந்த காவலர்களையும் புதிதாக வந்தவனையும் கனித்தான். புதிதாக வந்தவன் யாரென்பதைப் பற்றி அவனுக்கு சந்தேகமில்லை. அந்தப் பகுதியில் அவன் பெரும் அதிகாரத்தை வகிப்பவனென்பதை மட்டும் புரிந்து கொண்டான். அதற்கான அத்தாட்சியும் சீக்கிரத்தில் கிடைத்தது. காவலருடன் சிறிது நேரம் பேசிய அந்த மனிதன் தனது புரவியைத் திருப்பிக்கொண்டு இளமாறன் உட்கார்ந்திருந்த விடுதியை நோக்கி வந்தான். அவனுக்கு முன்பாகவே ஓடிவந்த காவலன் ''தலைவர் வந்துவிட்டார், எழுந்திருங்கள்'' என்று இளமாறனை எச்சரித்தும் இளமாறன் உட்கார்ந்த நிலையிலிருந்து எழுந்திருக்கவில்லை.

அந்தப் புதுமனிதனும் புரவியைத் திருப்பியதிலிருந்து இளமாறன் உட்கார்ந்த வாயிற்படிமீது கண் வைத்த வண்ணமே புரவியை நடத்தி வந்தான். காவலன் தனக்கு முன்னால் ஓடியதையும், வாயிற்படியில் இருந்தவனை எச்சரித்ததையும், அந்த எச்சரிக்கையை அவன் சிறிதும் சட்டை செய்யாததையும் கவனித்த அந்தப் புது மனிதன் சற்று எச்சரிக்கையுடனேயே அந்த வாயிற்படியை நோக்கிப் புரவியை நடக்கவிட்டான். புரவியை சற்று எட்டவே நிற்க வைத்துவிட்டு காவலனை விளித்து ''டேய்! அவனை எழுந்து இங்கு வரச்சொல்'' என்று கட்டளையிட்டான்.



அந்தக் கட்டளையைக் கேட்ட காவலன் ''தலைவர் தங்களை அழைக்கிறார்'' என்று கூறியும் அசையாத இளமாறன் ''புரவியிலிருந்து கீழே இறங்கி உன் தலைவரை மரியாதையாகப் பேசச்சொல்'' என்று அதிகார தோரணையில் கூறினான்.

இளமாறன் சொற்களைக் காதில் வாங்கிய அந்தப் புது மனிதன் இளமாறன் வியப்பு நிறைந்த விழிகளால் நோக்கினான். ''உன் துணிவு அத்துமீறியிருக்கிறது'' என்றும் சொன்னான்.

இளமாறன் மெல்ல நகைத்தான். துணிவின் அத்து எது என்பதைப் பொறுத்திருக்கிறது. நான் மீறுவதும் மீறாததும்' என்று கூறினான் நகைப்பின் ஊடே.

இந்த பதிலைக் கேட்டு அந்தப் புதுமனிதன் சிறிதும் சினத்தைக் காட்டவில்லை. ''நன்றாகப் பேசுகிறாய்'' என்று சொன்னான்.

''பேச்சுக்கு அவசியமிருக்கும்போது விளக்கமாகப் பேசுவது நல்லதல்லவா?'' என்றான் இளமாறன்.

''செயலுக்கு அவசியமேற்படும்போது?'' —வினாவொன்றைத் தொடுத்தான் புதுமனிதன் பதற்றம் சிறிதுமில்லாமலே.

''நன்றாக செயல்படவும் முடியும்'' என்றான் இளமாறன்.

சிறிது சிந்தித்த அந்தப் புதுமனிதன் காவலனை விளித்து விளக்கொன்றைக்கொண்டுவர உத்தரவிட்டான். மீண்டும் ஓடி எட்டி இருந்த காவலர் விடுதிகளிலிருந்து ஒரு விளக்கை ஏந்தி ஓடிவந்த காவலனை ''விளக்கை அவன்

முகத்துக்காகத் தூக்கிப்பிடி'' என உத்தரவிட்டான். எட்ட நின்றபடி காவலன் தூக்கிப்பிடித்த விளக்கில் இளமாறன் முகத்தை நீண்ட நேரம் ஆராய்ந்த அந்தப் புதுமனிதன் ''ஐயா! மன்னிக்கவேண்டும். எங்கள் காவலர்கள் உங்களை யாரென்று தெரியாமல் சிறை செய்துவிட்டார்கள். உங்களைப் பார்த்தால் பெரிய வீரராகத் தெரிகிறது. முகத்தில் வாட் காய வடுக்கள் நிரம்பி இருக்கின்றன'' என்றான்.

இளமாறன் உட்கார்ந்த நிலையிலிருந்து எழுந்து ''ஐயா! நீங்கள்தான் இந்த கடலூர்ப் பகுதியின் படைத் தலைவராயிருக்க வேண்டும். உங்கள் நடையே அதை நிரூபிக்கின்றது. என் வீரத்தைப் பற்றி நீங்கள் குறிப்பிட்டது உங்கள் உயர் குலத்தையும் குணத்தையும் காட்டுகிறது'' என்று பாராட்டுச் சொற்களை உதிர்த்தான்.

அவற்றைக் கேட்டு புன்சிரிப்புக் கொண்ட அந்தப் புது மனிதன் புரவியிலிருந்து கீழே இறங்கி காவலன் கையிலிருந்து விளக்கைத் தனது கையில் வாங்கிக்கொண்டு ''வீரரே! எப்பேர்ப்பட்ட படைத் தலைவனும் கடமையிலிருந்து வழுவ முடியாது. நான் எப்படியும் உங்களுடன் வந்திருப்பவர்களையும் கவனிக்க வேண்டும்'' என்று கூறிவிட்டு, படிகளில் ஏறி வாயிற்படியை அடைந்து சற்று நிதானிக்க, இளமாறன் வழிவிட்டு நின்றான். விளக்குடன் உள்ளே சென்ற அந்தப் புதுமனிதன் திடீரென்று முனகத் தொடங்கிய சத்திரக்காரனையும், முக்காடிட்டு அவன் பக்கத்தில் உட்கார்ந்திருந்த நீலரதியையும், தூரத்தே மூலையில் முழந்தாள்களைக் கட்டியவண்ணம் இருந்த உதயகுமாரனையும் மாறி மாறிப் பார்த்தான். தான் உள்ளே வந்த பிறகும் தன்னைத் தொடராத இளமாறனை நோக்கி ''இந்த முகப்பு அறை மிகச் சிறியது. நீங்கள் இந்த விடுதியின் கூடத்திலேயே தங்கலாம். நாளைக் காலையில் நீங்கள் பயணப்படலாம்'' என்று கூறினான்.



''நன்றி'' என்ற ஒற்றைச் சொல்லைக் கூறிய இளமாறன் அந்தப் புதுமனிதன் செல்ல வழிவிட்டு நின்றான். படைத்தலைவனும் அங்கு அதிக நேரம் நிற்காமல் வெளியே வரவே இளமாறன் கேட்டான்: ''தலைவர் அனுமதித்தால் நாங்கள் இப்பொழுது கிளம்புகிறோம்'' என்று.

''நோயாளி ஒருவனிருக்கிறான். ஒரு பெண்ணிருக்கிறாள். இவர்களை அழைத்துக்கொண்டு இரவில் செல்வது உசிதமல்ல. தவிர நீங்கள் காஞ்சி செல்வதாயிருந்தால் வழியில் பயமும் உண்டு. பல்லவர்களின் புரட்சி வீரர்கள் ஆங்காங்கு உலாவுகிறார்கள்'' என்ற புதுமனிதன் ''பொழுது விடிந்த பிறகு செல்லுங்கள்'' என்று தீர்மானமாகக் கூறிவிட்டு காவலனை நோக்கி ''டேய் இவர்கள் கூடத்தில் படுக்க ஏற்பாடு செய். வேண்டிய சௌகரியங்களை கவனி'' என்று உத்தரவிட்டு புரவியில் ஏறிச்சென்று விட்டான்.

அவன் சென்றதும் காவலன் பக்கத்து கதவொன்றைத் திறந்து ''இப்படி வாருங்கள், கூடம் விசாலமாயிருக்கிறது நோயாளி படுப்பதற்குக் கட்டிலொன்றும் இருக்கிறது''

காவலரின் சொற்படி உள்ளே சென்ற இளமாறன் மற்றவர்களையும் கூடத்துக்கு வரச்சொல்லி சத்திரக்காரனை மட்டும் தான் தாங்கிப் பிடித்துவந்து கட்டிலில் தள்ளினான். காவலன் தனது கையிலிருந்த விளக்கைக் கூடத்தின் ஒரு மூலையில் வைத்துவிட்டு இளமாறனை நோக்கி ''எசமான்! தங்களுக்கு எது தேவையானாலும் ஒரு குரல் கொடுங்கள். ஓடிவந்து விடுகிறேன்'' என்று கூறிச் சென்றான்.

அவன் சென்றதும் மற்றவர்களைப் படுக்கச் சொன்ன இளமாறன் அந்தக் கூடத்தைக் கவனித்தான். அது ஒரு விசாலமான சிறையேதவிர வேறில்லை என்பதைப் புரிந்து கொண்டான். அத்தனை பெரிய கூடத்தில் அதற்கேற்ற

சாளரங்கள் இல்லையென்பதையும் சுவரில் கைக்கு எட்டாத தூரத்தில் வைக்கப்பட்டிருந்த இரண்டு சிறு பலகணிகளின் குறுக்கில் கனமான இரும்புகள் பொருத்தப் பட்டிருந்ததையும் கவனித்த இளமாறன் சத்திரக்காரனை அழைத்து ''சத்திரக்காரரே! சிறு சிறையிலிருந்து பெரிய சிறைக்கு வந்திருக்கிறோம். வேறு வித்தியாசமில்லை'' என்றான்.

''அந்த நுழை நரி என் முகத்தில் விளக்கை வீசியதுமே அவன் வடிகட்டின அயோக்கியன் என்பதைப் புரிந்து கொண்டேன்'' என்ற சத்திரக்காரன் ''இவனிடமிருந்து தப்பும் வழி ஏதாவது யோசித்தீர்களா?'' என்று வினவினான்.

''இல்லை'' என்றான் இளமாறன்.

''இல்லையா!'' வியப்பு ஒலித்தது சத்திரக்காரன் குரலில்.

''இல்லை.''

''ஏன்?''

''யோசிக்க அவசியமில்லை.''

''ஏன்?''

''அவனிடமிருந்தே நமக்கு அழைப்பு வரும்.''

''சோதிடம் சொல்கிறீர்களா?''

''இல்லை. அதில் எனக்கு நம்பிக்கையே "இல்லையே''

இந்த சமயத்தில் உதயகுமாரன் பேசினான் கூடத்தின் ஒரு கோடியிலிருந்து. ''தெய்வத்தினிடமே நம்பிக்கையில்லாதவருக்கு சோதிடத்திடம் நம்பிக்கை இருக்குமா?'' என்றான் உதயகுமாரன்.

இளமாறன் இதழ்களில் இளநகை அரும்பியது. ''நம்பிக்கை இருப்பவர்கள்பிரார்த்தனை செய்வதை நான் தடுக்கவில்லை'' என்று கூறினான். ''ஆனால்' உதய



குமாரா! இந்த படைத்தலைவனை நான் அறிவேன். ஆனால் அவன் இன்னும் என்னைப் புரிந்து கொள்ள வில்லை. புரிந்து கொள்ள முயலுவான். புரிந்தபின் நம்மை அழிக்கத் தவறமாட்டான்'' என்றான்.

''எப்படிப் புரிந்து கொள்வான்?'' என்று கேட்டாள் நிலாதி.

''நம்மில் ஒருவர் மூலம்'' என்றான்.

''எப்படி?''

''அவனுக்கு யாரிடம் நம்பிக்கையோ அவரை அழைத்து விசாரிப்பான்.''

இதை இளமாறன் சொல்லிக் கொண்டிருக்கையிலேயே கூடத்தின் வாயிற்படியில் காவலன் நின்றான். உதய குமாரனைத் தனது ஆள்காட்டி விரலால் சுட்டிக்காட்டி ''உங்களைத் தலைவர் அழைக்கிறார். வாருங்கள்'' என்றான்.

உதயகுமாரன் கண்கள் இளமாறனை நோக்கின. ''போய் வா உதயகுமாரா! படைத்தலைவர் அழைப் பைப் புறக்கணிப்பது சட்டவிரோதம்'' என்றான்.

உதயகுமாரன் கூடத்திலிருந்த மற்ற இருவர் மீதும் கண்களை ஓட்டினான். பிறகு பேசாமல் காவலனைத் தொடர்ந்து வெளியே சென்றான்.

''இந்த அழைப்பின் முடிவு நமது கதியை நிர்ணயிக் கும்'' என்றான் இளமாறன்.

□ □ □

# 27. சந்தர்ப்பக் காதலர்

பெண்ணையாற்றுப் பகுதியின் படைத்தலைவன் அழைப்புக்கிணங்க உதயகுமாரன் சென்றதும் கட்டிலின் முகப்பிலிருந்து எழுந்த இளமாறன் கூடத்தை நாற்புறமும் சுற்றி வந்து அதன் அமைப்பைக் கவனிக்கலானான். அதுவரை தாங்களிருந்த சிறு அறைக்குப் பின்னால் அந்தக் கூடம் இருந்ததையும், அதற்கென்று தனி வாயிற்படியொன்று இருந்தாலும் முகப்பு அறையில் காவல் வைக்கப்பட்டால் கூடத்திலிருந்து தப்புவது முடியாத காரியமொன்றும், தாங்கள் சற்று முன்பு வந்த சிறு அறையின் உள்வாயிற்படி மூலமும் வெளி வாயிற்படி மூலமும் காவலர் தங்களை இருபுறத்திலும் வளைக்க முடியுமென்பதையும் உணர்ந்து கொண்டான் இளமாறன். தவிர தாங்கள் தங்கியிருந்த 'விடுதி'யென்ற சிறைக்கும் படைத்தலைவனும் காவலரும் இருந்த கட்டிடங்களுக்கும் சிறிது இடைவெளியிருந்தாலும் வேகமாகத் தப்பக்கூடிய அளவுக்கு அதில் இடைவெளி கிடையாதென்பதையும் நிர்ணயித்துக் கொண்டான். அப்படி அவன் உலாவிக் கொண்டும் சிந்தித்துக் கொண்டும் இருந்த சமயத்தில் நீலரதி கேட்டாள் ''தப்பும் வழியைப் பார்க்கிறீர்களா?'' என்று

அவள் கேள்வியால் நினைப்புகள் உடைபட்டதால் சட்டென்று திரும்பிய இளமாறன் அவளை நோக்கினான். அந்த அறையின் சிறு வெளிச்சத்திலும் அவள மிக அழகாகத் தோற்றமளித்ததைக் கண்ட இளமாறன் பெருமூச்செறிந்தான். கிருஷ்ணபட்சம் முற்றிக் கொண்டதன் காரணமாக வானில் மதியில்லாத குறையை அந்த அறையில் அவள் வதனம் ஈடு செய்ததைக் கவனித்தான் அந்த மகாவீரன். கட்டிலின் ஒரு முகப்பை விட்டு தான் எழுந்தபோது மற்றொருமுகப்பில் முக்காடிட்டு உட்கார்ந்திருந்த



அவளும் எழுந்து விட்டதையும், முக்காட்டை விலக்கி விட்டதையும், அந்த முக்காடு நீங்கியதால் மேகத்திலிருந்து வெளிவந்த முழுமதிபோல் அவள் வதனம் பிரகாசித்ததையும், அந்த முகசந்திரனின் மேலே இருந்த அடர்த்தியான கருங்கூந்தல் நீருண்ட மேகத்தைவிடக் கறுத்திருந்ததால் முக சந்திரனுக்கு அதிக அழகைக் கூட்டியதையும் பார்த்து இளமாறன், இந்த மாதிரியான ஒரு அழகியைக் காத்துச் செல்வது அல்ப சொல்பமான பணியல்லவென்று தனக்குள் சொல்லியும் கொண்டான்.

அவன் பார்வையையும் சிந்தனையையும் கவனித்த நீலரதி இரண்டு மூன்று அடிகள் வைத்து அவனை நோக்கி வந்தாள். அவள் எடுத்த ஒவ்வோர் அடியிலும் இடை அசைந்த ஒய்யாரத்தையும், அசையாத மார்பு இரண்டின் கடினத்தையும், அவற்றின் முகடுகள் கண்கொத்திப் பாம்புகள் போல் விறைத்து அவள் மேலாடையைக் கிழிக்க முற்படுவனபோல் இருந்த வசீகரத்தையும், நடந்தபோது ஓரிருமுறை அவள் தொடைகளுக்குள் பாய்ந்த சேலை சுட்டிக் காட்டிய ரகசிய விந்தையையும் பார்த்த இளமாறனின் அசையாத மனமும் சிறிது அசைந்தது. ஏதோ கேள்வி கேட்பனபோல் எழுந்த அவள் விற்புருவங்களும் கண்களும் இளமாறன் மனத்தை உலுக்கிவிட்டதால் 'இளமாறா! உன் வயதென்ன? உன் பழையகதையென்ன? பொறுப்புகள் என்ன? ஏதோ இளம் வாலிபன்போல் துடிக்கிறாயே! சீ! விடு இந்த இச்சையை' என்று தன்னைத் தானே உள்ளூர எச்சரித்துக்கொண்டான். அத்தனை எச்சரிக்கைக்குப் பின்பும் தனது உணர்ச்சிகள் அடங்காமல் எழுந்து நிற்பதை நினைத்துப் பார்த்த இளமாறன் லேசாக தனக்குள் நகைத்துக் கொள்ளவும் செய்தான்.

அவன் பார்வை சென்ற இடங்களையும் தீவிர சிந்தனையில் அலைந்த முகத்தையும் நீலரதி கவனிக்கவே செய்தாலும், அதன் காரணத்தை உணர்ந்து கொண்டாலும், தனது அழகிய உதடுகளில் புன்முறுவலொன்றை

யும் படரவிட்டுக்கொண்டாள். "ஏதோ பெரும் சிந்தனையிலிருக்கிறீர்கள். நான் கேட்டதற்குக்கூட பதில் இல்லை" என்று குற்றம் சாட்டும் பாவனையில் பேசிய நீலரதி அவனுக்கு வெகு அருகில் வந்து நின்று கொண்டாள்.

"ஆம் ஆம் சிந்தனைதான். நீ சொன்னபடி தப்பும் வழியைத்தான் ஆராய்கிறேன்" என்ற இளமாறன் அவளது அண்மையிலிருந்து விலகி நின்றான்.

"என்ன முடிவுக்கு வந்தீர்கள்?" என்று வினவினாள் நீலரதி, மீண்டும் அவனை நெருங்கி நின்று. இம்முறை அவள் நெருக்கம் சற்று அதிகமாகவே இருந்ததால் அவள் கால்கள் அவன் கால்களோடு உராய்ந்தன. அவள் சேலையின் மேலாடையின் முந்தானை காற்றில் பறந்து அவன் முகத்தின்மீது விழுந்தது.

அந்த ஆடையைத் தனது முகத்திலிருந்து விலக்கிய இளமாறன் தனது கண்முன்பு அவள் இளமார்புகளிரண்டும் துடிப்பதைக் கவனித்ததால் அவற்றின் மோகன சக்தியிலிருந்து விடுபட சேலை முந்தானையை தனது முகத்திலிருந்து நீக்கி அவள் மார்பைப் போர்த்திவிட்டான். போர்த்தியபோது அவள் மார்பில் பட்டுவிட்ட அவன் விரல்கள் நீலரதிக்குப் பெரும் வேதனையை விளைவிக்கவே 'வாருங்கள் அந்த வாசற்படியில் உட்காருவோம்'' என்று கூடத்தின் தனி வாயிற்படியைக் காட்டினாள். அவனுக்கு முன்பாக நடக்கவும் செய்தாள். அப்படி நடந்தபோது அவள் பின்னெழில்களின் அசைவுகள் வீசிய மோகனாஸ்திரத்தால் நிலைகுலைந்த இளமாறன் அவளைத் தொடர்ந்து செல்லவே செய்தான்.

முன்பு போலில்லாமல் இம்முறை நீலரதி வாயிற்படியில் அவன் முதுகுப்புறத்தில் உட்காராமல் பக்கத்திலேயே உட்கார்ந்து கொண்டாள். தன் கையொன்றை அவன் கையொன்றிலும் தவழவிட்டாள். அதனால் அவன் கை முதலில் லேசாகத் துடித்ததையும், பிறகு தனது கையை சிறைப்படுத்திக்கொண்டு விரல்களுடன் விரல்கள் சேர்ந்து



பின்னத்தொடங்குவதையும் கண்டு, அவன் உள்ளம் மட்டும் திரும்பிவிட்டால் அவனைவிட சிறந்த காதலன் உலகத்தில் இருக்க முடியாதென்பதை உள்ளூர சொல்லிக் கொண்டாள். அந்த சமயத்தில் அவன் தொடையொன்று அவள் தொடையுடன் இணைந்தது. பின்னிய விரல்கள் அவள் விரல்களை நெறித்தன.

அவன் நீண்ட நேரம் மௌனமாகவே உட்கார்ந்திருந்தான். பிறகு எதையோ நினைத்துக்கொண்டு எழுந்து கூடத்துக்குள் சென்று அங்கிருந்த விளக்கை ஊதி அணைத்துவிட்டுத் திரும்பினான். திரும்பும்போது கட்டிலில் கிடந்த சத்திரக்காரனைப் பார்த்து "சத்திரக்காரரே! நன்றாக உறங்கும். விளக்கை அணைத்தது உமக்காக" என்றான்.

"உமக்காக அல்லவோ?" என்று கட்டிலில் கிடந்தபடி சத்திரக்காரன் கேட்டான்.

"அல்ல"—இளமாறன் பதிலில் கடுமை இருந்தது.

"அவளுக்காகவும் அல்லவோ?" என்றான் சத்திரக்காரன் மீண்டும்.

"அல்ல" என்றான் இளமாறன்.

சத்திரக்காரன் மெதுவாக நகைத்தான் படுத்தபடி. "என் மனைவி உங்களுடன் வருவதையும், உங்கள் பக்கத்தில் உட்காருவதையும் நான் விரும்பவில்லை" என்றான் நகைப்பின் ஊடே.

இளமாறனும் மெதுவாக நகைத்து "சத்திரக்காரரே! நீர் சந்தர்ப்பக் கணவர். சில சந்தர்ப்பங்களில் நீர் கணவராகிறீர்" என்று பதில் சொன்னான்.

"நீங்களுந்தான்..." என்று வார்த்தையை இழுத்தான் சத்திரக்காரன்.

"நானா! நான் என்ன?"—இளமாறன் கேள்வியில் வியப்பு இருந்தது.

''சந்தர்ப்பக் காதலர், சில சந்தர்ப்பங்களில் காதலரா கிறீர்'' என்ற சத்திரக்காரன் ''இப்பொழுது அப்படி யொரு சந்தர்ப்பம்'' என்று கட்டிலில் எழுந்து உட்கார்ந் தான்.

''எழுந்திருக்க வேண்டாம். படுத்தபடியே இரும்'' என்று கூறினான் இளமாறன். மேலும் சொன்னான்: ''சத்திரக்காரரே! சற்று முன்பு என் கதை முழுதும் கேட்டீ ரல்லவா?'' என்று.

''ஆம்.''

''என் காதல் முதல் மனைவியுடன் முடிந்துவிட்டது. இரண்டாவது காதலுக்கு வயதாகி விட்டது.''

''உங்களைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லை''

''பார்வை வேறு உண்மை வேறு. எனக்கு வயதாகி விட்டது உண்மை. நான் வாழும் காரணமே பழிவாங்க. அதற்கும் காதலுக்கும் வெகுதூரம். ஆகையால் வீண் கற்பனைகளை விட்டுவிடும்'' என்று கூறிவிட்டு வாயிற்படியில் சென்று பழையபடி நீலரதியின் பக்கத்தில் அமர்ந்து கொண்டான்.

அவன் அமர்ந்ததும் அமராததுமாக நீலரதி சற்று சாய்ந்து அவன் முழந்தாள்களில் தனது தலையை வைத்துக் கொண்டாள். அவன் கை அவள் தலையை வருடிக் கொடுத்தது. கன்னத்திலும் பதிந்து நின்றது. அவள் சமீபத்தால் மீண்டும் உறுதி தளர்ந்த இளமாறன் தலையிலிருந்த கையை அவள் முதுகின் மீதும் வைத்து மெதுவாக அவள் முதுகை வருடினான்.

அவன் கை ஸ்பரிசத்தால் அவள் உணர்ச்சிகள் மீண்டும் நெகிழ்ந்தன. ''சந்தர்ப்பக் காதலரே!'' என்று அவள் மெதுவாக அழைத்தாள்.

''என்ன நீலரதி! அந்தப் பைத்தியம் சொன்னதை நீயும் நம்புகிறாயா?''

''நம்பினால் என்ன?''



''ஒன்றுமில்லை, உன் வயதைப் போல் இரட்டை மடங்குள்ள ஒருவனை நீ காதலிக்கும்படியாயிருக்கும்.''

''அதை நான் ஆட்சேபிக்காவிட்டால்!''

''உன் வாழ்க்கை நாசமாகி விடும்'' என்ற இளமாறன் ''நீலரதி! உன்னை உதயகுமாரன் போன்ற ஒரு வாலிப னுக்கு நான் மணம் முடிக்கத் தீர்மானித்திருக்கிறேன். உன் திருமண முடிவை என் கையில் விட்டுவிடு'' என்றும் சொன்னான்.

இப்படி அவன் சொல்லிக் கொண்டே இருக்கையில், முதுகிலிருந்த அவன் கை மெதுவாக கீழே இறங்கி அவள் இடையில் பதிந்தது. இடையை இறுகப் பிடிக்கவும் செய்தது. அவன் உள்ளூற நகைத்துக் கொண்டான். ''இன்னொருவனுக்கு மணமுடிக்க வேண்டிய பெண் ணிடம் விளையாடும் முறை இதுவா?'' என்று தன்னைக் கேட்டுக் கொண்டான். அதன் விளைவாக அவன்மீது லேசாக சாயவும் செய்தாள். இடையைப் பிடித்த அவன் கையை எடுத்து முன்னால் கொண்டு வந்து பருத்த தனது காலிலும் வைத்துக் கொண்டாள்.

இளமாறன் உணர்ச்சிகள் துடித்துக் கொண்டிருந்தன. அவற்றிலிருந்து விடுபட அவன் சட்டென்று எழுந்து நின்றான், பிறகு படிகளில் இறங்கலானான்.

''எங்கு போகிறீர்கள்?'' என்று வினவினாள் நீலரதி.

''உதயகுமாரன் சென்று நாழிகையாகிறது. அவனைப் பார்க்கப் போகிறேன்'' என்றான் இளமாறன்.

அவள் பதிலேதும் சொல்லாமல் எழுந்து நின்றாள். ''நானும் உங்களுடன் வருகிறேன்'' என்று கூறி அவனைத் தொடர்ந்தாள்.

இளமாறன் படிகளில் இறங்கி எதிரேயிருந்த படைத் தலைவன் இருப்பிடத்தையும் அதன் முகப்பிலிருந்த மரங் களையும் கவனித்தான். ஒரு மரம் படைத்தலைவன் இருப் பிடத்து சாளரத்தருகில் இருந்ததையும், சாளரமும் அதிக

உயரத்திலில்லாததால் அறையின் நிகழ்ச்சியை வெளியிலிருந்து பார்ப்பது அத்தனை கஷ்டமில்லையென்பதையும் புரிந்துகொண்டதால் மரங்களை நோக்கி நடக்கலானான்.

மரங்களிருந்த இடத்தை அடைந்ததும் நீலரதியின் இடையை நன்றாக வளைத்துத் தன்னுடன் இணைத்துக் கொண்டு ''நீலரதி! சத்தம் ஏதும் செய்யாமல் நடந்துவா'' என்று கூறி முன்னால் நடந்து மரக் கூட்டமளித்த இருளில் சென்றான்.

படைத் தலைவன் இருப்பிட சாளரம் வந்ததும் சாளரத்திலிருந்து ஒருபுறத்தில் மறைந்து நின்று உள்ளே நோக்கினான். உள்ளேயிருந்த விளக்கு வெளிச்சத்தில் படைத்தலைவன் ஒரு மஞ்சத்தில் அமர்ந்து இன்னொரு மஞ்சத்தில் காலை நீட்டிக் கொண்டிருந்தான். அவன் எதிரே மிகுந்த சிற்றத்துடன் உதயகுமாரன் நின்றிருந்தான். அப்பொழுது படைத்தலைவன் பேசினான்: ''உதயகுமாரா! உன்னைக் கடைசி முறையாகக் கேட்கிறேன், உன்னுடன் வந்திருப்பவன் யார்? உண்மையைச் சொல். உண்மையைச் சொன்னால் உன்னுடன் வந்த அழகியை உனக்கு மணமுடித்துத் தருகிறேன்'' என்று.

''எந்த அழகியும் எனக்கு வேண்டாம்; என்னுடன் வந்திருப்பவர் பெரிய வீரர். களப்பிரர் படையில் சேவை செய்திருப்பவர். வேறெதுவும் எனக்குத் தெரியாது'' என்று கூறினான். ''உங்களுக்குத் தேவையானால் நீங்களே அந்தப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளுங்கள்'' என்றும் எரிச்சலுடன் சொன்னான்.

சாளரத்தருகில் இளமாறனுடன் இணைந்து நின்ற நீலரதி ''எனக்கு இன்னொரு சந்தர்ப்பக் காதலர்'' என்று இளமாறன் காதில் முணுமுணுத்தாள். அடுத்து உள்ளறையில் நடந்த உரையாடல் அவளுக்குப் பேரதிர்ச்சியை அளித்தது.

□ □ □

30579
4507550

# 28. காஞ்சி வர்மன்

பெண்ணையாற்றுப் பகுதி படைத் தலைவனுக்கும் உதயகுமாரனுக்கும் அடுத்து நடந்த உரையாடல் நீலரதிக்குப் பேரதிர்ச்சியைத் தந்தாலும், இளமாறனுக்கு எந்தவித அதிர்ச்சியையோ உணர்ச்சிப் பெருக்கையோ அளிக்காததால் அவன் சர்வசாதாரணமாகவே நின்றிருந்தாலும், அதிர்ச்சியால் சிறிது நடுங்கிய நீலரதியின் உடலைத் தனது இடக்கையால் இடையைச் சுற்றி வளைத்து தன்னிடம் இழுத்துக் கொண்டான். அந்தக் கையின் உரமும் பலமும் அவளுக்கு ஓரளவு தைரியத்தை அளித்தாலும் உள்ளே நடந்த உரையாடல் அவள் மனதைச் சிறிது உலுக்கவே செய்தது.

உள்ளே மஞ்சத்தில் அமர்ந்திருந்த படைத்தலைவன் உதயகுமாரன் சொற்களைக் கேட்டதும் சற்றுப் பெரிதாகவே நகைத்தான். ''உதயகுமாரா! இன்றுவரை நான் திருமணம் செய்து கொள்ளவில்லை. பெண்களை அனுபவித்துத்தான் வழக்கம். திருமணம் ஓர் அனாவசியக் கைத்தளை. அதில் கட்டுப்பட நான் விரும்பவில்லை'' என்ற படைத்தலைவன் ''உதயகுமாரா! எனது மாளிகையை விட்டுச் சென்ற பிறகு நீ பெரிதும் மாறிவிட்டாய். என்னை எதிர்த்துப் பேசும் அளவுக்கு உன் துணிவு உயர்ந்து விட்டது. இதெல்லாம் உன் துணைவன் சேர்க்கையால் வந்ததா?'' என்று வினவினான்.

படைத்தலைவன் பேச்சைக் கேட்ட உதயகுமாரன் சிறிதும் அச்சத்தைக் காட்டவில்லை. ''உங்கள் மாளிகையிலிருந்து அகன்ற பின்பு பல விஷயங்களைப் புரிந்து கொண்டேன். துணிவு என்றால் என்ன என்பதைப் புரிந்து கொண்டேன். நாணயம் பண்பாடு இவற்றின் பொருளை அறிந்தேன். அடிமைத்தனத்துக்கும் சுதந்திர

துக்குமுன்ன வேறுபாட்டையும் உணர்ந்தேன்" என்று சிறிது அலட்சியத்துடனும் சினத்துடனும் பேசினான் உதயகுமாரன்.

உதயகுமாரன் சொற்களைக் கேட்ட படைத்தலைவன் விழிகளில் வியப்பு மிதமிஞ்சி விரிந்தது. அடுத்து அவன் சொற்களில் வஞ்சகனின் கனிவு இருந்தது. "என் உதயகுமாரா இப்படிப் பேசுவது? நான் வளர்த்த குழந்தையா இப்படி உரையாடுவது? உதயகுமாரா! உன்னை நான் படையில் சேர்த்து விட்டது எத்தனை உபயோகப் பட்டிருக்கிறது பார். கோழையான நீ தைரியசாலியானாய். கத்தியைப் பிடிக்கத் தெரியாத நீ வீரனாக மாறியிருக்கிறாய். இந்த மாற்றம் எனக்கு எத்தனை மகிழ்ச்சியை அளிக்கிறது தெரியுமா?" என்று பாராட்டுச் சொற்களை அன்பு மிகுந்த குரலில் உதிர்த்தான் படைத்தலைவன்.

உதயகுமாரன் முகத்தில் சீற்றத்தின் சாயை முன்னை விட அதிகமாகப் படர்ந்தது. "நீங்கள் என்னை வீரனாக்க படையில் சேர்க்கவில்லை. அப்படியாவது என்னை ஒழித்துக் கட்டலாமென்று அந்த தந்திரத்தைக் கையாண்டீர்கள். முதல் போரிலேயே நான் அழிந்து போவேன் என்று நினைத்தீர்கள். அது நடக்கவில்லை. காரணம் தெரியுமா?" என்று வினவினான் உதயகுமாரன் சொற்களிலும் சீற்றம் ஒலிக்க.

"சொல் உதயகுமாரா! உன் பேச்சைக் கேட்பதிலேயே எனக்கு ஆனந்தமிருக்கிறது. என்ன காரணம்?" என்று கேட்ட படைத்தலைவன் புன்முறுவல் செய்தான்.

"நீங்கள் நினைத்தபடி களப்பிரர் தங்கள் படையில் சேர்ந்தவர்களையெல்லாம் உடனடியாகப் போருக்கு அனுப்புவதில்லை. முதலில் பயிற்சியளிக்கிறார்கள். தகுதி ஏற்பட்டவுடன் போருக்கு அனுப்புகிறார்கள். அப்படி அனுப்பப்பட்டேன் போர் முனைக்கு. அங்கு ஒரு மகா வீரனை சந்தித்தேன். எதிர்பக்கத்தில் போரிட்ட அவனை களப்பிர மன்னர் தமது படைகளில் சேர்த்துக் கொண்



டார். அவரிடம் என்னை ஒப்படைத்தார். அவருக்குப் பணிவிடை புரிய, முதலில் அவருடன் பொறாமையுடன் சேர்ந்தேன். அவர் போரில் பல நுணுக்கங்களை எனக்குக் கற்றுக் கொடுத்தார். ஆனால் அவர் ஒரு நாத்திகர். எனக்கும் அவருக்கும் ஒருமைப்பாடு இல்லை. இருப்பினும் அவர் வீரத்தைமுன்னிட்டு அவரைத் தொடர்ந்தேன். அவர் படையிலிருந்து விலகியபோது நானும் விலகினேன். பிறகு இருவரும் புகார் சென்று ஒரு வீதியில் தங்கினோம். இப்பொழுது இங்கு வந்திருக்கிறோம்" என்று உதயகுமாரன் இடையே நடந்த கதையைச் சொல்லவில்லை.

படைத்தலைவன் முகத்தில் புன்முறுவல் மலர்ந்தது. "உதகுமாரா! நீங்கள் இங்கு வந்த கதையைச் சொல்லவில்லையே" என்று வினவினான்.

"சொல்ல ஏதுமில்லை. எனது தலைவர் புறப்பட்டார் இவர்களுடன் நானும் தொடர்ந்தேன்."

"அவ்வளவுதானா?"

"ஆம். அவ்வளவுதான்."

"அப்படியானால் உங்களைச் சிறை செய்ய புகாரிலிருந்து உத்தரவு வந்ததே, ஏன்?"

"அப்படியொன்றும் வந்திருக்காது!"

"நான் பொய் சொல்வேனா? வந்திருக்கிறது உதயகுமாரா. இதைப் படித்துப் பார்" என்று ஓலையொன்றைக் கொடுத்தான் படைத்தலைவன்.

உதயகுமாரன் கை நீட்டி ஓலையை வாங்கிப் பார்த்தான். அதில் விஷயம் தெளிவாக இருந்தது. "ஒரு பெரிய வீரன், நடுத்தர வயதினன், ஒரு வாலிபனுடனும் பெண்ணுடனும் காஞ்சி வழியில் வரலாம். வந்தால் சிறை செய்து மடத்துக்கு அனுப்பவும். கண்ணதாசன் மடத்து காவலர் தலைவர் சாந்தானந்தர்." என்று ஓலையிலிருந்ததைத் தெளிவாகப் படித்தான் உதயகுமாரன்.

வெளியிலிருந்து அந்த ஓலையின் விவரங்களைக் கேட்ட இளமாறன் ''சாந்தானந்தர் முன் யோசனையுடன் பணி புரிந்திருக்கிறார். நல்லவேளை, யார் பெயரையும் குறிப்பிடவில்லை அவர்'' என்று நீலரதியின் காதுக்கருகில் சொன்னான்.

அதைப் பற்றியே உள்ளிருந்த படைத்தலைவன் வினவினான். ''உதயகுமாரா! ஓலையில் யார் பேரையும் காணோம். சாமியாராயிருந்தவர் சண்டைக்குக் கிளம்பியதால் வந்த தொல்லை இது. அதனாலென்ன? கடிதத்தின் குறையை நீ தவிர்க்கலாமே. உன்னுடன் வந்திருக்கும் அந்த வீரன் பெயரென்ன?'' என்று வினவினான்.

உதயகுமாரன் சற்றும் சிந்திக்காமலே பதில் சொன்னான். ''அவர் பெயர் மாரன். அந்தப் பெண்ணை ரதி என அழைக்கிறார்கள். அந்த இன்னொருவர் கொள்ளிடக் கரையில் சத்திரம் வைத்திருக்கிறார். பெயர் தெரியாது'' என்று பெயர்களைப் பாதி பாதி சொன்னான்.

வெளியே நின்ற இளமாறன் உதயகுமாரன் புத்தியைப் பெரிதும் பாராட்டினான். ''ரதி! நம் பெயரைப் பாதியாக ஆக்கி விட்டான் உதயகுமாரன். சமயோசித புத்தி இருக்கிறது அவனுக்கு'' என்றான்.

உள்ளேயிருந்த படைத்தலைவனும் அப்பெயர்களை சொல்லிப் பார்த்தான். ''மாரன்! மாரன்! இந்தப்பெயரை நான் கேள்விப்பட்ட இல்லை. ரதி! அதுவும் புதிதாக இருக்கிறது'' என்று முணுமுணுத்த அவன் ''உம். உம். இருக்க முடியாது. அவன்தான் இறந்து விட்டானே!'' என்று சற்று இரைந்தே சொன்னான். பிறகு ஒரு முடிவுக்கு வந்து ''சரி உதயகுமாரா! நீ செல். அவர்கள் இருப்பிடம். எனக்கு வந்திருக்கும் உத்தரவுப்படி உங்களை நான் சிறை செய்துதான் ஆக வேண்டும். ஆனால் உங்களைச் சிறை செய்து என்ன செய்ய வேண்டும் என்று ஓலையில் கூறப்படவில்லை. சிறை செய்து இங்குதான் தங்க



வைக்க வேண்டும் என்ற நிபந்தனையுமில்லை. நீங்கள் என்னிடமிருந்து தப்புவதில்லை என்று உறுதிமொழி கொடுத்தால் நீங்கள் இங்கு கூடியவரையில் சுதந்திரமாக உலாவலாம். முடியுமானால் இன்னும் இரண்டு நாட்களில் உங்களை என் மாளிகைக்கே அழைத்துப்போய் விடுகிறேன். எதுவும் உன் தலைவன் நடவடிக்கையைப் பொறுத்தது'' என்று கூறினான்.

அதற்குமேல் அங்கு நிற்கவில்லை இளமாறன். நீலரதியின் இடையை அணைத்தபடி அவளை அழைத்துக் கொண்டு தாங்கள் தங்கியிருந்த விடுதியை அடைந்து பழையபடி வாயிற்படியில் உட்கார்ந்து கொண்டான். அதுவரை பொறுமையாயிருந்த சத்திரக்காரன் கட்டிலிருந்து எழுந்து வந்து ''எசமான்! படைத்தலைவன் என்ன சொன்னான்?'' என்று வினவினான்.

''என்னிடம் எதுவும் சொல்லவில்லை''—இளமாறன் பதில் சட்டென்று வந்தது.

''வேறு யாரிடம் சொன்னான்?''—சத்திரக்காரன் வினவினான் ஆவலுடன்.

''உதயகுமாரனைத்தானே அழைத்தான்?''

''ஆம்?''

''அவனிடந்தான் பேசினான்.''

''நீங்கள் இங்கிருந்து எதற்காகப் போனீர்கள்?''

''இந்த விடுதியிலிருந்து தப்பும் வழி இருக்கிறதா என்று பார்க்கப் போனேன்.''

''இருக்கிறதா?''

''இருக்கிறது. ஆனால் மிகக்கஷ்டமான வழி.''

''கஷ்டமில்லாமல் விடுதலை எப்படி கிடைக்கும்?''

''கிடைக்காது. ஆனால் இம்முறை தப்புவது அத்தனை சுலபமல்ல.''

''ஏன்?''

''மிகுந்த தந்திரசாலியும் கொடியவனுமான ஒருவனிடம் நாம் சிக்கியிருக்கிறோம்.''

''உங்களுக்கு அவனை முன்பே தெரியுமா?''

''தெரியும்''

''அப்படியானால் அவனுக்கும் உங்களைத் தெரிந்திருக்க வேண்டுமே!''

இதற்கு இளமாறன் உடனடியாக பதில் சொல்லவில்லை. ''தெரிந்திருக்க வேண்டும். ஆனால் தெரிந்து கொண்டதாக அவன் பேச்சிலிருந்து விளங்கவில்லை. தெரிந்தாலும் தெரியாவிட்டாலும் அவன் நம்மை விடமாட்டான். அவன் மனத்தில் ஏதோ சந்தேகம் எழுந்திருக்கிறது. அது தெளிவானால் ஒழிய நமக்கு விமோசனமில்லை'' என்ற இளமாறன் சொற்களில் கடுமை இருந்தது.

அதற்குப்பிறகு சத்திரக்காரன் எதுவும் பேசவில்லை. பக்கத்தில் உட்கார்ந்திருந்த நீலரதி மட்டும் கேட்டாள். ''அவனை உங்களுக்குத் தெரியுமென்றீர்களே, அவன் யார்?'' என்று.

இளமாறன் முகத்தில் கடுமை அதிகமாகப் பரவியது. கண்களில் கொலைக்குறி ஏற்பட்டது. ''என் குல வைரி காஞ்சி வர்மன்?'' என்ற இளமாறன் சொற்கள் கொல்லன் பட்டறையில் அடிக்கப்படும் வார்ப்படப் பொறிகள் போல் உதிர்ந்தன சுரீல் சுரீலென.

அதுவரை அவன் மீது அரைவாசி சாய்ந்திருந்த நீலரதி சட்டென்று நிமிர்ந்தெழுந்தாள். ''யார்! காஞ்சி வர்மனா! அந்தக் கயவனா! அவனிடமா நாம் சிக்கியிருக்கிறோம்?'' என்று அச்சம் பெரிதும் ஒலித்த குரலில் கேட்டாள்.



ஆம் என்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்த இளமாறன், ''அஞ்சாதே! உன்னை அவன் கண்டுவிட்டான். மாளிகைக்கு நிச்சயமாக உனக்கு அழைப்பு வரும்'' என்று உஷ்ணத்துடன் வார்த்தைகளை உதிர்க்கவும் செய்தான். அத்துடன் நிற்கவில்லை இளமாறன். ''அழைப்பு வந்தால் ஏற்றுக்கொள். உன்னுடன் நானும் வருகிறேன்'' என்று கூறினான்.

இங்கு இவர்கள் பேசிக்கொண்டிருந்த சமயத்தில் படைத்தலைவன் தனது அறையில் உதயகுமாரனை நோக்கி ''அவர்களை எனது மாளிகைக்கு எப்படியும் அழைத்து வா. இல்லையேல்...'' என்று ஆணையிட்டாலும் சொற்களை முடிக்கவில்லை. முடிக்காத சொற்களில் உக்கிரமான எச்சரிக்கை இருந்தது.

□ □ □

# 29. ஊகமும் உணர்வும்

படைத்தலைவன் உத்தரவிலிருந்த உக்கிரமான எச்சரிக்கையைக் கண்டு அணுவளவும் அஞ்சவில்லை உதயகுமாரன். "படைத்தலைவரே! எப்படியாவது என்னுடன் வந்திருப்பவர்களை அழைத்துவரும்படி உத்தரவிடுகிறீர். இல்லையேல்... என்று மிரட்டியும் இருக்கிறீர் உதயகுமாரன் இத்தகைய மிரட்டலுக்கு அஞ்சும் காலம் போய்விட்டது. அவர்களை எப்படியாவது அழைத்து வர வேண்டுமென்றால் எப்படி அழைத்து வருவது? வலுக்கட்டாயமாகத் தூக்கிவர அவர்கள் குழந்தைகள் அல்ல. நாலைந்து பேரை பலி கொடுக்காமல் அவர்களை சிறை செய்யவும் முடியாது. மாரன் கத்தி முன்பு தளபதி மாவலி பட்ட பாட்டை நான் நேரில் பார்த்திருக்கிறேன் ஆகையால் அழைத்து வரும்வழி ஏதாவது சொல்லுங்கள். உங்களுக்குத்தான் தந்திரங்கள் பல தெரியுமே" என்று உதயகுமாரன் ஏளனம் குரலில் ஒலிக்கக் கூறினான்.

உதயகுமாரன் சொற்கள் உள்ளூர எரிமலையைச் சிருஷ்டித்தாலும் அதைப் படைத்தலைவன் வெளிக்குக் காட்டிக் கொள்ளவில்லை. நிதானத்துடனும் மிகுந்த தந்திரத்துடனும் பேசினான் படைத்தலைவன். "உதயகுமாரா! நீ உன் பிறந்த ஊருக்குச் செல்வதாகச் சொல், அந்த மாரனிடம். அங்கு அவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு இருக்குமென்றும் சொல். அரண்மனை போன்ற மாளிகையில் அவர்கள் சுகமாக களப்பிரர் படைகளின் தொந்தரவில்லாமல் வாழலாமென்று சொல். இப்பொழுதுள்ள நிலைமையை முன்னிட்டு மாரன் சம்மதிப்பான். அவன் சம்மதித்தால் அந்தப் பெண்ணும் சம்மதிப்பாள். அவள் அவனிடம் தீராக்காதல் கொண்டிருக்கிறாள். காதல் ஒரு வியாதி. அது யாரையும் அடிமைப்படுத்தும்!" என்று கூறி மெல்ல நகைத்தான் படைத்தலைவன்.



அவன் நகைப்பு வேப்பங்காயாக இருந்தது உதயகுமாரனுக்கு. "தவறாக நினைக்கிறீர்கள். அவள் மாரனையோ மாரன் அவளையோ காதலிக்கவில்லை. அவளை எனக்கு மணமுடிக்கத் தீர்மானித்திருக்கிறான் மாரன். நான்தான் அதற்கு ஒப்பவில்லை. ரதி அவருக்கு மகளுக்குச் சமானம்" என்றான் கடுமையான குரலில் உதயகுமாரன்.

இம்முறை படைத்தலைவன் பெரிதாகவே நகைத்தான். சிரித்தபடி சொன்னான்: "உதயகுமாரா! உனக்கு இன்னும் உலக அனுபவம் போதாது. சத்திரக்காரன் மனையாட்டியாக அவள் போட்ட வேஷத்தை நான் முதலிலேயே நம்பவில்லை. அவள் மாரனைப் பார்த்த பார்வைகளில் எல்லாம் வேட்கை மிதமிஞ்சி இருந்தது. அவள் உனக்குக் கிடைப்பாளென்ற மனோராஜ்யமிருந்தால் அதை மறந்துவிடு. அந்தக் கூட்டத்தில் ஒவ்வொருவரையும் நான் எடை போட்டு விட்டேன். அந்த சத்திரக்காரனும் சாதாரண சத்திரக்காரனல்ல, சிறந்த வீரன். வண்டியோட்டி வந்தவனை தவிர நீங்கள் மூவருமே போராட முடியும். இருப்பினும் என்னிடமுள்ள காவலரைக் கொண்டு உங்களைச் சிறை செய்ய என்னால் முடியும். அப்படி சிறை செய்வதில் சில கஷ்டங்கள் இருக்கின்றன. சிறை செய்து நான் அழைத்துப் போக முடியாது. அவர்களை ஒன்று புகாரின் மடத்துக்கு அனுப்ப வேண்டும், அல்லது அரசரிடம் அனுப்ப வேண்டும். இரண்டும் என் திட்டத்தைக் கெடுத்துவிடும்—"

உதயகுமாரன் கண்கள் புரிந்ததற்கு அறிகுறியாகப் பளிச்சிட்டன. "உங்கள் திட்டம் எனக்குத் தெரியும்" என்றான்.

"என்ன தெரியும் உனக்கு?" என்ற படைத்தலைவன் கேள்வியில் லேசான சினம் தொனித்தது.

"ரதி மேல் கண்ணை வைத்திருக்கிறீர்கள். பெண்ணாசை இன்னும் விடவில்லை உங்களுக்கு" என்றான் உதயகுமாரன்.

"என் விடவேண்டும்? எனக்கென்ன வயதாகி விட்டதா? அந்த மாரன் வயதுதான் எனக்கும் இருக்கும். அந்தப் பெண்ணை அழைத்துவா" என்று சற்று கடுமையாகவே சொன்னான் காஞ்சி வர்மன்.

உதயகுமாரன் இகழ்ச்சி ததும்பிய கண்களால் காஞ்சி வர்மனை நோக்கினான். "இப்பொழுதே உங்களை எச்சரிக்கிறேன். கொள்ளிக்கட்டையை நீங்களாக எடுத்து தலையைச் சொரிந்து கொள்ளாதீர்கள். அந்தப் பெண்ணுக்கு ஏதாவது தீங்கு நேர்ந்தாலோ, நேரிடுமென்ற அறிகுறிகள் இருந்தாலோ மாரன் உங்களை அழிக்கத் தவற மாட்டார்" என்ற குரலிலும் இகழ்ச்சி தோன்றப் பேசினான்.

காஞ்சி வர்மன் மெல்லப் பொறுமையை இழந்தான். "உதயகுமாரா! சொன்னபடி செய். இல்லையேல் பெரும் விபரீதங்கள் ஏற்படும்" என்று கூறினான். சினத்தால் உதடுகள் துடித்தன.

"உங்கள் கோரிக்கையைத் தெரிவிக்கிறேன். அவர்கள் வருவதும் வராததும் என் பொறுப்பல்ல" என்று கூறிவிட்டு உதயகுமாரன் வெளியே நடந்து விட்டான்.

அவன் வெளியே சென்ற தோரணையையும் நடையின் இடத்தையும் பார்த்த காஞ்சிவர்மன் "இந்தக் கோழை எப்படி மாறிவிட்டான். அவசியமானால் இவனையும் தொலைக்க வேண்டியதுதான். அதற்கு சுலபமான வழியும் இருக்கிறது" என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். "அடீ ரதி! என்ன அழகான பெயர் உனக்கு? என்ன பொருத்தமான பெயர். வெகு சீக்கிரம் நீ என் மாளிகைப் பஞ்சணையில் புரளுவாய்" என்று எண்ணமிட்டு அந்த இன்பத்தை எதிர்பார்த்து மோகனக் கனவிலும் ஆழ்ந்தான்.

அங்கிருந்து புறப்பட்டு இளமாரன் இருந்த விடுதிக்குச் சென்ற உதயகுமாரன் யாரையும் எதையும் கேட்க விடாமல் தானே பேச ஆரம்பித்தான், "சத்திரக்காரரே! உமது வேஷம் அம்பலமாகிவிட்டது, ஆகவே வீணாகப் படுக்க வேண்டாம். எழுந்து உட்காரும். நீலரதியும்



முக்காடிட வேண்டாம். என்னோடுமே சுயரூபத்தில் இருக்கலாம். படைத்தலைவன் நம்மைப்பற்றி ஓரளவு ஊகித்திருக்கிறான். ஆனால் நீங்கள் யார் என்பது திட்டமாகத் தெரியாது. எப்படியிருந்தாலும் உங்களைத் தனது மாளிகைக்கு அழைத்துச் செல்லத் தீர்மானித்திருக்கிறான். முடிந்தால் சாதாரணமாக, இல்லையேல் பலவந்தமாக" என்று படைத்தலைவன் இஷ்டத்தை எளிதாகச் சொன்னான் உதயகுமாரன். பிறகு நீலரதியை உற்று நோக்கி "இந்த நிலைக்கு நீதான் காரணம். உன் அழகு அவனை மயக்கி இருக்கிறது" என்றும் கூறினான்.

நீலரதியின் கண்களில் தீப்பொறி பறந்தது. "என்னை இச்சித்து ஏற்கனவே இருவர் மாண்டுவிட்டதைக் கூறினீர்களா அவனிடம்?" என்று வினவினாள் கடுஞ்சொற்களால்.

"எதைச் சொன்னாலும் இப்பொழுது அவன் புத்தியில் ஏறாது. காமுகன் புத்தி அது" என்றான் உதயகுமாரன்.

அதுவரை பேசாமலிருந்த இளமாரன் மெல்ல வினவினான். "அவனை உனக்கு எப்படித் தெரியும்?" என்று.

"என் தாய்க்கு மாமன்; அதுவும் அவன் சொல்லித்தான் எனக்குத் தெரியும்" என்று விளக்கினான் உதயகுமாரன்.

இளமாரனிடமிருந்து அதற்கு பிறகு ஒரு வார்த்தை கூட வெளிவரவில்லை. முகத்தில் ஒரு கடுமை ஏறியிருந்தது. அந்தக் கடுமைக்கு அறிகுறியாக அவன் உதடுகள் மடிந்திருந்தன. அவன் உடல் பூராவுமே விறைத்துக் கிடந்தது. கடைசியில் உதயகுமாரன் கேட்டான் "அடுத்து நான் என்ன செய்ய வேண்டும்?" என்று.

இளமாரன் நிதானத்துடன் அழுத்தந்திருத்தமாக பதில் சொன்னான். "அவன் இஷ்டத்துக்கு இணங்க வேண்டியது. அவன் இருப்பிடம் செல்லவேண்டியது" என்று.

"அதனால் விளையக்கூடிய விபரீதம் தெரியுமா உனக்கு?" என்று கேட்டான் உதயகுமாரன்.

''எந்த விபரீதமும் விளையாது'' என்று திட்டமாகச் சொன்ன இளமாறன் ''காலையில் காஞ்சி வர்மன் இருப்பிடம் செல்ல சித்தமாகுங்கள்'' என்று கூறிவிட்டு எழுந்து எதிரேயிருந்த மரக்கூட்டங்களை நாடிச் சென்றான். அவன் சென்ற பிறகு சில விநாடிகளே தாமதித்து நீலரதியும் அவன் சென்ற திக்கை நாடிச் சென்றாள்.

உதயகுமாரன் உதடுகளில் புன்முறுவல் விரிந்தது. ''இவள்தான் எனக்கு மனைவியாகப் போகிறவள்! நல்ல அறிவாளியான இளமாறன் ஏன், உண்மையை உணரவில்லை?'' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். பிறகு கூடத்தின் ஒரு மூலைக்குச் சென்று சாய்ந்து கண்களை மூடினான்.

மரக் கூட்டத்தை நோக்கிச் சென்ற இளமாறன் அங்கிருந்த மணலில் படுத்தான். சற்று நேரத்திற்கெல்லாம் அங்கு வந்த நீலரதியும் அவன் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள். அவள் கையொன்று அவன் கையைப் பற்றியது. முகத்தை அவன் மார்புமீது புதைத்துக்கொண்டாள் அவள். அவள் குழலைத் தடவிக் கொடுத்த இளமாறன் ''இது முறையல்ல'' என்றான் மெதுவாக.

''எது?'' -அவள் கேட்டாள் அவன் காதுக்கருகில் குனிந்து.

''நீ இங்கு வருவதும் தனிமையில் என்னுடன் இருப்பதும். பார்ப்பவர்கள் தவறாக நினைப்பார்கள்'' என்று இளமாறன் முணுமுணுத்தான்.

''யார் எப்படி நினைத்தால் நமக்கென்ன?'' என்று நீலரதி மேலும் அவனை நெருங்கினாள்.

இளமாறன் உணர்ச்சிகள் கட்டுக்கடங்காமலிருந்தாலும் மெல்ல சமாளித்துக்கொண்டு ''நீலரதி! நீ என் மகளுக்கு சமானம். இதை நினைப்பில் வைத்துக்கொள்'' என்றான் சற்று கடிந்துகொள்ளும் முறையில்.

''மகள் தந்தைக்குப் பணிவிடை செய்யக்கூடாதா?''

''செய்யலாம். ஆனால் இப்போது பணிவிடை எனக்குத் தேவையில்லை.''



''வேறு என்ன தேவை?''

''சிந்தனை'' என்று கூறிய இளமாறன் சிந்தனையில் இறங்கினான்.

நீண்ட நேர சிந்தனைக்குப் பிறகு விடுதிக்கு நீலரதியுடன் திரும்பிய இளமாறன் ''உதயகுமாரா! நாம் படைத்தலைவனுடன் காலையில் புறப்படுகிறோம். அதை அறிவித்து விடு அவனுக்கு'' என்று கூறினான்.

''சிங்கத்தின் வாயில் நீங்களாகத் தலையை நுழைக்கிறீர்கள்'' என்று எச்சரித்தான் உதயகுமாரன்.

''சிங்கம் யார் என்பது நாம் அங்கு போன பின்பு தெரியும்.''

''எங்கு?''

''கடல் மல்லைக்கு''—இதை மிக நிதானமாகத்தான் சொன்னான் இளமாறன். ஆனால் உதயகுமாரனுக்கும் மற்றவர்களுக்கும் அது பேரதிர்ச்சியைத் தந்தது. காஞ்சி வர்மன் அரண்மனை கடல்மல்லையில் தானிருக்கிறதென்று எப்படி ஊகித்தான் என்பது உதயகுமாரனுக்கு அடியோடு புரியவில்லை. ஆகவே கேட்டான் ''அவன் இருப்பிடத்தை எப்படி ஊகித்தீர்கள்?'' என்று.

''ஊகிக்கவில்லை, உணர்ந்தேன்'' என்றான் இளமாறன். ''பாம்பைத் தவளை கூவி அழைக்கிறது'' என்றும் உரைத்தான். அவன் முகத்தில் பலவித உணர்ச்சிகள் தாண்டவமாடின. உவகை, வெறுப்பு, சினம் இப்படிப் பல உணர்ச்சிகள் மாறி மாறித் தோன்றின.

□ □ □

# 30. கடல்மல்லை சொல்லும்

சாதாரணமாக எந்தவித உணர்ச்சியையும், எப்பேர்ப்பட்ட சந்தர்ப்பத்திலும் காட்டாத உரநெஞ்சத்தைப் படைத்த இளமாறன், அன்று பற்பல உணர்ச்சிகளை முகத்தில் காட்டியது நீலரதிக்கும் மற்றவர்களுக்கும் பெருவியப்பாக இருந்தாலும், அதைப்பற்றி யாரும் அவனை எதுவும் கேட்கத் துணியவில்லை. காஞ்சி வர்மன் இருப்பிடம் இளமாறனுக்கு எப்படி தெரிந்ததென்றே ஆராய்ச்சியில் இறங்கிய உதயகுமாரன் மட்டும் மீண்டும் மீண்டும் அதைப் பற்றி பல வினாக்களைத் தனது உள்ளத்தில் எழுப்பிக் கொண்டாலும், எந்த வினாவுக்கும் விடை காணாததால் குழம்பிய சித்தத்துடன் தான் உட்கார்ந்திருந்த அந்த மூலைக்கே சென்று சாய்ந்து கொண்டான். சத்திரக்காரனுக்கு இந்த விஷயங்கள் அனைத்துமே புதிதாயிருந்ததால், எது எக்கேடு கெட்டால் நமக்கென்ன என்று பழையபடி கட்டிலில் படுத்து உறங்க முயன்றான்.

மற்றவர்கள் படுத்தபின்பும் நீலரதி கூடத்தின் மத்தியிலேயே நின்றிருந்ததைக் கவனித்த இளமாறன், "நீலரதி! நீயும் படுத்துக் கொள், விடிய இன்னும் இரண்டு நாழிகை இருக்கிறது" என்று கூறிவிட்டு தான் பழையபடி வாயிற்படிக்குச் சென்று குறுக்கே படுத்துக் கொண்டு கால்களை நன்றாக நீட்டிக்கொண்டான்.

கால்களை நீட்டினாலும் கண்களை மூடினாலும் கவலை மட்டும் சித்தத்தை விட்டு அகலாததால், மேற்கொண்டும் சிந்திக்கத் தொடங்கினான். "காஞ்சிவர்மன் நான் யாரென்பதை ஓரளவுக்கு ஊகித்திருக்கிறான். ஆகையால்தான் எங்களைச் சிறை செய்து மன்னனிடம் அனுப்பாமல் தன்னுடன் அழைத்துச் செல்ல ஏற்பாடு



செய்திருக்கிறான். கடல் மல்லையில் அவனிடம் சிக்கிக் கொண்டால் மீள்வது மிகக் கடினம். அதைப்பற்றி நான் அஞ்சவில்லை, ஆனால் நீலரதியின் கதி என்னவாகும்?" என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டான். அதனால் வாய் விட்டு, "நீலரதி! நீலரதி!" என்று இருமுறை அவள் பெயரை மிக மெதுவாக உச்சரித்தான்.

"ஏன்?", என்று அவன் பக்கத்திலிருந்து ஒலித்தது இனிமையான குரல்.

அப்பொழுதுதான் நீலரதி தனது பக்கத்தில் வந்து உட்கார்ந்திருக்கிறாள் என்பதைப் புரிந்து கொண்ட இளமாறன், "நீலரதி! நீ உறங்கவில்லை?" என்று மெதுவாகக் கேட்டான்.

"இல்லை" என்றாள் நீலரதியும் மிக மெதுவாக.

"ஏன்?" என்று கேட்டான் இளமாறன்.

"நீங்கள் ஏன் உறங்கவில்லை?" என்று நீலரதி வினவினாள்.

"சிந்தனை உறங்க விடவில்லை"

"எனக்கும் அப்படித்தான்."

"உனக்கு என்ன சிந்தனைகள் இருக்கக் கூடும்?"

"உங்களுக்கு மட்டும் என்ன சிந்தனை இருக்கக் கூடும்?"

"உன்னைப் பற்றிய சிந்தனை. இந்த அயோக்கியனிடமிருந்து உன்னைக் காப்பாற்ற வேண்டுமே என்ற கவலை."

"எனக்கு உங்களைப் பற்றிய சிந்தனை. இவனிடம் நீங்களாக அகப்பட்டுக் கொண்டீர்களே என்ற கவலை."

இப்படி தான் சொன்னதையே சொல்லி தன்னை மடக்கிவிட்ட நீலரதியின் கையொன்றைத் தனது

கையால் பிடித்தான் இளமாறன். ''நீலரதி!'' என்று மெதுவாக அழைக்கவும் செய்தான்.

''என்ன?'' என்று வினவியதோடு நிற்கவில்லை அவள். தனது கையைப் பிடித்த அவனுடைய கையில் தனது விரல்களை லேசாக விரித்தாள்.

விரிந்த விரல்கள் கதை சொல்லத்தான் செய்தன. அந்தக் கதையை அவன் கையும் உணர்ந்து கொள்ளவே செய்தது. கையோடு கை பேசும் விந்தைக்குக் காரணம் என்னவென்பது சந்தேகமறப் புரிந்தது இளமாறனுக்கு. காதலில்தான் இப்படி அவயவங்கள் பேசும் என்பதை நன்றாக உணர்ந்திருந்த இளமாறன், ''சே, சே! எனக்காவது காதலாவது! அது மடிந்து எத்தனையோ ஆண்டுகள் ஓடிவிட்டன! இந்த சிறிய மலரை உதயகுமாரனிடந்தான் ஒப்புவிக்க வேண்டும்'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். அந்த முயற்சிக்கு முதல் படியாக அவளது கையைப் பிடித்திருந்த தனது கையை விடுவித்துக் கொண்டான்; அவள் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து லேசாகத் தள்ளியும் படுத்துக் கொண்டான், உட்கார்ந்த அவள் பருத்த எழில் தன் மீது படாதிருக்க.

ஆனால் அவள் அவனை நெருங்கவே செய்தாள் மறுபடியும். தனது பின்னெழிலின் பகுதி அவன் மீது நன்றாகப் படும்படி நகர்ந்தும் உட்கார்ந்து கொண்டாள். அவன் கையை எடுத்து தனது மடியிலும் வைத்துக் கொண்டாள். ''பாவம்! தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்ளப் பார்க்கிறார்'' என்று பரிதாபமும் கொண்டு லேசாகப் புன்முறுவலும் செய்தாள்.

அவள் கூடத்திலிருந்து வரும்போது அங்கிருந்த ஒரே விளக்கை ஊதிவிட்டு வந்தபடியால், அவள் புன்சிரிப்பை, அவன் கண் திறந்திருந்தும் காணமுடியாவிட்டாலும் அவள் உணர்ச்சிகளின் தன்மையை அவன்



நன்றாக உணர்ந்து கொண்டான். உணர்ந்தது அவன் மட்டுமல்ல, அவள் மடியில் எடுத்து வைத்துக் கொண்ட அவன் கையும் உணர்ந்துகொண்டது. அது அவள் மடியில் புரண்டது. பக்குவமலர்த்தொடையில் தவழ்ந்தது. லேசாக அவள் எழிலை அழுத்தவும் செய்தது.

நீலரதியின் உணர்ச்சிகள் உக்கிரமாக எழுந்தன. அந்தக்கையை அவள் தனது கையால் இறுகப்பிடித்தாள்; பிறகு அவன் கைக்கு அவள் கை வழியும் காட்டியது. அது அழைத்துச் சென்ற மனோகர இடங்களால் இருவருமே உணர்ச்சி வெள்ளத்தில் நீந்தினார்கள். அந்த உணர்ச்சி விபரீதத்தில் கொண்டு விடுமுன்பு இளமாறன் சட்டென்று தனது கையை இழுத்துக்கொண்டு அவள் கையை உதறினான் பிறகு கடுமையுடன் அழைத்தான் ''நீலரதி!'' என்று.

''என்?'' என்று பழையபடி கேட்டாள் அவள்.

''போய்ப் படுத்துக்கொள்'' என்றான் இளமாறன், கடுமை சிறிதளவும் குறையாத குரலில்.

''போகாவிட்டால் என்ன செய்வீர்கள்?'' என்று அவளும் அலட்சியமாகக் கேட்டாள்.

''நானே உன்னைத் தூக்கிக் கொண்டுபோய் கூடத்தில் படுக்க வைத்து வருவேன்'' என்றான் இளமாறன்.

''மிக நன்றாயிருக்கும்'' என்ற நீலரதி கலுக்கென்று நகைத்தாள்.

''என்ன சொல்கிறாய்?'' என்று சீறினான் இளமாறன்.

''நீங்கள் என்னைத் தூக்கிக் கொண்டு நுழைவதை கூடத்தில் இருப்பவர்கள் பார்த்தால் என்ன நினைப்பார்கள்?'' என்று வினவினாள் அவள்.

''நினைப்பதற்கு என்ன இருக்கிறது? மகளைத் தந்தை தூக்குவதில்லையா?'' இதை சற்று சிந்தித்தும் குழம்பியும் சொன்னான்.

நீலரதி சொன்னாள்: "உங்களை உலக அனுபவம் மிகுந்தவர் என்று நினைத்தேன். அதுவுமில்லையென்று தெரிகிறது. வயது வந்த பெண்ணை எந்தத் தந்தையும் தொடமாட்டான். தாக்குவதும் வழக்கமல்ல, நான் அப்படி உங்களுக்கு சொந்த மகளுமல்ல" என்று.

"மகளாகப் பாவிக்கிறேன்" என்றான் இளமாறன்.

"சில நாட்களாக உங்களுக்கு பாவனை அதிகமாயிருக்கிறது. உலகத்துக்கு ஒவ்வாத பாவனை" என்று நீலரதி வாயிற்படியிலேயே சாய்ந்து கொண்டாள். "இனி மேல் பேசாதீர்கள். நான் கண்ணை மூடிக் கனவு காணப் போகிறேன்" என்றாள்.

இது மிக விந்தையாயிருந்தது இளமாறனுக்கு. "கனவு காணப்போகிறாயா?" என்று வியப்புடன் வினவினான்.

"ஆம்!"

"என்ன கனவோ?"

"ஒரு வீரனைப் பற்றிய கனவு."

"யாரைச் சொல்கிறாய் என்பது எனக்குத் தெரியும். அவனைப் பற்றிக் கனவு காண என்ன அவசியம்? அவன் தான் பக்கத்திலேயே இருக்கிறானே."

"அவன் கடந்த காலத்தைப்பற்றி, ஒரு மாளிகையைப் பற்றி" என்ற நீலரதி, கண்களை மூடினாள்.

அவன் ஏதோ கேள்வி கேட்டும் பதில் சொல்லவில்லை அவள். கண்களை மூடி யோகநிலையில் ஆழ்ந்தாள். விநாடிகள் ஓடி நிமிடங்களாயின. அவள் மௌனத்தில் ஆழ்ந்திருந்தாள். அவள் உறங்கி விட்டதாக நினைத்து எழுந்து அவள் பக்கத்தில் உட்கார்ந்தான் இளமாறன். அவள் தலை அவன் தோள்மீது சாய்ந்தது மெதுவாக. மெல்ல அவளுக்கு உறக்கம் வந்துவிட்டதாக நினைத்த



இளமாறன் அவள் தலைக் குழலைத் தடவிக்கொடுத்தான். அவள் கன்னத்தின் மீது தன் கன்னத்தையும் வைத்தான். மெல்ல மெல்ல அவள் இதழ்கள் திறந்து இன்பச்சாரிச் சொற்களை உதிர்த்தன. "கடல், அதோ அலைகளைப் புரட்டி, கரையைத் தாக்குகின்றது. அதை அணைந்தாற் போல் எத்தனை பெரிய தோப்பு. தோப்பின் முகப்பு அரண்மனை வடபுறத்திலா தென்புறத்திலா? தென்புறந் தான் அப்பா! எத்தனை பெரிய அரண்மனை! அரசர்களே குடியிருக்கலாமே! எதிரே உள்ள தோப்பில் அத்தனையும் தென்னை மரங்களா! இல்லையே, முந்திரி மரங்களும் இருக்கின்றனவே, கீழே எத்தனை வெண்மையான மணல், முந்திரி மரங்களில் எத்தனை சிவந்த கனிகள், என்ன மனோரம்மியமான இடம்!" என்று சொல்லிக்கொண்டே போனவள் சட்டென்று பேசுவதை நிறுத்தினாள்.

அவள் பேசப் பேச இளமாறன் இதயம் படக் படக் கென்று அடித்துக்கொண்டது. அச்சம் தெரியாத அவன் இதயத்திலும் அச்சம் புகுந்தது. சற்று நிறுத்திய அவள் மீண்டும் பேசினாள். "அதோவரும் கடலின் உப்புக்காற்று எத்தனை இன்பமாக இருக்கிறது. இன்பம் துளிர்க்கும் போது உப்பு என்ன! இனிப்பு என்ன! இரண்டும் சமந் தானே? மனம் நெருங்கும்போது உப்பும் இனிப்புத் தானே!" என்று பேசினாள் அவள்.

இளமாறன் அவளை சட்டென்று உலுக்கினான். தோளில் சாய்ந்து கிடந்த அவள் தலையை எடுத்து தனது முகத்துக்கு நேராகப் பிடித்தான். "நீலரதி! நீலரதி! என்ன உளறுகிறாய்?" என்று வினவினான்.

உறக்கத்திலிருந்து கண் விழிப்பவள்போல் விழித்தாள் நீலரதி.

"ஏனிந்தப் பதற்றம் உங்களுக்கு? என்ன நடந்து விட்டது?" என்று வினவினாள்.

இளமாறன் கண்கள் மின்னின. "நீ உறங்கவில்லை, வெறும் பாசாங்கு" என்றான் இளமாறன்.

"எப்படித் தெரியும் உங்களுக்கு?" என்று அவள் வினவினாள்.

"எனது பழைய கதையைச் சொல்கிறாய்."

"இல்லையே."

"அந்த இடங்களைச் சொல்கிறாய்."

"அதனாலென்ன?"

"என் நினைப்பை அந்த இடத்துக் கொண்டு போகிறாய்."

"உங்களையே படைத்தலைவன் நாளைக்கு அந்த இடத்துக்கு அழைத்துப் போகப்போகிறானே! அப் என்ன செய்யப் போகிறீர்கள்? நினைப்பை அழித்துவிடப் போகிறீர்களா?"

இளமாறன் சிறிது சிந்தித்தான்: "அழித்துவிட முடியாது நீலரதி! ஆனால் அழிந்து விடுமோ என்ற அச்சம் இருக்கிறது!" என்று சொல்லவும் செய்தான்.

"யார் அழிக்க முடியும்?" என்று கேட்டாள் அவள்.

"நீ அழிக்க முடியும். உன் மனோகர எழில் அழிக்க முடியும்" என்று இளமாறன் எண்ணினானே தவிர அதை வாய்விட்டுச் சொல்லவில்லை அவன். தனது மன சபலத்துக்கு, பலவீனத்துக்கு, நீலரதி காரணமென்பதை சந்தேகமறப் புரிந்துகொண்ட இளமாறன், "இவற்றுக்குப் பதில் கடல்மல்லை சொல்லும்" என்று உள்ளூர சொல்லிக் கொண்டான்.

□ □ □

# 31. அவன் கண்ட காட்சி

கூடலூரில் கடலூருக்கு முன்னிருந்த விடுதியின் வாயிற்படியில் படுத்திருந்த இளமாறன் காதில் கடலலைகளின் பேரிரைச்சல் விழுந்தாலும், அலைகளைவிட அதிகமாக இரைந்த மன அலைகளின் காரணமாக அவன் உறக்கத்தை அறவே இழந்திருந்தான். சிந்தனை பின்னோக்கி வேகமாகவே ஓடிக்கொண்டிருந்தது. தனது மனைவியைப் போலவே பேரழகு படைத்த நீலரதி தனது பழைய அரண்மனையில் புகுந்தாலும் சரி, கடற்கரைத் தோப்பில் உலவினாலும் சரி, என்று தனது உணர்ச்சிகள் படக்கூடிய பாட்டைப் பற்றி அவன் தொடர்ந்து சிந்திக்கலானான். நீலரதியின் கடல் மல்லை வருகையால் தனது வாழ்க்கையில் நிச்சயமாய் ஒரு திருப்பம் ஏற்படும் என்பதை சந்தேகமற உணர்ந்த அவன் மனம் "அந்தத் திருப்பத்தின் விளைவு நல்லதாக இருக்குமா? அல்லது தீயதாக இருக்குமா?" என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டது. அதற்கு விடை மட்டும் கிடைக்காததால் மனம் நிலைகொள்ளாது தவிக்க அதைச்சமாதானப்படுத்த உடல் ஒருமுறை புரண்டு திரும்பியது.

புறக்கண்ணை மூடிய அந்த இளைஞனின் அகக்கண், நீலரதியை அவனது பழைய அரண்மனை வாயிலில் நிறுத்திப் பார்த்தது. அவளை முகப்புச் சோலையில் திரியவிட்டுப் பார்த்தது. முந்திரி மரங்களுக்கு முன்னால் வெண்ணிற மணலில் நடக்கவிட்டும் பார்த்தது. ஒவ்வொரு பார்வையிலும் நீலரதி அந்த அரண்மனையை ஆளத் தகுந்தவள் என்ற முடிவுக்கே வந்தது அவன் இதயம். மனத்துக்கு காலத்தை மாற்றும் சக்தியுமிருந்ததால் கிருஷ்ணபட்சத்தை சுக்லபட்சமாக்கி பௌர்ணமியில் நீலரதியின் அழகிய பிம்பத்தை முகப்புத் தோப்பிலும்

உலவவிட்டு "இந்த இடத்துக்கு இவன் முற்றிலும் தகுதி. முந்தியவன் இடத்தை இவன்தான் நிரப்ப முடியும்" என்ற முடிவும் காட்டியது. அந்த முடிவின் விளைவாக ஒருமுறை முனகிய இளமாறன் "சே! சே! கூடாது. சுத்த மடத்தனம். வீண் பிரமை" என்று வாய்விட்டுப் சொன்னான்.

"எது?" என்று கேட்டாள் பக்கத்தில் இருந்த நீலரதி.

"ஒன்றுமில்லை" சற்று விழித்து சமாளித்துக் கொள்ளப் பார்த்தான் இளமாறன்.

"சொற்களின் ஒலி பிரமையைக் குறிக்கிறது. வீண் பிரமையைக் குறிக்கவில்லை" என்றாள் நீலரதி.

"பிரமையில் இருவகை உண்டா?"

"உண்டு. கைகூடும் பிரமை, கைகூடாப் பிரமை என்று இரண்டு உண்டு"

"நீலரதி! நீ தர்க்க சாஸ்திரம் படித்திருக்க வேண்டும்" என்றான் இளமாறன்.

"படிக்கத் தேவையில்லை" என்றாள் நீலரதி.

"ஏன்?" என்று வினவினான் இளமாறன்.

"நீங்கள் அருகிலிருக்கும்போது எல்லா சாஸ்திரங்களும் படிக்காமலே எனக்கு வருகின்றன" என்று நீலரதி சொன்னாள்.

"எல்லா சாஸ்திரங்களுமா?"-இளமாறன் கேள்வியில் வியப்பு ஒலித்தது.

"ஆம்"

"வேறு என்ன சாஸ்திரம் வருகிறது?"

"அதை சொல்வதற்கில்லை."

"ஏன்?"

"தர்க்கத்திற்கும் மேம்பட்டது. அப்பாற்பட்டது என்று கூடச் சொல்லலாம்."



"விளக்கமாகத்தான் சொல்லேன்."

"அதைச் சொற்கள் விளக்காது. உணர்ச்சிகள்."

அவள் எதைச் சொல்கிறாளென்பதைப் புரிந்து கொண்ட இளமாறன், வாதத்தை மேற்கொண்டு தொடரவில்லை. திரும்பிப்படுத்தான் ஒருமுறை. மறுபடி ருப்புறம் படுத்தான், அவன் மருகில் தலையை சாய்த்துப்படுத்தாள் நீலரதி.

இந்த நிலையில் விடியற்காலையில் அவர்களைப் பார்த்த உதயகுமாரன் வெறுப்பு கலந்த புன்முறுவலொன்றை வெளியிட்டான். அச்சமயத்தில் விடியற்காலைப் பறவைகள் விடுதிக்கு எதிரிலிருந்த மரங்களிலிருந்து கூவவே அவர்களைத் தாண்டி அந்த மரக்கூட்டத்தை நோக்கிச் சென்றான் அந்த வாலிபன். அவன் முகத்தில் பெரும் சாந்தி குடிகொண்டிருந்தது. மனத்தில் அன்று வரை இருந்த பெரும் சுமை விலகவே உற்சாகமாக வாயால் குழலைப்போல் ஊதிக்கொண்டே மரங்களின் ஊடே உலாவினான்.

அந்த நிலையில் அவனைச் சந்தித்த காஞ்சி வர்மன் "உதயகுமாரா! ஏது காலையில் மிக உற்சாக இருக்கிறாய்?" என்று விசாரித்தான்.

"தங்கள் ஊருக்கு வரும் உற்சாகந்தான்" என்று இடக்காகப் பேசினான் உதயகுமாரன்.

"இது முன்னமே தெரிந்திருந்தால் நேற்றே கிளம்பியிருக்கலாமே" என்று காஞ்சி வர்மன் தனது துன்பத்தைத் தெரிவித்துக் கொண்டான்.

"ஒரு நாளில் என்ன குடி கெட்டுவிடப் போகிறது?" என்று சொன்ன உதயகுமாரன் "கெடும் குடி ஒருநாள் முந்தி கெட்டாலென்ன, ஒருநாள் பிந்தி கெட்டாலென்ன?" என்று வினாவையும் எழுப்பினான்.

அவன் வினாவின் உள்ளர்த்தம் காஞ்சி வர்மனுக்குப் புரிந்திருந்தாலும் அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளவில்லை. "உதயகுமாரா!" என்று மெதுவாக அன்பு சொட்டும் குரலில் அழைத்தான்.

"என்ன மாமா?" என்று கேட்டான் உதயகுமாரன். மாமா என்று உச்சரித்தபோது வெறுப்பை மிக அதிகமாகக் காட்டவும் செய்தான்.

மாமா பட்டம் சொல்லி அவன் அழைத்தவுடனேயே அதிர்ச்சியின் எல்லைக்குச் சென்றுவிட்ட காஞ்சி வர்மன் "உதயகுமாரா! இன்னொருமுறை என்னை அப்படி அழைக்காதே, அழைத்தால்—" என்றான். அவன் சொற்களில் எச்சரிக்கை பலமாக இருந்தது.

அந்த எச்சரிக்கையைக் கண்டு அணுவளவேனும் அஞ்சவில்லை உதயகுமாரன். "அழைத்தால் என்ன செய்வீர்கள்?" என்று வினவினான் துணிவு நிரம்பிய குரலில்.

"என் வாள் பதில் சொல்லும்" என்ற காஞ்சிவர்மனை மிக இழிவாகப் பார்த்த உதயகுமாரன் "உங்கள் வாள் எப்படி பதில் சொல்லும்? வழக்கம்போல் முதுகுப்புறத்தில் தானே" என்று கூறிவிட்டு காஞ்சி வர்மனிருந்த இடத்திலிருந்து நடக்க முற்பட்டான்.

இரண்டு எட்டில் அவனை அடைந்த காஞ்சி வர்மன் அவன் கையைப் பிடித்து நிறுத்தினான். "உதயகுமாரா! அந்த மாரன் இருக்கும் தைரியத்தில் ஏதேதோ பேசுகிறாய். ஆனால் ஒன்று நினைவிருக்கட்டும். நீ என்னால் வளர்த்து ஆளாக்கப்பட்டவன். எனக்குத் துரோகம் செய்ய நினைக்காதே. ஏதாவது தாறுமாறாக நடந்து கொண்டால் பலனை நிச்சயம் அனுபவிப்பாய்" என்று எச்சரித்துவிட்டு அவனை லேசாகப் பிடித்துத் தள்ளி "போ! நாம் உடனே புறப்படுவதாகச் சொல் உன் நண்பனிடம்" என்றான்.



அடுத்து உதயகுமாரன் சொன்ன பதில் திடுக்கிடவைத்தது காஞ்சி வர்மனை. "சொல்ல அவசியமில்லை. கடல் மல்லைக்குப் புறப்பட சித்தமாயிருக்கும்படி அவரே எனக்கு உத்தரவிட்டிருக்கிறார்" என்ற அஸ்திரத்தை வீசிவிட்டு தோப்பிலிருந்து கடற்கரையை நோக்கி நடந்தான் உதயகுமாரன்.

கடற்கரையிலிருந்து அவன் திரும்பியபோது கதிரவன் சற்று கடுமையாகவே தனது காலைக் கதிர்களை வீசிக்கொண்டிருந்தான். விடுதி வாயிலில் புறப்படுவதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தது. வண்டியில் புரவி பூட்டப்பட்டு சித்தமாக நின்றது. தனது புரவியும் இளமாறன் புரவியும் சேணங்கள் போடப்பட்டு பயணத்துக்கு சித்தப்படுத்தப்பட்டிருந்தன. பூரண ராஜ உடையில், இடையில் குறுவாள் துலங்க பக்கவாட்டில் நீண்ட வாள் தொங்க நின்றிருந்த இளமாறன். "உதயகுமாரா! எங்கு போயிருந்தாய் இத்தனை நேரம்?" என்று வினவினான்.

"கடலோரம் போயிருந்தேன் அலைகளைப் பார்க்க" என்றான் உதயகுமாரன் அலட்சியமாக.

"நாம் போகுமிடத்தில் இதைவிட அலைகள் சிறப்பாக இருக்கும். புறப்படு நேரமாகிவிட்டது" என்ற இளமாறன் தனது புரவியில் ஏறி அமர்ந்தான்.

உதயகுமாரனும் தனதுபுரவிமீது ஏறி உட்கார்ந்ததும் வண்டிக்காரனை நோக்கி இளமாறன் சமிக்ஞை செய்ய வண்டி புறப்பட்டது. ஆனால் வண்டிக்குள் சத்திரக்காரன் படுக்காமல் செங்குத்தாக உட்கார்ந்திருந்தான். நீலரதியும் முக்காட்டை நீக்கி சாதாரணமாக அமர்ந்திருந்தாள். அதைப் பார்த்த உதயகுமாரன் இளமாறனைப் பார்த்து "சத்திரக்காரருக்கு உடல்நிலை..." என்று இழுத்தான்.

"சரியாகிவிட்டது. நேற்று இரவே அவருக்கு குளிர் விட்டுவிட்டது. அவருக்கு மாத்திரமென்ன? எல்லோருக்குமே குளிர்விட்டுப் போயிற்று" என்ற சொல்லி இளநகை காட்டினான் இளமாறன்.

இளமாறன் எதையோ புரிந்து கொண்டிருக்கிறான் என்பதை உணர்ந்துகொண்ட உதயகுமாரன் மேற்கொண்டு எதும் பேசாமல் புரவியை நடத்தினான் வண்டிக்கு முன்பாக. வண்டிக்குப் பக்கத்தில் பயணம் செய்த இளமாறன் நீலரதியை நோக்கிப் புன்முறுவல் செய்தான். அவளும் பதிலுக்கு புன்முறுவலை இதழ்களில் கூட்ட பயணம் அன்று முழுவதும் எந்தவித நிகழ்ச்சியுமில்லாமல் நடந்தது.

அன்று பகல் உணவை வழியில் ஓர் ஊரில் முடித்துக் கொண்டு மாலையில் ஒரு தோப்பில் தங்க உத்தரவிட்ட காஞ்சி வர்மனும் அவன் காவலர்களும் மட்டும் சற்று எட்ட இருந்த ஒரு கிராமத்துக்குச் சென்றனர். அன்றிரவின் நடுநிசியில் திரும்பிய காஞ்சி வர்மன் மறுபடியும் பயணத்தைத் தொடங்கக் கட்டளையிட்டான்.

''இன்னும் இரண்டாம் ஜாமம் முடியவில்லை'' என்று சுட்டிக் காட்டினான் இளமாறன்.

''இப்பொழுது புறப்பட்டால்தான் நாம விடியற்காலையில் நமது இருப்பிடத்தை அடைய முடியும். அங்கு காலைக் காட்சி மனத்தை அள்ளும். அதைப் பார்க்கும் வாய்ப்பை நாம் இழக்கக்கூடாது'' என்று சமாதானம் சொன்ன காஞ்சி வர்மன் இளமாறன் முகத்தை உற்று நோக்கினான். ஆனால் அந்த முகத்தில் எத்தவித உணர்ச்சியும் தெரியவில்லை. ஏதோ உணர்ச்சியற்ற மரக்கட்டைபோல காணப்பட்டது. அதனால் காஞ்சி வர்மன் மனத்தில் சிறிது சந்தேகம் எழுந்தாலும் அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் பயணத்தை மேற்கொண்டு தொடங்கினான்.

காஞ்சி வர்மனின் வீரர்களைத் தொடர்ந்து இளமாறன் கடல் மல்லையை அடைந்தபோது பொழுது நன்றாக விடிந்து விட்டது. கடல் மல்லையின் பேரலைகளிலிருந்து கதிரவன் செம்பந்தாக உருவெடுத்து வானத்தில் உலாவ எத்தனித்த சமயத்தில் கடல் மல்லையை அடைந்த இளமாறன் சட்டென்று அங்கிருந்த தோப்பு



முனையில் நின்று கடலைக் கவனித்தான். அவன் முகத்தில் உணர்ச்சிகள் ஒரு விநாடி நிரம்பி மறைந்தன. அங்கிருந்தபடி திரும்பி தனது பழைய மாளிகையை நோக்கினான். பிறகு சட்டென்று புரவியைத் தூண்டி காஞ்சி வர்மன் இருந்த இடத்துக்கு வந்து ''இந்த இடம் மிக அழகாயிருக்கிறது'' என்று சொன்னான்.

''இதன் மகிமை அளவற்றது'' என்றான் காஞ்சி வர்மன்.

''அப்படித்தான் நினைத்தேன்'' என்ற இளமாறன், ''நீங்கள் அதிர்ஷ்டம் செய்திருக்கிறீர்கள் இந்த ஊரை அடைய. அதோ அந்த அரண்மனை?'' என்று எட்ட தெரிந்த அரண்மனையையும் சுட்டிக்காட்டினான்.

''என்னுடையது'' என்றான் காஞ்சிவர்மன்.

''பரம்பரை சொத்தோ?'' என்று வினவினான்.

''இல்லை. மன்னர் கொடுத்தது.''

''அரசாங்கப் பணிக்கோ?''

''இல்லை. தூரத்து உறவினர் இறந்து விட்டார். அடுத்த வாரிசு நான் என்பதால் கிடைத்தது.''

''சிலருக்கு இப்படித்தான் அதிர்ஷ்டம் அடிக்கிறது'' என்ற இளமாறன் ''சரி வாருங்கள். தாங்கள் தங்குமிடத்தைக் காட்டுங்கள்'' என்றான்.

காஞ்சி வர்மனே அவனை அழைத்துச் சென்று அரண்மனைக்குப் பின்னாலிருந்த ஒரு விடுதியைக் காட்டி ''நீங்களும் உங்களைச் சேர்ந்தோரும் இங்கேயே தங்கலாம்'' என்று கூறிவிட்டுச் சென்றான்.

நீலரதியும் மற்றோரும் பின் தொடர அந்த விடுதிக்குள் நுழைந்த இளமாறன் சுற்றுமுற்றும் பார்த்து விட்டு சட்டென்று நின்றான். அவன் கண்கள், எதிரேயிருந்த சுவரில் நிலைத்தன. நிலைத்த கண்கள் மீளவில்லை. உக்கிரம் கண்களில் விரிந்தது. நீலரதியின் கண்களில் உக்கிரமில்லை. வியப்பும் துன்பமும் கலந்த சாயையொன்று அவன் சிங்கார வதனத்தில் விரிந்தது. □

# 32. அதிர்ச்சியில் இன்பம்

அரண்மனை என்று அந்தப்பகுதியிலிருந்தவர்களால் அழைக்கப்பட்ட அந்த பெரிய மாளிகையின் பின்புறத்திலிருந்த விடுதியைக்காட்டிவிட்டு காஞ்சி வர்மன் சென்றதும் மற்றவர்கள் பின்தொடர உள்ளே நுழைந்த இளமாறன், இரண்டாவது வாயிற்படிக்கு அப்பால் நேரே சுவரிலிருந்த காட்சியைக் கண்டு திகைத்து நின்றுவிட்டானென்றால், அதற்குக் காரணம் இருக்கவே செய்தது. இரண்டாவது வாயிற்படியை அடுத்திருந்த பெரிய கூடத்தின் சுவரில் அடிக்கப்பட்டிருந்த ஆணியொன்றில் அலங்காரக் குறுவாளொன்று மாட்டப்பட்டிருந்தது. அந்தக் குறுவாள் எது என்பதைப்பற்றியோ, அதன் வரலாற்றைப் பற்றியோ அணுவளவும் சந்தேகம் கொள்ளாத இளமாறன் தனது தலையில் ஏதோ பேரிடி இறங்கிவிட்டது போன்ற பிரமையை அடைந்தான். அந்தக் குறுவாள் தனது மனைவிக்கு தான் கொடுத்தது என்பதையும், அவள் மானத்தைக்காத்து அவளது உயிரை உறிஞ்சிவிட்ட எமன் அதுதானென்பதையும் சந்தேகமற உணர்ந்து கொண்ட இளமாறன், துணிவு-சக்தி இரண்டையும் இழந்து வாயிற்படியை தாண்டாமலேயே நீண்டநேரம் நின்றுவிட்டான்.

மிகக் கூர்மையான அறிவுள்ள நீலரதி அவன் நிலையை நன்றாகப் புரிந்து கொண்டாள். அவன் ஏற்கனவே சொன்ன அவனது கடந்த காலக் கதையின் நிலைக்களம் அந்தக் கடல்மல்லையே என்பதையும், அந்த மாளிகையும் அவனுடையதுதானென்பதையும் ஊகித்துக் கொண்டாலும் அதைப்பற்றி கேள்வி எதும்கேட்கவில்லை அவள். அவளது கமலமுகத்தில் துன்பச்சாயை லேசாக



விரிந்து வியப்பின் அடையாளமும் அதனுடன் கலந்து கொண்டதே தவிர வேறு உணர்ச்சிகளை வெளியிடவில்லை அவள்.

தன் மனைவியின் இதயத்தில் புதைந்த குறுவாளைக் கண்டதும் அதிர்ச்சியடைந்த இளமாறன் வெகு சீக்கிரம் தனது உணர்ச்சிகளை உதறி, பெரிய சிரிப்பொன்றை உதிர்த்திட்டான். "நான் என்ன மாளிகைகளைப் பார்த்திராதவனா? இங்கு வந்ததும் உங்களையெல்லாம் அனாவசியமாக நிறுத்திவிட்டேனே, வாருங்கள்" என்று அழைத்துக் கொண்டு கூடத்துக்குள் நுழைந்தான். பிறகு அந்தக் கூடத்தின் இருபுறங்களிலும் வாயிலை நோக்கிய சாளரங்களுடனிருந்த இரண்டு அறைகளைச் சுட்டிக் காட்டி "இந்த அறைகளில் யார் யாருக்கு எது சௌகரியம்மோ அதில் தங்கலாம்" என்றும் கூறினான். பிறகு சத்திரகாரனை நோக்கி "சத்திரக்காரரே! வண்டிக்காரர்கள், வேலைக்காரர்கள் தங்க இதற்குப் பின்னால் தனி விடுதியிருக்கிறது. அதில் வண்டிக்காரனைத் தங்கச் சொல்லுங்கள்" என்று கூறினான்.

அப்பொழுதுதான் சிறிது சந்தேகப்பட்ட சத்திரக்காரன் "அப்படியொரு விடுதியிருப்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று வினவினான்.

"இதை அறிந்துகொள்ளப் பெரிய ஆராய்ச்சி தேவையில்லை. இத்தகைய பெரிய மாளிகைகளில் வேலைக்காரர்கள் தங்க எப்பொழுதும் தனிவிடுதிகள் ஒன்றுக்கு இரண்டாக இருக்கும்" என்றான் இளமாறன்.

அதனால் திருப்தியடைந்த சத்திரக்காரன் புரவியை அவிழ்த்து விடும்படியும், வண்டியை ஓர் ஒதுக்குப்புறமாக நகர்த்தி நிறுத்தும்படியும் உத்தரவிட்டு மீண்டும் கூடத்துக்கு வந்ததும், இளமாறன் கூறிய மேற்படி விஷயங்கள் மறுபடியும் அவன் சந்தேகத்தைக் கிளறவே செய்தன.

—15

சத்திரக்காரன் உள்ளே வந்தபோது கூடத்துச் சுவரில் இருந்த குறுவாளுக்கு அருகில் தனது குறுவாளையும் இளமாறன் செருகிக் கொண்டிருந்தான். பிறகு கூடத்தை அடுத்திருந்த பின் அறை இரண்டில் ஒன்றுக்குச் சென்று திரும்பி ''அந்த அறையில் புது ஆடைகள் கொண்ட பெட்டியொன்று இருக்கிறது. அதோ உள்ள இன்னொரு அறையும் தங்கும் அறைதான். அடுத்த கட்டுக்குச் சென்றால் அங்கு நீராட்ட அறை முதலியவை இருக்கும்'' என்று கூறியதன்றி முகப்பு அறை ஒன்றைக் காட்டி ''நீலரதி! நீ அதில் தங்கலாம். இன்னொரு முகப்பு அறையில் சத்திரக்காரர் தங்கட்டும்'' என்று சொன்னான்.

''நீங்கள் எங்கு தங்குவீர்கள்?'' என்று நீலரதி வினவினாள்.

இளமாறன், அவளை நோக்கி புன்முறுவல் கொண்டு ''இந்தக் கூடம் எனக்குப் போதும். இல்லாவிட்டால் வாயில் மணல் பாங்கு. அதில் படுப்பேன்'' என்று சொன்னான். அதனால் சிறிது வருத்தத்தைக் காட்டிய நீலரதியை நோக்கி ''நீலரதி! எனக்கு இத்தகைய வாழ்க்கை புதிதல்ல. அதுவும் வீரனாயிருப்பவன் பஞ்சணை சுகத்தைத் தேட முடியாது. கிடைப்பது கட்டாந்தரையானாலும் அதில் படுக்க வேண்டும். எத்தனையோ முறை அப்படிப் படுத்தும் இருக்கிறேன். படைகள் நகரும்போதும், தங்கும் போதும் வீரனாயிருப்பவன் இடவசதியைப் பார்க்க முடியாது'' என்று கூறிவிட்டு மேற்கொண்டு ஏதும் பேசாமல் அந்த விடுதியை விட்டு விரைந்து வெளியே சென்றான்.

அப்படி விரைந்து சென்றவன் அன்று பகல் நன்றாக ஏறிய பின்பும் திரும்பாததால் நீலரதி கவலைக்குள்ளானாள். காலை உணவைக்கூட அவள் சரியாக அருந்தவில்லை. வெளியே சென்றவர் திரும்பாததைப்பற்றி இருமுறை உதயகுமாரனிடம் கேட்டாள்.



''எங்கும் தொலைந்து போய்விட மாட்டார், தானே வருவார்'' என்று உதயகுமாரன் அசட்டையுடன் பதில் சொன்னான்.

''இன்னும் காலை உணவுகூட அருந்தவில்லை அவர்'' என்று சுட்டிக்காட்டினாள் நீலரதி.

நீலரதி அத்தனை தூரம் இளமாறனிடம் அக்கறை காட்டியதைப் பற்றி உதயகுமாரனுக்கு எரிச்சலாயிருந்ததாலே ''உணவைப் பற்றி அவர் என்றும் கவலைப்பட்டதில்லை. இரண்டு நாட்கள் தொடர்ச்சியாக சாப்பிடாதிருப்பதும் உண்டு. அந்த நாட்களில் நன்றாக மது அருந்துவார். மது இருந்துவிட்டால் மற்றதைப்பற்றிக் கவலையில்லை'' என்று குறிப்பிட்டான் உதயகுமாரன்.

''அவர் மது அருந்தியதை நான் பார்க்கவில்லையே'' என்று வியப்புடன் சொன்னாள் நீலரதி.

''அது உண்மை. நீங்கள் வந்த பின்பு அவர் மதுவைத் தொடவில்லை. எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது'' என்றான் உதயகுமாரன்.

''காரணம்?'' என்று வியப்பு நிரம்பிய விழிகளை உதயகுமாரனை நோக்கி திருப்பினாள் நீலரதி.

''நீங்களாகத்தான் இருக்க வேண்டும்'' —இதை வேதனையுடன் சொன்னான் உதயகுமாரன்.

''நானா?''

''ஆம்.''

''எனக்காக மது அருந்துவதை நிறுத்துவானேன்?''

''வந்த அன்றே நீங்கள் ஆபத்தைக் கொண்டு வந்தீர்கள். அன்றுமுதல் உங்களைக் காப்பதிலேயே அவர் முனைந்திருக்கிறார். பல நெருக்கடிகளைச் சமாளித்திருக்கிறார். அவர் கூரிய அறிவை மந்தப்படுத்தக்கூடியவல்

மதுவீரன் ஒருவன்தான். அவனை சென்ற சில நாட்களாக அவர் அருகில் சேர்க்கவே இல்லை.''

இதைக்கேட்ட நீலரதி சிந்தனை வசப்பட்டாள். மெல்ல மெல்ல அவளுக்குக் காரணமும் புரிந்தது. தன்னை எப்படியாவது மறக்கவே இளமாறன் முயல்கிறானென்பதைப் புரிந்து கொண்டதால் அவள் இன்பத்தின் வசமும் சிக்கினாள். அந்த இன்பம் அவள் கவலையை மிகவும் அதிகப்படுத்தவே அவள் அந்த விடுதியைவிட்டு வெளியே கிளம்பினாள்.

''எங்கு போகிறீர்கள்?''-உதயகுமாரன் வினவினான்.

''சுற்றிப் பார்க்கலாமென்று போகிறேன்'' என்று அவள் சாதாரணமாகச் சொன்னாள்.

''நட்ட நடுப் பகலாயிருக்கிறதே?'' என்றான் உதயகுமாரன்.

''அதனாலென்ன? இங்கு சுற்றிலும் சோலைகள் இருக்கின்றன. அதுவும் மாளிகைக்கு முன்னால் கடலை ஒட்டி பெரிய காடு மாதிரியே தோப்பு இருக்கிறது'' என்று சமாதானம் சொல்லிவிட்டுக் கிளம்பினாள்.

''நான் வேண்டுமானால் துணை வருகிறேன்'' என்று எழுந்தான் உதயகுமாரன்.

''வேண்டாம். நான் என்ன குழந்தையா?'' என்று அவனைத் தடுத்துவிட்டு வெளியே சென்றுவிட்டாள் நீலரதி.

வாயிலில் வந்ததும் எதிரேயிருந்த பலா மரங்களையும் தென்னைகளையும் பார்த்தாள். அதை அடுத்து பெரிதாக எழுந்து நின்ற மாளிகையையும் கவனித்தாள். மாளிகைக்குப் பின்னாலிருந்த பெரிய குதிரைக் கொட்டடியையும் எதிரே தூரத்தில் தெரிந்த பல வேலைக்காரர்கள் விடுதிகளையும் பார்த்தாள். ''இதுவே ஒரு சிற்றரசன் அரண்



மனை போலத்தான் இருக்கிறது' என்று தனக்குள் சொல்லிக்கொண்டு கடலை நோக்கி நடக்க முற்பட்டாள்.

மாளிகை கடலை நோக்கிக் கொண்டிருந்தது. அதன் முகப்பு சித்திர வேலைப்பாடுகள் கண்ணைப் பறிக்கும் படியாயிருந்தன. அதன் முகப்பிலிருந்த பத்து பெரிய தூண்களும் கம்பீரமாக நின்று கொண்டிருந்ததும், அதிலும் பல உருவங்கள் தீட்டப்பட்டிருந்ததும், அரண்மனையை அந்த சித்திரங்களே காவல் செய்யும் பிரமையை ஏற்படுத்தின. அப்படி செதுக்கப்பட்ட உருவங்களில் சில அழகிய பெண்ணுருவங்களுமாதலால் பிரமையிலும் சிறிது இன்பத்தை இணைத்திருந்தது மாளிகையின் முகப்பு நிலை. மாளிகைக்கு எதிரில் சிறிது தூரத்தில் அடர்த்தியான பெரிய தோப்பு இருந்தது. அவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டே மாளிகைக்கு முன்புறமாக கடலை நோக்கி நடந்தாள் நீலரதி. அந்தப் பகலிலும் வெயில் ஏறிவிட்ட சமயத்திலும் கடல் குமுறி எழுந்து அலைகளைத் தரைக்கு அனுப்பிக் கொண்டிருந்தது. கடல் மல்லை மனைப் பகுதியாகையால் ஆங்காங்கு எட்ட இருந்த பாறைகள் கடலுக்கு ரம்மியமான சூழ்நிலையை அளித்ததன்றி, இரண்டொரு பாறைகள்மீது அலைகளும் மோதி, நீரை அள்ளி மேல் நோக்கி எழுப்பி வெள்ளித் திரைகளை சிருஷ்டித்தன.

இத்தனை ரம்மியமான சூழ்நிலையும் நீலரதிக்கு இன்பத்தை அளிக்கவில்லை. ஏதும் பேசாமல் பாறையொன்றின்மீது அமர்ந்திருந்தாள். பிற்பகல் தாண்டி விட்டதை உணர்ந்த பின்பே பாறைகளிலிருந்து எழுந்து சுற்றும்முற்றும் நோக்கினாள். எங்கும் இளமாறன் சுவடுகளே தெரியாததால் கவலைப் பெருமூச்சு விட்டு எட்ட இருந்த தோப்பை நோக்கி நடந்து தோப்புக்குள் புகுந்தாள். அவள் புகுந்த இடத்தில் முந்திரி மரங்கள் இணைந்துகொண்டிருந்த இரு மரங்களுக்கிடையில் நடந்து கிளைகளை . விலக்கி எட்டிப் பார்த்ததும் அதிர்

யடைந்து நின்றுவிட்டாள். அந்த முந்திரிக் கிளைகளை உற்று நோக்கிய வண்ணம் கனவிலிருப்பவன்போல் இளமாறன் நின்று கொண்டிருந்தான். அந்தச் சமயத்தில் இன்னொரு பேரதிர்ச்சிக்கும் நீலரதி உள்ளானாள். கிளைகளை உற்றுப்பார்த்த இளமாறன் இலைகளுக்கு இடையில் தோன்றிய அவள் முகத்தை வெறிபிடித்தவன்போல் சில விநாடிகளே பார்த்தான். பிறகு அவனிடமிருந்து வெறிக் கூச்சலொன்று கிளம்பியது. அடுத்து என்ன நடக்கும் என்று அவள் எண்ணுவதற்குள் அப்பேரதிர்ச்சி அவளை ஆட்கொண்டது. அடுத்த விநாடி அவள் இளமாறனின் இறுகிய அணைப்பிலிருந்தாள். அவள் உதடுகள் அவன் வலிய உதடுகளால் மூடப்பட்டன. சுவைக்கப்பட்டன. கடிக்கப்பட்டன. அவன் கைகள் மேலும் அவளை இறுக்கின. மூச்சுத் திணறும் நிலைக்கு வந்தாள் நீலரதி. அதிர்ச்சி அளவை மீறி இருந்தது. ஆனால் அந்த அதிர்ச்சியில் இன்பமும் இழையோடியிருப்பதை அந்தச் சில விநாடிகளில் நீலரதி உணர்ந்தாள்.

# 33. மணல் மோகினி

அறிவு, வெறி இரண்டுக்கும் உற்பத்தி ஸ்தானம் புத்தியே என்றாலும் இரண்டின் குணாதிசயங்களும் வெவ்வேறானவை. அறிவு மனிதனுடைய உணர்ச்சிகளை அடக்கி மனிதனை மனிதனாக்குகிறதென்றால், வெறி உணர்ச்சிகளைச் சிதறவிட்டு உற்பத்தி ஸ்தானமாகிய சிந்தனையையே கலக்கி மனிதனை மிருகமாக்குகிறது. அறிவுடன் வெறி கலக்கும்போது நெறி அடியோடு புரண்டு விடுகிறது. இந்த நியதிக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கினான் இளமாறன் அன்று அந்தத் தோப்பில்.

உணர்ச்சிகள் புரண்டு நிலைகுலைந்து போனதால் வெறியின் வசப்பட்ட இளமாறன் நீலரதியின் மீது பாய்ந்து அவளை இறுகக்கட்டி உதடுகளையும் தனது இதழ்களால் மூடியும், பற்களால் பற்றியும் அத்தனை நாள் கடைப்பிடித்த நெறியைக் கைவிட்டதைக் கண்ட நீலரதி முதலில் அதிர்ச்சிக்கு ஆட்பட்டாளென்றாலும், சில விநாடிகளில் அவன் வெறிக்குக் காரணத்தைப் புரிந்து கொண்டாள். அவன் தனது மனைவியைப் பற்றி சொன்ன கதை. அவள் நினைப்பில் எழுந்ததால் அவன் தன்னை அவனது மனைவியென்ற பிரமையில் ஆழ்ந்துவிட்டானென்பதை உணர்ந்து கொண்டாள். அதே கடல், அதே அடர்ந்த தோப்பு, அதே முந்திரி மரங்கள். இவற்றுக்கிடை தான் தோன்றியதை நினைத்து அவன் மனவிகாரத்துக்குக் காரணம் என்ன என்பதைச் சந்தேகமற ஊகித்துக் கொண்டாள். இளமாறன் வாலிபப் பருவத்தில் அதே முந்திரி மரங்களின் இலைகளுக்கிடையில் தோன்றிய மனைவியின் மதிமுகத்தைப் பற்றி கூறியிருந்த கட்டம் அவன் புத்தியை சிதற அடித்திருக்க வேண்டும் என்று நினைத்தாள். ஆனாலும் அவன் மன விகாரத்தையோ,

வெறியையோ, வெறியினால் ஏற்பட்ட விளைவையோ அவள் மனம் எதிர்க்காததை எண்ணி வியப்பையே அடைந்தாள்.

தான் முந்திரிக் கிளைகளை நீக்கியபோது அவன் கனவிலிருப்பவன் போல் முந்திரி மரத்தையே பார்த்துக் கொண்டிருந்ததையோ, பிறகு கூச்சலிட்டு தன்னைத் தாவி அணைத்ததையோ தனது மனம் வெறுக்கவில்லையென்பதையும், அதற்குப் பதில் அவன் அணைப்பிலும் அதரச் சுவைப்பிலும் இன்பத்தையே அடைந்ததையும் எண்ணி உள்ளூர வெட்கமும் கொண்டாள். அப்படி ஏற்பட்ட வெட்கங்கூட அவனை அணைப்பிலிருந்து நீக்க தன்னை உந்தாததை நினைத்து ''அடீ நீலரதி! நீ இத்தனை மோசமானவளா! இந்த வெறியன் செயலை நீக்காத நீ கெட்டவளா?'' என்று உள்ளூர கேள்விகளை எழுப்பிக் கொண்டாள். ஆனால் அந்தக் கேள்விகள் அர்த்தமற்றவை, சந்தர்ப்பத்துக்கு ஒவ்வாதவை என்பதையும் புரிந்து கொண்டாள்.

அவள் கேள்விகளை உடைக்கத்தானோ என்னவோ அந்த வெறியனின் முரட்டுக் கைகள் அவள் முதுகைத் தடவிக் கீழும் இறங்கின. உதடுகள் அவள் உதடுகளை விட்டும் கன்னங்களிலும் பிறகு கழுத்திலும் புதைந்தன. இத்தனைக்கும் அவன் கண்கள் திறக்காததையும் மூடியே இருந்ததையும் மூடிய கண்களிலும் பெரும் சாந்தம் தெரிந்ததையும், அவன் முகமும் அந்த சாந்தத்தைப் பெற்று கனிந்துவிட்டதையும் நீலரதியின் கண்கள் கண்டன. கண்கள் கண்டதும் அவள் கைகளில் ஒன்று எழுந்து அவன் தலைக்குழல்களைத் தடவின. அவன் உடலின் சமீபத்தால், அதன் வெறியால், வேட்கையால், அவள் உறுதி அடியோடு தளர்ந்து உணர்ச்சிகள் நிலைகுலைந்து கொண்டிருந்தன. அவன் கைகளில் அவள் உடலின் மற்ற பகுதிகள் சிறைப்பட்டாலும் கைகள் சுதந்திரமாய் நின்றதால் செயல்படத் தொடங்கின. அவள்



குழலை அவள் விரல்கள் நீக்கிப் பிரித்ததன்றி தலையையும் கழுத்துக்குக் கீழேயும் அவள் கை இழுத்தது.

அவன் தலை புதைந்த அவைகள் விம்மியதால் அவற்றில் பதிந்து அவன் முகம் புரளவே செய்தது. பிறகு அமைதியுடன் நிலைத்து ஏதோ உறங்கும் நிலையை அவன் அடைந்துவிட்டதைக் கண்ட நீலரதியும் குனிந்து அவன் தலைமீது தனது தலையைச் சாய்த்துக் கொண்டாள். வெறிபிடித்த அந்தப் புருஷனுக்கு அமைதி அளிக்க உடலையும் லேசாக வருடினாள். அதுவரை நீட்டமாக நான்றியிருந்த அவன் கால்கள் திடீரெனத் தளர்ச்சியுற்று கீழே இறங்கத் தொடங்கின. அப்படி இறங்கியதால் அவன் தலை அவள் கால்களின் மீது புதைந்தது. அவன் கைகளும் இறங்கி அவள் இடையைச் சுற்றி வளைத்தன. அந்தக் கைகளிலும் வலு குறைந்திருந்ததைக் கண்ட நீலரதி ஒருவேளை அவன் உணர்ச்சிகளின் உந்துதலால் மூர்ச்சையாகி விட்டானோ என்று நினைத்த சமயத்தில் அவன் கைகள் பெரும் வலுப்பெற்று இடையை முறித்து விடுவது போல் பிடித்தன. அவளை பலவந்தமாக மணலில் சாய்க்கவும் தொடங்கின.

அந்த சமயத்தில் நீலரதிக்கு ஓரளவு அச்சம் துளிர்க்கவே, அவள் அவனிடமிருந்து பிரிய தனது உடலை இறுக்கி மீள முயன்றாள். ஆனால் அவன் ராட்சஸப் பிடி அவளை அவனிஷ்டத்துக்கே வளைத்தது. அத்தனையும் அவள் மேலுக்கு எதிர்த்தாளே தவிர, அவனுக்குத் தன்னை பூர்ணமாக அளித்துவிடத் துணிந்தாலும், அவள் உணர்ச்சிகள் கட்டுக்கடங்காமல் போய் விட்டதாலும், அவள் எந்தத் தியாகத்துக்கும் சித்தமாகிவிட்டாள். மணலில் படுக்க வைக்கப்பட்ட அவள் மனோகரச் சிலையென மல்லாந்தே கிடந்தாள்.

அந்த நிலையில் திடீரென சுயநிலை அடைந்த இளமாரன் தனது கண்களைத் திறந்து சுற்றும் முற்றும்

நோக்கிவிட்டு, கீழே மணலில் கிடந்த மோகனாங்கியையும் பார்த்தான். சிந்தனையில் ஏதோ விளக்க ஒளிப் பொறிகள் பறந்ததால் தலையை ஒருமுறை இருபுறமும் ஆட்டிக்கொண்டு திடீரென எழுந்து நீலரதியை உற்று நோக்கினான். "நீலரதி! நீயா?" என்று அவன் உதடுகளிலிருந்து சொற்கள் உதிர்ந்தன.

"ஆம்"—மணலில் கிடந்த வண்ணமே அவள் பதில் சொன்னாள்.

"இங்கு யார் வரச் சொன்னது?" என்று இரண்டாவது கேள்வி எழுந்தது அவனிடமிருந்து.

"நானாகத்தான் வந்தேன்"—நிதானமாக பதில் சொன்னாள் அவள்.

"எதற்காக வந்தாய்?"—குற்றம்சாட்டும் முறையில் கோபத்துடன் கேட்டான் இளமாரன்.

"உங்களைத் தேடி வந்தேன்."

"என்னைத் தேட வேண்டிய அவசியம்?"

"காலையிலிருந்து காணவில்லை உங்களை, நீங்கள் உணவுகூட அருந்தவில்லை."

"நான் என்ன சின்னக் குழந்தையா தொலைந்து போவதற்கு?"

"பெரியவர்கள் தொலைந்து போகக் கூடாதென்ற நியதி இல்லை."

இதைக் கேட்ட அவன் சிந்தனையில் இறங்கி தலையைக் கவிழ்த்துக் கொண்டு நின்றான். பிறகு சொன்னான் தலையை நிமிர்த்தாமலே, "நீலரதி! நீ இந்தத் தோப்புக்கு வராதே!" என்று.

"ஏன்?" என்று அவள் வினவினாள்.

"எழுந்திரு சொல்கிறேன்" என்றான் இளமாரன்.



"இப்படியே இருக்கிறேன், சொல்லுங்கள்" என்றாள்.

அவன் மீண்டும் நீலரதியை நோக்கினான். அவள் மார்பு விம்மி எழுந்து தன்னைக் குற்றம் சாட்டுவது போலிருந்ததைக் கண்டான். அவள் இடை உள்ளடங்கி லேசாக ஒரு புறமாக வளைந்து கிடந்த நிலையில் தன்னைப் பார்த்து அச்சப்படுவதாகத் தோன்றியது. அவனுக்கு பருத்த பருவத் தொடைகள் அசைந்து மீண்டும் வெறியூட்டத் தொடங்கியதால் அவன் கண்களை ஆகாயத்தை நோக்கி உயர்த்தினான். பிறகு எட்டத் தெரிந்த மாளிகையை நோக்கினான்.

அப்படி நோக்கிய வண்ணம் சொன்னான் கடுமையாக "எழுந்திரு நீலரதி" என்று. அவள் எழுந்திருக்காது போகவே அவனே சட்டென்று குனிந்து அவளை வாரியெடுத்து நிறுத்திவிட்டு விலகி நின்று "நீலரதி! இனிமேல் இந்தத் தோப்புக்கு வராதே. இது துரதிர்ஷ்டம் பிடித்தது. இதன் அழகெல்லாம் ஒரு பிரமை" என்று சொன்னான்.

அவனால் மூர்க்கத்தனமாக எழுப்பி நிறுத்தப்பட்ட நீலரதி பக்கத்திலிருந்த முந்திரிக்கிளையைப் பிடித்துக் கொண்டு சற்று இடையைப் பிடித்து ஒய்யாரமாக நின்றாள். முந்திரி மரத்தில் மஞ்சளாகவும் சிவப்பாகவும் பழுத்திருந்த இரண்டு கனிகளில் தனது கன்னமொன்றையும் லேசாகத் தடவினாள், அந்த நிலையில் கேட்டாள். "பிரமையிலும் அதிர்ஷ்டம் ஏன் ஏற்படக்கூடாது? இந்தத் தோப்பின் சரித்திரம் ஏன் மாறக்கூடாது?" என்று.

அவள் அந்தத் தோப்பைப் பற்றியும் தனது பழைய வாழ்க்கையைப் பற்றியும் பூரணமாக ஊகித்துவிட்டதைப் புரிந்து கொண்ட இளமாரன் "நீலரதி! உன் கூரிய அறிவு இந்தத் தோப்பைப் பற்றிய கதையை ஊகித்துவிட்டது. ஆனால் இங்கு வராதே. இங்கு வந்தால்..." என்று சொற்களைப் பாதியில் நிறுத்தினான்.

"வந்தால்?" என்று நீலரதி வினவினாள்.

"சொல்லத் துணிவு வரவில்லை. இங்கு வரும்போது பழைய நினைப்புகளால் என் சிந்தனை சிதறுகிறது. வெறிபிடித்து விடுகிறது எனக்கு. அந்தச் சமயத்தில் பழைய உலகம், பழைய நிகழ்ச்சிகள், விளைவுகள், வேதனைகள், இவற்றுக்கு நான் பலியாகிறேன். அந்தச் சமயங்களில் என் முன்னால் நீ வருவது உனக்கு மிகவும் கெடுதல்" என்று சொன்ன அவன் "நீலரதி! நீ மாளிகைக்குப் போ. நான் பின்னால் வருகிறேன்" என்றான்.

"இருவரும் ஒன்றாகவே செல்வோம்" என்றாள் நீலரதி.

"வேண்டாம் நீலரதி" -இளமாறன் சொற்கள் கெஞ்சின.

"ஏன்?"

"யாராவது நம்மைப் பற்றித் தவறாக நினைப்பார்கள்!"

"எப்படி நினைப்பார்கள்? நீங்கள் ஏற்கெனவே சொன்னபடி வயதானவர். எனக்கு உதயகுமாரனை மாப்பிள்ளையாக நியமித்திருக்கிறீர்கள். அப்படியிருக்க யார் நம்மைத் தவறாக எண்ண முடியும்?" என்று கேட்ட அவள் புன்முறுவல் காட்டினாள்.

அந்த புன்முறுவலில் ஏளனம் இருப்பதை இளமாறன் புரிந்து கொண்டதன்றி அதன் காரணத்தையும் தெரிந்து கொண்டான். தன் மனைவியை நினைத்து நின்ற வெறியில், தான் ஏதாவது தவறு செய்திருக்க முடியுமா என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். "அப்படி ஏதாவது செய்திருந்தால் அது தெரியாமற் செய்த குற்றம். மன்னிக்கத்தக்கது" என்று சமாதானமும் தனக்குச் சொல்லிக்கொண்டான். ஆனால் தன்னையும் மீறி தவறு செய்ய தனது தூய மனம் இடங்கொடுக்காது என்று தீர்மானித்தும் கொண்டான். "அப்படியிருக்க இவள் ஏன்



ஏளனப் புன்முறுவல் செய்கிறாள்?" என்று வினவினான் தன்னுள்.

அவன் உள்ளத்தில் ஓடிய உணர்ச்சிகளை அவள் புரிந்துகொண்டிருக்க வேண்டும். ஆகவே சொன்னாள் "முறைகேடாக எதுவும் நடக்கவில்லை, அஞ்சாதீர்கள். உங்கள் பண்பாடு அத்தகைய அநீதிகளுக்கு இடம் கொடுக்காது."—இதைத் தலைகுனிந்து கால்கட்டை விரலால் மணலைக் கீறிக்கொண்டும் சொன்னாள். சொன்னபோது கலைந்த குழலையும் ஆடையையும் சரிப்படுத்திக்கொண்டு "சரி வாருங்கள். மாலை நெருங்கப் போகிறது. இரவிலாவது சிறிது சாப்பிடுங்கள்" என்று கூறி முன்னால் நடந்தாள்.

இளமாறன் அவளை உடனடியாகத் தொடரவில்லை. சிந்தனையில் திளைத்து நின்றான். தோப்பை ஒருமுறை சுற்றிப் பார்த்தான். பிறகு நடந்து சென்ற நீலரதியை நோக்கினான். தோப்பை அவள் சிறிது கடந்த பின்பு அவள் உடலைத் தழுவிய மாலை நேர மஞ்சள் வெயில் ஏதோ தங்கச்சிலை நடந்து செல்வதைப் போன்ற பிரமையை ஏற்படுத்தியது. கழுத்தின் பின்புறம் தங்கப் பாளம்போல் தெரிந்தது. மாலை வெயில் தலையில் காற்றில் எழுந்தாடிய குழலிழைகளுக்கு மெருகையும் கொடுத்ததால் அவள் தேவதையாகத் தோற்றமளித்தாள்.

நேரம் கழித்தே இளமாறன் அந்தத் தோப்பிலிருந்து கிளம்பினான். கிளம்புமுன் அவள் படுத்திருந்த மணலில் பதிந்திருந்த அவள் உருவத்தைக் கவனித்தான். அந்த மணலின் சித்திரமே கதைகளைச் சொன்னது அவனுக்கு; அதைப் பார்த்துப் பெருமூச்செறிந்த இளமாறன் "இனி இவளிடமிருந்து நான் விலகியே நிற்கவேண்டும். இல்லையேல் அவள் ஆபத்து அதிகரித்து விடும்" என்று தனக்குள் சொல்லிக்கொண்டான்.

அத்தகைய தீர்மானத்துடன் தோப்பை விட்டு வெளியேறிய இளமாறன் மாளிகை முகப்பில் நீலரதியைத்

தடுத்து உதயகுமாரன் நிற்பதையும், இருவருக்கும் ஏதோ உஷ்ணமாக விவாதம் நடப்பதையும் பார்த்து தனது நடையை துரிதப்படுத்தினான். அவர்களை அவன் அடைந்த பின்பும் அந்த இருவரும் உரையாடலை நிறுத்தவில்லை. "நீ எங்கு போயிருந்தாய்? இத்தனை நேரம் என்ன செய்து கொண்டிருந்தாய்?" என்று சீறினான் உதயகுமாரன்.

"என்ன செய்தால் உனக்கென்ன?"—நீலரதி சீறினாள்.

"நீ எனக்கு மனைவியாகப் போகிறவள்" என்றான் உதயகுமாரன்.

"அந்தக் கனவை விட்டுவிடு" என்று சீறிவிட்டுச் சென்றாள் நீலரதி.

அவளைத் தொடர்ந்து வந்த இளமாறன் "உதயகுமாரா! என்ன சண்டை உங்களுக்குள்?" என்று கேட்டான்.

"இத்தனை நேரம் எங்கு போயிருந்தாய் என்று கேட்டேன்."

"நியாயமான கேள்வி. கேட்க உனக்கு உரிமை உண்டு."

"இல்லையென்பது அவள் கருத்து" என்று சொல்லிவிட்டு லேசாக இளமாறனை நோக்கி நகைத்துவிட்டு உதயகுமாரனும் அங்கிருந்து அகன்றான்.

சிக்கல் முற்றுவதை இளமாறன் புரிந்து கொண்டான். ஆகவே, தனது புதுக்கனவை மறக்க முயன்றான். ஆனால் சற்று முன்பு மணலில் கிடந்த மோகினியின் உருவத்தை அவனால் மறக்க முடியவில்லை. அதற்குப் பரிகாரம் தேட தீர்மானித்துக்கொண்ட இளமாறன் அடுத்த நாளிலிருந்து முழுதும் மாறலானான்.

□ □ □

# 34. உனக்கா காதல்?

நீலரதியை முன்னால் அனுப்பிவிட்டு பின்னால் அவளைத் தொடர்ந்து சென்ற இளமாறன், மாளிகை முகப்பில் உதயகுமாரனுக்கும் நீலரதிக்கும் நடந்த உஷ்ணமான சச்சரவை கவனித்து சற்று வேகமாகவே நடந்து உதயகுமாரனை சந்தித்தும் அவர்கள் சச்சரவுக்குக் காரணத்தைப் புரிந்து கொண்டானென்றாலும், அந்தக் காரணத்தை அழித்துவிட அவனுக்கு வழி ஏதும் தெரியவில்லை. உதயகுமாரன் தன்னைப் பார்த்து ஏளனமாக நகைத்துவிட்டுச் சென்றது அவனுக்குப் பெருங்கவலையை அளித்தாலும் அதைப்பற்றி கோபமோ தாபமோ கொள்ளவில்லை இளமாறன். தன்னைப் பார்த்தாலே நடுங்கிக் கொண்டிருந்த உதயகுமாரனுக்கு தன்னைப் பார்த்து நகைக்கும் துணிவு வந்ததற்கு அவனுக்கு நீலரதியின்மீது உள்ளூர இருந்த காதலே காரணம் என்று எண்ணினான். அவர்கள் இருவரையும் ஒன்றுபட வைத்தால் தனது கடமைகளில் ஒன்று நிறைவேறுமென்று அவன் நினைத்தாலும், அதை நிறைவேற்றுவதற்கு அவசியமான நீலரதியின் போக்கு தடையாயிருப்பதை அவன் எண்ணி சஞ்சலம் அடைந்ததன்றி, அத்தடைக்கு தானும் ஒரு முகாந்திரம் என்பதையும் உள்ளூர நினைத்து நெஞ்சம் புழுங்கினான். எப்படியும் அந்த இருவரையும் இணைத்துவிடுவது என்ற முடிவுக்கு வந்து தனது போக்கை அடியோடு மாற்றிக் கொண்டதால், நேராக மாளிகைக்குப் பின்னாலிருந்த விடுதிக்குச் செல்லவில்லை இளமாறன். அதற்கு பதிலாக மாளிகைக்கு எதிர்திக்கிலிருந்த கடலை நோக்கிச் சென்று அதன் கரையிலிருந்த பாறையொன்றில் அமர்ந்து கடலை நோக்கினான்.

அந்திக் கடல் அவனைக் கண்டு பேரிரைச்சலாக இரையும் பிரமை அவனுக்கு ஏற்பட்டது. அலைகள்

மடிந்து தரையில் பாய்ந்து எழுப்பிய சத்தம் தன்னைப் பார்த்து நகைக்கும் ஒலியாகவே அவன் நினைத்தான். அவ்வப்பொழுது தூரத்தில் மலைச்சரிவைப்போல் எழுந்த அலைகள் 'இதே பாறையில் நீ எத்தனை நாள் உன் மனைவியுடன் உட்கார்ந்திருக்கிறாய்? அதையெல்லாம் மறந்து விட்டாயா?' என்று குற்றம் சாட்டுவது போலிருந்தது அவனுக்கு. பெரிய அலையொன்று அவன் உட்கார்ந்திருந்த பாறையில் மோதி நீர்த் துளிகளை அவன்மீது வாரி இறைத்தபோது பழைய நினைவுகள் அவனுக்கு உண்டாகவே செய்தன. தனது மனைவியுடன் இதே பாறையில் உட்கார்ந்திருந்த போதும் இந்த அலைகள் தன்மீதும் தனது மனைவி மீதும் நீரை வாரி இறைத்த நிகழ்ச்சியை நினைத்துப் பெருமூச்சு விட்டான் இளமாறன். அந்த நினைவுகளின் விளைவாக நேரம் போவதை அடியோடு மறந்து அங்கேயே உட்கார்ந்தும் விட்டான்.

இரவு மூண்டும் இளமாறன் வராததால் விடுதியின் வாசலிலேயே நின்றிருந்தாள் நீலரதி. அப்பொழுது விடுதிக்கு வந்த உதயகுமாரனை நோக்கி "அவர் எங்கே?" என்று வினவினாள்.

"யார்?"—உதயகுமாரன் கேட்டான் சினத்துடன்.

"தலைவர்" என்றாள் நீலரதி.

"அது தலைவிக்குத்தான் தெரியவேண்டும்" என்று முரட்டுத்தனமாகக் கூறிவிட்டு உள்ளே சென்றுவிட்டான் உதயகுமாரன்.

உதயகுமாரன் சொற்களால் நீலரதி இன்பம் துன்பம் இரண்டையுமே அடைந்தாள். இளமாறனைத் தலைவனென்றும் தன்னைத் தலைவியென்றும் உதயகுமாரன் அழைத்தது அவளுக்கு இன்பமாகவே இருந்தது. அவன் சினத்துக்குக் காரணம் தன்னிடம் மையலாயிருந்தால் என்ன செய்வது என்ற நினைப்பினால் துன்பமும் எய்தினாள். "உதயகுமாரா! நீ அவரைவிட வாலிபன். எனக்கு



ஏற்ற வயதினன். ஆனால் உனக்கு அளிக்க என்னிடம் இதயமில்லையே" என்று அவனுக்குச் சொல்ல வேண்டிய பதிலை தனக்குள் சொல்லிக் கொண்டாள். இத்தனை நாட்களாக தன்னிடம் காட்டாத காதலை இவன் இப்பொழுது திடீரென காட்டுவதற்கு என்ன காரணம் என்று நினைத்து விடை காணாமல் தவித்தாள்.

அத்துன்பத்திலும் அன்றைய நிகழ்ச்சிகள் அவள் மனக் கண் முன்பு எழுந்து அவள் நெஞ்சத்தில் இன்ப அலைகளை அள்ளிக் கொட்டின. அந்த முரடன் கைகள் பிடித்த இடங்கள் கன்றிச் சிவந்ததால் ஏற்பட்ட இன்ப வேதனை தனக்கு மேலும் வேண்டியிருந்ததை எண்ணி வியந்தாள் நீலரதி. "அப்பா! எப்படி என்னை இறுக்கினார்! இடையைப் பிடித்து இறுக்கி தலையை எங்கு வைத்துக் கொண்டார்! என்ன சேஷ்டை?" என்று கேட்டு வேதனைத்திலும் சுகத்தைக் காணவே செய்தாள். "என்னை மணலில் தள்ள என்ன துணிவு அவருக்கு?" என்றும் உள்ளூர விடையெழுப்பி "அப்புறம் ஏன் மாறிவிட்டார்! பாவம் உத்தமர்!" என்று இளமாறன் உத்தமக் குணத்தைப் பாராட்டினாலும் அப்படி உத்தமனாயிருந்ததை அவள் விரும்பவில்லையென்பதை மனம் சுட்டிக் காட்டியது.

இப்படி அவள் மனதில் எழுந்து அவளை இன்ப வதை செய்து கொண்டிருந்த சமயத்தில்தான் இளமாறன் விடுதிக்கு வந்தான். வாயிலிலேயே நின்றிருந்த நீலரதியைப் பார்த்து "ஏன் இங்கேயே நிற்கிறாய்?" என்று வினவினான். அப்படி வினவியபோது அவள் கண்களை சந்திக்காமல் நிலத்திலேயே தனது கண்களை ஓட்டி நின்றான்.

தலை தாழ்த்தி குற்றவாளியாக நின்ற அந்த மகா வீரனைப் பார்த்ததும் அவள் துன்பமும் பெருமிதமும் ஒருங்கே அடைந்தாள்! யாருக்கும் தலை சாய்க்காத ஒரு மகாவீரன் தன் முன்பு தலைதாழ்த்தி நிற்பதைக் கண்டு துன்பமடைந்தாலும் அதற்கு தான் காரணமென்றதால்

பெருமிதமும் அடைந்தாள். அதனால் மெல்லவே விடை பகர்ந்தாள்: ''உங்களை எதிர்பார்த்துத்தான் நிற்கிறேன்'' என்று.

இளமாரன் தலை நிமிராமலே ''என்னை எதிர் பார்த்தா?'' என்று வினவினான் வியப்புடன்.

''ஆம்'' என்றாள் நீலரதி. புன்முறுவலும் காட்டினாள்.

''எதற்கு என்னை எதிர்பார்க்க வேண்டும்?'' —ஏது மறியாதது போல் கேட்டான் இளமாரன்.

''எதற்காக?''

''ஆம்''

''நேரம் எத்தனை ஆகிறது?''

''எத்தனை ஆனால் என்ன?''

''உணவருந்த வேண்டாமா?''

''பசியில்லை''

''காலையில்கூட உணவருந்தவில்லை. இப்பொழுதும் பசிக்கவில்லையா?''

''இல்லை''

''காரணம்?''

''தெரியவில்லை''

இதைக்கூறிய இளமாரன் நீலரதியை நோக்கி ''தள்ளி நில். நான் உள்ளே செல்ல வேண்டும்'' என்றான்.

அவள் விலகாமல் வழியை அடைத்தே நின்றாள். ''இத்தனை நேரம் எங்கே போயிருந்தீர்கள்?'' என்று கேட்டாள்.

''கடற்கரைக்கு'' என்று உண்மையைச் சொன்னான்.



''எதற்கு?'' —அவள் சிந்தனை மிகுந்த உணர்ச்சி ஒலித்த குரலில் கேட்டாள்.

''கனவு காண'' என்றான் இளமாரன்.

''கனவு எப்படி?'' என்று அவள் கேட்டாள்.

''நனவைவிடச் சிறந்தது'' என்று கூறிய இளமாரன் வழியை அடைத்து நின்ற அவளைத் தனது கையால் ஒதுக்கி விட்டு உள்ளே சென்றான்.

கூடத்தில் சத்திரக்காரனும் உதயகுமாரனும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்பதைக் கண்டு அவர்களுடன் எதும் பேசாமல் உள்ளே சென்றான். தான் தங்கியிருந்த அறைக்குள் சென்று உடைகளை மாற்றிக் கொண்டு மீண்டும் வெளியே செல்ல முயன்ற சமயத்தில் நீலரதி அவனை மறித்து நின்று ''அதோ சமையலறை'' என்று பின் கட்டைச் சுட்டிக் காட்டினாள்.

அவள் சொற்களில் அதிகாரமிருந்ததைக் கவனித்த இளமாரன் பின்கட்டை நாடி நடந்தான். அவளே அவனுக்கு உணவு பரிமாறினாள். ''ஏன் நீலரதி! இது உன் வேலையல்லவே. பணிமக்கள் இருக்கிறார்களே'' என்று ஆட்சேபித்தான் இளமாரன்.

''உங்களுக்கு நான்தான் பணிமகள். பேசாமல் சாப்பிடுங்கள். உங்களுக்குப் பிடித்த விருந்து. எகிப்து நாட்டு உணவு. உங்களுக்காக நானே சித்தம் செய்திருக்கிறேன்'' என்று கூறி அவனுக்கு உணவு பரிமாறினாள், பக்கத்தில் உட்கார்ந்து.

உணவருந்தி முடிந்ததும் மேற்கொண்டு பேச்சை வளர்த்தாமல் அவன் கூடத்துக்கு வந்து சிறிது நேரம் அங்கிருந்த மஞ்சத்தில் உட்கார்ந்தான். கூடத்தின் இராக்கால சிறு விளக்கு அளித்த மங்கலான வெளிச்சத்தில் கூடத்துச் சுவரில் மாட்டப்பட்டிருந்த குறுவாளின் அலங்காரப் பிடி பளபளத்தது. அதை நீண்ட நேரம் உற்றுப் பார்த்துக்

கொண்டே இருந்த இளமாறன் களைப்பின் மிகுதியால் கண்களை மூடினான்.

அவன் கண் விழித்தபோது நடுநிசி தாண்டிவிட்டதை உணர்ந்தான். எத்தனை நேரம் இருக்குமென்பதை திட்டமாக அறிய வாயிலுக்குச் சென்று ஆகாயத்திலிருந்த விண் மீன்களையும் பிறைச் சந்திரனையும் பார்த்தான். ''நடு நிசி தாண்டி இரண்டு நாழிகைக்கு மேல் ஆகிவிட்டது'' என்று சொல்லிக்கொண்டான் இளமாறன். அவன் காலடியிலிருந்த மணல் பிறைச் சந்திரனின் சாதாரண வெளிச்சத்திலும் மிக வெண்மையாகத் தெரிந்தது. எட்ட இருந்த இரண்டொரு பெரிய மரங்களின் நிழல்கூட ஏதோ சிந்தனைகளைக் கிளப்பியது அவனுக்கு. சிந்தித்துக் கொண்டே உலாவிய இளமாறன் தனது மன உளைச்சலுக்கெல்லாம் காரணத்தைப் புரிந்து கொண்டான். தனக்கு நீலரதி மீது பிறந்திருக்கும் காதல்தான் இத்தனை விபரீதங்களுக்கும் காரணம் என்பதை உணர்ந்ததால் சற்று பெரிதாகவே நகைத்தான். ''இளமாறா! அறிவற்றவனே! உனக்குக் காதலா! உன் வயதென்ன? அவள் வயதென்ன?'' என்று சற்று இரைந்தே கேட்டுக் கொண்டான். ஆனால் அந்தக் கேள்விகள் தனது வேட்கையைக் குறைக்காததைக் கவனித்து பெரிதாக நகைத்தான் ஒருமுறை. அந்த நகைப் பொலியைச் சற்று எட்ட இருந்த மலைப்பாறைகள் எதிரொலி செய்தன. ''முட்டாள்! முட்டாள்! உனக்குத் காதலேது? பழி தீர்ப்பதற்குத்தானே வாழ்கிறாய்?'' என்று எதிரொலிகள் நகைப்பது போலிருந்தன அவனுக்கு.

ஆனால் எதையும் மனதில் வாங்கும் வன்மையை இழந்திருந்த இளமாறன் சிந்தை மிகுந்தனவாய் உலாவிக் கொண்டே மீண்டும் தோப்பை நோக்கிச் சென்று உள்ளே புகுந்தான். அந்தத் தோப்பின் அடர்ந்த பகுதியில் இருவர் பேசிக் கொண்டிருந்ததால் சற்று ஒதுங்கி நின்றான். அவர்களில் ஒருவர் சாந்தானந்தர் என்று உணர்ந்ததும் காதைத்தீட்டிக் கொண்டான்.



''நிச்சயமாகத் தெரியுமா? அவன்தானா?'' என்று கேட்டார் சாந்தானந்தர்.

''சந்தேகமில்லை'' என்றான் காஞ்சி வர்மன்.

''தெரிந்தும் அவனை ஏன் சிறை செய்து அனுப்பவில்லை தலைநகருக்கு?'' என்று சாந்தானந்தர் கேட்டார்.

''காரணம் இருக்கிறது'' என்றான் காஞ்சி வர்மன்.

''என்ன காரணம்?''—சாந்தானந்தர் கேட்டார் சினம் மிகுந்த குரலில்.

காரணத்தை விவரித்தான் காஞ்சிவர்மன். சாந்தானந்தர் அதிர்ச்சியுற்று நின்றார்.

□ □ □

# 35. இரவின் கதை

இளமாறனை சிறை செய்யாத காரணத்தை காஞ்சி வர்மன் தெரிவித்ததும், எந்த அநீதிக்கும் துணிந்த சாந்தானந்தரே அசைந்துவிட்டதையும் "அப்படியா!" என்று அவர் ஆச்சரியக்குரல் கொடுத்ததையும் கேட்ட இளமாறன் தனது உதடுகளில் புன்முறுவலொன்றைப் படரவிட்டுக் கொண்டான். காஞ்சி வர்மன் தன்னை அடையாளம் கண்டு கொண்டு விட்டாலும் எதுமறியாத பூனையைப் போல் நடப்பதையும் சிந்தித்து "இவன் பழைய கபடம் சிறிதும் குறையவில்லை" என்று தனக்குள் சொல்லியும் கொண்டான்.

காஞ்சிவர்மன் சாந்தானந்தரிடம் மேலும் சொன்னான்: "ஆம் சாந்தானந்தரே! இளமாறன் என்ற ஒருவனையும் அவனுடன் வரும் நீலரதி என்ற பெண்ணையும் சிறைசெய்து இளமாறனைத் தன்னிடமும், நீலரதியை மன்னரிடமும் அனுப்பும்படி முதல் மந்திரியிடமிருந்து செய்தி வந்ததும், நான் என் பகுதி வீரர்களை எச்சரிக்கை செய்து வைத்திருந்தேன். பாம்பிடம் செல்லும் தவளையைப் போல் இளமாறன் கடலூருக்கு நேராக வந்து என் வீரர்களிடம் சிக்கிக் கொண்டான். அவனை உடனடியாக சிறை செய்ய முயன்று அவன் தப்பி விட்டால் எனது நிலைமை மிகவும் கேவலமாகி விடும். தவிர அவன் பெயர் மாரனென்றும், அப்பெண்ணின் பெயர் ரதி என்றும் பாதிப் பாதியாக மாற்றி, என்னால் வளர்க்கப்பட்ட உதயகுமாரனே சொன்னான். அதை நம்பியதுபோல பாசாங்கு செய்து அவர்களை இங்கு அழைத்து வந்தேன். ஆனால் அவர்களை சேர்த்து உறையூருக்கு அனுப்புவதில் கஷ்டங்கள் இருக்கின்றன. நமது படைத் தலைவரையும்



30575

பல வீரர்களையும் சமாளித்து [illegible] இளமாறன் வீரனையும் அவனுடனிருப்பவர்களையும் அனுப்பினால், காஞ்சிக்கு கடுக்காய் கொடுத்து அவன் [illegible] மன்னரும் முதல் மந்திரியும் என் தலையைத் திருப்பி விடுவார்கள். எனது இந்தப் பெரிய அரண்மனை, நிலபுலன்கள் எல்லாமே பறிமுதல் செய்யப்படும்..."

இங்கு சிறிது நிதானித்த காஞ்சிவர்மன், "சாந்தானந்தரே! நீர் நாளையே புறப்படும். இன்னும் ஒரு வாரத்திற்குள் நான் இவர்களை உறையூர் அனுப்பி வைக்கிறேன். ஆனால் இந்த நீலரதி..." என்றான் மெதுவாக. அர்த்தபுஷ்டியுடன் சாந்தானந்தரைப் பார்க்கவும் செய்தான்.

"நீலரதிக்கு என்ன?" என்று சாந்தானந்தர் கேட்டார் சந்தேகத்துடன்.

"அழகாயிருக்கிறாள்."

"அது தெரிந்ததுதான்."

"உமக்குத் தெரியாதது ஒன்றிருக்கிறது"

"என்ன?"

"அவளை எனக்குப் பிடித்திருக்கிறது."

சாந்தானந்தர் அசந்து போனார். "காஞ்சிவர்மா! மிகவும் அபாயமான பாதையில் போகாதே" என்று எச்சரிக்கவும் செய்தார்.

காஞ்சி வர்மன் நகைத்தான். "புராணம் படித்திருக்கிறீரா, சாந்தானந்தரே?" என்று வினவினான்.

"புராணம் வேறா உனக்கு?" என்று இளக்காரமாகப் பேசினார் சாந்தானந்தர்.

"புராணத்தில் ராமனுக்கு சபரி பழங்களை, தான் ருசி பார்த்த பிறகு கொடுத்ததாக இருக்கிறது. அதைத் தவறென்று யாரும் சொல்லவில்லை!" என்று காஞ்சி வர்மனை மிகுந்த அச்சத்துடன் நோக்கினார் சாந்தானந்தர்.

''சாந்தானந்தரே! பௌர்ணமிக்கு இன்னும் எத்தனை நாள் இருக்கிறது?''

''ஐந்து நாட்கள். எதற்காகக் கேட்கிறாய்?''

''இந்த தோப்பில் பௌர்ணமியன்று ஏதாவது ரசமான நிகழ்ச்சிகள் ஏற்படும். என் வெற்றிக்கு பௌர்ணமி சிறந்த நாள்.''

''நீ சொல்வது புரியவில்லை.''

''பல பௌர்ணமிகளுக்கு முன்னால் நடந்த ஒரு நிகழ்ச்சி இந்த அரண்மனையையும் நிலபுலன்களையும் கொடுத்து, என் எதிரியைத்தொலைத்து...'' என்ற காஞ்சி வர்மன் சிறிது சிந்தித்தான் மீண்டும்.

''அதனால்?''-சாந்தானந்தர் அச்சத்துடன் கேட்டார்.

''அந்த நாடகம் திரும்ப ஆடப்படும். அதில் இம்முறையும் வெற்றிதான்'' என்ற காஞ்சி வர்மன் மீண்டும் சிந்தனையில் ஆழ்ந்து ''வாருங்கள் நேரமாகிறது, நாளை காலையில் புறப்படுகிறீர்கள்'' என்றான்.

''முதல் மந்திரி இவனை ஏன் அழைத்து வரவில்லை என்று கேட்டால்?'' என்று வினா எழுப்பினார் பழைய துறவி சாந்தானந்தர்.

''சிறை செய்யாமலே நான் அழைத்து வருவதாகச் சொல்லும்'' என்றான் காஞ்சிவர்மன்.

''இவனில்லாமல் நான் போனால் முதல் மந்திரி என்னை சிறையில் போட்டு சித்திரவதை செய்துவிடுவார். அவர் மகன் இறந்த செய்தியை நான் கொண்டு சென்றதுமே என்னை மாய்த்திருப்பார். நான் இவனை அழைத்து வருவதாகச் சொன்னதால்தான் வெளியே விட்டார்'' என்றார் சாந்தானந்தர்.

''இவனை சிறை செய்தாகிவிட்டது. நான் அழைத்து வருகிறேன் என்று சிறிது மாற்றிச் சொல்லும். முதல் மந்திரி புரிந்து கொள்வார்'' என்ற காஞ்சி வர்மன் தனது மாளிகையை நோக்கி நடந்தான். சாந்தானந்தர் அவனைத் தொடர்ந்தார், பூனைக்குட்டிபோல்.



அவர்கள் சென்றதும் மறைவிலிருந்து வெளியே வந்த இளமாறன் சற்று தோப்பிலேயே உலவினான். பிறகு கடற்புறம் சென்று அங்கிருந்த பாறையில் படுத்து ஆகாயத்தை நோக்கிக் கொண்டே இருந்தவன் கண்களை மூடினான். பொழுது புலர்ந்ததும் கடலலைகளின் அரவத்தாலும் கரையில் நடமாடிய கடல் நாரைகளின் அபசப்தத்தாலும் கண்விழித்த இளமாறன் நேரம் அதிகமாக ஓடி விட்டதை உணர்ந்தான். பந்துபோல் சிவப்பாக எழுந்த கதிரவனை நோக்கி அந்த அழகில் மயங்கியவன் கடல் நீரைப் பார்த்ததும் உணர்ச்சி மிகுதியால் சட்டென்று எழுந்தான். தூரத்தே கடல் நீரில் நீலரதி நனைந்து கொண்டிருந்ததைக் கவனித்ததும் பாறையிலேயே உட்கார்ந்து விட்டான்.

கதிரவன் நீலரதியின் அழகிய மேனியை இன்னும் அழகாக அடித்து தனது செல்விய கிரணங்களால் அவளை செந்தாமரையாக மாற்றியிருந்தான். கடலில் தாமரை முளைக்காது என்ற நினைப்புக்கு ஒரு மாற்றத்தையும் கற்பித்த கதிரவனை மனத்துள் பாராட்டினான் இளமாறன். நீரில் துளைந்த நீலரதி தனது உடலைத் தேய்த்துக் கொள்ள சற்று ஆடையை பிரித்துப்பிரித்து புனைந்த போது வெளிப்பட்ட அழகிடங்களை ஆராய்ந்த இளமாறனின் உணர்ச்சிகள் கட்டை மீறிக்கொண்டிருந்தன. ''இப்பேர்ப்பட்ட அழகை ருசி பார்ப்பதாகச் சொன்ன காஞ்சி வர்மனை இப்பொழுதே கொன்று விட்டாலென்ன?'' என்று நினைத்தான் ஒரு விநாடி.

இந்த எண்ணங்களில் அவன் திளைத்திருக்கையில் நீரிலிருந்து எழுந்து பாறையை நோக்கி நடந்து வந்த நீலரதி ''என்ன திருப்பள்ளி எழுச்சி ஆகிவிட்டதா?'' என்று கேட்டு நகைத்தாள்.

ஈர உடையுடன் அவள் சொட்டச்சொட்ட நின்றிருப்பதைப் பார்த்த இளமாறன் இதயமும் சித்தமும் வெகு வேகமாக ஓடின. அவள் அழகிய உடலில் நன்றாக ஒட்டியிருந்த சேலைக்கு அவள் உடலை மறைப்பதைவிட அவள் அழகுகளை விளக்கிக் காட்டும் அலுவல் அதிகமாயிருந்ததைக் கவனித்த இளமாறன், அவளை அப்படியே தாவித் தூக்கிக்கொண்டு கடலில் அமிழ்ந்து விட்டாலென்ன என்று நினைத்தான். நீருக்குள் அவளைத் தழுவி னுழாவினால் எப்படியிருக்கும் என்று கற்பனையை ஓட விட்டான். ஆனால் அவளுக்கும் உதயகுமாரனுக்கும் தனிப்பட்ட சிறந்த வாழ்வை அளிக்க எண்ணியதால் தனது சபலத்தை அடக்கிக் கொண்டான்.

அவனெதிரே நின்ற நீலரதி அவன் தன்னை ஆராய்ந்ததையும், பிறகு சிந்தனையில் இறங்கி விட்டதையும் பார்த்து உடையைப் பிழிய பக்கத்து பாறையின் மறைவுக்குச் சென்றாள். சிறிது நேரத்தில் வேறு சேலையை மாற்றிக்கொண்டு பிழிந்த சேலையை கையில் பிடித்துக் கொண்டு வந்த நீலரதியைப் பார்த்து ''நீலரதி! நீ விடுதிக்குப் போ'' என்றான் இளமாறன்.

''நீங்கள்?'' என்று அவள் கேட்டாள்.

''நான் இன்னும் சிறிது நேரத்தில் வருகிறேன்'' என்று கூறினான். அவள் சென்றதும் காஞ்சி வர்மன் சதியை எப்படி உடைக்கலாம் என்று நினைத்து அதற்கு ஒரு திட்டமும் தீட்டிக்கொண்டான், அந்தத் திட்டத்துடன் விடுதிக்கு அவன் நேராகத் திரும்பிய சமயத்தில் உதயகுமாரன் புரவி சேணமிட்டு வாயிலில் நின்றிருந்தது. சற்று நேரத்திற்கெல்லாம் உதயகுமாரனும் வெளியே வரவே ''உதயகுமாரா! எங்கே இத்தனை காலையில் பயணம்?'' என்று இளமாறன் வினவினான்.

''உறையூருக்கு'' என்றான் உதயகுமாரன்.



''உறையூருக்கா!'' என்று வியப்புடன் கேட்டான், இளமாறன் கவலையுடன்.

''ஆம்.''

''என்ன வேலை?''

''காஞ்சி வர்மன் ஒரு கடிதம் கொடுத்திருக்கிறார்.''

''யாரிடம் சேர்க்க ''

''அவர் நண்பர் ஒருவரிடம் சேர்க்க.'' -உதயகுமரனின் குரலில் அலட்சியம் இருந்தது.

அவன் போக்கு அடியோடு புரியவில்லை இளமாறனுக்கு. ''என் உத்தரவின்றி நீ போக முடியாது'' என்றான் இளமாறன், கண்டிப்புடன்.

''யார் உத்தரவுக்கும் நான் கீழ்ப்படிய அவசியமில்லை'' என்று சொன்ன உதயகுமாரன், புரவிமீது தாவி அதைத் தென்புற நெடுஞ்சாலையை நோக்கி நடத்தவிட்டான். புரவி கிளம்பியதும் நீலரதி வெளியே ஓடிவந்து 'உதயகுமாரா, நில் நில்! பைத்தியமே'' என்று கூவினாள்.

புரவியின் கடிவாளத்தைச் சற்றே இழுத்து புரவியை நிறுத்தி திரும்பிப் பார்த்த உதயகுமாரன் பெரிதாக நகைத்தான் பைத்தியம் போலவே. ''அவரிடம் சொல்'' என்று குதிரைச் சாட்டையால் இளமாறனைச் சுட்டிக் காட்டி விட்டு புரவியைத் தட்டிப் பறக்கவிட்டான்.

''அவன் ஏன் ஓடுகிறான்?'' என்று கேட்டான் இளமாறன், எதும் புரியாமல்.

''உள்ளே வாருங்கள் சொல்கிறேன்'' என்றாள் நீலரதி.

''நான் அவனைப் பிடித்து வருகிறேன்'' என்று புரவிக் கொட்டடியை நோக்கி நடக்க முற்பட்டான்.

''வேண்டாம், நில்லுங்கள்'' என்று நீலரதி அவனைத் தடுத்தாள்.

''ஏன்?''

''அவன் இஷ்டப்படி போகட்டும்'' —அவள் முகத்தில் ஏதோ ஒருவித உணர்ச்சி இருந்ததை கவனித்த இளமாரன் ''எனக்கு ஏதும் புரியவில்லை நீலரதி'' என்றான்.

நீலரதி இளமாரனை வருத்தத்துடன் நோக்கினாள். ''அது நேற்று இரவின் கதை. உள்ளே வாருங்கள் சொல்கிறேன்'' என்றாள். உள்ளே இருவரும் சென்றதும் இளமாரனைத் தனியாக அழைத்துப் போன நீலரதி ''அவன் என்னைக் காதலிக்கிறான்'' என்று சொன்னாள்; துக்கம் அவள் தொண்டையை அடைத்தது.

□ □ □

# 36. அவள் கனவு

வாழ்வில் முதல் முதலாக அதிர்ச்சியுற்று நின்றான் இளமாரன். தன்னைக் கண்டாலே நடுங்கிக் கொண்டிருந்த உதயகுமாரன் ''யார் உத்தரவுக்கும் நான் கீழ்ப்படிய அவசியமில்லை'' என்று அசட்டையுடன் கூறிவிட்டு உறையூருக்கு புரவியில் புறப்பட்டு விட்டதையும், அவனைத் தடுக்க முயன்ற நீலரதியே அவனைத் தடுக்க வேண்டாமென்று கூறிவிட்டதையும், பிறகு இரவின் கதையை சொல்வதாக நீலரதி கூறியதையும் கேட்டு ஏதும் விளங்காமல் நின்றுவிட்ட இளமாரனை ''உள்ளே வாருங்கள்'' என்று நீலரதி அழைத்தாள். அந்த அழைப்பை ஏற்று விடுதிக்குள் நுழைந்த இளமாரனை விடுதியின் இரண்டாவது கட்டுக்கு அழைத்துச் சென்ற நீலரதி ''அவன் என்னைக் காதலிக்கிறான்'' என்று சொன்னதும் மற்றொரு பேரிடி தனது தலையில் இறங்கியது போல் தெரிந்தது இளமாரனுக்கு.

அத்தகைய அதிர்ச்சி அர்த்தமற்றதென்பது இளமாரனுக்குப் புரியாமலில்லை. உதயகுமாரனுக்கும் நீலரதிக்கும் ஆதி முதல் முடிச்சுப் போட்டு, எப்படியாவது அவர்களிருவருக்கும் நல்வாழ்வு அளிக்க முயன்று வந்த தனக்கு, உதயகுமாரன் நீலரதியைக் காதலிக்கும் செய்தி மகிழ்ச்சியைத் தானே தர வேண்டும். அதற்குப் பதில் அதிர்ச்சியும் துன்பமும் இதயத்தில் துள்ளுவானேன் என்று அலசமுற்பட்ட இளமாரன் உண்மையைப் புரிந்து கொண்டாலும் ''சரி! சொல் நீலரதி, நேற்றிரவு என்ன நடந்தது?'' என்று வினவினான்.

நீலரதி தலையைக் குனிந்து மௌனம் சாதித்தாள் சில விநாடிகள். பிறகு மெதுவாகப் பேசினாள். ''வீரரே? உதயகுமாரனுக்கு அத்தகைய எண்ணமிருக்குமென்று

நான் சொப்பனத்திலும் நினைக்கவில்லை. என்னைப் பற்றி எப்பொழுதும் அவன் கடிந்துதான் பேசியிருக்கிறானே தவிர கனிந்து ஒரு வார்த்தைகூடப் பேசியதில்லை. அதற்குக் காரணம் அவனுக்கு ஏற்பட்ட பொறாமை என்று நேற்றிரவுதான் தெரிந்தது எனக்கு. நீங்கள் திரும்பி வராததால் உறக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்தேன். உதயகுமாரன் முகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டு கூடத்துத் தூணில் சாய்ந்து கொண்டிருந்தான். ''உதயகுமாரா! நீ ஏன் உறங்கவில்லை?'' என்று கேட்டேன்.

''நீ மட்டும் ஏன் உறங்கவில்லை?'' என்று உதயகுமாரன் பதில் கேள்வியை வீசினான்.

''உறக்கம் வரவில்லை''—இதை மெதுவாகச் சொன்னேன். ''எனக்கு மட்டும் உறக்கம் வருவானேன்?'' என்று கிறுக்குத்தனமாகக் கேட்டான். அவன் அப்படிக் கேட்டது விசித்திரமாயிருந்தது எனக்கு. சிறிது நேரம் கழித்து உதயகுமாரன் எழுந்து நான் படுத்திருந்த இடத்துக்கு வந்து என்னருகில் உட்கார்ந்தான். அப்பொழுது நடுநிசி தாண்டிவிட்டது. நீண்ட நேரம் மௌனமாயிருந்த உதயகுமாரன் மெல்ல ''நீலரதி!'' என்று பெயரைச் சொல்லி அழைத்தான். அவன் குரல் ஏதோ புதிய முறையில் ஒலிப்பதாக எனக்குத் தோன்றவே நான் எழுந்து உட்கார்ந்து அவனை வியப்புடன் பார்த்தேன்.

''நீலரதி! உன்னை நான் இப்படி அழைப்பது வியப்பாக இல்லை?'' என்று கேட்டான்.

''இதில் வியப்பென்ன?'' என்று நான் கேட்டேன்.

''இப்படி நான் என்றாவது அழைத்ததுண்டா உன்னை.''

''இல்லை.''

''இன்று ஏன் அழைக்கிறேன்?''



''புரியவில்லை''

''இத்தனை நாள் உன்னிடம் எத்தனை கடுமையாக நடந்து கொண்டிருக்கிறேன்.''

''அதனாலென்ன?''

''காரணம் தெரியுமா?''

''என்னைக் கண்டால் பிடிக்கவில்லை.''

''அதல்ல காரணம் நீலரதி. என் காதல்தான் காரணம்—இதைச் சொன்ன உதயகுமாரன் என்னை நெருங்க முற்பட்டான்'' என்ற நீலரதி சற்று சோகப் பெருமூச்சு விட்டாள். பிறகு மேலும் சொன்னாள்: ''உதயகுமாரன் நெருங்க முற்பட்டதும் நான் சற்று தள்ளி உட்கார முயன்றேன். அவன் மேலும் நெருங்க முற்படவில்லை. உட்கார்ந்த இடத்திலிருந்தே பேசினான். ''நீலரதி! நமது திருமணத்தை இளமாறன் விரும்புகிறார். அவர் மீதிருந்த வெறுப்பின் காரணமாக நான் பிடிகொடுக்கவில்லை. உன்னிடமிருந்து விலகி நின்றேன். அவர் உன்னிடம் சரசம் செய்ய முற்பட்டபோதெல்லாம் நான் நரகவேதனை அடைந்தேன். ஆனால் நீயும் என்னை வெறுத்ததால் நான் என் உள்ளக் குமுறல்களை அடக்கிக் கொண்டேன். இனி அடக்க முடியாததால் சொல்கிறேன். உன்னை இழந்து நான் வாழ முடியாது. என்ன சொல்கிறாய்?'' என்று கேட்டான். நான் அதிர்ச்சியடைந்தேன். ''உதயகுமாரா! இப்படியெல்லாம் பேசாதே. நான் உன்னை என் சொந்த சகோதரன் போல் நினைக்கிறேன்!'' என்று சொன்னேன். அப்பொழுது எழுந்து போனவன் காலையில்தான் திரும்பினான். தனது துணிமணிகளைக் கட்டிப் பயணப்பட்டான். நான் தடுக்க முயன்றேன். அவன் கேட்கவில்லை.''—இந்தக் கதையைச் சொல்லி முடித்த நீலரதி மேற்கொண்டு பேச முடியாமல் இளமாறன் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

இளமாறனின் இடக் கை அவளைச் சுற்றிக்கொண்டது. முதுகையும் தடவியது ஆதரவளிக்க.

அந்த நிலையில் அவன் எண்ணங்கள் ஓடின மிகத்துரிதமாக. நீலரதி மீது தனக்கு தீராக்காதல் ஏற்பட்டிருப்பது அவனுக்கு சந்தேகமறத் தெரிந்தது. அந்தக் காதலும் புதிதாக ஏற்பட்டதல்லவென்பது அவனுக்குப் புரிந்திருந்தது. புகாரின் வாணகிரியில் என்று அவளை சந்தித்தானோ, அவளைத் துறவிகளிடமிருந்து காப்பாற்றத் தீர்மானித்தானோ அன்றே அவள் தன் மனத்தில் புகுந்து கொண்டாள் என்பதை அவன் சந்தேகமற உணர்ந்திருந்தான். அவளை, தான் உதயகுமாரனுக்கு மணமுடிக்கப் போவதாகச் செய்த ஏற்பாடெல்லாம் அந்தக் காதலை உதறுவதற்காகத்தான் என்பதும் தெரிந்திருந்தது. அன்று தோப்புக்குள் அவளைத் தனது பழைய மனைவியென்று நினைத்து, கட்டித் தழுவிய பிறகும், காதலிலிருந்து தப்ப முயன்றது வீண் முயற்சி என்பதை அவன் உணர்ந்திருந்தான். ஆகவே என்ன செய்வதென்று தீர்மானிக்க முடியாமல் பிரமை பிடித்து நின்றான்.

அப்பொழுது நீலரதி சொன்னாள்: ''உதயகுமாரனுக்கு உறையூரில் ஆபத்து காத்திருக்கிறது. அவனை எப்படியாவது காப்பாற்றுங்கள்'' என்று.

''ஆபத்தா என்ன ஆபத்து?'' என்று வினவினான் இளமாறன்.

''தெரியாது. இந்த காஞ்சிவர்மன் யாருக்கோ கடிதம் கொடுத்திருக்கிறான். அதில் 'ஆபத்து இருக்கிறது''—நீலரதியின் குரலில் கவலை ஒலித்தது.

அந்தக் கவலைக்குக் காரணம் காதலாயிருக்குமோ என்று ஒரு விநாடி சந்தேகித்த இளமாறன் ''நீலரதி! உண்மையைச் சொல். அவன் மீது உனக்கு ஆசை இருக்கிறதா?'' என்று கேட்டான்.



அதுவரையில் இளமாறன் மார்பில் முகத்தைப் புதைத்த வண்ணம் பேசிக் கொண்டிருந்த நீலரதி சற்றே விலகி அவன் முகத்தை ஏறெடுத்து நோக்கினாள். ''இல்லை. சத்தியமாய் இல்லை'' என்று சொன்னாள்.

''காரணம்?''

''உங்களுக்கே தெரியும்.''

''வாய்விட்டுத்தான் சொல்லேன்.''

''சொல்ல அவசியமில்லை. கடந்த தின நிகழ்ச்சிகளை நீங்கள் நினைத்துப் பார்த்தால் உங்கள் இதயமே சொல்லும் உண்மையை.''

மேலும் தயங்கினான் இளமாறன். அவளிடமிருந்து பிரிந்து அப்படியும் இப்படியும் பின்கட்டில் உலாவினான். பிறகு சட்டென்று அவள் முன்பு நின்று ''உதயகுமாரனிடம் உனக்கென்ன அக்கறை?'' என்று வினவினான்.

அவளும் அவனை நன்றாக தனது விழிகளால் சலனமற்று நோக்கினாள். ''அக்கறையில்லை, பாசம்'' என்று சொன்னாள், அவள் குரலில் ஏக்கம் இருந்தது.

''பாசமா!''—வியப்பு மிதமிஞ்சி ஒலித்தது இளமாறன் குரலில்.

''ஆம்.''

''என்ன பாசமோ?''

அவள் பதில் மேலும் அதிர்ச்சியைத் தந்தது இளமாறனுக்கு. சற்று நிதானித்த நீலரதி ''பிள்ளைப்பாசம்'' என்றாள்.

இளமாறன் வாயடைத்து நின்றான். ''என்ன உளறுகிறாய்?'' என்று வினவினான் சில விநாடிகள் கழித்து.

நீலரதி அவனை உற்று நோக்கினாள். ''காரணம் தெரியவில்லை எனக்கு. முதலில் அவனிடம் எனக்குப்

பாசம் ஏற்பட்டபோது அது சகோதர பாசம் என்று நினைத்தேன். பிறகு பலமுறை சிந்தித்தேன். எனக்குப் பிள்ளை பிறப்பதானால் உதயகுமாரன் மாதிரி இருக்க வேண்டும் என்று எண்ணினேன். அந்த எண்ணம் மேலும் வளர்ந்தது அதை ஒரு கனவு உறுதி செய்தது...'' என்று சொன்னாள்.

இளமாரனுக்கு ஏதும் புரியவில்லை. ஒரு வேளை நிலரதிக்கு சித்தப் பிரமை ஏற்பட்டிருக்குமோ என்று நினைத்தான். அந்த எண்ணத்துடன் அவளை உற்று நோக்கினான். அவன் அப்படிப்பார்த்ததற்கு காரணத்தை நிலரதி உணர்ந்து கொண்டாள். ''எனக்குப் பைத்திய மில்லை'' என்றாள்.

புரிந்ததற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான் இளமாரன். ''கனவென்று சொன்னாயே என்ன கனவு?'' என்று கேட்டான் சிறிது சிந்தனைக்குப் பிறகு.

''ஐஸிஸ் கனவில் வந்தாள். அவள் சுட்டிக்காட்டினாள் உதயகுமாரனை. இவன் உன் மகன் என்றாள்'' என்ற நிலரதி பிரமை பிடித்தவள் போல் நின்றாள்.

இளமாரனும் பிரமை பிடித்து நின்றான். அந்தப் பழையகதை மீண்டும் நினைவுக்கு வந்தது இளமாரனுக்கு. தெய்வத்தின் கதையெல்லாம் வெறும் புரட்டு, மனித புத்தியின் பிரமை, கற்பனை என்றெல்லாம் உறுதி பூண்டிருந்த இளமாரன் நகைக்க முற்பட்டும் முடியவில்லை அவனால். எதற்கும் தனது நாத்திகத் தன்மையை கைவிடாமல் ''ஐஸிஸ் வேறு என்ன சொன்னாள்?'' என்று கேட்டான்.

நிலரதி அவன் நாத்திகத்தைப் பற்றிக் கவலைப்பட வில்லை. ''நாளை பௌர்ணமியில் முடிவு தெரியும் என்று சொன்னாள்'' என்று கூறினாள். அத்துடன் நிற்கவில்லை. அவள் கண்களில் கனவு விரியப் பேசினாள். ''நாம் அனைவரும் பிரிந்துதான் கூடுவோம் என்றும் சொன்னாள ஐஸிஸ்தேவி.''



அந்த வார்த்தையை அவள் முடிக்கும் முன்பாகவே வாயிற்படிக்கு வெளியிலிருந்த சத்திரக்காரன் கனைத்தான். இளமாரன் அவனை நோக்கி ''உள்ளே வரலாம்'' என்றான்.

''உங்களிடம் விடை கொள்ள வந்தேன்'' என்றான் சத்திரக்காரன்.

''விடை பெறவா?''

''ஆம்.''

''எங்கு செல்ல?''

''உறையூருக்கு''

''எதற்கு?''

''காஞ்சிலர்மர் கடிதம் கொடுத்திருக்கிறார்'' என்று கூறிவிட்டு சத்திரக்காரன் அவசரமாக வெளியே சென்றான்.

□ □ □

# 37. விருந்துக்கு அழைப்பு

சத்திரக்காரன் வெகு வேகமாக உள்ளே வந்து, தான் உறையூர் செல்வதாகவும், காஞ்சிவர்மன் கடிதம் கொடுத்திருப்பதாகவும் கூறிவிட்டு, கடிதம் யாருக்கு, கடிதத்தின் விவரம் என்ன என்று எதையுமே சொல்லாமலும், தனது பதிலுக்குக் கூடக் காத்திராமலும் வந்த வேகத்தில் வெளியே சென்று விட்டதை சிந்தித்துப் பார்த்த இளமாரன் ஏதும் புரியாமல் நின்றான் சில விநாடிகள். அந்தச் சில விநாடிகளில் வாயிலிலிருந்த வண்டியின் சக்கரங்கள் உருண்ட ஒலியும் கேட்கவே, சத்திரக்காரன் வண்டிக்காரனையும் அழைத்துச் சென்றுவிட்டான் என்பதையும் உணர்ந்த இளமாரன் உள்ளத்தில் சந்தேகம் பலமாக எழுந்தது. இப்பொழுது கடல் முகப்பு மாளிகை விடுதியில் தன்னையும் நீலரதியையும் தவிர யாருமில்லையென்பதை எண்ணிப் பார்த்த இளமாரன் காஞ்சி வர்மன் ஏதோ வஞ்சகத் திட்டத்துடனேயே தங்களுடன் வந்தவர்களைப் பிரித்துவிட்டான் என்ற தீர்மானத்துக்கும் வந்தான். இப்படி நீலரதியுடன் தான் தனித்திருக்க நேரிட்டது ஒரு புறம் இளமாரனுக்கு இன்பம் அளித்தாலும், அப்பொழுது இன்பத்தை விட தான் அதிகமாக கவனிக்க வேண்டியது காஞ்சிவர்மன் சதித் திட்டம்தான் என்பதை அறிந்த இளமாரன் சற்று எச்சரிக்கையுடனிருக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்தான்.

அவன் அப்படி சிந்தனையில் திளைத்துவிட்டதைக் கண்ட நீலரதி "என்ன சிந்திக்கிறீர்கள்? ஒரேயடியாக கல்லாய் சமைந்து விட்டீர்களே?" என்று வினவினாள்.

அவள் கேள்வி அவன் சிந்தனையை அறுத்துவிடவே இளமாரன் அவளை நோக்கித் திரும்பி "நீலரதி! காஞ்சி



வர்மன் திட்டம் உனக்குப் புரியவில்லை?" என்று வினவினான்.

"என்ன திட்டம்?" என்று கேட்டாள் நீலரதி.

"நம்முடன் வந்த உதயகுமாரனையும் சத்திரக்காரனையும் உறையூருக்கு அனுப்பிவிட்டான். இப்பொழுது நாமிருவர் மட்டும் தனித்திருக்கிறோம்" என்று சுட்டிக்காட்டினான் இளமாரன்.

நீலரதியின் உதடுகளில் இன்பப் புன்னகை விரிந்தது. கண்களிலும் காம இச்சையின் சாயை கோடி காட்டியது. "அதில் நமக்கென்ன கஷ்டம்?" என்று கேட்ட அவள் குரலும் கொஞ்சியது.

இளமாரன் அவளை நெருங்கி இரு கைகளாலும் அணைத்துக் கொண்டான். "நீலரதி! நாமிருவரும் தனித்துக் களித்திருக்க நம்மைத் தனியாக விடவில்லை காஞ்சி வர்மன். நான் தனியாக இருந்தால் என்னை சிறை செய்து, உன்னை அடையப் பார்க்கிறான். புரியவில்லையா உனக்கு?" என்று கேட்ட இளமாரன் அவளை அணைத்த கைகளை இறுக்கினான்.

அந்த முரட்டுக் கைகளின் இறுக்கலில் அவள் பூவுடல் வலித்தது. அந்த வலி தனக்கு வேண்டியிருந்ததை உணர்ந்த நீலரதியின் கண்களில் வேட்கை விரிந்தது. இடீரென அவள் நகைத்தாள்.

இளமாரன் தனது கையைத் தளர்த்தாமலே கேட்டான். "ஏன் நகைக்கிறாய் நீலரதி?" என்று.

"உதயகுமாரனுக்கு என்னைக் கொடுப்பதாகச் சொன்னீர்கள், அதற்கு முறை இதுவா?" என்று வினவினாள் நீலரதி நகைப்பின் ஊடே.

அதைக் கேட்டதும் அவளிடமிருந்து சற்றே விலகிய இளமாரன், "நீதான் அவனை விரும்பவில்லையே? அவனிடம் பிள்ளைப் பாசம் ஏற்பட்டிருப்பதாகக் கூறினாயே?" என்று கேட்டான்.

"அதனால் நீங்கள் என்னிடம் சரசமாட ஆரம்பித்துவிட்டீர்களாக்கும்? நல்ல கதை இது!" என்ற நீலரதி "அன்று தோப்பில் என்னைக் கட்டிப்பிடித்து மணலில் தள்ளினீர்கள். என்னைப் பார்த்ததும் மனைவி நினைவு வந்துவிட்டது என்று சொன்னீர்கள். அப்படி மனைவி நினைப்பு அடிக்கடி வந்தால் என் கதி என்ன? நினைத்துப் பார்த்தீர்களா?" என்றும் கேட்டாள். அவள் குரலில் அவன் மனைவியாக நினைத்ததற்கு எந்தவிதக் கசப்பும் தெரியவில்லை. இன்பமாகவே குரல் ஒலித்தது.

அதைக் காணவே செய்த இளமாறன் அவள் உள்ளத்தைச் சந்தேகமற புரிந்துகொண்டாலும், தனக்கும் நீலரதியைக் கட்டிப் புரள வேண்டுமென்று அவா இருந்தாலும் அந்த அவா அர்த்தமற்றது என்று எண்ணினான். "நாற்பத்திரண்டு வயதான தான் அந்த பருவ மகளை அடைந்தால் தனக்குப் பிறகு அவள் வாழ்க்கை நிலை என்ன ஆகும்?" என்றொரு கேள்வியையும் எழுப்பிக் கொண்டு அன்று முதல் அவளைத் தொடுவதில்லை என்று உள்ளூர சபதமும் செய்துகொண்டான். அதை அவளிடமும் தெரிவித்தான். அந்த சபதம் நிலைக்குமென்று அவனும் நம்பவில்லை. அவளும் நம்பவில்லை. இருப்பினும் தனது மனத்தை இரும்பாக்கிக்கொள்ள முயன்ற இளமாறன் பேச்சை வேறு திசையில் திருப்பி, "பௌர்ணமி என்றைக்கு?" என்று கேட்டான்.

"இன்றிலிருந்து மூன்றாவது நாள்" என்றாள் நீலரதி.

"அன்றுதான் புத்தம்புது விளைவுகளை எதிர்பார்க்கிறாய்?" என்று இளமாறன் மீண்டும் கேட்டான்.

"ஆம். ஐஸிஸ் தேவியே சொல்லியிருக்கிறாள். பௌர்ணமி என் வாழ்வில் முக்கிய தினமென்று" என்று நீலரதி குறிப்பிட்டாள்.

அது இளமாறனுக்கே தெரிந்திருந்தாலும் இந்தப் பௌர்ணமியில் என்னதான் ஏற்படும் என்று சிந்தித்தான். ஒருவேளை தனது மனைவிக்கு நேர்ந்த கதி நீலரதிக்கும்



ஏற்படுமோ என்று எண்ணினான். எது நடந்தாலும் இம்முறை காஞ்சி வர்மனை உயிருடன் விடுவதில்லை என்ற முடிவுக்கும் வந்தான். "நீலரதி! இன்றுமுதல் நீ தனியாக தோப்புக்குள் போக வேண்டாம். இந்த விடுதியில்கூட நானில்லாத சமயங்களில் கதவைத் தாழிட்டுக் கொள். என்னைத் தவிர யார் அழைத்தாலும் கதவைத் திறக்காதே" என்று திட்டமும் செய்தான்.

நீலரதி சொன்னாள்: "வீணாகக் கவலைப்படாதீர்கள் என்னை யாரும் எதுவும் செய்ய முடியாது. இதோ இருக்கிறது தற்காப்பு ஆயுதம். பாரோவின் சமாதியில் தெய்வமகள் கொடுத்த பரிசு" என்று கூறி இடையிலிருந்த அந்த மெல்லிய கத்தியை எடுத்துக் காட்டினாள்.

காலை வெளிச்சத்தில் அந்தக் கத்தி பெரிதும் சுடர் விட்டது. "இந்தக் கத்தியால் உங்கள் மனைவியைப் போல் நான் என் உயிரை மாய்த்துக்கொள்ள மாட்டேன். என்னை முறைகேடாக அணுகுபவன் உயிரை இது பறிக்கும்" என்று உறுதி கலந்த குரலில் கூறினாள் நீலரதி. அதைச் சொன்னபோது அவள் கண்கள் நெருப்புப் பொறிகளை உதிர்த்தன.

அதனால் சற்று திருப்தியடைந்த இளமாறன் "நல்லது. எதற்கும் எச்சரிக்கையுடனிரு" என்று கூறிவிட்டு வெளியே நடந்தான்.

"எங்கு போகிறீர்கள்?" என்று வினவினாள் நீலரதி.

"காஞ்சி வர்மனைப் பார்க்கப் போகிறேன்" என்றான் இளமாறன்.

"எதற்கு?"

"உதயகுமாரனையும் சத்திரக்காரனையும் உறையூர் அனுப்பியதற்குக் காரணம் கேட்க."

"அது அவசியமா?"

"மிகவும் அவசியம்" என்று கூறிவிட்டு வேகமாகச் சென்ற இளமாறன் காஞ்சி வர்மன் இருந்த பெரிய மாளிகையை அடைந்து படைத் தலைவனைப் பார்க்க வேண்டுமென்று அங்கிருந்த காவலனிடம் சொன்னான்.

"இப்பொழுது பார்க்க முடியாது. தலைவர் முக்கிய அலுவலை கவனித்துக் கொண்டிருக்கிறார்" என்றான்.

காவலனை தனது இடக்கையால் ஒதுக்கிவிட்டு மாளிகைக்குள் நுழைந்த இளமாறன் நேராக மாடிப்படிகளில் ஏறிச் சென்றான். மாடியை அடைந்ததும் இடப்புறமாகத் திரும்பி எதிரே இருந்த பெரிய அறையை நாடிச் சென்று அந்த அறையின் கதவைத் தட்டாமலே அதன் பெரிய கதவுகளைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தான்.

அந்த அறையில் நுழைந்ததுமே இளமாறன் எண்ணங்களும் வேகமாகச் சுழன்றன. உணர்ச்சிகள் அவனையும் மீறித் துடித்தன. அந்த அறை அவனது மூதாதைகளின் ஆலோசனை அறை. பெரிய விருந்துகளும் அந்த அறையில்தான் நடப்பது வழக்கம். அந்த அறையில் கதவுக்கு நேர் சுவரில் அவனது மனைவியின் உருவப்படம் மாட்டப்பட்டிருந்தது. அதை ஒரு விநாடி உற்றுப் பார்த்துவிட்டு கண்களை எதிரே நின்றிருந்த காஞ்சி வர்மனிடம் திருப்பினான்.

காஞ்சி வர்மன் இளமாறன் கண்கள் சென்ற இடத்தைக் கவனித்தான். அவன் இதழ்களில் புன்னகை அரும்பியது. "வரவேண்டும். தங்கள் வரவை நான் எதிர்பார்க்கவில்லை" என்றான் வஞ்சகக் குரலில்.

இளமாறன் தனது இதழ்களில் புன்முறுவலை வலுக்கட்டாயமாக வரவழைத்துக்கொண்டான். "நாம் எதிர்பாராத விஷயங்கள் உலகத்தில் எத்தனையோ நடக்கின்றன" என்றான். உதடுகளில் புன்னகை தவழ்ந்தாலும் குரல் சற்று கடுமையாக இருந்தது.



அதை கவனிக்கவே செய்த காஞ்சிவர்மன் "உண்மை முக்காலும் உண்மை. மனித வாழ்வில் அடுத்து என்ன வரும், எது வரும் என்று யாருமே சொல்ல முடியாது" என்று தத்துவம் பேசினான்.

இளமாறன் தலை தாழ்த்தினான். "ஆம் ஆம்" என்று ஒப்புக்கொண்ட இளமாறன் "உங்களை ஒரு விஷயம் கேட்க வந்தேன்" என்றான்.

"கேளுங்கள் தாராளமாக."—அன்பு சொட்டியது காஞ்சிவர்மன் குரலில்.

"உதயகுமாரனையும் சத்திரக்காரனையும் உறையூர் அனுப்பியிருக்கிறீர்கள்..." என்று இளமாறன் இழுத்தான்.

"ஆம் முக்கிய வேலை. அந்த வேலைக்குத் தகுந்தவர் வேறு யாரும் என்னிடமில்லை தற்சமயம். ஆகையால் அவர்களை அனுப்ப வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது" என்றான் காஞ்சிவர்மன்.

"என்னைக் கேட்கவில்லை நீங்கள்" என்று குறிப்பிட்டான் இளமாறன்.

"கேட்கிறேனென்று சொன்னேன். அவர்கள்தான் கேட்க அவசியமில்லை என்று சொன்னார்கள்."—இதை காஞ்சிவர்மன் சகஜமாகச் சொன்னான். மேலும் சொன்னான்: "இன்னும் ஒரே வாரத்தில் இருவரும் திரும்பி விடுவார்கள். அதுவரை நீங்கள் அந்த சிறு விடுதியில் இருக்க வேண்டியதில்லை. இந்த மாளிகையில் எனது விருந்தினர்களாக இருக்கலாம்" என்று.

அவன் உட்கருத்து இளமாறனுக்குப் புரிந்தே இருந்தது. இருப்பினும் அதை வெளிக்குக் காட்டாமல் "எதற்கும் ரதியைக் கேட்டுப் பார்க்கிறேன்" என்றான்.

"விடுதியைவிட இங்கு சௌகரியங்கள் அதிகம். இந்த மாளிகையின் தலைவிபோல ரதி நடத்தப்படுவாள்" என்றான் காஞ்சிவர்மன்.

காஞ்சிவர்மன் திட்டம் இளமாறனுக்கு நன்றாகப் புரிந்தது. நீலரதியைப் பெண்டாள நினைக்கிறான் இந்த அயோக்கியன் என்று எண்ணி உள்ளூரக் குமுறினாலும் அதை வெளிக்குக் காட்டாமல் ''உங்கள் நோக்கம் பரந்தது'' என்று பாராட்டிவிட்டு வெளியே செல்லத் திரும்பினான்.

''வீரரே! ஒரு வார்த்தை'' என்று இளமாறனைத் தடுத்த காஞ்சிவர்மன் ''இன்று இரவு முதல் நீங்களிருவரும் என்னுடனேயே உணவருந்தலாம்'' என றான்,

சரி என்பதற்கு அடையாளமாக, தலையை ஆட்டிய இளமாறன் தீவிர சிந்தனையுடன் விடுதிக்குத் திரும்பி நீலரதியிடம் விஷயங்களைச் சொன்னான்.

''அவன் எண்ணம் உங்களுக்குப் புரியவில்லையா?'' என்று ஆத்திரத்துடன் கேட்டாள் நீலரதி.

''புரிகிறது நீலரதி. அவன் அழைப்பை ஏற்போம். அந்த அழைப்பே அவனுக்கு அழிவு'' என்று சொன்னான் இளமாறன்.

அன்று மாலையே அவர்களுக்கு அழைப்பு வந்தது, காஞ்சிவர்மனிடமிருந்து. பணிமகனொருவன் வந்து ''தலைவர், தங்களையும் தங்கள் மனைவியாரையும் இன்றிரவு தம்முடன் உணவருந்த அழைக்கிறார்'' என்று கூறி, தலை வணங்கினான்.

''வருகிறோம்'' என்று ஒப்புக் கொண்டான் இளமாறன்.

அதே சமயத்தில் மாளிகையின் பெரிய அறையிலிருந்த காஞ்சிவர்மன் ''நமது பள்ளியறை சித்தமாகி விட்டதா?'' என்று பணிமகளொருத்தியிடம் வினவினான்.

''சித்தமாகிவிட்டது பிரபு'' என்றாள் பணிமகள்.

''ரகசியக்கதவு''-காஞ்சிவர்மன் வினவினான்.

''தொட்டால் திறக்கும்'' என்ற பணிமகள் புன்முறுவல் செய்தாள். □

# 38. பள்ளியறைப் பிரவேசம்

காஞ்சிவர்மன் அழைப்பை ஏற்ற இளமாறன் தனது மூதாதைகளின் பெருமாளிகையில் நீலரதியுடன் அன்றே குடியேறினான். அவன் நீலரதியுடன் மாளிகை வந்த போது காஞ்சிவர்மன் அவர்களை வாயிலிலேயே எதிர் கொண்டு ''வரவேண்டும், வரவேண்டும். உங்கள் வரவால் இந்த மாளிகை புனிதப்படுகிறது. இதை உங்கள் சொந்த மாளிகையைப்போல் நினைத்து நடந்து கொள்ளுங்கள். உங்கள் கட்டளைகளை எனது கட்டளைகளாக நினைத்து நடந்து கொள்ளும்படி பணி மக்களுக்கு உத்தரவிட்டிருக்கிறேன்'' என்று முகமன் கூறி வரவேற்றான். பிறகு இளமாறன் இடையில் தொங்கிய நீண்ட வாளைப் பார்த்து ''இதைப் போல் பல வாட்கள் இந்த மாளிகையின் ஆயுதசாலையிலிருக்கின்றன. அதில் எதை வேண்டுமானாலும் நீங்கள் எடுத்துக் கொள்ளலாம்'' என்றும் சொன்னான், கபடம் ஒளித்த குரலில்.

காஞ்சிவர்மனை ஏறெடுத்து நோக்கிய இளமாறன் ''ஆயுத சாலையா! இந்த மாளிகைக்கு ஆயுத சாலை எதற்கு?'' என்று வினவினான், ஏதுமறியாததுபோல.

காஞ்சிவர்மன் முகத்தில் எந்தவித மாறுதலுமில்லை. சர்வ சகஜமாகப் பேசினான். ''இந்த மாளிகையின் பழைய கதை உங்களுக்குத் தெரியாது. இதன் சொந்தக் காரன் வாட்பயிற்சியளிப்பவன். பலபேருக்கு எதிர் தோப்பில் வாட்பயிற்சி அளித்து வந்தான். அதற்காக அவன் சேகரித்தவாட்கள் அவை. அவற்றின் எத்தனையோ ரகங்கள் பார்ப்பதற்கே இன்பமாயிருக்கும்'' என்றான். ''அவன் ஒரு மகாவீரன். இன்றிருந்தால் அவன் இந்த நாட்டின் படைத்தலைவனாகப் பதவி பெற்றிருப்பான்'' என்றும் கூறினான்.

"அவன் எங்கே இப்பொழுது?"-ஏதுமறியாததுபோல் வினவினான் இளமாரன்.

"இறந்து விட்டான்."

"அவனுக்கு மனைவி மக்கள் யாருமில்லையா?"

"ஒரு மனைவி மட்டும் இருந்தாள். அவள் எதிர் தோப்பில் தற்கொலை செய்து கொண்டு விட்டாள். அதனால் அவனும் சித்தப்பிரமை பிடித்து இறந்து விட்டான்."

இப்படி பழைய உண்மையைத் திரித்து அரையும் குறையுமாகப் பேசியதையும், அந்தப் பழைய சம்பவங்களைச் சொன்னபோது கண்ணிமைகளைக்கூட அசைக்காமல் அவன் சர்வசகஜமாகப் பேசியதையும் பார்த்த இளமாரன் அவனைப்போன்ற வஞ்சகனும் கல்நெஞ்சனும் உலகத்தில் இருக்கமுடியாதென்ற முடிவுக்கு வந்து, அவன் ஆயுட்காலம் அதிக நாளில்லை என்பதையும் தனக்குள் சொல்லிக் கொண்டான்.

அதற்கு மேல் இளமாரன் ஏதும் கேள்வி கேட்காவிட்டாலும் நீலரதி மட்டும் "அவர் மனைவி ஏன் தற்கொலை செய்து கொண்டாள்?" என்று கேள்வியொன்றை வீசினாள்.

"காரணம் எனக்குத் தெரியாது. கணவன் மனைவிக்குள் ஏதோ மனக்கசப்பு என்று ஊரார் பேசிக்கொண்டார்கள்" என்றான் காஞ்சிவர்மன்.

"இந்த மாளிகை தங்களுக்கு எப்படிக் கிடைத்தது?" என்று மேலும் கேட்டாள் நீலரதி.

"இறந்த பெண் எங்கள் உறவினள். அவள் வாரிசு இல்லாமல் இறந்து போனதாலும் அவள் கணவனும் இறந்துவிட்டதாலும் எங்களுக்கு இது கிடைத்தது. இதில் இருக்கக்கூட எனக்குக் கஷ்டமாயிருக்கிறது.



அடிக்கடி பழைய கதை நினைவுக்கு வருகிறது" என்று வருத்தம் நிறைந்த குரலில் பதில் சொன்ன காஞ்சி வர்மன் முதலைக் கண்ணீரும் இரண்டு துளி விட்டான்.

அதற்கு மேல் அவர்களை வாயிலில் நிறுத்திப் பேச இஷ்டப்படாத காஞ்சி வர்மன் "வாருங்கள் உள்ளே போவோம். இந்த மாளிகை அரண்மனை போன்றது. இதைச் சுற்றியும் பாருங்கள்" என்று கூறி அவர்களை உள்ளே அழைத்துச் சென்றான்.

பணிமகன் ஒருவனை அழைத்து "இவர்களுக்கு தனி இருப்பிடம் கொடுக்கும்படி நமது காரியஸ்தனிடம் சொல்" என்று கூறிவிட்டு அவர்களிடம் விடைபெற்று மாளிகையின் மற்றொருபுறம் சென்றான். காஞ்சிவர்மன் சொன்னதுபோல பணிமகன் அவர்களை இரண்டு கட்டுகள் தள்ளி அழைத்துச் சென்று அங்கிருந்த ஒரு அறையைத் தட்டினான். "யாரது?" என்று உள்ளிருந்து மிகவும் தளர்ந்த குரல் ஒன்று ஒலித்தது.

"நான் தான். கதவைத்திற" என்று சற்று அதிகாரக் குரலில் பணிமகன் கூறவே, கதவு மெல்லத் திறக்கப்பட்டு மிகவும் வயோதிகனான ஒருவன் வாயிற்படியில் நின்றபடியே இளமாரனையும் நீலரதியையும் நோக்கினான். அவன் கண்களின் மேல் கையை வைத்து உற்றுப் பார்த்ததிலிருந்து அவனுக்கு பார்வை கொஞ்சம் மந்தம் என்பதை நீலரதி உணர்ந்து கொண்டாள். ஆனாலும் இளமாரன் மட்டும் முகத்தில் உணர்ச்சி ஏதுமின்றி நின்றான். வயோதிகன் நீண்ட நேரம் இளமாரனை உற்று நோக்கினான். புருவங்களின் மீது கையை வைத்தவண்ணம், பிறகு நீலரதியையும் உற்றுப் பார்த்தான். கடைசியாக இளமாரனை நோக்கி "உன்னை எங்கோ பார்த்திருக்கிறேன்" என்றான் சிந்தனை ஒலித்த குரலில்.

அவர்களை அழைத்து வந்த பணிமகன் "தாத்தா! இவர்களை நீ பார்த்திருக்க முடியாது. இப்பொழுதுதான்

வந்திருக்கிறார்கள். இவர்கள் எசமானின் விருந்தினர்கள். இவர்கள் தங்க தகுந்த இடம் கொடுக்கும்படி எசமானர் உத்தரவு. எசமானை நடத்துவது போலவே இவர்களை யும் நடத்த வேண்டும். இவர்களுக்கு எந்தக் குறையும் கூடாது'' என்று கூறிவிட்டுச் சென்று விட்டான்.

அவன் போன பிறகு காரியஸ்தனான வயோதிகன் ஏதோ முணுமுணுத்தான். பிறகு நீலரதியை நோக்கி ''நீ இறந்து விடவில்லை?'' என்று வினவினான்.

நீலரதிக்கு அவன் கேள்வியின் காரணம் புரிந்தது. தன்னை பழைய எசமானியாக கிழவன் நினைத்திருக் கிறான் என்று புரிந்துகொண்ட அவன் ''இல்லை தாத்தா. இதோ உயிருடன் இருக்கிறேனே'' என்றான்.

கிழவன் அவனை மீண்டும் நோக்கி விட்டு இளமாற னைப் பார்த்து ''என்னுடன் வாருங்கள், உங்களுக்கு தகுந்த இருப்பிடத்தைக் காட்டுகிறேன்'' என்று கூறி அவர்கள் இருவரையும் அங்கிருந்த பின்வழிப் படிகளில் ஏறி மாடிக்கு அழைத்துச் சென்றான். மாடியில் இருந்த பல கட்டுகளில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து ''இந்த அறை களில் நீங்கள் தங்கலாம். அதுவும் இந்தப் பெரிய பள்ளி யறை வரலாறு படைத்தது'' என்று சொல்லி அறைகளைத் திறந்து காட்டினான்.

அந்தப் பெரிய பள்ளியறையும் அதை அடுத்திருந்த மற்றோர் அறையும் அவர்கள் தங்குவதற்கு வேண்டிய வசதிகளுடனிருந்ததை நீலரதி கவனித்தான். இந்த இரண்டு அறைகளுக்கும் அப்பாலிருந்த ஓர் அறையைக் காட்டி இது யார் அறை என்றும் விசாரித்தான்.

''இப்பொழுதுள்ள எசமானன் படுக்கும் அறை'' என்று கூறிய கிழவன் குரலில் வெறுப்பு மண்டிக்கிடந்தது. ''அந்த அறையில் முன்பு ஒரு சிங்கம் படுத்துக் கிடந்தது. அதில் இப்பொழுது நரியொன்று படுக்கிறது. காலம்



எப்படி மாறுகிறது!'' என்று கேட்டு முகத்தில் வருத்தத் தைப் படரவிட்டுக் கொண்டான்.

அதுவரை அவன் சொல்வதைக் கேட்டுக் கொண்டும் தனது பழைய வாழ்க்கையை அலசிக் கொண்டும் நின்றி ருந்த இளமாறன் ''சரி தாத்தா! நீ போ. இந்த அம்மாள் பெரிய பள்ளியறையில் தங்குவாள். நான் பக்கத்து அறை யில் தங்குகிறேன்'' என்று கூற கிழவன் தலையசைத்து மறுபடியும் கீழே சென்று விட்டான்.

அவன் சென்றதும் அந்த மாளிகையை நீலரதிக்கு சுற்றிக் காட்டினான் இளமாறன். அதை அவன் அக்கக் காக அறிந்திருந்ததைக் கண்ட நீலரதிக்கு வியப்பு எதும் ஏற்படவில்லை. அந்த அரண்மனையின் பழைய எசமான் அவனே என்பதை ஊகித்துவிட்ட நீலரதி அந்த அரண் மனையின் சொந்தக்காரி போலவே பார்த்தான். அந்த அரண்மனையின் பல கட்டுகளையும், உள்ளேயும் வெளியேயும் அமைக்கப்பட்டிருந்த பல மாடிப்படிகளை யும் அவனுக்குக் காட்டிவிட்டு விருந்து மண்டபத்துக்கு அவளை அழைத்து வந்தான். அங்கு சுவரில் மாட்டப் பட்டிருந்த படத்தைக் கண்டதும் அது அவனது பழைய மனைவியின் படம் என்பதை ஊகித்துக்கொண்ட நீலரதி அந்தப் படத்திலிருப்பவள் எப்பேர்ப்பட்ட அழகி என்ப தைப் பார்த்து இளமாறனிடம் அனுதாபமும் கொண் டான். அவனுக்கு ஏற்பட்ட துர்மரணத்தை எண்ணி காஞ்சி வர்மனை ஒழித்து விடுவதைத் தவிர வேறுவழி யில்லை என்றும் தீர்மானித்துக் கொண்டான். ஆனாலும் அதை அவன் இளமாறனிடம் சொல்லவில்லை.

இளமாறன் அவளை அந்தப் பெரிய பள்ளியறைக்கு அழைத்துச்சென்று அதன் சூட்சுமங்களையெல்லாம் காட்டினான். அதன் கோடியிலிருந்த ரகசியக் கதவையும், அதற்கப்பாலிருந்த தாழ்வரையையும் காட்டினான். மாளிகை மாடியின் அந்த வெளித்தாழ்வரை, அங்கிருந்த நான்கு அறைகளுக்கும் பொதுவாயிருந்ததையும், அதன்

மூலம் யாரும் ஓர் அறையிலிருந்து மற்றோர் அறைக்கு வரலாமென்பதையும் நீலரதி உணர்ந்து கொண்டாள். தவிர தான் தங்கும் பெரிய பள்ளியறைக்கு மற்ற அறைகளைப் போல் அல்லாமல் பொதுக் கதவைத் தவிர சுவரிலேயே தெரியாமல் அமைக்கப்பட்டிருந்த சூட்சுமக் கதவு ஒன்று இருப்பதையும் இளமாறன் காட்ட புரிந்து கொண்டதால் தான் மிகவும் எச்சரிக்கையாயிருக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்தாள்.

இப்படி மாளிகையையும் அதன் சூட்சுமங்களையும் சுற்றிக் காட்டிய பிறகு இளமாறன் நீலரதியை அவள் அறைக்குச் செல்லவிட்டு தான் தனது அறைக்குச் சென்றான். பிறகு அன்று முழுவதும் அவளைச் சந்திக்கவில்லை அவன். மாளிகையைச் சுற்றிப் பார்ப்பதிலும் அங்குள்ள வேலைக்காரர்களுடன் உரையாடுவதிலும் இளமாறன் காலம் கழித்தான். அப்படிப் பேசியதிலிருந்து அந்தப் பணியக்கள் எல்லோருமே புதியவர்களென்றும், கிழவன் ஒருவனைத் தவிர வேறு பழைய வேலைக்காரன் யாரும் கிடையாதென்பதையும் புரிந்து கொண்டான். கிழவனுக்கு வயதாகி விட்டதால் அவன் யார் உதவிக்கும் வர முடியாதென்றும், மற்றவர்கள் வர பிரமேயமில்லை என்பதையும் உணர்ந்து கொண்டாலும் அதை வெளிக்குக் காட்டவில்லை இளமாறன்.

அன்று முழுவதும் காஞ்சி வர்மன் அவர்களைச் சந்திக்கவில்லை. இளமாறன் அறையிலேயே அவனுக்கும் நீலரதிக்கும் உணவு பரிமாறப்பட்டது. இரவு மீண்டும் காஞ்சி வர்மனைக் காணவில்லை. "எசமான் எங்கே?" என்று விசாரித்ததற்கு பணிமகன் "தெரியாது" என்று பதில் சொன்னான். இருமுறை காரியஸ்தனான கிழவனைச் சந்திக்க முயன்றும் முடியவில்லை இளமாறனால்.

இரவும் மூண்டது. மாளிகை மாடியின் முகப்புத் தாழ்வரையிலிருந்து தூரத்தே இருந்த தோப்பும் அதை அடுத்த



கடலும் பார்ப்பதற்கு மிக ரம்மியமாயிருந்தது. அந்தக் காட்சியை அநுபவித்துக் கொண்டே நீலரதியுடன் தாழ்வரை ஆசனங்களில் உட்கார்ந்திருந்த இளமாறன் வானத்துச் சந்திரனை நோக்கினான். முக்காலவாசி கடல்மதி முழுமதியாக வளர்ந்து கொண்டிருந்ததை கவனித்த இளமாறன் "பௌர்ணமிக்கு இன்னும் இரண்டே நாட்கள்" என்றான்.

நீலரதி அவன் கைமீது தனது கையை வைத்து தனது கன்னத்தை அவன் கன்னத்தோடு இழைத்தாள். ஆனால் இளமாறன் எண்ணங்கள் எங்கோ ஓடிக்கொண்டிருந்ததால் அவன் எந்தவித உணர்ச்சியையும் காட்டவில்லை. "நேரமாகிறது, படுத்துக்கொள் நீலரதி" என்று வறண்ட குரலில் சொன்னான். நீலரதி எழுந்து பள்ளியறையை நாடிச் சென்றாள். சிறிது நேரத்திற்கெல்லாம் இளமாறனும் எழுந்து தனது அறைக்குச் சென்று படுத்தான்.

அடுத்த இரண்டு நாழிகை கழிந்தது. அவன் அறைக்கு பக்கத்து அறையில் யாரோ இருவர் பேசும் அரவம் கேட்கவே காதை நன்றாகத் தீட்டிக்கொண்டான் இளமாறன்.

காஞ்சிவர்மன் பணிமகனைக் கேட்டான்: "அவன் ஏதாவது சந்தேகப்பட்டானா?" என்று.

"இல்லை" என்றான் பணிமகன்.

"ரகசியக்கதவு" என்று காஞ்சிவர்மன் வினவினான்.

"தங்கள் உத்தரவுப்படி திறந்திருக்கிறது"

"அவள்?"

"அங்குதான் படுத்திருக்கிறாள்."

"ரகசியக்கதவு அவளுக்குத் தெரிந்து தாழிட்டு விட்டால்?"

"முடியாது."

''ஏன்?''

''தாழை எடுத்து விட்டேன்.''

''நீ மிகுந்த அறிவாளி'' என்று பாராட்டினான் காஞ்சிவர்மன்.

''சரி. இன்று நடுநிசியில் அவளைச் சந்திக்கிறேன்'' என்று சொல்லி மகிழ்ச்சியுடன் நகைத்தான் காஞ்சி வர்மன்.

அத்துடன் தனது பஞ்சணையில் படுத்து நாழிகைகளை எண்ணிக் கொண்டிருந்தான். நடுநிசியும் வந்தது. மெல்ல எழுந்திருந்து தாழ்வரை வழியாக நீலரதியின் பள்ளியறையை அடைந்து ரகசியக்கதவின் விசையைத் தொட்டான். சுவர் லேசாக நகர்ந்து ரகசிய வழி புலப்பட்டது. அறையில் விளக்கு ஏதுமில்லாததாலும் நிலவும் உள்ளே பாய வழி இல்லாததாலும் அறையில் இருள் மண்டிக் கிடந்தது. மிகுந்த எச்சரிக்கையுடன் அடிமேலடி வைத்து பஞ்சணையை அடைந்தான் காஞ்சிவர்மன்.

□ □ □

# 39. மருமகள்

நீலரதிக்காக ஒதுக்கப்பட்டிருந்த பள்ளியறையின் ரகசியக் கதவைத் திறந்துகொண்டு சிறிதும் சத்தம் செய்யாமல் உள்ளே பிரவேசித்த காஞ்சி வர்மன் தனது சூட்சும புத்தியையும் வியந்துகொண்டான். தனக்கு வர இருந்த பஞ்சணை சுகத்தை எண்ணிப் பரவசத்துக்கும் உள்ளானான். மிகுந்த எச்சரிக்கையுடையவனும், எதிலும் அவசரத்தைக் காட்டாதவனுமான காஞ்சிவர்மன் தனது எதிரி இரண்டாம் முறையாக அழியவிருப்பதை உணர்ந்து உவகையின் எல்லையையும் எய்தினான். தனது மனைவியையும் இழந்து தன்னால் கப்பல் அடிமையாக விற்கப்பட்ட இளமாறன் எப்படியோ பிழைத்து தன்னைப் பழிவாங்க சற்று மாறுபெயருடன் வந்திருப்பது அவனுக்குப் புரியாமலில்லை. இளமாறன் முகத்திலும் மற்ற இடங்களிலும் ஏற்பட்ட காயங்களின் வடுக்களால் அவன் பெரிதும் மாறி இருந்தாலும், மற்றவர் கண்களில் மண்ணைத் தூவி இருந்தாலும், தன் கண்ணை மட்டும் அவன் கட்ட முடியாததை நினைத்து தனது புத்திக் கூர்மையை வியந்து கொண்டான் காஞ்சிவர்மன். ''இளமாறா! உன் மனைவி என்னிடம் சிக்காமல் தற்கொலை செய்து கொண்டாள். இப்பொழுது உன் காதலி என்னிடம் சிக்குவதிலிருந்து தப்ப முடியாது. அவளை அனுபவித்தபின்பு உன்னை அழிக்கிறேன்'' என்று கறுவிக் கொண்டு மெதுவாக பஞ்சணையை நெருங்கி அதன் முகப்பில் சில விநாடிகள் செயல்படாமல் நின்றான். இரவின் விளைவாக அறை விளக்கு அணைக்கப்பட்டிருந்தாலும், அந்த அறையில் வெளிச்சம் அதிகமில்லாதிருந்தாலும், சாளரத்துக்கும் தாழ்வரைக்கும் அப்பால் வானத்திருந்த சந்திரன் வீசிக்கொண்டிருந்த அற்பவெளிச்

சத்தில் அவன் பஞ்சணையில் கிடந்த உருவத்தைக் கூர்ந்து நோக்கினான்.

அந்த உருவமும் தலையிலிருந்து கால்வரை போர்த்திக்கொண்டு படுத்திருந்ததாலும், தவிர உடலும் நீண்டு மல்லாந்து கிடந்ததாலும், அதன் உயரம் சற்று அதிகமாக இருந்ததாகத் தோன்றியதாலும், சிறிது அந்த உடலை ஆராயவே செய்தான் காஞ்சி வர்மன். அப்படி ஆராய்ந்ததில் அவனுக்கு ஏதோ சந்தேகம் வந்ததால் அதன்மீது சிறிது கையை வைக்கவே செய்தான். அவன் கை வைத்த இடம் மார்பு ஆதலால் அது பெண் மார்பு போல் இல்லாததை உணர்ந்து ஏதோ பிசகு நடந்திருப்பதை ஊகித்துவிட்ட காஞ்சி வர்மன் சட்டென்று எச்சரிக்கை அடைந்து அந்த அறையைவிட்டு அகன்று விடலாமா என்று ஒரு விநாடி யோசித்தான். அதனால் லாபமில்லையென்று நினைத்து வெளிக்கதவைத் திறந்து ''டேய்! யாரங்கே? மாரன் இங்கு படுத்திருப்பதாகச் சொன்னாயே. வேறு யாரோ படுத்திருக்கிறார்களே'' என்று யாரோ வேலைக்காரனை அழைப்பது போல் பேசினான். ''அப்படியா! அவர்தானா? சரி சரி, நன்றாக உறங்குகிறார். இப்பொழுது எழுப்ப வேண்டாம். நாளைக் காலையில் பேசிக்கொள்கிறேன். அவர் காலையில் எழுந்ததும் முக்கிய விஷயம் பேசவேண்டுமென்று சொல்'' எனக் கூறிவிட்டு வாயில் வழியாக வெளியே சென்று விட்டான். சென்றபோது கதவை ஓசைப்படாமல் சாத்தியும் சென்றான்.

பஞ்சணையில் படுத்துக்கிடந்த இளமாரன் காஞ்சி வர்மன் நாடகத்தை கவனிக்கவே செய்தான். அங்கு படுத்திருப்பது தாம் என்று தெரிந்ததும், இல்லாத ஒரு வேலைக்காரனோடு பேசிச் சென்றுவிட்டதை நினைத்து ''காஞ்சிவர்மா! உனது நாடகமெல்லாம் இன்னும் இரண்டே நாட்கள். பிறகு இவ்வுலகில் உன் காரியம் முடிந்துவிடும்'' என்று தனக்குள் சொல்லிக்கொண்டான்.



அப்படி எண்ணங்களை ஓடவிட்டு ஒரு நாழிகை நேரம் படுத்திருந்த பிறகு மெல்லக் கிளம்பி நீலரதி படுத்திருந்த அடுத்த அறைக்குச் சென்று மெதுவாக தனது ஒரு விரலால் கதவைத் தட்டினான். சிறிது நேரத்திற்கெல்லாம் நீலரதி கதவைத் திறந்துவிட்டு அதன் மறைவில் நின்று கொண்டாள். இளமாரன் உள்ளே நுழைந்ததும் தனது கையிலிருந்த கத்தியை சரேலென்று ஓங்கினாள். அந்தக் கையை இறுகப் பிடித்த இளமாரன் ''நான்தான் நீலரதி'' என்று கூறிவிட்டு கதவை மெதுவாகச் சாத்தினான்.

''நீங்களா!'' —வியப்புடன் கேட்க ஆரம்பித்தாள் நீலரதி.

''உஸ், மெல்லப் பேசு'' என்ற இளமாரன், ''மெல்ல என்னுடன் வா. இனி அந்த அறையில் ஆபத்து ஏதுமில்லை'' என்றான்.

''என்ன நடந்தது?'' என்று மெதுவாக வினவினாள் நீலரதி.

''அங்கு பேசிக்கொள்ளலாம்'' என்று சொன்ன இளமாரன் அவள் இடையை அணைத்தவண்ணம் வெளியே வந்து அறைக் கதவைப் பழையபடி சத்தமேதுமில்லாமல் சாத்தினான். தனது பழைய அறைக்கு அவளை அழைத்து வந்து அந்த அறைக்கதவையும் சாத்தி அவளை பஞ்சணையில் படுக்க வைத்தான். பிறகு அவளருகில் உட்கார்ந்தவண்ணம் நடந்த கதையைச் சொன்னான்.

''அதற்காகத்தான் பக்கத்து அறையில் என்னைப் படுக்கச் சொன்னீர்களா?'' என்று வினவினாள் நீலரதி.

''ஆம் நீலரதி. காஞ்சி வர்மனை எனக்கு நன்றாகத் தெரியும். இந்த அறைக்குள் முதலில் வந்தவுடனேயே தாழ்வரைப் பக்கத்திலிருந்த ரகசியக் கதவைச் சோதித்தேன். அதன் தாழ்ப்பாள் நீக்கப்பட்டிருந்தது. அவனை இன்றே இங்கேயே தீர்த்துவிட உறுதிகொண்டு நீ படுக்க

வேண்டிய இடத்தில் நான் படுத்தேன். எதிர்பார்த்த படிதான் சகலமும் நடந்தது. ஆனால் காஞ்சி வர்மன் நடந்ததை உணர்ந்து கொண்டான்...'' என்று விளக்கினான் இளமாறன்.

''எப்படி?'' என்று வினவினாள் நீலரதி.

''காஞ்சி வர்மன் கட்டிலின் அருகில் வந்தான்...''

''உம்.''

''சிறிது நின்றான்...''

''உம்.''

''பிறகு என் மார்பில் கையை வைத்தான்.''

இம்முறை நீலரதி 'உம்' கொட்டவில்லை. வெட்கம் உயிரைப் பிடுங்க மௌனமே சாதித்தாள். இளமாறனே தொடர்ந்து சொன்னான்: ''என் மார்பு உன் மார்பைப் போலிருக்குமா நீலரதி?'' என்று கேட்டான்.

நீலரதி அவனைக் கொன்று விடுவதுபோல் பார்த்தாள். ''என்ன பேச்சு இது?'' என்று எரிந்து விழுந்தாள்.

''உண்மைப்பேச்சு'' என்ற இளமாறன் தனது கையால் அவள் மார்பைத் தொட்டான்.

அந்தக் கையைத் தூக்கி எறிந்தாள் நீலரதி சினத்துடன். ''தொடும் கையை வெட்டி விடுவேன்'' என்றும் சீறினாள்.

''ஏன் நீலரதி?'' என்று கெஞ்சினான் இளமாறன்.

''என் இஷ்டமில்லாமல் என்மீது யாரும் கையை வைக்கக்கூடாது!'' என்றாள் நீலரதி.

''நான் கூடவா?''



''ஆம். நீங்கள் கூடத்தான்.''

''இந்தத் தண்டனை ஏன்?''

''நீங்கள் செய்ய முயலும் முறைகெட்ட வேலைக்கு''

''முறைகெட்ட வேலையா?''

''ஆம். சிந்தித்துப் பாருங்கள்.''

''சிந்திப்பதற்கு என்ன இருக்கிறது இதில்?''

''நான் இன்னொருத்தன் மனைவி, உதயகுமாரன் மனைவியாக நீங்களே தீர்மானித்திருக்கிறீர்கள். அதுவும் அவனை உங்கள் மகன்போல் நடத்துகிறீர்கள். மருமகளை மாமனார் தீண்டுவது முறையா?'' என்று வினவிய நீலரதி மெல்ல இளமாறன்மீது சாய்ந்து நகைத்தாள்.

இளமாறன் முகத்தில் கோபத்தைப் படரவிட்டுக் கொண்டான். ''மருமகளே! என்னைத் தொடாதே'' என்றான்.

நீலரதி மெதுவாக நகைத்தாள். சட்டென்ற அவள் நகைப்பு உதடுகளில் உறைந்தது. யாரோ அறைக்கு வெளியே நடக்கும் அரவம் அவள் காதில் விழுந்ததால் சற்று விலகியும் உட்கார்ந்தாள் அவள். அந்த ஒலி இளமாறன் காதிலும் விழுந்திருக்க வேண்டும். அவன் சட்டென்று எழுந்து வெளியே சென்று பார்த்தான். அங்கு யாரும் இல்லை. ஆனால் காஞ்சி வர்மன் அறைக் கதவு அப்பொழுதுதான் மெதுவாக மூடிக் கொண்டிருந்தது.

மீண்டும் அறைக்குள்வந்து பஞ்சணையில் உட்கார்ந்து கொண்ட இளமாறன் ''மருமகளே!'' என்று ஏதோ பேசத் தொடங்கினான்.

''இன்னொரு முறை அப்படி அழைத்தால் நாக்கைத் துண்டித்து விடுவேன்'' என்றாள் நீலரதி.

இளமாறன் அவளைத் தனது கைகளால் கட்டினான். ''முதலில் கையைத் துண்டிப்பேன் என்றாய். இப்பொழுது நாக்கைத் துண்டிப்பதாகச் சொல்கிறாய். இப்படி என்னை அணு அணுவாக வெட்டினால் என் உடலில் என்ன மிஞ்சும்?'' என்று கேட்டான்.

''பொறுங்கள். எல்லாம் இந்தப் பௌர்ணமியன்று முடிந்துவிடும்'' என்ற அவள் தனது தலையை அவன் தோள்மீது சாய்த்தாள்.

''எல்லாம் என்றால்? நீ மருமகளா மனைவியா என்பதா?'' என்று கேட்ட இளமாறன் லேசாக நகைத்தான். அவளைப் பஞ்சணையில் மெதுவாகப் படுக்க வைத்தான்.

□ □ □

# 40. கதையல்ல, கண்ணால் கண்டது

இரண்டாவது முறையாக அவளைப் பஞ்சணையில் படுக்க வைத்த இளமாறன் கட்டிலிலிருந்து எழுந்து நின்று லேசாக நகைத்து ''நாளன்றைக்கு சகலமும் வெளிச்சமாகும். இனிக் கவலைப் படாமல் படு'' என்று கூறிவிட்டு நகர எத்தனித்தவனை ''எங்கு போகிறீர்கள்'' என்ற நீலரதியின் சொற்கள் தடுத்தன.

அவளிடம் விடை பெற்றுக் கொண்டு விட்டதாக நினைத்து திரும்பி காலை எடுத்து வைத்தவன் மீண்டும் திரும்பி ''எங்கு போவேன்; உன் அறைக்குத்தான் போகிறேன்'' என்றான்.

''இங்கு எனக்குத் துணை யார்?''-நீலரதியின் கேள்வியில் உஷ்ணம் மிதமிஞ்சி ஒலித்தது.

''எதற்கு துணை உனக்கு? உன்னை யார் என்ன செய்து விடுவார்கள்?''

''நல்ல பைத்தியக்காரக் கேள்வி. சற்று முன்புதான் காஞ்சி வர்மன் என் பள்ளியறைக்கு வர முயன்றான்...'' என்று அவள் சொற்களில் எரிச்சல் ஒலித்தது.

அதை அவன் கவனித்தாலும் கவனிக்காதது போலவே நடந்து கொண்டான். ''முயலத்தானே செய்தான்? முயற்சி பலித்ததா?'' என்று வினவிய இளமாறன் புன்முறுவல் செய்தான்.

''பலிக்கவில்லையென்று வருத்தமா?'' என்று நீலரதி கேட்டாள்.

''அதற்கு வருத்தமில்லை.''

''வேறெதற்கு?''

''அவன் முயற்சி ஒழுங்காக இல்லை.''

''என்ன உளறுகிறீர்கள்?''

''அவன் ஒழுங்காக முயன்று, சரியான அறைக்குள் நுழைந்து உன் மீது கை வைத்திருந்தால்...''

''என்ன!'' சீறினாள் நீலரதி.

''பிரச்னை தீர்ந்திருக்கும். எகிப்திய பிரமிட்டில் ராணியின் தோழி உனக்குக் கொடுத்த கத்தி காஞ்சி வர்மன் உயிரைக் குடித்திருக்கும். அவனைக் கொல்லும் வேலை எனக்கு மிச்சப்பட்டிருக்கும்'' என்று வருத்தத்துடன் சொன்னான் இளமாறன்.

அவன் சொற்கள் சிறிது மனச்சாந்தியை அளித்ததால் அந்த சாந்தி முகத்திலும் நிலவ சொன்னாள்: ''நீங்கள் என்னைக் கொலைகாரி என்று சொல்கிறீர்களா?'' என்று.

கட்டிலுக்கருகில் நின்றபடியே பேசினான் இளமாறன்; ''சில சமயங்களில் கொலை தவிர்க்க முடியாதது. தற்காப்புக்காக செய்யப்படும் கொலையைக் கொலையென்று சொல்ல முடியாது. அது அநீதிக்குக் கொடுக்கப்படும் தண்டனை. ஆனால் அவன் தலையில் என் கையால் மாள வேண்டுமென்று எழுதியிருக்கிறது'' என்றான்.

நீலரதி பஞ்சணையில் எழுந்து உட்கார்ந்தாள்: ''அவனிடம் ஆள் பலம் இருக்கிறது. நமக்கு உதவியாயிருக்கக் கூடிய சத்திரக்காரனையும் உதயகுமாரனையும் கூட பிரித்து விட்டான். இப்பொழுது அவனிடம் நாம் தனித்து அகப்பட்டுக் கொண்டிருக்கிறோம். அவன் எதையும் நம்மைச் செய்துவிட முடியும். செய்து தப்பவும் முடியும்'' என்று கூறினாள் உட்கார்ந்த நிலையில்.

இளமாறன் அவள் தோள்மீது தனது வலக் கையை வைத்தான் ஆறுதலாக: ''நீலரதி! நீ நினைப்பது போல் அவன் என்னைக் கொல்வது அவ்வளவு சுலபமல்ல. மன்னர் சிறை செய்து அனுப்ப உத்தரவிட்டவர்களை



இவன் கொன்றால் இவன் களப்பிர மன்னனுக்கு பதில் சொல்ல வேண்டியிருக்கும். பதில் திருப்தியாக இல்லாவிட்டால் காஞ்சிவர்மன் உறையூர் சிறையில் சித்திரவதை செய்யப்படுவான். இதெல்லாம் அவனுக்குத் தெரியும். அதனால்தான் தாமதிக்கிறான். நாம் தப்ப முயலாதிருப்பது அவனுக்கும் பெரிய தலைவேதனை. நாம் தப்ப முயன்று அவன் ஆளை விட்டு நம்மைக் கொன்றால் தப்ப முயன்றதைக் காரணமாகக் காட்டலாம். இப்பொழுது அவனால் எதுவும் முடியாது. அவன் திட்டம் எனக்குத் தெரியும். பௌர்ணமியன்று எல்லாவற்றுக்கும் முடிவு வரும். அதுவரை பொறுத்திரு. அவன் எதைச் சொன்னாலும் மறுக்காதே. எந்த நிமிடத்திலும் எனது வாள் உன் பக்கத்தில் இருக்கிறதென்று உறுதியுடன் இரு. வஞ்சகத்தை வஞ்சகத்தால் அறுக்க வேண்டும். சற்று பொறுத்திரு'' என்று சொல்லிவிட்டு அவள் பதிலுக்காகக் காத்திராமல் அறையைவிட்டு வெளியேறினான். அறைக்கு வெளியே ஒரு விநாடி நின்றவன் அறைக்கதவு சாத்தப்பட்டதையும், மெதுவாக தாளிடப்பட்டதையும் கவனித்து விட்டு பக்கத்து அறையை நோக்கி நடந்தான்.

முந்திய நாள் நீண்ட நேரம் விழித்திருந்த நீலரதி மறுநாள் காலை நிதானமாகவே எழுந்தாள். எழுந்ததும் பக்கத்து அறைக்குச் செல்ல முயலவே அங்கிருந்த பணிமகள் ''அவர் விடியற்காலையிலேயே எழுந்து சென்று விட்டார்'' என்று தெரிவித்தாள்.

''எங்கு போயிருக்கிறார்?''

''தெரியாது''—பணிமகள் பதில் சட்டென்று வந்தது.

''இந்த மாளிகை எசமான்?'' என்று கேட்டாள் நீலரதி.

''அவரும் போய்விட்டார்.''

''எங்கு?''

''அதுவும் தெரியாது.''

''வயோதிக காரியஸ்தர் இருக்கிறாரா?''

''இருக்கிறார் கீழ்த்தளத்தில்.''

அதற்குமேல் அவனிடம் எதுவும் கேட்காத நீலரதி படிகளில் இறங்கி கீழ்த்தளத்துக்குச் சென்று காரியஸ்தன் அறையை அடைந்து அதைத் திறந்தாள். கதவு திறந்த ஓசையைக் கேட்டு கிழவன் தலையைத் தூக்கி ''வாருங்கள் எசமானியம்மாள்'' என்று கூறி கண்களை மீது கையை வைத்து அவளை உற்று நோக்கினான். ''உங்களைப் பார்த்தால் எசமானி மாதிரிதான் இருக்கிறது. ஆனால் சற்று வித்தியாசம் தெரிகிறது'' என்றும் சொன்னான்.

''என்ன வித்தியாசம் பெரியவரே?'' என்று வினவினாள் நீலரதி.

சட்டென்று அவன் முகத்தில் ஏதோ வெறி தோன்றியது. ''அவள் இறந்து விட்டாள். நீ இறக்கவில்லை. இறந்தால் நடமாட முடியாது. என்னுடன் பேசவும் முடியாது'' என்று கூறி வெறி பிடித்த சிரிப்பு ஒன்றை உதிரவிட்டான்.

ஆனால் திரும்பிச் செல்ல முயன்றவள் சற்று எட்ட இருந்த எதிர் அறை சாளரத்தில் காஞ்சிவர்மன் முகம் தெரிவதைக் கண்டாள். இந்த வெறி நிஜ வெறியல்ல, நடிப்பு வெறி'' என்று உள்ளூர சொல்லிக் கொண்ட நீலரதி சிந்தித்துக் கொண்டு சில விநாடிகள் நின்றாள். அந்த சில விநாடிகளில் எதிர் அறையை விட்டு வெளியே வந்த காஞ்சி வர்மன் ''உங்களுக்கு ஏதாவது தேவையானால் செய்ய நான் காத்திருக்கிறேன். கிழவன் அரைப் பைத்தியம், ஏதாவது சொல்லுவான், சிரிப்பான், பாவம் பரிதாபத்துக்கு உரியவன்'' என்றான்.

''யாரையும் முழுப் பைத்தியம் என்று சொல்ல முடியாது. சில உளறல்களிலும் உண்மை இருக்கும். சில



தெளிவான பேச்சுகளில் பொய் இருக்கும். எது பொய், எது உண்மை என்று தீர்மானிக்க முடியாதல்லவா?'' என்றாள் நீலரதி.

''நன்றாகச் சொன்னீர்கள். யார் எப்படி என்பதைத் தீர்மானிப்பது கஷ்டம்'' என்ற காஞ்சிவர்மன் ''இரவு உறங்கினீர்களா?'' என்றும் விசாரித்தான்.

''சுமாராகத்தான் உறங்கினேன்'' என்றாள் நீலரதி.

''ஏன், சௌகரியத்தில் ஏதாவது குறைவா?'' அக்கறையுடன் கேட்டான் காஞ்சி வர்மன்.

''ஒரு குறைவுமில்லை. புது இடமாதலால் உறக்கம் சரியாக வரவில்லை. பாதி நேரம் ஏதேதோ கெட்ட கனவு...'' நீலரதி சர்வ சகஜமாக இதைச் சொன்னாள்.

''கெட்ட கனவா?''—போலி வியப்பைக் குரலில் காட்டினான் காஞ்சிவர்மன்.

''ஆம். யாரோ என் அறைக்குள் வருவது போலவும் போவது போலவும் தெரிந்தது. முதலில் நான் கனவென்று அதைக் கருதவில்லை. ஆனால் என் அறைக்குள் யார் வரமுடியும்? ஆகையால் அது கனவாகத்தான் இருக்க வேண்டும். அது மட்டுமல்ல...''

''வேறென்ன?''

''யாரோ ஒருவன்...''

''உம் சொல்லுங்கள்.''

''என் பக்கத்தில் கட்டிலில் உட்கார்ந்தான்...''

''பிறகு?''

''என்னைத் தொட்டான்.''

''அவன் யார் சொல் ரதி. இப்பொழுதே அவனைக் கொன்று விடுகிறேன்!''

பதிலுக்கு நகைத்தாள் நீலரதி. "அதற்குள் பதறிப் படுகிறீர்களே! இவ்வளவு கட்டுக்காவலுள்ள அறைக்குள் யார் வரமுடியும்? கனவு என்று நான் சொல்லவில்லை?" என்றும் சொன்னாள்.

"ஆம் ஆம். கனவாகத்தானிருக்க வேண்டும்."

"உண்மையாக இருந்தால்...இத்தனை நேரம்..."

"என்ன நடந்திருக்கும்?"

"இஷ்ட விரோதமாக என்னிடம் வரும் யாரையும் குத்திப் போடும் சக்தி என்னிடமிருக்கிறது."

"அது என்ன சக்தி?"

"அது என் ரகசியம்" என்று சொல்லிக்கொண்டே வாயிலை நோக்கிச் சென்றாள் நீலரதி.

காஞ்சிவர்மன் தானும் அறியாத ஏதோ சக்தி அவளிடமிருக்குமென்று நினைத்து அசைவற்று நின்றான், நின்ற இடத்திலேயே. ஆனால் கேவலம் ஒருபெண்ணின் மிரட்டலுக்கு தான் மசிவதும் அஞ்சுவதும் தனது ஆண்மைக்கு அழகல்ல என்று தீர்மானித்தான். "எல்லாம் நாளை மறுநாள் தெரியுமடி" என்று உள்ளுக்குள் கறுவிக் கொண்டான்.

அன்று முதல் அவள் போகுமிடங்களைக் கவனிக்கலானான். பிரதி தினம் அவள் கடலாடுவதைக் கவனிக்கவும், சோலைக்குள் செல்லும்போது வேவு பார்க்கவும் தனது வேலைக்காரர்களை நியமித்திருந்தான். மறு நாளைக்கு மறுநாள் இளமாறனுக்கு விருந்தளிக்க எண்ணி பெரும் ஏற்பாடுகளைச் செய்திருந்தாலும் காஞ்சிவர்மன் மனத்தில் ஏதோ விவரிக்க இயலாத அச்சம் உதயமாகி இருந்தது. அதை ஆயிரம் மடங்காக உயர்த்த அவன் நியமித்த வேலைக்காரர் இருவர் செய்தி கொண்டு வந்தார்கள்.



இருவரும் பிரமை பிடித்து ஏதோ பிசாசைக் கண்டவர்கள் போல் காஞ்சி வர்மன் எதிரில் நின்றார்கள். "என்னடா விழிக்கிறீர்கள்? ஏதாவது செய்தி உண்டா?" என்று காஞ்சி வர்மன் வினவினான்.

"உண்டு" என்றான் ஒருவன்.

"என்ன அது சொல்" என்று சீறினான் காஞ்சிவர்மன்.

"எசமான்! இந்த அரண்மனைக்கு வந்திருக்கும் பெண்..." —என்று ஒருவன் தொடங்கினான்.

"பெண்?" —வினவினான் காஞ்சி வர்மன்.

"ஒருத்தியல்ல..." என்றான் ஒருவன்.

"இரண்டு பேர்" என்று முடித்தான் இன்னொருவன்.

"என்ன உளறுகிறீர்கள்?" என்று காஞ்சி வர்மன் சினத்துடன் வினவினான்.

ஒருவன் சொன்னான்: "எசமான்! காலையில் இவர்கள், அதுதான் இந்தப் பெண் கடலில் நீராடப் போனார்களா?" என்று தொடங்கினான்.

"அதற்கென்ன?"

"அவர்கள் நீருக்குள் மூழ்கியதும் கரையில் இன்னொரு பெண், சாட்சாத் இரட்டை-தோன்றினாள். பிறகு இவர் மூழ்க அவர் எழுந்திருக்க, அவர் மூழ்க இவர் எழுந்திருக்க..."

இதைக் கேட்ட காஞ்சி வர்மன் "சே! இருவரும் ஒருவரேதான்" என்றான்.

"ஒரே மாதிரிதான் இருந்தார்கள். ஆனால் இருவரும் வெவ்வேறு." இதைத் திட்டமாகச் சொன்னான் வேலைக்காரன்.

காஞ்சிவர்மன் இன்னொருவனை நோக்கினான். ''உன் கதை என்ன?'' என்று வினவினான்.

''பக்கத்து தோப்பில் இந்தப் பெண் வந்தாள்...''—இதைச் சொன்ன அவன் உடல் உதறியது.

''சரி சொல்லடா''

''இந்தப் பெண் வந்ததும் இன்னொரு பெண் பக்கத்தில் தோன்றினாள். இவள் பக்கத்திலேயே நடந்தாள். இரண்டு பேரும் ஒரே அச்சு. ஆனால் ஒருவரையொருவர் பார்க்கவில்லை'' என்றான் வேலைக்காரன்.

''இந்தக் கதையை யார் சொல்லிக் கொடுத்தது?'' என்று காஞ்சி வர்மன் கேட்டான்.

''கதையல்ல, நாங்கள் கண்ணால் பார்த்தது.''—இதை இருவரும் ஒரே சமயத்தில் சொன்னார்கள்.

காஞ்சி வர்மன் மனம் குழம்பியது. எதற்கும் நீலரதியையே இதைப்பற்றி நேரில் கேட்டுவிடுவது என்று தீர்மானித்தான். அந்தச் சமயத்தில் நீலரதி உள்ளே நுழைந்து மாடிப்படிகளில் ஏறிச் சென்றாள். அவளைத் தொடர இரண்டடி எடுத்து வைத்தான் காஞ்சி வர்மன். அந்த விநாடியில் மற்றொரு நீலரதி உள்ளே நுழைந்தாள். மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டான் காஞ்சிவர்மன்.

□ □ □

# 41. விருந்தும் மருந்தும்

இரண்டாவது நீலரதியைக் கண்டதும் அதிர்ச்சியால் கண்களை மூடிக்கொண்ட காஞ்சி வர்மன் தனது வேலைக்காரர்கள் கூறியதில் ஓரளவு உண்மை இருப்பதைப் புரிந்து கொண்டாலும் அதை உண்மை என்று நம்ப முடியாமல் தவித்தான். பிசாசு-பேய் எல்லாம் பழங்காலத்து வீண் கதை என்றும் தற்காலத்துக்கு ஒவ்வாததென்றும் தீர்மானித்த காஞ்சி வர்மன், ரதியின் அறைக்கே சென்று அவளையே அதைப்பற்றிக் கேட்டு விடுவதென்று முடிவு செய்து அவள் சென்ற அதே மாடிப் படிகளில் ஏறிச்சென்று அவள் அறைக்கதவைத் தட்டினான். ''யாரது?'' என்று கேள்வி வந்தது உள்ளிருந்து.

''நான்தான்'' என்று மிகுந்த பணிவுடன் பதில் சொன்னான் காஞ்சி வர்மன்.

சிறிது நேரத்திற்கெல்லாம் கதவைத் திறந்த நீலரதி ''ஏன் வெளியே நிற்கிறீர்கள்? உள்ளே வாருங்கள்'' என்று அழைத்தாள்.

இந்த அழைப்பு காஞ்சி வர்மனுக்கு மீண்டும் சந்தேகத்தைக் கிளப்பி விட்டது. என்றைக்கும் தன்னைக் கண்டால் விலகிச்சென்ற ரதி இன்று தன்னை வரவேற்று உள்ளே அழைப்பதற்கு காரணம் எதுவாயிருக்கும் என்று சிந்தித்தான். ஒருவேளை தன்னுடன் பேசிக் கொண்டிருப்பது அந்த இன்னோர் உருவமாக இருக்குமோ என்ற சந்தேகம் ஏற்படவே வாயிற்படிக்கருகில் நின்றபடியே உள்ளுக்குள் பார்வையைச் செலுத்தினான்.

''யார் வேண்டும் உங்களுக்கு? இங்கு என்னைத் தவிர வேறு யாருமில்லை. தைரியமாய் வாருங்கள்'' என்று அழைத்து லேசாக புன்முறுவலும் செய்தாள் நீலரதி.

இந்த அழைப்பினால் காஞ்சி வர்மனுக்கு உள்ளூர உதறல் ஏற்பட்டாலும் அதை வெளிக்குக் காட்டாமல் நீலரதி வாயிற்படியிலிருந்து விலகி வழிவிட உள்ளே நுழைந்தான். ''இப்படி அமருங்கள்'' என்று உள்ளே வந்த காஞ்சி வர்மனுக்கு அங்கிருந்த கட்டிலைக் காட்டினாள் நீலரதி.

அதனால் சந்தேகம் வலுக்க—சிந்தனை குலுங்க கட்டிலில் உட்கார்ந்த காஞ்சி வர்மன் ''ரதி! உன்னை ஒரு விஷயம் கேட்க வேண்டும்'' என்று தொடங்கினான் மெதுவாக.

''தாராளமாகக் கேளுங்கள்'' என்றாள் நீலரதி.

''வேறொன்றுமில்லை. உனக்கு சகோதரிகள் யாராவது உண்டா?'' என்று வினவினான் காஞ்சி வர்மன்.

''இல்லை. என் பெற்றோருக்கு நான் ஒரே மகள்'' என்றாள் நீலரதி.

காஞ்சிவர்மன் சிறிது சிந்தனை வசப்பட்டு நின்றான். பேசாமலே சில விநாடிகள். பிறகு தொடங்கினான்: ''நானும் அப்படித்தான் நினைத்தேன். ஆனால் வேலைக்காரர்கள் கதை சொல்கிறார்கள்...'' என்று.

''கதையா? என்ன கதை?'' சென்று வினவினாள் நீலரதி.

''வேறொன்றுமில்லை. நீ கடலில் நீராடியபோது உன்னைப்போலவே இன்னொரு பெண்ணும் உன்னுடன் நீராடினாளாம். பிறகு தோப்பிலும் உன்னைத் தொடர்ந்து அவள் வந்தாளாம்...'' என்ற காஞ்சிவர்மன் நிதானித்தான்.



நீலரதியின் முகத்தில் ஆழ்ந்த சிந்தனை புலப்பட்டது. அந்த சிந்தனை அவள் உதடுகளில் புன்முறுவலாக மாறியது. ''நல்ல கதை! என்னைப்போல் இன்னொருத்தியா? எப்படி இருக்க முடியும்?'' என்று கேட்டாள் புன்முறுவலின் ஊடே. ஆனால் உள்ளூரத் தீர்மானித்தாள் ஐலிஸ் உதவிக்கு வந்துவிட்டாள் என்று.

காஞ்சி வர்மன் அவள் முகமாறுதல்களை கவனிக்கவே செய்தான். ''இருக்க முடியாது. இருக்க முடியாது. உன்னைப் போன்ற ஓர் அழகி இந்த உலகத்தில் இருக்க முடியாது'' என்று சொன்னான்.

அந்த முகஸ்துதியை அவள் ஏற்கவே செய்தாள். ஆகவே சொன்னாள் ''நீங்கள் அத்துமீறிப்புகழ்கிறீர்கள்'' என்று.

''அத்துமீறிப் புகழவில்லை ரதி! சரியாகப் புகழ்வதற்கு சொற்கள் வரவில்லை. நான் கவியா என்ன, நினைத்தவுடன் கவிதை பொழிவதற்கு?'' என்று காஞ்சி வர்மன் கட்டிலிலிருந்து எழுந்தான்.

''ஏன் அத்தனை அவசரமாகப் போகிறீர்கள்? சற்று இருந்துவிட்டுப் போகலாமே'' என்றாள் நீலரதி.

அன்று நீலரதியின் போக்கு வழக்கத்துக்கு முற்றும் மாறாக இருப்பதைக் கண்டு சந்தேகப்பட்ட காஞ்சிவர்மன் பிறகு வருவதாகக் கூறிவிட்டு அந்த அறையை விட்டு வெளியேறினான். போகும்போது ''ரதி! இன்று பௌர்ணமி! இன்றுதான் உங்கள் இருவருக்கும் விருந்து வைப்பதாக இருக்கிறேன். இரவு ஆறு நாழிகைகள் சென்றதும் விருந்து. அதைப் பார். அந்த மாதிரி விருந்தை நீ ஆயுளில் அருந்தியிருக்கமாட்டாய்'' என்று கூறிவிட்டுச் சென்றான்.

அங்கிருந்து தனது அறைக்குச் சென்றவன் நீண்ட நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். பிறகு கிளம்பி

பக்கத்திலிருந்த பெரிய விருந்தறைக்குச் சென்று சுவரில் மாட்டியிருந்த பெணின்ன் உருவப்படத்தை உற்றுப் பார்த்துக்கொண்டு நின்றான். பிறகு அந்தப் படத்தைப் பார்த்துப் பேசினான்: ''அடி காமவல்லி! என்னை ஏமாற்றி தற்கொலை செய்து கொண்டாய். இன்று அதே கண்களால் இந்த விருந்தைப் பார்த்துக் கொண்டிரு. உன் கணவனை உன் முன்னாலேயே தீர்த்துவிடுகிறேன். பிறகு அவன் அழைத்து வந்திருக்கும் அந்தப் பைங்கிளியை உன்னுடைய பழைய பள்ளியறையிலேயே பெண்டாளு கிறேன்.''—இதைச் சொன்ன காஞ்சிவர்மன் 'சென்ற முறை மாதிரி ஏமாறக் கூடாது. மாரன் என்ற பாதிப் பெயரில் வந்திருக்கும் இளமாரனை அடிமையாக விற்கக் கூடாது. மீண்டும் எழுந்திருக்காதபடி புதைத்துவிடு கிறேன்' என்று அன்றைய திட்டத்துக்கு முடிவும் கட்டி னான். அதற்கான ஏற்பாடுகளிலும் முனைந்தான்

காரியஸ்த கிழவனை அழைத்து அன்றிரவு விருந்து நடக்கப்போவதாக அறிவித்தான். அதற்கான ஏற்பாடு களைச் செய்யவும் பணித்தான்.

காரியஸ்த கிழவன் தனது சிறு கண்களைக் கொட்டி னான். ''இம்முறை யார்?'' என்றும் கேட்டான்.

''உன் பழைய எசமான்'' என்றான் காஞ்சிவர்மன்.

''அவர்தான் இறந்து பலவருடங்கள் ஓடிவிட்டனவே'' என்றான் காரியஸ்தன்.

அடுத்து காஞ்சி வர்மன் முகத்தில் சினம் துளிர்த்தது. ''கிழவா! யாரிடம் உன் சாமர்த்தியத்தைக் காட்டுகிறாய்? வந்திருப்பவன் உன் பழைய எசமான் என்பது உனக்குத் தெரியாது?'' என்று கேட்டான் கோபத்தால் படபடத்த இதயத்துடன்.

கிழவன் பிரமையை முகத்தில் காட்டினான். ''இறந் தவர் எப்படி வருவார்?'' என்றும் வினவினான் பிரமை தட்டிய குரலில்.



''அவன் இறக்கவில்லை'' என்றான் காஞ்சிவர்மன்.

''இறந்ததாக நீங்கள் தானே சொன்னீர்கள்?''

''சொன்னேன். எதிர்பார்த்தேன். ஆனால் அவன் இறக்கவில்லை. என்னைப் பழிவாங்க இங்கு வந்திருக் கிறான்.''

''அப்படியா?''

''ஆமாம்''

''நிச்சயமாகத் தெரியுமா?''

''தெரியாமலென்ன?''

''இப்பொழுது வந்திருக்கும் பெண்ணுக்கு ஓர் இரட்டை உலாவுவதாக வேலைக்காரர்கள் சொல் கிறார்கள். அப்படியானால் இந்தப் புது எசமானும் இரட்டையாக ஏன் இருக்கக் கூடாது? இறந்தவர் அருவ மாக ஏன் வந்திருக்கக் கூடாது?''

கிழவனின் இந்தக் கேள்வியால் காஞ்சிவர்மன் குழம்ப வில்லை. ''அப்படியிருக்க நியாயமில்லை. நீ விருந்துக்கு ஏற்பாடு செய்'' என்றான் திட்டமாக.

''அப்படியானால் மருத்துவர் வீட்டுக்குப் போய்வரட் டுமா?'' என்று கிழவன் கேட்டான்.

''போய்வா'' என்ற காஞ்சி வர்மன் ''கிழவா! உனக்கு வயதாகியும் மூன் யோசனை போகவில்லை. மனம் திட்ட மாக வேலை செய்கிறது'' என்றான்.

''விருந்துக்கு மருந்தை நானே வாங்கி வரட்டுமா அல்லது மருத்துவரைக்கொண்டு வரச் சொல்லட்டுமா?'' என்று கிழவன் வினவினான்.

''அவரையே கொண்டு வரச் சொல்'' என்று உத்தர விட்ட காஞ்சிவர்மன் ''காரியஸ்தரே! விருந்து முழுமை

எழுந்து ஆறு நாழிகைக்குப் பிறகு" என்று சொல்ல, கிழவன் படிகளில் இறங்கி ஓடினான்.

அன்று பகல் முழுவதும் விருந்து ஏற்பாடுகள் துரிதமாக நடந்தன. வேலைக்காரர்கள் சதா அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருந்தார்கள். மாலைக்குள்ளாகவே சகல ஏற்பாடுகளும் முடிந்துவிடவே விளக்கு வைத்ததும் அந்த மாளிகை ஜகஜ்ஜோதியாகக் காட்சியளித்தது. முழுமதியும் மெல்ல மெல்ல உதயமாயிற்று. மல்லைக்கடல் முகப்பு மாளிகைப் பகுதியை வெள்ளிமயமாக ஆக்கிற்று முழுமதி. விருந்து அறைக்கு உணவு வகையறாக்கள் கீழிருந்து போய்க் கொண்டிருந்தன.

முழுமதி தோன்றி ஆறு நாழிகைகள் கழிந்ததும் விருந்து அறைக்குள் காஞ்சிவர்மன் நுழைந்தான். அவனைத் தொடர்ந்து இளமாறனும் நீலரதியும் நுழைந்தார்கள். மூன்று தனித்தனி ஆசனங்களுக்கு முன்பாகப் போடப்பட்டிருந்த தேக்கமர மஞ்சங்களில் வெள்ளித் தட்டுகள் வைக்கப்பட்டிருந்தன. மது அருந்தப் பெரிய வெள்ளிக் கோப்பைகளும் காட்சியளித்தன. அரச மாளிகை விருந்து மண்டபங்களைவிட அழகாகத் தெரிந்த அந்த அறையில் ஆசனங்களில் மூவரும் அமர்ந்ததும் விருந்து தொடங்கிற்று. விருந்தை அவர்கள் உண்டு கொண்டிருக்கையில் காரியஸ்தன் ஒரு பெரிய மதுக்குப்பியைக் கொண்டுவந்து கொடுத்து "இதை வைத்தியர் நமது சிறப்பு விருந்தினருக்காக அனுப்பியிருக்கிறார். இதில் போதை அதிகமிருப்பதால் கொஞ்சமாக மருந்துபோல் அருந்தும்படி எச்சரித்திருக்கிறார்" என்றும் கூறிச் சென்றான்.

உணவு முடிந்ததும் நீலரதியைத் தவிர மற்ற இருவரும் மதுவை அருந்த ஆரம்பித்தார்கள். காஞ்சிவர்மன் மதுவை பெருக்கே அருந்துவதையும் இளமாறன் இஷ்டப்படி குடிப்பதையும் கண்டு கவலைமிக்கவளாய் "அதிக



மாகக் குடிக்காதீர்கள். மருத்துவர் எச்சரித்திருக்கிறார்" என்று கூறினாள். அவள் அப்படி எச்சரித்துக் கொண்டிருக்கையிலேயே இளமாறன் தலை சட்டென்று தொங்கியது. தொங்கிய தலையுடன் எழுந்து நடக்க ஆரம்பித்தவன் தள்ளாடி கால்கள் பின்ன நடந்து கதவிடம் சென்று அதில் மோதிக்கொண்டு நின்றான்.

"இளமாறா! விருந்தில் மருந்து நன்றாக வேலை செய்திருக்கிறது" என்று சொல்லிக்கொண்டே காஞ்சிவர்மன் இளமாறனை அணுகினான். அதுவரை கதவில் மோதிக் கொண்டு நின்ற இளமாறன் கால் துவளக் கீழே சரிந்து தரையில் உட்கார்ந்தான்.

அவனை வெறுப்புடன் பார்த்த காஞ்சிவர்மன் அவனருகில் சென்று அவன் தலைக்குழலைப் பிடித்துத் தூக்க முயன்றான். அதற்காகக் குனிந்தவன் சிலையென குனிந்தபடியே நின்றான். இளமாறன் வாளின் நுனி அவன் கழுத்தைத் தடவிக்கொண்டிருந்தது. சற்றுத் தலையை நிமிர்ந்தான் காஞ்சிவர்மன். அறைக்கதவு தாளிடப்பட்டிருந்ததை அவன் கண்கள் கண்டன. விருந்தில் மருந்து சேரவில்லை என்பதை அவன் மனம் புரிந்து கொண்டது.

□ □ □

# 42. நிபந்தனை

இளமாரன் வாளின் கூரிய நுனி தனது கழுத்தைத் தடவிக் கொண்டிருந்தபடியாலும், அவன் கண்கள் தன்னைப்பார்த்து நகைத்தபடியாலும், அவனை தீர்த்துக் கட்ட தான் வகுத்த திட்டம் விரிசல் கண்டுவிட்டதைப் புரிந்துகொண்ட காஞ்சிவர்மன் மெதுவாக நிமிர்ந்தபோது வாளின் நுனியும் தொட்ட இடத்தை விட்டுவிடாமல் நிமிர்ந்தது. அத்துடன் மெதுவாக எழுந்த இளமாரன் பெரிதாகவும் பயங்கரமாகவும் சிரித்தான் ஒருமுறை. இந்த சிரிப்பைத் தொடர்ந்து அவன் கண்களில் ஒருவித கடுமையும் உதயமாகி முகத்திலும் பரவியதைக் கண்ட காஞ்சிவர்மன் தான் பேராபத்தில் சிக்கியிருப்பதை உணர்ந்து கொண்டாலும் அதை வெளிக்குக் காட்டாமல் ''இளமாரா!'' என்று சர்வசாதாரணமான குரலில் அழைத்தான்.

இளமாரன் நீட்டிய கத்தியை இறக்கவுமில்லை. அப்புறமோ இப்புறமோ அசைக்கவுமில்லை. ''காஞ்சிவர்மா! உன் அரைகுறை புத்தி திருந்திவிட்டதற்காக உன்னைப் பாராட்டுகிறேன்'' என்று சொன்னான், ஏளனம் மிகுந்த குரலில்.

காஞ்சிவர்மன் மென்று விழுங்கினான் ஒருமுறை. ''அரைகுறை புத்தியா?'' என்றும் வினவினான்.

''இன்று காலைவரை என்னைமாரா என்று அழைத்து வந்தாய். ரதி என்று இவளை அழைத்தாய். அந்த அரைவாசி புத்தி இப்பொழுது முழுமை பெற்றுவிட்டதால் முழுப்பெயரால் அழைக்கிறாய். ஆனால் முழுமையான இந்த புத்திகூட உன்னைக் காப்பாற்ற முடியாது'' என்ற



30579
45675

இளமாரன் தனது வாளின் நுனியை சிறிது அதிகமாகவே எதிரியின் கழுத்தில் அழுத்தினான்.

காஞ்சிவர்மன் கண்களில் அச்சம் தெளிவாக உதயமாயிற்று. ''இளமாரா! என்னிடம் வாளில்லை. நான் நிராயுத பாணியாய் நிற்கிறேன். இந்த நிலையில் என்னைக் கொல்வது தர்மவிரோதம்'' என்றான் சிறிது அச்சம் குரலில் நிலவ.

பதிலுக்கு இளமாரன் பெரியதாகவும் குரூரமாகவும் நகைத்தான். ''பிசாசு வேதாந்தம் பேசுகிறது. காஞ்சிவர்மா! உனக்கும் தர்மத்துக்கும் என்ன சம்பந்தம்? யாரிடத்தில் நீ தர்மமாக நடந்து கொண்டிருக்கிறாய்?'' என்று சிரிப்பின் ஊடே கேட்ட இளமாரன், ''ஆனால் நீ யாருக்கும் செய்யாத உதவியை நான் உனக்குச் செய்கிறேன்'' என்று கூறிவிட்டு ''நீலரதி! அறை மூலையில் இருக்கும் இவன் வாளை எடுத்து இவனிடம் கொடு. இறக்கும்போதாவது இவன் வீரனாக இறக்கட்டும்'' என்று கூற, நீலரதி அறை மூலைக்குச் சென்று, அங்கு சாத்தியிருந்த நீண்ட வாளை எடுத்து காஞ்சிவர்மனிடம் நீட்டவே, அவன் அதைக் கையில் வாங்கிக் கொண்டான்.

அப்பொழுதும் காஞ்சிவர்மன் கழுத்தில் இளமாரன் வாளின் நுனி ஊன்றியிருந்ததால் இளமாரனை நோக்கி, ''இப்படி வாள் ஊன்றியிருக்கையில் நான் இந்த வாளை எப்படி கூர் பார்க்கவோ சுழற்றவோ முடியும்?'' என்று வினவினான்.

''அஞ்சாதே! நீ எனக்கு அளிக்காத வாய்ப்பை உனக்கு நான் அளிக்கிறேன்'' என்று கூறி தனது வாளை எதிரியின் கழுத்திலிருந்து அகற்றிய இளமாரன், ''காஞ்சிவர்மா! நான் நாஸ்திகன். எனக்கு தெய்வமில்லை. உனக்கு தெய்வம் ஏதாவது இருந்தால் அதை இப்பொழுதே வேண்டிக்கொள். இன்னும் சில நாழிகைகளில் இதோ இந்த விருந்து மண்டபத்தில் நீ பிணமாகக் கிடப்பாய்.

நான் சரியாக விருந்து அருந்தாவிட்டாலும் கடற்கரைக் கழுகுகளுக்கு உன் சடலத்தை விருந்தாகக் கொடுக்கிறேன்'' என்று கூறினான்.

அதைத் தொடர்ந்து பூமியில் மண்டியிட்டு கண்களை மூடினான் காஞ்சிவர்மன். ஆனால் அவன் உள்ளக் கண்களில் வந்ததெல்லாம் பழைய பயங்கரக் காட்சிகள்! தன்னால் தற்கொலை செய்துகொண்ட இளமாரனின் மனைவி வந்து நகைத்தாள். அவன் மனக்கண்ணில் பின்னாலிருந்து தனது ஆட்களால் மண்டையிலடிக்கப்பட்டு மயங்கி விழுந்த அந்த பழைய வாலிபன் இளமாரன் வந்தான். அவனது கொலைகார ஆட்கள் வந்தார்கள். நல்லது எதுவுமே வரவில்லை. இத்தகைய தோற்றங்களால் அவன் தேகம் லேசாக நடுங்கியது. அவற்றால் ஏற்பட்ட பீதியுடன் எழுந்திருந்த காஞ்சிவர்மன் முற்றும் எதிர்பாராத நடவடிக்கையில் மின்னல் வேகத்தில் இறங்கினான். மண்டியிட்ட நிலையிலிருந்து மெதுவாக எழுந்தவன் சட்டென்று பக்கமாகப்பாய்ந்து நீலரதிக்குப் பின்னால் சென்று தனது வாளை அவள் கழுத்துக் குறுக்கே வைத்தான். ''இளமார! நீ சிறிது அசைந்தாலும் இந்தப் பட்டுக் கழுத்தை அறுத்து விடுவேன். உன் வாளை முதலில் கீழே எறிந்து விடு'' என்றான். தனக்குச் சாதகமாகத் திரும்பிய அந்த நிலையில்கூட காஞ்சிவர்மன் குரல் நடுங்கியது.

நீலரதியின் கழுத்துக்குக் குறுக்கே காஞ்சிவர்மன் வாள் பதிந்து கிடத்த நிலையிலும் இளமாரன் சற்றும் நிதானத்தை இழக்கவில்லை. ''முட்டாள்! இன்று யாரும் அவளைக் கொல்ல முடியாது'' என்றான் இளமாரன்.

''ஏன்? ஏன் கொல்ல முடியாது? இவள் கழுத்து என்ன இரும்பால் செய்ததா?'' என்று காஞ்சிவர்மன் கேட்டான்.

''காரணம் அதுவல்ல''



''வேறென்ன?''

''இன்று பௌர்ணமி''

''அதனாலென்ன?''

''உட்கார்ந்திருப்பவள் நீலரதியல்ல.''

''வேறு யார்?''

''அவளைக் காக்கும் தெய்வம், ஐஸிஸ்,''—இந்தப் பொய்யை வேண்டுமென்றே இளமாரன் சொன்னாலும் காஞ்சிவர்மன் திகில் எல்லை மீறியது. அன்று காவலன் கூறிய விவரங்கள், பிறகு தானே கண்ணால் கண்ட இரண்டு நீலரதிகள் எல்லாம் அவன் நினைப்பில் எழுந்திருக்கவே அவன் திருதிருவென்று விழித்தான். ''பொய் பொய்! தேவதையாவது இங்கு வருவதாவது!'' என்று நடுங்கும் குரலில் பேசினான். அந்தத் திகிலில் அவன் திளைத்திருந்த சமயத்தில் நீலரதியின் கை மெதுவாக நீண்டு அவன் வயிற்றில் மெல்லிய கத்தியை ஊன்றியது. அதை உணர்வினாலேயே அறிந்த காஞ்சிவர்மன் என்ன செய்வதென்று ,தெரியாமல் திகைத்தான். அப்பொழுது பயங்கரமாக ஒலித்தது இளமாரன் குரல். அவனை நோக்கிய காஞ்சிவர்மன், இளமாரன் தனது வாளை இடக் கைக்கு மாற்றிக் கொண்டு விட்டதையும், வலது கையில் அவன் குறுவாளை ஏந்தி தனது மார்புக்குக் குறி வைத்திருப்பதையும் கண்டான். தான் நீலரதியின் கழுத்தில் தனது வாளை சிறிது அழுத்தினாலும், அவன் வயிற்றில் ஊன்றியிருக்கும் சிறுகத்தியும், இளமாரன் வலக்கையில் ஏந்தி நின்ற குறுவாளும் கண்ணிமைக்கும் நேரத்தில் தனது உயிரைக் குடித்துவிடுமென்பதைப் புரிந்து கொண்ட காஞ்சிவர்மன் இருநெருப்பு ஜ்வாலைகளுக்கிடையில் அகப்பட்டுக்கொண்ட பறவைபோல் பதறினான்.

அப்படி அவன் பதறியதை நோக்கிய இளமாரன், ''காஞ்சிவர்மா! நீ கொலைகாரனாகவும், வஞ்சகனாகவும்

வாழ்ந்து விட்டாய், இறக்கும்போதாவது வீரனாக இறக்க உனக்கு வாய்ப்புத் தருகிறேன். அதை இழக்காதே. எடு உன் வாளை'' என்று கடும் சொற்களை உதிர்த்தான்.

''நீங்கள் இருவர். நான் ஒருவன்...'' என்று தப்பப் பார்த்தான் காஞ்சிவர்மன்.

''ஒருத்தி பெண், கவலைப்படாதே. அவள் நமக்கிடையில் வரமாட்டாள்!'' என்ற இளமாறன் ''காலம் கடத்தாதே காஞ்சிவர்மா! உன் வாளை எடுத்துக்கொள். வாழ்வில் ஒரு நாளாவது வீரனாக இருக்க முயற்சி செய்'' என்றான்.

இளமாறன் வலக்கையில் குறுவாளே இருந்தாலும், நீண்ட பெரிய வாள் இடக்கையில் இருந்தாலும், அந்த வாய்ப்பை உபயோகப் படுத்திக் கொள்ளத் தீர்மானித்து தனது வாளை நீலரதியின் கழுத்திலிருந்து எடுத்துக் கொண்டு மிக விரைவில் இளமாறன் மீது பாய்ந்து விட்டான். ஆனால் அதிலும் ஏமாற்றம் காத்திருந்தது காஞ்சி வர்மனுக்கு. இளமாறன் இடக்கையிலிருந்த வாள் காஞ்சி வர்மன் வாளை அலட்சியமாகத் தடுத்தது.

இளமாறன் தற்காப்புக்கு இடங்கொடாமல் வேகமாக வாளால் தாக்கிக் கொண்டே அவனை நெருங்கினான் காஞ்சிவர்மன். அவன் காட்டிய அவசரத்தை இளமாறன் காட்டாமல், மெதுவாக தனது வலக்கையிலிருந்த குறுவாளை இடைக் கச்சையில் செருகிக்கொண்டே இடக் கையால் போராடினான். அவனது இடக்கைப் போராட்டத்தையே தன்னால் சமாளிக்க முடியாததைக் கண்ட காஞ்சிவர்மன் மிகுந்த எச்சரிக்கையுடன் போரிட்டான். ஒருமுறை சாளரத்தருகில் சென்றபோது ''யாரங்கே?'' என்ற குரலும் கொடுத்தான்.

இளமாறன் அவன் வாளை தடுத்துக் கொண்டே ''யாரும் வரமாட்டார்கள். அனாவசியமாக சத்தம் போடாதே. மருத்துவர் எனக்களித்த மருந்து வேலைக்



காரர்கள் மதுவில் கலந்து விட்டது. அவர்களை அடித்தாலும் இப்பொழுது எழுப்ப முடியாது'' என்றான். ''காஞ்சி வர்மா! துணைக்கு யாரையும் அழைத்துப் பயனில்லை. வாழ்க்கையில் ஒரு முறையாவது வீரனாகப் போராடு'' என்று மீண்டும் மீண்டும் கடு சொற்களை உதிர்த்தான்.

அதற்குமேல் தாமதிக்காமல் கவனமாகவும், வேகமாகவும் போரிட்டான் காஞ்சி வர்மன். அவனுக்கு போர்த் திறமை இருப்பதைக் கண்ட இளமாறன், ''இவ்வளவு வாள் திறமையுள்ளவன் ஏன் கயவனாகவும், வஞ்சகனாகவும் வாழ்ந்தான்?'' என்று தனக்குள்ளேயே கேட்டுக் கொண்டான். ஆனால் வாளை சற்று நிதானமாகவே சுழற்றலானான்.

காஞ்சி வர்மன் தனது நிலையை சிறிது நேரத்திற்குள்ளாகவே புரிந்து கொண்டான். இளமாறன் எந்த விநாடியிலும் தன்னைக் கொன்றுவிட முடியுமென்பதையும், அவன் வேண்டுமென்றே மெதுவாகப் போரிடுகிறான் என்பதையும் உணர்ந்து கொண்டதால், தீவிரமாகவே போராடினான். அவன் வாள் நுழைய முற்பட்ட இடங்களிலெல்லாம் இளமாறன் வாள் அதைத் தடுத்தது. தனது பயிற்சியின் அத்தனை முறைகளையும் கையாண்டும் இளமாறன் தற்காப்புக்குள் தான் புக முடியாததை நினைத்து காஞ்சி வர்மன் இதயம் படக்படக்கென்ற அடித்துக் கொண்டது. கண்கள் அச்சத்தால் விரிந்தன. உதடுகள் லேசாகத் துடித்தன. அந்த சமயத்தில் அவன் வாள் கையிலிருந்து பறந்து தூரத்தில் சென்று விழுந்தது. அவன் உடலும் இளமாறன் கையால் தள்ளப்பட்டு கீழே விழுந்தது. இளமாறன் தனது காலை அவன் மார்பில் ஊன்றி, கழுத்தில் கத்தியை ஊன்றி, ''காஞ்சி வர்மா! இருபத்திரண்டு ஆண்டுகளின் கதை இன்று முடிவடைகிறது. சற்று அண்ணாந்து பார்'' என்றான் உக்கிரமான குரலில்.

மல்லாந்து கிடந்த வண்ணமே அண்ணாந்து பார்த்த காஞ்சி வர்மன் கண்களுக்கு சுவரில் மாட்டப்பட்டிருந்த இளமாறன் மனைவியின் படம் தெரிந்தது. படத்திலிருந்தவள் அவனைப் பார்த்து நகைப்பதாகத் தோன்றியது காஞ்சி வர்மனுக்கு ''ஐயோ! நான் உன்னைக் கொல்லவில்லை. நீதானே கத்தியால் தற்கொலை செய்து கொண்டாய்?'' என்று கூவினான் காஞ்சி வர்மன்.

நீலாதி இளமாறன் பக்கத்தில் வந்து நின்று கொண்டான். ''ஏன் தாமதிக்கிறீர்கள்? இந்த நச்சுப் பாம்பை ஒழித்து விடுங்கள்'' என்று சொன்னான்.

இருவரையும் மாறி மாறிப் பார்த்த காஞ்சி வர்மன், ஏதோ ஒரு முடிவுக்கு வந்து, ''இளமாறா! என்னைக் கொல்வதில் உனக்கு லாபமில்லை. எனக்கு நீ உயிர்ப் பிச்சை அளித்தால் நான் உனக்கு இழைத்த தீமைகளுக்குப் பரிகாரம் செய்ய முடியும்'' என்றான். அவன் குரலில் கிலி இருந்தது. முகம் குரலின் கிலியை நன்றாகப் பிரதிபலித்தது.

இளமாறன் சீற்றம் நிரம்பிய விழிகளை அவன்மீது நிலைக்க விட்டான். ''உயிருக்குப் பயந்து உளறாதே. நீ என்ன பரிகாரம் செய்ய முடியும்? இறந்த என் மனைவியையும், கொன்ற என் மகனையும் கொண்டுவர முடியுமா உன்னால்? நீ சாக வேண்டியதுதான்'' என்று சீற்றத்துடன் சொற்களை உதிர்த்து கையின் வாளையும் கழுத்தில் சற்று அதிகமாக அழுத்தினான்.

''இளமாறா! அவசரப்படாதே. நான் சொல்வதைக் கேட்டுவிட்டு பிறகு வேண்டுமானால் கொன்று விடு'' என்று கெஞ்சினான் காஞ்சி வர்மன்.

''சரி சொல்வதைச் சொல்'' என்றான் இளமாறன் வெறுப்புடன்.

''சற்று கீழே உட்கார்'' என்றான் காஞ்சி வர்மன்.



நீலாதியிடம் வாளின் பிடியைக்கொடுத்து, ''வாளைப் பிடித்துக் கொள். இவன் ஏதாவது பித்தலாட்டம் செய்தால் உடனே வாளைக் கழுத்தில் இறக்கிவிடு'' என்று கூறிவிட்டு, காஞ்சி வர்மன் அருகில் உட்கார்ந்தான்.

காஞ்சி வர்மன் தனது கண்களை இளமாறன் கண்களோடு சில விநாடிகள் உறவாட விட்டான். பிறகு மிக மெதுவாகப் பேசத் தொடங்கி அதிர்ச்சி தரும் செய்தியைச் சொன்னான். அதைக் கேட்ட இளமாறன் முகத்தில் பிரமிப்பு, சந்தேகம், அதிர்ச்சி ஆகிய உணர்ச்சிகள் கலந்து தாண்டவமாடின. ''பொய், பொய், சுத்தப்பொய்'' என்று கூவினான் இளமாறன்.

''பொய்யல்ல இளமாறா! உன் மகன், இந்த அரண்மனைச்சொத்துக்கள் அனைத்தையும் ஆள வேண்டியவன், உயிரோடு இருக்கிறான்—'' என்று இழுத்தான் காஞ்சி வர்மன்.

''காஞ்சி வர்மா! சொல்! எங்கே இருக்கிறான்?'' என்று உணர்ச்சி பெருகிய குரலில் வினவினான் இளமாறன். மகனைப் பார்க்க அவன் உணர்ச்சிகள் துடித்தன.

''சொல்ல ஒரு நிபந்தனை உண்டு'' என்றான் காஞ்சி வர்மன்.

''எதுவாயிருந்தாலும் சொல்'' என்று ஆவலுடன் கேட்டான் இளமாறன்.

நிபந்தனையைச் சொன்னான் காஞ்சி வர்மன்.

□ □ □

# 43. அனர்த்தத்தின் எல்லை

கூடல்மல்லைப் பகுதியிலுள்ள அந்த அரண்மனையையும் அதைச் சேர்ந்த சகல சொத்துக்களையும் ஆளவேண்டிய தனதுமகன் உயிருடனிருக்கிறான் என்று காஞ்சி வர்மன் சொன்னதை முதலில் நம்பாத இளமாறன், அவன் முகத்தில் விரிந்த மரண கிலியையும், சொற்களில் ஒலித்த அச்சத்தையும் கவனித்ததால் பிறகு நம்பவே செய்தான். அப்படி ஒருவேளை மகன் உயிருடனிருந்தால், தான் அவனுக்கு கூடல்மல்லை சொத்தையும், அரண்மனையையும் வாங்கிக் கொடுப்பதுதான் தனது மனைவிக்கு செலுத்த வேண்டிய முக்கிய கடமை என்று உணர்வால், காஞ்சி வர்மன் குறிப்பிட்ட நிபந்தனைக்கும் உட்பட்ட இளமாறன் ''சரி, நிபந்தனையைச் சொல்'' என்றான்.

இளமாறன் பிடிவாதமும் பழிவாங்கும் துடிப்பும் சிறிது தளர்ந்ததால் காஞ்சி வர்மன் மெல்ல தைரியத்தை வரவழைத்துக்கொண்டு நீ ''உன் மகனை நான் ஒப்படைத்தால் என்னை நீயோ உன் மகனோ கொல்லக் கூடாது. அது தவிர களப்பிர மன்னரிடமும் என்னைக் காட்டிக் கொடுக்கக்கூடாது. அவன் சிறையில் சிக்கி சித்திரவதைக்கு உள்ளாவதைவிட உனது வாளுக்கு இரையாவது இன்பமானது'' என்று இரண்டு நிபந்தனைகளைச் சொன்னான்.

இந்த நிபந்தனைகளைக் கேட்ட இளமாறன் பெருவியப்படைந்தான். ''நீ தான் களப்பிர மன்னனின்படைத் தலைவர்களில் ஒருவனாயிற்றே. நீ மன்னனிடம் அஞ்ச அவசியமில்லையே?'' என்று வினவினான் இளமாறன்.

''அச்சுத களப்பாளனை நீ அறிய மாட்டாய். அவன் கொடுமை உலகம் அறிந்தது. ஆனால் அத்தனை



கொடுமையிலும் அவன் நீதி தவறாதவன். நான் வஞ்சகமாக இந்த சொத்தை அடைந்தேனென்று தெரிந்தால் களப்பிர மன்னன் என்னை சிறையில் தள்ளத் தயங்கமாட்டான். அவன் சிறைக்குள் சென்றவர்கள் யாரும் இதுவரை உயிருடன் வெளியில் வந்தது கிடையாது. சிறைச்சாலையின் பக்கத்தில் பெரும் பள்ளமொன்று இருக்கிறது. அதில் குற்றுயிருடன் இருப்பவர்கள் எறியப்படுகிறார்கள். அவர்களைத் தின்ன மன்னன் பெரிய வல்லூறுகளை வளர்த்திருக்கிறான்...'' என்று இந்த விவரங்களைச் சொன்ன போதே காஞ்சி வர்மன் உடல் நடுங்கியது.

களப்பிரன் நீதியையும் தண்டனை முறையையும் கேட்ட இளமாறனுக்கு மன்னன்மீது வெறுப்புக்குப் பதில் மகிழ்ச்சியே ஏற்பட்டது. ''எப்படி இருந்தாலும் நீதியிலிருந்து மன்னன் பிறழ்வதில்லை என்பது பாராட்டத்தக்கது'' என்று சொன்ன இளமாறன், ''சரி காஞ்சி வர்மா! உன் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டேன், சுவரிலிருக்கும் படத்தில் காணப்படும் அந்த உத்தமிக்காக சொல், எங்கள் மகன் எங்கே?'' என்று வினவினான்.

காஞ்சி வர்மன் சிறிதும் சிந்திக்காமலே உடனடியாகப் பதில் சொன்னான், ''அவன் களப்பிரர் படையில் சேவை செய்கிறான். ஒரு பெரிய பிரபு அவனைத் தன் மகன்போல் வளர்த்து வருகிறார். அவன் உன் மகனென்பது அவருக்குத் தெரியாது. அதை அவர் நம்பும்படி செய்வது உனது பொறுப்பு'' என்று.

படையில் மகன் சேர்ந்திருக்கிறான் என்பதில் மிகப் பெருமையடைந்தான் இளமாறன். புத்திர பாசம் அவனை ஆட்கொண்டதால்தான் பழிவாங்க வந்ததைக்கூட ஒரு விநாடி மறந்து ''காஞ்சி வர்மா! என் மகன் எப்படி இருப்பான்? பார்ப்பதற்கு நன்றாயிருப்பானா? யார் சாயல்? வீரனாக வளர்ந்திருக்கிறானா?'' என்று கேட்டான்.

இளமாறன் குரலிலிருந்த பிள்ளைப்பாசத்தை கவனிக்கவே செய்த காஞ்சிவர்மன், அதைக் கூடியவரை தனக்கு

அனுகூலமாகத் திருப்ப முயன்றான். ஆகவே பெருமை துளிர்த்த குரலில் பேச முற்பட்டு, "இளமாறா! உன் மகன் உன் மனைவியை அப்படியே உரித்து வைத்த மாதிரி இருப்பான். இப்பொழுது ஒரு படைப்பிரிவுக்கு அவன் தலைவன். மன்னனால் பெரிதும் மெச்சப்பட்டவன். நடத்தையில் அப்பழுக்கு இல்லாதவன். உறையூர் அரண்மனை மாதர்கள் அவனுக்கு எப்படியோ வலை விரித்தார்கள். யார் வலையிலும் விழவில்லை" என்று இளமாறனின் மகனைப் பாராட்டினான்.

காஞ்சி வர்மன் பேசப் பேச இளமாறனுக்கு மகனைப் பார்க்கும் ஆசை அதிகப்பட்டதால் "காஞ்சிவர்மா! காலம் தாழ்த்தாதே, அவன் எங்கிருக்கிறான், சீக்கிரம் சொல் இப்பொழுதே உறையூருக்குப் புறப்படுகிறேன்" என்று துடிக்கும் குரலில் பேசினான்.

காஞ்சி வர்மன் சிறிது சிந்தித்துவிட்டு, "இளமாறா! அவசரப்படாதே? அவனை அணுகுவது அத்தனை சுலபமல்ல. அப்படியே அணுகினாலும் நீதான் அவன் தந்தை என்று அவனை ஒப்புக்கொள்ளவைப்பது மிகவும் கஷ்டம். ஆகவே அவன் படைத்தலைவனுக்கு ஒரு கடிதம் கொடுக்கிறேன். அதை எடுத்துச் சென்று கொடுத்தால் அவர் உன்னையும் மகனையும் அறிமுகம் செய்து வைப்பார். பிறகு அவனை அழைத்து வருவது உனது சாமர்த்தியம்" என்று சொன்னான். சொல்லிவிட்டு எதிரிலிருந்த ஒரு பேழையை அணுகினான். அதைத் திறந்து அதிலிருந்த எழுதுகருவிகளை எடுத்து ஓலையொன்றைத் தீட்டினான் அந்த ஓலையை இளமாறனிடம் நீட்டி, "இளமாறா! இதைப் படித்துப் பார். இன்னும் ஏதாவது எழுத வேண்டுமென்றாலும் எழுதுகிறேன்" என்று கூறினான்.

இளமாறன் அந்த அறையின் விளக்கு வெளிச்சத்தில் அந்த ஓலையை ஒருமுறைக்கு இருமுறையாகப் படித்து விட்டு, "நீலரதி! இதை நீயும்பார். இதில் ஏதாவதுபுரட்டு இருக்கப் போகிறது" என்று கூறி நீலரதியிடம் ஓலையை நீட்டினான்.



நீலரதியும் அதைக்கூர்ந்து படித்தாள். ஓலை நேர்மையாகவும் விஷயத்தை ஒட்டியதாகவும் இருந்தாலும் அவளுக்கு ஏதோ சந்தேகமாக இருக்கவே, "வாசகம் சரியாகத்தான் இருக்கிறது. விலாசத்தில் பெயரைக் காணோமே! வீதியும் கதவிலக்கமும் மட்டுந்தானே இருக்கிறது?" என்று வினவினாள்.

"ஏன் பெயரை எழுதவில்லை?" என்று சீற்றத்துடனும் சந்தேகத்துடனும் கேட்டான் இளமாறன்.

"பெயரை எழுதுவதற்கில்லை" என்று திட்டமாகச் சொன்னான் காஞ்சி வர்மன்.

"ஏன்?"

"அவன் பெயரைச் சொல்லவோ எழுதவோ முயல்பவர்கள் சிறைக்குள் தள்ளப்படுவார்கள். தவிர, களப்பிரர் படையில் அடித்தளத்தில் உள்ளவர்கள் பெரிய தலைவர்களை தலைவரே என்றுதான் அழைக்கவேண்டும். பெயர் சொல்லி அழைக்க முடியாது."

இளமாறன் காஞ்சி வர்மனை சந்தேகக் கண்களால் நோக்கினான். பிறகு இதயத்திற்குள்ளும் செல்லும் குரலில், "காஞ்சி வர்மா! உன்னைப் போன்ற நச்சுப் பாம்பைக் கொல்வதுதான் நியாயம். ஆனால் அந்தப் படத்திலிருப்பவனுக்கு மகனைப் பார்த்தால் சாந்தி ஏற்படும் என்ற காரணத்தால் உன் நிபந்தனைகளுக்கு நான் ஒப்புக்கொண்டேன். இதில் ஏதாவது சூது இருந்தால், என் மகனை அவன் தாயிடம் இன்னும் நான்கு நாட்களுக்குள் சேர்ப்பிக்க முடியாவிட்டால், நான் உன்னைக் கொல்ல மாட்டேன். நீ ஆயுள் பூராவும் உன் தீய செயல்களை நினைத்து நினைத்து தினம் சாகும்படியான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துவேன். உலகத்தின் எந்த மூலையில் நீ இருந்தாலும் உன்னைத் தொடர்ந்து வருவேன். நன்றாக நினைவில் வைத்துக்கொள்" என்று எச்சரித்துவிட்டு நீலரதியிடமிருந்த வாளை மீண்டும் கச்சையில் கட்டிக்கொண்டான். "நீலரதி! புறப்படு.

இப்பொழுதே நாம் உறையூர் செல்கிறோம்'' என்று அவளையும் துரிதப்படுத்தினான்.

''இவர்?'' என்று வினவினாள் நீலரதி.

''இவர் இங்கேயே இருப்பார்.''

''தப்பி ஓடிவிட்டால்?''

''தப்பமுடியாது, ஓடவும் முடியாது'' -இதைத் திட்டமாகச் சொன்னான் இளமாறன். அவன் சொன்னதும் சொல்லாததுமாக பல நிகழ்ச்சிகள் அறையில் விளைந்தன. சாளர மூலம் கதிர்களை வீசிய முழுமதியை மேகமொன்று சட்டென்று மறைக்கவே அறையின் வெளிச்சம் சட்டென்று மங்கியது. வெளிக்காட்டிலிருந்து கிளம்பிய ஒரு காற்று சாளரத்துக்குள் புகுந்து வந்து அறைக்குள் ஊவென்று ஊதத் தொடங்கியது. அந்தக் காற்று திடீரென சுழன்றடித்ததால் சுவரிலிருந்த இளமாறன் மனைவியின் படமும் வேகமாகத் திரும்பி ஆடி, தரையில் விழுந்தது.

இதையெல்லாம் கவனித்ததால் அச்சமுற்ற நீலரதி, ''சகுனங்கள் சரியாயில்லை'' என்று அச்சம் ஒலித்த குரலில் கூறினாள்.

இந்தத் துர்ச்சகுனங்களைப் பார்த்ததால் காஞ்சி வர்மன் உவகையே எய்தினான். ''சகுனங்களா! இளமாறா! மூடநம்பிக்கைகள் நாத்திகனான உனக்கும் உண்டா?'' என்று வினவினான்.

''இல்லை. எனக்கு நம்பிக்கை இல்லை'' என்று கூறிய இளமாறன் தனது மனைவியின் படத்தை நீலரதியின் கையில் கொடுத்து இதையும் எடுத்து வா. எனது மகன் அவன் தாயைப் பார்க்கட்டும்'' என்றான்.

அவனை திருத்த முடியாதென்பதை புரிந்துகொண்ட நீலரதி அவன் இஷ்டப்படி 'புறப்பட, இளமாறன் மாளிகைக் கொட்டடியிலிருந்துஇருபுரவிகளை அழைத்துக் கொண்டு புறப்பட்டான், அந்த இரவிலேயே.



மகனைப் பார்ப்பதற்கு இருந்த வேகத்தில் அவன் காஞ்சி வர்மனை மறந்தான், அவன் துரோகச் செயல்களை மறந்தான். உறையூரை நோக்கிப் பயணமானான். அப்படி புறப்பட்டவன் வழி நெடுக பேசாமலே வந்ததைக் கண்ட நீலரதி தன் கையிலிருந்த படத்தில் தீட்டப்பட்டிருந்த பெண் மீது பெரிதும் பொறாமை கொண்டாள். ''பெண்ணாய்ப் பிறந்தால் இவளைப் போல் பாக்கியவதியாய் பிறக்க வேண்டும்'' என்று உள்ளூரச் சொல்லிக் கொண்டாள். இருபத்திரண்டு ஆண்டுகளுக்குப் பின்னும் ஒரு புருஷனுடைய மனதை ஈர்த்துப் பிடித்திருக்கும் அந்தப் பெண்ணின் சிறப்பு எப்படித் தானிருக்கும் என்று எண்ணிப் பார்த்தாள் அப்படி எண்ணியதால் அவள் பொறாமை அதிகரிக்கவே செய்ததால் நைந்த உள்ளத்துடன் அவள் பயணம் செய்தாள்.

எத்தனை துரிதமாகப் பயணம் செய்தும் மறுநாள் இரவில்தான் அவர்கள் உறையூரை அடைய முடிந்தது. அத்தனை நேரத்துக்கு மேல் யாரையும் பார்ப்பது உசிதமல்லவென்று முடிவு செய்த இளமாறன் உறையூர் பெரிய சத்திரத்தில் தங்க முடிவு செய்து அந்த சத்திரத்தை நாடிச் சென்றான். அவனைக் கண்ட சத்திரக்காரன், அவனுக்கும் நீலரதிக்கும் தனி அறையொன்றை ஒழித்துவிட்டு, ''இதில் தங்குங்கள். காலையில் வேறு பெரிய அறை தருகிறேன்'' என்று கூறினான்.

அந்த அறைக்குள் நீலரதியுடன் நுழைந்த இளமாறன், ''சத்திரக்காரரே! இதுவேபோதும் எங்களுக்கு; நாளைக்கு எப்படியும் புறப்படப் போகிறோம்'' என்று கூற, ''அத்தனை அவசரமா? உறையூருக்கு வருபவர்கள் யாரும் இரண்டு நாட்களாவது தங்காமல் போவதில்லை'' என்று சொன்னான் சத்திரக்காரன்.

''ஒரு நாளைக்கு மேல் அலுவலில்லை எங்களுக்கு'' என்றான் இளமாறன்.

''என்ன அலுவலோ?'' என்று சத்திரக்காரன் விசாரித்தான்.

''ஒருவரைப் பார்க்க வேண்டும்.''

''யாரை?''

''பெயர் தெரியாது.''

''பெயர் தெரியாதா!''—வியப்புடன் வினவினான் சத்திரக்காரன்.

''தெரியாது.''

''பின் எப்படி சந்திப்பீர்கள் அவரை?''

''விலாசமிருக்கிறது.''

''விலாசம் சொல்லுங்கள்'' என்று கேட்ட சத்திரக்காரனிடம், ''இதோ பாருங்கள்'' என்று கச்சையில் பத்திரப்படுத்தி இருந்த ஓலையை எடுத்துக் காட்டினான் இளமாறன்.

ஓலையைக் கையில் வாங்கி விலாசத்தைப் பார்த்த சத்திரக்காரன் கைகள் நடுங்கின. ஏதோ நெருப்பை வாங்கிக் கொண்டவன் போல் ஓலையைத் திருப்பி இளமாறன் கைகளில் போட்டான். பிறகு அவன் பேச்சில் பெருமாறுதல் இருந்தது. அறைக்கதவை மெதுவாகச் சாத்தி விட்டு இளமாறன் அருகில் வந்து, ''உனக்கு உயிரின் மேல் ஆசையிருந்தால் உறையூரைவிட்டு இப்பொழுதே ஓடிவிடு'' என்றான்.

இளமாறன் அவனை ஏதோ கேட்க வாயெடுத்தான். ''என்னை எதுவும் கேட்காதே. உன்னை நான் எச்சரித்தது தெரிந்தாலே என் தலை போய்விடும்'' என்று நடுங்கும் குரலில் சொல்லிவிட்டு அந்த அறைக்கதவைத் திறந்து கொண்டு வெளியேறினான் சத்திரக்காரன்.

இளமாறனுக்கு சத்திரக்காரன் எச்சரிக்கை விந்தையாக இருந்தது. ''நீலரதி! உனக்கு ஏதாவது புரிகிறதா?'' என்று வினவினான்.

''புரிகிறது. காஞ்சி வர்மன் ஓலையில் பெரும் சூது இருப்பது புரிகிறது. அது ஏதோ பெரும் அனர்த்தத்தில் உங்களைக் கொண்டு விடும் என்பதும் புரிகிறது'' என்றாள்.

ஆனால் அனர்த்தத்தின் எல்லை எது என்பது இருவருக்குமே புரியவில்லை. புரிந்தபோது நிமை தலைக்கு மேல் போய்விட்டது. □

# 44. காஞ்சி வர்மன் போதனை

காஞ்சி வர்மன் கொடுத்த ஓலையில் இருந்த விலாசத்தைக் கண்டதும் உறையூர் பெரிய சத்திரக்காரன் முகத்தில் விரிந்த கிலியாலும் சொற்களில் தலைகிய திகிலாலும், காஞ்சி வர்மன் தனக்கு ஏதோ பெரிய விபரீதத்தை விளைவித்திருக்கிறானென்பதை இளமாறன் புரிந்து கொண்டாலும், அது என்னவாயிருக்கும் என்பது புரியாததால் அதை ஆராய்ந்து விடுவதென்ற முடிவுக்கே வந்தான். ''உனக்கு உயிரின்மேல் ஆசையிருந்தால் ஓடிவிடு'' என்ற சத்திரக்காரன் எச்சரித்தது ஓரளவு விந்தையாகவே இருந்தது இளமாறனுக்கு. இருப்பினும் ஆபத்தை வரவேற்கும் சுபாவமுள்ள இளமாறன் ஓலையிலிருந்த விலாசத்துக்கு உடையவரை சந்தித்து விடுவதென்றமுடிவுக்கே வந்தான்.

அதைப்பற்றி நீலரதி எச்சரித்தபோதும் அவன் அவள் சொற்களைக் காதில் வாங்கிக் கொள்ள மறுத்தான். ''இந்த விஷப்பரீட்சை எதற்கு? இந்த ஓலையிலுள்ள விலாசத்தை யாரிடமும் காட்ட வேண்டாம். அங்கு நாம் போகவும் வேண்டாம்'' என்று நீலரதி சொன்னாள்.

இளமாறன் அவளைக் கூர்ந்து நோக்கினான் சில வினாடிகள். பிறகு சென்று அறைக் கதவைத் தாளிட்டுத் திரும்பி அவளைத் தனது இரு கைகளாலும் அணைத்துப் பிடித்து ''என் கண்களை நன்றாகப் பார் நீலரதி. அவற்றில் அச்சம் தெரிகிறதா?'' என்று வினவினான்.

அவள் தனது கண்களை அவனது கண்களுடன் இணைத்தாள். ''இல்லை, அச்சம் தெரியவில்லை. கூரிய ஈட்டிகள் போல் தெரிகின்றன'' என்றாள்.

இளமாறன் தனது விழிகளை அவள் விழிகளிலிருந்து நீக்காமலே சொன்னான், ''நீலரதி! ஆபத்துக்கு பயந்து

இதுவரை நான் ஓடியதில்லை. அப்படி ஓடினால் என்று பிற்காலத்தில் யாரும் என்னை சுட்டிக்காட்டவேண்டாம். என் உள்ளமே சுட்டிக்காட்டும். என் மனச்சாட்சியின் விரல் எனது இதயத்தைக் குத்திக்கொண்டே இருக்கும். அதற்கு நான் இடங்கொடுக்கக்கூடாது'' என்று.

நீலரதி அவன் சொன்னதை மறுத்துப் பேசினாள். ''போரிடமிருந்து ஓடினால் உலகம் தூற்றும் உங்களை. ஆனால் வஞ்சகத்திடமிருந்து ஓடினால், பிறகு அதற்காக பழிவாங்கினால், உலகம் உங்களைப் போற்றுமே தவிர, தூற்றாது'' என்று சொன்னாள்.

இளமாறன் நீலரதியைத் தழுவியிருந்த தனது கைகளை நீக்கினான். ''நீலரதி! நீ சொல்வது தர்க்கத்துக்கு சரி, உலக வழக்குக்கும் சரியாகும். ஆனால் என் உள்ளத்துக்கு அது சரியாகப் படவில்லை. இந்த விலாசத்தில் யார் இருக்கிறார் என்பதை முடிந்தால் விசாரிக்கிறேன். இல்லையேல் நானே பார்க்கிறேன் அவரை. இவர்கள் யாரும் எனக்கு எந்த தீங்கும் விளைவிக்க முடியாது. நீ இங்கேயே இரு. மாலைக்குள் நான் வராவிட்டால் இங்கிருந்து புகாருக்கு சென்று விடு. அங்கு உன்னைச் சந்திக்கிறேன். ஒன்று நான் நிச்சயமாகச் சொல்கிறேன். நான் இறக்கும் உத்தேசம் இப்பொழுது கிடையாது. உனக்காகவும் என் மகனுக்காகவும் நான் உயிருடனிருக்க வேண்டிய அவசியம் இருக்கிறது'' என்று கூறி அவள் இரு கைகளையும் பிடித்து உறுதிக்கு அறிகுறியாக அவற்றை இறுக்கிப் பிடித்தான்.

ஆனால் நீலரதிக்கு அவன் கைகளின் இறுக்கம்கூட துணிவை அளிக்கவில்லை. ''உங்கள் துணிவைப் பற்றி எனக்கு சந்தேகமில்லை. ஆனால் எனக்கென்னமோ பயமாகயிருக்கிறது'' என்றாள்.



''உனக்கா நீலரதி? உனக்கு பயமா? எத்தனை ஆபத்துக்களிலிருந்து நீ தப்பியிருக்கிறாய்?'' என்று வியப்பு ஒலித்த குரலில் வினவினான்.

''என்னைப்பற்றி நான் என்றுமே பயந்ததில்லை. ஆனால் உங்களைப் பற்றித்தான் பயப்படுகிறேன். உங்களுக்கு ஏதாவது நேர்ந்தால் உலகில் யாரிருக்கிறார்கள் எனக்கு?'' என்று கேட்ட நீலரதியின் குரல் தழுதழுத்தது.

இளமாறன் துயரம் தோய்ந்த அவள் முகத்தை அனுதாபத்துடன் பார்த்தான். பிறகு அந்தக் கண்களில் தனது உதடுகளைப் பொருத்தி எடுத்தான். ''நீலரதி! இல்லாத விஷயங்களை நினைத்து மனம் கலங்காதே. நான் உறுதி கூறுகிறேன் உனக்கு. உன்னிடம் நான் இந்தக் கை கால்களுடன் முழுமையாக வந்து சேருவேன். உதயகுமாரனையும் கண்டு பிடித்து உனக்குத் துணையாகப் புகாருக்கு அனுப்புகிறேன். அங்கு நீ வாணிகர் விடுதியிலாவது புத்தகத்தர் மடத்திலாவது தங்கு'' என்று கூறிவிட்டு கிளம்ப எத்தனித்தான்.

''சற்றுப் பொறுங்கள்'' என்று அவனைத் தடுத்தாள் நீலரதி. அறை மூலைக்குச் சென்று தான் கொண்டு வந்த பையிலிருந்த படத்தை எடுத்து அவனிடம் காட்டி ''இதோ உங்கள் மனைவியின் உருவம். இது உங்களை அனுமதிக்கிறதா கேளுங்கள்'' என்றாள்.

இளமாறன் தனது மனைவியின் உருவத்தை உற்று நோக்கினான். அந்தப் படத்தின் கண்களும் சோகத்தை உதிர்த்ததாகத் தெரிந்தது அவனுக்கு. ஆகவே அதை நோக்கி, ''உனக்குத் தெரியாதது ஏதுமில்லை. ஆனால் நமது மகனை நான் கண்டுபிடித்தாக வேண்டியிருக்கிறது. அனுமதி கொடு, நான் இல்லாதபோது இவளைக் காப்பாற்று'' என்று நீலரதியைச் சுட்டிக்காட்டினான்.

நீலரதி அப்பொழுதும் விடவில்லை அவனை. ''இந்தப் படம் காற்று பட்டு விழுந்ததே. அவள் விதித்த தடையல்லவா?'' என்று வினவினாள்.

இளமாறன் மெல்ல நகைத்தான். "நீலரதி! நீ எனக்கு மனைவியாக விரும்பினால் வீரமகளாக இருக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். கோழைகளை எனக்குப் பிடிக்காது" என்று சொன்னான், நகைப்பின் ஊடே.

அவனைத் தடுக்க வேறோர் உபாயத்தைக் கையாண்டாள் நீலரதி. "அப்படியானால் உதயகுமாரனுக்கு என்னை மணமுடிக்கப் போவதில்லையா?" என்று இன்னோர் அஸ்திரத்தை வீசினாள்.

அதைக் கேட்டதும் ஒரு விநாடி அதிர்ச்சியுற்று நின்றான் இளமாறன். பிறகு தலையை அசைத்து விட்டு வெளியேறிச் சென்றான் வேகமாக. நீலரதி வேகமாக சாளரத்தை அடைந்து வெளியே எட்டிப் பார்த்தாள். இளமாறன் புரவிமீது பறந்துகொண்டிருந்தான், உறையூர் அரண்மனைக்குச் செல்லும் சாலையில்.

அப்பொழுது நடுநிசி தாண்டி மூன்றாவது ஜாமம் துவங்கிவிட்டாலும் நல்ல நிலவு காய்ந்துகொண்டுதானிருந்தது. அந்த சமயத்திலும் உறையூர் சாலையில் ஜன நடமாட்டமும் வண்டிகள் போக்குவரத்தும் இருந்து கொண்டிருந்தன. இரவில் சோதனைக்கு வரும் காவல் வீரர்களின் புரவி நடமாட்டமும் சேர்ந்து இரவிலும் ஜீவனுள்ள நகரமாக இருந்தது உறையூர். இத்தனையிலும் ஓர் ஒழுங்கும் இருந்ததையும், வணிகர் வண்டிகளோ, காவலர் புரவிகளோ முறை தவறாமல் ஒரே பக்கமாகவும் ஒழுங்காகவும் சென்று கொண்டிருந்ததையும், உறையூரே ஒரு பெரிய ராணுவ தளம் போலிருந்ததையும் கண்ட இளமாறன், களப்பிரர் தமிழக மூவேந்தர்களை வெற்றி கொண்டதற்குக் காரணம் இருக்கிறதென்பதைப் புரிந்து கொண்டான்.

இரண்டொரு இடங்களில் இருந்த சாலைக் கடைகளில் புரவியை நிறுத்தி ஓலையிலிருந்த விலாசத்தைச் சொல்லி அது இருக்குமிடத்தைக் கேட்டபோது சிலர் நடுங்கினர், சிலர் பரிதாபமாக அவனைப் பார்த்தனர்.



ஒரு கடைக்காரன் மட்டும் கேட்டான்: "அங்கு என்ன வேலை உங்களுக்கு?" என்று.

இளமாறன் சிந்திக்காமலே பதில் சொன்னான்: "அவர் என்று பழைய நண்பர். நாங்கள் இருவரும் ஒரே ஊர்" என்று.

"அவர் பெயரென்ன?" என்ன வினவினான் கடைக்காரன், இளமாறன் பேச்சில் எத்தனை உண்மையிருக்கும் என்பதை சோதிக்க.

இளமாறன் புன்முறுவல் செய்து "அவர் பெயரைச் சொல்லுமளவுக்கு இந்த ஊரில் துணிவு வந்து விட்டதா? எங்கள் ஊரில் அவர் இருந்தபோது யாரும் அவர் பெயரைச் சொல்ல நடுங்குவார்கள்" என்றான்.

அதற்குப்பிறகு கடைக்காரன் அதிக தர்க்கத்தை வைத்துக்கொள்ளவில்லை. "உண்மை. இந்த ஊரிலும் அப்படித்தான்" என்ற கடைக்காரன், "இந்த சாலையிலேயே வடக்குப்புறம் சென்றால் அரண்மனைப்பகுதி வருகிறது. அதையும் தாண்டினால் மலைவாசலுக்குச் சற்று முன்பு அமைச்சர்—படைத்தலைவர் மாளிகைகள் வரும். முதலமைச்சர் மாளிகை அவற்றுள் மிகப் பெரியது. அந்த மாளிகைக்குப் பின்னால் சிறைச்சாலை இருக்கிறது" என்றும் வழியைச் சொல்லி, "சிறைச்சாலை இருக்கிறது" என்ற சொற்களை அழுத்தியும் சொன்னான்.

இதைக் கேட்டதும் இளமாறனுக்கு அதிர்ச்சி ஏற்பட்டதென்றாலும், அவன் அதை வெளிக்குக் காட்டவில்லை. முதலமைச்சரின் கொடுமைகளைப் பற்றி இளமாறன் கேள்விப்பட்டிருந்தான். தவிர, குடமூக்கு கல்லாச விடுதியில் நடந்த போரையும், அதில் தான் ஒரு வாலிபனைக் கொன்றுவிட்ட நிகழ்ச்சியையும் எண்ணிப் பார்த்தான். இந்த விவகாரத்தை அறிந்துதான் காஞ்சி வர்மன் தன்னை முதலமைச்சரிடம் அனுப்பியிருக்கிறா

னென்பதையும், அங்கு தன்னை சமாதியில் புதைத்து விடுவது காஞ்சிவர்மன் திட்டமென்பதையும் புரிந்து கொண்டான். இருப்பினும் முதலமைச்சரிடம் தனது மகனிருக்கும் இடத்தை விசாரிக்கலாமென்ற ஆசையில் ஆபத்தைப் பொருட்படுத்தாமல் பயணம் செய்தான்.

பொழுது விடிவதற்கு அதிக நேரமிருந்ததால் இளமாறன் நேராக அமைச்சர்—படைத்தலைவர் மாளிகை வீதிக்குள் மெதுவாகவே நுழைந்தான். வரிசையாக இருந்த மாளிகைகளைப் பார்த்துக்கொண்டே சென்றவன் முதலமைச்சரின் பெருமாளிகையை அடைந்ததும் அங்கிருந்த இராக்காவலனால் நிறுத்தப்பட்டான். ''யாரைப் பார்க்க வேண்டும்?'' என்று வினவினான் காவலன் முரட்டுத்தனமாக.

''முதலமைச்சரை'' என்றான் இளமாறன்.

காவலன் அவனை உற்று நோக்கி ''இது அனைவரும் உறங்கும் நேரமல்லவா? முதலமைச்சர் இப்பொழுது விழித்துக் கொண்டிருப்பாரென்பது உனக்கெப்படித் தெரியும்?'' என்று வினவினான்.

''முதலமைச்சர் அழைத்துத்தான் வந்திருக்கிறேன். இல்லாவிட்டால் துணிவுடன் வரமுடியுமா?'' என்று வினவினான் இளமாறன்.

''சற்றுமுன்பு வந்தவரும் அப்படித்தான் சொன்னார். இப்பொழுது அவருடன் முதலமைச்சர் பேசிக்கொண்டிருக்கிறார். வேண்டுமானால் நீங்களும் செல்லுங்கள். இந்த வழி வாருங்கள்'' என்று வழிகாட்டி அழைத்துச் சென்றான் காவலன். மாளிகையின் ஒரு புறத்தில் புரவியை நிறுத்திவிட்டு காவலனைத் தொடர்ந்த இளமாறன் முதலமைச்சர் பூபதியின் மாளிகை உட்புறத் தாழ்வரையை அடைந்ததும், அங்கிருந்த இடைவழியிலேயே அவனை நிற்கச் சொன்ன காவலன் உள்ளே சென்றான்.



உள்ளே இருவர் உரையாடும் ஒலி கேட்டது இளமாறனுக்கு. அந்த இருவரில் ஒருவன் குரல் காஞ்சிவர்மன் குரல் என்று தெரிந்ததும் அசைவற்று சிறிதும் அரவம் செய்யாமல் நின்றான் இளமாறன்.

அப்பொழுது உள்ளே காஞ்சிவர்மன் பூபதியை நோக்கி, ''உங்களிடம் எனது ஓலையைத் தாங்கி நானை வருபவன் உங்கள் மகனைக் குடஜூக்கில் கொன்றவன்'' என்று சொன்னான்.

□ □ □

# 45. மன்னர் தலையீடு

காஞ்சிவர்மன் சொற்களைக் காதில் வாங்கியதும் அவன் அயோக்கியத்தனத்தின் எல்லையைப் புரிந்து கொண்ட இளமாறன் சிறிதும் அரவம் செய்யாமல் சிலையென நின்றுவிட்டான். மேலே நடப்பதை கவனிக்க இடைவழியில் சற்றே முன்னேறி கூடத்தை கவனிக்கலானான். கூடத்தின் நடுவேயிருந்த பிரும்மாண்டமான மஞ்சத்தில் பிரும்மாண்டமான சரீரத்துடன் உட்கார்ந்திருந்த முதலமைச்சர் பூபதியின் முகம் குரூரத்தின் எல்லையாகக் காட்சியளித்ததையும், காஞ்சி வர்மன் சொன்ன செய்தியால் இயற்கையாகவே அதிலிருந்த குரூரம் அதிகப்பட்டு விட்டதையும் கண்டான் இளமாறன். காஞ்சி வர்மன் செய்தி ராட்சஸனைப் போலிருந்த பூபதியையும் ஓர் ஆட்டு ஆட்டிவிட்டதை மஞ்சத்தின் பக்கக் கட்டைகளைப் பிடித்திருந்த அவரது கைகளின் நடுக்கம் நன்றாக எடுத்துக் காட்டியது. "இன்னொரு முறை திரும்பச் சொல், என்னிடம் யாரை அனுப்பியிருக்கிறாய்?" என்று காஞ்சி வர்மனை வினவிய பூபதியின் குரலிலும் நடுக்கம் தெரிந்தது.

பூபதியின் எதிரே கைகட்டி சேவகன்போல் மிகுந்த பணிவுடன் நின்றிருந்த காஞ்சி வர்மன் "தாங்கள் மகனை வஞ்சகமாகக் கொன்று விட்டவனை அனுப்பியிருக்கிறேன்" என்று தூபம் போட்டான்.

மிக முரடனென்றும் பயங்கரமானவனென்றும் பெயர் பெற்றிருந்த பூபதி காஞ்சி வர்மன் வலையில் அவ்வளவு சீக்கிரமாக விழுந்து விடுவதாகத் தெரியவில்லை. தமது ராட்சஸ புருவங்களை சற்றே மேலே



தூக்கி சிறிது சிந்தித்த பிறகு கேட்டார், "[illegible] என் மகன் கொல்லப்பட்டானென்று கேள்விப்பட்டேன். ஆனால் வஞ்சகமாகக் கொன்றதாகக் கேள்விப்படவில்லையே, எப்படி வஞ்சகம்?" என்று வினவினார் பூபதி.

அவர் கேள்வியால் சிறிது சஞ்சலப்பட்ட காஞ்சி வர்மன் தன்னை சமாளித்துக்கொண்டு நடந்ததை சற்று திரித்து "தங்கள் மகன் அசந்திருக்கையில் பின்னால் அந்த வஞ்சகன் வாளைப் பாய்ச்சியதாகக் கேள்வி" என்று சொன்னான்.

பூபதியின் முகத்தில் சந்தேகம் பெரிதும் விரிந்தது. "அப்படி நான் கேள்விப்படவில்லையே" என்றார் நிதானமாக.

காஞ்சி வர்மன் தனது திட்டம் மெல்ல பிசுபடுவதை உணர்ந்ததால் "வேறு எப்படி கேள்விப்பட்டீர்கள்?" என்று வினவினான்.

"நேர்மையான போரில் கொல்லப்பட்டதாகக் கேள்வி! அதுவும் அவனைக் கொன்ற இளமாறன் எச்சரித்ததையும் கேளாமல் என் மகனே அவன் வாள்வீச்சுக்குக் குறுக்கே விழுந்து மாண்டதாகக்கேள்வி" என்றார் பூபதி.

"இந்தப் பொய்யை யார் சொன்னார்கள் உங்களுக்கு?" என்று வினவினான் காஞ்சி வர்மன். அவன் குரல் அச்சத்தால் லேசாக நடுங்கியது.

"காஞ்சி வர்மா! பேசுவதை சிந்தித்துப் பேசு. எனக்கு நடந்ததை சொன்னவர் படைத்தலைவர் மாவலி. மாவலி பொய் சொல்லக் கூடியவர் என்று யாரும் சொல்ல மாட்டார்கள். தவிர அந்தப் போர் நடந்தபோது மாவலியும் கூட இருந்தார்" என்று பூபதி விளக்கினார்.

இதைக் கேட்டதும் காஞ்சி வர்மன் துணிவெல்லாம் பறந்து விடவே "மாவலியா சொன்னார்?" என்று வியப்பும் பீதியும் கலந்த குரலில் வினவினான்.

''ஆம்''

''மாலவிஸ் சொல்வதுதான் முடிவா?''

''இல்லை, அப்போரில் உடனிருந்த சாந்தானந்தரும் சொன்னார். அவர்தான் எனது மகன் சடலத்தை எடுத்து வந்தார் இந்த மாளிகைக்கு''—இந்த சம்பாஷணைக்குள் தன்னை திடப்படுத்திக்கொண்ட பூபதி ''ஆனால் ஒரு விஷயம்'' என்று மட்டும் சொன்னார்.

''என்ன பிரபு?'' என்று குழைந்தான் காஞ்சி வர்மன்.

''கொன்ற முறை எதுவாயிருந்தாலும் மகனை நான் இழந்தது இழந்ததுதானே?'' என்று வினவிய பூபதி சற்றே நிமிர்ந்து காஞ்சி வர்மனை நோக்கினார்.

காஞ்சி வர்மன் பூபதியின் போக்கில் சிறிது மாறுதல் ஏற்படுவதைக் கவனித்து லேசாக துணிவை வரவழைத்துக் கொண்டு, ''ஆம் பிரபு! மகனைப் பறிகொடுப்பதை விட பெரிய இழப்பு உலகில் வேறென்ன இருக்கிறது'' என்று வினவினான்.

பூபதி சற்றே பெருமூச்செறிந்தார் துக்கத்தினால். ''ஆம் காஞ்சி வர்மா! புத்திரசோகத்தைவிட பெரிய சோகம் உலகத்தில் கிடையாது. ஆகையால் என் மகனைக் கொன்றவனைப் பழிவாங்க வேண்டியதுதான். ஆனால் அதை நான் பகிரங்கமாகச் செய்ய முடியாது. அதற்கு நீதான் வழி சொல்ல வேண்டும்'' என்றார் பூபதி, துக்கப் பெருமூச்சைத் தொடர்ந்து.

காஞ்சி வர்மன் விவரிக்க முடியாத அளவுக்கு வியப்படைந்தான். ''பிரபு!'' என்று வியப்பைத் தனது அழைப்பிலும் காட்டினான்.

''என்ன காஞ்சி வர்மா?''-பூபதி சற்று நிதானப்பட்டு திடமான குரலில் கேட்டார்.

''தாங்கள் இளமாறனுக்கு தண்டனை கொடுப்பதை யார் தடுக்க முடியும்?'' என்று வினவினான் காஞ்சிவர்மன்.



''மன்னர் அக்கறை கொண்டவர்'' என்றார் பூபதி.

காஞ்சி வர்மனுக்கு அதுவரையிருந்த வியப்பு திகிலாக மாறவே ''மன்னர் இந்த சிறு விஷயங்களில்கூட தலையிடுகிறாரா? எத்தனையோ மக்களை சித்திரவதை செய்த அச்சுதகளப்பாளர் ஒரு சாதாரண வீரனை, சிறுவனைக் கொன்றவனை, தண்டிப்பதில் தலையிடுவது வியப்பாக இருக்கிறதே'' என்றான்.

பூபதி தமது ஆசனத்திலிருந்து எழுந்து கூடத்தில் இருமுறை உலாவினார். பிறகு காஞ்சி வர்மன் எதிரில் நின்று அவனை உற்று நோக்கினார். ''காஞ்சி வர்மா! இந்த சண்டை விவரங்களை நான் அறிவதற்கு முன்பே மன்னர் அறிந்துவிட்டார். மாலவி மூலம் விசாரித்து முழு விவரங்களையும் கிரகித்துக் கொண்ட மன்னர் மகனைக் கொன்றவனைக் கொல்ல அனுமதி கேட்டபோது திட்டமாக மறுத்துவிட்டார். குரூரத்தை விளைவிப்பதில் எப்படி மன்னர் திட்டமாயிருக்கிறாரோ அப்படியே நீதியைச் செலுத்துவதிலும் இருக்கிறார். தமிழர்களுடன் பழகி விட்ட களப்பிரர்கள் பழைய உக்கிரத்தை விட்டுவிட்டார்கள். பண்பைப் பற்றிப் பேசுகிறார்கள். தமிழர்களின் பலவீனம் அவர்களைப் பிடித்துக்கொண்டு விட்டது. ஆகவே தற்சமயம் நான் நேரிடையாக இளமாறனை எதுவும் செய்ய முடியாது. அது விஷயமாக நீதான் ஏதாவது செய்ய வேண்டும்'' என்றார்.

''நானா?''—அச்சமிருந்தது காஞ்சி வர்மன் குரலில்.

''ஆம்.''

''மன்னருக்கு எதிராக நான் என்ன செய்யமுடியும்?''

'வஞ்சகனான உன்னால் முடியாதது என்ன இருக்கிறது?''

''நான் வஞ்சகனா பிரபு! தங்கள் மகனைக் கொன்றவனை உங்களிடம் காட்டிக் கொடுத்தவனை வஞ்சகனென்று அழைப்பது நியாயமா?''

''நியாயத்தைப் பற்றிப் பேசாதே காஞ்சி வர்மா! உனக்கும் அதற்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது. ஆகையால் இளமாறனைத் தீர்த்துக்கட்ட நீயே ஏதாவது வழியைக் கண்டுபிடி. இல்லையேல்...'' என்று சொற்களை முடிக்காமல் விட்ட பூபதியின் குரலில் மிரட்டல் இருந்தது.

அவர் குரலிலிருந்த மிரட்டலைக் கவனிக்கவே செய்த காஞ்சி வர்மன் வஞ்சக மூளை வேலை செய்யத் தொடங்கியது. சிறிது சிந்தனைக்குப் பிறகு அவன் சொன்னான்: ''சரி மகாப் பிரபு! ஒன்று செய்யுங்கள். உங்களிடம் இரண்டு நாட்களுக்கு முன்பு அவன் மகனிடம் ஓலை கொடுத்து அனுப்பினேனல்லவா?'' என்று.

''ஆம், வந்தான் ஓலையுடன். உதயகுமாரன் என்று பெயர் சொன்னான்.''

''அவனைத் திருப்பி கடல்மல்லைக்கு அனுப்பி விடுங்கள். அங்கு அவனைத் தீர்த்துக்கட்டி விடுகிறேன்'' என்றான் காஞ்சி வர்மன்.

''முடியாது'' என்றார் பூபதி.

''ஏன்?'' என்று காஞ்சி வர்மன் வினவினான்.

''அவன் சிறையில் இருக்கிறான்'' என்றார் பூபதி.

''ஏன் சிறைக்கு அனுப்பினீர்கள் பிரபு?'' என்று காஞ்சி வர்மன் விசாரித்தான்.

''நான் அனுப்பவில்லை?''



''வேறு யார் அனுப்பினார்கள்?''

திடுக்கிடும் செய்தியைச் சொன்னார் முதல் அமைச்சர்: ''மன்னர் அனுப்பியிருக்கிறார்'' என்று மிக மெதுவாகப் பேசினார்.

''காரணம்?'' என்று கேட்டான் காஞ்சி வர்மன்.

காரணத்தைச் சொன்னார் பூபதி. காரணம் பயங்கரமாயிருந்தது. இடைவழியிலிருந்த இளமாறன் கூடப் பேரதிர்ச்சிக்கு உள்ளானான். ''இத்தகைய அநீதிக்கு வித்திடுபவன் நீதிமானென்று எப்படி பெயர் வாங்கினான்?'' என்று தனக்குள் கேட்டுக்கொண்ட இளமாறன் மெல்ல இடைவழியிலிருந்து திரும்பினான் வாயிலை நோக்கி. அப்பொழுதுதான் அவன் வந்திருக்கும் விஷயத்தை காவலன் பூபதியிடம் தெரிவித்தான்.

□ □ □

# 46. அச்சுதவிக்கண்டன் அறிவு

எந்த மனிதனும் பிறக்கும்போதே அநீதி இழைப்பவனாகவும், அதர்மவாதியாகவும் பிறப்பதில்லை. வளரும்போது ஏற்படும் சமுதாயச் சூழ்நிலையும், சொத்தாசை, பெண்ணாசை இவை அளவுக்கு மீறி தகாத இடங்களில் பதியும்போதும், அவன் எந்தப் பஞ்சமா பாதகத்துக்கும் சித்தமாகி விடுகிறான். ஒருமுறை பாதகத்தைச் செய்துவிட்டால் அடுத்து எந்த தீவினையிலும் இறங்குவதை அவன் ஒரு பொருட்டாக மதிப்பதில்லை. எந்த தீவழியில் காலை எடுத்து வைக்கிறானோ அதேவழியில் வழுக்கிச் சென்று கொடுமையின் இலக்கணமாக மாறிவிடுகிறான். இதற்கு எடுத்துக்காட்டாக விளங்கிய காஞ்சி வர்மன் மாற்றான் சொத்தை நிலைநிறுத்திக் கொள்ளவும் மாற்றான் தாரத்தை அபகரிக்கவும் எந்த பாதகத்தையும் செய்யச் சித்தமாயிருந்தான். ஆனால் காஞ்சி வர்மன் இயற்கையின் நியதி ஒன்றை மட்டும் புரிந்து கொள்ளவில்லை. எந்த அதர்மங்களை ஒருவன் செய்கிறானோ அதே அதர்மங்கள் பெரும் பேயாக வளர்ந்து காலத்தில் அவனை விழுங்கிவிடுகிறது என்ற உண்மையை அவன் அறியாததால் அந்த பிசாசு லேசாக தலையெடுத்தபோது உள்ளூர நடுக்கமே கொண்டான். களப்பிர மன்னன் தலையீடு இளமாறன் சம்பந்தப்பட்ட சிறு விஷயத்தில் இருக்கும் என்பதை அவன் எதிர்பார்க்காததால் இறுதியில் பூபதி சொன்ன காரணம் அவனை நடுங்க வைத்தது.

அவனை மட்டுமல்ல இடைவழியிலிருந்த இளமாறனையும் பூபதியின் செய்தி நடுங்க வைத்தது. இடைவழியில் நின்று காஞ்சி வர்மன் சொன்ன விவரங்களைக் கேட்கக் கேட்க உணர்ச்சிகள் கொந்தளிக்கும் நிலைக்கு வந்து விட்ட இளமாறன் நிதானத்தை அறவே



இழந்து, காஞ்சிவர்மன், பூபதி இருவரையும் அந்தக் கூடத்திலேயே கொன்று போடும் மனநிலையில் இருந்தான். உதயகுமாரனைத் தன் மகன் என்று கூறியதுமே அதிர்ச்சியின் உச்சிக்குச் சென்றுவிட்ட இளமாறன் உணர்ச்சிகள் அவன் புத்தியில் பல உண்மைகளைப் பளிச்சிடச்செய்தன. வேறு யார் செய்தாலும் சகிக்காத பல செயல்களையும் பேச்சுக்களையும் உதயகுமாரனிடம் தான் சகித்ததற்குக் காரணத்தையும் பூபதியின் மாளிகையில் காஞ்சிவர்மன் விளக்கத்தால் புரிந்துகொண்ட இளமாறன், உதயகுமாரன் சிறையிலிருப்பதை நினைத்து ஏங்கினான். தனது மனைவி இறந்த பின்பு காஞ்சிவர்மன் குழந்தையை கொல்லாது வளர்த்து அதற்கு உதயகுமாரன் என்று பெயரும் இட்டு ஆளாக்கியதற்கு சொத்தும் ஒரு காரணம் என்பதை உணர்ந்து கொண்டான். தவிர வெளிநாட்டு மரக்கலத்தில் அடிமையாக விற்கப்பட்டதான் தெய்வாதீனத்தால் திரும்பி வந்தால் தன்னை மடக்கக்கூடிய சூத்திரப் பாவையாக உதயகுமாரனை உபயோகப்படுத்த முடியும் என்பதும் ஒரு காரணமாயிருக்கலாம் என்று ஊகித்த இளமாறன் அயோக்கியத்தனத்திலும் காஞ்சிவர்மனுக்கு இருந்த தீர்க்கதரிசனத்தை எண்ணிப் பெரு வியப்படைந்தான்.

அது மட்டுமல்ல அவன் எண்ணி வியப்படைந்தது விதி எப்படியெல்லாம் தனது வாழ்க்கையில் விளையாடியிருக்கிறது என்பதையும் சிந்தித்து பேராச்சரியம் அடைந்தான். இறந்துவிட்டான் என்று தான் கருதிய தனது மகனைத் தன்னிடமே வீரனாகச் சேர்த்து தன்னையே அவன் வெறுப்பதற்கான சூழ்நிலையையும் அளித்த விதியின் விசித்திரத்தை எண்ணியதன்றி, தான் காதலித்த நீலரதியையே அவனையும் காதலிக்க வைத்து பெரும் சிக்கலையும், மன உளைச்சலையும் ஏற்படுத்திவிட்ட விதி காஞ்சிவர்மனைவிட கொடுமை வாய்ந்தது என்றும் முடிவு கட்டினான் இளமாறன். விதி தனது மகனை பூபதி கொல்ல முடியாமல் செய்துவிட்டதே தவிர அதைவிடக் கொடுமை

யான சூழ்நிலையை அது சிருஷ்டித்துவிட்டதை எண்ணி விதியைப் பெரிதும் நொந்தான். உதயகுமாரனை மன்னன் சிறை செய்ததற்குக் காரணத்தை பூபதி முடிவில் சொன்னதும் பேரிடி தலையில் இறங்கிய நிலையை எய்திய இளமாறன், எல்லாவற்றிற்கும் மூல காரணமான காஞ்சிவர்மனை ஒழித்துக் கட்டுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற தீர்மானத்துக்கே வந்தான்.

உதயகுமாரனை மன்னர் ஏன் சிறைக்கு அனுப்பினார், எப்படி அனுப்பினார், எதற்காக அனுப்பினார் என்ற விவரங்களை நிதானமாகவே சொன்னார் பூபதி. "உதயகுமாரனிடம் நீ ஓலையைக் கொடுத்து அவன்தான் இளமாறன் புதல்வனென்றும், அவனை அழித்து எனது மகன் மாண்டதற்கு பழி வாங்கிக் கொள்ளலாமென்றும் இங்கு அனுப்பியபோது ஓலையைப் பிரித்துப் படித்தேன். அவனை ஒழித்து விடலாமென்றுதான் முதலில் நினைத்தேன். ஆனால் உறுதியாக நின்ற உதயகுமாரனைக் கண்டதும், அவன் பால் முகத்தைக் கண்டதும் எனக்கு அவனைக் கொல்ல மனம் வரவில்லை. அந்தச் சமயத்தில் எதிர்பாராவிதமாக மன்னர் இங்கு வந்து ''யார் இவன்? அது என்ன ஓலை?'' என்று கேட்டுக் கையை நீட்டினார். ஓலையைக் கொடுத்தேன். மன்னர் ஓலை மீது இரண்டு விநாடிகள் தான் கண்களை ஓட்டினார். பிறகு உதயகுமாரனை நோக்கி ''என்னுடன் வா'' என்று அழைத்துச் சென்றார். ''மன்னவா! ''என்று நான் ஏதோ சொல்ல முயன்றேன். அவர் என்னைப் பார்த்து கொடூரமாகப் புன்முறுவல் செய்துவிட்டுப் பேசாமல் நடந்தார். அவரை உதயகுமாரன் தொடர்ந்து சென்றான். அன்று அவன் சிறையில் தள்ளப்பட்டதை காவலர்கள்வந்து சொன்னார்கள்...'' என்ற பூபதி சிறிது நிதானித்துவிட்டு மேலும் சொன்னார்.

''மறுநாள் நான் மன்னரை சந்தித்தேன். மன்னர் நான் வந்த காரணத்தை நொடிப்பொழுதில் ஊகித்தார். ''பூபதி! உதயகுமாரனைக் கொல்வதில் பயன் எதுவும்



இல்லை. அவனை உயிருடன் வைத்திருப்பதில்தான் பயன் இருக்கிறது'' என்றார். அர்த்தபுஷ்டியுடன் என்னைப் பார்க்கவும் செய்தார்.

''என்ன பயன் மன்னவா?'' என்று வினவினேன்.

அச்சுதவிக்கண்டர் தமது வழக்கமான பயங்கரச் சிரிப்பை உதிரவிட்டார். ''பூபதி! நீர் முதல் அமைச்சராக இருக்கத் தகுதியில்லை'' என்றார்.

''ஏன் மன்னவா?''—நான் அச்சத்துடன் வினவினேன்.

''உமது மூளை மழுங்கிவிட்டது. முதல் மந்திரி முட்டாளாயிருந்தால் களப்பிரர் கஷ்டப்பட்டு பெற்ற அரசு குலைந்துவிடும்'' என்ற மன்னர் சற்று எட்ட இருந்த மாவலியைப் பார்த்தார். மாவலி தொண்டையைக் கட்டி கொக்கரித்தார்.

மன்னரை ஏறெடுத்துப் பார்க்க எனக்குத் துணிவில்லை. மாவலியை மட்டும் உஷ்ணத்துடன் பார்த்தேன். பிறகு மன்னர் பேசவில்லை. மாவலியே பேசினார். ''பூபதி! உதயகுமாரன் இளமாறன் மகனென்று உமக்குப் புரிந்துவிட்டதா இல்லையா?'' என்று வினவினார் மாவலி.

''மாவலி பெரிய படைத்தலைவராயிருக்கலாம். என்னை விசாரிக்க அவருக்கு என்ன அதிகாரம் இருக்கிறது'' என்று உள்ளூர எண்ணமிட்டேன். மனிதர்களுடைய உள்ளெண்ணங்களை அறிவதில் மிக சமர்த்தரான மன்னர் ''பூபதி! எந்த அதிகாரமும் எவரிடமும் மாறலாம். மன்னன் நன்மைக்கு உதவுமானால் அதிகாரத்தை மன்னன் அனுமதி பெற்று யாரும் செலுத்தலாம்'' என்று எனது நிலையை விளக்கினார்!

மாவலி கேட்டார்: ''உதயகுமாரன் இளமாறன் புதல்வனென்று தெரிந்ததும் என்ன செய்திருப்பீர்?'' என்று. ''கொன்றிருப்பீர். வேறு எதுவும் உமக்குத் தெரியாது. ஆனால் மன்னர் ஊகம் நம்மைவிட நீண்டது. அறிவு மிக்கது'' என்றும் கூறினார்.

நான் பேச்சிழந்து நின்றேன். 'பூபதி!' என்று பெயர் சொல்லி அழைத்தார் மாவலி.

''என்ன?''—உக்கிரத்துடன் நான் கேட்டேன்.

''உதயகுமாரனைச் சிறை செய்துவிட்டால் அவனை விடுக்க இளமாறன் வருவான். இளமாறன் வந்தால் நீலரதியும் வருவாள்.''—இங்கு சூசகமாக நிறுத்தினார் மாவலி.

நான் பிரமித்தேன் மன்னருடைய திட்டத்தை நினைத்து. அப்பொழுது மன்னர் என்னை நோக்கினார் அன்புடன், லேசாக உதடுகளை விரித்து பல்வரிசையைக் காட்டி, புன்முறுவல் செய்தார். அவர் அன்புதான் உனக்குத் தெரியுமே காஞ்சிவர்மா! பாம்பு பல்லைக்காட்டி சிரிக்க முடியுமானால் எப்படியிருக்கும் சிந்தித்துப் பார். அப்படியிருந்தது அந்தச் சிரிப்பு. நான் நடுங்கினேன் ஒருமுறை.

மாவலி மேலும் சொன்னார்: ''மன்னர் யாருக்கும் எந்த அநீதியையும் இழைக்காதவர். ஆனால் கடமை தவறுபவர்களையும், ராஜத் துரோகிகளையும் அவர் மன்னிப்பது கிடையாது. நீலரதியை இங்கு அழைத்து வரும்படி இளமாறனுக்கு புகாரில் உத்தரவிட்டு வந்தார். உத்தரவை அவன் நிறைவேற்றவில்லை. தவிர அவளை அழைத்து வர முன்வந்தவர்களோடு போரிட்டு அவளைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு சென்றுவிட்டான். இப்பொழுது இளமாறனையும் நீலரதியையும் வரவழைப்பதன் மூலம் மன்னர் தமது பணிகளைத் தாமே நிறைவேற்றிக் கொள்கிறார். நீரும் நானும் அவரது பணியாட்களாக இருந்து பயன் என்ன?'' என்று வினவினார்.

இந்த சமயத்தில் மன்னர் இடைபுகுந்து ''இன்னும் இரண்டு நாட்களில் எப்படியும் நீலரதி எனது அந்தப்புரத்தில் இருப்பாள்'' என்றார்.

அவ்விருவரையும் பார்த்து நான் பிரமித்தேன். பிறகு பதிலேதும் சொல்லாமல் திரும்பினேன். ''பூபதி'' நமது ஒற்றர்கள் உறையூருக்குள் வரும் அனைவர் மீதும் ஒரு



கண் வைக்கட்டும். இளமாறன் வந்தால் சொல்லட்டும்'' என்று சொல்லிக்கொண்டிருந்தது என் காதில் விழுந்தது.

''காஞ்சிவர்மா! நீ இங்கு வந்திருப்பதையும், நாம் பேசிக்கொண்டிருப்பதையும் இன்னும் யாராவது கேட்டுக் கொண்டிருப்பார்கள். இந்தச் செய்தி நிச்சயம் மன்னரிடம் போகும்'' என்றார்.

''இங்கு நாம் தனித்துதானே இருக்கிறோம். இங்கு யார் வரப் போகிறார்கள்?'' என்று வினவினான் காஞ்சிவர்மன்.

அதுவரை சற்று எட்டநின்றிருந்த காவலன் பூபதியை நெருங்கி, ''இன்னுமொருவர் தங்களைப் பேட்டி காண வந்திருக்கிறார்'' என்று பணிவுடன் தெரிவித்துக் கொண்டான்.

பூபதி ஆசனத்திலிருந்து துள்ளி எழுந்து ''யாரது? என்ன பெயர்? இந்த சமயத்தில் யார் வரச் சொன்னது?'' என்று சீறினார். அவர் குரலில் கோபத்துடன் அச்சமும் இருந்தது.

''தாங்கள்தான் வரச் சொன்னீர்களாம்'' என்றான் காவலன்.

''வந்திருப்பவன் ஒற்றன்தான் சந்தேகமில்லை'' என்று நடுங்கினான் காஞ்சிவர்மன்.

''எங்கே இருக்கிறான் வந்தவன்'' என்ற இடிபோல் சொற்களை உதிர்த்தார் பூபதி.

''இடை வழியில்'' என்று காவலன் அறிவித்தான்.

''சரி காஞ்சிவர்மா! நம் வாழ்வு இன்றுடன் முடிந்தது'' என்று கூறிய பூபதி ''யாராயிருந்தாலும் அவனை அழைத்து வா. தப்ப விடாதே'' என்று காவலனுக்கு உத்தரவிட்டார்.

அந்த உத்தரவு தேவையில்லை என்பதை அடுத்த விநாடியே உணர்ந்துகொண்டார் பூபதி. இளமாறன் மெதுவாக உட்கூடத்துக்குள் வந்து விளக்கின் வெளிச்சத்தில் நின்றான். □

# 47. தந்திர பூபதி

காவலன் தனது வரவை அறிவித்ததும் அறிவிக்காததுமாக விநாடி நேரத்தைக்கூட வீணாக்காமல் கூடத்தில் நுழைந்துவிட்ட இளமாறன் அந்தக்கூடத்தின் விளக்கில் காஞ்சிவர்மன், பூபதி இருவரையுமே மாறி மாறி உற்றுப்பார்த்த வண்ணம் நின்றான் சில விநாடிகள். அவன் பார்வையில் கொடுமையும் ஏளனமும் கலந்து கிடந்ததையும், இரண்டு எலிகளை ஒரே நேரத்தில் பார்க்கும் பூனையின் 'எலி பட்சண' ஆசையும் அதில் துளிர்விட்டதையும் கண்ட காஞ்சிவர்மன், பூபதி இருவருமே பேரச்சத்துக்கு உள்ளானார்கள். எனினும் அதை வெளிக்குக் காட்டாமல் நடிக்கத் தொடங்கினார்கள். "இளமாறா! உன்னைத்தான் நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். நல்ல வேளையாக நீயே வந்து விட்டாய்" என்று காஞ்சிவர்மன் சொன்னான்.

இளமாறன் நெட்டுக்குத்தாக அசையாமலே விளக்கு வெளிச்சத்தில் நின்றான். அவன் தோரணை, அவன் அப்பொழுது காட்டிய நிதானம், அவனது இடுப்பிலிருந்து கால் வரையில் தொங்கிக் கொண்டிருந்த நீண்ட வாட்பிடி மீது கையை வைத்திருந்த முறை, இவையனைத்தும் மிகப் பயங்கரமாயிருந்ததால் சற்றே உதடுகள் நடுங்க எட்ட நின்ற காஞ்சிவர்மன் கால்களும் நடுங்கத் தொடங்கின. இத்தனைக்கும் பூபதி மட்டும் சற்று நிதானப்பட்டு முதலில் காட்டிய அச்சத்தை சிறிது உதறிக்கொண்டு ஆசனத்தில் பழையபடி சாய்ந்து உட்கார்ந்தார். அந்தச் சமயத்தில் மெல்ல வாய்திறந்து பேசத் தொடங்கிய இளமாறன் தன் வரவை அறிவித்த காவலனை நோக்கி "நீ வெளியே செல்லலாம். நானும் முதலமைச்சரும் தனித்துப் பேச வேண்டியிருக்கிறது" என்று கூறிவிட்டு "என்ன பூபதி?" என்று அவரையும் நோக்கிக் கேட்டான்.



பூபதி விநாடிகூடத் தாமதிக்காமல் "ஆமாம். சென்று விடு" என்றான் காவலனை நோக்கி.

"காவலர் யாரும் இங்கு வரவேண்டாம் என்று முதலமைச்சர் உத்தரவிட்டதாக மற்றவர்களிடமும் சொல்லி விடு" என்று அடுத்த உத்தரவையும் இட்டான் இளமாறன்.

காவலன் முதலமைச்சரைப் பார்த்தான். "அவர் சொன்னது கேட்கவில்லை? அப்படியே சொல்லிவிடு" என்றார் முதலமைச்சர். "இது என்ன விபரீதத்தில் கொண்டு விடுமோ?" என்று உள்ளூர சொல்லிக்கொண்டாரானாலும் அதை வெளிக் காட்டினாரில்லை.

காவலன் சென்றதும் பூபதியை நோக்கிய இளமாறன் "பூபதி! உம்மிடம் ஆயிரம் குறைகள் இருக்கலாம். ஆனால் காஞ்சி வர்மன் வஞ்சக நெஞ்சம் உமக்குக் கிடையாது" என்று பாராட்டினான்.

இந்தப் பாராட்டுதல் எதற்குப் பூர்வாங்கம் என்பதை அறியாத பூபதி காஞ்சி வர்மனைப் பற்றிய பேச்சுக்கு பதில் சொல்லாமல் நேராக விஷயத்துக்கு வந்து "இளமாறா! நீ எங்களிடம் படைத்தலைவனாயிருந்திருக்கிறாய். உன் வீரத்துக்கு மெச்சி அச்சுதவிக்கண்டர் உனக்கு எங்கள் படையிலும் பதவி அளித்தார். நீ பொய் சொல்லாதவன் என்பதும் பிரசித்தம். ஆகையால் உண்மையைச் சொல். எத்தனை நேரமாக இடைவழியில் நின்றிருக்கிறாய்?" என்று வினவினார்.

இளமாறன் பூபதியை சந்தேகக் கண்களால் நோக்கினான். "காஞ்சி வர்மன் முக்கிய விஷயத்துக்கு, அதாவது அவன் வஞ்சகத் திட்டத்தின் விவரங்களுக்கு வந்தவுடனேயே நான் இடைவழிக்கு வந்துவிட்டேன்" என்று சற்றும் சலனமற்ற குரலில் கூறினான்.

பூபதி ஆசனத்தில் சாய்ந்த நிலையிலிருந்து சற்று நிமிர்ந்து உட்கார்ந்தார். "அப்படியானால் இவன்

செய்தது அனைத்தும் உனக்குப் புரிந்துவிட்டது?" என்று கேட்டார்.

பூபதி எப்படியோ தன்னை சமாளித்துக்கொண்டு விட்டதையும் அவர் முகத்தில் சற்று முன்பு ஏற்பட்ட கலவரமும் மறைந்து விட்டதையும் உணர்ந்துகொண்ட இளமாறன் அவர் உள்ளத்தில் ஏதோ ஒரு திட்டம் உருவாகி விட்டதையும் தெரிந்து கொண்டான். ஆகவே உரையாடலை சர்வ சாதாரணமாகத் தொடர்ந்து "ஆம் புரிந்து விட்டது" என்றான் இளமாறன்.

"உன் மகன்..." என்று தொடங்கிய சொற்களை இழுத்தார், பூபதி.

"சிறையிலிருக்கிறான்."

"அவன்தான் உனது குமாரன் என்பது உனக்குத் தெரியாது?"

"தெரிந்திருந்தால் காஞ்சி வர்மன் இப்பொழுது தங்கள் முன்னிலையில் நிற்க அவசியமாயிருக்காது."

அதை நன்கு புரிந்து கொண்டிருப்பதற்கு பதிலாக தலையை அசைத்த பூபதி "அவன் சிறைப்பட்டதற்கு நான் காரணமல்ல" என்றார்.

"அல்ல. மன்னர் சிறை செய்ததாகச் சொன்னீர்கள்" என்றான் இளமாறன்.

சற்று எதையோ நினைத்துப் பெருமூச்சுவிட்ட பூபதி "உன் மகன் சிறையிலிருக்கிறான் என்பதைக் கேட்ட போது உன் மனம் இருந்த நிலை என்ன?"

"தகப்பன் மனம் எப்படியிருக்குமென்பதை நான் சொல்லத் தேவையில்லை தங்களுக்கு. இருப்பினும் சொல்கிறேன், மகன் நிலை கேட்க மனம் துடித்தது. என் அறிவுகூட சரியாக வேலை செய்யவில்லை" என்ற இளமாறன் சிறிது சஞ்சலம் அடையவே செய்தான்.

"அப்படி இருக்க புத்திரனை இழந்த என் மனம் எப்படியிருக்கும்?" என்று பூபதி கேட்டார்.



இளமாறன் கண்களில் அனுதாபம் விரிந்தது. "எனக்கு நன்றாகப் புரிகிறது பூபதி. புத்திரன் சிறையிலிருப்பதற்கே என் மனம் துடிக்கிறது. புத்திரனை இழந்த அந்த சோகத்தில் வசப்பட்டிருக்கும் உங்கள்மனம் எப்படி இருக்கும் என்பதும் எனக்குப் புரிகிறது. ஆனால் இருவர் வழியும் வேறு. உங்கள் மகனை நான் வேண்டுமென்று கொல்லவில்லை. அதை சற்று முன்பே நீங்களே கூறினீர்கள் இந்த அயோக்கியனிடம். உங்களை அறிந்தோர் கொலைகாரரென்று கூறுகிறார்கள். உங்கள் பெயரைக் கேட்டால் நடுங்குகிறார்கள். ஆனால் சற்று முன்பு என் மகனின் பால் முகத்தைப் பார்த்ததும் உங்களுக்கு அவனை அழிக்க மனம் வரவில்லையென்று சொன்னதிலிருந்து உங்க வருத்தத்தை நான் ஒப்புக்கொள்ளவில்லை" என்று இளமாறன் கூறினான்.

"நன்று" என்றார் பூபதி.

"நல்லது முதலமைச்சரே! என்னையும் உங்களையும் தனது கருவியாக்கி மோதவிட்டு தன்னைக் காத்துக் கொள்ள முயன்ற இந்த வஞ்சகனை என்ன செய்ய உத்தேசம்?" என்று இளமாறன் கேட்டான்.

பூபதியின் கண்களில் தந்திரத்தின் சாயை மெதுவாக விரிந்தது. "இவன் ஒரு விஷப்பாம்பு. இவனை என்ன செய்வதென்று எனக்கே புரியவில்லை" என்ற பூபதியின் சொற்களில் வெறுப்பு இருந்தது.

அப்பொழுதுதான் சொன்னான் இளமாறன், "இவனைச் சிறையில் தள்ளி விடுங்கள்" என்று.

அதுவரை மௌனமாக நடுங்கிய வண்ணம் கைகட்டி நின்றிருந்த காஞ்சி வர்மன் "உங்கள் மகனைக் கொன்றவனை உங்களிடம் அனுப்பியதற்கு இதுதானா கைம்மாறு? இவனை நம்பாதீர்கள். இவன் நம் இருவரையும் தீர்த்துவிடத் தயங்கமாட்டான்" என்று கூறினான் சொற்களும் நடுங்க. மேலும் தொடர்ந்தான்:

''இவனைச்சிறையில் தள்ளிவிடுங்கள். வேறு வழியில்லை'' என்று.

பூபதி தந்திரப் பார்வையொன்றை காஞ்சி வர்மன் மீது வீசினார். பிறகு இளமாரனையும் நோக்கினார். ''உங்களிருவரில் யாரைச் சிறை செய்வதென்றே எனக்குப் புரியவில்லை'' என்று கூறினார்.

''இளமாரனைத்தான் சிறை செய்ய வேண்டும். அவன் நீலரதியை மன்னர் உத்தரவுப்படி இங்கு அழைத்து வராமல் மன்னருக்குத் துரோகம் செய்திருக்கிறான்?'' என்று காஞ்சி வர்மன் சொன்னான்.

''இதற்கு என்ன சமாதானம்?'' என்று இளமாரனைக் கேட்டார் பூபதி.

இளமாரன் உதடுகள் சற்று கடினப்பட்டன. ''என்னை கடலூரில் சந்தித்த இவன் என்னையும் நீலரதியையும் சிறை செய்து மன்னரிடம் அனுப்பாமல் தன்னுடன் அழைத்துச் சென்றது ராஜத் துரோகக் குற்றமல்லவா?'' என்று வினவினான் உதடுகளில் கடுமையைக் காட்டி.

பூபதி தனது முகத்தில் சிந்தனையை அதிகமாகப் படரவிட்டுக் கொண்டார். சிறிது சிந்தனைக்குப் பிறகு ''நீங்கள் இருவர் சொல்வதிலும் நியாயமிருக்கிறது. இருவருமே ராஜத் துரோகக் குற்றம் செய்திருக்கிறீர்கள். யாரை விடுவது யாரைச் சிறை செய்வது என்று எனக்குப் புரியவில்லை'' என்று பூபதி போலிக்குழப்பத்தை முகத்தில் காட்டினார்.

காஞ்சிவர்மன் புத்தி உண்மையாகவே குழப்பத்திலும் கிலியிலும் சிக்கி இருந்ததால் ஏதும் சொல்ல இயலாமல் நின்றான். தான் ஒரு திட்டம் வகுக்கப்போக திட்டம் வேறு சுவட்டில் மாறிவிட்டதை எண்ணி ''எப்படி நிலைமையை மாற்றலாம்? எப்படி தப்பலாம்?'' என்று சிந்திக்கலானான்.

அந்தச் சமயத்தில் அவன் வியக்கும் நிலையொன்று ஏற்பட்டது. இளமாரனே அந்த நிலையை சிருஷ்டித்து ''முதலமைச்சரே! எங்கள் இருவரில் யாரைச் சிறை செய்



தாலும் மன்னர் சந்தேகம் உங்கள் மீதுதான் விழும். ஆகவே எங்கள் இருவரையும் சிறை செய்ய வேண்டாம். வெளியில் அனுப்பி விடுங்கள்'' என்று யோசனை சொன்னான்.

பூபதியின் முகத்தில் ஒரு விநாடி அதிர்ச்சி கலந்த வியப்பு தோன்றி மறைந்தது. ''இவனையா விடுதலை செய்யச் சொல்கிறாய்?'' என்று கேட்டார் பூபதி, வியப்பு நிரம்பிய குரலில்.

''ஆம்''—உறுதியாகச் சொன்னான் இளமாறன்.

''இதில் ஏதோ வஞ்சகம் இருக்கிறது'' என்று கூவினான் காஞ்சி வர்மன்.

''வஞ்சகனான உனக்கு எதுவும் வஞ்சகமாகத்தான் தோன்றும். சரி போய் வா. சந்தர்ப்பத்தை நழுவவிடாதே'' என்றார் பூபதி.

காஞ்சி வர்மன் வெளியே செல்லத் திரும்பினான். அவனுடன் செல்ல முயன்ற இளமாரனை ''சற்று நீ இரு'' என்று தேக்கினார் பூபதி.

வெளியே செல்ல காலெடுத்து வைத்த காஞ்சி வர்மன் சற்று திரும்பி ''என்ன சதி செய்யப் போகிறீர்கள்?'' என்று சற்று துணிவுடன் வினவினான் இருவரையும் நோக்கி.

பதிலுக்கு பூபதி காஞ்சி வர்மனை மிக உஷ்ணமாகப் பார்த்தார். ''இன்னும் ஒரு விநாடி நின்றால் உன்னை சிறையில் தள்ளிவிடுவேன்'' என்று உஷ்ணமாகச் சொல்லவும் செய்தார்.

அதற்குப் பிறகு காஞ்சி வர்மன் ஒரு விநாடிகூட நிற்கவில்லை. தூக்கிலிருந்து தற்செயலாகத் தப்பினவனைப் போல் விரைந்தான் வெளியே. அடுத்து பூபதி என்ன செய்யப் போகிறார் என்பதை இளமாரன் நினைக்கு முன்பாகவே பூபதி எழுந்து உள்ளே சென்று திரும்பி வந்து இளமாரனிடம் தன்னிடமிருந்த ஒரு பெரிய சாவியை நீட்டினார். ''இது உன் மகள் அடைக்கப்பட்டிருக்கும் அறையின் சாவி. இம்மாளிகையின் பின்புறம் சிறைச்சாலை இருக்கிறது. உன் மகளை விடுவிப்பது உனது

சாமர்த்தியம்'' என்றார். 'இனி காஞ்சி வர்மன் எனக்குக் கொடுத்த ஓலையைக் கொடு'' என்று கையை நீட்டினார்.

கையில் சாவியை வாங்கிக் கொண்ட இளமாறன், கச்சையிலிருந்து காஞ்சி வர்மன் ஓலையை எடுத்துக் கொடுத்து ''மன்னர் தலையீடு இதிலிருந்தால் நாவை உங்களைத் தனிமையில் மிரட்டி சாவியைப் பெற்றதாகச் சொல்லி விடுங்கள்'' என்று கூறிவிட்டு வெளியே நடந்தான்.

அவர்கள் இருவரும் சென்ற பிறகும் பூபதி ஆசனத்தை விட்டு எழுந்திருக்கவில்லை. நீண்ட நேர யோசனைக்குப் பிறகு ''இனி நீ வரலாம்'' என்று குரல் கொடுத்தார்.

அந்தக் குரலை அடுத்த இரண்டு நிமிடங்களில் தூர இருந்த ஓர் அறைக்கதவு திறக்கப்படும் ஓசை கேட்டது. அதைத் தொடர்ந்து கொள்ளிடக்கரை சத்திரக்காரன் கூடத்துக்கு வந்தான். பூபதி அவனை ஏறிட்டு நோக்கி ''காஞ்சிவர்மனை இளமாறன் கொல்லாவிட்டால் நீ கொன்று விடு'' என்றும் உத்தரவிட்டார். ''உனக்கு சம்மதந்தானே?'' என்றும் கேட்டார். ''முழு சம்மதம். தாங்கள் முதல் மந்திரியாக ஏற்பட்டது அச்சுதவிக்கண்டர் அதிர்ஷ்டம்'' என்றான் சத்திரக்காரன் பூபதி லேசாக நகைத்தார். ''என் அதிர்ஷ்டமும் எனது நீதியில் கலந்திருக்கிறது'' எனக் கூறி, காரணங்களையும் விளக்கினார். முதல் மந்திரியின் ஊகமும் முடிவுகளும் சத்திரக்காரன் உணர்ச்சிகளை உலுக்கிவிட்டன. அடுத்து முதல் மந்திரி அவனைப் பெயர் சொல்லி ''ரவிவர்மா!'' என்று அழைத்தார். சத்திரக்காரன் உணர்ச்சிகள் அடியோடு உறைந்துவிட்டதால் சிலையென அசைய முடியாமல் நின்றான். 'இவர் சாதாரண பூபதியல்ல, தந்திர பூபதி' என்று உள்ளூர சொல்லியும் கொண்டான். தந்திர பூபதி மேலும் தமது தந்திரத் திட்டத்தை விவரிக்கலானார்.

□ □ □

# 48. மாற்றுச்சாவி

கொள்ளிடக்கரை சத்திரக்காரனை 'ரவிவர்மா' என்று பெயர் சொல்லி அழைத்ததும் பெரு வியப்புக்கும் ஓரளவு திகிலுக்கும் உள்ளான சத்திரக்காரன் சில விநாடிகள் உணர்ச்சிகள் உறைய நின்றுவிட்டான். ஆனாலும் சிறிதுநேரத்தில் சுயநிலையை அடைந்து ''முதலமைச்சரே! கொள்ளிடக்கரை மக்களால் நான் விமலன் என்று அழைக்கப்படுகிறேன்!'' என்று மெதுவாகச் சொன்னான்.

முதலமைச்சர் தமது ஆசனத்தில் பழையபடி நன்றாகச் சாய்ந்து கொண்டு உதடுகளில் புன்முறுவலையும் படர விட்டுக்கொண்டு ''விமலன் உனது புதுப்பெயர், சில முக்கிய காரணங்களுக்காக நீயாக வைத்துக்கொண்டது. உனது தாயார் வைத்த பெயர் ரவிவர்மன். நீயும் மல்லைக்கடலைச் சேர்ந்தவன். காஞ்சி வர்மனை அழிப்பதற்காகவே, அவனை வஞ்சம் தீர்ப்பதற்காகவே, நீ கொள்ளிடக்கரை சத்திரத்துக்கு வந்து சேர்ந்தாய். நீதான் ரவிவர்மனென்பதும், காஞ்சி வர்மன் அழித்த பல குடும்பங்களில் உனதும் ஒன்றென்பதும் காஞ்சி வர்மனுக்குத் தெரியாது. தெரிந்தால் உன்னை இத்தனை நாள் உயிருடன் விட்டிருக்கமாட்டான்'' என்று சொன்னார். ''நீ அவனைக்கொன்று பழிதீர்த்துக் கொள்வதற்காகவே காத்திருக்கிறாய், அதற்கு சந்தர்ப்பத்தை இப்பொழுது நான் உனக்கு அளிக்கிறேன்'' என்றும் கூறினார் பூபதி.

ரவிவர்மன் முகத்தில் வியப்பு அதிகமாக விரியவே ''முதலமைச்சரே! தங்களுக்கு மட்டும் என் பெயரும் நோக்கமும் எப்படித் தெரிந்தன?'' என்று வினவினான்.

''ரவிவர்மா! களப்பிரர் பேரரசைப்போன்ற அகண்ட ராஜ்யத்திற்கு முதன் மந்திரியாயிருப்பவன் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்காவிட்டால் நிர்வாகம் நிமிட நேரத்தில் உடைந்து விடும். வணங்காமுடி மன்னர்களாயிருந்த சேர, சோழ, பாண்டியர்களைச் சிறையில் அடைத்து ஒடுக்கிய காலத்திலிருந்து ஆங்காங்கு நமது அரசுக்கு சில்லறைத் தொந்தரவுகள் ஏற்பட்டு வருகின்றன. யார் விரோதி, யார் நண்பன் என்பதும் புரியாதிருக்கிறது. ஆகவே பெரும் ஒற்றர் படையை நான் சிருஷ்டித்தேன். முக்கியமான எல்லாப் படை தலைவர்களைப் பற்றியும் குறுநிலக்கிழார்கள் எல்லோரைப் பற்றியும் விவரங்களை அறிய ஏற்பாடு செய்தேன். எதிரிகள் படையிலிருந்தவர்கள் நம்மிடம் வர முயன்றதும் அவர்களைப் பற்றிய சகலத்தையும் அறிந்தேன். அவர்களில் காஞ்சி வர்மனும் ஒருவன். அவன் நமது கடலூர்ப் பகுதி படைத்தலைவனானதற்குக் காரணமே, தனது விரோதிகளிடமிருந்து தப்ப நமது ஆதரவைப் பெற வந்தானென்பதை அறிந்தேன். பிறகு அவனைக் கவனிக்கவும் அவன் கடந்தகால செய்கைகளை அறியவும் நமது ஒற்றர்களை அனுப்பினேன் அவன் ஜாதகம் பூராவும் என்னிடமிருக்கிறது. அவன் அழித்த குடும்பங்களின் பட்டியல் என்னிடமிருக்கிறது. அந்தப் பட்டியலில் இளமாறனுக்கு அடுத்தபடியாக உன் பெயரும் இருந்தது. அதைப்பற்றி விசாரிக்கச் சொன்னபோது நீ விமலன் என்ற மாற்றுப் பெயருடன் சத்திரக்காரனாகி விட்டாயென்று கேள்விப்பட்டேன். நீ பெரிய வீரனென்பதும் எனக்குத் தெரியும். அத்தகைய வீரன் இளமாறனையும் நீலரதியையும் ஏன் இந்த உதயகுமாரனையும் கூட இங்கு கொண்டு வந்திருக்க முடியும். உன்னிடம் சத்திர வேலைக்காரர்களாக இருந்தவர்களில் பலர் நீ அமர்த்திய பாண்டிய வீரர்கள் என்பதையும் உணர்ந்தேன். இருப்பினும் பின்னால் நடந்த சம்பவங்களைக் கேட்டபோது நீ இளமாறனைச் சிறை செய்யாத காரணமும், இங்கு அவர்களைக் கொண்டு வந்த காரண



மும் எனக்குத் திட்டமாகப் புரிந்தது. மகாவீரனான இளமாறனைக் கொண்டு காஞ்சி வர்மனைத் தீர்த்துக் கட்டத் தீர்மானித்தாய். ஆனால் காஞ்சி வர்மன் இளமாறனைக் கொல்லாதிருக்கவே, காஞ்சி வர்மன் உன்னை இங்கு அனுப்பியதும் நீ திட்டத்தை மாற்றிக் கொண்டாய். இங்கு என்னிடம் அவன் உண்மை சொரூபத்தைச் சொல்லி அவனைத் தீர்த்துவிட முயன்றாய். ஆனால் நான் எனது திட்டத்தைச் சிறிது மாற்றிக் கொண்டேன். ஆகவே இப்பொழுது காஞ்சி வர்மனைக் கொல்ல உனக்கு வாய்ப்பு அளிக்கிறேன். என் ஊகம் சரியாயிருந்தால் இப்பொழுது காஞ்சி வர்மன் நீலரதியிருக்கும் சத்திரத்திற்குப் போவான். அவளைத் தூக்கிக் கொண்டு போய் மன்னரிடம் சேர்த்து தான் பிழைக்கப் பார்ப்பான். அதைத் தடுத்து நீலரதியைக் காப்பாற்றி உன் நண்பனுக்கு உதவப் பார். விடியும் நேரத்துக்குள் சகலமும் முடியவேண்டும். இல்லாவிட்டால் நீங்கள் உறையூரை விட்டுக் கிளம்புவது குதிரைக் கொம்பு'' என்று விளக்கமாகப் பேசினார் பூபதி.

அடுத்து அங்கு நிற்கவில்லை ரவிவர்மன். மிகத் துரிதமாக உறையூரின் பெரிய சத்திரத்துக்குச் சென்றான். அங்கு தனது அறையில் நீலரதி மிகுந்த துயரத்துடன் உட்கார்ந்திருந்ததைக் கவனித்த ரவிவர்மன் ''யார், நீங்களா நீலரதி? இங்கு யாரும் வரவில்லையா?'' என்று வினவினான்.

நீலரதி அச்சம் துளிர்த்த பார்வையை சத்திரக்காரன் மீது வீசினாள். ''ஆமாம், நான் இங்கு இருப்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று வினவினாள்.

''இளமாறன்தான் சொன்னார்'' என்று பொய்யைச் சொன்னான் ரவிவர்மன்.

''அவர் ஏன் வரவில்லை?''—நீலரதியின் கேள்வியில் சந்தேகம் இருந்தது.

''காரணமாகத்தான் வரவில்லை. நீங்கள் உடனடியாக புகாருக்குச் செல்ல வேண்டும்'' என்று கூறினான் ரவிவர்மன்.

''அவர் வந்தாலொழிய நான் இங்கிருந்து நகரமாட்டேன்'' என்றாள் நீலரதி.

''இங்கிருப்பது ஆபத்து.''

''ஏன்?''

''எந்த நேரத்திலும் இங்கு காஞ்சி வர்மன் வருவான் உங்களைச் சிறைசெய்ய.''

''இப்பொழுது எங்கிருக்கிறான்?''

''சற்று முன்பு வரை முதலமைச்சரிடம் பேசிக்கொண்டிருந்தான். பிறகு வெளியே சென்றான். இங்கு எந்தச் சமயத்திலும் வரலாம்.''

''நீர் எதற்காக இங்கு வந்தீர்?'' என்று சந்தேகத்துடன் கேட்டாள் நீலரதி.

கொடூரமான புன்முறுவலொன்று ரவிவர்மன் இதழ்களில் தவழ்ந்தது. ''அவனைக் கொல்ல வந்திருக்கிறேன்'' என்றான் சத்திரக்காரன், கொடுமை சொற்களிலும் ஒலிக்க.

நீலரதி பிரமித்தாள். ''அவனைக் கொல்லவா?'' என்று கேட்டாள் பிரமிப்பின் ஊடே.

''ஆம்.''

''ஏன்?''

''என் குடும்பத்தை அழித்தான். என் சொத்துக்களைப் பறித்தான். இப்பொழுது அவன் உயிரை நான் பறிக்கப் போகிறேன்.''

''உங்கள் குடும்பத்தையும் அவன்தான் அழித்தானா?''—நீலரதியின் சொற்களில் அனுதாபம் நிறைந்து கிடந்தது.



''ஆம் அம்மணி. பல குடும்பங்களை அழித்து பலர் சொத்துக்களைப் பறித்துத்தான் அவன் பெரிய மனிதனாயிருக்கிறான். அவனை அழிப்பது நான் சமுதாயத்துக்குச் செய்யும் கடமை'' என்ற சத்திரக்காரன் ''நீங்கள் புறப்படுங்கள் புகாருக்கு. நீங்களிருக்க வேண்டிய இந்த அறையில் நான் இருக்கிறேன். உங்களைக் கவர வரும் காஞ்சிவர்மன் இங்கு என்னைச் சந்திப்பான். ஒரு பெரிய கதை அவன் அழிவுடன் முடியும்'' என்றும் கூறினான்.

ஆனால் நீலரதி இளமாறன் வந்தாலொழிய அந்த இடத்திலிருந்து அசைய மறுத்தாள். இளமாறனே தன்னை புகாருக்குச் செல்ல பணித்ததையும் அவள் நிறைவேற்ற மறுத்தாள்.

இளமாறனுக்கு எந்த ஆபத்தும் கிடையாதென்றும், அப்படியே இருந்தாலும் ஆபத்திலிருந்து மீளும் திறன் அவனுக்கு உண்டென்றும் ரவிவர்மன் மன்றாடிப் பார்த்தும் அவள் கேட்கவில்லை. பிடிவாதமாக அந்த சத்திர அறையை விட்டு நகர மறுத்தாள்.

நேரம் ஓடிக்கொண்டிருந்தது. அந்த சத்திரத்துக்கு நீலரதி எதிர்பார்த்த இளமாறனும் வரவில்லை. ரவிவர்மன் எதிர்பார்த்த காஞ்சிவர்மனும் வரவில்லை. திட்டத்தில் ஏதோ மாறுதல் ஏற்பட்டு விட்டது என்பதைப் புரிந்து கொண்டாலும் அது என்னவாயிருக்கும் என்பது புரியாததால் ரவிவர்மன்கூட சிறிது குழப்பம் அடைந்தான். திட்டத்தில் மாறுதலை மட்டும் செய்தார் பூபதி. ரவிவர்மன், இளமாறன், காஞ்சிவர்மன் மூவரும் சென்றதும் சில வினாடிகள்தான் தாமதித்தார் பூபதி. பிறகு எழுந்து பக்கத்து அறைக்குச் சென்று ஒரு போர்வையை எடுத்து தமது தலை முதல் கால்வரை போர்த்திக்கொண்டு வெளியே புறப்பட்டார். தமது திட்டத்தில் எந்தவித பிசகும் ஏற்பட நியாமில்லை என்று தீர்மானத்துடன் தமது மாளிகையை விட்டு வெளியேவந்து சிறைச்சாலைப் பக்கமாகத் துரிதமாக நடக்கலானார். சிறைச்சாலையை

அவர் அடைந்ததும் அதன் வாயிலிலேயே அசைவற்று நின்றுவிட்டார். மன்னரின் புரவி சிறைச்சாலை வாயிலில் நின்றிருந்தது.

பூபதியின் திகில் எல்லை மீறியது. மெல்ல மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு வாயிலை அணுகி வாயில் காவலனிடம் "இங்கு மன்னர் எப்பொழுது வந்தார்?" என்று வினவினார்.

அவர் தலையை முக்காடிட்டிருந்தபடியால் "நீ யார் அதைக் கேட்க?" என்றான் வாயில் காவலன்.

பூபதி முக்காட்டை நீக்கி முகத்தைக்காட்டி "இப்பொழுது புரிகிறதா? மடையா! கேட்கிறதுக்கு பதில் சொல்" என்று சீறினார்.

காவலன் பெருந்திகிலுற்று, "தாங்களா? மன்னிக்க வேண்டும். இன்றிரவே புதுமையானது. முதலில் யாரோ ஒருவன் வந்து சாவியைக் காட்டி நீங்கள் அனுப்பியதாகச் சொல்கிறான். பிறகு மன்னர் வந்து உள்ளே செல்கிறார். இப்பொழுது தாங்களே வருகிறீர்கள்?" என்று குளறினான்.

"மன்னருடன் வேறு யாராவது வந்திருக்கிறார்களா?" என்று வினவினார் பூபதி.

"யாரும் வரவில்லை" என்று கூறினான் காவலன்.

"என்னதான் நடந்திருக்கும்?" என்று பூபதி தம்மைத் தாமே கேட்டுக் கொண்டார்.

நடந்தது மிக விசித்திரம் என்பதை அவர் எள்ளளவும் எதிர்பார்க்கவில்லை. அவர் போட்ட விதை ஒன்றாக, முளைத்தது வேறு செடி என்பதை அவர் உணரவில்லை. அவரிடமிருந்து சாவியை வாங்கிக்கொண்ட இளமாறன் அவர் மாளிகைக்குப் பின்னாலிருந்த சிறைச்சாலையை மிகத் துரிதமாகவே அடைந்தான். எனினும் அவனால்



உள்ளே நுழைவது அத்தனை எளிதாயில்லை. உள்ளே யாரும் செல்வதோ உத்தரவின்றி வெளியே வருவதோ முடியாதபடி பிரும்மாண்டமான சிறைச்சாலையை களப்பிர மன்னன் சிருஷ்டித்திருந்தான். முதலமைச்சரின் மாளிகைக்குப் பின்னால் பெரும் சுவர்களும் அகழியும் சேர்ந்த சிறைச்சாலை பார்க்கவே பயங்கரமாயிருந்தது. அச்சுதவிக்கண்டனிடம் சில ஆண்டு காலம் படைத்தலைவனாயிருந்த காரணத்தால் அதன் உள்ளே போகும் முறைகளை அறிந்திருந்த இளமாறன் அகழியிலிருந்து சிறைச்சாலை வாயிலுக்குச் செல்லும் பாதையைக் காத்து நின்ற வீரனிடம் அரச வீரர்கள் உள்ளே செல்லும் சைகையைச் செய்ய, வழி விட்டான் அந்தக் காவலன். அடுத்து சிறைச்சாலையின் பெரு வாயிலுக்கு வந்து அங்கு சாவியைக் காட்டி செய்தியும் சொல்ல, அந்தக் கதவும் திறக்கப்பட, மேலும் உள்ளே சென்ற இளமாறன் அங்கு இருபுறத்திலுமிருந்த ஏராளமான அறைகளைக் கண்டான். ஆனால் சாவியில் வெட்டப்பட்டிருந்த ஓர் எண்ணைப் பார்த்து அது வலப்புற அறைகளின் கடைசியில்தானிருக்க வேண்டுமென்று தீர்மானித்து இருபுற அறைகளுக்கிடையிலிருந்த குறுகலான வழியில் நடந்து சென்றான். சாவியின் எண்ணில் கண்ட அறையைக் கண்டதும் நிம்மதிப் பெருமூச்சு விட்டான். சிறைச்சாலையில் அந்த அறையின் ஒரு மூலையில் உதயகுமாரன் சுருண்டு கிடந்தான். "உதயகுமாரா! மகனே!" என்று மெதுவாகக் குரல் கொடுத்தான் இளமாறன்.

உதயகுமாரன் மெல்லக் கண்ணை விழித்து நோக்கினான் அறை வாயிலை. அங்கு இளமாறன் நிற்பதைக் கண்டதும் மிகுந்த சீற்றத்துடன் "உன்னை யார் இங்கு வரச் சொன்னது? போய்விடு" என்றான் எரிச்சலுடன்.

"உன்னை விடுதலை செய்ய வந்திருக்கிறேன். இதோ பார்" என்று சாவியைக் காட்டிய இளமாறன் "மகனே வா, புறப்படு" என்று துரிதப்படுத்தவும் செய்தான்.

இரண்டு நாட்களாக அந்த சிறைச்சாலையின் கொடுமைகளைக் கண்டிருந்த உதயகுமாரன் விடுதலை என்றதும் வாயைப் பிளந்தான். பிறகு ஏதோ நினைத்துக் கொண்டு ''உன்னுடன் நான் வர விரும்பவில்லை. போய் விடு'' என்று கூறி திரும்பப் படுத்துக் கொள்ள முயன் றான்.

''உதயகுமாரா! நேரம் அதிகமில்லை வந்துவிடு. நீ என் மகன்'' என்று கெஞ்சி அழைத்தான் இளமாரன்.

அப்பொழுதும் மசியவில்லை உதயகுமாரன். ''நீ என் தந்தையாயிருக்க முடியாது. எனது தாய் ஒருக்காலும் நாத்திகனை மணந்திருக்க மாட்டாள்'' என்று சீறிய உதயகுமாரன் ''நீ எனது வாழ்வில் விளைவித்த தொல்லை கள் போதும், போய்விடு'' என்றான்.

அதிகமாகப் பேச நேரமில்லாததால் கதவைத் திறந்து உதயகுமாரனைத் தூக்கிக் கொண்டு போய் விடுவதென்று முடிவெடுத்த இளமாரன் கையிலிருந்த சாவியைப் பூட்டில் பொருத்தித் திறக்க முயன்றான். ஆனால் சாவி திரும்ப வில்லை. பூட்டுக்குள்ளேயே அகப்பட்டுக் கொள்ளவே அதைத் திருப்பி பூட்டை உடைக்க எண்ணி முரட்டுத்தன மாக சாவியை மீண்டும் திருப்பினான்.

''அது சரியான சாவியல்ல. இந்தச் சாவியால் திற'' என்று பின்னாலிருந்து ஒரு குரல் கேட்டது. அவன் கண்ணுக்கு முன்னால் ஒரு கை வேறொரு சாவியையும் நீட்டியது. பின்னால் நிற்பது யார் என்பதைக் கவனிக்கத் திரும்பிய இளமாரன் கல்லெனச் சமைந்து நின்றான். பின்னால் அச்சுதவிக்கண்டன் நின்று கொண்டிருந்தான். அவன் இதழ்களில் புன்முறுவலொன்று அரும்பி நின்றது.

□ □ □

# 49. உயிர் அழியும்! பாசம் அழியாது!

உதயகுமாரன் தன்னுடன் வருவதைவிட பயங்கர மான அந்த சிறைச்சாலையிலேயே இருக்க விரும்பிய தையும், தனது மகனென்று ஒப்புக் கொள்ளக்கூட அவன் விருப்பப்படவில்லை என்பதையும் உணர்ந்ததால், பலவந்தமாக அவனைத் தூக்கிச் செல்ல முடிவு செய்த இளமாரன், பூபதி கொடுத்த சாவி பூட்டைத் திறக்காது போகவே பூட்டை உடைத்துவிடத் தீர்மானித்தபோது தனது கண் முன்பாக ஒரு சாவி நீட்டப்பட்டதையும் ''அது சரியான சாவியல்ல. இதனால் திற'' என்று குரல் ஒலித்ததையும் கேட்டுத் திரும்ப, அச்சுதவிக்கண்டன் புன்முறுவலுடன் பின்னால் நிற்பதையும் சாவியை நீட்டிய அவன் கையும் அப்படியே அசையாமல் திடமாக நின்றதையும் கவனித்ததும் பிரமை பிடித்த கண்களை மன்னன் மீது நிலைக்க விட்டான்.

அவன் மலைப்பைக் கவனித்த மன்னனின் புன்முறுவல் முன்னைவிட அதிகமாக மலர்ந்தது. ''முதலில் நீ வந்த பணியை நிறைவேற்று. கதவைத் திற. பேச்சைப் பிறகு வைத்துக் கொள்வோம்'' என்று கூறினான் மன்னன் புன் முறுவலின் ஊடே.

எந்த இக்கட்டான நிலையிலும் அதிர்ச்சியடையாத இளமாரன் அந்த இரவில், அந்த நிலையில், குழப்பமே அடைந்தான். வாழ்க்கையில் முதன் முதலாக மகன் என்ற நினைப்பில் சந்தித்த உதயகுமாரன் உள்ளே சுருண்டு கிடக்க, பின்னால் மன்னன் புதுச்சாவி கொடுக்க ஏற்பட்ட சூழ்நிலை அவனைக் குழம்பச் செய்தாலும் சீக்கிரமே தன்னைச் சமாளித்துக் கொண்ட இளமாரன் ''மன்னவா! இந்தப் பொய்ச் சாவி...'' என்று தொடங்கினான்.

''பூபதி கொடுத்தது'' என்று வாசகத்தை முடித்த மன்னன் ''பூபதி மீது தவறில்லை, உதயகுமாரன் அறைப் பூட்டு மாற்றப்பட்டது அவருக்குத் தெரியாது'' என்று பூபதிக்காகப் பரிந்து பேசுவதுபோல் விஷமமாகப் பேசினான்.

களப்பிர மன்னன் தனது முதலமைச்சரையும் நம்ப வில்லையென்பதைப் புரிந்து கொண்ட இளமாறன் ''மன்னவா! நான் இங்கு வந்தது தங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று வினவினான்.

களப்பிர மன்னன் இளமாறன் தோள்மீது ஒரு கையை வைத்து ''இளமாறா! நீ வேறெங்கு போக முடியும்? மற்றவர்களை பூபதியிடம் அனுப்பியதுபோல் காஞ்சி வர்மன் உன்னையும் அங்குதான் அனுப்பியிருப்பானென்பதை ஊகிக்க பெரிய அறிவு தேவையில்லை. நீ பூபதியிடம் போனால் வரக்கூடிய இடம் இதுதான் என்பதை உணர்வதும் பிரமாதமல்ல. தந்தை மகனிருக்க வேண்டிய இடத்துக்கு வராமல் வேறெங்கு போக முடியும்?'' என்று அன்பு சொட்டும் குரலில் வினவினான்.

மன்னனின் அன்புக் குரலை நம்பாத இளமாறன் ''இது ஏதோ பெரிய தீவினைக்கு அஸ்திவாரம்'' என்று நினைத்தாலும் அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் ''மன்னவா! நான் இங்கு வருவேனென்பதை உணர்ந்தாலும் இந்த அகாலத்தில், இரவில், இங்கு வருவேனென்பது எப்படித் தெரியும்?'' என்று கேட்டான்.

இளமாறன் கேட்ட கேள்விக்கு சிறிதும் சிந்திக்காமலே பதில் சொன்னான் மன்னன். ''திருட்டுத்தனமான எந்த வேலைக்கும் உதவக்கூடியது இருட்டு ஒன்றுதான். அதுவும் இந்த மூன்றாம் ஜாமம் அனைவரும் நன்றாக உறங்கும் நேரம். நீ இப்பொழுது வராமல் வேறெப் பொழுது வரமுடியும்?'' என்று மேலும் சொன்னான் மன்னன்: ''இளமாறா! நீ துரிதமாக செயல்படக் கூடியவ



னென்பதையும் காலத்தைத் [illegible]யமாக்க மாட்டாய் என்[illegible] பதையும் நீ நமது படையி[illegible] இருந்தபோதே கவனித்திருக் கிறேன். ஆகவே இன்றிர[illegible] நீ இந்த இரவே இங்கு வருவாய் என்பது [illegible] தெரியும்''— இதைச் சொன்ன அச்சுதவிக்கண்டன் ''சரி சரி! கதவைத் திற. சாவியை வேடிக்கை பார்க்க உன்னிடம் கொடுக்க வில்லை'' என்றும் சொன்னான், சிறிது கண்டிப்பு ஒலித்த குரலில்.

அதற்குப் பிறகும் தாமதிப்பது சரியல்லவென்ற எண்ணத்தால் புதுச்சாவியைக்கொண்டு பூட்டைத் திறக் கவே பூட்டு வெகு சுலமாகத் திறந்தது. பூட்டைத் திறந்து அறையின் இரும்புக் கதவையும் திறந்த இளமாறன் மன்னனை நோக்கித் திரும்பி ''அடுத்து என்ன உத்தரவு?'' என்று வினவினான்.

''பூபதி கொடுத்த சாவியை என்னிடம் கொடுத்து விடு'' என்று கையை நீட்டி அந்தச் சாவியை வாங்கிக் கொண்ட மன்னன் ''இனி நீ வந்த காரியத்தைக் கவனிக்க லாம். உள்ளே செல். மகனிருக்கிறான்'' என்று கூறினான் அதிகாரக் குரலில்.

உடனடியாக அந்த அறைக்குள் செல்லாத இளமாறன் ''நான் வந்தது மகனைப் பார்க்க மட்டும் அல்ல'' என்றான் சொற்களை முடிக்காமல்.

''அழைத்துச் செல்லவும் வந்தாய். எனக்குப் புரிகிறது. ஆனால் இளமாறா! உலகத்தில் எல்லாமே நமது இஷ்டப் படி நடப்பதில்லை. எல்லாத் திட்டங்களும் நமது விருப்பப்படி பூர்த்தி பெறுவதில்லை. காஞ்சிவர்மன் திட்டம் என்னவாயிற்று? பூபதியின் திட்டந்தான் எப்படி முடிந்தது? இளமாறா உள்ளே செல். நாளைக் காலை வரை மகனுடன் அளவளாவிக் கொண்டிரு. நாளை மறுபடியும் சந்திப்போம்'' என்ற மன்னன் சற்று எட்ட

இருந்த காவலனை நோக்கி "இவர் உள்ளே சென்றதும் கதவைப் பூட்டி சாவியை என்னிடம் அனுப்பிவிடு" என்று கூறிவிட்டு சிறைச்சாலை வாயிலை நோக்கி நடந்தான்.

அதற்குமேல் எந்த நடவடிக்கையிலும் இறங்குவது உசிதமல்லவென்பதைப் புரிந்து கொண்ட இளமாறன் சிறை அறைக்குள்ளே சென்றான். காவலனும் மன்னன் உத்தரவுப்படி கதவைச் சாத்திப் பூட்டினான்.

இப்படித் தனிமையில் விடப்பட்ட இளமாறன் தனது மகனை உற்றுப் பார்த்துக்கொண்டு நீண்ட நேரம் நின்றான். சிறை அறைகளின் இடை வழியிலிருந்த இரண்டு மூன்று விளக்குகளின் வெளிச்சம் உதயகுமாரன் மீது விழவே அவன் முகத்தில் தனது மனைவியின் சாயல் இருப்பதை முதன் முதலாக கவனித்ததால் ஏக்கப் பெருமூச்சும் விட்டான். "இந்த சாயலை இத்தனை நாள் நான் ஏன் கவனிக்கவில்லை?" என்று கேட்டும் கொண்டான். மனைவியின் சாயல் முழுதுமில்லாததாலும் இருவரும் சந்தித்த காலம் முதல் எலியும், பூனையுமாக இருந்து விட்டதாலும் உதயகுமாரனைச் சரியாக நான் பார்க்கவில்லையென்பதை உணர்ந்து கொண்டான். "வெறுப்பு மனத்திற்குத் திரை போடுகிறது. கண்களையும் மறைக்கிறது" என்று தனக்கு விளக்கமும் தந்துகொண்டான்.

பிறகு மெல்ல மைந்தனை அணுகி அவன் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான். அவன் அருகில் வந்ததுமே சற்று ஒதுங்கிக் கொண்ட உதயகுமாரன் "நீங்கள் சௌகரியமாகப் படுங்கள்" என்று இடத்தை ஒதுக்கிக் காட்டினான்.

இளமாறன் தனது வலக் கையை உதயகுமாரன் மார்புமீது வைக்க முயன்றான். உதயகுமாரன் அந்த கையிலிருந்தும் ஒதுங்க முற்படவே "மகனே! ஏன் அஞ்சுகிறாய்? நான் உன்னை என்ன செய்து விடுவேன்?" என்று கேட்டான். அவன் குரலில் மகனிடமுள்ள பாசம் பெரிதாக ஒலித்தது.

இருந்தாலும் தந்தையிடமிருந்த வெறுப்பால் உதயகுமாரன் அதை கவனித்தானில்லை. "இந்தப் புதிய



உறவால் பயன் ஏதுமில்லை. தந்தையை மகன் கொஞ்சும் காலமும் கடந்து விட்டது" என்றான் வெறுப்புத் தட்டிய குரலில்.

இளமாறன் மகனை நோக்கினான் அன்பு சொட்டும் கண்களால். "மகனே! தந்தை - மகன் உறவுக்குக் காலம் என்பது ஒன்றுமில்லை. காலம் இரத்த பாசத்தை அறிக்காது. வயது உறவைத் துண்டிக்க முடியாது. இதைப் புரிந்து கொள்" என்று சொன்னான் தழுதழுத்த குரலில்.

என்றும் அத்தகைய தழுதழுத்த குரலை இளமாறனிடம் காணாத உதயகுமாரன் நெஞ்சத்தில் தந்தையைப் பற்றிய பரிதாபம் எழுந்தாலும் அதை உதறிக்கொண்டான், கடந்த கால நிகழ்ச்சிகளை நினைத்து. ஆகவே சொன்னான்: "அந்த உறவால் பயனில்லை. நாளை அழிந்து போகும் இந்தச் சடலத்தை நீங்கள் மகனாக ஏற்றாலும் ஒன்றுதான், ஏற்காவிட்டாலும் ஒன்றுதான்" என்று.

"நாளை அழிந்து போகும் உடலா?" என்று அச்சத்துடன் வினவினான் இளமாறன்.

"ஆம். நாளை என்னைத் தூக்கில் போடுவார்கள். அல்லது வெட்டி பின்னாலிருக்கும் சவக்குழியில் போடுவார்கள். கழுகுகள் என்னைத் தின்னும்" என்று கூறிய உதயகுமாரன் குரலில் நடுக்கம் தெரிந்தது.

"யார் சொன்னது அப்படி?" என்று கேட்டான் இளமாறன். அவன் குரலிலும் என்றும் ஒலிக்காத நடுக்கம் ஒலித்தது.

அவன் நடுக்கத்தைக் கண்ட உதயகுமாரன் இகழ்ச்சிப் புன்முறுவலை உதடுகளில் படரவிட்டான். "சிறைச் சாலைக் காவலன் சொன்னான். இங்கு வந்தவர்கள் உயிருடன் வெளியே செல்வது அபூர்வமாம். அடிக்கடி சிறைக்கு விருந்தாளிகள் வருவதால் அறைகளை ஒழித்து

விட [சிறைவாசிகளையும் ஒழித்துவிடுவது வழக்கமாம்'' என்று கூறினான் உதயகுமாரன்.

''நம் விஷயத்தில் அது நடக்காது'' என்று திட்டமாகச் சொன்ன இளமாரன் ''உதயகுமாரா! மகனே! என் உயிரைக் கொடுத்தாவது உன்னைக் காப்பாற்றி விடுகிறேன். என்னை நம்பு: ஆனால் அதற்கு ஒரு நிபந்தனை உண்டு'' என்றும் சொன்னான்.

''நிபந்தனையா?''

''ஆம்''

''எந்தத் தந்தையாவது மகனைக் காப்பாற்ற நிபந்தனை விதிப்பதுண்டா?''

''வேறு வழியில்லாவிட்டால் யாரும் நிபந்தனை விதிப்பார்கள்.''

''என்ன நிபந்தனையோ?''

உடனடியாக நிபந்தனையைச் சொல்லவில்லை இளமாரன். சற்று நிதானித்துவிட்டு ''மகனே! வேறெதுவுமில்லை என்னை ஒருமுறை தந்தையே என்று அழைத்து விடு'' என்று இளமாரன் கெஞ்சினான்.

''அதனால் உங்களுக்கு என்ன பயன்?'' என்று அப்பொழுதும் பிடிவாதத்தைக் காட்டினான் உதயகுமாரன்.

''நான் பிறந்த பயனைப் பெறுவேன். உன் தாயை அடைந்த பயனைப் பெறுவேன்'' என்றான் இளமாரன் பாசத்தால் குழைந்த சொற்களால்.

இளமாரனின் பலவீனத்தைக் கண்ட உதயகுமாரன் அப்பொழுதும் மனம் இளகினான் இல்லை. ''நீங்கள் எனக்குத் தீங்கைத் தவிர வேறு என்ன செய்தீர்கள்? நாத்திகத்தால் என் ஆத்திகக் கனவுகளை உடைக்கமுயன்றீர்கள்.



நான் காதலித்த நீலரதியையும் பறித்துக் கொண்டீர்கள்?'' என்று குற்றம் சாட்டினான் தந்தை மீது.

இதைக் கேட்ட இளமாரன் பதறிப்போனான். ''இது அபாண்டம் மகனே! நீ நீலரதியைக் காதலிப்பதாக ஒருமுறைகூடச் சொல்லவில்லையே. சொல்லியிருந்தால் அப்பொழுதே உங்கள் திருமணத்தை முடித்திருப்பேனே! நீ அவளை உதறியதால்தானே அவள் என்னிடம் வந்தாள்?'' என்று இதயத்திலிருந்து இரத்தம் சொட்டும் வேதனையில் பேசினான்.

''இப்பேர்ப்பட்ட கேவல மனம் படைத்தவன் உன் மகனாயிருக்க முடியாது. நீ வெளியே வா. நீ மட்டுமாவது தப்பிச் செல்'' என்று பூபதியின் குரல் கேட்கவே சிறைக் கம்பிகள் மூலம் வெளியே நோக்கினான்.

பூபதி தலை முதல் கால்வரை தன்னை ஒரு சேலையால் மறைத்து நின்றிருந்தார். இருப்பினும் இளமாரன் இருந்த இடத்தைவிட்டு அசையவில்லை. ''இங்கிருப்பதாக மன்னருக்கு வாக்கு கொடுத்து விட்டேன்'' என்றான் உறுதியான குரலில்.

''வாக்குப்படி நடந்தால் நாளை தூக்கிலாடுவாய்'' என்றார் பூபதி.

''பாதகமில்லை. அதுவரை மகனுடன் இருக்கிறேன்'' என்ற இளமாரன் ''பூபதி! உன் உயிர் அழியும், பாசம் அழியாது'' என்றும் சுட்டிக்காட்டினான்.

'மன்னர் சொன்னது உண்மை'' என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்டார் பூபதி. இப்படி ஒரு மனிதன் சிரிக்க முடியுமென்று அவர் சொப்பனத்திலும் நினைக்கவில்லை.

□ □ □

# 50. அழைத்த கயிறுகள்

சிறையிலிருந்து தப்பிச் செல்ல வாய்ப்பு அளித்தும் இளமாறன் இணங்காததைக் கண்டு பெருவியப்பெய்தினார் முதல் மந்திரி பூபதி. சிறையில் இருப்பதாக மன்னருக்கு வாக்குக் கொடுத்து விட்டதாக அவன் தப்பாததற்கு காரணம் காட்டியது விந்தையிலும் விந்தையாயிருந்தது முதலமைச்சருக்கு. வாக்குப்படி நடந்தால் தூக்கிலாட வேண்டியிருக்கும் என்பதைச் சுட்டிக்காட்டியும் அவன் வெளியே வர முற்படாததைச் சிந்தித்து அவன் துணிவை உள்ளூரப் பாராட்டியதன்றி "இப்படியும் ஒரு மனிதன் இருக்க முடியுமா?" என்று எண்ணமிட்ட பூபதிக்கு திடீரென ஒரு சந்தேகம் வரவே "இளமாறா! உன்னை வெளியில்விட என்னால் முடியாதென்று நினைக்கிறாயா?" என்று வினவினார்.

சிறை அறைக்குள்ளே சுவரில் சாய்ந்தபடி "அப்படி எதுவும் நினைக்கவில்லை" என்று கூறினான் இளமாறன்.

"நினைக்கக் காரணமிருக்கிறது. கையில் நான் கொடுத்த சாவியை நினைத்து என் சக்தியைப்பற்றிச் சந்தேகப்படுகிறாய், பூட்டை மன்னர் மாற்றியது அப்பொழுது எனக்குத் தெரியாது. இதோ இந்தப் பூட்டின் சாவி" என்று அறையைத் திறந்த புதுச்சாவியைக் காட்டினார் பூபதி.

"இந்தச் சாவி ஏது உங்களுக்கு?" என்று இளமாறன் கேட்ட கேள்வியில் சந்தேகம் ஒலித்தது.

அக்கேள்வியை எதிர்பார்க்காத பூபதி ஒரு வினாடி குழம்பினார். மன்னர் சிறைக்குள் இளமாறனை அனுப்பி



விட்டு வெளியில் வந்ததும் சிறைச்சாலையில் தான் ஒதுங்க முற்பட்டதை எப்படியோ பார்த்துவிட்டதையும் சுவர் அருகில் மறைந்து நின்ற தன்னிடம் வந்து "பூபதி! இது தான் இளமாறன் சிறைப் பூட்டைத் திறக்கும் சாவி" என்று தமது கையில் சாவியைத் திணித்ததையும் எண்ணிப்பார்த்தார் பூபதி. அடுத்து மன்னர் சொன்னதும் நினைவுக்கு வந்தது அவருக்கு. "பூட்டைத் திறந்தாலும் இளமாறன் நாளை வரை வெளியே செல்ல மாட்டான். எதற்கும் முயன்று பாரும்" என்று சொல்லிவிட்டு அவர் புரவி ஏறிப் போய்விட்டதையும், அவர் சொன்னபடியே சகலமும் நடப்பதையும் கண்ட பூபதியின் குழப்பம் அதிகமானாலும், சிறிது சமாளித்துக்கொண்டு "இளமாறா" என்று மறுபடியும் அழைத்தார்.

"என்ன முதலமைச்சரே?" என்று வினவினான் இளமாறன்.

"இந்த சாவி என்னிடம் எப்படி வந்ததென்று கேட்கவில்லையே நீ?" என்று புதிர் போடுவதுபோல் பேசினார் பூபதி.

இளமாறன் அனாயாசமாக பதில் சொன்னான். "மன்னர் கொடுத்திருப்பார்" என்று.

அதுவும் பூபதிக்கு அதிர்ச்சியாயிருந்தாலும் அதை வெளிக்குக்காட்டாமல் வேறொரு தந்திரத்தைக் கையாண்டார். "மன்னர் எதற்காக இந்தச் சாவியை என்னிடம் கொடுத்தார்?" என்று கேட்டார்.

"அவரைத்தான் கேட்க வேண்டும்" என்று ஏளனக் குரலில் சொன்னான் இளமாறன்.

"உன்னை விடுதலை செய்வதற்காகக் கொடுத்தார்" என்று பூபதி பெரும் பொய்யைச் சொன்னார்.

இளமாறன் பெரிதாக நகைத்தான். "பூபதி! உமது மூளை வரவர வேலை செய்ய மறுக்கிறது" என்றும் கூறினான் நகைப்பின் ஊடே.

''என்ன உளறுகிறாய்?''—முதல் முதலாக சீற்றத்தைக் காட்டினார் முதலமைச்சர்.

''முதல் மந்திரி! மன்னர் இந்த அறையில் என்னைத் தள்ளிவிட்டு வெளியே போய் உம்மிடம் சாவியைக் கொடுத்து என்னை விடுதலை செய்யச் சொல்லுவானேன்? அவர் என்னை உள்ளே அனுப்பாமலே வெளியே செல்லப் பணித்திருக்கலாமே?'' என்று வினவினான் இளமாறன். ''உம்மிடம் சாவியைக் கொடுத்ததற்கு அதல்ல காரணம்'' என்றும் சொன்னான்.

''வேறென்ன காரணம்?'' — பூபதி கேட்டார், சந்தேகக் குரலில்.

''உம்மை சோதிப்பது ஒரு காரணம். என்னிடமுள்ள நம்பிக்கை ஒரு காரணம், கொடுத்த வாக்கை இளமாறன் மீறமாட்டானென்று மன்னருக்குத் தெரியும். அதுவும் ஒரு காரணம். அது மட்டுமல்ல பூபதி. மன்னர் கட்டளையிட்டாலும் மகனை விட்டு சிறையிலிருந்து நான் வெளியேற மாட்டேன்''. — இதைத் திட்டமாகச் சொன்னான் இளமாறன்.

அதுவரை பொறுமையாயிருந்த பூபதி சினத்தின் சிகரத்தை எய்தி ''அப்படியானால் இந்த சிறையை விட்டு வெளியே செல்லும்போது நீயும் மகனும் மரணத்தை நோக்கித்தான் செல்வீர்கள்'' என்று எரிந்து விழுந்தார்.

இளமாறன் முகம் திடீரென உணர்ச்சியற்ற கல்லாயிற்று. ''மரணத்திலாவது நாங்கள் ஒன்றுபடுகிறோம்'' என்று கூறினான் வறண்ட குரலில். மேலும் கேட்டான். ''ஒரு வேண்டுகோள்'' என்று.

''என்ன?'' என்று கேட்டார் பூபதி. அவர் குரலில் ஒரு புது நம்பிக்கை ஒலித்தது. இளமாறன் வழிக்கு வரலாம் என்ற எண்ணம் தெரிந்தது.

''ஓர் உதவி செய்ய வேண்டும்''இளமாறன்கேட்டான்.

''எது வேண்டுமானாலும் கேள்'' பூபதிபதிலளித்தார்.



''விடிய இன்னும் ஒரு ஜாமம் இருக்கிறது. அதுவரையிலாவது நான் என் மகனுடன் தனித்திருக்க விரும்புகிறேன். தயவுசெய்து சளசளவென்று பேசி பிராணனை வாங்காமல் மாளிகைக்குச் செல்லுங்கள்'' என்ற இளமாறன் மகனை நோக்கித் திரும்பினான்.

அவர்களிருவரையும் ஒருமுறை எரித்து விடுவதுபோல் பார்த்துவிட்டு வேகமாகச் சிறைச்சாலையை விட்டு நடந்தார் முதல்மந்திரி பூபதி. சிறைச்சாலை அறை வரிசைகளை அவர் கடந்ததும் இளமாறன் தனது மகனை நோக்கினான், அன்பும் பாசமும் சொட்டிய கண்களால். உதயகுமாரனோ அந்த அன்பையோ பாசத்தையோ விரும்பாமல் ''சாகும் சமயத்தில் உறவு என்ன வேண்டியிருக்கிறது?'' என்று கடுமையாகப் பேசினான்.

இளமாறன் மகன் கையை தன் கையால் பற்ற முயன்றான். ஆனால் அதற்கு இடங்கொடுக்காத உதயகுமாரன் கையை இழுத்துக் கொண்டான். இளமாறன் துக்கப் பெருமூச்சு விட்டு ''மகனே! சாகும் சமயததிலாவது நமது உறவுமுறை தெரிந்ததே என்று சந்தோஷப்படு'' என்று கூறினான்.

''சாவதில் சந்தோஷமென்ன இருக்கிறது?'' என்று வினவினான் உதயகுமாரன்.

''சில சாவுகளில் சந்தோஷமிருக்கிறது. வீரர்கள் சாவைக் கண்டு அஞ்சுவதில்லை. வாழ்க்கையை மகிழ்ச்சியுடன் ஏற்பது போல் சாவையும் வரவேற்பார்கள்.''

உதயகுமாரனுக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாததால் பெருமூச்செறிந்தான். இளமாறன் வலக்கை உதயகுமாரன் முதுகைத் தடவியது ஆதரவுடன் ''மகனே! அஞ்சாதே, இன்னும் நாம் இறக்கவில்லை. எந்த மனிதனும் இறக்கும் வரையில் அவன் முடிவு நிச்சயமாகாது. இறக்கும் தறுவாயில் பிழைத்தவர்கள் இருக்

கிறார்கள். பிழைக்கலாம் என்று எண்ணி இறந்தவர்களும் உண்டு. அவனவனுக்கு காலம் வரும் வரையில் இறக்க மாட்டான்'' என்றான் பாசம் நிறைந்த குரலில்.

''வேதாந்தம்...'' முனகினான் உதயகுமாரன்.

''உண்மையின் இன்னொரு பெயர்'' என்றான் இளமாரன். இதைச் சொல்லி மகனை தன்னிடம் வலுக்கட்டாயமாக இழுத்துக் கொண்ட இளமாரன் ''மகனே! உறங்கு. நான் உயிருடன் இருக்கும் வரை உன்னை சாக விடமாட்டேன்'' என்று உறுதியும் கூறினான்.

உதயகுமாரன் கண்கள் பளிச்சிட்டன. ''நாம் தப்ப முடியுமா இங்கிருந்து?'' என்று கேட்டான்.

''உலகத்தில் முடியாதது எதுவும் இல்லை, துணிவும் ஊக்கமும், சுயநம்பிக்கையும் இருந்தால்'' என்ற இளமாரன், மகனை இழுத்துத் தன் மடியில் கிடத்திக் கொண்டான். அவன் மடியிலிருந்து விலக எத்தனை முயன்றும் உதயகுமாரனால் முடியாததாலும் சோர்வு ஆட்கொண்டதாலும் தகப்பன் மடியில் படுத்து உறங்கவே செய்தான்.

அப்படி உறங்கிய மகனை அக்கு அக்காகப் பார்த்தான் இளமாரன். அவன் உடலைப்பு கிட்டத்தட்ட தனது மனைவியின் உடல்மைப்பு போலவே மென்மையாகவும் மிருதுவாகவும் இருந்தாலும், கைகளில் மட்டும் உரம் இருந்ததையும் கவனித்தான். ''சிறிது இவனை பக்குவப்படுத்தினால் பெரிய வீரனாக வரமுடியும் இவனால்'' என்று தீர்மானிக்கவும் செய்தான். இத்தனையிலும் ஒரு விஷயம் வேதனையைத் தந்தது இளமாரனுக்கு. தான் காதலிக்கும் நீலரதியிடம் மகனும் மனத்தைப் பறிகொடுத்து விட்டானென்பதை நினைத்து ''விதியே! ஏதோ ஒருவிதத்தில் என்னைப் பழிவாங்கப் பார்க்கிறாய்'' என்று விதியைத் தூற்றினான். இதில் நீலரதியின் வாழ்க்கையும் சம்பந்தப்பட்டிருந்ததால் மகனை மணக்க அவள் மனத்தை வளைப்பது சாத்தியமல்ல என்றும்



சொல்லிக் கொண்டான். அவர்கள் இருவர்கள் வயதையும் முன்னிட்டு அவர்களுக்கு மணமுடிக்க தான் வாணகிரி மலை விடுதியில் தீர்மானித்தபோதும், பிறகும் உதயகுமாரனோ நீலரதியோ அடியோடு சம்மதப்படவில்லை என்பதை நினைத்து ''இத்தனை நாள் இல்லாத காதல் இவனுக்கு திடீரென கடல்மலையில் எப்படி முளைத்தது'' என்றும் தன்னைக் கேட்டுக் கொண்டான். எதற்கும் விடை காணாததால் குழம்பிய மனத்துடன் சிறைச் சாலைச் சுவரில் நன்றாகச் சாய்ந்து கொண்டான்.

நேரம் ஓடிக்கொண்டிருந்தது. மடியில் படுத்திருந்த மகனை அணைத்த வண்ணம் இளமாரனும், லேசாக கண் அயர்ந்தான். அப்படி புறக்கண் அயர்ந்த தந்தை—மகன் இருவர் அகக்கண்களிலும் நீலரதி தோன்றினாள். ''நான் மீண்டும் எடுத்து போகிறேன். உங்களிருவருக்குள் சண்டை வேண்டாம்'' என்று அவள் கூறுவதாக இருவருமே கனாக் கண்டார்கள்.

அந்தக் கனவு இருவருக்குமே திருப்பள்ளியெழுச்சி பாடியது. உதயகால சிறை மணிகள் டணார் டணார் என்று பெரியதாக சப்தித்தன. இளமாரன் கண்விழித்தும் எழுந்திருக்கவில்லை. உதயகுமாரன் மட்டும் எழுந்து அறைக்கம்பிகளிடம் போய், வெளியே எட்டிப் பார்த்தான். அறை வரிசைகளுக்கு அப்பாலிருந்த திறந்தவெளி சதுக்கத்தில் இருந்த நான்கு தூக்குமரங்கள் வரிசையாக நடப்பட்டிருந்தன. அவற்றில் தொங்கிய சுருக்கிட்ட கயிறுகள் காலைக்காற்றில் அசைந்து கொண்டிருந்தன. அவை தன்னை வா வா என்று அழைப்பதாகத் தோன்றியது உதயகுமாரனுக்கு. அவனது சப்தநாடிகளும் நடுங்கியதால் தன்னை சமாளித்துக் கொள்ள சிறைக் கம்பிகளை கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்.

□ □ □

# 51. எகிப்திலிருந்த வந்தவர்

சிறைக்கம்பிகளைப் பிடித்துக் கொண்டு நின்ற உதயகுமாரன் எட்ட இருந்த சதுக்கத்தில் நடப்பட்டிருந்த தூக்குமரங்களின் கயிறுகள் காற்றில் ஆடுவதையும், தன்னை அவை அழைப்பது போலிருந்ததையும் கண்டு உள்ளத்திலும் உடலிலும் உதறல் ஏற்பட்டதைச் சமாளிக்க கம்பிகளை சிறிது இறுகவே பற்றினான். மரண அச்சத்தின் விளைவாக காலை வேளையின் மனோகர நிலைமையை அவனால் ரசிக்கமுடியாததால் சதுக்கத்தில் அழகு நடைபோட்ட இரண்டொரு மைனாக்களையும், தூக்குக் கம்பங்களின் மீது உட்கார்ந்த தூக்கணாங்குருவிகளையும் பார்த்த உதயகுமாரன், ''என்ன ஒய்யாரம் வேண்டியிருக்கிறது இந்தப் பறவைகளுக்கு?'' என்று உள்ளூர எரிந்து விழுந்தான். பொழுது விடிந்த சிறிது நேரத்திற்கெல்லாம் சதுக்கத்தை நான்கு பணியாட்கள் வந்து பெருக்கி சுத்தம் செய்ததைக் கவனித்த உதயகுமாரன் ''ஏன்? தூக்குக்கயிற்றிலிருந்து பிணங்கள் விழ குப்பை இருக்கக்கூடாதோ?'' என்று வெறுப்புடன் கேட்கவும் செய்தான். சதுக்கத்தில் பறவைகளாலும், பணியாட்களாலும் ஏற்பட்ட ஒவ்வொரு நிகழ்ச்சியும் அவனுக்கு வெறுப்பையும் அச்சத்தையுமே உண்டாக்கியதால, அவன் சோகப் பெருமூச்சு விட்டான் பலமுறை. ''இன்னும் சிறிது நேரததில் என் உயிர் போய்விடும்'' என்று எண்ணியதால் அந்த உயிரை தனக்களித்த இளமாரனிடம் மிதமிஞ்சிய சினமும் கொண்டதால் பார்வையை சிறைக்குள் திருப்பவும் செய்தான் உதயகுமாரன்.

சிறையின் கோடியில் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்த தந்தையைக் கண்டதும் கோபம் மேலிட்டு ''தூக்கிலிடப்போகும் தந்தைக்கு தூக்கம் எப்படி வருகிறது?''



என்று தன்னைத்தானே வினவிக் கொண்டான். அவன் அந்த வினாவை எழுப்புவதற்கும் காலைக் கதிரவனின் கிரணங்கள் சதுக்கத்தில் விழுவதற்கும் நேரம் சரியாயிருக்கவே மற்றொரு மணி சிறைச்சாலையில் அடித்தது. அந்த மணியைத் தொடர்ந்து பூர்ண ஆயுதந்தரித்த நான்கு தளப்பிர வீரர்கள் சிறைச்சாலை அறைகளை நோக்கி வரவே, ''யமதூதர்கள் வந்துவிட்டார்கள்'' என்று சொல்லிக் கொண்டான் உதயகுமாரன். பெரும் ஆபத்துகளை என்றும் சந்தித்திராத இளமாரனின் மகன் அவர்களைக் கண்டதும் அதிகமாக நடுங்கி சிறை அறைக் கோடிக்குச் சென்று இளமாரனைத் தொட்டு உலுக்கினான்.

ஒருமுறை உலுக்கியபோது இளமாரன் நன்றாகத் திரும்பி முடக்கிப் படுத்து ''உம்'' என்று எச்சரிக்கை ஒலி கொடுத்தானே தவிர எழுந்திருக்கவில்லை.

இரண்டாம் முறையும் உலுக்கிய உதயகுமாரன் ''விடிந்துவிட்டது எழுந்திருங்கள்'' என்று பேசவும் செய்தான்.

''விடிந்தாலென்ன?'' என்று கூறி திரும்பிப் படுத்து விட்டான் இளமாரன்.

''ஐயோ! எழுந்திருங்கள்'' என்று நடுங்கும் குரலில் அழைத்தான் உதயகுமாரன்.

''கொஞ்ச நேரம் போகட்டும்'' என்றான் இளமாரன் கண்களைத் திறக்காமலே. ''எழுப்புவது யார்?'' என்றும் முனகினான்.

''நான்தான் உதயகுமாரன்'' என்றான் மகன்.

'உதயகுமாரனா! யார் அது?'' என்றான் இளமாரன் குப்புறப் படுக்கவும் செய்தான்.

''நான்தான் உங்கள் மகன்'' என்று உலுக்கி எழுப்ப முயன்றான் உதயகுமாரன்.

இம்முறை முனகவில்லை இளமாறன். மெல்ல போர்வையை விலக்கி எழுந்து உட்கார்ந்து கொண்டான். தனது மகனைப் பார்க்க கண்களைக் கசக்கி மலரவும் செய்து கொண்டான். "மகனே நீயா!" என்று வினவவும் செய்தான் அன்பு சொட்டும் குரலில்.

"ஆம், நான்தான் தந்தையே" என்று சிறிது தயங்கி கடைசி வார்த்தையைச் சொன்னான் உதயகுமாரன்.

இஷ்டமின்றி உதயகுமாரன் உதிர்த்த அந்த வார்த்தை கூடப் பேரின்பமாயிருந்தது, இளமாறனுக்கு. அதனால் உதடுகளில் புன்னகை அரும்ப மகனை நோக்கிய இளமாறன் "என்ன மகனே?" என்று வினவினான் அன்பு சொட்டும் குரலில்.

உதயகுமாரன் பதில் சொல்லவில்லை. சதுக்கத்தில் ஆடிய தூக்குக் கயிறுகளையும், ஆயுதபாணிகளான களப்பிர வீரர்களையும் கையால் சுட்டிக்காட்டினான். மகனுக்கு சாவை நினைத்து உதறல் எடுத்திருப்பதை உணர்ந்த இளமாறன், "இவற்றைக் கண்டு பயப்பட என்ன இருக்கிறது" என்று வினவினான்.

"வேறு எதைக்கண்டு, யாரைக் கண்டு பயப்பட வேண்டும்?" என்று வினவினான் உதயகுமாரன்.

"மகனே! சிறைச்சாலையில் ஏன் தள்ளுகிறார்கள்? தண்டிக்க. தண்டனையில் மரணதண்டனை ஒன்று. அதை நிறைவேற்றும் முறைகளில் தூக்குப் போடுவதும் ஒரு முறை. இதைக்கண்டு ஏன் பயப்படவேண்டும்?" என்று கேட்டான் இளமாறன்.

"தூக்கில் தொங்குவது சுகமா?" — உதயகுமாரன் சீறியுடனும் எரிச்சலுடனும் கேட்டான்.

"சில விநாடிகள்தான் கஷ்டம். அப்புறம் ஒரே சுகந்தான். உலகக் கஷ்டங்கள் நம்மை பாதிக்கா. உனது ஆத்திகம் உண்மையாயிருந்தால் நீ வைகுண்டத்துக்கோ கைலாயத்துக்கோ செல்வாய். அங்கிருக்கும் சுகங்களைச்



சிறப்பாக எழுதியிருக்கிறார்கள். அங்கு போவதில் என்ன தடை?" என்ற இளமாறன், லேசாக நகைத்தான்.

சாகும் தருணத்திலும் நாத்திகத்தை தந்தை காட்டுவதைப் பற்றி உதயகுமாரன் உள்ளூரச் சீறினாலும், வைகுண்டத்துக்கோ கைலாயத்துக்கோ போக இஷ்டப்படாததால் "உயிர் போனபின்பு தானே அங்கெல்லாம் போகமுடியும்?" என்றான்.

இளமாறன் புன்முறுவல் விரிந்தது நன்றாக அவன் வதனத்தில். "சொர்க்கம் போக இஷ்டமில்லாவிட்டால் உன்னை இங்கேயே நிறுத்திக்கொள்கிறேன்" என்றான் இளமாறன்.

குமாரன் அச்சத்தால் "எனக்கு சொர்க்கம் போகும் வயது வரவில்லை" என்றான் மெதுவாக.

"அதற்கு வயது கிடையாது என்று உன் புராணங்கள் சொல்கின்றன" என்று சுட்டிக்காட்டினான் இளமாறன்.

அதற்குமேல் தாளாத உதயகுமாரன் பிரும்மாஸ்திரத்தை வீசினான் இளமாறன்மீது. "உண்மையில் நீங்கள் என் தந்தையாயிருந்தால் இப்படிப் பேசமாட்டீர்கள்" என்றான் சினம் நிறைந்த குரலில்.

அந்த அஸ்திரம் இளமாறன் இதயத்தை இளக்கிவிட்டது. "உதயகுமாரா! கவலைப்படாதே நீ இறக்கப் போவதில்லை" என்று திட்டமாகக் கூறினான்.

அப்பொழுது ஒவ்வொரு சிறையாக சோதித்துக் கொண்டு வந்த காவலர் இளமாறனும் உதயகுமாரனும் இருந்த சிறைக்கு வந்தார்கள். உதயகுமாரனைப் பிடித்து அறை மூலைக்குத் தள்ளிவிட்ட இளமாறன் காவலர்களை, தானே எதிர்நோக்கினான். காவலரில் தலைமைக் காவலனாகத் தோன்றியவன் கேட்டான் "இளமாறன் என்பவர் நீங்கள்தானா?" என்று. அவன் கேள்வியில் மிகவும் பணிவிருந்ததை அறைக்கோடியிலிருந்த உதய

குமாரனும் கவனித்தான். சிறையிலிருப்பவரிடம் காவலன் மரியாதை காட்டும் காரணம் அவனுக்குப் புரியவில்லை. ஆனால் காவலனின் அடுத்த கேள்வி உதயகுமாரனைத் தூக்கி வாரிப்போட்டது. ''அதோ இருப்பது உங்கள் மகன் உதயகுமாரன்தானா?'' என்று வினவினான் தலைமைக் காவலன்.

''ஆம்''-சர்வசாதாரணமாக வந்தது இளமாரன் பதில்.

''உங்களிருவரையும் மன்னர் பகல் உணவு சமயத்தில் சந்திப்பார். அதுவரை உங்களுக்கு வேண்டிய சகல வசதிகளையும் அளிக்க உத்தரவாயிருக்கிறது. நீங்கள் தப்ப முயலுவதில்லை என்று உறுதிகூறும் பட்சத்தில் நீங்கள் இந்த சிறைச் சாலைக்குள் சுதந்திரமாக உலாவலாம். காலைக்கடன்களை சௌகரியப்படி முடித்துக் கொள்ளலாம்'' என்று தலைமைக் காவலன் கூறினான்.

இளமாரன் இதழ்களில் இளநகை அரும்பியது. ''இந்த சிறைச்சாலையிலிருந்து இதுவரை யாரும் தப்பியதாக சரித்திரம் இல்லையே'' என்று இளமாரன் கூறினான் புன்சிரிப்பின் ஊடே.

''ஆம். தப்பியவர் கிடையாது'' என்று தலைமைக் காவலனும் ஒப்புக்கொண்டான்.

''அப்படியானால் நான் மட்டும் எப்படி தப்ப முடியும்? என்று இளமாரன் வினவினான்.

''உங்களைப் பிடித்து வைக்கக் கூடிய சிறை இந்த தமிழகத்தில் கிடையாது என்று மன்னர் நம்புகிறார்'' என்றான் தலைவன்.

''இதோ சிறையில் இருக்கிறேனே?''—இளமாறன் குரலில் திட்டமிருந்தது.

''நீங்களாக உங்கள் மகனைக் காண ஏற்றுக்கொண்ட சிறை இது.''

''இதை மன்னரே சொன்னாரா?''



''ஆம்!''

''சரி. நான் தப்ப முயலவில்லை. இது உறுதி என்று மன்னரிடம் கூறுங்கள்.''

''உங்கள் மகன்?''

''அவன் உறுதி கூற அவசியமில்லை.''

''ஏன்?''

''அவனால் தப்ப முடியாது.''

இதைத் திட்டமாகச் சொன்ன இளமாரன் ''போய் வாரும் தலைவரே! உணவு சமயத்துக்கு மன்னரைச் சந்திக்க நான் சித்தமாயிருக்கிறேன்'' என்று கூற தலைவன் அவ்விடத்தை விட்டு அகன்றான். போகு முன்பு சிறைச்சாலைக் காவலனிடம் ஏதோ செய்திகளைக் கூறிவிட்டுச் சென்றான்.

காவலன் சென்றதும் உதயகுமாரன் சீறினான்: ''என்னைக் கோழையென்று சொல்லிவிட்டீர்கள்'' என்று

''அதற்குக் காரணமிருக்கிறது'' என்றான் இளமாரன்.

''என்ன காரணம்?''

''உன்னிடமிருந்து காவலர் தலைவன் உறுதிமொழி வாங்காதிருக்க அது ஒன்றுதான் வழி. நீயும் என்னைப் போல் வாக்குக் கொடுத்துவிட்டால் இருவரும் தப்பும் முயற்சியில் ஈடுபட முடியாது.''

''அதனாலென்ன?''

''நமது வம்சம் அழிந்துவிடும். நீ இருந்தாலாவது எனது குலப் பெயரைச் சொல்ல ஒருவன் இருப்பாய். உனது குழந்தைகள் இருக்கும்'' என்று உதயகுமாரன் பேச்சுக்கு முடிவு கட்டிய இளமாரன், தூர இருந்த ஒரு காவலனை அழைத்து கதவைத் திறக்கச் சொன்னான்.

காவலனும் உடனடியாக கதவைத்திறக்க, இளமாரன் காலைக்கடன்களை முடிக்கச் சென்றான். காலைக் கடன்

களை முடித்து நீராடி அரசர் அனுப்பியிருந்த உடை புனைந்து தனது வாளையும் இடையில் கட்டிக்கொண்ட இளமாறன், மகனையும் நீராடச் சொல்லி சிறையைச் சுற்றிப் பார்க்கலானான். தூக்கு மரங்களையும் அசக்கிப் பார்த்தான். காவலனை விளித்து "என்னைத் தூக்குப் போடுவதனால் இந்த மரம் போதாது; இன்னும் வயிரம் பாய்ந்ததாக இருக்க வேண்டும்" என்றான். மரணத்திலும் அலட்சியத்தைக் காட்டும் அந்த மகாவீரனைப் பார்த்து பிரமித்த காவலன் பதிலேதும் சொல்லவில்லை. நேரம் ஓடியது. உதயகுமாரனும் நீராட்டத்தை முடித்துவிட்டு ஆண்டவனைப் பிரார்த்தித்துக் கொண்டு சித்தமானான் மன்னரைச் சந்திக்க.

சரியாக நடுப்பகலில் மன்னனிடமிருந்து அழைப்பு வந்தது இளமாறனுக்கு. அவனையும் மகனையும் அழைத்துச் செல்ல மாவலியே வந்திருந்தார். அவர் கொண்டு வந்திருந்த ரதத்தில் மன்னன் மாளிகையை அடைந்த இளமாறனுக்கு வரவேற்பு பலமாக இருந்தது. ஆயுதபாணிகளான களப்பிரக்காவலர்கள் அவனை வணங்கி வரவேற்றார்கள். மாவலி அவ்விருவரையும் அரண்மனைக்குள் அழைத்துச் சென்றார். இரண்டாவது உப்பரிகையிலிருந்த பெரும் கூடத்தில் களப்பிர மன்னனான அச்சுதவிக்கண்டன் உட்கார்ந்திருந்தான். கூடத்தின் மூலைகளிலும் சுவர்களிலும் பலவித போர்க்கருவிகளும் கேடயங்களும் காணப்பட்டன. மூலைகளில் வேல்களும் பிண்டிபாலம் முதலிய பயங்கரக் கோடரிகளும் இருந்தன. மன்னன் விருந்துக் கூடத்தையும் போர்ப் பாசறையாக்கி விட்டதைக் கண்ட இளமாறன் மன்னனுக்குத் தலை வணங்கி "மன்னவா! விருந்துக்குத்தானே அழைத்தீர்கள்?" என்று வினவினான்.

"வீரர்களுக்கு போரும் ஒரு வகை விருந்துதான்" என்றான் அச்சுதவிக்கண்டன். அதைச் சொல்லி தனது கைகளை ஒருமுறை தட்டினான்.



விருந்துக்கூடத்தின் ஒரு மூலையிலிருந்த அறைக்கதவு திறந்தது. அதிலிருந்து இரு காவலருக்கிடையில் ஆஜானுபாகுவான ஒரு மனிதர் வந்தார்.

அவரைக் கண்ட இளமாறன் பேரதிர்ச்சி அடைந்தான். அப்பொழுது மீண்டும் ஒலித்தது அச்சுதவிக்கண்டன் குரல், "இவர் நீலரதியைப் பார்க்க வந்திருக்கிறார்" என்று.

இளமாறன் கண்கள் அச்சுதவிக்கண்டன் கண்களை அலட்சியமாகச் சந்தித்தன. அதில் ஏளனமும் கலந்திருந்தது. "இவர் யார் தெரியுமா உங்களுக்கு?" என்று வினவினான் ஏளனம் குரலில் ஒலிக்க.

"எகிப்து நாட்டிலிருந்து வந்திருக்கிறார்" என்றான் மன்னன்.

"வேறு ஏதாவது தெரியுமா?" என்று கேட்டான் இளமாறன்.

"வேறு என்ன?" —மன்னன் குரல் சந்தேகத்துடன் ஒலித்தது.

"இவர் நீலரதியின் பெரிய தந்தை" என்று இளமாறன் அறிவித்ததும் அந்த மண்டபமே மௌனத்தில் ஆழ்ந்தது.

அந்த அமைதியை மன்னனே கலைத்தான். "இளமாறா! உண்மையைச் சொல். நீலரதி எங்கே?" என்று சீற்றமும் குரூரமும் மிகுந்த குரலில் கேட்டான் அச்சுதவிக்கண்டன்.

□ □ □

# 52. பசி வந்திட...

அச்சுதவிக்கண்டன் விருந்து மண்டபத்தின் கோடி அறையிலிருந்து இரு காவலருக்கிடையில் வந்த மனிதரை நீலரதியின் பெரிய தந்தையென்று அறிமுகப்படுத்தியதும் அந்த மண்டபத்தை பெரும் அமைதி சூழ்ந்தாலும், அந்த அமைதியை ''நீலாதி எங்கே?'' என்று மன்னன் சொல் கலைத்து விட்டதால், அடுத்து என்ன நேரிடுமோ என்று மாவலியும், உதயகுமாரனும் மற்றோரும் அச்சத்தின் வசப்பட்டாலும் இளமாரன் மட்டும் முகத்தில் எந்தவித பீதியையும் காட்டாமல் மன்னன் எதிரே நின்று அவரை உற்று நோக்கவே செய்தான். ''மன்னவா! நீலரதி தங்கள் ஆட்சியின் எல்லைக்குள்தான் இருக்கிறாள். எங்கும் ஓடிப் போய் விடவில்லை'' என்று அனாயாசமாக பதிலும் சொன்னான்.

இளமாரனின் அச்சமற்ற தன்மையையும் எந்தக் குறிப்பையும் காட்டாத பொதுவான பதிலையும் கண்ட களப்பிர மன்னன். இளமாரனுக்குத்தான் தாழ்ந்தவனல்ல என்பதைக் காட்ட தனது உணர்ச்சிகளை விநாடி நேரத்தில் ஒரு கட்டுக்குள் கொண்டு வந்து நிதானமாகப் பேசினான். ''இளமாரா! எனது ஆட்சி மிகவும் பரந்திருக்கிறது. சேர சோழ பாண்டியர்களின் மூவகை நிலமும் எனது ஆட்சியிலிருக்கிறது. அதில் நீலரதி இருக்கும் இடத்தைத் தேடுவது சுலபமல்ல'' என்று சாதாரணமான குரலில் சுட்டிக்காட்டினான்.

''மன்னவா! மகாவீரரும் பெரிய சாம்ராஜ்யாதிபதியுமான தங்களால் முடியாத காரியம் எதுவுமில்லை. தவிர பெரிய அரசுகளை வீழ்த்தியுள்ள தங்கள் சக்தி கேவலம் ஒரு பெண்ணைப் பிடிப்பதில் செலுத்தப்படுவது தங்கள்



மேன்மைக்குத் தகுதியல்ல'' என்று சுட்டிக்காட்டினான் இளமாரன்.

அவன் சொல்வதில் உண்மை இருந்ததைப் புரிந்துகொண்ட களப்பிர மன்னன் தனது இதழ்களில் இளநகையைத் தோற்றுவித்தான். ''நீலரதியை கேவலம் பெண் என்று சொல்ல முடியாது. தற்காத்துக் கொள்ளும் வீரமும் இணையிலா அழகும் உடையவள். அவள் தற்காப்புத் திறனை, புகாரின் புத்த விஹாரத்தில் கண்டேன். அவள் அழகையும் அங்குதான் கண்டேன். அன்றே அங்கிருந்து இங்கு அழைத்துவரத் தீர்மானித்தேன். அந்தப் பணியை உன்னிடம் ஒப்படைத்து வந்தேன். ஆனால் நீ அப்பணியை நிறைவேற்றவில்லை'' என்ற அச்சுதவிக்கண்டன் புன்முறுவலை சிறிது அதிகமாக இதழ்களில் விரிவடையச் செய்தான்.

மன்னன் தனது இச்சையையும் ஆணையையும் வெளியிட்டபோது அவன் புன்முறுவலே கொண்டிருந்ததைக் கவனித்த இளமாரன் அந்தப் புன்முறுவலில் ஏதோ ஆழ்ந்த திட்டம் இருப்பதைப் புரிந்துகொண்டான். இருப்பினும் அதை வெளிக்குக் கொணரக் கேட்டான்: ''மன்னவா! தங்கள் அந்தப்புரத்தில் நூற்றுக்கணக்கான அழகிகள் இருப்பதாகக் கேள்வி. அப்படியிருக்க இன்னொருத்தி எதற்கு?'' என்று.

அச்சுதவிக்கண்டன் லேசாக நகைத்தான். ''நட்சத்திரங்கள் ஆயிரம் இருந்தாலும் வெண்மதி ஒன்றுதானே?'' என்று கேட்டான் நகைப்பின் ஊடே. அத்துடன் நிற்கவில்லை மன்னன்: ''இங்குள்ள பெண்களில் நூறுபேரை உன்னுடன் அனுப்பி விடுகிறேன், நீலரதியை நீ இங்கு அனுப்பி விடு'' என்றும் சொன்னான் நகைப்பின் ஊடே.

பதிலுக்கு இளமாரனும் நகைத்தான். ''மன்னவா! நூறு பேரை அனுப்பினால் அவர்களைப் பராமரிக்க நான் என்ன மன்னனா?'' என்றும் கேட்டான்.

"பராமரிப்புக்கு வேண்டிய வசதியையும் அளிக்கிறேன். கனப்பிரர்களின் படைத்தலைவனாக உன்னை நியமிக்கிறேன். அந்தப் பதவிக்கு நிலபுலன்கள் உண்டு" என்று சுட்டிக்காட்டினான் மன்னன்.

"பெண் பண்ணை வைக்கச் சொல்கிறீர்கள்?"

"ஆம்"

"பதிலுக்கு நீலரதியை உங்களிடம் ஒப்படைக்க வேண்டும்?"

"ஆம்"

"மன்னவா! இதென்ன பண்டமாற்று வியாபாரமா? வீரரான தங்களுக்கு இது தகுமா?"

"வீரனுக்குத்தான் இது தகும். இஷ்டப்பட்டதை அடைய முடியாதவன் வீரனாக மாட்டான்"-இதை சற்று அழுத்தியே சொன்னான் அச்சுதவிக்கண்டன்.

"இஷ்டப்படும் பொருள் பெண்ணாயிருந்தால் அதை அவள் இஷ்ட விரோதமாக அடைய முற்படுபவன் வீரனாக மாட்டான்" என்ற இளமாறன் "மன்னவா! இந்த கேவலத்துக்கு இளமாறன் உட்படுவானென்று நினைக்கிறீர்களா? இதுதான் நீங்கள் என்னைப்பற்றிப் போட்ட மதிப்பீடா?" என்று கண்டிப்பான குரலில் வினவினாலும் உஷ்ணத்தைக் காட்டவில்லை அவன்.

அதுவரை நீலரதியைப் பற்றிய இருவர் உரையாடலையும் கவனித்துக் கொண்டு நின்றிருந்த நீலரதியின் பெரிய தந்தை "தமிழ்நாடு இந்தக் கேவலத்திற்கு வந்துவிட்டதா?" என்று நல்ல தமிழில் மிகுந்த துணிவைக் காட்டிய குரலில் வினவினார்.

இளமாறனுடன் சகஜமாகப் பேசிக்கொண்டிருந்த அச்சுதவிககண்டன் முகத்தல் அவரது சொற்களைக் கேட்டதும் சினத்தின் பொறி பறந்தது. "என்ன வந்துவிட்டது தமிழ்நாட்டுக்கு இப்பொழுது?" என்று மன்னன் சொற்களிலும் சீற்றம் தெரிந்தது.



எகிப்திலிருந்து வந்த அந்த மனிதர் மன்னன் சீற்றத்தை லட்சியம் செய்தவராகத் தெரியவில்லை. "பெண்ணைப் பிடிக்க ஒரு மாமன்னன்! அதைப்பற்றி பேரம் பேச ஒரு படைத்தலைவன்! இதைவிட என்ன கேவலம் வேண்டும்?" என்று கேட்டார். அவர் குரலில் மிகுந்த இகழ்ச்சி இருந்தது.

"நீ யார் அதைக் கேட்க?" -மன்னன் குரலில் சீற்றம் அதிகமாகத் தெரிந்தது.

"நீங்கள் தர்க்கம் செய்யும் பெண்ணின் பெரிய தந்தை" என்றார் அந்த மனிதர், மிகவும் அடக்கமாக, ஆனால் இகழ்ச்சிமிக்க குரலில்.

"உங்கள் நாட்டிலிருக்கும் கொலையும் கற்பழிப்பும் இந்த நாட்டில் கிடையாது" —அச்சுதவிக்கண்டன் கடுகுரலில் சொன்னான்.

அவன் வாசகத்தை முடிக்கு முன்பே இடைமறித்த எகிப்து மனிதர் "அப்படி நினைத்துதான் இங்கு வந்தேன். பண்பாட்டைப்பற்றி உங்கள் பிரச்சாரத்தையும் இலக்கியத்தையும் கேள்விப்பட்டு அது உண்மையாக இருக்கும் என்று நம்பித்தான் இங்கு வந்தேன். இங்குள்ள நிலையைப் பார்த்தால் பிரச்சாரத்திற்கும் பிரத்தியட்சத்துக்கும் சம்பந்தமில்லை என்று புரிகிறது" என்று சொன்னார். அத்துடன் தமது இடைக்கச்சையிலிருந்து ஒரு ஓலையை எடுத்துப் பிரித்தும் கொடுத்தார் மன்னனிடம்.

அச்சுதவிக்கண்டன் அந்த ஓலையை வாங்கிப்பிரித்துப் படித்தான். அவன் முகத்தில் சினமும் அதிர்ச்சியும் கலந்து தாண்டவமாடின. "இதை ஏன் முன்னமே என்னிடம் காட்டவில்லை?" என்று வினவினான் அச்சுதவிக்கண்டன்.

"நீங்கள் அதற்கு அவகாசம் அளிக்கவில்லை. என்னை மரக்கலத்திலிருந்து இறக்கி கன்னாதாசன் மடத்துக்குச்

சென்றதும் உங்கள் காவலரால் சிறை செய்யப்பட்டு இங்கு கொண்டு வரப்பட்டேன்'' என்றார் அந்த மனிதர்.

''காரணமில்லாமல் யாரையும் காவலர் சிறை செய்வதில்லை. வாணிபத்துக்கு வெளிநாட்டிலிருந்து வந்த யாரையும் தொட காவலருக்கு உத்தரவில்லை உங்களை எப்பொழுது சிறை செய்தார்கள்?'' என்று மன்னன் கேட்டான்.

''புத்தத்தருடன் பேசிக் கொண்டிருக்கையில்'' என்றார் அந்த மனிதர்.

''என்ன பேசிக் கொண்டிருந்தீர்?''

''எங்கள் குடும்ப விவகாரத்தைப் பற்றி''

''என்ன விவகாரம்?''

''நீலரதிக்கு எங்கள் சொத்தில் ஒரு பாதி உரிமை உண்டு. அவளைப் பார்க்க வேண்டுமென்றேன்.''

''உம்''

''புத்ததத்தர் விழித்தார். என்னை எகிப்துக்கு திரும்பிச் சென்றுவிடும்படி பணித்தார். நான் இசையவில்லை. இங்கு எனக்கு ஆபத்து நேரிடும் என்று பயமுறுத்தினார். ஆபத்துக்கு பயப்படும் சுபாவம் எனக்கில்லை என்றேன். என்னைப் போய்விடும்படியும் எப்படியும் நீலரதியை என்னிடம் அனுப்புவதாகவும் சொன்னார். நான் கேட்கவில்லை. அவர் பேசிய முறையிலிருந்து நீலரதி ஆபத்திலிருக்கிறாள் என்பதைப் புரிந்து கொண்டு மடத்திலிருந்த மற்றவரை விசாரித்தேன். அப்படி விசாரித்துக் கொண்டிருக்கையிலேயே சிறை பிடிக்கப்பட்டு இங்கு அழைத்து வரப்பட்டேன்!'' என்றார் நீலரதியின் பெரிய தந்தை. அத்துடன் எச்சரிக்கும் குரலிலும் பேசினார்: ''மன்னவா! நான் கொடுத்த சிலை விக்கிரகத்தை அலட்சியம் செய்ய வேண்டாம். எங்களுக்கு அநீதி விளைவிப்பவர்கள் உலகத்தின் எந்த மூலையிலிருந்தாலும் எங்களிடமிருந்து தப்ப முடியாது. எங்களிடமிருந்து தப்பினாலும் ஐஸிஸிடமிருந்து தப்ப முடியாது'' என்றார்.



''ஐஸிஸா! யார் அது?'' என்று வினவினான் அச்சுதவிக்கண்டன்.

''நீலரதியைக் காக்கும் பெண்தெய்வம்'' என்றான் இளமாறன்.

அச்சுதவிக்கண்டன் எதற்கும் மசிந்ததாகத் தெரியவில்லை. அவன் முகத்தில் லவலேசமும் அச்சம் இல்லை. ''தெய்வமா! அதை நீ நம்புகிறாயா?'' என்று வினவினான் மன்னன்.

''தெய்வநம்பிக்கை எனக்கு இல்லை: ஆனால்—...'' இழுத்தான் இளமாறன்.

''ஆனால்''

''இதை நான் பார்த்திருக்கிறேன் இரண்டு மூன்று முறை.''

வியப்பை வதனத்தில் படரவிட்டுக் கொண்டான் அச்சுதவிக்கண்டன். ''அந்த தெய்வத்தை எனக்குக் காட்ட முடியுமா?'' என்று கேட்டான் வியப்புக் குரலிலும் ஒலிக்க.

''அது அப்படியொன்றும் கஷ்டமில்லை. பௌர்ணமியன்று பார்க்கலாம்.''

''எங்கு?''

''நீலரதியிருக்குமிடத்தில்''

அதற்குமேல் அச்சுதவிக்கண்டன் பேசவில்லை. ''முதலில் விருந்து அருந்துவோம். பிறகு பேசுவோம்'' என்று கூறி எகிப்திலிருந்து வந்தவருக்கும் இளமாறனுக்கும், மாவலிக்கும் உட்கார மஞ்சங்களைக் காட்டினான். அடுத்து கைகளைத் தட்டி காவலரை அழைத்து விருந்து பரிமாற உத்தரவிட்டான் விருந்துக்கு உணவு மஞ்சங்கள் போடப்பட்டதும் தனது இருபுறத்திலும் எகிப்திலிருந்து வந்தவரையும் இளமாறனையும் உட்கார வைத்

துக் கொண்டு உதயகுமாரனையும் மாவலியையும் கோடியிலிருந்த இரு மஞ்சங்களில் அமரச் சொன்னான். உடனடியாகக் காவலர்கள் உணவு பரிமாறத் தொடங்கினர். உணவை மன்னன் ருசித்து அருந்த முற்பட்டான். இளமாறன், கையால் உணவைத் தொடாமலே உட்கார்ந்திருந்தான். அதை மன்னன் கவனித்திருக்க வேண்டும். தமது மடியிலிருந்து சிறு ஓலையொன்றை எடுத்து உணவு மஞ்சத்துக்கு அடியில் இளமாறனிடம் நீட்டினான். அச்சுருளைப் பிரித்துப் படித்த இளமாறன் முகத்தில் கேள்விக்குறியொன்று படர்ந்தது. மன்னன் கண்களும் அவன் கண்களும் சந்தித்தன ஒரு விநாடி. அடுத்து இளமாறன் உணவை வேகமாக அருந்த முற்பட்டான். அவன் முகத்தின் பிரமைக்கும் உணவை அருந்துவதில் அவன் காட்டிய ஆர்வத்துக்கும் காரணம் புரியாத நீலரதியின் பெரிய தந்தை, இளமாறனைத் தமது சீற்றம் மிகுந்த விழிகளால் நோக்கினார்.

"நடுப்பகல் தாண்டிவிட்டது, சீக்கிரம் சாப்பிடுங்கள். பிறகு பசி நீங்கிவிடும்" என்று எச்சரித்த இளமாறனை வெறுப்பு ததும்பிய கண்களால் நோக்கினார் நீலரதியின் பெரிய தந்தை. "உனக்கு மானம் அவமானம் ஏதுமில்லையா?" என்றும் வினவினார் வெறுப்பு ததும்பிய குரலில்.

"பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்" என்ற இளமாறன் "சரி சரி சாப்பிடுங்கள்" என்று உபதேசமும் செய்தான்.

இளமாறனின் இத்திடீர் மாற்றத்துக்குக் காரணம் புரியவில்லை நீலரதியின் பெரிய தந்தைக்கு. உதயகுமாரனுக்கு தந்தையிடமிருந்த வெறுப்பு அதிகப்பட்டதால் அவன் தந்தையை எரித்துவிடுவதுபோல் பார்த்தான். இளமாறனும் மன்னனும் உற்சாகமாகப் பேசிக்கொண்டும் சிரித்துக் கொண்டும் விருந்தை அருந்தினார்கள்.

□ □ □

# 53. விருந்தினர் மாளிகை

பசி வந்திடப் பத்தும் பறந்துபோகும், என்று சொல்லி விட்டு களப்பிர மன்னனுடன் உற்சாகமாக உணவருந்த முற்பட்ட இளமாறனை சுடுவிழிகளால் நோக்கிய நீலரதியின் பெரிய தந்தை, பெரிய தட்டில் வைக்கப்பட்டிருந்த உணவை வேண்டா வெறுப்பாகக் கிளறிக் கொண்டிருந்தாரே தவிர அதில் ஒரு கவளத்தைக்கூட எடுத்து வாயில் வைத்தாரில்லை. உதயகுமாரனும் தட்டை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தானே தவிர உணவு எதையும் தொட்டானில்லை. அந்த இருவரும் உணவை அடியோடு தொடாதிருந்ததைக் களப்பிர மன்னன் கடைக்கண்ணால் கவனித்தாலும் அதைப்பற்றி ஏதும் கேட்காமலே இளமாறனுடன் பேசிக் கொண்டிருந்தான். அந்த உணவுக் கூடத்திலிருந்த ஒவ்வொரு விநாடியும் ஒவ்வொரு யுகமாகத் தெரியவே உதயகுமாரன் நீலரதியின் பெரிய தந்தையை நோக்கினான். உதயகுமாரனை விட அவர் உலக அனுபவம் மிக்கவராதலால் மன்னன் இட்ட அன்னத்தை அடியோடு உதாசீனம் செய்வது அவனை அவமானப்படுத்துவதாகும் என்ற நினைப்பாலும், அப்படி மன்னன் அவமானப்படுத்தப்பட்டால் தொடர்ந்து ஏற்படும் விளைவுகள் விபரீதமாயிருக்குமென்ற எண்ணத்தாலும் சிறிது சிறிதாக சாப்பிடத் தொடங்கினார். சாப்பிடும்படி உதயகுமாரனுக்கும் சைகை செய்யவே அவனும் வேண்டா வெறுப்பாகச் சிறிது உணவருந்தினான். ஆனால் இந்தத் தயக்கம் ஏதுமில்லாமல் மிகுந்த குதூகலத்துடன் உண்டு முடித்த மன்னனும் இளமாறனும் பணிமக்கள் கொண்டு வந்த நீரில் கைகழுவி அவர் நீட்டிய துணிகளில் கை வாய் துடைத்து ஆசனங்களில் சாய்ந்து கொண்டதும் மீண்டும் பேச்சு தொடங்கியது.

மன்னன் மாவலியை நோக்கி "மாவலி!" என்று படைத்தலைவனை அழைத்து "இந்த ஓலையைப் பார்" என்று தனது கச்சையிலிருந்த ஓலையை எடுத்துக்கொடுக்க மாவலி அதைப் பிரித்துப் பார்த்தார். அதனால் அதிர்ச்சியடைந்த மாவலி "மன்னவா! இவர் யாரென்பது முன்னமே தெரிந்திருந்தால் இவரைச் சிறை செய்திருக்க மாட்டோம்" என்று சொன்னார்.

"இப்பொழுது தெரிந்து விட்டதல்லவா?" என்று அச்சுதவிக்கண்டன் வினவினான்.

"தெரிந்துவிட்டது. இவர் நமது மரியாதைக்கு உரியவர்" என்றார் மாவலி.

"இவர் மரியாதைக்கு உரியவராயிருக்கலாம். ஆனால் நமக்கும் மரியாதை இருக்கிறதல்லவா?" என்று மன்னன் கேட்டான்.

"இருக்கிறது"-மாவலி மன்னன் எண்ணப் போக்கைப் புரிந்து கொண்டு பதில் சொன்னார்.

"நம் விருந்தைச் சரியாக சாப்பிடவில்லை இவர்..." என்று சுட்டிக் காட்டினான் மன்னன்.

"சாப்பிடுவதில் என்னை யாரும் கட்டாயப்படுத்த முடியாது" என்றார் நீலரதியின் பெரிய தந்தை.

"மாவலி!" என்று அழைத்தான் மன்னன்.

மன்னவா!"

"இவர் சொன்னதைக் கேட்டாயா?"

"கேட்டேன்"

"இவரைச் சாப்பிடும்படி நம்மால் கட்டாயப்படுத்த முடியுமா? முடியாதா?"

மாவலி சிறிது தயங்கினார் இந்தக் கேள்விக்கு பதில் சொல்ல. "மன்னவா! இவர் பதவி..." என்று தொடங்கினார்.



"பதவியை விட்டுத்தள்ளும். இவரை நாம் கட்டாயப் படுத்த முடியுமா?" என்று கேட்டான் மன்னன்.

"ஏன் முடியாது?" என்றார் மாவலி.

"அதை அவர் உணர்ந்து கொள்வது நல்லது என்று சொல். உணவை ஒழுங்காக உண்ணச் சொல். இல்லையேல் நமது பணி மக்களை விட்டு அவர் வாயில் திணிக்கச் சொல்" என்ற மன்னன் பயங்கரமாக நகைத்தான்.

மாவலி அப்பொழுதும் நிதானம் தவறவில்லை "இவர் தூதராக வந்திருக்கிறார். இவரை நாம் முறை கேடாக நடத்த முடியாது" என்றுகுறிப்பிட்டார் மாவலி.

மன்னன் ஏதோ சிந்தித்துவிட்டு "மாவலி! இவர் எகிப்து நாட்டு தூதராக வந்திருக்கிறாரே தவிர தூது என்னவென்று சொல்லவில்லையே! நீயே கேள்" என்று சொன்னான்.

"ஏதோ வாணிபம் செய்ய சலுகை கேட்க வந்திருப்பதாகத் தெரிகிறது. அப்படித்தான் ஓலையில் கண்டிருக்கிறது" என்றார் மாவலி.

"சரி. அதைப்பற்றி நீ விசாரித்துக்கொள்" என்று சொன்ன மன்னன் சட்டென்று ஆசனத்தை விட்டு எழுந்திருந்தான்.

அப்பொழுதே எழுந்திருந்த நீலரதியின் பெரிய தந்தையும், மன்னவா! தங்களுக்கு ஒரு காணிக்கை கொண்டு வந்திருக்கிறேன் எகிப்திலிருந்து" என்று கூறி கச்சையிலிருந்து ஏதோ ஒரு பெரிய பொருளை எடுத்து கையில் மூடிக் கொண்டார். "இதை தாங்கள் அங்கீகரிக்க வேண்டும்" என்றும் கேட்டுக் கொண்டார்

அப்பொழுதும் மன்னன் அவரிடம் முகம் கொடுத்துப் பேசாமல் "மாவலி! அதை வாங்கிக்கொள்" என்று உத்தரவிட்டார்.

எகிப்தின் தூதர் "இதை மன்னரிடம் தவிர வேறு யாரிடமும் கொடுப்பதற்கில்லை" என்று திட்டமாகச் சொல்லிவிட்டு மன்னர் மஞ்சத்தை நோக்கி விரைந்து அந்தப் பொருளை அவர் முன்னிருந்த மஞ்சத்தின்மீது வைத்தார்.

அது மஞ்சத்தின்மீது வைக்கப்பட்டதும் அந்த அறையிலிருந்த அனைவரும் திக்பிரமை பிடித்து பேசவும் சக்தியற்று நின்றனர். அங்கு மஞ்சத்தில் மன்னன் முன்பு அவர் வைத்தது பெரிய ஒரு நீலக்கல். அதிலிருந்து கிளம்பிய நீலக்கதிர்கள் எங்கும் பரவத் தொடங்கியதால் அந்தப் பெரிய விருந்து மண்டபமே நீல நிறச் சாயை பெற்றது. "விந்தை விந்தை" என்று மன்னனே கூவினான்.

இளமாறன் ஏதும் பேசாவிட்டாலும் அந்த நீல மாணிக்கத்தைப் பற்றி ஏற்கனவே அறிந்திருக்கிறான். அப்படியொரு நீலமணி பாரோக்களிடம் இருந்ததாகவும், அது சேரும் இடங்களிலெல்லாம் செல்வம் கொழிக்குமென்றும் அவன் கேட்டிருந்தாலும் அதன் தன்மை இப்படியிருக்குமென்று அறியாததால் "எகிப்து தூதரே! எங்கள் தமிழ் மன்னருக்கு இதைவிடப் பெரிய காணிக்கையை யாரும் கொண்டு வர முடியாது. தங்களுக்கு வேண்டியதைக் கேளுங்கள், மன்னர் கொடுப்பார். நீங்கள் வாணிபத்துக்கு வந்ததாயிருந்தால் எந்தக் கொடுக்கல் வாங்கலுக்கும் மன்னர் சித்தமாயிருக்கிறார்" என்று கூறினான்.

எகிப்து தூதர் சொன்னார்: "இதற்கு பதில் நீலரதி வேண்டும், அவளை அழைத்துக்கொண்டு நான் எகிப்து செல்லப் போகிறேன்" என்று.

இதைக் கேட்ட இளமாறன் "தூதரே! அது மட்டும் முடியாது. தமிழ்நாட்டைவிட்டு நீலரதியை அனுப்ப முடியாது" என்றான்.



"ஆம் முடியாது. அவளைத் தவிர வேறு எதையாவது கேளும்" என்றான் மன்னன்.

"அவளுக்கு ஈடு வேறு எதுவும் கிடையாது. இந்தக் கல்லுக்கு ஈடு இல்லை. இதன் நிறம்தான் அவள் பெயர்" என்று அவள் பெயரின் காரணத்தையும் சுட்டிக்காட்டினார் தூதர்.

"எப்படியும் நீலரதியை அனுப்ப முடியாது. அவளும் உங்களோடு வருவதை விரும்பமாட்டாள்" என்றான் இளமாறன்.

"அதை அவளே சொல்லட்டும்" என்றார் நீலரதியின் பெரிய தந்தை.

"அதுவும் சரி" என்று ஆமோதித்த களப்பிர மன்னன் "தூதரே! நீங்கள் இன்று எனது விருந்தினராக இருங்கள். நாளைக்குள் அவளைக் கண்டு பிடித்து அழைத்து வருகிறேன். அவளிடமே கேளுங்கள்" என்று சொன்னான்.

"அவள் இருக்குமிடந்தான் உங்களுக்குத் தெரியாதே" என்றார் தூதர்.

"கவலைப்படாதீர்கள்" என்ற மன்னன் "மாவலி! இளமாறனும், தூதரும், உதயகுமாரனும் நமது விருந்தாளிகளாக இருக்கட்டும். நாளைக்கு நீலரதி வந்ததும் அவளை நேராகக் கேட்டு ஒரு முடிவுக்கு வருவோம்" என்று கூறி தனது ஆசனத்தைவிட்டு எழுந்திருந்தான்.

மாவலி மற்ற மூவரையும் தம்மைத் தொடரும்படி சைகை செய்து விருந்தினர் மாளிகைக்கு அழைத்துப் போனார். அரசன் மாளிகைக்குப் பக்கத்திலிருந்த விருந்தினர் மாளிகை மிகப் பெரியதாயிருந்தது. சுற்றிலும் காவலும் பலமாயிருந்ததால் அந்தக் கட்டிடம் ஒரு மரியாதைப்

பட்ட சிறையே தவிர வேறில்லை என்பதை இளமாரன் புரிந்து கொண்டான். அவனையும் மற்ற இருவரையும் அழைத்துக் கொண்டு விருந்தினர் மாளிகைக்கு வந்த மாவலி அவர்களுக்கு பெரிய அறை ஒன்றைத் திறந்து விட்டு, ''நீங்கள் இங்கு தங்கலாம்'' என்று கூறினார். ஒரு காவலனையும் விளித்து அவர்களுக்கு வேண்டிய சகல வசதிகளையும் செய்து கொடுக்கும்படி உத்தரவும் இட்டு அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டார்.

விருந்தினர் மாளிகையின் அந்த அறை மிகப் பெரிதாக இருந்ததன்றி காவிரியையும் நோக்கி இருந்ததால் சுகமான காற்று அதில் வீசிக்கொண்டிருந்தது. பெரும் மஞ்சங்களும் கட்டில்களும் கூட அந்த அறையில் தேவைக்கு மேல் இருந்தன. அவற்றை எல்லாம் பார்த்த எகிப்து தூதர் பிரமித்தார். ''மன்னர்கள் தங்குவதற்காக இது கட்டப்பட்டிருக்க வேண்டும்'' என்று சொன்னதன்றி, ''இத்தகைய மகோன்னத இடத்தில் மன்னன் நம்மை தங்கவைப்பானென்று நான் நினைக்கவில்லை'' என்றும் கூறினார்.

''வெளியில் போய்ப் பாரும் இதன் மகோன்னதம் தெரியும்'' என்று இளமாரன் சொன்னான்.

''போய்த்தான் பார்க்கிறேன்'' என்று நீலரதியின் பெரிய தந்தை கிளம்பினார்.

''நானும் வருகிறேன்'' என்று உதயகுமாரனும் கிளம்பினான்.

இளமாரன் அவர்களுக்கு பதிலும் சொல்லவில்லை, தடையும் சொல்லவில்லை. தனது வாளை கச்சையிலிருந்து அவிழ்த்து ஒரு மஞ்சத்தின் மீது வைத்துவிட்டு அங்கிருந்த பஞ்சணையில் படுத்தான். ''அப்பா! என்ன பஞ்சணை! என்ன சுகம்'' என்று உற்சாகத்துடன் படுக்கையை அனுபவிக்கவும் செய்தான்.



நீலரதியின் பெரிய தந்தையும் உதயகுமாரனும் இளமாரன் செயலைக் கண்டு வெறுப்புக் கொண்டு அந்த இகழ்ச்சியை முகத்திலும் விரியக் காட்டி அந்த அறையிலிருந்து கிளம்பி வெளியே சென்றனர்

நேரம் ஓடியது. இளமாரன் பஞ்சணையில் நிம்மதியாக உறங்கியவன் மாலையில்தான் கண்விழித்தான். அது வரை நீலரதியின் பெரிய தந்தையோ உதயகுமாரனோ வராததைக் கண்டு சிறிது கவலைக்கும் உள்ளானான். அந்தக்கவலையின் விளைவாக வெளியே சென்று அறைக்கு முன்னிருந்த தாழ்வரையை நோக்கியவன் அங்கு காவலுக்கு நின்ற இரு காவலரைக் கண்டான் ''யாரங்கே! இந்த அறையிலிருந்து வெளியே போன இருவரும் வரவில்லையா?'' என்று விசாரித்தான்.

''வரவில்லை'' என்றொரு காவலன் சொன்னான்.

''எங்கு போனார்கள்?'' என்று இளமாரன் கேட்டான்.

''எங்கும் போகவில்லை. ஆகையால் வரவில்லை!'' என்று காவலன் ஒருவன் நகைத்தான்.

''அவர்களுக்கு கீழே உள்ள ஓர் அறை பிடித்திருந்தது. அங்கு தங்கிவிட்டார்கள்'' என்றான் இன்னொருவன்.

இளமாரன் நிலையைப் புரிந்து கொண்டான். ''ஏன் அவர்களைச் சிறை செய்தீர்கள்?'' என்று வினவினான் சீற்றத்துடன்.

காவலன் இளமாரன் சீற்றத்தைச் சட்டை செய்யவில்லை. ''நீங்கள் முன்பு எங்களுக்குப் படைத்தலைவராய் இருந்த காரணத்தால் சொல்லுகிறேன். இந்த மாளிகையிலிருந்து யாரும் வெளியே செல்ல அனுமதியில்லை. உள்ளே யாரும் வரலாம். வந்தால் மீண்டும் வெளியே செல்ல முடியாது. இது படைத்தலைவர் மாவலியின்

உத்தரவு. அதனால் சற்று முன்பு இங்கு வந்த முதல் மந்திரி பூபதியையும் பிடித்து வைத்திருக்கிறோம். அவரும் அதே அறையில் இருக்கிறார்'' என்று உள்ள நிலைமையை விளக்கினான் காவலன்.

''இந்த விருந்தினர் மாளிகை பெரிய மனிதர்களின் சிறை'' என்று மனத்துக்குள் சொல்லிக்கொண்ட இளமாரன் திரும்பவும் தனது அறைக்குள் சென்று படுத்துக் கொண்டான். இரவில் அங்கும் அவனுக்கு நல்ல உணவு படைக்கப்பட்டது. உணவை உண்டு படுத்த இளமாரன் நள்ளிரவு வரை காத்திருந்து அதற்குப் பிறகு வாளை இடையில் கட்டிக்கொண்டு அடிமேலடி வைத்து வெளியே நடந்தான். யாராவது தடுத்தால் அவர்களைத் தீர்த்துக் கட்ட குறுவாள்மீதும் ஒரு கையை வைத்துக்கொண்டு வெளியே செல்ல முயன்றான். அவனை யாரும் தடுக்கவில்லை. அடுத்த இரண்டு கட்டுகளிலும் வாயிலிலும் இருந்த காவலர்கள் அவனைத் தடை செய்யாததால் வீதியில் இறங்கி நடந்தான் இளமாரன்.

அவன் அடுத்த வீதியில் திரும்பிய சமயத்தில் விருந்தினர் மாளிகையிலிருந்து பூர்ண ஆயுதம் தரித்த ஒரு மனிதர் அவனைத் தொடர்ந்து செல்ல முற்பட்டார். அப்படி ஒருவர் தன்னைத் தொடர்ந்து வருவதை அறியாமலே இளமாரன் உறையூரின் பெரிய வீதியை அடைந்தான். அவனைத் தொடர்ந்த மனிதனும் நிற்காமலே வேகமாக நடந்து சென்றான்.

□ □ □

# 54. பாவியின் ரத்தம்

பின்னால் ஒருவர் தன்னைத் தொடர்ந்து வருவதை அறியாமலே எந்தவித அவசரத்தையும் காட்டாமல் நிதானமாகவே நடந்து உறையூர் பெரிய வீதியில் நுழைந்த இளமாரன், இரவு முற்றியும் விழித்துக்கிடந்த அந்த வீதியைப் பெருமையுடன் நோக்கினான். சோழர்களின் நெடுங்காலத் தலைநகரும், எத்தனையோ சரித்திர நிகழ்ச்சிகளைப் பார்த்திருக்கும் சிறப்பைப் பெற்றதுமான உறையூரின் அந்தப் பெரிய வீதியில் அன்று இரவில் பளிச்சிட்ட பெருநிலவு அதன் அழகைப் பன்மடங்கு பெருக்கியிருந்ததைப் பார்த்த இளமாரன், கொடுங்கோலனான களப்பிர மன்னனும் அதன் அழகைச் சீர்குலைக்காமல் வைத்திருந்ததைக் கண்டு அவனையும் உள்ளத்தே பாராட்டினான்.

அந்தப் பெருவீதியிலிருந்த பெரும் வணிகத் தலங்கள் அப்பொழுதும் திறந்திருந்ததால் வாணிபம் அதிகமாகவே நடந்து கொண்டிருந்தது. பல நாட்டு மக்கள் அங்கிருந்த கடைகளில் சென்று பொருள்களின் விலைகளைப் பற்றி சர்ச்சை செய்த ஒலி எங்கும் பரவிக் கிடந்தது. இடையிடையே அந்த வீதி மூலம் மற்ற வீதிகளுக்குச் சென்ற இராக்காவலரின் புரவிகளின் குளம்படி ஒலிகள் வணிகத் தராசுத் தட்டுகளின் ஒலிகளோடு இணைந்து வணிகம் கலந்த வீர அரசு அங்கு நடப்பதை வலியுறுத்தின. இரவு ஏறிய அந்த நேரத்திலும் ஆண்களோடு பெண்களும் கடைகளுக்கு வந்ததைக் கவனித்த இளமாரன் களப்பிரர்களின் பழைய மூர்க்கத்தனமும், கொடுமையும் தமிழர்களின் சேர்க்கையால் குறைந்துவிட்டதையும்,

மக்களுக்கு பயமற்ற அரசை கனப்பிர மன்னன் அளித்திருப்பதையுங் கண்டு அவன் அரசை அசைப்பது மிகவும் கஷ்டமென்பதை நினைத்து 'இனி சோழர்கள் தலையெடுப்பது மிகவும் அரிது' என்ற எண்ணத்தால் பெருமூச்சு விட்டான்.

இத்தனையிலும் ஒரு சந்தேகம் மட்டும் அவனுக்கு வந்தது. தன்னுடன் சிறை செய்யப்பட்ட மற்ற இருவரையும் வெளியில் போகாமல் தடை செய்துவிட்ட மன்னன் தன்னை மட்டும் ஏன் சுதந்திரமாக விட்டான் என்று எண்ணியதாலும் இளமாறன் மனத்தில் அதைப்பற்றிய சந்தேகம் எழுந்ததாலும், அதைத் தீர்த்துக்கொள்ள சட்டென்று பின்புறமாகத் திரும்பி ஒரு நகைக் கடைக்குள் நுழைந்தான். எதிர்பாராத விதமாக அவன் சட்டென்று திரும்பியதும் சற்று எட்ட இருந்த கடையின் ஓரத்தில் ஒருவன் பதுங்குவதைக் கண்டுவிட்ட இளமாறன் உள்ள நிலைமையைப் புரிந்து கொண்டான். "என்னை இஷ்டப்படி விட்டால்தான் நீலரதி இருக்குமிடம் போவேனென்பதையும், அப்படி அவள் இருப்பிடத்தைக் கண்டுபிடித்துவிட்டால் அவளை அரண்மனைக்குக் கொண்டு வருவது ஒரு பிரமாதமல்லவென்பதையும் அச்சுதவிக்கந்தன் தீர்மானித்திருக்க வேண்டும். அதனால் எனக்கு இந்த சுதந்திரம். காரணமில்லாமல் சுதந்திரம் கிடைக்கவில்லை" என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். "என் ஊகம், சரியாயிருந்தால் பின்னால் என்னைத் தொடர்ந்துவருவது மன்னரின் ஒற்றனாகத்தான் இருக்க வேண்டும்" என்றும் முடிவு செய்துகொண்டு அதற்குத் தக்கபடி தனது நடவடிக்கையை மாற்றிக் கொண்டான்.

உறையூரின் பெரிய வீதியின் நகைக்கடைக்குள் நீண்ட நேரம் நகைகளைப் பார்த்து விலைபேசி காலம் கழித்த இளமாறன் வெளியே வந்து கண்ணை மெதுவாக பின்புறம் ஒருமுறை ஓட்டி பழையபடி நடக்கலானான். தான் பார்த்ததும் அந்த மனிதன் பதுங்கியதையும் தான் நடந்ததும் தொடர்ந்ததையும் பார்த்தும் பார்க்காதது



போலவே நடந்து கொண்ட இளமாறன் பல கடைகளுக்குள் புகுந்து புகுந்து கிளம்பி பெரிய வீதியின் கோடியிலிருந்த சிறு சந்துக்குள் திரும்பி நடந்தான். இப்படி பல சந்துகளையும் அடுத்தடுத்து வந்த பெரிய வீதிகளையும் கடந்து கடைசியாக காவிரியாற்றங்கரையிலிருந்த மண்டபத்துக்கு வந்து உட்கார்ந்து கொண்டான். அவனைத் தொடர்ந்தவனும் அந்த மண்டபத்தின் மூலையில் மறைந்து நின்றதும் இளமாறன் "அப்பா! இப்படி வா! அங்கு மறைந்து ஏன் நிற்க வேண்டும்? இப்பொழுதே அர்த்த ராத்திரியாகி விட்டது. நாம் இருவருமாகத் திரும்பிப் போவோம் விருந்தினர் மாளிகைக்கு" என்று அன்புடன் அழைப்பை விடுத்தும் அந்த மனிதன் பதிலும் சொல்லவில்லை, இருப்பிடத்தை விட்டு நகரவுமில்லை.

அவனை அழைத்துப் பயனில்லை என்பதை உணர்ந்து கொண்ட இளமாறன் காவிரி மண்டபத்தின் தரையிலிருந்து கிளம்பி பக்கத்திலிருந்த தோப்புக்குள் நுழைந்து மறைந்து விடவே அந்த மனிதன் தோப்புக்குள் வந்து இளமாறன் சென்ற சுவடு தெரியாததால் மலைத்து நின்றான். அப்பொழுது அவன் பின்னால் யாரோ கையால் தொட்டதும் வேகமாகத் திரும்பிய ஒற்றன் இறுகப் பிடித்த இளமாறன் அடுத்த விநாடி அந்தக் கையை உதறினான், ஏதோ காய்ச்சிய இரும்பைத் தொட்டுவிட்டவன் போல. அந்தத் தோப்பின் இருட்டிலும் மரக்கிளைகள் மூலம் உட்புகுந்த சந்திர கிரணங்கள் இரண்டு அந்த ஒற்றன் முகத்தில் விழவே பிரமித்த இளமாறன் "மாலவி! தாங்களா!" என்று பிரமிப்பு குரலிலும் ஒலிக்கக் கேட்டான்.

மாலவியின் முகத்தில் வெறுப்புத் தட்டிய களை படர்ந்தது. "நான்தான் இளமாறா!" என்றார் வெறுப்பு குரலிலும் ஒலிக்க.

"கேவலம் ஒருவனைத் தொடர படைத்தலைவர்கள் வரும் வழக்கம் கிடையாதே" என்றான் இளமாறன்.

மாவலியின் முகத்தில் வெறுப்பு அதிகமாகப் படர்ந்தது. "இங்கு வழக்கப்படியா எல்லாம் நடக்கிறது?" என்று கேட்டார்.

"என்னதான் வழக்கம் மாறினாலும் கேவலம் ஒற்றன் செய்யக்கூடிய இந்தப் பணிக்கு தங்களைப் போன்ற ஒரு மகாவீரன், களப்பிரர் படைத்தலைவர் வருவது விந்தையல்லவா!" என்று இளமாறன் வினவினான்.

"இந்த அரசில் எதுவும் விந்தையல்ல. பெண் பித்து எந்த மனிதன் புத்தியையும் கலக்கும். ஆனால் அச்சுதவிக் கண்டனுக்கு இப்பொழுது பெண்பித்து மட்டுமல்ல, தாம் ஏமாற்றப்பட்டு விட்டோம் என்ற கோபமும் இருக்கிறது. எப்படியாவது நீலரதியைக் கண்டுபிடிக்கத் தீர்மானித்திருக்கிறார்" என்றார் மாவலி.

"உறையூருக்குள் ஒவ்வொருவரும் கண்காணிக்கப் படுகிறார்களே, நீலரதி அகப்படவில்லை?" என்று இளமாறன் கேட்டான்.

"இல்லை, மன்னரையும் ஏமாற்றும் திறன் வாய்ந்த ஒருவன் அவளை மறைத்துவிட்டதால்" என்றார் மாவலி.

"யாரவர்?" என்று வினவினான் இளமாறன்.

"எங்களிடம் படைத் தலைவராக இருந்தவர், மன்னனையே துணிந்து எதிர்த்தவர். நீலரதியின் காதலர்" என்ற மாவலி நகைத்து "இளமாறா! நீங்களும் நீலரதியைக் காதலிக்கிறீர்கள். காஞ்சி வர்மனும் காதலிக்கிறான். உங்கள் மகன் உதயகுமாரனும் காதலிப்பதாக காஞ்சி வர்மன் சொல்கிறான். மன்னர் அவள்மீது வெறியுடனிருக்கிறார். இத்தனை காதலர்களில் அவள் யாரைத் தேர்ந்தெடுப்பாளோ. போட்டி மிகவும் கடுமையாயிருக்கிறது. பழங்காலமெனில் சுயம்வரம் வைக்கலாம்.



பெண்களைத் தூக்கிச் செல்லும் களப்பிர ராஜ்யத்தில் அதற்கு இடமில்லை" என்று கூறினார் நகைப்பு குரலிலும் ஒலிக்க.

இளமாறன் அவரை ஏற இறங்க நோக்கினான். "நீங்கள் சொல்வதில் ஓரளவு உண்மை இருக்கிறது. ஆனால் நீலரதி யாரை நேசிக்கிறாளோ அவரைத்தான் அடைய முடியும். வேறு யாரையும் அடைய நான் அனுமதிக்க மாட்டேன்" என்றான் இளமாறன்.

"அது சரி. முதலில் நீலரதி இருக்குமிடத்தைக் கண்டு பிடிப்போம் வாருங்கள்" என்று தோப்பிலிருந்து நடக்க முற்பட்டார் மாவலி.

இளமாறன் அவரைப் பின் தொடர்ந்தான். தோப்பை விட்டு வெளி வந்ததும் மீண்டும் பிரதான ராஜவீதிக்காகத் திரும்பினார் மாவலி. அந்த வீதியைப் பாதி கடந்ததும் "இளமாறா! இனி நீங்கள் வழியைக் காட்டுங்கள்" என்றார்.

"நான் வழியைக் காட்டுவேனென்று எதிர்பார்க்கிறீர்களா? கிளியைப் பிடித்து பூனையிடம் ஒப்படைப்பேனென்பது உங்கள் கருத்தா?" என்று சற்று சீற்றத்துடன் கேட்டான் இளமாறன்.

மாவலி தமது முகத்தில் வருத்தச் சாயையைப் படரவிட்டுக்கொண்டார். "நீலரதியின் இருப்பிடத்தை நீங்கள் காட்டுவது நல்லது" என்றார் மாவலி.

"காட்டாவிட்டால்?" -இளமாறன் கேள்வி மிகுந்த சினத்துடன் எழுந்தது.

மாவலி சிந்தனையில் இறங்கினார். "மன்னர் நோக்கத்தை நான் வெளியிடுவது தவறுதான். ஆனால் வேறு வழியில்லை. உங்களை விருந்தினர் மாளிகையில் தங்கவைத்தவுடன் மன்னர் என்னை மீண்டும் கூப்பிட்டனுப்பினார். உங்களை மட்டும் சுதந்திரமாக விடும்படி உத்தரவிட்டார்."

"ஏன்?" என்று தான் கேட்டான்.

"அவன் சுதந்திரமாயிருந்தால் நீலரதியைத் தேடிப் போவான். அவனை நீ தொடர்ந்து சென்றால் நீலரதி இருக்குமிடத்தைக் கண்டுபிடித்து விடலாம்" என்றார்.

"அப்படி என்னால் கண்டுபிடிக்க முடியாவிட்டால்?" என்று கேட்டேன்.

"முதல் ஏற்பாட்டின்படி உதயகுமாரனை நாளைக் காலையில் தூக்கில் போட்டுவிடு என்று மன்னர் உத்தரவிட்டார்."

இந்த உரையாடலைச் சொன்ன மாவலி "இளமாறா! இனி முடிவு உன்னுடையது. இன்னும் இரண்டு ஜாமங்களில் பொழுது விடிந்துவிடும். அதற்குள் நான் அரண்மனையை அடையாவிட்டால் உதயகுமாரன் தூக்கில் தொங்குவது நிச்சயம்" என்றார் வருத்தம் தோய்ந்த குரலில்.

இளமாறனின் கலங்காத உள்ளமும் கலங்கியது. அச்சுதவிக்கண்டன் குரூரத்தின் எல்லையை நினைத்து ஏங்கினான். நீண்ட நேரம் சிந்தித்த பிறகு கேட்டான்: "மாவலி! நீலரதி இருக்குமிடத்தை நான் காட்டினால் நீங்கள் உதயகுமாரனையும அவன் பெரிய தந்தையையும் விடுதலை செய்வீர்களா?" என்று.

"கண்டிப்பாய் விடுதலை செய்வேன்" என்றார் மாவலி சந்தேகத்துக்கு இடமின்றி.

"மன்னர் ஒப்பாவிட்டால்?"

"அவரையும் மீறி கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவேன். மாவலி சொல் தவறாதவன் என்பது எல்லோருக்கும் தெரியும்."



இதைக் கேட்ட இளமாறன் "மாவலி! நீலரதி உறையூர் பெரிய சத்திரத்தில் இருக்கிறாள். அங்குதான் அவளைத் தங்க வைத்துவிட்டு வந்தேன். அவள் அங்கிருந்து மறைந்திருந்தால் நாம் இருவரும் அவளைத் தேட வேண்டியிருக்கும். வாருங்கள்" என்று கூறி வேகமாக பெரிய சத்திரத்தை நோக்கி நடந்தான்.

இரண்டு பெரிய வீதிகளைத் தாண்டி பெரிய நிலப்பரப்பில் கட்டப்பட்டிருந்த அந்த சத்திரத்தை அடைந்த இளமாறன் அதன் பெருங்கதவைத் திறக்கச் சொல்லி அடுத்திருந்த சதுக்கத்திற்குள் நடந்தான். அந்த சதுக்கத்திலிருந்த மரங்களுக்கிடையில் இருவர் பேசும் சப்தம் கேட்கவே சட்டென்று நின்றான் இளமாறன். மரங்களின் மறைவிலிருந்து ஒருவன் கேட்டான்: "காஞ்சிவர்மா! உண்மையைச் சொல்லிவிடு. நீலரதியை எங்கே மறைத்து விட்டாய்?" என்று.

"எனக்குத் தெரியாது. சத்தியம்" என்றான் காஞ்சி வர்மன்.

"இந்த சத்திரத்தில்தான் அவள் இருந்தாள். நான் வந்தபோது அவள் அறையில் நீதான் இருந்தாய். உண்மையைச் சொல்லிவிடு" என்றான் இன்னொருவன். அது கொள்ளிடக்கரை சத்திரக்காரன் குரல் என்பதைப் புரிந்துகொண்ட இளமாறன் "இவன் இங்கு எப்படி வந்தான்?" என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டான்.

இதற்கு பதில் சத்திரக்காரனிடமிருந்தே வந்தது. "காஞ்சி வர்மா! என்னைக் கொன்றுவிட நீ பூபதியிடம் என்னை அனுப்பினாய். அங்கு நடந்தது அனைத்தையும் மறைவிலிருந்து நான் கவனித்தேன். உன்னைக் கொல்ல அவர்தான் என்னை அனுப்பினார்" என்றான் சத்திரக்காரன்.

"என்னையா! ஏன்?"— அச்சத்துடன் கேட்டான் காஞ்சி வர்மன்.

"என் பெயர் தெரியுமா உனக்கு?"—சத்திரக்காரன் கேட்டான்.

"தெரியாது" என்றான் காஞ்சிவர்மன்.

"இப்பொழுது தெரிந்து கொள். என் பெயர் ரவிவர்மன். இளமாறன் குடும்பத்தை அழித்ததுபோல் எனது குடும்பத்தையும் அழித்தாய். உன்னைப் பழிவாங்கவே இத்தனை நாள் காத்திருந்தேன். பூபதிக்கு என்னைத் தெரியும். உன்னைக் கொல்ல அவர்தான் என்னை அனுப்பினார். நீலரதி எங்கே? சொல்லிவிடு. இல்லையேல் வாளை எடுத்துக்கொள்" என்றான் ரவிவர்மன்.

காஞ்சிவர்மன் முகத்தில் பெரும் திகில் படர்ந்தது. தான் என்றோ செய்த குற்றங்கள் அன்று தன்னை விழுங்க முற்படுவதை எண்ணினான். ஆனால் ரவிவர்மனின் வாள் வீசும் திறமையில் அத்தனை நம்பிக்கையில்லாததால் திடீரெனத் தனது வாளை உருவினான். ஆனால் அவன் வாளைக் கண் இமைக்கும் நேரத்தில் ரவிவர்மன் வாள் தடுத்தது. இரண்டு மூன்று முறை வாளைத் திருப்பியதும் காஞ்சிவர்மன் வாள் அவன் தலைக்கு மேலே பறந்தது. அடுத்த விநாடி பெரிதாக அலறினான் காஞ்சிவர்மன். ரவிவர்மன் வாள் அவன் இதயத்திற்குள் புகுந்து முதுகுப் புறத்தில் வெளி வந்தது. வாளை இரும்பவும் இழுத்து மீட்டுக்கொண்ட ரவிவர்மன் கீழேகுருதி பீறிட்டுமண்ணை நனைக்க மரணத் துடிப்பாகத் துடித்துக்கொண்டிருந்த காஞ்சிவர்மன் உடலை காலால் உதைத்துத் தள்ளினான். கீழ் மண்ணில் ஊறிக்கொண்டிருந்த குருதியைக் கண்டு "பாவியின் ரத்தம் புனிதமான தமிழ் மண்ணை நனைத்து விட்டது" என்று எரிச்சலுடன் சொன்னான் ரவிவர்மன்.

அந்த அரங்கத்தில் மாவலியும் இளமாறனும் நுழைந்தனர். அவர்களைக் கண்ட ரவிவர்மன் துன்பம் கலந்த புன்முறுவலொன்றை வெளியிட்டான்.



"ரவிவர்மா! நீலரதி எங்கே?" என்று வினவினான் இளமாறன்.

"நீங்கள் விட்டுப் போன அறையில் இருக்கிறாள். நீங்கள் சொன்னபடி புகாருக்குப் புறப்பட இருந்த நீலரதியை காஞ்சிவர்மன் தடுத்தான். அவளை பலவந்தம் செய்யவும் முயன்றான். அந்த சமயத்தில் நான் அங்கு சென்றேன். முடிவு இது" என்ற ரவிவர்மனை, மாவலி வியப்பு நிரம்பிய விழிகளால் பார்த்தார்.

"காஞ்சி வர்மன் மன்னனின் படைத் தலைவர்களில் ஒருவன். அவனைக் கொன்ற குற்றத்திற்கு நீ பதில் சொல்ல வேண்டியிருக்கும்" என்றார் மாவலி.

"உத்தரவுப்படிதான் கொன்றேன்" என்றான் ரவிவர்மன் அலட்சியமாக.

"யார் உத்தரவு?"-மாவலி கேட்டார் அதிகாரத்துடன்.

"முதலமைச்சர் உத்தரவு. அவர்தான் இவனைக் கொல்லப் பணித்தார்" என்றான் ரவிவர்மன்.

முதலமைச்சர் உத்தரவிட்டிருந்ததால் ரவிவர்மன்மீது யாருமே எந்த நடவடிக்கையும் எடுக்கமுடியாது என்பதைப் புரிந்துகொண்ட மாவலி, நாடகம் மிகவும் சிக்கலானதை உணர்ந்தார். காஞ்சி வர்மன் செத்தும் சில பிரச்னைகளை விட்டுவிட்டதை நினைத்து அவனைப் பெரிதும் சபித்தார் உள்ளுக்குள். ஆனால் அதைப்பற்றி நினைப்பதைத் தவிர்த்து "இளமாறா! நாம் போய் நீலரதியைப் பார்ப்போம்" என்று கூறிவிட்டு சத்திரத்துக் கட்டிடத்தை நோக்கி நடந்து இளமாறனைத் தொடர்ந்து மாடிப்படிகளில் ஏறினார். மூடப்பட்டிருந்த நீலரதியின் அறையைத் திறந்தான் இளமாறன் வேகமாக. அறை காலியாக இருந்தது. நீலரதி அங்கு இல்லை.

□ □ □

# 55. புதுமல்லை நாடிய புரவலன்

உறையூர் பெரிய சத்திரத்து அறையில் நீலரதியைக் காணாததும் மாவலி, இளமாறன் இருவருமே பெரும் சந்தேகத்துக்கும் சஞ்சலத்துக்கும் உள்ளானார்கள். சத்திரத்து சதுக்கத்தின் நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து ரவிவர்மன், நீலரதி அறையிலிருப்பதாகச் சொன்னது பெரும் பொய்யென்பதை இளமாறனும் மாவலியும் சந்தேகமற உணர்ந்துகொண்டதால், ரவிவர்மன் வேண்டுமென்றே தங்களை அறைக்கு அனுப்பியதாக நினைத்து அவன்மீது இணையிலாச் சினமும் கொண்டார்கள்.

"ரவிவர்மன் நம்மை ஏமாற்றிவிட்டான்" என்று மாவலி சொன்னார், இளமாறனை உற்று நோக்கி.

"அவன் ஏமாற்றவில்லை. நாம்தான் ஏமாற்றம் அடைந்தோம்" என்றான் இளமாறன்.

"நாம் ஏமாந்தோமா?" என்று கோபத்திலும் வியப்பைக் காட்டினார் மாவலி.

"ஆம் மாவலி! காஞ்சிவர்மனைக் கொல்லுமுன்பு ரவிவர்மன் என்ன கேட்டான்? நீலரதியை எங்கு மறைத்திருக்கிறாய் சொல் என்று கேட்கவில்லையா?"

"ஆம், கேட்டான்"

"அப்படியானால் அவன் சத்திரத்துக்கு வந்தபோது நீலரதி இங்கு இருந்திருக்க முடியாது."

"முடியாது"



"நீலரதி இங்கில்லையெனில், காஞ்சிவர்மன் அவளை பலவந்தம் செய்ய முயன்றானென்பதும், காஞ்சி வர்மனை ரவிவர்மன் தடுத்ததாகச் சொன்னதும் பொய்யாக இருக்க வேண்டும்."

இதைக் கேட்டதும் மாவலி வெகுண்டெழுந்து "ரவிவர்மன் நம்மை முட்டாளாக்கிவிட்டான். அவனைப் பிடித்து வருகிறேன்" என்றுசொல்லி வேகமாக மாடிப்படிகளில் இறங்கி கீழே ஓடினார். சற்று நேரத்திற்கெல்லாம் ரவிவர்மனுடன் திரும்பிய மாவலி "இவன் இப்பொழுது புதுக்கதை சொல்கிறான்" என்று இளமாறனிடம் கூறிவிட்டு ரவிவர்மனை நோக்கி "ரவிவர்மா! நீ எங்களை ஏமாற்றிவிட்டதாக நினைக்காதே. உன் கழுத்தில் நீயே தூக்குக் கயிற்றை மாட்டிக் கொள்கிறாய்" என்று சீறினார்.

ரவிவர்மன் அசையவில்லை. "நான் சொன்னது முற்றும் உண்மை" என்றான்.

"உன் கதையை இளமாறனிடம் சொல்" என்று கட்டளையிட்டார் மாவலி.

ரவிவர்மன் இளமாறனை நன்றாக ஏறெடுத்துப் பார்த்தான். "நான் சொல்வதை இவர் நம்புவது கஷ்டம். ஆனால் நீங்கள் நம்ப முடியும்" என்று உறுதியான குரலில் சொன்னான்.

இளமாறன் முகத்தில் சிறிது சந்தேகச் சாயை படர்ந்தது. "சொல் நடந்ததை" என்றான் சந்தேகம் குரலிலும் ஒலிக்க.

இப்படி கதையைச் சொன்னான் ரவிவர்மன்: "காஞ்சி வர்மன் எனது குடும்பத்தை அழித்தவன். அவனை ஒழிக்க சமயம் பார்த்திருந்தேன். உங்களுடன் கடல் மல்லையில் இருந்த வரையில் சமயம் கிடைக்கவில்லை. இங்கு அவகாசம் கிடைத்தது. எப்படியும் நீலரதியை

அபகரித்துச் செல்ல, அல்லது அவள் கற்பைச் சூறையாட அவன் முயல்வானென்பதை ஊகித்து அவன் முதலமைச்சரின் இல்லத்திலிருந்து கிளம்பியதிலிருந்து அவனைத் தொடர்ந்தேன். அவன் உடனடியாக நீலரதி இருக்குமிடத்திற்கு வரவில்லை. இன்னொரு சிறு சத்திரத்தில் தங்கி மறைந்திருந்தான். தன்னை யாராவது தொடர்ந்தால் அவர்களிடமிருந்து தப்ப இன்று இரவின் ஆரம்பத்தில் அவன் புறப்பட்டு இந்த சத்திரத்தை நோக்கி வந்தான். சத்திரக் காவலனிடம் நீலரதி இருக்குமிடத்தை விசாரித்துக் கொண்டு மாடியில் ஏறினான். மாடியில் அறைக்கதவு திறந்திருந்தது. அறைக்குள்ளே சென்று நீலரதியைத் தன்னுடன் வரும்படி கூறினான்.

அவள் இணங்காது போகவே, நீங்கள் சிறையிலிருப்பதாகவும், தான் உதவாவிட்டால் உங்களைக் காப்பாற்ற முடியாதென்றும் தெரிவித்தான். அவனை நீலரதி நம்பாததால் உடன்வர மறுத்தாள். பிறகு அவளை அணுகி அவள் கையைப் பற்ற முயன்ற சமயத்தில் அவன் பெயரைச் சொல்லி அழைத்தேன். திரும்பி என்னைப் பார்த்ததும் திகைத்தான். பிறகு அவனை வாள் முனையில் அழைத்துக்கொண்டு கீழேவரப் புறப்பட்டேன். முதலில் பேசாமல் வந்தான். பிறகு சரேலென்று திரும்பி இரண்டு படிகளைத் தாண்டி மேல் படியில் நின்று 'ரவிவர்மா! நீலரதியிடம் போகிறேன். நீ அங்கு தலையைக் காட்டினால் உன்னைக் கொன்று விடுவேன்' என்று மிரட்டி மேல் படிகளில் ஓடினான். நான் அவனைத் தொடர்ந்து சென்றேன். நீலரதியை அறையில் காணவில்லை.

நீலரதியை அவன்தான் எங்கோ ஒளித்துவிட்டானென்று நினைத்தேன். அவனைக் கொன்றபின் வந்து பார்க்கலாமென்று தீர்மானித்து வாள் முனையில் அவனை மீண்டும் அழைத்துக்கொண்டு இறங்கும் படிகளில் நின்று



திரும்பினேன். அறையில் நீலரதி நடமாடிக் கொண்டிருந்தாள். ஒரு விநாடி தெரிந்தாள். மறுவிநாடி கதவுக் கருகில் மறைந்துவிட்டாள். ஏதும் புரியாமல் காஞ்சிவர்மனுடன் சதுக்கத்துக்கு வந்து மிரட்டிக் கேட்டேன். நீலரதியைப்பற்றி தனக்கு ஏதும் தெரியாதென்றும், தான் பார்த்தபோது அவள் அறையில் இருந்தாளென்றும் சொன்னான். நான் திரும்பிப் பார்த்தபோது முதலில் அவள் இருந்ததைப் பார்த்ததால் அதைப்பற்றி பிறகு அறியலாமென்று நினைத்து அவனைக் கொன்றேன். ஆகையால்தான் அவள் இங்கிருப்பாளென்று நினைத்து உங்களிடம் சொன்னேன். இங்கு நான் கடைசியில் பார்த்த நீலரதி எப்படி மறைந்துவிட்டாளென்று தெரியவில்லை.''

—இதைச் சொன்ன ரவிவர்மன் எது நடந்தாலும் நடக்கட்டும் என்று பேசாமல் நின்றான். ''இந்தக் கதையை இளமாறன் நம்புவானென்று எதிர்பார்க்கிறாயா?'' என்று வினவினார் மாவலி, ரவிவர்மனை நோக்கி

ஆனால் இளமாறன் தீர்க்க சிந்தனையில் இறங்கினான். பிறகு எதையோ நினைத்துக்கொண்டு ''மாவலி! சற்றுப் பொறுங்கள்'' என்று கூறிவிட்டு சாளரக் கதவுகளை நன்றாகத் திறந்து வெளியே பார்த்தான் அங்கிருந்த படியே மாவலியை அழைத்து ''இப்படி வாருங்கள்! வானத்தைப் பாருங்கள்'' என்று கூறினான் அதிர்ச்சி நிறைந்த குரலில்.

மாவலிக்கு இளமாறன் அதிர்ச்சிக்கோ அழைப்புக்கோ காரணம் புரியாததால் ''வானத்தை எதற்காகப் பார்க்க வேண்டும்? நீலரதி வானத்துக்குப் பறந்து விட்டாளா?'' என்று வினவினார்.

''கொஞ்சம் வாருங்கள்'' என்று அழைத்தான் இளமாறன்.

வேண்டா வெறுப்பாக சாளரத்தை நோக்கிச் சென்ற மாவலி வானத்தைப் பார்த்தார். அதில் இளமாறன் என்ன விசேஷத்தைக் கண்டுவிட்டான் என்பதை அறியாததால் ''வானத்திற்கென்ன அழகாகத்தானிருக்கிறது'' என்றார்.

''அந்த அழகை ஆயிரம் மடங்காக அடித்திருக்கிறது முழுமதி'' என்றான் இளமாறன்.

''அது சரி. இயற்கையை அனுபவிப்பதற்கா நாம் இங்கு வந்தோம்?'' என்று கேட்டார் மாவலி.

''அதற்கல்ல மாவலி. இன்று பௌர்ணமி'' என்றான் இளமாறன்.

''இருக்கட்டுமே'' என்றார் மாவலி.

''உண்மையில் இன்று பௌர்ணமியானால் இங்கு காஞ்சி வர்மனும், ரவிவர்மனும் கண்டது நீலரதியல்ல'' என்ற இளமாறனை சந்தேகக் கண்களுடன் பார்த்தார் மாவலி. ''வேறு யாரைப் பார்த்தார்கள்?'' என்று கேட்கவும் செய்தார்.

''நீலரதியைப் போன்ற இன்னொருத்தியை'' என்றான் இளமாறன் திடமான குரலில்.

''யாரது?''-குழம்பாத மாவலியின் அறிவும் குழம்பியதால் கேள்வியை, குழம்பும் சொல்லாலேயே கேட்டார்.

இளமாறன் அறிவுகூடக் குழம்பியது. ''சொன்னால் நம்பமாட்டீர்கள்...'' என்று மெதுவாகக் கூறினான் இளமாறன்.

''இப்பொழுதுதான் ரவிவர்மன் ஒரு கதை சொன்னான் நீயும் ஒரு கதை சொல் கேட்கிறேன்'' என்றார் மாவலி வெறுப்புடன்.

இளமாறன் முகத்தில் துயரத்தைக் காட்டினான். ''சில சமயங்களில் நாம் நம்ப முடியாததையும் நம்ப வேண்டி



யிருக்கிறது'' என்று சொன்ன இளமாறன், ''ஐஸிஸ் என்று எகிப்து தேவதை இருக்கிறது...'' என சொற்களை முடிக்காமல் விட்டான்.

மாவலியின் முகத்தில் இகழ்ச்சிக் களை சொட்டியது. ''அது காப்பாற்றிவிட்டது நீலரதியை'' என்றார் சொற்களிலும் இகழ்ச்சி ஒலிக்க.

''மாவலி!'' என்று உறுதியுடன் அழைத்தான் இளமாறன்.

''என்ன படைத்தலைவரே!'' —பழைய பதவியைச் சொல்லி அழைத்தார் மாவலி.

''நான் நாத்திகன்''

''அப்படித்தான் நினைத்திருந்தேன்''.

''இப்பொழுதும் மாறிவிடவில்லை.''

''எகிப்து தெய்வத்திடம் மட்டும் நம்பிக்கை உண்டு போலிருக்கிறது? உமது நாத்திகம் நமது நாட்டுக் கடவுள்களிடம் மட்டுந்தான்.''

''மாவலி!''

''உம். சொல்லுங்கள்.''

''எனது கொள்கை எப்படியிருந்தாலும் நான் கண்ணால் கண்டதை நம்பாமலிருக்க முடியவில்லை.''

''கண்ணால் என்ன கண்டீர்?''

''புகார்க் கடலில் ஐஸிஸ் அலைமேல் நடந்து வந்த
தைப் பார்த்தேன். பிறகு மல்லைக் கடலில் பார்த்தேன்.
கடல் மல்லை மாளிகையிலும் ஒருமுறை பார்த்தேன்.''

இதைக் கேட்ட மாலவி பிரமித்தார். இளமாரன் குரலில் நம்பிக்கை பூர்ணமாயிருந்ததைக் கண்டு தனக்கும் தெரியாத மர்மம் ஏதோ இருப்பதாக நினைத்தார். ஆகவே குழம்பிய மனத்துடன் "படைத்தலைவரே! எதற்கும் நாம் மன்னரிடம் இதைத் தெரிவிப்போம்" என்று கூறி அந்த அறையைவிட்டு நடந்தார். இளமாரனும் மிகுந்த மன சஞ்சலத்துடன் அவரைத் தொடர்ந்தான். எதற்கும் சத்திரக்காரனையும் ஒரு வார்த்தை கேட்டு விடுவதென்று நிர்மானித்து சத்திரக்காரன் அறைக்குள் சென்று அவனை எழுப்பினான். சத்திரக்காரன் முக்கி முனகிக்கொண்டு எழுந்திருந்து "இதென்ன சத்திரம்? இரவிலும் தூங்க முடியவில்லை" என்று சள்ளென்று விழுந்தாலும் மாலவியைக் கண்டதும் திகிலுற்று "தாங்களா? வேறு யாரோ என்று நினைத்தேன்" என்று மன்னிப்பு கேட்டுக் கொண்டான்.

"அது கிடக்கட்டும். மேல் அறையில் இவர் விட்டுப் போன பெண் எங்கே?" என்று மாலவி வினாவைத் தொடுத்தார் அதிகாரக் குரலில்.

சத்திரக்காரன் தலையைச் சொறிந்து கொண்டான். "இவர் விட்டுப்போன மறுநாளே அந்தப்பெண் என்னிடம் சாவியைக் கொடுத்துவிட்டுப் போய்விட்டாள். அடுத்த நாள் சாவியைப் பார்த்தேன். காணவில்லை. அந்த அறைக்குப்போய் பார்த்தபோது அவள் மீண்டும் அங்கிருந்தாள். அவள் இங்கு வந்தது பெரிய தொல்லையாய்ப் போய்விட்டது. யார் யாரோ தேடி வந்தார்கள். அந்தப் பெண்ணை மன்னன் ஆட்களும் தேடி வந்தார்கள். யார் வரும்போதும் அவள் இருப்பதில்லை பிறகு திடீரென வருகிறாள். அவள் வருவதும் தெரியவில்லை. போவதும் தெரியவில்லை" என்று சத்திரக்காரன் விளக்கமாகச் சொன்னான்.

30579
4567555



அதற்குமேல் அவனை மாலவி விசாரிக்கவில்லை. "இளமாரா! வாருங்கள் மன்னரிடம் போவோம்" என்று கூறி இளமாரனை அழைத்துச் சென்றார்.

இருவரும் அரண்மனை சேர்ந்ததும் மாலவி, உடனடியாக மன்னரைப் பார்க்க வேண்டுமென்று கூற காவலன் உடனடியாக அனுமதித்தான். "தங்களுக்காகத்தான் மன்னர் காத்திருக்கிறார்" என்றும் சொன்னான்.

மாலவி அர்த்த புஷ்டியுடன் இளமாரனைப் பார்த்தார். "மன்னர் அர்த்த ராத்திரி கடந்துவிட்ட இந்த நேரத்தில் விழித்திருக்கும் வழக்கமில்லை. ஏதோ விபரீதம் நடந்திருக்க வேண்டும்" என்றும் கூறினார்.

இளமாரன் பதிலேதும் சொல்லவில்லை. ஏதும் பேசாமல் மாலவியைத் தொடர்ந்தான். மன்னன் தமது பள்ளியறையிலேயே இருவரையும் சந்தித்தான். இருவருக்கும் அதிர்ச்சியைத் தரும் செய்தியைச் சொன்னான். "இளமாரா! உன் கடமையை நிறைவேற்றி விட்டாய். நீ கூறியபடி நீலரதியை அனுப்பிவிட்டாய். இனி நீயும் உன் மகனும் அந்த எகிப்து பெரியவரும் எங்கு வேண்டுமானாலும் செல்லுங்கள். இதோ விடுதலைப் பத்திரம்" என்று தனது கையிலிருந்த ஓலைச்சுருளை இளமாரனிடம் நீட்டினான்.

மாலவி தமக்கு பைத்தியம் ஏன் பிடிக்கவில்லை என்று விசாரித்துக் கொண்டார் தனக்குள்.

ஓலைச் சுருளைக் கையில் வாங்கிக்கொண்ட இளமாரன் "மன்னவா! இந்த உத்தரவை மாற்றமாட்டீர்களே?" என்று வினவினான்.

"அச்சுதவிக்கண்டன் சொல்லே மாறாது. எழுத்து மாறுமா?" என்று உற்சாகத்துடன் கேட்டான் மன்னன்.

"இனி நானோ என் மகனோ நீலரதிக்குப் பொறுப்பில்லை!" என்றான் இளமாரன்.

''உங்கள் பொறுப்பு தீர்ந்துவிட்டது'' என்றான் மன்னன்.

''நான் உடனடியாக புகாருக்குப் புறப்படுகிறேன்'' என்றான் இளமாறன்.

''எகிப்துக்கு வேண்டுமானாலும் போ'' என்ற மன்னன் பேய்ச் சிரிப்பாகச் சிரித்தான்.

அப்பொழுது மாவலி இடை புகுந்து ''மன்னவா! இந்த உத்தரவைச் சற்றுப் பொறுத்து கொடுப்பது நல்லது'' என்றார்.

''அச்சுதவிக்கண்டன் தலை போனாலும் இட்ட உத்தரவைத் திரும்பிப் பெறமாட்டான்'' என்றான் மன்னன்

''மன்னவா! சற்று சிந்தியுங்கள்...'' என்று தொடங்கினார் மாவலி.

''யோசிக்கத் தேவையில்லை நீங்கள் செல்லுங்கள், நானும் போக வேண்டும், நீலரதி காத்திருப்பாள்'' என்ற மன்னன் தமது பஞ்சணையிலிருந்து எழுந்து அவர்களைப் போகச்சொல்லி கையைக்காட்டிவிட்டு உள்ளே சென்றான். மன்னன் மனம் அன்று மகிழ்ச்சியால் நிறைந்திருந்தது. அந்தப் புதுமலரை நாடி உற்சாக நடை நடந்தான் களப்பிரர் புரவலன்.

மாவலி இருந்த இடத்தை விட்டு நகரவில்லை. இளமாறன் அவரை அழைக்காமலே துரிதமாகச் சென்றான் விருந்தினர் மாளிகையை நோக்கி.

□ □ □

# 56. நாளை தெரியும்

மன்னனிடம் விடுதலைப் பத்திரத்தைப் பெற்றுக் கொண்ட இளமாறன் அடுத்த கணம் அங்கு நில்லாமல் அதிவேகத்துடன் விருந்தினர் மாளிகையை அடைந்தான். மன்னன் கண்ட நீலரதி ஐலினாகத்தான் இருக்க வேண்டுமென்பதில் எந்தவித சந்தேகமுமில்லாத இளமாறன், மன்னன் ஏமாற்றமடையுமுன்பு உறையூரை விட்டுப் பறந்தாலொழிய விடிமோட்சம் கிடையாதென்பதை உணர்ந்திருந்ததால் விருந்தினர் மாளிகையை அடைந்ததும் எகிப்திலிருந்து வந்தவரையும், உதயகுமாரனையும் வேகமாக எழுப்பினான். அவன் கொணர்ந்திருந்த விடுதலைப் பத்திரத்தை விருந்தினர் மாளிகையிலிருந்த காவலரிடமும் காட்டி தாங்கள் உடனடியாகப் புறப்பட வேண்டுமென்றும், அதற்காக மூன்று நல்ல புரவிகள் வேண்டுமென்றும் கூறியதன்மேல் புரவிக் கொட்டடியிலிருந்து மூன்று சிறந்த புரவிகள் கொண்டு வந்து நிறுத்தப்பட்டன. பிறகு வேகமாக உள்ளே சென்ற இளமாறன் நீலரதியின் பெரிய தந்தையையும், உதயகுமாரனையும் நோக்கி ''சீக்கிரம் புறப்படுங்கள்'' என்று அவசரமாகக் கூறவே, ''எங்கு போக?'' என்று வினவினான் உதயகுமாரன்.

''எங்கு போவதாயிருந்தால் என்ன? புறப்படு'' என்று சீற்றத்துடன் சொன்னான் இளமாறன்.

எகிப்து பெரியவரும் சும்மா இருக்காமல், ''நீலரதி எங்கே?'' என்று வினவினார்.

''விசாரணையை பிறகு வைத்துக் கொள்ளலாம். புறப்படுங்கள்'' என்று துரிதப்படுத்தினான் இளமாறன்.

அவர்கள் கேள்வியும் தாமதமும் எரிச்சலாயிருந்தது இளமாறனுக்கு. நீலரதியாக மன்னன் மாளிகைக்குச் சென்று ஐவில் மன்னன் பள்ளியறைக்குச் சென்று மறைந்து விட்டால் தங்களைத் திரும்ப சிறை செய்ய களப்பிர வீரர்கள் பறந்து வருவார்களென்பதையும் உணர்ந்திருந்ததால் அவன் துரிதமாகப் பயணப்பட அவர்களை உந்தினான். அந்த இருவருடனும் புறப்பட்ட இளமாறன் அங்கிருந்து காற்று வேக பயணத்தைத் தொடங்கினான். பயணத்தை துரிதமாகத் தொடங்கியும் நேரான பாதையில் செல்லாமல் சுற்றி வளைத்தே பயணம் செய்து மறுநாள் மாலையில் புகாரை அடைந்த இளமாறன் நேராக கண்ணதாசன் மடத்தை அடைந்து புத்ததத்தரின் அறைக்குச் சென்றான்.

புத்ததத்தர் மாலைப் பிரார்த்தனையை அப்பொழுது தான் முடித்துக் கொண்டிருந்தவர் ''புத்தம் சரணம் கச்சாமி, சங்கம் சரணம் கச்சாமி'' என்று மூல மந்திரங்களை ஓதிக்கொண்டிருந்தார். புத்ததத்தரை இளமாறன் பார்த்த சமயத்தில் அவருக்கு பழைய வலு இல்லை. சோக பிம்பமாகத் திகழ்ந்தார். இளமாறனைக் கண்டதும் அதிர்ச்சி கலந்த மகிழ்ச்சியை முகத்தில்காட்டி ''இளமாறா! நீ இன்னும் உயிருடன் இருக்கிறாயா?'' என்று வினவினார்.

''நான் மட்டுமல்ல, இவர்கள் இருவருங்கூட உயிருடன்தான் இருக்கிறார்கள்'' என்று உடன் வந்த நீலரதியின் பெரிய தந்தையையும் உதயகுமாரனையும் தனது கையால் சுட்டிக்காட்டினான்.

இளமாறனையும் மற்ற இருவரையும் உற்று நோக்கிய புத்ததத்தர், ''நான் ஏதேதோ கேள்விப்பட்டேன்'' என்று இழுத்தார்.

''என்ன கேள்விப்பட்டீர்கள்?'' என்று கேட்டான் இளமாறன்.



''நீங்கள் மூவரும் சிறை செய்யப்பட்டதாகக் கேள்விப்பட்டேன்...''—வாசகத்தை முடிக்கவில்லை புத்ததத்தர்.

''வேறு என்ன கேள்விப்பட்டீர்கள்?'' என்று இளமாறன் வினவினான்.

''உங்களிருவருக்கும் தூக்குத் தண்டனை விதித்ததாகக் கேள்விப்பட்டேன். இவரைக்கூட சிறை செய்ததாக செய்தி வந்தது'' என்றார் புத்ததத்தர்.

புகாரிலிருந்துகொண்டு உறையூரில் நடந்தது அனைத்தையும் புத்ததத்தர் எப்படி அறிந்தாரென்பது பரம விசித்திரமாயிருந்தது இளமாறனுக்கு. ''இத்தனை விவரங்களையும் எப்படி அறிந்தீர்கள்?'' என்று வினவினான் இளமாறன்.

''அவ்வப்பொழுது உறையூரிலிருந்து செய்தியனுப்ப ஒரு துறவி இருக்கிறார்'' என்றார் புத்ததத்தர்.

''யாரவர்?''

''சாந்தானந்தர்''

''சாந்தானந்தரா?''

''ஆம்''

''அவரைப் படைத்தலைவராக மன்னர் நியமித்திருந்தாரே''

''அவரை மறுபடியும் துறவியாக மன்னர் உத்தரவிட்டார்.''

''துறவறத்தை மாற்றவும் கொடுக்கவும் மன்னருக்கு அதிகாரமுண்டா?''

புத்ததத்தர் சிறிது சிந்தித்தார். ''சாந்தானந்தர் செய்யத்தகாதச் செயலை செய்ததால் அவர் துறவறத்தை மன்னர் மாற்றி பழைய பதவிக்கு அனுப்பினார். புதிய பணியை அவர் ஒழுங்காகச் செய்யாததால் மறுபடியும் துறவியாகப் போக மன்னர் உத்தரவிட்டார். அச்சுதவிக்

கண்டனிடம் குறைகள் ஆயிரமிருக்கலாம். ஆனால் நீதியை மட்டும் தலறவிடமாட்டான்'' இதைத் திட்டமாகச் சொன்னார் புத்ததத்தர்.

மிகமூர்க்கனென்றும், எத்தனை பேரைத் தூக்கிலிடவும் தயங்கமாட்டானென்றும் பிரசித்தி பெற்றிருந்த களப்பிர மன்னனைப் பற்றி அத்தனை உயர்வாக புத்த தத்தர் பேசியது மிகவும் விசித்திரமாயிருந்தாலும், அதில் உண்மையும் இருக்கிறதென்பதை இளமாறன் அறிந் திருந்தான், கண்ணதாசன் மடத்தில் முதன்முதலாக விசாரணை நடந்தபோது சாந்தானந்தரின் துறவறத்தை மாற்றி விசித்திர உறவைப் பிறப்பித்து நீலரதியைக் காப்பாற்றியவன் களப்பிர மன்னனென்பதை உணர்ந் திருந்த இளமாறன், எந்தக் கொடியவனிடத்திலும் உள்ளூர சில நல்ல குணங்கள் இருப்பது சிருஷ்டி விசித் திரம் என்று எண்ணிய இளமாறன் ''களப்பிர மன்னன் இட்ட உத்தரவை மாற்றுவானா?'' என்று வினவினான்.

''தலை போனாலும் மாற்றமாட்டான்'' என்றார் புத்ததத்தர்.

''அவன் சொல்வதை நிலை நிறுத்துவானா?'' என்று இளமாறன் வினவினான்.

''அவனிடம் சொல் வேறு எழுத்து வேறு கிடையாது. சொல்லும் எழுத்தும் ஒன்றுதான். நல்லதுக்கும் அப்படி கெட்டதற்கும் அப்படி'' என்று புத்ததத்தர் அடித்துச் சொன்னார்.

''நீ இங்கிருந்து சென்ற பிறகு நடந்ததெல்லாம் கேள்விப்பட்டேன். நீலரதியை மன்னன் கட்டளைப்படி நீ அழைத்துப் போகாதிருக்க உன்னை எப்படி விடுதலை செய்தான்?'' என்று வினவினார் புத்ததத்தர்.

நடந்த கதையை விவரமாகச் சொன்ன இளமாறன், ''இவரது மரக்கலம் இங்கு வந்திருக்கிறது. அதில் இவர் எகிப்து செல்லட்டும்'' என்று கூறி நீலரதியின் பெரிய



தந்தையைக் காட்டினான். ''நான் உதயகுமாரனுடன் தலைமறைவாகப்போய்விடுகிறேன்'' என்று சொன்னான்.

எகிப்து பெரியவர் இளமாறனை மிகுந்த உஷ்ணத்துடன் நோக்கி ''நடந்ததைப் பற்றி ஏன் பேசுகிறீர்கள்?'' என்று வினவினார் குரலிலும் உஷ்ணம் ஒலிக்க.

''நடக்காதது எது? நீர் எதற்காக இங்கிருக்க வேண்டும்? மீண்டும் மன்னரிடம் சிக்கிக் கொள்ளவா?'' என்று இளமாறன் வினவினான்.

''நீலரதியின்றி இனி நான் சொந்த நாடு திரும்ப மாட்டேன்'' என்றார் பெரியவர்.

''நீலரதி இருக்குமிடம் தெரியுமா உமக்கு?'' என்று வினவினான் இளமாறன்.

''உமக்குத் தெரியும் என்றுதானே என்னை இங்கு அழைத்து வந்தீர்?''—பதிலுக்குக் கேட்டார் எகிப்து பெரியவர்.

''அப்படி ஏதும் நான் சொல்லவில்லை''—திட்டமாகச் சொன்னான் இளமாறன்.

''பின் எதற்காக இங்கு அழைத்து வந்தீர்?''—எகிப்து பெரியவரின் கேள்வியில் எரிச்சல் அதிகமாக இருந்தது.

''உங்களைத் தூக்குக் கயிற்றிலிருந்து தப்புவிக்க. நீலரதி தன்னிடம் அகப்பட்டு விட்டதாக நினைத்து நமக்கு விடுதலைப் பத்திரம் அளித்தான். நீலரதி இல்லையென்று தெரிந்ததும் மறுபடியும் உங்களுக்குத் தூக்குக் கயிறைச் சித்தம் செய்வான் மன்னன். ஆனால் அவன் மாளிகையிலிருப்பது நீலரதி அல்லவென்பது மன்னனுக் குத் தெரியு முன்பு நாம் தப்பிவிடலாமென்று நினைத் தேன்''—இதை இளமாறன் மிகுந்த உறுதியுடன் சொன் னான்.

''அப்படியானால் அங்கிருப்பது...?'' புத்ததத்தர் கேட்டார்.

''நேற்று பௌர்ணமி'' என்றான் இளமாரன்.

அவன் சுட்டிக்காட்டியது இருவருக்கும் தெரிந்திருந்த தால், ''ஐஸிஸ்தான் அவளைக் காப்பாற்றியிருக்க வேண்டும்'' என்று தீர்மானித்தார்கள்.

மன்னன் பள்ளியறையில் நுழைந்து அதில் நீலரதி இல்லையென்பதை உணர்ந்து கொண்டால் ஏற்படக் கூடிய விபரீதம் மூவருக்கும் தெரிந்திருந்தாலும் அதைப் பற்றி சிறிதும் கவலைப்படாத இளமாரன் ''சரி! நான் எனது பழைய விடுதிக்குச் செல்கிறேன்'' என்றான் மற்ற வர்களை நோக்கி.

''அங்கு என்ன விசேஷம்?'' என்று வினவினான் உதய குமாரன்.

''நீலரதி அங்குதானிருக்கிறாள். நீ முதலில் அங்கு போ. நீலரதியை அங்கேயே இருக்கச் சொல்'' என்று உத்தரவிட்டான் இளமாரன்.

அவன் சொன்னதைக் கேட்ட மற்றவர்கள் பிரமித் தார்கள். ''உனக்கெப்படித் தெரியும்?'' என்று புத்தகத்தர் கேட்க, ''உறையூரிலிருந்து அவளை இங்குதான் வரச் சொன்னேன், என் வார்த்தையை மீறமாட்டாள் நீலரதி'' என்றான் இளமாரன்.

''ஒருவேளை அவள் இங்கிருப்பது தெரிந்தால் மன்னன் உன்னைத் தலைகீழாகக் கட்டி உரித்து விடு வான்'' என்றார் எகிப்தின் பெரியவர்.

இளமாரன் அதைப்பற்றி கவலைப்படவில்லை. ''எனக்கும் உங்களுக்குமிருக்கும் உறவு மன்னனுக்கே தெரியும்'' என்று சொன்னான். ஆகவே மன்னன் தனித் தனியாக தண்டனை கொடுக்கமாட்டான்'' என்று சுட்டிக் காட்டினான் இளமாரன். ''எதற்கும் மன்னன் வீரர்கள் வருமுன்பு நீலரதியை மறைத்துவிட வேண்டும்'' என்று கூறிவிட்டு, ''நான் வாணகிரி விடுதியில் இருக்கிறேன்.''-



இப்படிச் சொல்லிவிட்டு வாணகிரி சாலையிலிருந்த தனது விடுதியை நோக்கி நடந்தான்.

விடுதி அவன் விட்டுப் போனபடியே இருந்தது. மன்ன னுக்கு இனிமேல் அதிக இடங்கொடுக்கக் கூடாது என்ற சிந்தனையுடன் வேகமாக வாணகிரி விடுதியை அடைந்த இளமாரன் கதவு மூடப்பட்டிருந்ததால் கதவை உடைத்து விடுவதுபோல் இடித்தான்.

கதவு சிறிது நேரத்திற்கெல்லாம் திறக்கப்பட்டது. கதவைத் திறந்ததும், உட்கூடத்தில் நான்கு பேர் உட் கார்ந்திருந்தார்கள். அவர்களில் ஒருவன் மன்னனான அச்சுதவிக்கண்டன். ''வா இளமாறா வா!'' என்று அன்புடன் அழைக்கவும் செய்தான் களப்பிர மன்னன்.

பிரமைபிடித்த இளமாரன் தனது வாளின்மேல் கையை வைத்தான். அதை கவனித்த களப்பிர மன்னன் ''வீணாக வாளை உருவாதே'' என்று அதட்டவே வாளின் மீது வைத்த கையை எடுத்துவிட்ட இளமாரன் ''என்னை என்ன செய்வதாக உத்தேசம்?'' என்று வினவினான்.

''நாளை தெரியும்'' என்ற களப்பிர மன்னன் ''வந்த இடத்துக்கே போய் காலையில் வா. முடிவுகள் தெரிவிக்கப் படும்'' என்று சொன்னான்.

□ □ □

# 57. களப்பிரன் முடிவுகள்

பௌர்ணமியன்று நீலரதியை நாடி அந்தப்புரம் சென்ற களப்பிர மன்னனான அச்சுதவிக்கண்டன் மறு நாள் இரவில் யாருக்கும் தெரியாமல் மிக ரகசியமாக வாணகிரி விடுதியில் தனக்காகக் காத்திருப்பானென்பதை அடியோடு ஊகிக்காத இளமாறன், தனது வாழ்க்கையில் முதன் முதலாக அதிர்ச்சியும், பிரமையும் அடைந்து மன்னன் முன்பு நீண்டநேரம் நின்று கொண்டே இருந்தான். "வந்த இடத்துக்கே போய் காலையில் வா. முடிவுகள் தெரியும்" என்று மன்னன் உத்தரவிட்ட பிறகும் இளமாறன் மன்னன் உத்தரவை நிறைவேற்றாமல் அவனைக் கூர்ந்து கவனித்தான் தனது வாளினும் கூரிய கண்களால்.

மெல்லிய நெடிய உருவத்துடனும் லேசாகக் கத்தரித்து விடப்பட்ட மீசையுடனும் இளமாறனின் கண்களுக்கு சிறிதும் குறையாத கூர்மையான கண்களுடனும் இளமாறனை நோக்கிய அச்சுதவிக்கண்டன் தனது ஆசனத்திலிருந்து எழுந்து தலை கூரையில் இடித்துவிடுவதுபோல் நன்றாக நிமிர்ந்து நின்றான். இரண்டு ஜோடி வாட்கள் சந்திப்பதுபோல் சந்தித்த இருவர் கண்களிலும் எந்தவித மாற்றமும் இல்லை, பல விநாடிகள். இருவரும் காட்டிய அமைதி ஏதோ பெருத்த விநாசத்தின் ஆரம்பத்துக்கு அறிகுறி என்று தரையில் முழந்தாள்களை கட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்த மாவலி எண்ணியதால் அடுத்து நடக்கப்போவதை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தானாலும் நெடுநேரத்துக்கு, இருவரும் எந்தவித பேச்சிலோ அலுவலிலோ இறங்கவில்லை. மற்ற இருவரையும் அன்று வரை இளமாறன் பார்த்ததில்லை என்றாலும் அவர்கள் பெரிய வீரர்களென்பதையும் மன்னன் கண்ணைக் காட்டினால் தன்னை அங்கேயே வெட்டிப்



போடத் தயங்க மாட்டார்களென்பதையும் புரிந்து கொண்டான். ஆனால் எத்தனையோ போர்க்களங்களில் எத்தனையோ வீரர்களை சமாளித்திருந்த இளமாறனுக்கு அவர்களைப் பற்றிக் கவலை ஏதும் ஏற்படாவிட்டாலும் தன்னையோ எயிற்று பெரியவரையோ சிறை செய்ய மாவலியை ஏவாமல் மன்னன் நேரில் வந்த காரணம் என்ன என்பதை மட்டும் சிந்தித்துப் பார்த்தும் விடை கிடைக்கவில்லை அவனுக்கு.

அவன் சிந்தனை ஓடிய விழிகளைப் புரிந்து கொண்ட மகா புத்திமானான அச்சுதவிக்கண்டனே முதலில் மௌனத்தைக் கலைத்து "இளமாறா! உன்னை இது வரையில் யாராலும் பிடிக்க முடியவில்லை. மாவலிகூட முன்பு ஏமாந்து விட்டார். ஆகையால் உன்னைச் சந்திக்க நானே நேரில் வந்தேன்" என்று சொன்னான். அதைச் சொன்ன அவன் தடித்த உதடுகளில் புன்முறுவலொன்றும் தவழ்ந்தது.

இளமாறனும் மிகுந்த துணிவுடன் வினவினான் "நானும் ஒரு கேள்வி கேட்டேன்" என்று.

அச்சுதவிக்கண்டன் சிறிதும் தாமதிக்காமல் "நானும் அதற்கு பதில் சொன்னேன். முடிவுகள் நாளை தெரிவிக்கப் படும் என்று" என பதில் சொன்னான்.

அடுத்த கேள்வியை இளமாறன் வீசினான். "நீலரதி எங்கே?" என்று.

"இருக்க வேண்டிய இடத்தில் இருக்கிறான். சமயத்தில் உன்னிடம் அனுப்பப்படுவான்" என்றான் அச்சுதவிக்கண்டன். இதைச் சொல்லி மாவலியைத் திரும்பி நோக்கினான்.

மன்னன் குறிப்பை அறிந்துகொண்ட மாவலி "கவலைப்படாதே இளமாறா! நீலரதிக்கு எந்த அபாயமோ சீர்கேடோ இல்லை. நீ நினைக்கிறபடி நாளை

உன்னிடம் அனுப்பப்படுவாள். மன்னர் சொற்படி இன்று போய் நாளை வா'' என்று சொன்னார்.

''அவள் எந்த இடத்திலிருக்கிறாள் என்பதை நான் அறியலாமா?'' என்று மாவலியை நோக்கி வினவினான் இளமாரன்.

''நாளை அறியலாம். மன்னர் சொன்னபடி போய் வா. மன்னருக்கு எதிராக செயல்பட்டிருக்கும் விஷயங்களுக்கு உன்னை ஏன் மன்னர் மன்னிக்கிறார் என்பது எனக்கே விளங்கவில்லை'' என்றார் மாவலி.

அதற்கு மேல் அங்கு நிற்பதில் நியாயமில்லை, பயனுமில்லையென்பதைப் புரிந்து கொண்ட இளமாரன், மன்னனுக்கும் மாவலிக்கும் தலைவணங்கி வெளியே சென்றான். அவன் மனம் எங்கெங்கோ அலைந்து கொண்டிருந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக ''நீலரதி என்ன ஆனாள்?'' என்ற கேள்வி அவன் மனதில் எழுந்து கொண்டிருந்ததால் அவன் புத்ததத்தர் மடத்துக்குச் செல்லாமல் நேராக கடற்கரையை நோக்கிச் சென்று பரதவர் இல்லங்களுக்கு முன்பாக உட்கார்ந்திருந்தான். புகாரின் கடலாவது தனக்கு ஏதாவது செய்தி சொல்லும் என்று நினைத்தான். அதனிடமிருந்து செய்தி ஏதும் கிடைக்காததால் ''இராவணனிடம் சிக்கிய சீதையை நினைத்து கடற்கரையில் படுத்துத் துன்பப்பட்டிருந்த இராமபிரான் நிலையில் நானிருக்கிறேன்'' என்று சொல்லிக்கொண்டான்.

பால் நிலவு எங்கும் பரந்து கிடந்தாலும் அதை அவனால் ரசிக்க முடியவில்லை. அலைகள் மடிந்து வெளேரென்று தரையில் மோதிய நிலையும் அவன் மனத்துக்கு எந்தவித சாந்தியையும் அளிக்கவில்லை. இந்த அவஸ்தையில் இரவு முழுவதும் காலத்தைக் கடற்கரையிலேயே கழித்த இளமாரன் பொழுது புலரும் சமயத்தில்



கண்ணதாசன் மடத்தை அடைந்து தனது நீராட்டத்தை முடித்துக்கொண்டு வாணகிரி விடுதிக்குப் புறப்பட சித்தமானபொழுது புத்ததத்தர் கேட்டார் ''நீலரதியைப்பற்றி ஏதேனும் தெரிந்ததா?'' என்று.

''இன்று தெரியும்!'' என்றான் இளமாரன்.

''நேற்று தெரியவில்லையா?''—புத்ததத்தர் மீண்டும் கேட்டார்.

''இல்லை''—வறண்ட குரலில் பதில் சொன்னான் இளமாரன்.

''அவளை வாணகிரி விடுதிக்குப் போக உத்தரவிட்டதாகச் சொன்னாயே? அங்கில்லையா அவள்?'' என்று புத்ததத்தர் மீண்டும் துருவிக் கேட்டார்.

''தெரியாது.''

''தெரியாது, இல்லை, இந்த பதில்களைத் தவிர வேறெதுவும் தெரியாதா உனக்கு?''

இளமாரன் புத்ததத்தரைக் கூர்ந்து நோக்கினான். ''வாணகிரி விடுதியில் நீலரதியைக் காணோம். வேறு சிலர் இருக்கிறார்கள்'' என்று கூறினான்.

''யாரது புதுக் குடித்தனம்?'' என்றார் புத்ததத்தர் குழப்பிய மனத்துடன்.

''மன்னரும் மாவலியும்'' என்று இளமாரன் சொன்னதும் பேரதிர்ச்சியடைந்தார் புத்ததத்தர். ''இப்பொழுது எங்கு போகிறாய்?'' என்றும் கேட்டார்.

''மன்னரைச் சந்திக்க''

''தனியாகவா''

''ஆம்.''

''வேறு யாரும்...''

"வர அவசியமில்லை. வந்தும் பயனில்லை. யாரையும் அனுப்ப வேண்டாம்" என்று கூறிவிட்டு நேராக வாணகிரியை நோக்கிச் சென்றான் இளமாறன்.

அப்பொழுதுதான் பொழுது புலர்ந்திருந்தது. புகார்க் கடலும் வாணகிரியும் மனோகரமாகக் காட்சியளித்தன. வாணகிரி விடுதியை அவன் அடைந்தபோது அச்சுதவிக்கண்டன் விடுதியின் வாயிற்படியிலேயே நின்றிருந்தான். அவன் கையில் உருவிய வாள் இருந்தது.

வாணகிரிப் பாதையில் துரிதமாக ஏறிய இளமாறன் மன்னன் முன்பு தலைவணங்கி நின்றான். அச்சுதவிக்கண்டன் இளமாறனைப் பார்த்ததும் புன்முறுவல் செய்துவிட்டு "மாவலி!" என்றழைக்க மாவலி உள்ளிருந்து வெளியே வந்தார்.

அவர் கையில் நீண்ட குழல்கள் இரண்டு இருந்தன. அவற்றை சுட்டிக்காட்டிய அச்சுதவிக்கண்டன் சொன்னான்: "இக் குழல்களில் நான் செய்த முடிவுகள் இருக்கின்றன. அதற்கு முன்பு இன்னொரு முடிவுக்கும் நாம் வரவேண்டும். நீலரதியை நீயும் நேசிக்கிறாய். நானும் நேசிக்கிறேன். அவளைப் பணயமாக வைத்து நாமிருவரும் போரிடுவோம். நீ என்னைக் கொன்றால் நீலரதியை அழைத்துக்கொண்டு நீ போய்விடு. நான் உன்னைக் கொன்றால் அவள் எனது அந்தப்புரத்துக்குப் போவாள். வாளை உருவிக் கொள். எனது கட்டளையை மாவலி நிறைவேற்றுவார்."

இதைச் சொன்ன அச்சுதவிக்கண்டன் படியிலிருந்து இறங்கி வாளை ஒரு முறை வீசினான். இளமாறனும் வாளை உருவிக்கொண்டு அதை முதலில் தாழ்த்தி மன்னனுக்கு வணக்கம் செலுத்தினான். "என் மன்னனுக்கு எதிராக நான் வாளை வீச விரும்பவில்லை. இருப்பினும் பல உத்தரவுகளை மீறி இருக்கிறேன். இப்பொழுது மனச்சாட்சியையும் மீறுகிறேன்" என்று கூறிக்கொண்டு வாளை நீட்டிப் பிடித்தான்.



மன்னனே தனது வாளை நீட்டி, போரைத் தொடங்கினான். வெகு லாவகமாக அந்த வாள் தடுக்கப்பட்டது. மீண்டும் மீண்டும் வாளைப் பாய்ச்ச முயன்ற மன்னன் தனது வாள் எந்த திசையில் சென்றாலும் தடுக்கப்படுவதை உணர்ந்தான். இளமாறனின் தற்காப்புக்குள் தன்னால் புக முடியாததை நினைத்து வியந்தான். "எனக்கு சமதையான வாள் வீரன் தமிழகத்தில் இருக்கிறானே" என்ற நினைப்பால் அவன் முகத்தில் திருப்தியும் நிலவியது.

அடுத்து சண்டை மிக மும்முரமாயிற்று. இருவர் வாட்களும் மின்னல் வேகத்தில் சந்தித்து மீண்டன. இளமாறன் தற்காப்புப் போரே நடத்தியதைக் கண்ட அச்சுதவிக்கண்டன் "இளமாறா! நான் மன்னனென்ற நிலையை விட்டுவிடு. நன்கு தாக்கு" என்று கூறி தனது போர் முறையை மாற்றினான். மன்னன் சொற்படி அவனை நோக்கி வாளைப் பாய்ச்ச முயன்ற இளமாறன் மன்னன் வாளின் பாதுகாப்புக்குள் தான் நுழைய முடியாததை உணர்ந்து அவன் வாள் திறனை நினைந்து பிரமித்தான். அப்படி அவன் பிரமித்துக் கொண்டிருக்கையிலேயே இளமாறன் வாள் மன்னன் வாளால் திருகப்பட்டது. ஆனால் திருகலிலும் இளமாறன் வாள் அவன் கையைவிட்டுப் பறக்கவில்லை. எனினும் மன்னன் வாளையும் இளமாறனால் சுழற்றி எறிய முடியவில்லை. இருப்பினும் தனது போர்முறையை சிறிது மாற்றிய இளமாறன் மன்னன் சிறிது அஜாக்கிரதையாயிருந்த சமயத்தில் தனது வாளால் மன்னன் மார்பை லேசாகத் தொட்டான். ஆனாலும் வாளை சட்டென்று பின்னுக்கு இழுத்துக்கொண்டான்.

அடுத்து அச்சுதவிக்கண்டன் போர் முடிந்துவிட்டதை உணர்ந்து தனது வாளை உறையில் போட்டான். இந்தப் போர் முறையை பிரமிப்புடன் பார்த்துக் கொண்டிருந்த மாவலி "மன்னவா!" என்று கூவினார் காரணம் புரியாமல்.

அடுத்த விநாடி உருவிய வாளுடன் இளமாரன் மன்னன் முன்பு மண்டியிட்டு உட்கார்ந்தான். மன்னன் அவனை விந்தை ததும்பிய கண்களால் பார்த்தான். அவன் தலைமீது தனது கையை வைத்து "இளமாரா! இன்று என் வாளுக்கு இதுவரை யாரும் அளிக்காத விருந்தை அளித்தாய்" என்று கூறி "மாவலி! இந்த மாவீரனிடம் ஓலைகளைக் கொடும்" என்று உத்தர விட்டான்.

மாவலி தனது கைகளிலிருந்த இரு குழல்களைக் கொடுத்தார். அத்துடன் மன்னன் முடிவுகளையும் தெரிவித்தார். "இளமாரா! நீ மன்னர் கட்டளையை பலமுறை மீறியிருக்கிறாய். இருப்பினும் அவர் படைத் தலைவனாக பெரும் பணியையும் செய்திருக்கிறாய். ஆகையால் உன்னை மன்னர் நாடு கடத்துகிறார். இந்த குழலில் உன் தண்டனையும், நீலரதிக்கும் அவள் பெரிய தந்தைக்கும் மன்னிப்பும் இருக்கிறது. இந்த அடுத்த குழலில் காஞ்சிவர்மன் இறந்து விட்டதால் உன் சொத்துக்கள் உன் வாரிசான உதயகுமாரனுக்கு அளிக்கப் படுகின்றன. புகாரிலிருந்து கிளம்ப உனக்கு இரண்டு நாட்கள் அவகாசம் அளிக்கப்படுகிறது" என்று கூறி இரண்டு குழல்களையும் இளமாரனிடம் அளித்தார்.

அவற்றைப் பெற்றுக்கொண்ட இளமாரன் நன்றி ததும்பும் கண்களால் மன்னனை நோக்கினான். குழல்களைக் கொடுத்ததும் மாவலி உள்ளே சென்று விட்டதால் மன்னன் இளமாரனை அணுகி அவன் தலையைக் குனியச்செய்து "நீலரதி எகிப்துப் பெரியவரின் மரக்கலத்தில் இருக்கிறாள். உன்னை எதிர்பார்த்திருக்கிறாள்.



வீணாக காலத்தை ஓட்டாதே" என்று ரகசியமாக அவன் காதில் சொல்லிவிட்டு மீண்டும் விடுதிக்குள் சென்று விட்டான். உள்ளே சென்றதும் தனது மார்பில் இளமாரன் வாள் லேசாகக் கீறியதால் துளிர்த்த சிறு ரத்தத் துளிகளைப் பார்த்தான் மன்னன். "இதோ ஒரு வீரன் அளித்த மாணிக்கக் கற்கள்" என்று மாவலியிடம் கூறினான்.

இளமாரன் நேராகக் கண்ணதாசன் மடத்துக்குவந்து புத்ததத்தரிடம் குழல்களைகொடுத்தான், நடந்த விவரங்களையும் விவரித்தான். புத்ததத்தர் கண்களில் நீர் சுரந்தது. "அச்சுதவிக்கண்டன் மகாவீரன். களப்பிரர்களில் தப்பிப் பிறந்தவன்" என்று கூறினார். இளமாரன் உதயகுமாரனைத் தழுவி "பூர்வீக சொத்தைக் காப்பாற்றி வீரனாக வாழ்ந்திடு" என்று ஆசி கூறி கண்ணதாசன் மடத்தை விட்டு எகிப்து பெரியவருடன் கடற்கரைக்குச் சென்றான்.

எகிப்து பெரியவரின் மரக்கலம் அன்றிரவே நங்கூரம் எடுத்து ஓடியது. அதைப் பார்த்துக் கொண்டிருந்த அச்சுதவிக்கண்டன் "மாவலி! அதோ அந்த மரக்கலத்தில் ஒரு மகாவீரனும் ஒரு மகா பதிவிரதையும் போகிறார்கள் அந்த மாயா நீலரதி என்ன ஆனாள், என் பள்ளியறையிலிருந்து கண்ணெதிரிலேயே மறைந்த பிறகு?" என்று கேட்டான்.

"அவனுக்கு இனி இங்கென்ன வேலை? உண்மை நீலரதியுடன் போயிருப்பான்" என்றார் மாவலி.

இரவில் பெரு நிலவு வங்கக் கடலை மனோகரமாக அடித்திருந்தது. எங்கும் அழகு! ஆனால் தளத்தில் நின்றிருந்த இளமாரன் மனத்தில் நிம்மதியில்லை. தாய் நாட்டுக் கரை விலக அவன் துன்பப்பெருமூச்சு விட்டான். பின்னாலிருந்து "படைத்தலைவரே!" என்ற குரல் அவன் எண்ணங்களைப் பிளக்கவே திரும்பிப்பார்த்த இளமாரன்

தன்னெதிரில் நின்ற ரவிவர்மனை வியப்புடன் நோக்கினான். ''நீ எங்கு வந்தாய் இங்கு?'' என்று வினவினான்.

''காஞ்சி வர்மன் களப்பிர மன்னன் படைத்தலைவர்களில் சிறந்தவன். அவனைக் கொன்ற பிறகு நான் களப்பிரர் ஆட்சியில் வாழமுடியுமா?'' என்று கேட்டான்.

''ஏன் முடியாது?'' என்று வினவினான் இளமாறன்.

''நான் நீலரதியை வாணகிரியில் சந்தித்தேன். உங்கள் சொற்படி வாணகிரி விடுதிக்கே வந்தாள் நீலரதி. அடுத்து மன்னன் வந்தார் மாவலியுடன். நீலரதியை அழைத்துக் கொண்டு இந்த மரக்கலத்துக்குச் செல்ல உத்தரவிட்டார். தப்பினால் போதுமென்று நான் வந்துவிட்டேன்'' என்ற ரவிவர்மன், ''இங்கு எதற்காக நிற்கிறீர்கள்?'' உங்கள் அறைக்குச் செல்லுங்கள்'' என்றான்.

இளமாறன் மெதுவாக தளப்படிகளில் இறங்கி தனது அறைக் கதவைத் திறந்தான். நீலரதி அங்கிருந்த பஞ்சணையில் கிடந்தாள், ஓவியப் பாவையைப் போல. அறையின் உயரத்திலிருந்த ஒரு சிறு சாளரத்திலிருந்து சந்திரன் வீசிய கிரணம் அவள் மார்பைத் தழுவிக் கொண்டிருந்தது. இளமாறன் நீண்ட நேரம் அறை வாயிலிலேயே நின்று பிறகு கதவை மூடிவிட்டு மெல்ல அடிமேலடி வைத்து பஞ்சணையை அடைந்தான். அதன் முகப்பில் உட்கார்ந்து நீலரதியை நோக்கிக்கொண்டே இருந்தான் நீண்ட நேரம். அவள் மட்டும் கண்களை மூடிக் கொண்டிருந்தாள். அந்தக் கண்களை அவள் பிரிக்கவில்லை. அவளை நோக்கி மெதுவாகக் குனிந்தான். திடீரென எழுந்த அவள் கைகள் அவனை இறுக்கின. இறுக்கிய வேகத்தில் இறங்கிய முகம் அவள் மார்பில் புதைந்தது. அவள் அவன் காதுக்கருகில் மெதுவாகச் சொன்னாள் ''நாம் போவது சொர்க்கத்துக்கு என்று.''



''இல்லை நீலரதி! வேறு நாடு சொர்க்கமாகாது எனக்கு. என் தாய் மண்ணை விட்டுப்போகிறேன்'' என்ற அவள் இதயத்துக்குச் செய்தி சொன்னான் இளமாறன்.

''நாடுகளை மனிதன் பிரித்தான். உலகம் ஒன்று தான்'' என்ற நீலரதி மேலும் ஏதோ பேச முயன்றாள்.

''இங்கு இருப்பினால்தான் என் மனம் சாந்தி அடையும்'' என்றான்.

''திரும்பவும் வருவோம். அதற்கு சமயம் வரும். இப்பொழுது மனதை சாந்தி செய்து கொள்ளுங்கள்'' என்றாள் நீலரதி.

அடுத்து நிலவியது மௌனம். மௌனம் சாந்தியை அளிக்கவில்லை. உணர்ச்சிகளை எழுப்பவே செய்தது. அந்த எழுச்சியில் பிணையுண்ட இருவரையும் கேலி செய்வது போல் மரக்கலப் பலகையில் அலைகள் களுக் களுக்கென்று மோதின.

அந்தக் கேலியைக் காதில் வாங்கிய நீலரதி நகைத்தாள். ''கடலும் கேலி செய்கிறது நம்மை'' என்றாள்.

''கேலிக்கு என்ன இருக்கிறது?'' என்று கேட்ட இளமாறன் கை அவள் பூவுடலின் மீது அலைந்தது. சில இடங்களை நீக்கியது. அந்த இடங்களில் ஏற்பட்ட ஸ்பரிசம் அவன் வெறியை அதிகப்படுத்தியதால் அவள் அவனுடன் இழைந்தாள். மேலிருந்து வந்த சந்திர வெளிச்சம் திடீரென அவள் மார்பிலிருந்து மறைந்து அவன் முதுகில் காய்ந்தது. அடுத்த நிகழ்ச்சி அவர்கள் இருவரையுமே இவ்வுலகத்தை மறக்கச் செய்தன. கரடு முரடான நீண்ட பயணத்துக்குப் பிறகு கரையை அடைந்த மரக்கலம்போல் அவன் கிடந்தான். பஞ்சணையில், அமைதியற்ற வேட்கையில் அமைதியற்ற பெருமூச்சு அவனிடமிருந்து வந்து கொண்டிருந்தது.

அவன் மனம் கடல் மல்லையை நினைத்துக் கொண்டிருந்தது. அங்கிருந்த தோப்பை நினைவு படுத்தியது. முந்திரி கிளைக்கு அருகில் முன்பு எழுந்த வெறி அப்பொழுதும் எழுந்தது! இந்த வெறியில் நெறியும் கலந்திருந்ததால் அவன் அவளை விட்டு ஓடவில்லை. நீலரதி அன்று தனக்கு சொந்தம் என்ற நினைப்பில் அவளை அணைத்தான். அவள் அவனிஷ்டத்துக்கு வளைந்து கொடுத்தாள். அவள் அவன் முகத்துடன் தனது முகத்தை வைத்தபோது ''ஆசை வெட்கமறியாது'' என்று ரகசியமாகச் சொன்னாள் அவன் காதில்.

அவன் அவளைத் தன் கண்களால் நோக்கி ''உனக்கும் எனக்கும் எத்தனை வயசு வித்தியாசம்?'' என்று முணுமுணுத்தான்.

''வித்தியாசம்?''

''ஆம்''

''எனக்குத் தெரியவில்லை'' என்று அவள் கண்களை மூடிக்கொண்டாள்.

முற்றும்

30579